உ

கடவுள் துணை.

பதினெண்சித்தர்களருளிச்செய்த

பதார்த்தகுணசிந்தாமணி

மூலமும் - உரையும்.

இஃது

குயப்பேட்டை

தி. வீ. இராஜுமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

மதுரை-புதுமண்டபம் புத்தகஷாப்.

பி. நா. சி. கடைகாரியம்.

மு கிருஷ்ணப்பிள்ளையவர்களால்

பிடாரித்தாங்கல்,

நாராயணசாமிமுதலியார் குமாரர்

சிதம்பரமுதலியாரவர்களது

சென்னைக் குயப்பேட்டை

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1911.

கணபதிதுணை.

பதினெண்சித்தர்களருளிச்செய்த

பதார்த்தகுண சிந்தாமணி

மூலமும் - உரையும்.

பாயிரம்.

கடவுள்வணக்கம்.

விநாயகர் துதி-நேரிசைவெண்பா.

ஆதியுமைக்கருளு மற்புதசிந் தாமணியை
யாதியுமையருளா லம்புவியுட் கோதறுநற்
செந்தமிழாற் கூறுதற்குச் செம்பவள வேழமுகன்
கந்தமலர்ச் செஞ்சரணே காப்பு.

(இதன்பொருள்.)

பரமசிவன்உமாமயேஸ்பரிக்கு அருளிச்செய்தபதார்த்தகுணசிந்தாமணியை அந்த அம்மனுடைய கிருபையினாலே யிந்த பூவுலகத்தில் குற்றமற்ற நல்ல தமிழினாற்சொல்லுதற்குச் செவ்விதாகிய ஆனைமுக விநாயகருடைய வாசனைபொருந்திய தாமரைமலர்போன்ற நல்ல திருவடிகள் காப்பாகும் என்றவாறு. (க)

விநாயகர் சுப்பிரமணியர் பரமசிவம் பராசத்தி
தன்வந்திரி சித்தர்கள்துதி.

சீரார் பதார்த்தகுண சிந்தாமணிக்காரணந்
தாரார் கஜமுகனுஞ் சண்முகனு-சீராருஞ்
செஞ்சடில னும்பரையுந் தேவ வயித்தியனும்
விஞ்சுசித்த நாதர்களுமே.

(இ-ள்.) சிறப்புப் பொருந்திய பதார்த்தகுண சிந்தாமணியை தமிழினாற் சொல்லுதற்கு வெற்றிமாலையை யணிந்த ஆனைமுக விநாயகனும், சுப்பிரமணியக்கடவுளும், கங்கையைத் தரித்த செவ்விதாகிய சடாபாரத்தையுடைய பரமசிவனும், ஆதிபராசத்தியும், தேவ வயித்தியனாகிய தன்வந்திரியும் மிகுதியாகிய சித்தபுருஷர்களும் காப்பார்கள். எ-று. (உ)

நேரிசைவெண்பா-பரமசிவவணக்கம்.

எல்லாப் பதார்த்தமுமா யெங்குநிறை யொன்றைமுன்னாற்
சொல்லாப் பதார்த்தத்தைத் துப்புரவை-வல்லார்கள்
கூடற்பதார்த்தத்தைக் கொண்டேத்திக் கூறுதுமியாங்
கோடற் பதார்த்த குணம்.

(இ-ள்.) எல்லாப் பதார்த்தங்களுமா யெங்கு நிறைந்திராநின்ற ஏகவஸ்துவை வேதத்தா லறியப்படாத பதார்த்தத்தை பரிசுத்தமானதை மும்மலங்களற்ற அடியார்கள் கலக்கத்தக்க பரமசிவமாகிய பதார்த்தத்தை மனதிற்கொண்டு துதிசெய்து குற்றமற்ற பதார்த்தங்களின் குணத்தைச் சொல்லுவேன்யான். எ-று. (௩)

தே-பதார்த்த உற்பத்தியின் வரலாறு.

விருத்தம்.

தேடருமகண்டவொளிப் பிழம்பாய் ஞானு
    திதபூரணமாய்த்தற் செயல்கொண்டெல்லா
மூடவிட வல்லதுமாய்த் தனித்தவொன்றுண்
    மூழ்கிநின்ற முக்குணச்சிற் சத்தி தன்னில்
நாடனந்தம் பிறந்ததிற்கா லுதித்த திற்றீ
    நாரமண்ணுண் டாய்மண்டா னல்க வந்த
ஓடதியி லனமுமதி லுலகு நிற்கு
    முயர்வாய்ந்தவ் வோடதியி னுரிமை சொல்வாம்.

(இ-ள்.) யாவருந் தேடிக்காண்பதற்கரிய அகண்டாகார சோதித்திரட்சியாயும், ஞானோதிதமாயுள்ள பூரணமாயும், தன்னுடைய செய்கையினாலே எல்லாவற்றையும் ஒடுக்கவும்,தோற்றுவிக்கவும்.வல்லதாகியும், தனக்குமேலொரு கடவுளில்லாமல் தானேயாவருக்குங் கடவுளாயிருக்கும ஒரு பரசிவத்தினுள் மறைந்துநின்ற முக்குணங்களுந் தோன்றுவதற்குக் காரணமாகிய ஞானசத்தியி னிடமாக நாடுகின்ற அநந்தம் என்னும் ஆகாயந்தோன்றி, அவ்வாகாயத்தில்வாயு தோன்றி, அவ்வாயுவில் தேயுதோன்றி, அத்தேயுவில் அப்புதோன்றி, அவ்வப்புவில் பிருதிவிதோன்றி, அப்பிருதிவிதோற்றுவிக்க உண்டான ஒஷதியென்னும் நெல் முதலிய மூலிகையில் அன்னமுண்டாகி அந்த அன்னத்தினால் உலகத்துயிர்கள் நிலைபெற்றிருக்கும்படியான உயர்வை ஆராய்ந்துணர்ந்து அந்த ஒஷதியாகிய பதார்த்த குணங்களைச் சொல்லுகிறோம். எ-று. ஒஷதிதானது, பிருதிவியினாலுண்டானதா யிருந்தாலும் உயிர்களுக்கு அது முக்கியமான ஆதார வஸ்துவாயிருக்குந் தன்மையுடைமைபற்றி ஒடதியினுரிமை சொல்வாமென்றார். (௪)

ஒஷதியின்வகை.

தே-கட்டளைக்கலித்துறை.

விருக்கஞ் செடிகொடி புன்னுன்கொவ் வொன்றின் விரியனந்த
வருக்கந்த மிற்சில வோரா தி வித து வரைக்குமெட்டா
யிருக்கும் பதார்த்த மவற்றிலொவ் வொன்றில் கிருமிலத்துட்
செருக்கும்பன் னோயை முருக்குங் குணங்கண்டு தேர்வரிதே.

(இ-ள்.) விருக்ஷம், செடி கொடி, புல், என்று சொல்லப்பட்ட இந்த நான்குவகையில் ஒவ்வொன்றுக்கு விரிவாகிய அனந்தவர்க்கங்

களில் சிலவோர் முதல்வித்து வரைக்கும் எட்டு வகையாகிய பதார்த்தங்களில் ஒவ்வொன்று பெருமை பொருந்திய இந்த பூலோகத்தில் செருக்குற நிராகின்ற பலநோய்களையும் கண்டிக்கத்தக்க குணங்களைக் கணம் சொல்வது அரிது. எ-று. (௫)

தே-பதார்த்தவகை-ருசிகள்-வெ-பா.

ஆதியுரி யுண்ணி ரடைமலர்மென் காய்விதையென்
றோது பதார்த்தமிவை யோரெட்டும்-பூதலத்துட்
கைப்புவர்ப்பு தித்திப்பு கார்ப்பு புளிப்புத் துவர்ப்பு
வைப்பிவையா றும்பொருந்து மால்.

(இ-ள்.) வேர், பட்டை, பட்டைக்குளிருப்பது, பிசின், முதலிய ரசம், இலை, பூ, மிருதுவாகியகாய், விதை, என்று சொல்லப்பட்ட, பதார்த்தங்களாகிய எட்டும், பூமியு ளிடத்தில், கசப்பு, உவர்ப்பு தித்திப்பு, கார்ப்பு புளிப்பு, துவர்ப்பு, என்று சொல்லப் பட்ட ஆறு வகை ருசியையுடைத்தாயிருக்கும். எ-று. (௬)

தே-அவையடக்கம்.

பதார்த்தகுணஞ் சொல்வதெவன் பார்க்கின்ற வெல்லாம்
பதார்த்தமெனி னீக்கிற் பழியாம்-பதார்த்தமெனக்
கூறுகடற் குள்ளணுவின் கூற்றினவ்வி யத்தத்தோர்
கூறுரைத்த னம்பாருக் குள்.

(இ-ள்) கண்களாற் பார்க்கப் படுவதுக ளெல்லாம் பதார்த்தங்களாம், என்றால், அப்பதார்த்தங்களின் வகைகளும், குணகுணங்களும், எவ்வாறு தெரிந்து சொல்லப்படும் சொல்லாமல் நீக்கிவிட்டாலோ பாபமுண்டாகும், ஆதலால் பதார்த்த மெனச் சொல்லப் படுகிற சமுத்திரத்துக்குள் ஓர் அணுவளவில் கோடி கோடி கோடிகோடாங்கோடியில் ஒருபிரிவு - இந்தவுலகத்தி லிருக்கும் மனிதர்களுக்குத் தெரியும்படிக்குச் சொன்னேனும், அவ்வியத்தமென்பது-கோடி கோடி கோடி கோடா கோடியாம பதார்த்தங்களின் குண குணங்கள் தெரிந்தால அவுஷதங்களுக்குச் சேர்க்கும்போது கிரமம அறிந்து சேர்க்கப்படும்-கிரமம் அறியாமல் சேர்த்தால் வியாதிநீங்காம லிருப்பதுமன்றிப் பிணியாளன சரீரத்துக்கு அபாயம் நேரிடும் ஆதலால் நீக்கிற்பழியாமென்றார். (௭)

பாயிரமுற்றிற்று.

பஞ்சபூதவகை.

பிருதிவியின்குணம்.

பூசவிரணம் பொருமல்போம் பொன்முதலாம்
ஆசையுள்ள பண்ட மதிலுண்டாம்-தேசமதாய்த்
தின்றிடிற் பாண்டு செழிக்குமிகத் தேமொழியே
சென்றுலகில் மண்குணத்தைத் தேர்.

(இ-ள்.) இரணம், பொருமலும்போம், பாண்டு, பொன், மற்றப் பண்டங்களும் உண்டாம். (க)

அப்புவின்குணம.

காசமறுந் தந்தங்கழலாது மேகமுதல்
வீசு மனறணியும் வீரியமாம் - வாசமென
உந்திவளர் குன்மமுதிரஞ் சொறியிவைபோம்
இந்தநறுந் தண்ணீருக்கே.

(இ-ள்.) காசம், குன்மம், சொறி, தேகவனல், மேகமும்போம் பல்லிறுகல். வீரியமும் உண்டாம். (உ)

தேயுவின்குணம்.

கண்டைக்கா னோயுள்வலி காதம்போங் காய்ந்தக்கால்
விண்டே பலபிணியும் விட்''டகும்-விண்டோய்
பொருப்பனைய வட்டமுலைப் பூவையயே நாளு
நெருப்பி னதுகுணங்கா ணீ.

(இ-ள்.) காய்ந்தால், கண்டைக்கால் நோய், உள்வலி, பலபிணிக ளும்போம். (௩)

வாயுவின்குணம்.

மேகக் கடுப்பை விளைவிக்கும் வீறிநின்ற
தாக மனலிளைப்பைச் சாந்திசெய்யு-மேகத்தின்
புண்ணுக்கும் பொல்லாது பூவையரே ரூட்சைக்குங்
கண்ணுக்கு மாகாது காற்று.

(இ-ள்.) அனல், இளைப்பு, தாகமும்போம், மேகக்கடுப்பு உண் டாம். மேகப்புண்ணுக்கும், கண்ணுக்குமாகாது. (௪)

தே-ஆகாயத்தின்குணம்.

உலகுமன மும்பலவா மோடதியு மண்ணுஞ்
சலமுமன லுங்கா லுஞ் சாற்று-அலகில்
அநந்தம் பொருளு மடங்க வுழிநல்கும்
அநந்தம் தனக்கண் டறி.

(இ-ள்.) உலகும், மனமும், பலவிதபொருளுமுண்டாம். (௫)

பஞ்சபூதவகை முற்றிற்று.

தே - திணைவகை.

குறிஞ்சிநிலத்தின்குணம்.

குறிஞ்சி வருநிலத்திற் கொற்றமுண்டி ரத்தம்
உறிஞ்சி வருசுரமு முண்டாம்-அறிஞருரைக்
கையமே தங்குதரத் தாமைவல்லை யுங்கதிக்கும்
ஐயமே தங்கு மறி.

(இ-ள்.) ஐயம், கபம், கண்ணெரிவு, குலையெரிவு, அரோசிகம்,பித்தம், சுரம், வயிற்றின்வாயு, ஆமைக்கட்டியுமுண்டாம். (சு)

தே-செய்தனிலத்தின்குணம்.

செய்தனில மேறுப்பை நீங்கா தறிநுமறு
வெய்தனில மேதங்கு விடாகும்-நொய்தன்
மருங்குடலை மிக்காக்கும் வல்லுறுப்பை வீக்குங்
கருங்குடலைக் கிழிறக்குங் காண்.

(இ-ள்.) அண்டவாதம், உடல்தூளிப்பு, வாயுவும் உண்டாம். (எ)

தே-முல்லைநிலத்தின்குணம்.

முல்லை நிலத்தபமை மூரிநிரை மேவினுமவ்
வெல்லை நிலத்தபித்த மெங்குறுங்காண்-வல்லையெனின்
வாதமொழி பாததனுண் மன்னு மவைவழிநோய்ப்
பேதமொழி யாதறையப் பின்பு.

(இ-ள்.) பித்தம்போம், வாதமுதலாகிய வியாதிகள் உண்டாம்.

தே-மருதநிலத்தின்குணம்.

மருதநில நன்னீர் வளமொன்றைக் கொண்டே
பொருதனில மாதியநோய் போக்குங்-கருதனிலத்
தாதிரதஞ் சூழய ருந்தவரென் முற்பிணிஎல்
லேதிரதஞ் சூழ்புவிக்கு மில்.

(இ-ள்.) சூரியன் ஏறுகின்ற தேர்சூழும்படியான இவ்வுலகத்தில் வாதமுதலாகிய முப்பிணிகளும் போம். (சு)

தே-பாலைநிலத்தின்குணம்.

பாலைநி லம்போற் படரைப் பிறப்பிக்க
மேலைநில மியாது மிரித்தற்கு-மேலைநில
முப்பிணிக்கு மில்ல முறைமேயே யவற்றுளா
மெப்பிணிக்கு மில்லாமலீ தெண்.

(இ-ள்.) எப்பிணியும், முப்பிணியும் உண்டாம். (கo)

திணைவகை முற்றிற்று.

நீர்வகை.

மழைநீரின்குணம்.

சீதமுறுங் குளிர்ச்சி சேருமே சித்தத்துட்
போதந் தெளிவாய்ப் பொருந்துங்கா ணுதமொடு
விந்தும் வளர்ந்தவரு மேதினியி லெவ்வுயிர்க்குஞ்
சிந்துமழை நீராற் றெறி.

(இ-ள்.) சீதம் குளிர்ச்சி, அறிவு,தெளிவு, எவ்வுயிர்க்கும்விந்தும், உண்டாம். (கக)

ஆலாங்கட்டி நீரின்குணம்.

வெண்மாசி மேகமுடன் வீறும் பெரும்பாடு
கண்மாசிகாந்தல் கடிதகற்றுங் - தண்மீறும்
விற்கற் சுவாசமுடன் மெய்ம்மயக்க மும்போக்குங்
கக்குமா லாங்கட்டி காண்.

(இ-ள்.) மேகம், பெரும்பாடு, கண்மாசி, காந்தல், விக்கல், சுவாசம், மெய்மயக்கமும், போம். (கஉ)

பனிநீரின்குணம்,

பனிச்சலத்தை யெல்லுதயம் பானஞ்செய் வாரைத்
தனிச்சொறிசி ரங்குகுட்டந் தாபங் - தொனிக்கயங்கால்
முத்தோஷி நீரிழிவு மூடழல்கி ராணியிவை
கொத்தோடு தாழ்ந்தகலுங் கூறு.

(இ-ள்.) காலையில் சாப்பிட்டால், சொறி, சிரங்கு, குஷ்டம், தாபம், சயம், வாயுவு, முத்தோஷம் நீரிழிவு, அழல் கிராணியும்போம். ()

தண்ணீரின்குணம்.

தண்ணீர்க்குண மெல்லாந் தான்கேண் மடமயிலே
மண்ணின் குணமல்லான் மற்றுமுண்டோ - உண்ணுங்கால்
ஆறுகுள மேரிமடு வாழ்ந்தகூ பஞ்சுனையுள்
ஊறருவி யென்னு முலகு.

(இ-ள்.) தண்ணீர்க்குண மெல்லாம் மண்ணின்குணமே யல்லாமல் வேறில்லை. (கச)

ஆற்றுநீரின்குணம்.

ஆற்றுநீர் வாத மனலங் கபத்தோடு
தோற்றுகின்ற தாகந் தொலைக்குமே - ஊற்றமிகுந்
தேகத்தி னோயையெல்லாஞ் சிறித் தூரத்திவிடும்
போகத்திற் றாதுவுமாம் போற்று.

(இ-ள்.) வாதம். அனல், கபம், தாகம், எல்லாநோய்களும்போம், தாதுஉண்டாம். (கரு)

கங்காநதி நீரின்குணம்.

கங்காநதி நீர்பிறவிக் காட்டுக்கோர் பேரனலாங்
துங்கமுற வப்புனலைத் துய்க்குங்கால் - அங்கவெப்பு
மத்தங் கயம் பித்தம் வாயுமேகங்காந்தல்
ஒத்துந்தா கங்களும்போ முன்னு.

(இ-ள்.) வெப்பு, மந்தம், கபம், பித்தம், வாயு, மேகம், காந்தல், தாகமும்போம். இந்நீர் தெய்வீகத்தன்மையினாலே பிறவிக்காட்டுக்கு பெரிதாகிய நெருப்பாகும். (கசு)

யமுனாநதிநீரின்குணம்.

யமுனாநதி நீரா லதிசுகம்வெண் குட்டஞ்
சமனாகிகர் காசம்வெட்டைதாகம் - வமனமுறு
பித்த மிரைப்பிளைப்பு பேசரிய தாதுநட்டஞ்
சுத்தவெள் பாண்டிவைபோஞ் சொல்.

(இ-ள்.) சுரம், வெண்குஷ்டம், காசம், வெட்டை, தாகம். வாந்தி, பித்தம், இரைப்பு, இளைப்பு, தாது நஷ்டம். வெள்ளை பாண்டும்போம். (கஎ)

கோதாவிரிநதிநீரின்குணம்.

கோதாவிரியென்னுங் கோதினதி நீரதனால்
வாதாதிமுத்தோஷ மென்சினமும் - பேதாபே
தச்சொறியு முட்சிரங்குந் தாவு நளிர்ச்சுரமும்
இச்சகம்விட் டேகு மிசை.

(இ-ள்.) வாதமுதலாகிய முத்தோஷம், கோபம், சொறி சிரங்கு நளிர்சுரமும் போம். (கஅ)

துங்கபத்திரிநதிநீரின்குணம்.

மாதுங்க பத்திரிநீர் வன்றாக மென்புருக்கி
போதுங் கரப்பா னரோசிகநோய் - தாதுநட்டம்
நேத்திரதோஷங்காச நீரடைப்பு மெய்வி வன்னக்
கோத்திர மென் றோதிவை போக்கும்.

(இ-ள்.) தாகம், என்புருக்கி, கரப்பான், அரோசிகம், தாதுநஷ்டம், நேத்திரநோய், காசம், நீரடைப்பும் போம். (கசு)

நருமதாநதி நீரின்குணம்.

நருமதா வென்னு நதிப்புனலால் வாந்தி
சுரம்விக்கல் காமிலத்தின் றோஷம் - பொருமலிரு
கைகா லெரிவுநீர்க் கட்டுகோ ழைக்கட்டோ
டைவாத மென்பவைபோ மாங்கு.

(இ-ள்.) வாந்தி, சுரம், விக்கல், காமாலை, தோஷம். பொருமல், கைகாலெரிவு, நீர்க்கட்டு, கோழைக்கட்டு, ஐயம், வாதமும் போம்.

சிந்துநதிநீரின்குணம்.

சிந்துநதிப்புனலாற் றேகக் தறுங்கடுப்பு
புந்திமயக்கம்மேகம் புண்வியர்வை-விந்துநட்டம்
அத்திசுரம்வெட்டை யடர்மூத்தி ரச்சிக்கல்
முற்றியதா கப்பிணிபோ முன்னு.

(இ-ள்) தேகக்கடுப்பு, மயக்கம், மேகம், புண், வியர்வை, விந்துநஷ்டம், அஸ்திசுரம், வெட்டை, மூத்திரச்சிக்கல், வாந்தியும்போம்.

வைகைநதிநீரின்குணம்.

வைகை நதிப்புனலால் வாதநீர் குஷ்டொடுமெய்ச்
செய்கைதவிர்க் குஞ்சோபை திண்கரப்பான்-மெய்யெரிவு
தாகநடுக்கனிலந் தாதுநஷ்டஞ் சிலவிடமும்
ஏகுமிந்த வையம்விடுத் தே.

(இ-ள்.) வாதநீர், குஷ்டம், சோபை, கரப்பான். மெய்யெரிவு, தாகம், நடுக்குவாதம், தாதுநஷ்டம், சிலவிஷமும்போம். (உஉ)

சித்திரநதிநீரின்குணம்.

சித்திர நதிப்புனற்குத் தேகத் தறுங்கடுப்பு
தொத்துகரப் பான்சந்தி சூலைகுன்மங்-குத்துகின்ற
மூத்திரதோ ஷந்தோஷ மூடுவா தாதிக்கங்
கோத்தவூன் வீக்கமும்போங் கூறு.

(இ-ள்.) தேகக்கடுப்பு, கரப்பான், வாதாதிக்கம், சூலை, குன்மம், குத்தலான மூத்திரதோஷம், சந்நிதோஷம், திரிதோஷம், ஊன்வீக்கமும்போம். (உ௩)

காவிரிநதிநீரின் குணம்.

காவிரிநீ ராற்பொருமல் காசசுவா சஞ்சோபை
நீவுதொண்டைக் கட் டிளைப்பு நீரேற்றம்-பூவுலகின்
மன்னுதிரக் கட்டிபொடு வாயுலர லென்பவைபோம்
பின்னுடற்குக் காந்தியுமாம் பேசு.

(இ-ள்.) பொருமல், காசம், சுவாசம், சோபை, தொண்டைக்கட்டு, இளைப்பு, நீரேற்றம், உதிரக்கட்டி, வாயுலரலும்போம், தேகக்காந்தியுண்டாம். (உ௪)

தாம்பிரபன்னிநதிநீரின்குணம்.

தாம்பிரபன் னிப்புனலாற் சர்வசுரம் பித்தமிழித்
தூம்பிரமுட் காய்ச்சல் சுவாசநோய்-தேம்பிமிகக்
கக்குகப மென்புருக்கி கைகாலெரிவுடனே
மிக்குறுதா கங்களும்போம் விள்.

(இ-ள்.) சர்வசுரம், பித்தம், கண்புகைச்சல், உட்காய்ச்சல், சுவாசம், கபம், எலும்புருக்கி, கைகாலெரிவு, தாகமும்போம். (உரு)

பச்சையாற்றுநீரின்குணம்.

பச்சையாற் றுப்புனலைப் பார்த்துவந்த பேர்தமக்கு
நச்சிரும லீளைகப நண்ணுங்கா-னிச்சயமா
யவ்வளவோ வென்னி லனிலமுதி ரக்கடுப்புங்
கவ்வுசுர முங்காணுங் காண்.

(இ-ள்.) இருமல், ஈளை, கபம், வாயுவு, உதிரக்கடுப்பு, சுரமும் உண்டாம். (உசு)

குளத்துநீரின்குணம்.

குளத்துநீர் தானே கொடிதான வாதம்
வளர்த்திவிடு மப்பான் மதுவாங்-குளிர்ச்சியையு
மெத்தவுண் டாக்குமென மேதினியோர் தங்களுக்குக்
கொத்தலரும் பூங்குழலாய் கூறு.

(இ-ள்.) வாதம், மதுமேகம், குளிர்ச்சியும் உண்டாம். (உஎ)

தாமரைக்குளத்து நீரின்குணம்.

தண்டா மரைக்குளத்திற் றங்கு புனலதனால்
உண்டாகும் வாதபித்த முண்மையே-பண்டான
வெக்கைநோய் மாறாது வீறுந் தவனமுமா
மைக்கருங்க ண் மாதே வழுத்து.

(இ-ள்.) வாதம், பித்தம், வெக்கைநோய், தாகமும்உண்டாம். ()

அல்லிக்குளத்து நீரின்குணம்.

அல்லிக் குளத்தினீ ரக்கினிமந் தப்பேதி
மெல்லச் சொறிசிரங்கு வெப்புடனே-தொல்லுலகில்
தாதுநஷ்ட முங்கொடுக்கும் தாதுநஷ்ட முங்கொடுக்குங் .
கோல மலர்த்திருவே கூறு.

(இ-ள்.) அக்கினிமந்தபேதி, சொறிசிரங்கு, வெப்பு, நாவிலச்சரம் தாதுநஷ்டமும் உண்டாம்.

அதிகுளிர்ச்சி-சரகூறல்-உள்ளகுளத்து நீரின்குணம்.

சீத மிகுந்தடநீர் தேகந் தளர்ச்சிவிக்கல்
வாத கபங்கடிகள் வாந்திநளிர்-மோதிருமல்
வீறுகுன்ம நோயிவைவிளைக்குஞ் சரகுமதி
னூறுமெனி ஞேய்பலவா முன்னு.

(இ-ள்.) தளர்ச்சி, விக்கல், வாதகபம், கடிகள், வாந்தி, நளிர், இருமல், குன்மம், பலநோய்களும் உண்டாம். (௩௦)

ஏரிநீர் - சுனைநீர் - இவைகளின்குணம்.

ஏரிநீர் வாதமிலைத்த துவர்ப்பாகுங்
கூரியதோர் கற்சுனைநீர் கூறுங்காற் - சீரியதோர்
வாதமொடு பித்தமெழும் வைத்தொருநாட் பின்னுண்ணிற்
சீதமில்லை யுட்டினமாஞ் செப்பு.

(இ-ள்.) ஏரிநீர், வாதம், துவர்ப்பு, உண்டாம், கற்சுனைநீர், வாதம், பித்தம், உண்டாம், ஒருநாள் வைத்துண்ணுமல் சீதமில்லை, சூடு உண்டாம். (௩க)

ஓடைநீரின்குணம்.

ஓடை தருநீரை யுண்ணவதி தாகமுமா
மேடை யெனத்தோட்பலனு மெத்தவா - மோடைமலர்க்
கண்ணு யதுதுவர்ப்புங் காணுமதுரமுமாம்
எந்நாளும் பாரி லியம்பு.

(இ-ள்.) தாகமும், பலமும், மெத்தவுண்டாம், துவர்ப்பும் மதுரமும், உண்டாம். (௩௨)

கிணற்றுநீரின்குணம்.

ஆசர்ரக் கூபத் தறலா லதிதாகம்
விசாகச் சூடுபசி மெய்க்காந்தன் - மாசூலை
மெய்யுள்வலி சந்துளைப்பு வீழ்மயக்கஞ் சோபைபித்தம்
பையவரும் மீளையறும் பார்.

(இ-ள்.) அதிககாகம், சூடு, பசி, மெய்க்காந்தல், சூலை, தேகவலுமை, உண்டாம். சேட்டுமவாதம், மயக்கம், சோபை, பித்தம், ஈளையும்போம்.

சுனைநீரின்குணம்.

சுனைப்புனலைத் துய்த்தார்க்குஞ் சூழ்ந்ததிற்றோய்ந் தார்க்குங்
கனைப்புறுசி தச்சுரமுங்காணும் - வினைக்குரிய
வாதமுறுகத் தல் வருமே நடுக்கலின்னும்
ஓதபித்த கோபமுமா முன்னு.

(இ-ள்.) சிதசுரம், வாதம், நடுக்கல், பித்தம், கோபமும், உண்டாம். (கச)

ஊற்றுநீரின்குணம்.

ஊற்றுநீர் பித்தமொழிக்கு மினிப்பாகும்
ஆற்றிவிடுந் தாகத்தை யப்பொழுதே - கூற்றுவிழிக்
கொம்ப ரிடையாய் குணக்குணங்க ளைத்தெளிவாய்
நம்பியுல கோர றிய நாட்டு.

(இ-ள்.) பித்தம், தாகம், போம்இனிமையுண்டாம். (கரு)

பாறைநீரின்குணம்.

பாறைமீ தூறுகின்ற பானியந் தன்னையுண்டால்
ஏறுமுடலமெல்லா மெரிப்பே - விறுகின்ற
வாதகோபத் துடனே பாறுச்சுரமுமெழும்
ஓதசனத் துண்டா முவர்ப்பு.

(இ-ள்.) எரிப்பு, வாதம், கோபம், சுரம், உவர்ப்பு, உண்டாம்.

சுக்கான்பாறைநீரின்குணம் - விருத்தம்.

நீர்க்க டுப்பெ ழு நெஞ்சினிற் சிழ்க்கட்டும்
பார்க்கிற் பித்தம் பலபிணி சூழ்வதாந்
தீர்க்க வாயுவைத் தீர்த்திடுஞ் சிந்தைநோய்
தாக்குஞ் சுக்கான் றனிப்பாறைத் தோயமே.

(இ-ள்.) நீர்க்கடுப்பு, நெஞ்சிற் சிழ்க்கட்டு, பலபிணி, பித்தமும், உண்டாம், வாயுவுபோம். (கஎ)

கரும்பாறைநீரின்குணம்-வெ-பா.

கரும்பாறைத் தண்ணீர் கனசோபை வாந்தி
பெரும்பாடு பித்தசுரப் பீடை - யருந்தபக்க
நீர்க்கடுப்பு தாகமிவை நீக்கிவைத்த புடிதியழ
கேற்றகவளர்ப் பிக்கு மெய்யை யென்.

(இ-ள்.) சோபை, வாந்தி, பெரும்பாடு, பித்தசுரம், மயக்கம், நீர்க்கடுப்பு, தாகமும்போம், புத்தி, அழகும், உண்டாம். (௩௮)

அருவிநீரின்குணம்.

அருவிநீர மேகம கற்றுஞ்சி லேஷ்மம்
வருவிக்கும் ரத்தபித்தமாற்றும் - பெருமிதமாம்
வேலை யுலகின் மிகுந்தபல முண்டாக்குங்
காலை மலர்முகத்தாய் காண்.

(இ-ள்.) மேகம், ரத்தபித்தமும் போம், சிலேட்டுமம், பலமும் உண்டாம். (௩௯)

அடவிநீரின்குணம்.

அடவிப் புனலா லதிசீதா திக்கம்
இடவிற் கனைப்பிளைப்பு முண்டாம் - உடல்வயிறு
நாவிவ் விடம்வெதும்பு நண்ணுந் தலைப்பாரந்
திவவ்வ டற்சுரமாந்தேர்.

(இ-ள்.) சலதோஷமும், உடல்கனப்பும், இளைப்பும் தலைபாரமும், சுரமும், உடல் - வயிறு - நாவிவ்விடங்களில் அனலும், உண்டாம். (௪௦)

சிவந்தநீரின் குணம் - விருத்தம்.

காச பித்தத்தாற் காந்தியு மேகிடும்
ஊச லுட்டின முட்சுரங் காந்தலாம்
நாசதாதுவு நண்ணிடு மென்றுரை
வாச மில்சிவப் பாம்புனல் வண்மையே.

(இ-ள்.) பித்த காசத்தாலுண்டாகிய சூடுபோம், உஷ்ணம், உட்காச்சல், காந்தல், தாதுவும் உண்டாம். (௪௧)

கறுத்தநீரின்குணம்-வெண்பா.

கறுத்தசலம் வாந்தி கரப்பன்வெப்பு காந்தல்
இறுத்தநெஞ்சுக் கட்டிரும லீளை - மறைப்பில்சுர
நீக்கரிய நெஞ்செரிப்பு நீள்தோஷந் தாகநளிர்
போக்குமன லங்கொடுக்கும் போற்று.

(இ-ள்.) வாந்தி, கரப்பான், வெப்பு, காந்தல், நெஞ்சுக்கட்டு, இருமல், ஈளை, சுரம், நெஞ்செரிவு, தோஷம், தாகம், நளிரும்போம் அனல், உண்டாம். (௪௨)

வயல்நீரின்குணம்.

மேகம்போந் தாகம்போம் வெட்டையுடனேசுரம்போந்
தேகங் குளிர்ச்சியுற்றுத் தேறுங்காண் சோக-மெல்லாம்
ஆறு மிரத்தகய மாறுநோய்க் கோபமிக
மாறும் வயற்புனக்கு வை.

(இ-ள்.) மேகம், தாகம், வெட்டை, சுரம், இரத்தகயம், நோய்க் கோபம். சோபமும்போம், தேகக்குளிர்ச்சியுண்டாம். (சங)

நண்டுக்குழிநீரின்குணம்.

வாந்தியறுந் தாகமறு மாருத விக்கலறுங்
காந்த லெரிவுங் கடிதேகுந் - தோய்ந்துவருங்
கண்டுக் குயர்ந்த கனிமொழியே பன்னுறு
நண்டுக் குழிநீரை நாடு.

(இ-ள்.) வாந்தி, தாகம், மாருத விக்கல், காந்தல், தேகஎரி வும்போம். (சச)

பாசிநீர்முதலிய - பலநீரின்குணம் - விருத்தம்.

பாசித்தண்ணீர் நோயாக்கும் பருத்தவோடைத் தெளிவூறல்
நேசித்திடவே பிணியில்லை நிலைநீர்க்குண்டாங் குடல்வாதம்
மாசித்தண்ணீர் பித்தகற்றும் வளர்க்குஞ்சுரத்தைச் சரகூறல்
தேசத்தண்ணீர்க் குணந்தன்னைத்தெரியச்சொன்னேந் திண்ணமிதே.

இதுவுமது.

ஆற்றுத்தண்ணீர்க் கழகுண்டா மடைந்தசுனைக்கு மகோதரமாந்
தூற்றுமாரியெய்ப்பிருக்குந் துலைபாக்கிணறே கபந்திரட்டும்
மாற்றுங்குளமே வியாதியில்லை மாறுக்குளமே வியாதியுண்டு
தோற்றுமதுர மொழிமயிலே துலக்குந் தண்ணீர்க் குணங்காணே.

(இ-ள்.) பாசிநீர், பலநோய்கள்உண்டாம். ஓடைநீர், பிணியில்லை, நிலைநீர், குடல்வாதமாம், மாசிநீர், பித்தம்போம், சரகூறும் குளத்துநீர், சுரம்உண்டாம், ஆற்றுநீர், அழகுண்டாம், சுனைநீர், மகோதரம் உண்டாம், மழை, நீர், மெய்ப்பிருக்கும், கிணற்றுநீர், கபம்உண்டாம். இறைக்கும் குளத்துநீர், வியாதியில்லை, இறையாத குளத்துநீர், வியாதியுண்டு. (சரு)(சசு)

ஸ்நானபானங்களுக்குதவாதநீர்-வெண்பா.

சந்தரா நித்தர்வளி சாராத நீர்புழுதுற்
சந்தமதி சேறு கனப்பிலையு - நிந்தநீர்

தங்குசுவை யில்லாநீர் சாற்றுமிவை ஸ்நானபா
னங்களுக்கா காவுநினையாம்.

(இ-ள்.) சந்திரசூரியாள் படாததும், புழுக்கள் நிறைந்ததும், நாற்றமுள்ளதும், சேறுகுழம்பியிருக்கிறதும், இலை யுதிர்ந்திருக்கிறநீரும் சுவையில்லாதநீரும், ஆகாது நோய்உண்டாம். (சஎ)

நீராகார நீரின்குணம்.

வாதபித்த வைய வறட்சிகளை மாற்றிவிடும்
தாதுவுமுண் டாக்குநதா கம்போக்கு-மாதர்மெச்ச
வாராகா ரங்கொடுக்கு மாமதுரத் தைக்கொடுக்கு
நீராகா ரத்தெளிவு நீர்.

(இ-ள்.) வாதம், பித்தம், சிலேஷ்டமம், வறட்சி, தாகமும்போம். தாதுபலமுண்டாம். (சஅ)

கரடிநீரின் குணம்.

பித்த மயக்கமறும் பேரவுஷ தம்முறியும்
உற்றபிணி யிற்சிலவை யோடுங்காண்-சற்றும்
வழங்கா வசீரணமும் வனபேதி யும்போம்
பழங்காடிக் குள்ள பயன்.

(இ-ள்.) பித்தம், மயக்கம், சிலபிணிகள், அசீரணம், பேதியும் போம், அவிழ்தமுறிவு உண்டாம். (சகூ)

உப்புநீரின்குணம்.

உப்புநீரா லுலவை யுள்ளிலோ டிக்குத்தும்
எய்ப்பசன மாம்பித்த மேவிடுங்காண்-செப்புகின்ற
வாயிலூ றுஞ்சலமு மாதுவர்ப்பா மாதரசே
யோயுங் குடல்வாத மோது.

(இ-ள்.) குடல்வாதம்போம், வாயுகுத்தல், சாதஞ்செரிப்பு, பித்தம், வாய்நீரூறல், துவர்ப்புமுண்டா . (ருO)

சமுத்திரநீரின்குணம்.

கடலின் புனலாற் கவிகை பெருநோய்
உடலின் கடுப்புதிரச் சூலை-படர்குஷ்டம்
வாதகுன்மம் வெப்பிரத்த வாதநீ ராமைமம
கோதரம்பலீ கமறுங்கூறு.

இதுவுமது-விருத்தம்.

குன்ம வாயு குடற்கரி யென்பதும்
வன்ம மான மலசல பந்தமுங்
கன்ம மாகும் வன்னோய்களுங் காணுமோ
தன்மை வாரிநீர் காய்ச்சி நகரினே.

இதுவுமது.

உடற் கடுப்புட னுற்றெழு சோணிதம்
நடுக்கு வாதமு நாப்பிடிப் போடுபல்
இடுக்கி ரத்தமு னிற்று விழுவதுந்
தடுக்க தாஞ்சந்நி தோஷமு மோடுமே.

(இ-ள்.) சமுத்திர நீரைக்காய்ச்சிக் குடித்தால் பெருநோய், மகோதரம், உடல்கடுப்பு, உதிரச்சூலை, குஷ்டம், வாதகுன்மம், வெப்பு, இரத்தவாதம், மகோதரக்கட்டி, பீலிகம், குன்மவாயு, மலசலபந்தம், வாதநீராமை, கன்மத்தாலாகிய நோய்கள், சோணிதவாதம், நடுக்குவாதம், நாக்கிழுப்பு, பல்லிடுக்குரத்தம், ஊனிற்றுவிழல், சந்நிதோஷமும்போம். (௫௧) (௫௨) (௫௩)

நாவல்நீரின்குணம் வெண்பா.

நாவல்வே ரூறுசல நாளுமதி சாரத்தை
மாவலிய மேகத்தை மாற்றுங்காண்-பூவுலகில்
விந்தோ டதிசீதம் வீறுபலம் வெப்பையும்
மந்தமிவை யுண்டாக்கு மால்.

(இ-ள்.) அதிசாரம், மேகமும்போம், சிலேஷ்மம், சீதம், பலம்பந்தம், விந்து, வெப்பும் உண்டாம். (௫௪)

கருங்காலிநீரின்குணம்.

குட்டங் கபரோகங் குன்மம் பெருவயிறு
நெட்டைப் புழுதிமிரு நீரிழிவும்-விட்டே
யருங்கான கத்தீக்கு மந்நாகமே நல்ல
கருங்காலி நீரதனைக் கண்டு.

(இ-ள்.) குட்டம், கபரோகம், குன்மம், பெருவயிறு, புழு, திமிர், நீரிழிவும்போம். (௫௫)

இலவுநீரின்குணம்.

அட்டகுன்ம நீரிழிவு மற்றிடுமே தேகத்திற்
கெட்ட விரணக் கிருமியறு-மட்டலரும்
கூந்தன்முடி மாதரசே கோதிலில விண்புனலாற்
சேர்ந்தவழ லுந்தணியுஞ் செப்பு.

(இ-ள்.) அஷ்டகுன்மம், நீரிழிவு. இரணம், கிருமி, அழலும், போம். (௫௬)

வாழைநீரின்குணம்.

வாழைநீர் தான்குளிர்ச்சி வல்லபல முண்டாக்கும்
பேழை வயிறுடைக்கும் பெண்மயிலே-வீழும்வல்லி
ரத்தக் கிரிச்ச மெரிநீ ரிவையுடனே
சிற்றிரணம் போக்குந் தெரி.

இதுவுமது.

சோமரோ கங்க ளேயு மிளைப்புழலை
நாமமுறும் பாண்டுவகை நாடாதே-பூமிதனில்
காமை யெலும்புருக்கி காணு வணங்கரசே
வாழைநீர்க் கென்றுளத்தில் வை.

(இ-ள்.) இரத்தக்கழிச்சல், கிரிச்சரம், நீரெரிவு, இரணம், சோமரோகம், இளைப்பு, உழலை, பாண்டுவகை, எலும்புருக்கியும் போம், குளிர்ச்சி, பலமும் உண்டாம். (௫௭) (௫௮)

மட்டை நீரின்குணம்.

மட்டைநீ ராற்கிரிச்ச மாறு மடமயிலே
யொட்டிநின்ற நீழிவு மோடுங்காண்-கெட்ட
பவுத்திரமும் புண்ணும் பறக்கும் பயந்தே
புயிக்குள்வயிற் றுக்கடுப்பும் போம்.

(இ-ள்.) கிரிச்சரம், நீரிழிவு, பவுத்திரம், புண், வயிற்றுக்கடுப்பும் போம். (௫௯)

இளநீரின்குணம்.

இளநீரால் வாதபித்த மேகு மனதுந்
தெளிவாய்த் துலங்குமிருதிஷ்டக்-கொளிவுங்
குளிர்ச்சியு முண்டாகுங் கொடியவனல் நீங்குந்
தளிர்த்தகன மொய்தாகுஞ் சாற்று.

இதுவுமது.

என்றுமிள நீர்நீ ரிறக்குங் கபமறக்குந்
தன்றனலாந் சீகமெனச் சொல்லுவர்கா-னின்றெழும்பும்
பித்தமொடு வாந்தியும்போம் பேதிகட்டி ரண்டுமுண்டாங்
கொத்தலரும் பூங்குழலாய் கூறு.

(இ-ள்.) வாதம், பித்தம், அனல், கபம், வாந்தி, பேதி, நீரடைப் பும்போம், மனதுதெளிவு, கண்ணொளி தேகக்குளிர்ச்சியும் உண் டாம். (௬0) (௬௧)

செவ்விள நீரின்குணம்.

பித்தமொடு தாகம் பெருத்த வழிநடையால்
எய்த்தலா யாச மிவையேகு-நித்தியமுஞ்
செவ்விளநீ ருண்டாக்காற் றீரும் பலசயமும்
அவ்விளநீர்க் கொங்கைமின்னே யாய்.

(இ-ள்.) பித்தம், தாகம், வழிநடையாலிளைத்தல், ஆயாசம், சயமு ம்போம். (௬௨)

புதிய இளநீரின்குணம்.

புதியிளநீர் பித்தமறும் பூதலத்தோ ருண்ணும்
பதமுடனே யுண்பார் பரிவாய்-நிதநிதமும்
உண்ணப் பழவிளநீ ருண்டாம் பலவகைநோய்
எண்ணி யறிவா யினி.

(இ-ள்.) புதியஇளநீர், பித்தம்போம், பத்தியத்திற்காகும், பழை யவிளநீர், பலவகை நோயுண்டாகும். (௬௩)

பச்சை இளநீரின்குணம்.

பச்சிளநீர் மேகம் பழஞ்சுரக்க ளைப்போக்கும்
கச்சுமுலை மாதே கபமறுக்கு-மெச்ச
வயிற்றிற் கிருமியொடு வன்சொறி கண்டோடம்
அயர்த்தோ டச்செய்யு மறி.

(இ-ள்.) மேகம், பழயசுரம், கபம், கிருமி, சொறி, நேத்திர தோ ஷமும்போம்.

கேளியிளநீரின்குணம்.

கேளியுண்ண மேகம்போங் கேளாய் மடமயிலே
நீளகட்டுக் கிடை நில்லாதே-தாளரத

தாகமொடு மந்தமறுந் தானே கரப்பனும்போம்
வேகவன லுர்தணியு மே.

(இ-ள்.) மேகம், வயிற்றுப்புழுவு, தாகம், மந்தம், கரப்பான், அன லும்போம். (சுரு)

மஞ்சள்-கச்சி இளநீரின்குணம்.

பித்தம்போஞ் சோபையறும் பேருலவிலியாவர்க்குந்
தொத்து கபமுந் தொலையுங்காண்-தத்துகின்ற
பொல்லாப் பழஞ்சுரமும் போகுமஞ்சட் கச்சிக்குப்
பொல்லாப் பொன்றில்லை புகல்.

(இ-ள்.) பித்தம், சோபை, கபம், பழஞ்சுரமும்போம். (சுகூ)

அடுக்கு-இளநீரின்குணம்.

அடுக்கிளநீ ரையத்தை யண்டாதகற்றும்
வடுக்கண்ணா யின்னும் வகுப்போம்-படுக்கும்போ
துண்டாற் சுகமெய்து முள்ளாங் கிருமியினைக்
கண்டா விறந்துவிடுங் காண்.

(இ-ள்.) ஐயம்போம், இராவிலுண்டால், வயிற்றுக் கிருமிசாவும், சுகமும் உண்டாம். (சுஎ)

கருவிளநீரின்குணம்.

மருமலர்வாழ் மானேகேள் வையகத்தோர் நித்தங்
கருவிளநீ ருண்ணக் கபமுங்-கிருமிநெளி
புண்ணுங் கரப்பானும் போகுமிகக் காந்திபுறும்
எண்ணுமனப் பூரிப்பா மெண்.

(இ-ள்.) கபம், கிருமிப்புண்ணும், கரப்பானும்போம், காந்தி, மன ப்பூரிப்பும் உண்டாம். (சுஅ)

சோரி யிளநீரின்குணம்.

காரிலகு கூந்தற் கருங்கண் மடமயிலே
சோரியிள நீரருந்தச் சோபையறுங்-கூரியதோர்
பூச்சி கிருமி பொன்றும் பொன்மேனி யாமுடலம்
பேச்சிற் றெளிவுண்டாம் பேசு.

(இ-ள்.) சோபை, பூச்சி, கிருமியும்போம், மேனி பொன்னிறம், வார்த்தைத்தெளிவும் உண்டாம். (சுகூ)

ஆயிரங்கச்சியிளநீரின் குணம்.

வேகமுறுந் தீபனமாம் விட்டோடும் வாதகபம்
ஆகமதிற் சேர்ந்த வரிப்பும்போம்-வாகுறுபுண்
வாயிரங்கு சிழும் வயிற்றுவலி யுந்தொலையும்
ஆயிரங் கச்சிக் கறி.

(இ-ள்.) வாதகபம், தினவு, புண்வாயிலிரங்குஞ்சிழ், வயிற்றுவலி யும்போம், அதிவேகதீபனமும் உண்டாம். (எ0)

குண்டற்கச்சியிளநீரின் குணம்.

அண்டையிலே நின்றூர்க் கரோசிகெடுந் தீபனமாஞ்
செண்டைவிழி மாதரசே கேளின்னுங்-கண்டபடி
குண்டற்கச் சிக்குக் கொடுந்தாக மாறிவிடும்
பண்டைப் பழமலம்போம் பார்.

(இ-ள்.) அரோசிகம், தாகம், பழமலமும்போம், தீபனம் உண்டாம். (எக)

உண்பதற்கு முன்பருந்தும் இளநீரின்குணம்.

ஊணுக்கு முன்பிளநீ ருண்டாற் பசிபோகும்
வீணுக்குக் குன்மம் விளையுங்காண்-பேணியிதை
மாலை தனிலருந்த மன்னு புழுச்சாகும்
வேலைபொத்த கண்ணாய் விளம்பு.

(இ-ள்.) பசிநோய்போம், குன்மவியாதியுண்டாம், இதை மாலையி லுண்ணால், புழுச்சாகும். (எ௨)

உண்டபின்பு-அருந்தும் இளநீரின்குணம்.

வாதபித்த மீறுது வன்பயித்தி யந்திருங்
கோதின்மலஞ் சாருங் கொடும்பசியா-மாதரசே
மீண்டிபநோய் வாராது மேனி மினுமினுக்கும்
உண்டபின்பு கல்லிளநீ ருண்.

(இ-ள்.) வாதபித்தம், பைத்தியம், மலமும்போம், பசி, மேனியு ண்டாம் நோயில்லை. (எ௩)

காய்ந்தாறிய இளநீரின்குணம்.

காய்ந்தாறி யவிளநீர் காசங் கபந்தீர்க்கு
மேய்ந்திடாத் தாகசுர மாற்றுங்காண்-ஆய்ந்தொரு

செவ்விளநீர் பித்தஞ் சிதைக்குங் கெளிவுகண்டால்
எவ்வளவுந் தாபமிலை யெண்.

(இ-ள்.) காசம், கபம், தாகசுரம், பித்தமும்போம். (எச)

வெந்நீர் வகை.

வெந்நீரின்குணம்.

நெஞ்செரிப்பு நெற்றிவலி நீங்காப் புளியேப்பம்
வஞ்சமுற வந்த வயிற்றிநோய்-விஞ்சியே
வீழாமக் கட்டோடு வெப்பிருமற் சுட்டநீர்
ஆழாக்குட் கொள்ளவறும்.

(இ-ள்.) நெஞ்செரிப்பு, நெற்றிவலி, புளி யேப்பம், வயிற்றுநோய், இருமலும்போம். (எரு)

காய்ந்தாற வைத்தநீர் கட்டுழலை விக்கலொடு
வாய்ந்தவதி சாரபித்த மாற்றுங்காண்சேர்ந்து - வரு
மூர்ச்சை விஷஞ்சர்த்தி முன்மயக்க மேகமதி
யூர்ச்சித முத்தோஷம்போக்கும்.

இதுவுமது.

காய்ந்தநீ ருண்ணிங்காற் கண்செவிநோய் சூலகுன்மத
தோய்ந்தசுர வேகத் தொடரையம் - பாய்ந்தடரும்
வாதத்தின் கோபமிவை மாறுமென லாதியருள்
வேதத்தின் வாக்கியமாம் விள்.

(இ-ள்.) உழலை, விக்கல், அதிசாரம், பித்தம், மூர்ச்சை, விஷம், வாந்தி. மயக்கம், மேகம், உவர்ச்சி, திரிதோஷம், கண்ணோய், செவி நோய், சூலை, குன்மம், சுரம், ஐயம், வாதகோபமும்போம். (எஎ)

கால்கூறு-அரைக்கூறு-காய்ந்த-வெந்நீரின்குணம்.

காற்கூறு காய்நீராற் காரிகையே பித்தம்போ
மேற்கூறு பாதிசுட்ட வெந்நீரான் - மேற்கூறும்
வாதமொடு பித்தம்போம் வைத்தொருநாட் சென்றுண்கு
ரோதம்போ மோடி யொளித்து.

(இ-ள்.) கால்கூறுகாய்ந்தநீர், பித்தம்போம், அரைக்கூறுகாய்ந்த நீர்வாதபித்தம்போம். (எஅ)

முக்காறகூறுகாய்ந்த-வெந்நீரின்குணம்.

முப்பங்கறக்காய்ந்த முத்தவெந்நீ ரால்வாதஞ்
செப்புங் குளிர்நடுக்கல் பித்தசுரம்வெக் - கைப்பலநோய்
வாதபித்த மையமிவை மாறுஞ் சுரிகுழலே
பூதலத்து நாளும் புகல்.

(இ-ள்.) வாதம், குளிர், நடுக்கல், பித்தசுரம், வெக்கை, பலவித நோய். வாதபித்தம், ஐயமும்போம். (எசு)

உண்பதற்கு-முன்பு-பின்பு-நடு-இக்காலங்களில்

அருந்தும்-வெந்நீரின்குணம்.

ஊணுக்கு முன்புவெந்நீ ருண்டாக்காற் றிபனம்போம்
ஊணுக்குப் பின்பருந்தி லூதியமாம் - ஊணுக்குப்
பாதியிலுண் டாற்பசியும் பாதியா மிப்புனலே
போதுசுரம் வாதமகற் றும்.

(இ-ள்.) உண்பதற்கு, முன்புண்டால், பசிதிபனம்போம், பின்பு ண்டால், சுரம், தாகம், பொருமல், மந்தம், வாதமும்போம். ஆயு ளும், தாதவும் உண்டாம். பாதியிலுண்டால், பசியும்பாதியாம். ()

பாத்திரபேத - வெந்நீரின் வகை.

பொற்கெண்டி வெந்நீரின்குணம்.

பொற்கெண்டி தன்னில்வெந்நீர் பூரித்துட் கொண்டிடுங்கான்
மற்கொண்ட வாயுகபம் வாயருசி - பெற்கொண்ட
மெய்யழல்வெப் புந்தனியும் விந்துவுநற் புத்தியொடு
மெய்யறிவு மோங்குமென வின்னு.

(இ-ள்) வாயு, கபம், அருசி, மெய்யழல், வெப்பும்போம், விந்து, நற்புத்தி, அறிவும் உண்டாம். (அக)

சரிகைவெள்ளிக்கெண்டி-வெந்நீரின்குணம்.

சரிகைவெள்ளிக்கெண்டி தனிலெட்டி லொன்றுப்
பெருகக்காய்ச் சும்புனலைப் பெய்தே - பருகுக்கால்
வெப்பொடுதா கக்குன்மம் விறபித்தக் காய்ச்சலும்போந்
துப்பொடுட லஞ்செருக்குஞ் சொல்.

(இ-ள்.) வெப்பு, தாகம், குன்மம், பித்தம், காய்ச்சலும்போம், உடல்செழுப்பு, பலமும்உண்டாம. (அஉ)

தாம்பிரம் வெள்ளி பஞ்சலோகம்-வெண்கலம்
இவைகளின் வெந்நீரின்குணம்.

இரவிவட்டிற் றாம மிரத்தபித்தம் போக்கும்
இரசிதவட் டிற்கைய மேகும்-வருகலப்பு
வட்டிலறல்முந்தோஷ மாற்றும்வெண் கலச்சலமெய்க்
கொட்டிரத்த தாதுவைச் சேர்க்கும்.

(இ-ள்.) தாம்பிரபத்திர வெந்நீர், இரத்தபித்தம், கண்புகைச்சலு ம்போம், வெள்ளிபாத்திர வெந்நீர், ஐயமபோம், பஞ்சலோக வெந்நீர் திரிதோஷம்போம், வெங்கலப்பாத்திர வெந்நீர், தாது உண்டாம். ()

கெண்டி வெந்நீரின்குணம்.

கெண்டிதனிற் காய்ந்திடு கீலாலமதை யாற்றியுண
அண்டிய நோயு மடாசிரங்கும்-பண்டைக்
குடைச்சலுங்கை காலிற் குடைச்சலொடு சந்தின்
குடைச்சலும்போ நன்றாகக் கூறு.

(இ-ள்.) நோய், சிரங்கு, வாய்விறுலுண்டாகுங் கால்கைமுதலா ன குடைச்சல்களும்போம். (அச)

பன்னீர்ச்சொம்பு வெந்நீரின்குணம்.

பன்னீர்ச்சொம் பிற்காய்ந்த பானீயம் விட்டருந்த
மன்னிய சுவாசம் விக்கல்-மாபிரமை-பன்னரிய
பித்தசி லேஷ்மவளி பேசரிய தாளின்வலி
யித்தரையை விட்டகலு மெண்.

(இ-ள்.) சுவாசம், விக்கல், பிரமை, பித்தசிலேஷ்மவாயு, தாள்வலி யும்போம். (அரு)

இரும்புக்கெண்டி வெந்நீரின்குணம்.

இரும்புநறுங் கெண்டிதனி லேந்திய வெந்நீரை
விரும்பியுணப் பாண்டு விலகுந்-திரும்பவுமோ
தாதுவுமா நாடிகளுந் தாமுரக்குந் தேகமதிற்
சீதசுக முண்டாந் தெளி.

(இ-ள்.) பாண்டுநோய்போம், இந்திரியபுஷ்டி, நரம்புரப்பு, தேகக் குளிர்ச்சியும், உண்டாம. (அசா)

நீர்வகை-முற்றியது.

பால்வகை.

முலைப்பாற்குணம்.

தன்னிபமென் றேறிற் சருவதோ ஷங்களும்போம்
உன்னிய தாப மொழியுங்காண்-சந்நியொடு
வாதசுரம் பித்தசுரம் வன்கபச்சு ரந்தணியுங்
கோதில் வலுமையுண்டாங் கூறு..

இதுவுமது.

இருந்தோஷம்போக்கு மிகற்கிரிச்சர் தீர்க்கும்
அருந்து மருந்தி னனுபானம்-பொருந்தும்
அஞ்சனத்திற் காகு மறல்வறட்சி நீக்கிவிடும்
பஞ்சினடி மாதர்முலைப் பால்.

(இ-ள்.) சர்வதோஷங்கள், தாபதோஷம், சந்நிவாதசுரம், பித்தசுரம், கபச்சுரம், கிரிச்சுரர், வறட்சியும்போம், பலம் உண்டாம், கண்ணிற்கும், மருந்தனுபானத்திற்குமாகும். (௮௭) (௮௮)

கரியநிறமாதர் முலைப்பாற்குணம்.

கரியநிற மாதர் கலசமுலைக் கீரம்
அரியவிழிக் காமருந்திற் காகா-திருநிலத்துள்
நோயணுகாச் செய்ய நுடங்கிடையார் தம்முலைப்பால்
நீயமுத்தோ ஷம்போக்குஞ் சேர்.

(இ-ள்.) கரியநிறமாதர் முலைப்பால் கண்வியாதிக்காகும், நோய் அணுகாது, சிவந்தநிறமாதர் முலைப்பால் வாதாதி முத்தோஷங்கள் போம். (௮௯)

பரத்தையர் முலைப்பாற்குணம்.

பரத்தையர் முலைப்பாற்குப் பாரமுத்தோ ஷங்கள்
உரத்துவரும் வாதமுமுண் டாகும்-இரத்தச்
சொறிகிரந்தி புண்ணுந் தொடர்கழலை சேருங்
குறிபறிக்கு நீக்கிக் கொடு.

(இ-ள்.) முத்தோஷம், வாதம், கிரந்தி, சொறி, புண், கால்நோயும் உண்டாம். (௯௦)

பசுவின் பாற்குணம்.

பாலர் கிழவர் பழஞ்சுரத்தோர் புண்ணுளி
சூலையர் மேகத்தோர் துற்பலத்தோர் - ஏனுமிவர்
எல்லார்க்கு மாகு மிளைத்தவர்க்குஞ் சாதகமாம்
நல்லாய் பசுவின்பால் நாட்டு.

(இ-ள்.) பாலர், கிழவர், பழஞ்சுரத்தோர், புண்ணுளார், சூலையர், மேகத் தோர், துர்ப்பலத்தோர், இளைத்தவர், சாப்பிட சுகமுண் டாம். (சுக)

வெண்மை-செம்மை-கருமை-கபிலையென்னும்
இந்நிறமுள்ள பசுக்களின் பாற்குணம்.

வெண்பசுவின் பால்போக்கும் பித்தத்தை மெய்ச்சிவந்த
வண்பசுவின் பால்போக்கும் வாதத்தைக்-கண்சிறந்த
காராவின் பால்போக்கு மையங் கபிலைப்பால்
ஆரமிர்தாந் தோஷமறுக் கும்.

(இ-ள்.) வெண்பசுவின் பால், பித்தம்போம், சிவந்தபசுவின்பால், வாதம்போம், கருப்புப் பசுவின்பால், ஐயம்போம், கபிலைப்பசுவின் பால் முத்தோஷங்கள் போம். (சுஉ)

காராம்பசுவின் - பாற்குணம்.

கண்ணோ யகற்றுங் கபரோகந் தான்போக்கு
மண்ணிலுள்ள பால்தோஷ மாற்றுங்காண் - பெண்ணே
இரத்தபித்தம் போக்கு மிராச வசியங்
கறுத்தபசும் பாலதனைக் காண்.

(இ-ள்.) கண்ணோய், கபரோகம், பால்களுடைய தோஷம், இரத்த பித்தமும்போம், இராசவசியம் உண்டாம். (சுங)

நாரை - மான் - கபிலை - என்னும்
இந்நிறமுள்ளபசுக்களின்-பாற்குணம்.

நாரைப் பசுவின்பால் நாளுமுய ணோயகற்று
மாரை நிறப்பசும்பால் வாய்த்திடுணோ - வேரையுறு
முப்பிணியும்போகு மொழிகபிலை யின்பாலுக்
செப்பணியும் போமே யிரங்கி.

(இ-ள்.) காரைப் பசுவின்பால், முயல்நோய்போம், மான்நிறப் பசுவின்பால், முப்பிணிபோம், கபிலைப் பசுவின்பால், எல்லாப்பிணி யும்போம். (கச)

கொம்பசையும்பசுவின் - பாற்குணம்.

கொம்பசையு மப்பாலோ கூறுபித்தம் போக்கிவிடுந்
தம்பவா தத்தைத் தருவிக்கும் - வம்புமுலை
மானேகேள் வித்தவைவ ளர்ப்பிக்கும் வன்கபத்தைத்
தானே யெழுப்புமெனச் சாற்று.

(இ-ள்.) பித்தம்போம், வாதம், விந்து, கபமும் உண்டாம். (கரு)

தே - மூன்றாமீற்று - நான்கா
மீற்றுப்பசுக்களின் பாற்குணம்

மூன்றாமீற் றின்பான் முதிர்கபத்தைப் போக்கிவிடும்
என்றநா லாமீற் றெனும்பாலுங் - கூன்றுதிரி
தோடமறுஞ் சுகமுண்டிவ் வாப்பாற்சந்
தோடமே வர்க்குமுண் டாக்கும்.

(இ-ள்.) மூன்றாமீற்று பசுவின்பால், கபம்ரோகம், நான்காமீற் றுப்பசுவின்பால், திரிதோஷம்போம், சுகம், சந்தோஷமும் உண் டாம். (கசு)

ஆகாப்பசுவின் - பாற்குணம் - வி-ம்.

விஞ்சுவரணை தாராநோய் மிகுந்தச்சுழலல் வெண்புள்ளி
துஞ்சியலைந்து மலமருந்தல் சுடுகாடேகி பெருசம்புனலில்
வஞ்சுவகையி னுமின்பா லாகாதெனுஞ்சிற் றிரிதோஷம்
கெஞ்சிலடையுங் கபநோயா நிறைந்தவயதுங் குறைந்திடுமே!

(இ-ள்.) நோய்கொண்டது. வெண்புள்ளி யுடையது, மலமருந் தினது, சுடுகாட்டில் எலும்பு தின்னது அலைந்துதிரிந்தது இவ்வைந்து பசுக்களின் பாலருந்த கபநோயும், திரிதோஷமும் வயதுகுறைவும் உண்டாம். (கஎ)

பகற்பசுவின்-பாற்குணம்-வெண்பா.

பகற்பால் சிசுகட்குப் பக்குவமென் றாகும்
விகற்பமொடு மைமெருக்கு மெய்மீ - யெதற்குமிகத்

நீகடாச் செய்யுமித்தாற் சேராதுட் காய்ச்சலனல்
தாதவிழும் பூங்குழலீ சாற்று.

(இ-ள்.) உட்காச்சல், அனலும்போம், ஐயம்உண்டாம். (கூரு)

தே - இராப்பசுவின்-பாற்குணம்.

பகற்பசும்பால் காய்ச்சிப் பருகி னழலும்
இகற்கபமு மீளையுமி ராவாம் - புகல்பித்த
வேகமும்போ மேனியெல்லா மேனியிடுந் தாதுவுமாம்
போகமுமுண் டாகும் புகல்.

பகல் முழுவதுஞ் சுரந்திருந்து இரவில்கறப்பது பகற்பாலாம்-இரவில் சுரந்திருந்து காயிலேயில்கரப்பது இராப்பாலாம்.

இதுவுமது.

இரவின்பால் கண்ணிலெழுபிணிபோக் கும்பின்
பரவியநோ யும்போக்கும் பாரில்விரகுமுற்றூர்க்
கத்தியம் பன்னவிழி யாமிழையே யாவருக்கும்
பத்தியமா மென்றைக்கும் பார்.

(இ-ள்.) அழல், கபம், ஈளை, பித்தவேகம், கண்ணிலெழும்பிணிகளும்போம், மந்தகமேனி, தாது, விரகமும்உண்டாம். (கூகூ) (கOO)

தே - எருமைப் பாற்குணம்.

வாதத் திமிரை வரவழைக்கும் புத்தியினற்
போதத் தெளிவைதனி போக்குங்காண்-கோதற்றே
யங்கத் துறுமருந்தை யன்றே முடித்துவிடும்
பங்கத துறுமேதிப்பால்.

(இ-ள்.) வாதம், திமிர், மருந்துமுறியும்உண்டாம், புத்தித்தெளிவு போம். (கOக)

வெள்ளாட்டுப் பாற்குணம்.

வெள்ளாட்டுப் பாலுக்கு மேவியநற் றிபனமாந்
தள்ளாடு வாதபித்தஞ் சாந்தமாம்-உள்ளிரைப்புச்
சீதமதிசாரஞ் சிலேஷ்மமறும் புண்ணாறும
வாதகி லேசமும்போமாறி.

(இ-ள்.) தீபனம்உண்டாம், வாதபித்தம் இரைப்பு, சீதம், அதிசாரம், சிலேட்டுமம், புண், வாதகிலேசமும்போம். (கoஉ)

செம்மறியாட்டுப் பாற்குணம்.

செம்மறிப்பால் பித்தஞ் சிலேஷ்மத்தை யுண்டாக்கும்
விம்மும் வயிறுமிக மேன்மூச்சாங் - கொம்மை
வருமுலையாய் பத்தியத்தில் வாராது வாய்வாம்
பருகுவர்க்கு நாளும் பகர்.

(இ-ள்.) பித்தம், சிலேட்டுமம். வயிறுவிம்மல், வாய்வும் உண்டாம். (கoங)

யானைப்பாற்குணம்.

வாதம்போந் தாதுபுஷ்டி வந்தடரும் வன்பலமிவ்
யாதுபித்தங் கூடியழகுமிகுங் - தாதுமலர்த்
தேனைப்பா லிற்கறந்த செய்கைபோ லேயிருக்கும்
யானைப்பா லுண்ணு மவர்க்கு.

(இ-ள்.) வாதம்போம், தாதுபுஷ்டி, பலம், பித்தம், அழகும், உண்டாம். (கoச)

குதிரைப்பாற்குணம்.

விரிய விர்த்தி விளைக்குமழ குண்டாக்குங்
கரியத்திற் காமங் கதிப்பிக்கும் - வாரார்
கரகமெனச் செப்புமுலைக் காரிகையே கேளாய்
துரகதப்பால் செய்யுந் தொழில்.

(இ-ள்.) விரியவிர்த்தி, அழகும் உண்டாம். (கoரு)

ஒட்டைப்பாற்குணம்.

ஒட்டைப்பா லுக்குமந்த மூர்வாதசூலையொடும்
அட்ட குணக்கரப்பா னுர்வதன்றி - மட்டிடசக்
காதிரைச்சன் மந்தமதி காசஞ்சு வாசமுமா
மாதரைக்கு நாளும் வழுத்து.

(இ-ள்.) மந்தம், வாதசூலை, எட்டுக்குணக்கரப்பான், காதிரைச்சல், மந்தபுத்தி, காசம், சுவாசமும் உண்டாம். (கoசு)

கழுதைப்பாற்குணம்.

கழுதைப்பால் வாதங்கரப்பான் விரணங்
கழுதலையுள் வித்திரதி தானே - எழுகின்ற

ஒட்டிய புண்சிழ்மேக மோடு சொறிசிரங்கு
கட்டியிவை போக்குங் கழறு.

இதுவுமது.

கத்தவத்தின் பாற்குக் கரிய கிரந்தியறுஞ்
சித்தப் பிரமைபித்தந் தீருங்காண்-தத்திவரும்
ஐய மொழியு மதிகமதுரமுமாஞ்
செய்ய மடமயிலே செப்பு.

(இ-ள்.) வாதம், கரப்பான், விரணம், தழுதணை, நரம்பிலுண்டாகு ங்கட்டி, புண், சிழ்மேகம், சொறி, சிரங்கு, கருங்கிரந்தி, சித்தபிரமை, பித்தம், ஐயமும்போம், தித்திப்பாகவிருக்கும். (க0எ) (க0அ)

பாத்திர பேதத்தி லுண்டாகிய பாற்குணம்.

செம்பிலட்டும் பால்வாத சீதமொழிக் கும்பொன்மண்
கும்பத் தடுப்பால்போக் கும்பித்தை-யம்புவியுள்
வெள்ளி யுறையிரும்பில் விட்டுக்காய்ச் சும்பாலால்
துள்ளியுறை யையமறுஞ் சொல்.

(இ-ள்.) செம்பில் வைத்துக் காய்ச்சிய பாலால், வாதசீதம்போம் பொன், மண், இவைகளில் காய்ச்சிய பாலால், பித்தம்போம், வெள் ளி, வெண்கலம், இரும்பில், காய்ச்சியபாலால், ஐயம்போம். (கCக)

ஆடையெடுத்த பாற்குணம்.

ஆடையெடுக் கும்பாலா லக்கினிமந் தப்படுமே
வாடைநல்லாய் சிரணமாம் வாதமறுங்-கோடைபிடி
போலு மெழுந்தபித்தம் போகுமைய மேகுமயில்
வேலனைய கண்ணாய் விதி.

(இ-ள்.) அசிரணம், வாதம், பித்தமும்போம், அக்கினிமந்தம், ஐய மும் உண்டாம்.

காய்ச்சும்பாலுக்கு-நீரளவைகூறல்.

ஆடுபசும் பால்காய்ச்சி லஷ்டபாகம் புனலாம்
நீடெருமை செம்மறிக்கு நேர்நேராங்-தேடரிய
சுக்குசிறு காஞ்சொறிவேர் கூட்டிச் சுவறியபால்
ஒக்கும்வெள்ளாட் டுப்பாற்கென் றோறு.

(இ-ள்.) வெள்ளாட்டு, பசு, இவைகளின்பாற்கு, எட்டிலொருபங்குசலமும், எருமை, செம்மறியாடு, இவைகளின்பாற்குச், சரிபங்குசலமும் விட்டுக், காய்ச்சவேண்டும். (௧௧௧)

பாலேட்டின்குணம்.

பாலேட்டாற் பித்தமறும் பாழ்த்தகொடுஞ் சர்த்தியும்போம்
மாலாட்டு மூர்ச்சையும்போம் வன்பலமா-மேலாலே
தாதுமிகுந் தீபனமாந் தானே யிளைத்தவர்க்குக்
கோதமறு மாமயிலே கூறு.

(இ-ள்.) பித்தம், வாந்தி, மூர்ச்சையும்போம், பலம், தாது, தீபனம், தேகபுஷ்டியும் உண்டாம். (௧௧௨)

தேங்காய்ப்பாற்குணம்.

வாதமாம் பித்தமுறும் வன்கரப்ப னும்படருந்
தாதுமிக விர்த்தியாந் தாற்குழலே-போதநல்ல
அன்ன மிறங்கு மதியுரிசை யுண்டாகுந்
தென்னங்காய்ப் பாலாற் றெளி.

(இ-ள்.) வாதம், பித்தம், கரப்பான், தாதுவிர்த்தி, அன்னமிறங்கும், அதிவுரிசையும் உண்டாகும். (௧௧௩)

ஆலம்பாற்குணம்.

ஆலம்பால் மேக மறுத்தசையும் பல்லிறுக்குங்
கோல முடிக்குக் குளிர்ச்சிதரும்-ஞாலமதின்
மெத்தவுமே சுக்கிலத்தை விர்த்திசெய்யுந் தப்பாமற்
சுத்த மதிமுகத்தாய் சொல்.

(இ-ள்.) மேகவிபாதிபோம், பல்லிறுகல், சிரக்குளிர்ச்சி, சுக்கிலவிர்த்தியும் உண்டாம். (௧௧௪)

அத்திப்பாற்குணம்.

காரமோ டுட்டினமாங் காதுகின்ற பித்தத்தை
நீரிழிவைச் குலைக்கு நீடிரத்தஞ்-சேருங்
கிரிச்சரத்தைப் போக்குங் கிளர்கோளி யென்னும்
மரச்சரும்ப பாலதனை வாங்கு

(இ-ள்.) அதிகவுஷ்ணம், பித்தம், நீரிழிவு, இரத்த கிரிச்சரமும், போம். (௧௧௫)

மட்டுப்பாற்குணம்.

தலைவலிநீ ரேற்றந் தணிந்தவுடல் வாதம்
அலைவுறுமேல் வாந்தி யரோசி-நிலைகுலையும்
வட்டுப்பால் வஞ்சம்வைத்த மாமுலைமா தேமணக்கு
மட்டுப்பா லுக்கு மருண்டு.

(இ-ள்.) தலைவலி, நீரேற்றம், வாதம், வாந்தி, அரோசிகமும் போம். (கக௬)

காட்டிப்பிராய்-ஈழத்தலரி-இவைகளின் பாற்குணம்.

காட்டுப்பி ராய்ப்பாலோ காணுகின்ற பல்வலியை
நாட்டில்வைக்கா தோட்டிவிடு நங்கைமே-கோட்டாரும்
ஈழத் தலரிப்பா லேறுபுரைப் புண்தொடையின்
வாழைப்புற் றும்போக்கு மால்.

(இ-ள்.) காட்டுப்பிராய்ப்பால், பல்வலிபோம், ஈழத்தலரிபால், புண்புரை, தொடைவாழையும்போம். (கக௭)

சங்கஞ்செடி-புங்கமரம்-இவைகளின் பாற்குணம்.

சங்கம்பால் வீக்கமதைத் தான்போக்கு நீர்வடிக்கும்
அங்குசுர வெப்பகற்று மையமிலை-கோங்குலவு
புங்கம்பால் புண்ணாற்றும் பொல்லாத வாய்வகற்றுந்
தங்கம்பொன் மெய்யளிக்குந் தான்.

(இ-ள்.) சங்கம்பால், வீக்கம், நீர்ச்சுரப்பு, சுரவெப்பும்போம், புங்கம்பால், புண், வாயுவும்போம், மேனியுண்டாம். (கக௮)

தில்லைமரத்தின் பாற்குணம்.

பரிசவா தஞ்சந்தி பாதஞ்சூ லங்குஷ்டஞ்
சேருமுட வாதம்வலி சிலவிஷம்போம்-பேருரைக்க
இல்லையில்லை யென்றோடு மென்பது வாதமுமே
தில்லைமரப் பாலாற் றெளி.

(இ-ள்.) பரிசவாதம், சந்திபாதம், சூலை, குஷ்டம், முடவாதம், வலி, சிலவிஷம், அம்-வாதமும்போம். (கக௯)

திருக்கள்ளிப்பாற்குணம்.

வாதமுடக்கலும் வன்கிரந்தி குட்டம்போஞ்
சீதமொழி யுங்கிருமி சேருமோ-மாதே
பருகுபக்க நோயுடனே பாழ்ங் கரப்பான் றீருந்
திருகுகள்ளிப் பாலாற் றெளி.

(இ-ள்.) வாதமுடக்கு, கிரந்தி, குட்டம், சீதம், கிருமி, பக்கநோய், கரப்பானும்போம். (௧௨௦)

சதிரக்கள்ளிப்பாற்குணம்.

குட்டங் கடிசூலை குன்மமே கம்வாயு
துட்டக் கிருமியொடு தூறுபுண்ணு-முட்ட
முதிரக் கரப்பனும்போ மொய்குழலே நாளுஞ்
சதிரக்கள் ளிப்பாற்குத் தான்.

(இ-ள்.) குட்டம், கடி, சூலை, குன்மம், மேகம், வாய்வு, கிருமி, புண், கரப்பானும்போம், பேதி உண்டாம். (௧௨௧)

மான்செவிக்கள்ளிப்பாற்குணம்.

மான்செவிக்கள் ளிப்பாற்கு மாறு விரணங்கள்
என்கிளைக்கு நன்மலமி றக்குங்காண்-ஊன்சேர்
வரிகிரந்தி சிங்கா வறட்சிசொறி யோடு
பொரிகிரந்தி யும்போம் பொரிந்து.

(இ-ள்.) இரணம், கிரந்தி, வறட்சி, சொறி, பொரிகிரந்தி, மலக்கட்டும்போம், பேதிஉண்டாம். (௧௨௨)

இலைக்கள்ளிப்பாற்குணம்.

செப்ப கரப்பான் செவிநோய்வா தம்போக்கும்
பையவருஞ் சூலதனைப் பாழாக்கு-மெய்யின்மிக
ஊது கிரந்திபோ மேட்புண்ணை யாற்றிவிடும்
ஓதுமிலைக் கள்ளிப்பா லோரு.

(இ-ள்.) கரப்பான், செவிநோய், வாதம், சூலை, ஊதுகிரந்தி, உள்விரணமும்போம். (௧௨௩)

கொடிக்கள்ளிப் பாற்குணம்.

துப்ப கரப்பான் சொறிசிரங்கும் புண்ணும்போஞ்
செய்யகடி குஷ்டநோய் சேருமோ-மெய்யில்
அடிக்கடிசேர் குன்மவலி யத்தனையுந் தீருங்
கொடிக்கள்ளிப் பாலுக்குக் கூறு.

இ-ள். கரப்பான், சொறிசிரங்கு, புண், கடி, குஷ்டம், குன்மம், வலியும்போம். (௧௨௪)

எருக்கம்பாற்குணம்.

எருக்கம்பால் கட்டிகளை யேகரைக்கும் வாய்வைத்
திருக்கறவே கொன்றுவிடுந் தீராச் செருக்கான
சந்நிவலி தீர்க்குஞ் சார்ந்தபல சிந்தூரம்
உன்ன முடிக்குமென வோது.

இ-ள். கட்டி, வாய்வு, சந்நி, வலி, சிந்தூரமும்போம். (௧௨௫)

வெள்ளெருக்கம்பாற்குணம்.

வலியின் வலிசுளுக்கு மாவாத சந்நி
யெலியின் விஷஞ்சுரங்க ளெல்லாம்-வலியற்றுக்
காலைத்தொழுதே கடற்சேரும் வெள்ளெருக்கம்
பாலைத் தொடுவார்க்குப் பார்.

இ-ள். வலி, வலிசுளுக்கு, வாதசந்நி, எலிவிஷம், சுரமும்போம்.

தே-காட்டாமணக்கின்குணம்.

விழுமேக வெள்ளைகுன்மம் மேல்விரணந் தோலில்
எழுமேருக் கட்டியிவை யெல்லாந்-தொழுதோடுங்
கூட்டா மணக்குழம்பைக் கொண்டவனக் கொங்கைமின்னே
காட்டா மணக்கம்பால் கண்டு.

இ-ள். வெள்ளை பொழுகல், குன்மம், இரணம், கட்டியும்போம்.

எலியாமணக்கின்பாற்குணம்.

எலியா மணக்கோ வெலிவிடம் வித்துப்பற்
பலவிடமு நீக்கிவிடும் பாரில்-வலுபேதி
யுண்டாகச் செய்யு முயர்பிலி கங்குன்மம்
அண்டாம லோட்டுமிதை யாய்.

இ-ள். எலிவிஷம்; விதைவிக்கம், பலவிஷங்கள், பீலிகம், குன்மமும் போம், மிகபேதி உண்டாம், (கஉஅ)

தே-பிரமதண்டுப்பாற்குணம்.

கண்கூசல் கண்ணருகல் கண்ணெழுகல் கண்ணோதல்
கண்சிவத்த லெல்லாங் கடிதேகுந்-திண்ணச்
சரமதண்டனைப்பிளக்குஞ் சாயகக்கண் மாதே
பிரமதண்ட னற்பாற்குப் பேர்ந்து.

இ-ள். கண்கூசல், கண்ணருகல், கண்ணெழுகல், கண்ணோதல், கண்சிவத்தலும்போம். (கஉகூ)

பால்வகை-முற்றியது.

தயிர்வகை.

பசுவின்தயிர்க்குணம்.

பசுவின் றயிராற் பசிமிகவுண்டாகும்
இசிவுறும சிரணநோ யேகும்-பசையகன்ற
தாகமிளைப்பிருமல் தாங்கொணு மெய்யரிவும்
வகு முலகி லியம்பு.

இ-ள். அசிரணம், தாகம், இளைப்பு, இருமல், மெய்யெரிவும். போம், பசி உண்டாம். (கங0)

ஆடைபெடுத்ததயிர்க்குணம்.

ஆடையெடுத்ததயி ரையமிளைப்பறுக்கும்
நாடுகிரிச்சரத்தை நாடவொட்டா-தாடொலியால்
உண்டாங் கிராணி யுறைமேகம் போக்கிவிடுந்
தண்டார் குழலணங்கே சாற்று.

இ-ள். ஐயம், இளைப்பு, கிரிச்சரம், வாயுகிராணி, மேகமும் போம். (கஙக)

எருமைத்தயிர்க்குணம்.

எருமைத் தயிருக் கெரிவுபித்தம் போகும்
வருமைக் காப்பனொடு வாதம்-பெருமிதஞ்சேர்
தால வுடலழுமாந் தூயறிவு மந்தமுறுங்
கோல விழிகுளிருங் கூறு.

இ-ள். எரிவுபித்தம்போம், கரப்பான், வாதம், தூலவுடல், அறிவுமந்தம், கண்குளிர்ச்சியும் உண்டாம். (௩௩௨)

வெள்ளாட்டின்-தயிர்-மோர்-இவைகளின்குணம்.

வெள்ளாட்டின் வெண்டயிரோ மிக்கநல மாகும்அதற்
குள்ளாடை யான்மந்த முண்டென்பார்-வெள்ளாட்டின்
மோரோமே கந்தை முதிரா தடித்துவிடும்
பாரோ ரறியப் பகர்.

இ-ள். தயிர் தேகசவுக்கியம் உண்டாம், ஆடையுடன் உண்டால் மந்தம் என்பார்கள், மோர் மேகம்போம். (௩௩௩)

செம்மறியாட்டுத் தயிர்க்குணம்.

செம்மறியின் றன்றயிரைத் தின்ன மதுரமிகுங்
கொம்மைமுலை மாதரசே கூறக்கேள்-அம்ம
கரப்பான் சொறியுள் கடுப்பிரத்த வாய்வும்
உரப்பா முடல்கெடுமென் றோது.

இ-ள். கரப்பான், சொறி, இரத்தக்கடுப்பு, வாய்வும் உண்டாம்.

ஒட்டைத்தயிர்க்குணம்.

தீபனமு முண்டாஞ் சிறுகரப்பான் புண்ணுமாம்
பூபதிபோன் மேனி புளகிக்கும்-தாபதமாம்
ஒட்டைத் தயிர்நிதமு முண்ணவதி தாகம்போந்
துட்டக் கிருமியறுஞ் சொல்.

இ-ள். தீபனம், கரப்பான், புண், தேகபுளகமும் உண்டாம், தாகம், கிருமியும்போம். (௩௩௫)

தயிர்வகை-முற்றிற்று.

மோர்வகை.

பசுமோர்க்குணம்.

வீக்க மகோதரமுள் வீறுகுன்மம் பாண்டுபித்தந்
தாக்கு மருந் திட்டததி சாரமொடு-குக்குரலே
மாறுந் திரிதோஷ மந்தமனற் றுகம்போம்
வீறுவின் மோருக்கு மெய்.

இ-ள். விக்கம், மகோதரம், குன்மம், பாண்டு, பித்தம், மருந்திறல் வந்த அதிசாரம், திரிதோஷம், மந்தம், அனல், தாகமும் போம். (௩௩௬)

எருமைமோர்க்குணம்.

தாகங் கிராணி சலக்கழிச்சல் காமாலை
ஆகங் குடைபுழுவு மற்றுப்போ-மோகமில்லாத்
தேவாமிர்தமுமாஞ் சீர்மா விடர்தமக்கு
மூவா மருந்தெருமை மோர்.

இ-ள். தாகம், கிராணி, ஜலக்கழிச்சல், காமாலை, புழுவும்போம்.

ஒட்டைமோர் நெய் இவைகளின்குணம்.

ஒட்டைமோர் மெத்தவன லோங்கியவா தங்களிக்கும்
இட்டமந்த நெய்பெருமை கேட்டீரேல்-கெட்டுலகின்
மந்தஞ்செய் தாலும் வலிவிந்து வைப்பெருக்கும்
அந்தஞ்சேர் கன்னு யறி.

இ-ள். மோர் அனல்வாதம்போம், நெய், மந்தம், விந்துமுண்டாம். (௩௩௭)

மோர்வகை முற்றிற்று.

வெண்ணெய்வகை.

தே-முலைப்பால் வெண்ணெய்க்குணம்.

கண்ணெரிவுங் கையெரிவுங் காலெரிவு நாசிகளில்
அண்ணெரிவு மன்னி லகன்றிடுங்காண்-தண்ணார்
அலைப்பால்வண் மாதுங் கலிசெய்யு மாதர்
முலைப்பால் வெண்ணெய்க்கு முறிந்து.

இ-ள். கண்ணெரிவு, கையெரிவு, காலெரிவு, நாசிகளினெரிவும் போம். (௩௩௮)

பசு வெண்ணெய்க்குணம்.

கண்ணி லெழுநோயுங் கண்ணெரிவும் பீனிசமும்போம்
எண்ணும் பசியு மெழும்புங்காண்-நண்ணரிய
ஆவினறும் வெண்ணெய்க் ககலும்வன் மேகமெல்லாம்
பூவி னரர்க் கெல்லாம் புகல்.

இ-ள். கண்ணோய் கண்ணெரிவு, கண்பீளை, மேகங்கள் எல்லா முய்போம், தாதும், பசியும் உண்டாம்.

எருமை-வெண்ணெய்க்குணம்.

எருமைவெண் ணெய்க்கில் லெரிநீ ரிழிவு
பருவமயி லேகேளிப் பாரிற்-கிருமியுறும்
மந்தமாம் வாதமிகு மாறுக் கடங்கரப்பான்
தொந்தமா நோயடருஞ் சொல்.

இ-ள். எரிநீரிழிவும்போம், கிருமி, மந்தம், வாதம், கபம், கரப்பான், நோயும்உண்டாம். (கசஃக)

வெள்ளாட்டு-வெண்ணெய்க்குணம்.

வெள்ளாட்டு வெண்ணெய்சு விறசுரந் தான்போக்குந்
தள்ளாடு பித்தந் தணிக்குங்காண்-தெள்ளுமொழி
மானே பசியெழுப்பும் வன்கரப்ப னேக்கடற்குள்
தானே துரத்திவிடுஞ் சாற்று.

இ-ள். சுரம், பித்தம், கரப்பானும்போம், பசிஉண்டாம்.(கசஉ)

ஒட்டை-வெண்ணெய்க்குணம்.

கட்டழகு செய்யுநற் காரிகையீர் கேண்மின்கள்
ஒட்டை வெண்ணெய் மந்த மொடுவாதங்-கிட்டவைக்கும்
நீரிழிவுக் கேற்கு நிறைபித்தம் போக்கிவிடும்
பாரறியச் சொன்னோம் பகுத்து.

இ-ள். மந்தம், வாதமும் உண்டாம், நீரிழிவு, பித்தமும்போம்.

வெண்ணெய்வகை-முற்றிற்று.

நெய்வகை

பசுநெய்க்குணம்.

தாக முழலைசுட்கஞ் சர்த்திபித்தம் வாயுபிர
மேகம் வயிற்றெரிவு விக்கலழல்-மாகாசங்
குன்மம் வறட்சி குடற்புரண்ட லஸ்திசுட்கஞ்
சொன்மூலம் போக்குநிரைத் துப்பு.

இ-ள். தாகம், உழலைசுட்கம், சர்த்தி, பித்தம், வாயு, பிரமேகம், வயிற்றெரிவு, விக்கல், அழல், காசம், குன்மம், வறட்சி, குடல்பிரட்டல், அஸ்திசுட்கம், மூலமும்போம். (கசச)

காராம்பசு நெய்க்குணம்.

காராம் பசுவினெய்பாற் கண்ணுக் கொளியுண்டாம்
நீரார்விழி புருவநெற்றி சிரச்-சூரொழியும்
மெய்யிற் குழைவு மிளிர்பொன் னிறமும்வரும்
நெய்யிவிது மேலா நிகழ்த்து.

இ-ள். கண், புருவம், நெற்றி, சிரசு, நோய்களும்போம், கண்ணுக்கொளி, தேகவழகு, பொன்னிறமும் உண்டாம். (கசரு)

எருமை-நெய்க்குணம்.

புத்திகெடு மெய்யழகு போதக் கெடுநயனம்
மெத்தவொளி மாறிவிடு மேதினியிற்-சத்தியமாம்
வாதமொடு பித்தமுறு மாறுக் கரப்பானுங்
கோதெருமை நெய்பருந்திற் கூறு.

இ-ள். புத்தி, மெய்பழகு, கண்ணொளியும்போம், வாதம், பித்தம் கரப்பானும் உண்டாம். (கசசு)

வெள்ளாட்டு-நெய்க்குணம்.

ஐயப்போக் கும்வாதத் தாண்மையைக்கெ டுத்துவிடும்
மெய்யை வளர்க்கும்விழி யைத்துலக்கும்-வையகத்திற்
பத்தியத்திற் காகும் பயமிலைவெள் ளாட்டின்னெய்
நித்தியக்கொண் டாலுங்கொண் ணி.

இ-ள். தேகவளர்ச்சி, விழித்துலக்கமும், வாதஉண்டாம், ஐயமும்போம், பத்தியத்திற்கு ஆகும். (கசஎ)

செம்மறியாடு-பள்ளையாடு-இவைகளின் நெய்க்குணம்.

செம்மறியி னெய்பதனைத் தின்ன மதாமுமாங்
கொம்மைமுலை மாதரசே கூறக்கே-ளம்மறுவும்
பள்ளையின்னெய் பித்தொழிக்கும் பாருலகி லெல்லவர்க்குங்
கொள்ளத்தான் மந்தமுறுங் கூறு.

இ-ள். செம்மறியாட்டு நெய். அம்மம் உண்டாம், பள்ளையாட்டு நெய், பித்தம்போம், மந்தம் உண்டாம். (கசஅ)

கலப்புநெய்க்குணம்.

நெய்யுட் பலநெய்க்கு நீள்சுக்கி லம்பெ ரும்
வெய்யபசி யுண்டாம் விடும்பித்தம்-மெய்யனலால்
உள்ளபித்த வெக்கைபோ மோங்குயிருந் தானிலைக்குங்
கொள்ளத் தெரியுங் குணம்.

இ-ள். சுக்கிலம், பசி, பலமும் உண்டாம், பித்தம், பித்தவெக்கையும் போம். (௧௪௯)

பன்றி-உடும்பு-காக்கை-இவைகளின் நெய்க்குணம்

பன்றிநெய் நீர்க்கடுப்பு பாயுமூலத் திரத்தங்
கன்றிய வாதக் கடுப்புமுதற்-துன்றியநோய்
போக்கு முடும்பின்னெய் போமிரத்தம் போக்கிவிடுங்
காக்கைநெய்கா மாலைக்காங் காண்.

இ-ள். பன்றிநெய், நீர்க்கடுப்பு, ஆசனமூலரத்தம், வாதக்கடுப்பும்போம், உடும்பு நெய், இரத்தம்போம், காக்கைநெய், காமாலை போம். (௧௫0)

ஆமை-ஒளுன்-கரடி-இவைகளின் நெய்க்குணம்.

ஊளுமை நெய்மூல மோட்டும் ஒளுனெய்க்குக்
காளுப் பிறவலிநோய் காளுது-பூளும்
மூலையாய் கரடிநெய்க்கு மூன்வாத மோடு
புலையாருங் கால்வெடிப்பும் போம்.

இ-ள். ஆமை நெய் மூலம்போம், ஒளுன்நெய் பிறவலி நோய்ப்போம், கரடிநெய் வாதம், கால்வெடிப்பும்போம். (௧௫௧)

ஆமணக்கு-நெய்க்குணம்.

ஆமணக்கு நெய்யா லனலமுண்டா மியாவர்க்கும்
பூமணக்கு மேனி புரிகுழலே-வாம்மணக்கக்
கொள்ளில் வயிறுவிடுங் கோரமுள்ள வாயுவறும்
உள்ளில்வரு குன்மப்போ மோது.

இதுவுமது.

அம்பொ னிறமும்விந்து மாங்குடலினேற்றமறும்
ஐம்பொறிச் சூடெரிவு மாறுங்காண்-அம்புவியிற்
பாமணக்கு மின்பமொழிப் பாவாய் நலஞ்செறிந்த
ஆமணக்கி னெய்யை யருந்து.

இ-ன். அனல். தேகமணம், பேதி, பொன்னிறம், விந்தும் உண்டாம், உடல், வாய், கண், மூக்கு, காது, குமட்டரிவும், வாய்வு, குன்மம், குடலேற்றமும்போம். (கருஉ) (கருங)

தே-சிற்றாமணக்கு நெய்க்குணம்.

மருந்தி னழலும் வளியாண்மு லத்துள்
பொருந்து மழலுமறப் போக்கும்-குருந்திற்கு
நற்றாயெனவளர்க்கு நாளும் அழலுந்தணிக்குஞ்
சிற்றாமணக்கினெய்தான் றேர்.

இ-ன். மருந்தழல், மூலவழல், பிள்ளைகளின் அழலும்போம், தாயைப்போல் வளர்க்கும். (கருச)

எள்ளுநெய்க்குணம்.

புத்திநய னக்குளிர்ச்சி பூரிப்பு மெய்ப்புளகஞ்
சத்துவங் காந்தி தனியிளமை-மெத்தவுண்டாங்
கண்ணோய் செவிநோய் கபாலஅழல் காசநோய்
புண்ணோய்போ மெண்ணெய்யாற் போற்று.

இ-ன். கண்குளிர்ச்சி, பூரிப்பு, மெய்ப்புளகம், பலம், காந்தி, இளமையும் உண்டாம், கண்ணோய், செவிநோய், கபாலஅழல், காசநோய், புண்ணோயும்போம். (கருரு)

வாதுமை-நெய்க்குணம்.

அழலெல்லா மாற்று மரிய வுடம்பில்
அழலோடு விந்துவையுண் டாக்கும்-வழுவழுப்பைப்
பூண்டகம் போக்கும்பொறிகட் கொளிவுசெய்யு
நீண்ட அடப்பம்விதை நெய்.

இ-ன். எல்லாவிதவழலும், கபமும்போம், அனலோடு விந்தும், ஐம்பொறியொளியும் உண்டாம். (கருசா)

வேப்பநெய்க்குணம்.

வாதம்போம் பித்தமிகு மாறுக்கி ரந்தியொடு
மோதுகரப் பான்சிரங்கு முன்னிசிவும்-ஓதுடலின்
நாப்ப ணுறுசுரமு நாடிசந்தி யுந்தொலையும்
வேப்பநெய் யென்றெருக்கால் விள்ளு.

இ-ள். வாதம், கிரந்தி, கரப்பான், சிரங்கு இசிவுசுரம், சந்நியும் போம், பித்தம்உண்டாம். (௧௫௭)

இலுப்பைநெய்க்குணம்.

கரப்பா னடருங் கடிசிரங்கு புண்ணும்
உரப்பா மிடுப்புவலி யோடுங்-கரப்யான்
பாகுமொழிமாதே பலமுண்டாந் துற்பலம
தேகு மிலுப்பையினெய்ந் கே.

இ-ள். கரப்பான், கடி, சிரங்கு. புண், இடுப்புவலி, பலமும்உண் டாம், துர்ப்பலம்போம். (௧௫௮)

புன்னைநெய்க்குணம்.

புன்னையிலுண் டாநெய்பாற் பொங்குசந்நி பாதமுதன்
மன்னியலைக் குங்கொடிய வாய்வும்முன்-பின்னிசிவும்
பொல்லாவலியிளைமும் புண்கிருமி யுந்தொலையும்
அல்லார் குழலே யறி.

இ-ள். சந்நிபாதம், வாய்வு, முன்பின்னிசிவு, வலிப்புகள், புண் கிருமியும்போம். (௧௫௯)

புங்கின் நெய்க்குணம்.

அங்க மழகிடும்வெற் பாம்புங்கி னெய்தனக்குத்
தங்கம்போற் காந்தியது தானுண்டாந்-திங்கண்முக
மானே கரப்பான்போம் வந்தசொறி யுஞ்சிரங்குந்
தானே விலகுமெனச் சாற்று.

இ-ள். கரப்பான், சொறி, சிரங்கும்போம், தேகவழகுண்டாம்.

தேங்காயின் நெய்க்குணம்.

தேங்காயி னெய்சதனுற் றியால் வருபுண்போம்
பாங்காகக் கூந்தற் படர்ந்தேறு-நீங்காத
பல்லடியின் னோயும் படர்தா மரைசிரங்கும்
அல்லலறப்போமென் றறி.

இ-ள். தீப்புண், பல்நோய், படர்தாமரை, சிரங்கும்போம், தலை மயிர்வளம்உண்டாம். (௧௬௧)

தே-முக்கூட்டு நெய்க்குணம்.

நாவுநெய்க் கைய நவலாநெய்க் குப்பித்தம்
மேவுமுத்து நெய்க்கனிலம் வீறுவாம்-பூவுலகின்

மூன்றுமள வாய்க்காய்ச்சி மூழ்கிவர முப்பிணியால்
லூன்றுநோய்போமே யொதுங்கி.

இ-ள். எள்ளின்நெய், சித்தாமணக்குநெய், பசுநெய், இவைக ளால், வாதம், பித்தம், ஐயம் என்கிற மூன்றுநோய்களும்போம்.

தே-முக்கூட்டு நெய்சேர்க்கும்விதி.

ஆவெண்ணே ரண்டமெண்முத் தாமுத்தா வெண்ணேய
மூவெண்கா லாதி முறையேகேள்-மேவுநெறி
யொன்றிரண்டு மூன்றாகு மொன்றிரண்டு மூன்றாகு
மொன்றிரண்டு மூன்றாகு முற்று.

இ-ள். வாத முதலாகிய தேகிகளுக்குக் கூட்ட வேண்டிய முறை மை, வாததேகிகளுக்கு, பசுவினெய் ஒருபங்கு, எண்ணெய் இரண்டு பங்கு, ஆமணக்குநெய் மூன்றுபங்கு, (பித்ததேகிகளுக்கு எண்ணெய் ஒருபங்கு, ஆமணக்குநெய் இரண்டுபங்கு, பசுவினெய் மூன்றுபங்கு) (சிலேஷ்மதேகிகளுக்கு ஆமணக்குநெய் ஒருபங்கு, பசுவினெய் இர ண்டு பங்கு, எண்ணெய் மூன்றுபங்கு) இவ்வாறு கூட்டவேண்டும்.

ஐங்கூட்டு நெய்க்குணம்.

அஞ்செண்ணெய் பைக்காளில் ஆவித்தபின்னிசிவுந்
தஞ்சமென வாய்வுந் தனியுங்காண்-பஞ்சரப்
பறக்குமே சந்நிசுரம் பாரிலையச் சேஷ்டை.
யிறக்குமே நன்று யியம்பு.

இ-ள். பின்னிசிவு, வாய்வு, சந்நி, சுரம், ஐயமும்போம். (கசுச)

கடுகுநெய்க்குணம்.

கோஷ்டநோய் பித்தரத்தக் குஷ்ட மடல்வாதம்
விட்டுபெ மூல விரணமறும்-பூட்டின்
முடங்கிவெழ் சூலைபொடு மொய்த்தநோ யேகுங்
கடுகின்னெய் யாலனலாங் காண்.

இ-ள். வயிற்றுநோய், இரத்தபித்தம். குஷ்டம், வாதம், கபம், மூலம், விரணம், மூட்டுச்சூலைநோயும்போம், அனலுண்டாம்(கசுரு)

நெய்வகை-முற்றிற்று.

சாணவகை.

பசுவினது சாணியின் குணம்.

ஆவினது சாணம் அடிபடுவிக் கம்உதிரந்
தாவி வருகிருமி சார்ந்தகப-மேவுசுரந்
தங்குந்தா கம்போக்குஞ் சாற்றின்மெய்ச் சுத்தியப்பால்
தெங்கின்பா லுக்கொக்குஞ் செப்பு.

இ-ள். அடிபடுவிக்கம், உதிரம், கிருமி, கபம், சுரம், தாகமும் போம், இந்தப்பால் தேங்காய்ப்பாலுக் கொக்கும், தேகசுத்தி உண்டாம். (௧௬௬)

எருமைச் சாணியின்குணம்.

வயிற்றுப் பிசமிரத்த வாந்திகா மாலை
நியத்தபெரும் பாடுபுண் நீங்கும்-வியத்த
கருமைச்சா ரங்கவிழிக் காரிகையே நாளும்
எருமைச் சாணத்தி னியல்பு.

இ-ள். வயிற்றுப்பிசம், இரத்தவாந்தி, காமாலை, பெரும்பாடு, புண்ணும்போம். (௧௬௭)

வெள்ளாட்டுப் புழுக்கையின்குணம்.

உருக்கைநீ ருக்கு முதிரநோய் போக்குந்
திருக்கான வாதநோய் தீர்க்கு-நெருக்கான
கோட்டுக் குமைபணங்கே கொல்புவியோர் சொல்லிடுவெள்
ளாட்டுப் புழுக்கை யது.

இ-ள். உதிரநோய், தாதநோயும்போம், எருதண்ணீராகும். ()

சாணவகை-முற்றிற்று.

மூத்திரவகை.

சிறு நீரின் குணம்.

கானுங் கடிபோங் கதித்தெழுந்த விக்கமது
காணாது காயசித்தி கைக்குளாம்-பூணே
பதிந்தகொங்கை மாதே பகர்மாந்த ருக்குள்
உதித்தசிறு நீருங்கொன் றோது.

தே-இதுவுமது-வி-ம்.

அங்கியுவ ருறைசிறுநீர் வாதம்போக்கும்
அதைப்பருகி லிருமலிரைப் பரத்தநோயும்
பொங்கிவரு மேகவிகா ரந்திகிரந்திப்
புண்களும்போம் அதைநசியம் புரியிற் சூடுங்
தங்கியதோர் அபஸ்மாரஞ் சந்நியாசஞ்
சருவவிஷம் விஷசுரமுந் தவறுண்டோடும்
இங்கதனைத் தொட்டலம்பிற் கண்முகங்கா
திவ்விடத்து ளெழும் விரண மிரியுங்காணே.

இ-ள். காளைக்கடி, விக்கம், வாதம், இருமல், இரைப்பு, இரத்த நோய், மேகவிகாரம், கிரந்தி, புண்கள், சுரம், அபஸ்மாரரோகம், சந்நியாசரோகம், சருவவிஷம், விஷசுரம், விரணமும்போம், காயசித்திக்கும், நபத்திற்கும் பண்சுத்திசெய்ததற்கும் ஆம். (கசுகூ) (கஎ௦)

தே-பசு மூத்திரகுணம்-வெண்பா.

விடபாண்டு சோபைபல விக்கஞ் சகல
விடமுதிர மாலையென மெத்தப்-புடவிதனிற்
பேசலக்க ணோடுதந்தப் பீடையும கன்றிடுமே
கோசலத்தா லாரணங்கே கூறு.

இ-ள். விஷப்பாண்டு, சோபை, பலவிக்கம், சகலவிஷம், உதிரம், காமாலை, கண்ணோய், தந்தநோயும்போம். (கஎக)

எருமை மூத்திரகுணம்.

உதரநோய் பாண்டோ டிரத்தகா மாலை
யிதிர வருசோபை மேகம் முதிர்கிருமி
யாதியநோ யேகு மடவெருமை மூத்திரத்தால்
மீதிலன லுண்டாகு மே.

இ-ள். வயிற்றுநோய், பாண்டு, காமாலை, சோபை, மேகம், கிருமியும்போம், அனலுண்டாம். (கஎஉ)

வெள்ளாட்டு மூத்திரகுணம்.

சோபையொடு பாண்டுமைத்து ரத்தும் பலவிக்க
தாபமகற் றும்மூதிரத் தைப்போக்கும்-கோபமுடன்

உள்ளாட்டுத் துற்சதையோ டோங்குதர நோயகற்றும்
வெள்ளாட்டு மூத்திரம்வி ரைந்து.

இ-ள். சோபை, பாண்டு, பல்வீக்கம், தாபம், உதிரம், துன்மாங்கிஷம், உதிரநோயும்போம். (௧௭௩)

யானை-மூத்திரகுணம்.

அதிதூலஞ் சோபை யனிலங் கிருமி
பெதிர்விஷங் கருங்கரப்பா னேகும் - அதிராத
யானை யெனப்பலமும் அங்கபுஷ்டி யுங்கொடுக்கும்
யானை விடுமூத்திரம்.

இ-ள். பருத்ததேகம், சோபை, வாயு, கிருமி, விஷம், கருங்கரப்பானும்போம், அங்கபுஷ்டி, அதிகபலமும் உண்டாம்.

குதிரை-மூத்திரகுணம்.

பாதவன் மீகம் படர்தடிப்பு நீள்கிருமி
வாத மொடுகபமு மாறுங்காண் - ஓதரிய
பொற்குவட்டை யொத்தமுலைப் பூவையரே சூடுமுண்டாம்
நற்குதிரை மூத்திரத்தினால்.

இ-ள். கால்வீக்கம், படர்தடிப்பு, கிருமி, வாதம், கபமும் போம், சூடுஉண்டாம். (௧௭௫)

ஒட்டை-மூத்திரகுணம்.

மேலையூ ருந்தடிப்பு வீசிவயமுஞ் சந்நி
சூலை யுதா வர்த்தந் தொடர்குன்மஞ் - சீலநனை
மண்டலகுஷ் டேகும் வரும்ஒட்டை மூத்திரத்தால்
உண்டனல மாதே யுரை.

இ-ள். தடிப்பு, சந்நி, சூலை, உதாவர்த்தமென்கிற வாதநோய், குன்மம், குஷ்டமும்போம், அனலுண்டாம். (௧௭௬)

கழுதை-மூத்திரகுணம்.

வேசரிநீ ரால்வெப்பம் வீரியநஷ் டங்குஷ்டங்
காச மிரைப்புவிஷங் காற்கிருமி - வீசிடுபுண்
மேக மபஸ் மாரம் வெடியக்க ரங்கிரந்தி
போகுமின்னுஞ் சேய்ப்பிணியும் போம்.

இ-ள். வெப்பம், விரியகஷடம், குஷ்டம், காசம், இரைப்பு, விஷம், காற்கிருமி, புண், மேகம், பஸ்மாரரோகம், வெடியச்சிரம், கிரந்தி, குழந்தைநோய்களும்போம். (கஎஎ)

மூத்திரவகை-முற்றிற்று.

மதுரவகை.

செங்கரும்பு-ரசதாளிக்கரும்பு-புல்லகண்டங்
கரும்பு-இவைகளின்குணம்-விருத்தம்.

செங்கரும் பதனற்சாறு தீர்த்திடும் பித்தமெல்லாம்
அங்குறு மிரசதாளிக் ககன்றிடுந் தாகம்வேகம்
மங்குறுப் புல்லகண்டம் வாதகோ பத்தைப்போக்குங்
கங்குல்வார் குழலினளே காரிய மறிந்துகூறே.

இ-ள். செங்கரும்பு, எல்லாப்பித்தமும்போம், ரசதாளிக்கரும்பு-தாகம், வேகமும்போம், புல்லகண்டங்கரும்பு, வாதகபம்போம். ()

நாணற் கரும்பின் குணம்-வெண்பா.

வாயுபித்தம் வாந்திநீர் மாறும் அதிதூல
நோயு ளெழும்வயிற்றி னோய்கலக்கும்-ஓயாத
சுனையொடு பாண்டு மெதிர்யாதடங்கிநிற்கும்
நாளுநா ணற்கரும்பி னல்.

இ-ள். வாயு, பித்தம், வாந்தி, அதிதூலநோய், வயிற்றுள்நோய் சுனை, பாண்டும்போம். (கஎகூ)

கரும்பின்சாறு-வெல்லம்-இவைகளின் மிதாமிதகுணம்.

கரும்பிரத மெத்தவுண்டாற் காணுங்கபநோய்
விரும்பிவெல்ல மெத்தவுண்டால் மேகந்-தருமதுநீர்
உண்டா மதைமிதமா யுண்டால்மே கம்பித்தம்
மிண்டாமற் சாந்தமுறும் விள்.

இ-ள். கரும்பின்சாறு, கபநோயுண்டாம், வெல்லம், மெத்தவுண்டால், மேகம், மதுமேகமும் உண்டாம், மிதமாயுண்டால், மேகம், பித்தமும்போம். (கஅ௦)

பாகின்வகை.

தேன் பாகின்குணம்.

அனலா லெழுந்த வருசி சர்த்திதாழும்
புனலாருங் கோழையது பொங்குங்-கனலாருந்
தேன்பாகுக் கென்றுமதைச் சேர்ஔஷதி யதனாற்
கான்பாவு நோய்க்கூட்டங் காண்.

இ-ள். அருசி, வாந்தி, மற்றவியாதிகளும்போம், கோழை உண்டாம்.

மணப் பாகின்குணம்.

பித்த வருசிகெடும் பேசிலற்ப வாதமறுந்
தத்தனலும் மெள்ளவுள்ளே தாவிவரும்-மெத்த
வணப்பாகை யொத்தமொழி மாதே முறுகா
மணப்பாகுக் கென்றே மதி.

இ-ள். பித்தவருசி, வாதமும்போம், அனலுண்டாம். (௧௮௨)

முதிர்ந்தபாகு-பழயவெல்லப்பாகு-இவைகளின் குணம்.

முதிற்பாகுக் குள்ளெரிவு மூத்திரக்கட் டோடே
அதிர்வாத மாதியநோ யாகுந்-துதிபழய
வெல்லப்பா குக்கருசி வீறுபித்தம் பேதிவாய்
வில்லைப்பார் மாதே யினி.

இ-ள். முதிர்ந்தபாகு, மூத்திரக்கட்டு, வாதமுதலாகிய, நோயும் உண்டாம், பழயவெல்லப்பாகு, அருசி, பித்தம், பேதி, வாய்வும் போம.

பாகின்வகை - முற்றிற்று.

வெல்லத்தின்வகை.

நல்லவெல்லத்தின் குணம்.

குன்மபித்தம் போக்குமதி கோழைதனை யுண்டாக்குந்
துன்மலத்துட் கிடத்தைத் தோன்றுவிக்கும்-நன்மைபோல்
மெல்லமது நீரை விளைவிக்கு மாமதுர
வெல்லமென நாளும் விளம்பு.

இ-ள். பித்தகுன்மம்போம், கோழை, மலப்புழு, மதுமேகமும் உண்டாம். (சஅச)

தெங்கின்வெல்லம்-பனைவெல்லம்-இவைகளின்குணம்.

தெங்கினவெல் லத்தாற் செரியாக் குணஞ்சோபை
யங்கபுழு வீரு மதிகரிக்குந்-தங்குபனை
வெல்லத்தால் வாதபித்தம் வீறுகபஞ் சங்கிநோய்
வல்லருசி குன்மமறு மால்.

இ-ள். தெங்கின்வெல்லம், செரியாக்குணம், சோபை, தூலவுடலமும் உண்டாம், பனைவெல்லம், வாதபித்தம், கபம், சங்கிநோய், அருசி, குன்மமும்போம்.

சருக்கரைவகை.

சருக்கரையின் குணம்.

அருந்து மருந்திற் கநுபான மாகப்
பொருந்து மடல் வாந்திபித்தம் போக்கும்-வருந்தருசி
நீக்கு மதிகபத்தை நீற்று மகிழ்ச்சியை யுண்
டாக்கு கருஞ் சர்க்க ரை.

இ-ள். வாந்தி, பித்தம், அருசி, கபமும்போம், மகிழ்ச்சியுண்டாம், மருந்திற் கநுபானமாம். (சஅசு)

சீனிச்சருக்கரையின்குணம்.

சீனிச் சருக்கரைக்குத் தீராத வன்சுரமுங்
கூனிக்கும் வாதத்தின் கூட்டுறவும்-ஏனிற்கும்
வாந்தியொடுகிருமி மாறாத விக்கலுமே
போந்திசையை விட்டுப் புரண்டு.

இ-ள். சுரம், வாதம், வாந்தி, கிருமி, விக்கலும்போம். (சஅஎ)

கற்கண்டின்வகை.

கற்கண்டின்குணம்.

சுறின தடிப்பு மிருமலும்பல் வாந்திகளுஞ்
சிறுகப முட்டினமுஞ் சேராதே-தேரியநற்
சொற்கண் டிளங்குயில்கா ளூழு மடவனமே
கற்கண் டெனவுரைக்குங் கால்.

இ-ள். பல்லரணை, இருமல், வாந்தி, கபம், உஷ்ணமும் போம்.

பனங்கற்கண்டின்குணம்.

மேக வனலுமிக வீசும் சூரிகையால்
ஆக முழுகனலு மாறுங்காண்-மேகனத்தில்
தங்கிவரு நீர்சுறுக்குந் தாகவெப்ப முந்தனியும்
இங்குபனங் கற்கண்டுக் கே.

இ-ள். மேகவனல், வைசூரிகையால் விசுங்கனல், நீர்ச்சுறுக்கு தாகவெப்பமும்போம். (௧௪௯)

தே-தேனில் உண்டாகுங் கற்கண்டின்குணம.

தேனிற் பிறந்த செழுங்கண்டாற் கண்விழிக்குள்
ஊனிற் படர்பல மோடிடுங்காண்-கானத்திற்
காகுஞ் சுரர்மாகு மண்டும் பசிகபங்கால்
வகுஞ் சுரமேகு மெண்.

இ-ள். விழியிலிருக்கின்ற படலம், கபம், வாயு, சுரமும் போம் சங்கீதம், தொனி, பசியும் உண்டாம். (௧௫௦)

மதுரவகை-முற்றிற்று.

மதுவின் வகை.

தெங்கின்மதுக்குணம்.

நாதவிந் துறு நளிர்யாண்டொடுசோபை
வாதபித் தங்கிராணி வன்கரப்பன்-பேதியிவை
பொங்கி யதிகரிக்கும் புத்திகெடு மேகமுண்டாந்
தெங்கின்மது விற்கென்றே செப்பு.

இ-ள். நாதவிந்து, பாண்டு, சோபை, வாதபித்தம், கிராணி கரப்பன், பேதி, மேகமும் உண்டாம், புத்திகெடும். (௧௫௧)

பனையின் மதுக்குணம்.

விந்துதிர முறுமதி வெப்புடனே தாகம்போம்
பந்தமாந் தாதுவுமோ பாரிக்கும்-உந்துபித்தர்
தோன்றும்பா ஷாணங்கள் சுத்தியுமாந் தோகைமின்னே
யேன்ற பனைமதுவிற் கே.

இ-ள். விந்து, உதிரம், பித்தமும் உண்டாம், வெப்பு, தாகமும் போம், பாஷாணங்கள் சுத்தியாம். (கசுஉ)

ஈச்ச மதுக்குணம்.

வெப்பகலு மெல்குளிரு மேகங் கிரிச்சரம்போஞ்
செப்ருசி போம்பித்தஞ் சேருங்காண்-எப்படியும்
பூச்சி திருமிண்டாம் பொங்கறிவுங் கெட்டிடுமே
ஈச்ச மதுவதற் கே.

இ-ள். வெப்பம், மேகம், கிரிச்சரம், அருசி, அறிவும்போம் பித்தம், திமிர், மெய்குளிர்ச்சியும் உண்டாம். (கசுங)

முந்திரிகையின் மதுக்குணம்.

முந்திரிகைக் கள்ளுக்கு மூடுதிரி தோஷம்போம்
விந்துறுமி ரத்தமுறும் வெப்பகலும்-இந்தவகைக்
கள்ளெல்லாங் காமமுறுங் காமமற்று ருண்டக்கால்
விள்ளரிய தோஷமில்லை மெய்.

இ-ள். திரிதோஷம், வெப்பமும்போம், விந்து, இரத்தம், காமமும் உண்டாம். (கசுச)

அரிசி வேலம்பட்டை தெங்கு இவைகளின் மதுக்குணம்.

சாலி மதுவாதத் தாற்சளிநீ ருண்டாக்கும்
வேலின்மது பித்தமைக்கும் வேண்டாவாஞ்-சாலவுயர்
தெங்கின்மது சீதந் திரிதோஷ முண்டாக்கும்
அங்குவிடு கள்குலையே யாம்.

இ-ள் அரிசி மதுவுக்கு சளி, வாதசிலேஷ்மமும் உண்டாம், வேலமது பித்தம் உண்டாம், தெங்கின்மது சீதம், திரிதோஷமும் உண்டாம். கசுரு

அத்தி மதுக்குணம்.

அத்திமே கஞ் சுடதிமயக்கந் தாகமும்போம்
அத்திமா வேரிலுண் டாவதுவில்-நித்தியமுஞ்
சீனியே லும்பேயன் செங்கனியே லுங்கலந்தே
பாலுவுத யங்குடித்துப் பார்.

இ-ள். கேகம், சூடு, அதிமயக்கம் தாகமும்போம், வேறினுண்டாகுமதுவில், சீனிசருக்கரை, அல்லது பேயன்வாழைபிலா வதுகலந்து சூரியஉதையத்திற் குடித்துப்பார்த்தால் தெரியும். (கசுசு)

மதுவின்வகை-முற்றிற்று.

தேன்வகை

மலைத்தேனின்குணம்.

ஐயிரும லீளைவிக்க லக்கிப்புண் வெப்புடல்நோய்
பைய வொழியும் பசியுமுறும்-வையகத்தில்
எண்ணுமிசை யாமருந்திற் கேற்ற வனுபானம்
நண்ணுமலைத் தேனென்றி னல்.

இ-ள். ஐயம், இருமல், ஈளை, விக்கல், அக்கிப்புண், வெப்பம், உடல்நோயும்போம், பசி, சங்கீதம்பாடச்சாரீரமும் உண்டாம், மருந்தனுபானத்திற்கும் ஆகும். (கசுஎ)

கொம்புத்தேனின்குணம்.

வாதபித்த ஐயத்தை மாற்றுமுள மாந்தைதனைக்
காதமென ஓடக் கடியுங்காண்-பூதரமாம்
வம்புமுலைமாதே வருமருசி நீக்கிவிடுங்
கொம்புத்தே னன்றுகுங் கூறு.

இ-ள். வாதம், பித்தம், ஐயம், உள்மாந்தை, அருசியும் போம்.

புற்றுத் தேனின்குணம்.

கொப்பணியு மாதே குவலயத்து ளெல்லார்க்கும்
ஒப்பநின்ற ஐய மொளிக்குங்காண்-கொப்பளிக்குங்
காசசுவா சம்வாந்தி கண்ணிலெழு நோய்களறும்
வீசுபுற்றுத் தேனுக்கு மெய்.

இ-ள். ஐயம், காசம், சுவாசம், வாந்தி, கண்ணிலுண்டாகும் நோய்களும்போம். (கசுஅ)

மனைத்தேனின்குணம்.

புண்ணும் புரையும்போம் போகாக் கரப்பனறும்
எண்ணரிய நிபனமா மேந்திழையே-கண்ணுகளிற்

பூச்சபுழு வெட்டுகபம் போல்லா விருமலறும்
பேச்சின்மனைத் தேனுக்குப் பேசு.

இ-ள். புணபரை, கரப்பான், கண்ணிலுள்ள பூச்சி, புழுவெட்டு கபம், இருமலும்போம், பசியுண்டாம். (உ00)

தேன்வகை-முற்றிற்று.

மரவகை.

சந்தனமரத்தின்குணம்.

நற்சந் தனமரத்தா னல்லறிவு மின்புமெழிற்
பொற்செந் திருவருளும் பூதலத்துண்-மெச்சுஞ்
சரும வழகுந் தனிமோ கமுமாம்
பிரமிநோ யேகும் பிறழ்ந்து.

இ-ள். நல்லறிவு, இன்பம், அழகு, இலக்ஷுமிகடாக்ஷம், தோலழகு, மோகமும் உண்டாம், பிரமியநோய்ப்போம். (உ0க)

தேவதாரமரத்தின்குணம்.

தேவதா ரக்குணந்தான் சேர்ந்துவளர் பீநசத்தைக்
காவகத்தி லோட்டுங் கரப்பலவே-மாவலவர்
சொல்லும் புராண சுரமொடுநீ ரேற்றத்தை
வெல்லு மனற்றணிக்கு மெய்.

இ-ள். பீநசம், பழபசுரம், நீரேற்றம், அனலும்போம். (உ0உ)

அகில் மரத்தின்குணம்.

தளர்ந்தகி ருத்தருக்காந் தக்க மணத்தால்
உளர்ந்த சுரமனைத்து மோடும்-வளர்ந்திகழு
மானே யகிற்புகைக்கு வாந்திய ரோசகம்போந்
தானே தளர்ச்சியறுஞ் சாற்று.

இ-ள். இதின்புகையால், சுரங்களும், வாந்தி, அரோசகம்,தேகதளர்ச்சியும் போம். (உ0௩)

சரக்கொன்றை மரத்தின்குணம்.

குட்டங்கிருமி கொடுஞ்சூலை வாதமையந்
துட்டமலம்அருசு தூரப்போந்-தட்டிக்
கரக்கின்ற பேதியுண்டாந் துப்பக்கத் துவர்க்குஞ்
சரக்கொன்றைக் காரணங்கே சாற்று.

இ-ள். குட்டம், கிருமி, சூலை, வாதம், ஐயம், துட்டமலம், அருசியும்போம், பேதியுண்டாம். (உ0௪)

சிறுகொன்றை மரத்தின்குணம்.

சிறுகொன்றை நற்கசப்பாஞ் சென்னியனலால்
உறுகின்ற கண்களினோ யோடே-பெறுமுடலின்
உட்டினமுன் மூலமிவை யோடு மதிபலனுங்
கட்டழகு முண்டதனுற் காண்.

இ-ள். கசப்பாகவிருக்கும், தலையனலா லுண்டான கண்ணோய், உஷ்ணம், உள்மூலமும்போம், பலம், அழகும், உண்டாம். (உ0௫)

நரிக்கொன்றை மரத்தின்குணம்.

பையவே யூறிப் படருமியா னைச்சொறியும்
நொய்ய கிருமிகொண்ட நுண்புடையு-மெய்யில்
அரிக்கின்ற வன்புடையு மாழிபுகு மாதே
நரிக்கொன்றை தன்னை நவில்.

இ-ள். யானைச்சொறி, கிருமிப்புடை, அரிப்புப் புடையும்போம்.

மைக்கொன்றை வரத்தின்குணம்.

குடல்வாதஞ் சூலை கொடுமேக மெல்லாம்
அடைவாகப் போக்க வலைந்தே-படிமீதில்
எக்கொன்றைத் தேடிநெஞ்சி லெண்ண மிடுவானேன்
மைக்கொன்றை யிங்கிருந்து மால்.

இ-ள். குடல்வாதம், சூலை, மேகங்களும்போம். (உ0௭)

மருத மரத்தின்குணம்.

ஓதமெனு நீரிழிவை யோட்டும் பிரமேகங்
காதமென வோடக் கடத்துங்காண்-போத
மயக்க மொடுதாக மாறுச் சுரத்தின்
தயக்கமறுக் கும்மருதஞ் சாற்று.

இதுவுமது.

குட்டரோ கங்கிருமி கோர வயிற்றுவலி
துட்டவறட் சூலை தொலையுங்காண்-கிட்டிப்
பொருதம்பா மென்னும்விழிப் பூவையரே நாளு
மருதம்பா ரென்றளவில் மாய்ந்து.

இ-ள். நீரிழிவு, பிரமேகம், மயக்கம், தாகம், சுரத்தயக்கம், குட்டரோகம், கிருமி, வயிற்றுவலி, வறட்குலையும்போம். (உ௦அ) (உ௦௯)

வேங்கை மரத்தின்குணம்.

குத்திருமல் வெட்டையொடு கூறுமிள மாந்தையிவை
யெத்திசையும் வாரா திடையுங்காண்-சத்தியமாப்
புண்ணிருமல் சிழொழுகற் போகு மலமிறங்குங்
கண்ணொளிரும் வேங்கைக்குக் காண்.

இ-ள் குத்திருமல், வெட்டை, உளமாந்தை, புண், இருமல், சிழொழுகல், மலக்கட்டும்போம், கண்ணொளிவு உண்டாம். (உ௧௦)

வன்னி மரத்தின்குணம்.

வாதசந்நி தோஷமறு மாறுத் தழலுளதென்
றோதுவரிவ் வன்னிக் குவமையுண்டோ-பூதலத்திற்
காணூர் விஷமுங் கபமுஞ் சொறியும்போந்
தேனே யிதையறிந்து செப்பு.

இ-ள். வாதம், சந்நிதோஷம், காட்டுவிஷம், கபம், சொறியும் போம், அனல் உண்டாம். (உ௧௧)

புரச மரத்தின்குணம்.

புரசுவா தம்பித்தம் பொங்குகபங் குன்மங்
கிருமியுடனே கிராணி-பெருவலிநோய்
ஓட்டுமதி தீபனத்தை யுண்டாக்கு மப்பொழுதே
திட்டியவேற் கண்ணாய் தெளி.

இ-ள். வாதம், பித்தம், கபம், குன்மம், கிருமி, கிராணி, பெருவலியும்போம், தீபனம் உண்டாம. (உ௧உ)

இருவாட்சி மரத்தின்குணம்.

கண்ணொளிவு மெய்யிற் கமழ்மணமு நீடழகும்
நண்ணும் வலிமூர்ச்சை நாசமாம்-பண்ணளிவுங்
கங்குழலும்வாழ் வார்குழலே காரமொடு வெப்புமிகத்
தங்குமிரு வாட்சிமரத்தால்.

இ-ள். கண்ணொளிவு, தேகமணம், நீடழகு, வெப்பமும் உண்டாம், வலி, மூர்ச்சையும் போம். (உ௧௩)

காட்டாத்தி மரத்தின்குணம்.

அதிசார மந்திமிக வாலித்த காசம்
விதிராம் விஷமும் விலகும்-எதிரொருவர்
மூட்டாத்தியென்னுமதி மோகந் தருமணங்கே
காட்டாத்திக் கென்றுளத்திற் காண்.

இ-ள். அதிசாரம், மந்தம், காசம், விஷமும்போம். (உகங)

பெருங்குமிழ மரத்தின்குணம்.

பெரியகுமி ழின்பேரைப் பேசின்மே கத்தின்
எரிவுசுக்கி லக்கடுப்பு மேகும்-பிரியாத
வல்ல வனற்சுரமும் வாதசுர முந்தணியும்
மெல்லெனமுத் தோஷம்போம் விண்டு.

இ-ள். மேகஎரிவு, சுக்கிலக்கடுப்பு, அனற்சுரம், வாதசுரம், திரிதோஷமும்போம். (உகரு)

மாவுலிங்க மரத்தின்குணம்.

சுரங்கடியின் றோஷந் தொலையாத வாதம்
உரம்பெறுவி ஷங்க ளொழியும்-அரமுங்
கருமா வடுவயினுங் கண்டஞ்சுங் கண்ணாய்
ஒருமாவி லிங்குக் குரை.

இ-ள். சுரம், கடியின்றோஷம், வாதம், விஷங்களும்போம். ()

அழிஞ்சில் மரக்குணம்.

அழிஞ்சிலது மாருதத்தை யையத்தைத் தாழ்த்தும்
ஒழிஞ்சபித் தத்தை யுயர்த்தும்-விழுஞ்சீழாங்
குட்டமெனு நோயகற்றுங் கூறுமருந் தெய்திடில
திட்டமென வறிந்து தேர்.

இ-ள். வாய்வு, சிலேஷ்டமம், குஷ்டம், விஷமும்போம், பித்தம் உண்டாம். (உகஎ)

கடலழிஞ்சில் மரத்தின்குணம்.

தீதிற் கடலழிஞ்சில் செய்யுங் குணங்கேளாய்
ஓதுமது மேகமொ ழிப்பதல்லால்-வாதத்தில்
வந்தசலம் பித்தசல மாகபச்ச லந்தாகத்
தொந்தசல மும்போக்குஞ் சொல்.

இதுவுமது.

கமல விரணங் கசிநீரகற்றும்
நிமல சுரம்விலக்கு நேரே-கமலமுக
மாதே கடலழிஞ்சில் வன்பட்டை பேதிகட்டுஞ்
சீதாமே கம்போக்குந் தேர்.

இ-ள். மதுமேகம், மேகவாதநீர், பித்தநீர், கபநீர், தொந்த நீர், உந்திவிரணம், கசிநீர், நிமலசுரம், பேதி, சீதம், மேகமும் போம். (உகஅ)(உகசு)

பூத மரத்தின்குணம்.

பூதவி ருக்ஷமதுபோக்கும் பலவிஷத்தை
வாதமென்ற நோயனைத்து மாற்றுங்காண்-தீதுபுரி
சந்நிகளைத் தப்பாது சண்ணிவிடும் பூதலத்துள்
உன்னி மகிழ்வா யுரை.

இ-ள். பலவிஷங்கள், வாதநோய்கள், சந்நிகளும்போம். (உஉ०)

வாகை மரத்தின்குணம்.

வாகைசா ரங்கசப்பை வைத்திருக்கு முள்ளபடி
போகையு தப்பசியை யுண்டாக்குந்-தோகையரே
நீரா விஷத்தோடு சில்விஷத்தை யுந்தீர்க்கும்
ஆராயத் தோன்று மது.

இதுவுமது.

வாகை யனல்விரணம் வாத வறட்சியுடன்
தாக சுரமுந் தணிக்குங்காண்-ஆகமதில்
அக்கர மெல்லா மகற்றிவிடும் பூவனமே
பக்கணத்திலென்றே யறி.

இ-ள். காரம், கசப்பு, மகிழ்ச்சியும் உண்டாம், விஷம், சிறுவிஷம், அனல், விரணம், வாதவறட்சி, தாகசுரம், நாக்கச்சாமும்போம். ()

கருவாகை மரத்தின்குணம்.

விரணமோ டேட்டின மும் வீறுகின்ற வாய்வுங்
திரண மெனுங்கிருமிச் சேர்வு-மரணமுறச்
செய்யுங் கபத்தின் செயலுங் குடிவிலகும்
வெய்யகரு வாகைக்கு வின்.

இ-ள். விரணம், சுரம், வாய்வு, கிருமி, கபமும்போம். (உஉக)

இலவ மரத்தின்குணம்.

நீர்க்கடுப்பு நீரெரிவு நீண்டொழுகு மேகமும்போம்
ஆர்க்கும்விந்து வோடைக்கு மாண்மையுறும்-பார்க்கும்
நிலவு மதிவதன நேரிழையே வெப்பாம்
நிலவு மரத்தா லியம்பு.

இ-ள். நீர்க்கடுப்பு, நீரெரிவு. வெள்ளையொழுகும், மேகமும் போம், விந்தும், ஐயமும் உண்டாம். (௨௨௪)

விளா மரத்தின்குணம்.

காச சுவாசங் கதித்த வருசிமுதற்
பேசரிய தாகமிவை பேருங்காண்-வீசு
தபித்தலைச்செய் பித்தந் தரிக்குமோ பூவிற்
கபித்த மரமிருக்குங் கால்.

இ-ள். காசசுவாசம், அருசி, தாகம், பித்தமும்போம். (௨௨௫)

தே-கருநெல்லி மரத்தின்குணம்.

பதினெண் தெனுஞ்சந்நி பாதந் தயக்கம்
மதிநைந்தி டச்செய்வினை மாறும்-பதியிற்
சநித்த கருவுருவந் தானும்வே ளுருந்
தனித்தகரு நெல்லிமரத் தால்.

இ-ள். சந்நிபாதம், தயக்கம், தேகக்கருநிறமும்போம். (௨௨௬)

அருள் மரத்தின்குணம்.

வாத மகலும் வளருகின்ற மந்தமறுஞ்
சீதரத்தஞ் சோபசுரந் தீருங்காண்ஓதும்
இருளாருங் கூந்த லெழி லணங்கே மூத்த
அருள்என்னும் நன்மரத்தா லாம்.

இ-ள். வாதம், மந்தம், சீதரத்தம், சோபம், சுரமும்போம். ()

வெப்ப மரத்தின்குணம்.

ஓதரிய வேம்பை யுரைக்கிற் சுரமுடனே
வாதமறு மூலகண மந்தம்போந்-தீதாய்
உருதிமெரி பூச்சுகுன்ம மோதா தொழியுஞ்
சிதறுமலம் போகுமெனத் தேர்.

இ-ள். சுரம், வாதம், மூலகணம், மந்தம், எரிபூச்சி, குன்மம், மலமுமபோம். (உஉஅ)

மலைவேப்பரத்தின்குணம்.

மலட்டுப் புழுவும் வயிற்றின்வலியும்
அலட்டுவாய் வும்போ மடங்கிக்-கொலட்டும்
உலைவேஞ் சினவேற்கண் ஓதிமமே கேளாய்
மலவேம்பின் பேரை வழுத்து.

இ-ள். மலட்டுப்புழு, வயிற்றின்வலி, வாயுவும்போம். (உஉகூ)

தே-சருக்கரைவேப்பமரத்தின்குணம்.

காயசித்தி யாகுங் கடியசி லேஷ்மமறுந்
தூயவிந்து நாதமிவை சுத்தியுமாந்-தூயவருந்
தெத்திக்குங் கிட்டும் இலைபருத்தில் வாயெல்லாந்
தித்திக்கும் வேம்பதற்குத் தேர்.

இ-ள். சிலேட்டுமம்போம், காயசித்தி, நாதவிந்துசுத்தியும் உண்டாம். (உ௩௦)

பாலைமரத்தின்குணம்.

வாதப் பெருக்குபித்த மாருச்சு வாசமுதல்
ஓதுசர்வ தோஷமும்விட் டோடுங்காண்-தீதுபுரி
வேலைப் பொருவுவிழி மெல்லியலே காட்டிலுறை
மாலைக்கென வுன்னிப் பார்.

இ-ள். வாதப்பெருக்கு, பித்தம், சுவாசம், சர்வதோஷமும் போம். (உ௩க)

தே-வெட்பாலை மரத்தின்குணம்.

அக்கினியை வைத்திருக்கு மார்க்தவா தம்போக்குந்
திக்குள்ளிரி தோஷத்தைத் தீர்த்துவிடுஞ்-சொக்கவிரு
தட்பாலைக் கூற்றைவைத்த கான மடமயிலே
வெட்பாலை நன்மருந்தாம் விள்.

இ-ள். அக்கினிவாதம், திரிதோஷம்போம். (உ௩உ)

திம்பாலை மரத்தின் குணம்.

மேவெட்டை சந்நி விஷபாகம் நேத்திரநோய்
தாகமுத்தோ ஷஞ்சர்த்தி சாரனலம்-வேகமோ

டேறுசலம் மீசாமி ரத்தமுந்திம் பாலையெனும்
நூறுவா திக்கலுஞ் சொல்.

இ-ள். மேகவெட்டை, சந்தி விஷபாகரோகம், நேத்திரநோய், தாகம், திரிதோஷம், வாந்தி, சூடு, மேகவெட்டை, சலக்கோர்வை பிரசம், இரத்தமும்போம். (உளக)

மலைப்பாலை மரத்தின்குணம்.

விக்கல்வலி வாந்திகுன்ம மீறுபக்கச்சூலையொடு
மைக்கரப்பான் மந்தமிவை மாறுங்காண்-மைக்கண்
நிரைப்பாலை யொத்தமொழி நேரிழையே கேளாய்
வரைப்பாலை யையுண்ட வர்க்கு.

இ-ள். விக்கல், வலி, வாந்தி, குன்மம், பக்கச்சூலை, கரப்பான், மந்தமும்போம். (உளச)

குடசப்பாலை மரத்தின்குணம்.

வாதமறும் பேதிகட்டு மாறுத நீரிழிவுங்
காதம்போ மேகங் கடக்குங்காண்-தீதடரப்
பொங்கு கரப்பானும் போகா விரணமும்போம்
இக்குகுட சப்பாலைக்கே.

இ-ள். வாதம், நீரிழிவு, மேகம், கரப்பான், விரணமும் போம், பேதிக்கட்டுண்டாம். (உளரு)

குளப்பாலை மரத்தின்குணம்.

சுவாச காசம்பக்கச் சூலையதி சாரம்
அவாச வியர்ப்போ டனலக்-தவாத
கரப்பா னிவைவிலகுங் சாரிகையே நாளும்
உரப்பாங் குளப்பாலை யுண்.

இ-ள். சுவாசகாசம், பக்கச்சூலை, அதிசாரம், வியர்வை, அனல், கரப்பானும்போம். (உளசு)

முன்முருக்கமரத்தின்குணம்.

முள்ளு முருக்கதுதான் மோதுகின்ற சர்த்திகுன்மம்
கள்ள மறத்தீர்க்குங் கனற்சுரமும்-விள்ளரிய
அக்கரமும் போக்கு மனல்வாய்வேக் காடகற்றும்
மிக்கவலி கொடுக்கும் விள்.

இ-ள். வாந்தி, குன்மம், சுரம், அச்சரம், வாய் வேக்காடும், போம். (உ௩எ)

வெள்வேல மரத்தின்குணம்.

பித்த மபக்கமறும் பேருலகின் மாலிடருக்
குற்ற சுரவாத மோடுங்காண்-குத்துமின்ற
சந்துக்கு டைச்சல்விடுஞ் சரவாங்க வாதம்போங்
கொந்தலவும் வெள்வேலுக்கு.

இ-ள். பித்தமபக்கம், வாதசுரம், சந்துக்குடைச்சல், சர்வாங்க வாதமும்போம். (உ௩அ)

மூங்கில் மரத்தின்குணம்.

சூதக வாய்வினது சோணிதந்தங் காதுவரு
மாதே சுரந்தணியும் வாதம்போம்-பூதரமேல்
ஓங்கி வளர்ந்திழையு மோங்கலெனு மூங்கிலுக்கு
வாங்குஞ்சு வாசம்போம் வாழ்த்து.

இ-ள். சூதகவாய்வு, சுரம், வாதம், சுவாசமும்போம். (உ௩௯)

மரவகை - முற்றிற்று.

செடிவகை.

தே-ஆவாரையின்குணம்.

சொல்லுதற்கு மாட்டோ தொலையாத மேகநீர்
எல்லா மொழிக்கு மெரிவகற்று-மெல்லவச
மாவாரைப் பம்பரம்போ லாட்டுந் தொழிலணங்கே
பாவாரை மூலி யது.

இ-ள். மேகநீர், தேக எரிவும்போம். (உ௪0)

தே-பொன்னுவரையின்குணம்.

வெடிப்பு தவக்குதிரல் மேகப் புடைகள்
தடிப்பு தினவுகடிதக்கா-அடிக்கடியிந்
தென்னு வனைய விசையா வெழிலணங்கே
பொன்னு வரையதனைப் போற்று.

இ-ள். வெடிப்பு சொறிகுஷ்டம், மேகப்புடைகள், தப்பு, தினைவு, தடிப்பும்போம். (உ௪௧)

நீர்ப்பூலாவின் குணம்.

மாந்தங்க ணம்பொருமல் மாறுச்சலத்துடனே
சேர்ந்த சொறிசிரங்குந் தீருங்காண்-பாங்கெழிலைச்
சேர்ப்பாகக் கொண்ட செழுந்திருவே பூவிலுறை
நீர்ப்பூலாப் பூண்டைநினை.

இ-ள். மாந்தம், கணம், பொருமல், நீரிழிவு, சொறி சிரங்கும் போம். (௨௪௨)

தேய்மிரட்டியின்குணம்-இதுவே வெதுப்படக்கி.

மாந்தங்க ணங்கழிச்சல் மாறா வயிற்றுவலி
சேர்ந்து வருகரப்பான் றீச்சுரமும்-போர்க்குவிடும்
வேய்மிரட்டுந் தோளுடைய மெல்லியலே ராசியமாய்ப்
பேய்மிரட்டி யென்றெருக்காற் பேசு.

இ-ள். மாந்தகணக்கழிச்சல், வயிற்றுவலி, கரப்பான், பித்தசுரமும்போம். (௨௪௩)

குன்மக்குடோரியின் குணம்.

சூலையோ டீளை தொலையாக்கா சங்கயநோய்
காலனென்ற குன்மங்க லக்குங்காண்-ஞாலமிசை
நன்மைக்குரியகுண நல்குவமென் றூற்றிலுங்
குன்மக்கு டோரி தனக்கு.

இ-ள். சூலை, ஈளை, காசம், கயநோய், குன்மமும்போம். (௨௪௪)

விடத்தேரின் குணம்.

முளையைவரு விக்கின்ற மூலரோ கத்தை
யளையுமுதி ரத்தை யடங்கா - துளைதாக
வேகத்தைப் போக்கிவிடும் வெப்பவிடத் தேர்சக்கிர
வாகத்தைக் காய்முலையாய் வாழ்த்து.

இ-ள். முளைமூலம், உதிரமூலம், தாகவேகமும்போம். (௨௪௫)

தகரையின் குணம்.

தகரை படர்தா மரையைச் சொறியைத்
தகரவ டிக்குமந்தந் தன்னோ-டிகலான
அத்திசு ரத்தையுமக ஞ்செய்யு மிம்மூலி
யுத்தமமா யென்றே யுரை.

இ-ள். படர்தாமரை, சொறி, மந்தம், அத்திசுரமும்போம். ()

நின்றூற்சிணுங்கி-நிலம்புறண்டி-இவைகளின் குணம்.

நின்றூற் சிணுங்கியது நீலவிஷம்போக்குமினுங்
குன்றாத் தனத்தியரைக் கூட்டுவிக்கும் - என்றும்
அலம்புரண்ட நோயகற்று மாள்வசிய மாக்கும்
நிலம்புறண்டி மூலி நினை.

இ-ள். நின்றூட்சிணிங்கி, விஷம்போம், இஸ்திரிவசியம் உண்டாம், நிலம்புறண்டி, தேள்விஷம்போம், ஆள்வசியமாம். (௨௪௭)

உரலாமணக்கின் குணம்.

உரலா மணக்குக் குரத்தவலி சூலை
விரைவான குன்மமும்போம் விள்ளப் - பிரிவாம்
முளைமூல மோடிரத்தம் முன்கால் விரணங்
கொளுமேக மெல்லாம்போங் கூறு.

இ-ள். வலி, சூலை, குன்மம், முளைமூலம், இரத்தமூலம், காலின்விரணம், மேகங்களும்போம். (௨௪௮)

எலியாமணக்கின் குணம்.

எலியா மணக்கோ எலிவிஷமுஞ் சேர்ந்த
பலவிஷமு மோட்டிவிடும் பாரில்-வலுபேதி
யுண்டாக்கு விக்கு முரத்தகுன் மம்பிலிகம்
அண்டாம லோட்டிவிடு மால்.

இ-ள். எலிவிஷம், விஷங்கள், குன்மம், பிலிகமும்போம், பேதியுண்டாம். (௨௪௯)

சணப்பின் குணம்.

கைப்பும் உறைப்புங் கலந்திருக்குந் தின்றக்கால்
மெய்ப்புள்ள பித்தம் விலகுங்காண்-செப்பாங்
கருப்பங்க ளெல்லாங் கரைந்து விழுமே
உருப்பக்க மாஞ்சணப்புக் கோர்.

இ-ள். பித்தம், கருப்பங்கள் கரைதலும் போம், கைப்பும் உறைப்பும் உண்டாம். (௨௫0)

மாமாலையின் குணம்.

பாண்டுடனேமெய்யிற் படர்சோபை பைத்துரந்துந்
துண்டிரீ ராம்பலெலும் துன்பொழிக்கும்-பூண்டதோர்

நீரையிறக்கு நெடுந்துயர மாற்றிவிடும்
நாரியரே மாமாலை நன்று.

இ-ள். பாண்டு, சோபை, நீராம்பல், நீர்க்கட்டு. துயரமும் போம். (உருக)

கோடகசாலையின் குணம்.

கோடகசா லைக்குக் கொடியஅனல் மேகமொடு
போடகங்கி ரந்திகுஷ்டம் புண்ணுறும்-நாடகஞ்செய்
யப்பித்த வாய்வு மலர்வாய் விரணமும்போம்
பொற்புற்ற பொன்னே புகல்.

இ-ள். அனல், மேகம், கொப்பிளம், கிரந்தி, குஷ்டம், புண் பித்தவாய்வு, வாய்விரணமும்போம். (உருஉ)

வட்டக்கிலுகிலுப்பையின் குணம்.

வட்டக் கிலுகிலுப்பை மாருச்சொரிகிரந்தி
துட்டகண்ட மாலைபல சோபநோய்-வட்டமுலை
மானே விரணவகை மாந்தமுத ஞேயெல்லாந்
தானேய கற்றுமெனச் சாற்று.

இ-ள். சொறி, கிரந்தி, கண்டமாலை, பலசோபை, விரணங்கள், மாந்தம், சீதரத்தம், தாகம், மூலம், வீக்கமும்போம். (உருங)

வெள்ளைக்கிலுகிலுப்பையின் குணம்.

விடவினங்க ளைப்பிடித்து விண்ணேற்றும் வந்த
விடசந்நி நோயை விரட்டுந்-தடமாரும்
வெள்ளைக் கிலுகிலுப்பை வெள்பூண் டதுபுவிக்குட்
கில்லைக் குதலைமின்னே கேள்.

இ-ள். விஷங்கள், சந்நிநோயும்போம். (உருச)

சந்திரகாந்தி - சூரியகாந்தி - இவைகளின்குணம்.

சந்திரகாந் திக்குத் தழலெரிச்சல் நீர்கடுப்பும்
உந்திவலி யாவுமொ டுங்குங்காண்-சந்திலுறும்
பாரிய வாதம் பருகுநீரோற்றமும்போஞ்
சூரியகாந்திக்குச் சொல்.

இ-ள். சந்திரகாந்தி, தழலெரிச்சல், நீர்க்கடுப்பு, உந்திவலியும் போம், சூரியகாந்தி, வாதம், நீரோற்றமும்போம். (உருரு)

ஈச்சரமூலியின்குணம்.

பலபலவிக் கஞ்சந்தி பாதங்களோடு
நலமகல்வி ஷங்கள் நடுங்கும்-கலகலெனம்
பேச்சுரமுண் டாகுமலர்ப் பெண்ணனமே நீகேளா
யீச்சுர மூலிதனக் கின்று.

இ-ள். பலபல வீக்கங்கள், சந்தி, பாதங்கள், விஷங்களும் போம். (உருசு)

நிலவிளாவின் குணம்.

அழன்றகண வேக மதிதாகந் தீருஞ்
சுழன்றுவரு பித்தந் தொலையும்-உழன்று
பொருநிலமே கத்துடனே புண்சுரமும் போகும்
அருநிலவி ளாவுக் காய்ந்து.

இ-ள். கணம், தாகம், பித்தம், மேகம், புண், சுரமும்போம். ()

சங்கக்குப்பியின் குணம்.

கரப்பான் கிரந்தி கருங்குட்ட ரோகம்
உரப்பான மேகம் ஒழியுங்-கருவாம்
கருங்கிரந்தி செவ்வாப்புக் கட்டிகளு மேகும்
அருஞ்சங்கங் குப்பிக் கறி.

இதுவுமது.

வெட்டை சொறிசிரங்கு வீறிவ ருஞ்சூலை
நட்டவா தங்கபந்து னுக்கிருமல்-கெட்டவிஷம்
அங்கங்கொள் பூச்சியிவை யாவும்போம் பித்தமுறுஞ்
சங்கங்குப் பிக்கெனவே சாற்று.

இ-ள். கரப்பான், கிரந்தி, கருங்குஷ்டம், மேகம், கருப்பத்தி, லுண்டாகிய கருங்கிரந்தி, செவ்வாப்புக்கட்டிகள், வெட்டை, சொறிசிரங்கு, சூலை, வாதம், கபம், இருமல், விஷம், தேகத்திலுள்ள பூச்சிகளும்போம், பித்தம் உண்டாம் (உருஅ)உருகூ)

கறிமுள்ளியின் குணம்.

ஈளை யிருமல் இரைப்புச்சு வாசமறும்
வாளைவென்ற கண்ணாய் வழுத்தக்கேள்-நாளையினி
யிக்கலைக்கட லுலக மெங்குங்க பச்சுரநந்
தொல்லைக் கறிமுள்ளி கொள்.

இ-ள். ஈளை, இருமல், இரைப்பு, சுவாசம், கபச்சுரமும்போம்.

செம்முள்ளியின்குணம்.

செம்முள்ளி யென்றாற்சி லேஷ்மக டுங்கிவிடும்
விம்முமுலை மாதேகேவி ளம்பக்கேள்-கம்முகின்ற
மாந்தகணம் ஐயமிவை மாறுஞ் சிறுவருக்குச்
சேர்ந்தசர தோஷமும்போஞ் செப்பு.

இ-ள். சிலேஷ்டமம், மாந்தகணம், ஐயம், சிறுவர் தோஷமும் போம். (உசுக)

கண்டங்கத்திரியின்குணம்.

காசசு வாசங்க தித்தக்ஷய மந்தமனல்
வீசுசுரஞ் சந்நி வினைதோஷம்-ஆசுறுங்கால்
இத்தரையு ணிற்கா எரிகாரஞ் சேர்கண்டங்
கத்திரியுண் டாமாகிற் காண்.

இ-ள். சுவாசகாசம், க்ஷயம், மந்தம், அனல், சுரம், சந்நிதோஷம், வாய்வும்போம். (உசுஉ)

தேட்கொடுக்கின்குணம்.

தேட் கொடுக்குண் டாயிற் றினவடங்குந் தப்பாது
நாட்பட்ட புண்கரப்பான் நாசமாம்-சேட்பட்ட
மாந்த கணமுமறு மானிலத்துட் சில்விஷம்போம்
போந்தமருந் தாகும் புகல்.

இ-ள். தினவு, நாட்பட்டபுண், கரப்பான், காந்தகணம், சிலவிஷமும்போம். (உசுரு)

பெருந்தேட்கொடுக்கின்குணம்.

சுடுகாடு முட்டா னெனப்பெரியோர் சொல்லும்
நெடியபெருந் தேட்கொடுக்கால் நீரார்-பொடிக்கிருமி
புண்கிரந்தி மேகப்புண் பொல்லாக் கருங்கிரந்தி
விண்கரந்து போகாதே விள்.

இ-ள். சிறுகிருமி, புண், கிரந்தி, மேகப்புண், கருங்கிரந்தியும் போம். (உசுச)

சிறுதேட்கொடுக்கின் குணம்.

சிறுதேட் கொடுக்கதனாற் சேயிழையே கேளாய்
சொறிசிரங்கு புண்கரப்பான் சூலை-கொறுமாந்தை

மேகவெட்டை பித்தவெட்டை மீளா வெலும்புருக்கி
ஆகம்விடுத் தோடு மறி.

இ-ள். சொறிசிரங்கு, புண், கரப்பான், சூலை, மாந்தை, மேக வெட்டை, பித்தவெட்டை, எலும்புருக்கியும்போம். (உ௬௫)

நிலவேம்பின்குணம்.

வாதசுர நீரேற்ற மாற்றுஞ் சுரதோஷங்
காதமென வோடக் கடியுங்காண்-மாதபசே
பித்த மயக்கறுக்கும் பின்புதெளி வைக்கொடுக்குஞ்
சுத்தநில வேம்பின் றொழில்.

இ-ள். வாதசுரம், நீரேற்றம், சுரதோஷம், பித்தமயக்கமும்போம் தெளிவுஉண்டாம். (உ௬௬)

தே-சிவனார்வேம்பின்குணம்.

சாய்க்குமிடிப் புண்பழம்புண் சர்மகுட் டம்பிளவை
திக்கடுகால் வன்பெருநோய் சிந்துமா-நோய்க்கு
விதையாதி வேம்பினு மெய்க்கழகு காலை
புதையாதி வேம்பினு மூன்னு.

இ-ள். புண், பழம்புண், சர்மகுஷ்டம், பிளவை, பித்தவாய்வு, பெருநோய், மந்தநோயும்போம், தேகவழகுண்டாம். (உ௬௭)

நீர்முள்ளியின்குணம்.

பாண்டுகு ளுப்பைபறும் பாரில்வரு நீரேற்றம்
மாண்டுவிடும் நீர்க்கட்டு மாறுங்காண்-பூண்டதொரு
வீக்கமெல்லா நோய் விடுமே நீர் முள்ளிக்குத்
தாக்கு மயில்விழியாய் சாற்று.

இ-ள். பாண்டு, குளுப்பை, நீரேற்றம், நீர்க்கட்டு, வீக்கங்கள் நீரகவும் போம்.

பெரு மருந்தின்குணம்.

திரிதோஷம் வெப்பு சிரங்குசொறி நஞ்சோ
டரிதேமல் வன்புடையு மண்டா-தொருவான்
அருமருந்தை போக்க வணங்கே புலகிற்
பெருமருந்தை நீபெடுத்த பின்பு.

இ-ள். திரிதோஷம், வெப்பு, சிரங்கு, சொறி, நஞ்சு, தினவு, தேமல், படையும்போம். (உ௬௯)

ஊமத்தையின்குணம்.

நாய்க்கடியால் வந்த நலிசெய் ரணமும்போம்
வாய்க்குழிப்புண் கட்டிகளு மாறுங்காண்-நீக்குணத்தைச்
சேமத்தில் வைத்தவிஷந் தீருமுத்தோ ஷங்களறும்
ஊமத்தை யின்குணத்தை யுன்னு.

இ-ள். நாய்க்கடிவிரணம், குழிப்புண், கட்டிகள், விஷம், முத்தோஷமும்போம்.

கருஊமத்தையின்குணம்.

விந்திரதங் கட்டுமெழின் மேனிதருங் குஷ்டமொடு
வந்த வியர்ப்பரிப்பு மாற்றுங்காண்-முந்தப்
பெருமத்தஞ் செய்சுரத்தைப் போக்குங் கயப்பாங்
கருமத்தம் நன்மூலி காண்.

இ-ள். விந்துகட்டு, இரசக்கட்டு, சரீரவழகும் உண்டாம், குஷ்டம், வியர்ப்பு, அரிப்பு, பித்தசுரமும்போம். (உ௭௧)

பொன்னூமத்தையின்குணம்.

பொன்மத்தம் உண்டாகிற் பூவையரே புண்கிரந்தி
தொன்மைக் கிராணிவரு சூசிகா-வன்பேதி
பித்த சுரத்துடனே பேரா விஷசுரமுஞ்
சுத்தவதி சாரமும்போஞ் சொல்.

இ-ள். புண், கிரந்தி, கிராணி, சூசிகாமேகம், பேதி, சுத்தசுரம், விஷசுரம், அதிசாரமும்போம், (உ௭உ)

மருளூமத்தையின்குணம்.

சீதசுரம் நீரேற்றஞ் சில்விஷங்கள் மந்தத்தோ
டுதையிவை யெல்லாம் ஒழியுங்காண்-போத
இருளூருங் கூந்த லெழின்மாதே காண
மருளூமத் தைக்கறிந்து வை.

இ-ள். சீதசுரம், நீரேற்றம், சிலவிஷங்கள், மந்தம், வாய்வும் போம். (உ௭௩)

நிலக்குமிழின்குணம்.

பேதியொடு கண்சொருகற் போராத சீதளமும்
வாதவலி கொட்டாவி மாந்தமும்போம்-ஓதச்

சலக்குமிழை யொத்தக னக்கருங்கண் மாதே
நிலக்குமிழைக் கையிலெடு நீ.

இ-ள். பேதி, கண்சொருகல், சீதளம், வாதவலி, கொட்டாவி, மார்தமும் போம் (உஎச)

பெரும்பீளையின்குணம்.

பாடான பேதியெனப் பன்னும்பெரும் பீளைக்கு
மேடான விக்கம் விலகுங்காண்-நாடறிய
பேய்பூத மும்போகும் பேசிற் பலபிணிபோந்
தாயோ ரறிவரிதைச் சொல்.

இ-ள். விக்கமும், பேய்பூதமும், பலபிணியும்போம். (உஎரு)

சிறுபீளையின்குணம்.

பாண்டுபெரும் பாடு பகர்மூத்தி ரக்கிரிச்சம்
பூண்டதிரி தோஷமிவை போகுங்காண்-தாண்டிப்
பறியவே ளாத்தூரத்தும் பார்வை யிற்கண் மாதே
சிறிய பீளைக்குச் சிதைந்து.

இதுவுமது.

நீரடைப்பு கல்லடைப்பு நீங்காக் குடற்குலே
போரடரி ரத்தகணம் போக்குங்காண்-வாரிருக்கும்
பூண்முலையே கேளாய் பொருந்துஞ் சிறுபீளை
யாமிதுகற் பேதி யறி.

இ-ள். பாண்டு, பெரும்பாடு, மூத்திரக்கிரிச்சரம், திரிதோஷம், நீரடைப்பு, கல்லடைப்பு, குடல்குலே, இரத்தக்கணமும்போம். () ()

பல்லிப்பூண்டின் குணம்.

வல்விஷக் தோஷசுரம் வாயுபித் தங்களொடு
பல்வலியும் பஞ்சாய்ப் பறக்குங்காண்-நல்லோர்பால்
சொல்லிப்பார் பாஷாண தாளகமுஞ் சுத்தியதாம்
பல்லிப்பூண் டுண்டாயிற் பார்.

இ-ள். வல்விஷம், தோஷசுரம், வாய்வு, பித்தம், பல்வலியும் போம், தாளகம், பாஷாணமும் சுத்தியாம். (உஎஅ)

தாணிப்பூண்டு-பொரிபூண்டு-இவைகளின் குணம்.

தாணிப்பூண் டேயிருந்தால் நாவிவரு மேகத்தை
நாணிப்போகச்செய்யும் நானிலத்துள் - வீணில்
எரிகிரந்தி மேக மிருக்குமோ வூரிற்
பொரிபூண்டின் பேரைப் புகல்.

இ-ள். தாணிப்பூண்டு, மேகம்போம், பொரிபூண்டு, எரிகிரந்தி, மேகமும்போம். (உஎகூ)

குருவிச்சிப்பூண்டின் குணம்.

குருவிச்சிப் பூண்டெனவே கூப்பீட்டாற் போதும்
வருவிச்ச குஷ்டம் மலடும் - ஒருமிச்ச
மேகக் கரப்பான் விஷமாந்தஞ் சீதரத்தம்
பேதமறப் போமொருக்காற் பேசு.

இ-ள். குஷ்டு, மலடு, மேகக்கரப்பான், விஷமாந்தம், சீதரத்த மும்போம். (உ௮௦)

தலைச்சுருளியின் குணம்.

பாண்டகற்று மெய்யிற் படர்குஷ்ட நோய்விலக்கும்
நீண்ட விருதயநோய் நீக்குங்காண் - தாண்டதப்பை
முன்னே யொழித்துவிடு மூவாத் தலைச்சுருளி
யென்னே யுலகி விசை.

இ-ள். பாண்டு, குஷ்டம், மார்புநோய், வீக்கமும்போம். ()

கறுப்புமணத்தக்காளியின் குணம்.

வெவ்வழலு மாறும் விரிகுரற்கம் மற்போகும்
ஒவ்வுசிசு வுக்காம் உலவைவிடுஞ் - செவ்வி
அருமணிக் கச்சுமுலை யாயிழையே கேளாய்
கருமணத்தக் காளிதனைக் கண்டு.

இ-ள். குரற்கம்மல், அழல், வரய்வும்போம், சிசுவுக்காகும். ()

சிவப்புமணத்தக்காளியின் குணம்.

கந்ததா ளிப்புண் ணுங் காங்கையினால் உள்ளுக்குள்
வந்தவேக் காடுமிக மாற்றுங்காண் - முந்தனில
ஐய வினையும் அகற்றிவிடும் நற்புலத்துச்
செய்ய மணத்தக்காளிச் சீர்.

இ-ள். நாற்றப்புண், காங்கையினுலான உள்வேக்காடு, வாய்வு, ஐயமும்போம் (௨௮௩)

நல்வேளையின் குணம்.

சிரசிநோய் வலிகுடைச்சல் தீராச் சயித்தியம்
உரநோ யிவைக ளொழியும் - உரமேவும்
வில்வேளைக் காயும் விழிபாய் பசிகொடுக்கும்
நல்வேளை தன்னை நவில்.

இதுவுமது.

நல்லவேளைப் பூண்டை நாடுங்கால் வாதமும்போஞ்
சொல்லும் ஐயத்துடனே சோபையறும் - மெல்லமெல்லத்
தக்கவன லும்பித்துந் தானெழும்புஞ் சாந்தமின்றி
யக்கரநோய் மிஞ்சு மறி.

இ-ள். சிரநோய், வலிகுடைச்சல், சயித்தியம், மார்புநோய் வாதம், ஐயம், சோபையும்போம், அனல், பித்தம், அச்சரமும் உண்டாம். (௨௮௪) (௨௮௫)

நாய்வேளையின் குணம்.

வாதம் உடற்கடுப்பு வன்சூலை காதிரைச்சல்
ஓதமிகு பீநசமும் ஓடுங்காண்-போதெறிந்து
காய்வேளைக் காயும் காரிகையே வையமதில்
நாய்வேளை யுண்ண நவில்.

இ-ள். வாதம், உடற்கடுப்பு, சூலை, காதிறைச்சல், பீநசமும் போம். (௨௮௬)

கல்லுருவிப் பூண்டின்குணம்.

கல்லுருவிப் பூண்டுபல கட்டிகளை யுங்கரைக்கும்
வல்லுதிரக் கட்டறுக்கும் வந்தபுண்ணை - வெல்லரிய
மேகத்தை வல்விஷத்தை மீறுத கற்றிடும்உ
லோகத்தைச் சுத்திசெய்யு மோது.

இ-ள். உதிரக்கட்டு, புண், மேகம், விஷமும்போம், கட்டிக் கரைவு, இரும்பு சுத்தியுமாம். (௨௮௭)

எரிசாலை குதிரைக்குளம்படி - இவைகளின்-குணம்.

பூவில் எரிசாலைப் பூண்டுக் கிழப்புவலி
கூவிபழுஞ் சூலைஅனி லத்துறையுந்- தாவு

குதிரைகடை வாயுசந்நி கூறுதின வும்போங்
குதிரைக் குளம்படியைக் கூறு.

இ-ள். பரிசாலே, இழுப்புவலி, சூலே, வாய்வும்போம், குதிரைக் குளம்படி, வாய்வு, சந்நி, தினவும்போம். (உஅஅ)

சுளுக்குநாயகத்தின் குணம் - வி-ம்.

சுளுக்கு நாயகந் தோஷஞ் சுரமொடு
சுளுக்கும் வாங்குந் தொடுத்தகை கால்களின்
சுளுக்கு மேற்கறடுங் கரைக்குஞ் சோனேஞ்
சுளுக்கு மேல்வீ ழிரத்தந் துடைக்குமே.

இ-ள். சுரம், சுளுக்கு, கைகால்களின் சுளுக்குமேல்காடு, சுளுக்கில் விழுந்த ரத்தமும்போம். (உஅகூ)

கிரந்திநாயகத்தின் குணம் வெண்பா.

சீதமறு மாவிஷமுந் தீரும்விழி நோயகலும்
பூத மொடுமருளும் போகுங்காண் - மேதினியுள்
ஆயகத்துப் புண்கிரந்தி யாறுமயி லேகிரந்தி
நாயகத்தி னாலே நவில்.

இ-ள். சீதம், விஷம், விழிநோய், பூதம், மருள், புண் கிரந்தியும்போம். (உகூ0)

பிளவைகொல்லிப்பூண்டின் குணம்.

பிளவைகொள்ளிப் பூண்டிருந்தாற் புண்விரணம் பேரும்
அளவையுறு மேக மடங்கும் - உளமாந்தை
யாறுப் பிளவைகட்டி யெல்லா முலர்ந்திடுமே
யாறுக் கவினணங்கே வாழ்த்து.

இ-ள். புண், இரணம், மேகம், உளமாந்தை, பிளவைக்கட்டியும் போம். (உகூக)

மலேதாங்கிப்பூண்டின் குணம்.

வாதம்என்ப தூஞ்சுரமும் வாதசயித்தியமுங்
காதுவலி பாரங்க ரந்திடுங்காண் - போதச்
சிலேதாங்கிநின்ற நுதற் செந்திருவே நீயும்
மலேதாங்கிப் பூண்டை வழுத்து.

இ-ள். அம - வாதம், சுரம், வாதசயித்தியம், காதுவலி, சிரசு முதலிய விடங்களில் கனத்தலும்போம். (உகூஉ)

குடியோட்டுப்பூண்டின் குணம்.

புண்ணொடுக ரப்பான் பொடிசிரங்கு சில்விஷங்கள்
சண்ணிருமல் மேகவளி தண்மேகம் - அண்ணிற்
படியோட்டு மாவிஷமும் பல்நோயுந் திருங்
குடியோட்டுப் பூண்டாற் குலைந்து.

இ-ள். புண், கரப்பான், பொடிசிரங்கு, சிலவிஷங்கள், இருமல், மேகவாய்வு, மேகம், கடிகள், பல்நோயும்போம். (உகூங)

ஆடுதின்னாப்பாளையின் குணம்.

ஆடுதொடாப் பாளைக் ககக்கிருமி வன்சிலந்தி
நீடுகருங் குஷ்டம் நிறைகரப்பான் ஆடிடச்செய்
வெண்பது தாய்வும் இகல்குஷ்ட மூந்திருந்
திண்பெறுகற்றுதவுமாஞ் செப்பு.

இ-ள். வயிற்றின்கிருமி, சிலந்தி, கருங்குஷ்டம், கரப்பான், ஆம - வாய்வு, குஷ்டமும்போம், தாதுஉண்டாம். (உகூச)

குழிமீட்டான் குணம்.

கணத்திலெழு மாந்தத்தைக் காணவுட் சூட்டைங்
கணக்கிலே வேரைக் களையும் - மணத்தமுலைப்
பாலைச் சுரப்பிக்கும் பாரிற் குழிமீட்டான்
காலைத்தொழுதுண் ணுங் கால்.

இ-ள். கணமாந்தம், உள்சூடும்போம், ஸ்திரிகளுக்கு பாலுண் டாகும். (உகூரு)

செருப்படையின் குணம்.

செருப்படைக்கு வாதமந்தஞ் சேர்வான் மேகம்
இருப்படிகொள் பொல்லா இசிவும் - விருப்படிக்குஞ்
சூலையொடு வாதகுன்மந் தோற்றுதொருநாளும்
வேலையொத்த கண்ணாய் விளம்பு.

இ-ள். வாதம், மந்தம், மேகம், இசிவு, சூலை வாதகுன்மமும் போம். (உகூசா)

கல்தாமரையின் குணம்.

விரிய வித்திதரு மெய்க்குப் பலங்கொடுக்குங்
கூரிய குஷ்டிதனைக் கோபிக்கும்-காரியத்தை

நற்றும் பரமாக்கு நங்கா - யடுக்கதுறை
கற்று மரையதனைக் காண்.

இ-ள். விரிபவிர்த்தி, தேகபலம், அயத்தாம்பரமுமாம், குஷ்டவியாதிபோம். (உகஎ)

கஞ்சாங்கோரையின் குணம்.

மாந்தக் கழிச்சலறும் மாந்தஞ்சு ரங்கணம்போஞ்
சேர்ந்தமூ லத்தின் தினவடங்கும்-பூந்தடக்கை
யன்னமே மேகம் அறுங்கஞ்சாங் கோரையினை
யுன்ன இருமலில்லை யோது.

இ-ள். மாந்தக் கழிச்சல், மாந்தசுரம், கணம், மூலத்தினவு, மேகம், இருமலும்போம். (உகஅ)

கிழ்வாய்நெல்லியின் குணம்.

சிதம்அதி பித்தவிஷஞ் செவ்விழியின் னோய்க்கூட்டம்
பூதமொடு பேயிரத்தப் போக்குகளும்-பூதலத்துள்
தாழ்வாய்ப் பணிந்தேங்குந் தப்பாது பொய்யலவே
கீழ்வா யெனுநெல்லிக் கே.

இதுவுமது.

கிழாநெல் லிக்குணந்தான் கேளாய் மதுமேகந்
தாழாக்கா மாலைகளைச் சண்ணுறுந்தா-தேழனலுந்
தொக்கினன லுந்தொலைக்குந் தொன்மேகம் போக்கிவிடுந்
தக்கவிர ணங்கெடுக்குந் தான்.

இ-ள். சிதம், பித்தம், விஷம், விழிநோய், பூதம், பேய், இரத்தப்போக்கு, மதுமேகம், காமாலை. சப்ததாதுக்களின்சுரம், மேகம், விரணமும்போம். (உகக) (கூ00)

மயிர்மாணிக்கத்தின் குணம்.

மயிர்மாணிக் கத்தால் வளர்மேகம் போகுஞ்
செயிரான மேகவெட்டை தீருங்-கயரோகம்
மாவிரணம் போக்கலுதில் வல்விரதஞ் சேர்த்தரைத்துத்
தாவியுண்பா ருண்டறிந்தோர் தாம்.

இ-ள். மேகம், மேகவெட்டை, கயரோகம், விரணமும்போம்.

துளசியின் குணம்.

ஐயம் வயிறுளைச்சல் அஸ்திசுரந் தாகமும்போம்
பையசுர மாந்தம் பறக்குங்காண்-மெய்யாக
வாயின் அரோசகம்போம் வன்காரஞ் சூடுள்ள
தூய துளசிதனைச் சொல்.

இ-ள். ஐயம், வயிறுளைச்சல், அஸ்திசுரம், தாகம், சுரமாந்தம், அரோசகமும்போம், காரம், சூடும் உண்டாம். (௯௦௨)

செந்துளசியின் குணம்.

செய்ய துளசிவிஷந் தீர்க்குங் கபமறுக்கும்
வெய்ய கடிவிஷத்தை விண்ணேற்றுந்-தையலரே
முத்தோஷத் துண்டா முரணோட்டும் அவ்வழிசேர்
எத்தோஷ மும்போக்கு மென்.

இ-ள். விஷம், கபம், கடிவிஷம், திரிதோஷம், இதனாலுண்டாகிய எல்லாதோஷங்களும் போம். (௯௦௯)

கருந்துளசியின் குணம்.

இருமலொடு நெஞ்சி விழுப்புச்சு வாசங்
கிருமி சலதோஷங் கேவல்-மருமச்
சளிநட்டை சூலைவிஷஞ் சந்நியிவை போக்குந்
தளிரார் கருந்துளசி தான்.

இ-ள். இருமல், நெஞ்சிவிழுப்பு, சுவாசம், கிருமி, சலதோஷம், சந்நிகேவல், மார்புச்சளி, நட்டை, சூலை, விஷம், சந்நியும்போம். ()

நிலத்துளசியின் குணம்.

நிலத்துளசி மாதர்தரு நீண்முலைப்பால் மந்தம்
வலுத்தசுரம் பித்தகணை மாற்றும்-அலத்துகணை
மாந்தசுரம் பித்தசுரம் மாபெரிய சீதசுரஞ்
சேர்ந்தோடச் செய்யுந் தெளி.

இ-ள். முலைப்பால்மந்தம், சுரம், பித்தகணம், மாந்தகணசுரம், பித்தசுரம், சீதசுரமும்போம். (௯௦௫)

நாய்த்துளசியின் குணம்.

கபத்தோடு குத்திருமல் காசறு தொழியுஞ்
சபத்தைச்செய் முத்தோஷஞ் சாடும்-விபத்தழலைச்

சாய்த்துடலைப் போஷிக்குந் தாரணியி லுள்ளோர்க்கு
நாய்த்துளசி தன்னை நவில்.

இ-ள். கபம், குத்திருமல், முத்தோஷம், அழலும்போம், உட லுக்குப் போஷிப்பு உண்டாம். (௩௦௬)

கல்துளசியின் குணம்.

தாபச் சுரமுந் தனிவித் திரதிகளுஞ்
சோபச் சிலவிஷமுந் தோற்றுதே-கோபிச்சங்
குற்றுளசி லேட்டுமத்தால் ஊன்றுகா சம்பறக்குங்
கற்றுளசிப் பேருரைக்குங் கால்.

இ-ள். தாபச்சுரம், நரம்பிலெழுங்கட்டி, சிலவிஷங்களும், சிலே ட்டுமகாசமும்போம். (௩௦எ)

முள்துளசியின் குணம்.

எலிவிஷம்போம் வெட்டுண் டிருக்கும் விரணக்
கிலிவிடு விஷங்கள் கிளைக்கா-வுலவிவரு
மட்டுறச்சி வந்தமலர் மண்டபத்துள் வானமே
முட்டுளவிப் பேரை மொழி.

இ-ள். எலிவிஷம், வெட்டுப்புண், விஷங்களும்போம். (௩௦அ)

கழுதைத்தும்பையின்குணம்.

அரையாப்புக் கட்டி யனிலம் உதிரம்
பிரியாச்சீ தக்கப்பும் பேருந்-தரையிற்
பழுதைக்கொள் ளாச்செய்ய பங்கயப்பெண் ணேகேள்
கழுதைத்தும் பைச்செடியைக் கண்டு.

இ-ள். அரையாப்புக் கட்டி, வாய்வு, உதிரம், சீதக்கடுப்பும், போம். (௩௦௯)

நெய்ச்சட்டியின் குணம்.

நெய்ச்சட்டி யென்றால் நிறையுமெய்யுட் சுக்கிலமும்
பொய்ச்சிட்ட கண்ணொளியாம் பூவையரே-வெய்ச்சிட்ட
யேகமறுந் தீபனமாம் வெட்டையழ லுந்தணியுந்
தாகமறும் பித்தமும்போந் தான்.

தே-இதுவுமது.

தூயகு றப்புரியுஞ் சூதகந்த மாதிகளால்
வாயழுகி நாவுபுண்ணை மாற்றிவிடுந்-தீயழலை

நீக்கிவிடு நிம்பநெய்யை நெய்பாக் கிடும்வமனம்
போக்கிவிடு நெய்ச்சட்டிப் பூண்டு.

இ-ள். மேகம், வெட்டை, அழல், தாகம், பித்தம், சூதகெந்தங்களாலான வாய்ப்புண், சிதசுரம், வாந்தியும் போம், சுக்கிலம், கண்ணொளி, தீபனம், அழகும், உண்டாம, நிம்பயெண்ணெயை நெய்யாகச்செய்யும். (௩௧௦) (௩௧௧)

எழுத்தாணிப்பூண்டின் குணம்.

பழமலங்கள் சாறும்ப ருங்குடற்சி தம்போம்
எழுமல்ச்சி தக்கடுப்பு மேகுல-ஒழியாக்
கரப்பான் சொறிசிரங்குக் காணுதகலும்
உரப்பாம் எழுத்தாணிக் கோது.

இ-ள். பழமலமுண்டாம், சிதக்கடுப்பு, சிதம், கரப்பான், சொறிசிரங்கும்போம். (௩௧௨)

கொட்டைக்கரந்தையின் குணம்.

கொட்டைக்க ரந்தைதனைக் கூசாம லுண்டவர்க்கு
வெட்டை தனியும்அதி மேகம்போந்-துட்டச்
சொறிசிரங்கு வன்கரப்பான் றேற்றுது நாளும்
மறிமலமுந் தானிறங்கு மால்.

இ-ள். வெட்டை, மேகம், சொறிசிரங்கு, கரப்பானும்போம், மலமிறங்க லுண்டாம். (௩௧௩)

சிவகரந்தையின்குணம்.

வாந்தி அரோசகத்தை மாற்றும் பசிகொடுக்குஞ்
சாய்ந்தவிந்து வைக்கட்டுந் தப்பாதே-ஏந்தழகைத்
தண்டா துபச்சேர்க்குஞ் சாந்த பரிமளத்தைத்
தண்டாச் சிவகரந்தை தான்.

தே - இதுவுமது - வி - ம்.

கந்தகாறு கரந்தை யதின்குணம்
மந்தவாதங் கரப்பானை மாற்றிடுங்
தொந்தரோகந் துடைக்கு மிருமலா
மந்தமோயுந் தணிக்குநம் மானையே.

இ-ள். வாந்தி, அரோசகம், மந்தம், வாதம், கரப்பான், தொந்தரோகம், மாந்தம். இருமலும்போம், பசி, விந்துக்கட்டு, அழகு பரிமளமும் உண்டாம். (௩௧௪) (௩௧௫)

வெள்ளறுகின்குணம். வெண்பா.

குன்மமொடு வாய்வு குடல்வாதஞ் சூலையிவை
சென்மம்விடுத் தோடிச் சிதையுங்காண்-வன்முலையாய்
உள்ளூறுங் கிரந்திசொறி யொட்டியசி ரங்குமறும்
வெள்ளருகு தன்னை விரும்பு.

இ-ள். குன்மம், வாய்வு, குடல்வாதம், சூலை, கிரந்தி, சொறி, சிரங்கும்போம். (௩௧௬)

ஓரிலைத்தாமரையின்குணம்.

ஓரிலைத் தாமரையின் உற்றகுணத் தைக்கேளாய்
மார்பிற்பால் இல்லாத மங்கையர்க்கு-மோரில்
குடிக்கப்பால் உண்டாகுங் கோரமே கத்தைப்
படிக்குளிருக் காதொழிக்கும்பார்.

இ-ள். மேகம்போம், மோரிலரைத்துக்குடித்தால் இஸ்திரிகளுக்குப் பாலுண்டாகும். (௩௧௭)

ஓரிதழ்த்தாமரையின்குணம்.

தாதுவையுண் டாக்குந் தனிமேகத் தைத்தொலைக்கும்
ஆதரவா மேனிக் கழகுதருஞ்-சீதம்போஞ்
சீரிதழ்த் தாமரைவாழ் செய்யமடவனமே
ஓரிதழ்த் தாமரையை யுண்.

இ-ள். மேகம், சீதமும்போம், தாதும், மேனியழகுமுண்டாம்.

அந்தரத்தாமரையின்குணம்.

அழுகிரந்தி குஷ்டம் அடர்ந்த கரப்பான்
புழுவுறுமக் கூடுமுதற் போகும்-அழகாரும்
இந்திரநீ லக்கருங்கண் ஏந்திழையே யெப்போதும்
அந்தரத் தாமரையா லாய்.

இ-ள். அழுகிரந்தி, குஷ்டம், கரப்பான், பழுவூரு,பிரணங்களும் போம். (௩௧௮)

பற்பாடகத்தின் குணம்.

சிதவா தச்சுரமுந் தீராத தாகமும்போம்
போதவிரு கண்குளிரும் பொய்யலவே-பூதலத்துன்
வற்பார் பயித்தியமு மரபித்த முந்தொலையும்
பற்பாட கந்தையுன்னிப் பார்.

இ-ள். சிதவாதசுரம், தாகம், உன்மாதரோகம், பித்தமும்போம் கண்குளிர்ச்சி உண்டாம். (௬௨0)

திருநீற்றுப்பச்சை-உருத்திரச்சடை-இவைகளின்குணம்.

திருநீற்றுப் பச்சைசி லேஷ்மசர்த்தி தன்னை
விரிநீற்றைப் போலாக்கு மெய்யே-பெரிய
சுரத்திரத்த வாந்தி சுரம்அருசி நில்லா
வுருத்திரச் சடைக்கே யுரை.

இ-ள். திருநீற்றுப்பச்சை, சிலேஷ்மசர்த்திபோம், உருத்திரச் சடை, சுரத்தால் பிறக்கின்ற ரத்தவாந்தி, சுரம். அருசியும்போம். ()

மாசிப்பத்திரியின்குணம்.

புளிப்புந் துவர்ப்பும் பொருந்தியிருந் தாலுந்
தளிர்த்த வாய்வைக்கனலைச் சாடும்-நெளித்த
வலிதனைவிட் டோட்டிமட மாதேநீ கேளாய்
வலிமாசிப் பத்திரிதான் வாழ்த்து.

இ-ள். வாய்வு, சனல், தேகநோயும்போம், புளிப்பும், துவர்ப்பும் உண்டாம். (௬௨௨)

மரு-கொழுந்து-இவைகளின் குணம்.

கண்ணிறுறு தோஷங் கபஞ்சூடிவைபோக்கும்
ஒண் அனல்கைப் புக்காரம் உள்ளமரும்-மண்ணிற்
கொழுந்தம் மருந்குணத்தைக் கொண்டிருந்த போதுந்
தழைந்தபசி வண்மைதருஞ் சாற்று.

இ-ள். கணதோஷம், கபம், சூடும்போம், அனல், சசப்பு,காரம், பசி, பலமும் உண்டாம். (௬௨௩)

செடிவகை-முற்றிற்று.

கொடிவகை.

ஆதொண்டையின் குணம்.

மண்டைக்கு டைச்சலறும் வாதத்தின் பீநசம்போந்
தொண்டைக் கபமுந் தொலையுங்காண்-மிண்டுசெய்யுந்
வாதக்க டுப்பகலு மாதே ஆதொண்டைக்குப்
போதப்பல பிணிபோம் போம்.

இ-ள். மண்டைக்குடைச்சல், வாதபீநசம், கபம், வாதக்கடுப்பு, பலபிணியும்போம். (௩உச)

பெருங்கட்டுக்கொடி-சிறுகட்டுக்கொடி-இவைகளின்குணம்.

பெரியகட்டுக் கொடிக்குப் பேசுபெரும் பாடும்
அரியமல பேதியும்போம் அப்பால்-உரிய
சிறுத்தகட் டுக்கொடிதான் சீதரத்தம் நீக்கும்
இறுத்தபுன லைக்கட்டு மென்.

இ-ள். பெருங்கட்டுக் கொடி, பெரும்பாடு, மலபேதியும் போம், சிறுகட்டுக்கொடி, சீதரத்தம்போம், தண்ணீர்க்கட்டுண்டாம். ()

சிறுகுறிஞ்சாக் கொடிக்குணம்.

சிறுகுறிஞ்சா வாதமொடு சீதத்தை நீக்கும்
மறுவுதிரம் இல்லாத மாதர்குறுமுலகில்
அத்தி சுரமும் அகலாக் கடிவிஷமுந்
தத்தியக லத்தகர்க்குந் தான்.

இதுவுமது.

வாதசுரஞ் சந்நிசுரம் மாறுக்க பச்சுரமும்
பூதலம்விட் டோடப் புரியுங்காண்-மாதேகேள்
அக்கரங்கள் தீர்க்கும் அதிசுரந்தா கந்தொலைக்குந்
தக்க சிறுகுறிஞ்சா தான்.

இ-ள். வாதம், சீதம், அத்திசுரம், கடிவிஷம், வாதசுரம், சந்நிசுரம், கபசுரம், அச்சுரம், அதிசுரம், தாகமும்போம், ஸ்திரிகளுக்குத் தீட்டுண்டாம். (௩உரு) (௩உஎ)

இண்டின் குணம்.

பீநசத்தைப் போக்கும் பெருமியதோர் நீரேற்றந்
தானசிக்கச் செய்யுமிது சத்தியங்காண்-வானசைக்கும்

மண்டைக்கு டைச்சல் மருவுமுக சந்நியும்போம்
பண்டையுற்ற இண்டினுக்குப் பார்.

இதுவுமது.

கட்டுவா தங்களறுங் காரிகையே மேகம்போம்
முட்டுவா தங்களெல்லா முன்பொழியுங்-கிட்டு
புனலினறுந் தண்டுக்குப் போரீளை சூலை
யனலிலெழும் புண்ணு மறும்.

இ-ள் பீநசம், நீரேற்றம், மண்டைக் குடைச்சல், முகசந்நி, கட்டுவாதம், மேகம், முட்டுவாதம், ஈளை, சூலை, அனலிலெழும்புண்ணும்போம். (௩௨அ) (௩௨௯)

கர்ப்பூரவல்லியின் குணம்.

காசம் இருமல் சுத்திம சூரிஐயம்
பேசுபுற நீர்க்கோவை பேருங்காண்-வீசுசுரங்
கற்பாறை பொத்து நெஞ்சிற் கட்டுகபம் வாதமும்போங்
கர்ப்பூர வல்லிதனைக் கண்டு.

இ-ள். காசம், இருமல், மசூரி, ஐயம், புறநீர்க்கோவை, சுரம், கபம், வாதமும் போம். (௩௩0)

மூசுமல்லிகையின் குணம்.

விக்கமறுங் காமாலை விட்டோடுஞ் சோபைவிடும்
நீக்கமற விம்மூலை நேரிழையே-வய்க்கும்
விடபாகம் மேகமும்போம் வீரியமுண்டாகும்
படர்மூசு மல்லிகைக்குப் பார்.

இ-ள். விக்கம், காமாலை, சோபை, விஷம், மேகமும், போம் வீரியவிர்த்தி யுண்டாம். (௩௩௧)

ஊசிமல்லிகையின் குணம்.

மாந்தக ணம்பொருமல் வாராது மைந்தர்களுக்
கூர்ந்தேறி ரத்தகணம் ஓடுங்காண்-கூந்தன்முடி
மானே சுரந்தணியும் வாங்காத விக்கமேபோங்
கானூசி மல்லிகைக்குக் காண்.

இ-ள். மாந்தகணம், பொருமல், இரத்தகணம், சுரம், விக்கமும் போம். (௩௩௨)

மிளகரணையின் குணம்.

ஐய மகற்றும் அசிரணவா தம்போ குஞ்
செய்யபித்த சூலைகளைத் தீர்க்குங்காண்-பையவரும்
ஈளை யிரும லிரைப்பும்பீ நசந்தொலைக்கும்
நாளு மிளகரணை நன்று.

இ-ள். ஐயம், அசிரணவாதம், பித்தசூலை, ஈளை, இருமல், இரைப்பு, பீநசமும் போம். (௩௩௩)

நாய்ப்பாகலின் குணம்.

நாய்ப்பாக லின்குணத்தை நன்கு யுரைக்கக்கேள்
வாய்ப்பான பீநசத்தை மாற்றுங்காண்-மாய்ப்பாக
லிங்கமதைச் சுத்திசெய்யும் நேரிற்பா ஷாணத்தைப்
பங்கமறச் சுத்திசெய்யும் பார்.

இ-ள். பீநசம்போம், சாதிலிங்கசுத்தி, பாஷாண சுத்தியும்உண்டாம். (௩௩௪)

பிரண்டையின் குணம்.

பிரண்டையைநெய் யால்வறுத்துப் பின்பரைத்து மாதே
வெருண்டிடா தேற்று விழுங்கில்-அரண்டுவரும்
மூலத் தினவடங்கும் மூலவி ரத்தமறும்
ஞாலத்தி னுள்ளே நவில்.

இதுவுமது.

மாந்தம் வயிற்றுவலி வாயு அதி சாரமுளை
சேர்ந்தமூ லங்கபம்உட் செம்புனற்போக்-கோய்ந்தநடை
யெல்லா மகலும் எழும்பும் அதிகபசி
மல்லார் பிரண்டையுண்டு வா.

இ-ள். நெய்யில்வறுத்து அரைத்துண்டால், மூலத்தினவு, மூலரத்தம், மாந்தம், வயிற்றுவலி, வாய்வு, அதிசாரம், முளைமூலம், கபம், இரத்தப்போக்கு, ஓய்ந்தநடையும் போம், அதிகபசி உண்டாம்.

களிப்பிரண்டையின் குணம்.

ஐயமறும் பித்தம் அணுகாம லோடிவிடுந்
தையலார் போகமிகச் சாருங்காண்-பையக்

காப்பான் விலகுங் கடிசிலந்தி யும்போம்
உரப்பாங்க ளிப்பிரண்டை யுண்.

இ-ள். ஐபம், பித்தம், கரப்பான், சிலந்திக்கடியும்போம், போகம் உண்டாம். (கூகூஎ)

தீம்பிரண்டை புளிப்பிரண்டை இவைகளின்குணம்.

தீம்பிரண்டை தன்னூர் செரியாமந் தம்ஆமந்
தேம் பிரைப்பு விக்கல்ஐபந் தின்வாதம்-போம்பலரும்
பார்க்கும் புளிப்பிரண்டை பாண்டுரநோய் குன்மகயம்
போக்குமது சூடாம் புகல்.

இ-ள். தீம்பிரண்டை, செரியாமந்தம், சிதக்கட்டு, இரைப்பு, விக்கல், ஐபம், வாதமும்போம், புளிப்பிரண்டை, பாண்டு, மார்புநோய் குன்மம், கபமும்போம், சூடு உண்டாம். (கூகூஅ)

பேய்ப்பால் சொரியின்குணம்.

பேய்ப்பாற் சொரிபதுதான் பேதிமுதல் வெப்பகற்றும்
வாய்ப்பாத் கடுப்புதிரம் மாற்றுங்காண்-போய்ப்பாயந்
தருவாம ருள்ளாக்குந் தங்கியிற் கண்மாதே
பொருவர் பயித்தியம் போக்கும்.

இ-ள். பேதி, வெப்பம், உதிரக்கடுப்பு, பைத்தியமும்போம். ()

குதிரைவாலியின்குணம் இறவேமிரியார்கூந்தல்.

கடுப்பு கழிச்சல் கனன்றசுர தாகம்
இடுப்புவலி வாதம் இவற்றோ-டடுப்ப
விதிரைவா வென்றழைக்கும் மேகமும் போகுங்
குதிரைவா லிக்குக் குலைந்து.

இதுவுமது.

காசம் பருப்படுவன் கண்மபக்கம் ஈளையொடு
வாசங் கமழ்குழலாய் மாந்தமும்போம்-பேசத்
தரியாது வாதகபந் தானே சொறிபோம்
மிரியார்கூந் தற்கு விரைந்து.

இ-ள். கடுப்பு, கழிச்சல், சுரதாகம், இடுப்புவலி, வாதம் மேகம் காசம், பரு, படுவன், கண்மபக்கம், ஈளை, மாந்தம், வாதகபம், சொறியும்போம், நடுக்கம் உண்டாம். (கூசo)(கூசக)

பவளக்குன்றிக்கொடியின் குணம்.

பவளக்குன் றிக்கொடிக்குப் பற்றிநின்ற மேகங்
கவிழிரத்த பித்த கயமும்-நவமாஞ்
சொறிகரப்பன் புண்சிரந்தி தோலார் கடுவன்
மறுகரப்பன் போமே மலைந்து.

இ-ள். மேகம், இரத்தபித்தகயம், சொறி, கரப்பான், புண், சிரந்தி, கடுவன், மறுகரப்பானும்போம். (௩௪௨)

முசுட்டையின்குணம்.

மாதே முசுட்டையது வாதமொடு ஐயத்தைத்
தீதே புரிநீரைத் தீர்க்குங்காண்-வேதனைசெய்
வன்மலந்தைத் தள்ளும் வறட்சி சொறிசிரங்கைச்
சன்மமறப் போக்கிவிடுஞ் சாற்று.

இ-ள். வாதம், ஐயம், கெட்டநீர், மலக்கட்டு, வறட்சி, சொறி சிரங்கும்போம். (௩௪௩)

பொன்முசுட்டையின் குணம்.

வாதமொடு பித்தத்தை மாற்றுமே மாநிலத்திற்
சீத மகற்றுந் தினவடக்கும்-மாதேகேள்
உண்டிக்கும் வாசனையாம் ஓங்கி வளரனலைக்
கண்டிக்கும் பொன்முசுட்டை காண்.

இ-ள். வாதம், பித்தம், சீதம், தினவு, அனலும்போம், வாசனை உண்டாம். (௩௪௪)

முடக்கற்றான்குணம்.

சூலைப்பிடிப்பு சொறிசிரங்கு வன்கரப்பான்
காலைத் தொடுவாய்வுங் கன்மலகுஞ்-சாலக்
கடக்கத்தான் ஓடிவிடுங் காசினியை விட்டு
முடக்கற்றான் றன்னை மொழி.

இ-ள். சூலைப்பிடிப்பு, சொறிசிரங்கு, கரப்பான், குருக்குவாயு, மலச்சிக்கலும்போம். (௩௪௫)

கொல்லங்கோவையின்குணம்.

சூலைபான் மேகதிரி தோஷம் அக்கி வெம்புகண்ட
மாலை குடலினவலி மாகுஷ்டம்-ஆலவிஷம்

உட்கரப்பான் மெய்பரிப்பும் உண்டோகோல் லங்கோவை
கைக்கு விருக்கவின்னுங் காண்.

இ-ள். சூலே, பாண்டு, ஊதை, திரிதோஷம், கொப்பிளப்புடை, கண்டமாலே, குடல்வலி, குஷ்டம், மகாவிஷம், கரப்பான், மெய்யரிப்பும்போம். (௩சசு)

நரிப்பயற்றங்கொடியின்குணம்.

நரிப்பயற் றங்கொடிக்கு நாடாது பித்தந்
தரிப்புற்ற ஐயமெல்லாந் தாழும்-இருப்பொழிக்கும்
மேகவெட்டை பித்தவெட்டை மீளாக் கரப்பனிவை
யாகம்விடுத் தோடு மறி.

இ-ள். பித்தம், ஐயம், மேகவெட்டை, பித்தவெட்டை, கரப்பானும்போம். (௩சஎ)

மூக்குறட்டையின்குணம்.

சீதம கற்றுந் தினவடக்குங் காந்திதரும்
வாத வினையை மடிக்குங்காண்-பேதி
கொடுக்குமதை யுண்டாக்காற் கோமளமே பித்தம்
அடிக்குமே மூக்குறட்டையாய்.

இ-ள். சீதம், தினவு, வாதமும்போம், காந்தி, பேதி, பித்தமும் உண்டாம். (௩சஅ)

தே-பொன்னுங்காணியின் குணம்.

காசம்பு கைச்சல் கருவிழிநோய் வாதமனல்
கூசும்பி லீகங்கு தாங்குரநோய்-வாதமனல்
என்னுங்கா ணிப்படிவ மேமமாஞ் செப்பலென்னைப்
பொன்னுங்கா ணிக்கொடியைப் போற்று.

இ-ள். காசம், கண், புகைச்சல், கருவிழிநோய், வாதம், அனல், பிலீகம், குதாங்குரநோயும் போம், பொன்னிறமுண்டாம். (௩சகூ)

அம்மான்பச்சரிசியின்குணம்.

காந்தல் விரணமலக் கட்டுமே கந்தடிப்புச்
சேர்ந்த தினவிவைகள் தேசம்விட்டுப்-பேர்ந்தொன்றுப்
ஓடுமம்மான் பச்சரிசிக் குண்மை யினைத்துடனே
கூடுமம்மா னைத்தகன்னுப் கூறு.

இ-ள். காந்தல், இரணம், மலக்கட்டு, மேகத்தடிப்பு, தினவும் போம். (கூரு௦)

பொடுதலையின் குணம்.

பொடுதலையின் பேருரைத்தால் போரமப்போக்கும்
அடுதலைச்செய் காசமும் அடங்குங்-கடுகிவரு
பேதியொடு சூலைநோய் பேசரிய வெண்மேகம்
வாதமும்போ மெய்யுரக்கும் வாழ்ந்து.

இ-ள். சிதப்போக்கு, காசம், பேதி, சூலை, வெண்மேகம், வாதமும்போம், தேகம்பலக்கும். (கூருக)

கொத்தான்குணம்.

சித்த ரறிவார் செறிகுழலே நீகேளாய்
கொத்தான் மிக்குளிர்ச்சி கொண்டக்காற்-சுத்தப்
பிறமேகம் உட்கிரிச்சம் பித்தம் இளைப்பும்
அறுமே தவறு தறி.

இ-ள். பிரமேகம், உட்கிரிச்சம், பித்தம், இளைப்பும்போம், குளிர்ச்சியுண்டாம். (கூருஉ)

நல்லநெருஞ்சிலின் குணம்.

நல்ல நெருஞ்சிலது நாளுங்கி ரிச்சரத்தை
வல்ல சரம்அனலை மாற்றுங்காண்-மெல்லியிலே
மாநிலத்தில் கல்லடைப்பும் வாங்காத நீர்க்கட்டுங்
கூனுறுமெய் வாதமும்போக் கும்.

இதுவுமது.

மேகவெட்டை நீர்ச்சுருக்கு வீறுதிரி தோஷம்புண்
வேகசுர தாகவெப்பும் விட்டொழியும்-போகந்
தருஞ்சின் டீகலைமொழித் தையலே நல்ல
நெருஞ்சி லதனை நினை.

இ-ள். கிரிச்சரம, சுரம், அனல், கல்லடைப்பு, நீர்க்கட்டு, கூன்வாதம், மேகவெட்டை, நீர்ச்சுருக்கு, திரிதோஷம், புண், தாகசுரம், வெப்பும்போம், போகமுண்டாம். (கூருங)(கூருச)

யானைநெருஞ்சிலின் குணம்.

மேகத்தைப் போக்கிவிடும் வெண்குஷ்டந் தானொழிக்குந்
தேகத்திற் கல்லடைப்பைத் தீர்க்குங்காண்-நாகத்தாந்

தேனையரும் பாகைத் திருத்துங் கிளிமொழியே
யானை நெருஞ்சி லது.

இதுவுமது.

யானைநெருஞ்சி லதுசி தளமாகும்
மானே யெலும்புருக்கி மாற்றுங்காண்-மேனிதனில்
உள்ள எரிச்சல் உழலையுள் தாகமொடு
தள்ளுபித்த மும்போக்குந் தான்.

இ-ள். மேகம், வெண் குஷ்டம், கல்லடைப்பு, எலும்புருக்கி, உள்ளெரிச்சல், உழலை, தாகம், பித்தமும்போம், சீதளம் உண்டாம். (௩௫௫) (௩௫௬)

செப்புநெருஞ்சிலின் குணம்.

செப்பிநெருஞ்சில் திரிதோஷம் போக்கிவிடும்
வெப்புமுதலனைத்தும் விட்டுங்காண்-செப்பரிய
சுக்கிலமே கம்போக்குந் தொல்லை யனல்மாற்றும்
மிக்கு மருந்தூணி வின்.

இ-ள். திரிதோஷம், வெப்பம், சுக்கில மேகம், அனலும் போம். (௩௫௭)

தே-பேய்ப்புடலின்குணம்.

பித்தசுரஞ் சீதசுரம் பிரிக்குங்காமாலை
யுற்றம ருரியுமற்றுக-நித்தியமுங்
காய்ப்புடலை யுண்ணக் கவிழ்கின்ற பித்தமும்போம்
பேய்ப்புடலை யுண்பாரைப் பேணி.

இ-ள். பித்தசுரம், சீதசுரம், காமாலை, மருரி, தாகம், பித்தமும் போம். (௩௫௮)

தே-வல்லாரையின் குணம்.

அக்கரநோய் மாறு மகலும் வயிற்றிழவு
தக்கவிரத்தக்கடுப்புத் தானேகும்-பக்கத்தில்
வல்லாரை யும்அறும்தென் றேயுரைத்துநன்மனையுள்
வல்லாரை யைவளர்த்த வை.

இ-ள். அச்சரம், வயிறுகழிச்சல், இரத்தக்கடுப்பும்போம். ()

தே-கையாந்தகரையின் குணம்.

குறங்கம்மற்காமாலை குட்டமொடுசோகை
யுற்பாண்டு பன்னோ யொழிவு - சிறந்சொன்ன

மெய்யாந் தகரையொத்த மீளியுண்ணு நற்புலத்துக்
கையாந்த கரையொத்தக் கால்.

இ-ள். குரல்கம்மல், காமாலை, குஷ்டம், சோபை, பாண்டு, பல், நோயும்போம். (௩௬௦)

பொற்றலைக்கையாந் தகரையின் குணம்.

பொற்றலைக்கை யாந்தகரை பொன்னிறமாக் கும்முடலை
சுத்தமுறக் கட்குச்சு கங்கொடுக்குஞ்-சிற்றிடையாய்
சிந்தூரங் கட்டாகுஞ் சிந்தை நனைத்துலக்கும்
உந்திவளர் குன்மமொழிக் கும்.

இ-ள். தேகம், பொன்னிறம், கண்தெளிவு, அறிவும் உண்டாம் சரக்குகள் செந்தூரமாகும்-குன்மம்போம். (௩௬௧)

விஷ்ணுகிராந்தியின் குணம்.

செய்யா விஷ்கிராந்தி தீராதவல்லசுரத்
தைய மறுக்கும் அனல்தணிக்கும்-வெய்யகப
காச இருமலையுங் கட்டறுக்கும் வாதத்தால்
ஊசலா டும்பிணிபோக் கும்.

இ-ள். தீராதசுரம், ஐயம், அனல், கபம், காசம், இருமல், வாதவியாதிகளும்போம். (௩௬௨)

கொட்டைப்பாசியின் குணம்.

மேக மறுந்தீபனமாம் வெஞ்சுரமும் ஏகிவிடுந்
தேகமதில் தேமலினஞ் சேருமோ-பாகுமொழி
மின்னே வெகுகுணஞ்செய் மென்கொட்டைப் பாசியினல்
துன்னுகரப் பானும்போஞ் சொல்.

இதுவுமது.

மிக்குகக்கு வானகனும் வெய்ய கிரந்தியறுந்
தக்கஐய வாதந் தணியுங்காண்-மிக்ககிலின்
மட்டைப்பாய்ச் சுங்கூந்தன் மாதே யுலகத்திற்
கொட்டைப்பா சிப்பெயரைக் கூறு.

இ-ள். மேகம், சுரம், தேமல், கரப்பான், கக்குவான், கிரந்தி ஐயம், வாதமும்போம், தீபனம் உண்டாம். (௩௬௩) (௩௬௪)

காஞ்சம்வாழையின் குணம்.

காஞ்சம்வா ழைக்குழலைக் கண்குழிப்புண் ஆறிவிடும்
ஆறாலும் போகம் அதிகரிக்கும்-மானேகேள்

ஐயம் விளையும் அனல்தனியும் நீங்காத
பையுநிர மாறுமுன்னிப் பார்.

இ-ள். மூலக்கண்புண், குழிப்புண், அனல், இரத்தபேதியும், போம், போகம், ஐயமும் உண்டாம். (௩௯௫)

சிறுபுள்ளடியின் குணம்.

மாந்தகணம் போராமம் வன்மந்தம்நீங்கிவிடும்
ஒப்ந்தமூலபாலும் ஒழுகுங்காண்-மோந்தே
சிறுபுள் ளடிதுதையாத் தேமலர்ப்பூங் கோதாய்
சிறுபுள் ளடியைநிதஞ் சேர்.

இ-ள். மாந்தகணம், ஆமைக்கட்டி, மந்தமும் போம், ஸ்திரிகளுக்குப் பாலுண்டாம். (௩௯௬)

கொடிவகை-முற்றிற்று.

புல்வகை.

சதுரக்கள்ளியின் குணம்.

கரப்பான் சொறியுங் கடியுங் கபமும்
உரப்பான் குன்மம் ஒழிக்கும்-நிறைப்பான்
பேதிதருஞ் சீதமென்ற பேச்சகற்றும் பூவுலகிற்
சாதுசது ரக்கள்ளி தான்.

இ-ள். கரப்பான், சொறி, கடி, கபம், குன்மம், சீதமும்போம் பேதியுண்டாம். (௩௯௭)

நாகதாளிக்கள்ளியின் குணம்.

செந்துவிஷங்கள் செடிவிஷங்களைத்தொலைக்கும்
நொந்திடர்செய் வாதத்தை நூறுங்காண்-முந்தவெகு
வேகமா யிக்கும்படி வேல்விழிமா தேபணைத்த
நகதா ளிக்குணத்தை நாடு.

இ-ள். செந்துவிஷங்கள், செடிவிஷங்கள், வாதமும்போம். ()

பேய்க்கற்றாழை-செங்கற்றாழை-இவைகளின் குணம்.

பேய்க்கற் றாழைக்குப் பெருமேகம் மெய்யெரிச்சல்
ஏய்க்கக்கூடா அழலும் ஏகுங்காண்-தாய்க்குநிக
ராஞ்சிவந்த கற்றாழை பங்கங் குளிர்விக்கும்
பாய்ஞ் சயத்தைப் போன்னுக்கும் பார்.

இ-ள். பேய்க்கற்றாழை, பெருமேகம், மெய்யெரிச்சல், அழலு ம்போம், செங்கற்றாழை, தேகக்குளிர்ச்சியுண்டாம், இரும்பு பொன் னாகும். (௩௬௯)

தே-கற்றாழையின் குணம்.

பொல்லாமே கங்கபம்பு மூச்சூலை குஷ்டரசம்
அல்லார்மத் தம்பகந்த ரங்குன்மம்-எல்லாம்விட்
டேகு மரிக்கு யெரிச்சற் கிரிச்சரமு
மா குமரிக்கு மருண்டு.

இ-ள். மேகம், கபம், புழு, சூலை, குஷ்டம், மூலம், பெண்குறி நோய், குன்மம், அரிப்பு, எரிச்சல், கிரிச்சரமும்போம். (௩௭௦)

கள்ளிமுளையான் குணம்.

வாய்க்குப் புளித்திருக்கு மன்பசியை யுண்டாக்கும்
ஏய்க்குமுடல் வாதத்தை யேருமித்தஞ்-சாய்க்குந்
தெள்ளிய வின்பமொழித் தெய்வ மடவனமே
கள்ளிமுளை யானருந்தக் காண்.

இ-ள். பித்தவாதம்போம், பசியும், புளிப்பும் உண்டாம். ()

அறுகம்புல்லின்குணம்.

அறுகம்புல் வாதபித்த ஐயமோ டீளை
சிறுக அறுக்கும் இன்னுஞ் செப்ப-அறிவுதருங்
கண்ணோ யொடுதலைநோய் கண்புகையி ரத்தபித்தம்
உண்ணோ யொழிக்கு முரை.

இ-ள். வாதம், பித்தம், ஈளை, கண்ணோய், தலைநோய், கண் புகை, இரத்தபித்தமும்போம், அறிவு உண்டாம். (௩௭௨)

சோதிப்புல்லின்குணம்.

காசம் படலங் கருவிழித்தோ ஷம்பில்லம்
பூசாந்தி ரஞ்சதைவெண் பூக்கிரன்-கூசலென
ஓதியவிந் நோய்முழுதும் ஒண்விழியை விட்டகலுஞ்
சோதியெனும் புல்லுக்குச் சொல்.

இ-ள். காசக்கண், கண்படலம், கண்பில்லம், கண்சதைவளர்தல் கண்பூவிழுதல், சுக்கிரன், கண்கூசலும்போம். (௩௭௩)

தருப்பைப்புல்லின்குணம்.

தோடஞ் சிறியவிஷஞ் சோராக்க பப்பெருக்கஞ்
சாடுஞ் சகலசுரந் தாகமிவை-யோடும்
அரிப்பு மகலும் அடல்வேள்வி-யோடும்
தருப்பையெனும் புல்லுக்குத் தான்.

இ-ள். தோஷம், சிறியவிஷம், கபப்பெருக்கம், சகலசுரம், தாக ம், அரிப்பும் போம், வேழ்விகளுக் காகும். (௩எச)

மாந்தப்புல் காவட்டம்புல் இவைகளின்குணம்.

மாந்தப்புற் பேதிகட்டு மந்தம் அசிரணத்தைச்
சாந்தி செய்யும் வந்தசுரத் தைப்போக்கும்-வந்திழையே
காவட்டம் புற்குக் கணமாந்தம் பேதியறும்
நாவொட்டிக் காய்ச்சலும்போ நாடு.

இ-ள். மாந்தப்புல், மந்தம், அசிரணம், சுரமும்போம், பேதி கட்டுண்டாம், காவட்டம்புல், கணமாந்தம், பேதி, தாகசுரமும் போம். (௩எரு)

பிரசப்புல்லின்குணம்.

பிரசப்புல் லுண்டாயிற் பேர்ந்துவிடு மாந்தமெல்லாம்
பிரசமுந் தீரும் பெருமூலந் - தானொழியும்
ஐய மகன்றுவிடும் அக்கரநோய் நிற்காதே
மெய்யா யிதனை விளம்பு.

இ-ள். மாந்தங்கள், பிரசம், மூலம், ஐபம் அச்சுரமும்போம்.

வாசினைப்புல்லின் குணம்.

வாசனைப்புல் வாதபித்த மாற்றுவதுமல்லாமற்
சூசனையாய் வந்த சுரம்போக்கும்-பேசரிய
ஐயம றுக்கும் ரோசகத்தை விண்ணேற்றுந்
துய்யபசி யைக்கொடுக்குஞ் சொல்.

இ-ள். வாதபித்தம், சுரம், ஐபம், அரோசகமும் போம் பசியு ண்டாம். (௩எஎ)

பேய்ப்புல்லின் குணம்.

இரத்தரோ கம்போம் எவிவிஷம்போம் மெய்யில்
உறத்தகின்ற குலை யொழியுங்-கறுத்தஅளி

பேய்ப்புற்ற கண்ணு மெழில்வரைவா யுண்டான
பேய்ப்புல்லைக் கண்டறிந்த பேர்க்கு.

இ-ள். மார்புநோய், எலிவிஷம், சூலையும் போம். (௬௭௮)

புல்வகை-முற்றியது.

மரத்தின்சமூலவகை.

அரசமரத்தின் சமூலகுணம்.

அரசவேர் மேல்விரணம் ஆற்றுமவ் வித்து
வெருவவருஞ் சுக்கிலநோய்வீட்டுங்-குறள்வறல்வி
தாகமொழிக் குங்கொழுந்து தாதுதரும் வெப்பகற்றும்
வேகமுத்தோ ஷம்போகும் மெய்.

இ-ள். வேர், விரணத்தையாற்றும், வித்து, சுக்கிலநோயைப் போக்கும், கொழுந்து; தாகம், வெப்பு, முததோஷமும் போம், தாது விர்த்தியுண்டாம். (௬௭௯)

ஆலமரத்தின் சமூலகுணம்.

சொல்லுகின்ற மேகத்தைத் துஷ்ட அகக்கடுப்பைக்
கொல்லுகின்ற சீரிழிவைக் கொல்லுங்காண்-நல்லாலின்
பாலும் விழுதும் பழமும் விதையும்பூவும்
மேலும் இலையுமென விள்.

இ-ள். பால், விழுது, பழம், விதை, பூ, இலை, இவைகளால், மேகம், அகக்கடுப்பு, சீரிழிவு, வாயச்சரமும்போம். (௬௮௦)

பூவரசமரத்தின்சமூலகுணம்.

நூறுண்டு சென்றதொரு நூண்பூ வரம்வேர்
தூறுண்ட குஷ்டத்தொ லைக்குங்காண்-வீறிப்
பழுத்த இலை விதை பூ பட்டை யிவைகண்டாற்
புழுத்தபுண் விரோசனமும் போம்.

இதுவுமது.

குட்டங் கடிசூலை கொல்லும் விஷபாகக்
துட்டம கோதாமுஞ் சோபையொடு-கிட்டிமெய்யில்
தாவுகரப் பான்கிரந்தி தன்மேகம் போக்கிவிடும்
பூவரசங் காய் பட்டை பூ.

இ-ள். நார்வருடம் சென்றமரத்தின்வேர, குஷ்டத்தைப் போக்கும், பழுத்தயிலை, விதை, பூ, பட்டை, காய், இவைகளால், புழுத்தபுண், பேதி, குஷ்டம், கடி, குலை, விஷப்பாகம், மகோதரம், சோபை, கரப்பான், கிரந்தி, மேகமும்போம். (௩அ௨)

இலந்தைமரத்தின் சமூலகுணம்.

வேருக்கா யாசம் விலகும் பசியுண்டாஞ்
சிரோத் திடுஇலைக்குச் சிழ்மூலஞ்-சோரிவிழல்
மேவெரிச்ச லுங்கடுப்பு மேகபித்த மும்போகுந்
தாவமதில் வாழுமிலந் தை.

இ-ள். வேருக்கு, ஆயாசம், போம், பசியுண்டாம், இலைக்கு, சீழ்மூலம், இரத்தம், விழல், எரிச்சல், கடுப்பு, மேக பித்தமும் போம். (௩அ௩)

நருவிலிமரத்தின்சமூலகுணம்.

நருவலியி லைக்கிரைப்பு நாசம்வேர்க்கு
மருவில் எலும்புருக்கி மாறும்-நருவிலியின்
தன்பழ மிரத்தபிஞ் சார்மேக முந்திர்க்கும்
இன்புறயா வர்க்கு மிசை.

இ-ள். இலைக்கு, இரைப்பும், வேருக்கு, எலும்புருகிப் போம், பழத்துக்கு, இரத்தபித்தம், மேகமும்போம். (௩அ௪)

நணாமரத்தின் சமூலகுணம்.

பட்டைகரப்பனொடு பாரச்சி லேஷ்மசுரம்
ஒட்டிநின்ற புண்கிரந்தி யொட்டுங்காண்-மட்டலரை
ஏந்து நணாவின் இலைமந்தத் தீர்த்துநல்ல
காந்திதரு மேகமடுக் காண்.

இ-ள். பட்டைக்கு, கரப்பான்,சிலேஷ்டமசுரம்,புண், கிரந்தியும் போம், இலைக்கு, மந்தம், மேகமும்போம், காந்தியுண்டாம். (௩அ௫)

முருங்கைமரத்தின் சமூலகுணம்.

பிஞ்சால் திரிதோஷம் பெரும்பூ வால்போக
உஞ்சவிழிக் குக்குளிர்ச்சி யுஞ்சேரும்-விஞ்சிலைவெப்
பாற்றுந்தோல் நஞ்சறுக்கும் அவ்வேர்வாதச் சினத்தை
யாற்று முருங்கையி னது.

இ-ள். பிஞ்சால், திரிதோஷம்போம், பூவால், போகம், விழிகுளிர்ச்சியும் உண்டாம், இலை, வெப்பும், தோல், விஷத்தையும், வேர், வாதகோபத்தையும் போக்கும். (௩அசு)

காட்டுமுருங்கைமரத்தின் சமூலகுணம்.

தின்றூற் கசப்பாகுந் தீயாங் கொடுவிஷத்தைக்
கொன்றுவிடுங் கட்குங் குளிர்ச்சிதரும்-என்றும்ஐயம்
ஓட்டும் வேர் பூஇலைகாய் உற்றபிசினும்பிஞ்சுங்
காட்டுப் புனமுருங்கை காண்.

இ-ள். வேர், பூ, இலை, காய், பிசின், பிஞ்சு, இவைகளைத் தின்றூற் கசப்பாகவிருக்கும், கொடியவிஷம் ஐயமும்போம், கண்குளிர்ச்சியுண்டாம். (௩அஎ)

பசுமுன்னைமரத்தின்குணம்.

முன்னைவேர் வாதம் முதிரேப்பந் தான்போக்கும்
அன்னமிறக்கும் அதன்இலைதான்-சொன்ன
இயல்வாதம் என்பதையும் இல்லையெனச்செய்யும்
கயல்பொருவுங் கண்ணுய் கருது.

இ-ள். வேர்க்கு வாதம், ஏப்பமும்போம், போசனப்பிரியம், உண்டாம், இலைக்கு, வாதம், அய-ம் போம். (௩அஅ)

மாதுளைமரத்தின் சமூலகுணம்.

மாதுளைவேர் பிஞ்சிவைக்கு வாந்தி அதி சாரம்போந்
தாதுவுமாம் அக்கனிக்குத் தாகம்போஞ்-சூதைநிகர்
வன்னமுலை யாய்இலை காய் மாமலர்க ளுக்குமுணஞ்
சொன்னவை யெலாம் போகுஞ் சொல்.

இ-ள். வேர், பிஞ்சு, இவைகளுக்கு, வாந்தி, அதிசாரமும்போம் தாதுஉண்டாம், பழத்துக்கு, தாகம்போம், இலை, காய், பூ, இவைகளுக்கும் மேற்சொன்ன குணந்தான். (௩அகூ)

வாழைமரத்தின் சமூலகுணம்.

நற்கதலிக் கந்தம்அனல் கல்குந்தண் டோகுடலிற்
சிக்கு மயிர் தோல் நஞ்சிந் தீர்த்திடுங்காண்-தொக்குறுபூ
மேகமொழிக் கும்பிஞ்சால் வெங்கடுப்பேகுங் காயால்
தேகமுழுக் கக் கலக் தேர்.

இ-ள். கிழங்கு, அனல்உண்டாம், தண்டு, குடலில்தோல், மயிர், சிக்கலும், நஞ்சும்போம், பூ, மேகம்போம், பிஞ்சு, கடுப்பும்போம், காய், வாய்வு, உண்டாம். (ஙகூ0)

நாட்டுவாழை கருவாழை இவைகளின் சமூலகுணம்.

நாட்டுக் கதலியது நாளுமது வர்ப்பதனால்
ஏட்டுபித்தம் ஐயஞ் செருக்குங்காண்-நாட்டுகரு
வாழை திரிதோஷ மாற்றும் அதன்கிழங்கால்
ஆழுஞ் சுரகுருந்து வம்.

இ-ள். நாட்டுவாழை, பித்தம், ஐயம்உண்டாம், துவர்ப்பாகவிருக்கும், கருவாழை, திரிதோஷப்போம், இதன்கிழங்கால் சுரம், உண்டாம். (ஙகூக)

மரத்தின்சமூலவகை முற்றிற்று.

செடியின் சமூலவகை.

ஆவாரைப்பஞ்சாங்கத்தின்குணம்.

மேகத்தினாலே விளைந்தசலம் வெட்டையனல்
ஆகத்தின் புண்ணோ டருங்கிரணி-போகத்தான்
ஆவாரைப் பஞ்சங்கொள் அஸ்திசுரந் தாகமும்போம்
பூவாரைக் கண்மடமாதே.

இ-ள். இலை, பூ, வித்து, பட்டை, வேர், இவைகளால், நீரிழிவு, வெட்டை, அனல், புண், கிராணி, அஸ்திசுரம், தாகமும்போம். ()

சங்கஞ்செடியின் சமூலகுணம்.

விக்கல் கரப்பான் விதாகங் கிரந்திகுன்மம்
மைக்கமிகு குலைவாய் வோடுபித்தந்-தாக்குவிஷம்
விடுமோ கண்துலக்கும் வீசுபசிரத்தம்உண்டாங்
கூறுசங்கம்வேர் இலைகட்கு.

இ-ள். வேர், இலை, இவைகளுக்கு, விக்கம் கரப்பான் விதாகம் கிரந்தி, குன்மம்; குலைவாய்வு, பித்தம், விஷமும்போம், கண்துலக்கம், பசி, இரத்தமும்உண்டாம். (ஙகங)

கண்டங்கத்திரியின் சமூலகுணம்.

வேர்இலை பூகாய்பழம்அவ்வித்தும் அதன்பட்டையுமிவ்
வூரி லிருக்க வுடற்கனப்பும்-நீராய்
வரும்பீந சங்கயஞ்சு வாசமுந்தங்காதே
அருங்கண்டங் கத்தரியுளார்.

இ-ள். வேர், இலை, பூ, காய், பழம், வித்து, பட்டை, இவைகளால், உடல்கனப்பு, நீர்ப்பீநசம், கயம், சுவாசமும்போம். ()

தே - நாயுருவின் சமூலகுணம்-இதுவே-அபமார்க்கி-வி-ம்.

மலிகாரங்கைப்புள்ள அபமார்க்கி யின்வேரால் வசியமுண்டாம்
இலைமூல உதிரமந்தம் பேதிகபம் வியாவுதந்தி யிறங்குமேகம்
மலையேறும் படிபுரியு மூள்ளரிசி பசிமாற்றும் வன்சமூலம்
பலமாதர்க் குள்ளழுக்கை நீக்கும்வங்க சிந்தூரம் பண்ணுமாதோ.

இ-ள். காரம், கசப்புமுள்ள, வேரால், வசியம், உண்டாம், இலையால், மூலஉதிரம், மந்தம், பேதி, கபம், வியர்வு, தந்திமேகமும்போம், அரிசியால் பசிபோம், சமூலம், மாதர்சூதக அழுக்குப்போம், வங்கசிந்தூரம் உண்டாம். (௩௬௫)

செந்நாயுருவின் சமூலகுணம்-வெண்பா.

ஓதமுறு சோபை யுயர்பாண்டு வைப்போக்குந்
தீதறுகா மாலைநோய் தீர்க்குமினூர்-சூதகநீர்
பொய்ப்புறுகா லத்தனைப் போக்குவிக்குங் காரமொடு
கைப்புறுசெந் நாயுருவி காண்.

இ-ள். சோபை, பாண்டு, காமாலை, சூதகமும்போம், காரமும் கசப்புமாகவிருக்கும். (௩௬௬)

மணத்தக்காளியின் சமூலகுணம்.

காய்க்குக் கபந்தீருங் காரிகையே யவ்விலைக்கு
வாய்க்கிரந்தி வேக்காடு மாறுங்காண்-தீக்குள்
உணக்கிடு வற்றல் உறுபிணியோர்க் காகும்
மணத்தக்கா ளிக்குள்ள வாறு.

இ-ள். காய்க்கு, கபம்போம், இலைக்கு, வாய்கிரந்தி, வேக்காடும் போம், வற்றல், பிணியாளருக்காகும். (௩௬௭)

செடியின் சமூலவகை-முற்றியது.

—(-;*;-)—

கொடியின் சமூலவகை.

தே-தூதுளையின் சமூலகுணம்வி-ம்.

தூது பத்திரி யூண்சுவை யாக்கும்பூ
தாது வைதததழைப் பித்திடுங் காயது
வாத பித்தக பத்தை மாற்றும்வேர்
ஓதும் வல்லிபன் னோயுமொழிக்குமே.

இ-ள். பத்திரி, உணவுக்குச்சுவையுண்டாம், பூ, தாதுபுஷ்டியுண்டாம், காய், வாதபித்தம், கபமும், போம், வேர், பல்நோய் போம். (௩௬௮)

சுரையின் சமூலகுணம். வெண்பா.

சுரையிலையோ சோபையொடு தோன்றுநீர்க் கட்டைத்
தரையிலேயர் வைக்காமற் சண்ணுஞ்-சுரையினது
தண்டோபித் தத்தைத் தரிக்கவொட்டா தடிக்குங்
கண்டோ ருரைப்பார்கள் காண்.

இ-ள். இலை, சோபை, நீர்க்கட்டும் போம், தண்டு, பித்தம் போம். (௩௬௯)

நாலையின்சமூலகுணம்.

நாளையில தன்குணங்கேள் நாரியர்வயிற்றில்
உருளிரத்தக் குன்மம் ஒழிக்கும்-நாளைக்
கிழங்குக்கு மேகமொடு கிறுகரப்பான்
புழுக்குபுண் மூலமிவை போம்.

இ-ள். இலை,இஸ்திரீகள்வயிற்றில் உருளுகிறஇரத்தகுன்மம்போம், கிழங்கு, மேகம், கரப்பான், புண், மூலமும்போம். (௩௭௦)

கொடியின் சமூலவகை - முற்றிபது.

மரத்தின் கிழங்கு வகை.

பனங்கிழங்கு-ஒடிகிழங்கு-இவைகளின் குணம்.-

பனங்கிழங்கல் அத்திவெப்பும் பன்மேக மூமபோம்
இனங்குளிர்ச்சி யோடழகு மெய்தந்-தினநமையும்
புண்ணுங் கரப்பானும் பூரிக்கு மெய்யில் உரம்
நண்ணும் ஒடிகிழங்கினால்.

இ-ள். பனங்கிழங்கு, அஸ்திபனல், பலமேகமும்போம், குளிர்ச்சி, அழகும்உண்டாம், ஒடிகிழங்கு, நமைசொறி, புண், கரப்பான், பலமும் உண்டாம். (௬0௨)

நிலப்பனங் கிழங்கின்குணம்.

மேக வனல்தணியும் வெண்குஷ்டந் தான்விலகும்
போக மிகவுமுறும் பொற்கொடியே-போகாத
சூலைமே கங்களொடு துன்னுகரும் புள்ளியும்போஞ்
சாலைநி லப்பனைக்குத் தான்.

இ-ள். மேகவனல், வெண்குஷ்டம், சூலை, மேகங்கள், கரும்புள்ளியும்போம், மிகுபோகம் உண்டாம். (௬0௩)

மரவள்ளிக் கிழங்கின்குணம்.

பித்தங் கலந்த பெருவாய்வை யுண்டாக்கும்
மெத்த அனல் மந்தத்தை மேலெழுப்புஞ்-சுத்த
இரவள்ளிக் கொண்டகுழ லேந்திழையே யிந்த
மரவள்ளிக் கந்தமென வை.

இ-ள். பித்தவாயு, அனல், மந்தமும்உண்டாம். (௬0௪)

மரத்தின்கிழங்குவகை முற்றிற்று.

செடியின் கிழங்குவகை.

மெருகன்கிழங்கின்குணம்.

மெருகன் கிழங்கதுதான் மேகத்தைப் போக்குந்
துருவுகுன்மம் மூலந் துடைக்கும்-பெரும்ஈளை
அஸ்திசுரம் ஐயமறுக்கும் அங்கங் குளிர்விக்கும்
அத்திமூலை மாதே யறி.

இ-ள். மேகம், குன்மம், மூலம், ஈளை, அஸ்திசுரம், ஐயமும்போம், தேகக்குளிர்ச்சி யுண்டாம். (௬0௫)

அமுக்கிராக்கிழங்கின்குணம் இதுவே அசுவகந்தி.

கொஞ்சந் துவர்ப்பாங் கொடியகபஞ் சூலையரி
மிஞ்சுகரப் பான்பாண்டு வெப்பதப்பு-விஞ்சி
முசுவுறு தோஷமும்போ மேகம்அன லுண்டாம்
அசுவகந் திக்கென் றறி.

இ-ள். கயம், சூலை, கரப்பான், பாண்டு, வெப்பு, அதப்பு, ஆயாசதோஷமும்போம், மோகமும் அனலும் உண்டாம். (ச0கூ)

பேதிக்கிழங்கின்குணம் இதுவே ரேவல்சின்னி.

பேதிதனை யுண்டாக்கும் பித்தந் தனையெழுப்புந்
தோடக் குடலதனைச் சுத்திசெய்யும்-ஓதியகால்
பேதிக்குந் தாதுவைப்பெ ருக்கிவிடும் எப்போதும்
பேதிக்கி ழங்கதனைப் பேசு.

இ-ள். பேதி, பித்தம். குடல் சுத்தி, தாதுபெருக்கும் உண்டாம். (ச0எ)

சேவகனார்கிழங்கின்குணம்.

கபரோகந் தன்னைக் கடலில்விழச் செய்யும்
அபமிருத்து வாம்விஷத்தை யாற்றும்-இபமுலவுங்
காவக நாடக் கருங்குயிலே கண்டுரைத்த
சேவக னார்கிழங்க தே.

இ-ள். மேகம், உள்ளுருக்கு வெட்டை, அனல் மூலமும்போம், உடல்பூரிப்பு உண்டாம். (ச0அ)

முள்ளங்கிக்கிழங்கின்குணம்.

வாதங் கரப்பான் வயிற்றெரிவு சூலைகுடல்
வாதங்கா சம்ஐயம் வன்றலைநோய்-மோதுநீர்க்
கோவைபன்னோய் பல்சிலந்தி குன்மம்இரைப் புக்கடுப்புஞ்
சாவுமுள்ளங் கிக்கந்தத் தால்.

இ-ள். வாதம். கரப்பான், வயிற்றெரிவு, சூலை, குடல்வாதம், காசம், ஐயம், தலைநோய், நீர்க்கோவை; பல்லோய், பல்சிலந்தி, குன்மம், இரைப்பு, கடுப்பும்போம். (ச0கூ)

மஞ்சட்கிழங்கின்குணம்.

பொன்னிறமாம் மேனிப் புலால்நாற்ற மும்போகும்
மன்னு புருஷ வசியமாம்-பின்னியெழும்
வாந்திபித்த தோஷம்ஐயம் வாதம்போந் தீபனமாங்
காந்தமஞ்ச ளின்கிழங் குக்கு.

இதுவுமது.

தலைவலிநீ ரேற்றஞ் சலிபாத மேகம்
உலைவுதரு பீநசத்தி னூடே-வலிசுரப்பு

விஞ்சு கடிவிஷமும் வீறுமிர ணங்களும்போம்
மஞ்சட் கிழங்குக்கு மால்.

இ-ள். புலால்நாற்றம், வாந்தி, பித்ததோஷம், ஐயம், வாதம், தலைவலி, நீரேற்றம், மோகம், பிநசம், வலி, வீக்கம், கடிவிஷம், விரணமும் போம், பொன்னிறம், புருஷவசியம், தீபனமும் உண்டாம். ()

கஸ்தூரிமஞ்சட் கிழங்கின்குணம்.

புண்ணூங் கரப்பானும் போகாக் கிருமிகளும்
நண்ணுமந் தாக்கினியும் நாசமாம்-வண்ணமலர்த்
தொத்தே றளகமின்னே சுக்கிலமும் புந்தியுமாங்
கஸ்தூரி மஞ்சளுக்குக் காண்.

இ-ள். புண், கரப்பான், கிருமி, மந்தாக்கினியும் போம், சுக்கிலமும், அறிவும் உண்டாம். (சகஉ)

மரமஞ்சட் கிழங்கின் குணம்.

அழன்றகண மூலம் அருசி யுடனே
யுழன்ற கணச்சுரமும் ஓடுஞ்-சுழன்றுள்ளே
வீறுசுர முந்தணியும் வீசுமா மஞ்சளுக்குத்
தேறு மொழியனமே செப்பு.

இ-ள். கணமூலம், அருசி, கணச்சுரம், சுரமும்போம். (சகங)

இஞ்சிக் கிழங்கின் குணம்.

இஞ்சிக் கிழங்குக் கிருமல்ஐயம் ஒக்காளம்
வஞ்சிக்குஞ் சந்நிசுரம் வன்பேதி-விஞ்சுகின்ற
சூலையறும் வாதம்போந் தூண்டாத தீபனமாம்
வேலையுறுங் கண்ணாய் விளம்பு.

இ-ள். இருமல், ஐயம், ஒக்காளம், சந்நி, சுரம், பேதி, சூலை, வாதமும் போம், தீபனம் உண்டாம். (சகச)

காறுகருணைக் கிழங்கின் குணம்.

கரப்பான் சிரங்குசொறி காணாக் கிரந்தி
யுரப்பாக்கும் மூலநோ யோட்டும்-நிரைப்பான
மந்தமொடு கோழைதரும் மாறுத் தினவுநல்கும்
அந்தமிகுங் காறுகருணை.

இ-ள். கரப்பான், சிரங்கு, சொறி, காளுக்கிரந்தி, மந்தம், கோழை, தினவும் உண்டாம், மூலரோய் போம். (௪௧௫)

காருக்கருணைக் கிழங்கின் குணம்.

ஞால மதிற்கபரோய் நாடாது வாதமறும்
மூல முளையிரத்தம் முன்பொழியும்-ஓலமிட்டு
மாறுக் கனல்மந்த மாறும்அதி தீபனமாங்
காருக் கருணைதனைக் காண்.

இ-ள். கபரோய், வாதம், முளைமூலம், இரத்தமூலம், கனல், மந்தமும் போம், தீபனம் உண்டாம். (௪௧௬)

காட்டுக்கருணைக் கிழங்கின் குணம்.

மேகமறு காது வெகுதீ பனமாகுந்
தேகமதிற் மூலமுளை சேராதே-போகாச்
சுரதோஷம் போங்கரப்பான் றொன்றும் வனத்திற்
பரவுகரு ணைக்கிழங்காற் பார்.

இ-ள். மேகம், முளைமூலம், சுரதோஷமும்போம், தீபனம், கரப்பானும் உண்டாம். (௪௧௭)

சேம்புக் கிழங்கின்குணம்.

வாதக பத்தையுள்ளே வைத்திருக்குந் தின்றக்கால்
கோதிலாத் தொண்டைதனிற் கோழைகட்டும்-மாதரசே
யுண்மருந்தின் நற்குணத்தை யோட்டுஞ்சேம் புக்கிழங்கு
தண்மேக சாந்தியென்பர் தாம்.

இ-ள். வாதகபம், கோழைக்கட்டு, மேகசாந்தியும் உண்டாம், பத்தியதிற்கு ஆகாது. (௪௧௮)

செடியின் கிழங்குவகை-முற்றிற்று.

கொடியின் கிழங்கு வகை.

பிரப்பங் கிழங்கின் குணம்.

தந்தரோ கத்தைத் தணியாத வாதத்தை
யுந்துகுட் டப்பிடிப்பை யோட்டுங்காண்-வந்து
சுரப்புந் திறப்புமெனக் காட்டுநகை மாதே
பிரப்பங்கி ழங்கதனைப் பேணு.

இ-ள். தந்தரோகம், வாதம், சூலைப்பிடிப்பும்போம். (௪௬௯)

சாறடைக் கிழங்கின்குணம்.

சிதஞ்சலதோஷந் தேமல்த ழும்புகுன்மம்
வாதஞ் சிறுசிரங்கு வன்மேகம்-ஓதரிய
காசமுதல் நோயெல்லாங் காண்சா றடைக்கிழங்கால்
நாசமுறு மென்றே நவில்.

இ-ள். சிதம், சலதோஷந் தேமல்தழும்பு, குன்மம், வாதம், சிறு சிரங்கு, மேகம், காசமுதலாகிய நொயெல்லாமும்போம். (௪௭0)

கோவைக் கிழங்கின்குணம்.

முத்தோஷஞ் சூலைபித்தம் மூடுகுஷ்டஞ் சிக்குவைநோய்
எத்துசுவா சங்கபம்இ ரிப்புநீர்-இத்தனையுங்
கூட்டோ டகற்றுங்கு ளிர்ச்சியொடு காரத்தைக்
காட்டியகோ வைக்கிழங்கு காண்.

இ-ள். முத்தோஷம், சூலை, பித்தம், குஷ்டம், நாவின்நோய், சுவாசம், கபம், மறுமேகமும்போம், குளிர்ச்சி, காரமும் உண்டாம்.

கொல்லன்கோவைக் கிழங்கின் குணம்.

துட்டவிஷம் பாண்டுவெப்பு சூலைவா தங்கிரந்தி
குட்டம் அரிப்பக்கி கோ ன்குடல்நோய்-கெட்டகண்ட
மாலைபோங் கொல்லன்கோ வைக்கிழங்கால் முததோஷ
வேலைபோம் பாரில் விளம்பு.

இ-ள். விஷம், பாண்டு, வெப்பு, சூலை, வாதம், கிரந்தி, குஷ்டம், அரிப்பு, அக்கி, குடல்நோய், கண்டமாலை, முத்தோஷமும் போம். (௪௭௨)

சிந்திற் கிழங்கின்குணம்.

சிந்திற் கிழங்குருந்தத் திபனமாமேகவகை
போந்தவுதி ரப்பித்தம் பொங்குசுர-மாந்தம்
அதிசாரம் வெய்யகணம் ஆம்பலநோ யோடே
கதிவிஷமுங் கெட்டுவிடுங் காண்.

இ-ள். மேகவகை, இரத்தபித்தம், சுரம், மாந்தம், அதிசாரம், கணம், ஆம்பல்நோய், அதிகவிஷமும்போம், திபனம் உண்டாம். ()

பொற்சிந்திற்கிழங்கின்குணம்.

பொற்சிந்தி லின்கிழங்கு போங்கு மதுமேகம்
எச்சுகய ரோகம் இளைப்புவிஷம்-பச்சையாய்
ஓடிரத்த பித்தம் உயர்சுரங்க ளைக்களையுந்
தேடரிய மேனிதருட் சேர்.

இ-ள். மதுமேகம், கயரோகம், இளைப்பு, விஷம், இரத்தபித்தம், சுரங்களும்போம், மேனியுண்டாம். (சஉச)

கருடன் கிழங்கின்குணம்-இதுவே பேய்ச்சீந்தில்.

அரையாப்பு வெள்ளை பகலாக் கொறுக்கை
கரையாத கட்டியிவை காணர்-வரையில்
திருடரெனக் சொல்லும்விஷஞ் சேர்பாம்பும் அஞ்சுங்
கருடன் கிழங்கதனைக் கண்டு.

இ-ள். அரையாப்பு, வெள்ளை, கொறுக்கை, கட்டி, பாம்புவிஷ மும்போம். (சஉரு)

கூகைக் கிழங்கின் குணம்.

மேனியிடும் வாய்க்கு மிருதுவாம் ஆக்கியுண்ணத்
தானிருமல் வெப்பதிக தாகமிவை-ஏனிருக்கும்
அம்பே ரிளங்கிழங்கி னியாவர்க்கு மாமணப்பூங்
கொம்பேகூ கைக்கிழங்கைக் கூறு.

இ-ள். இருமல், வேப்பு, தாகமும் போம், மேனியுண்டாம். ()

புளிநரளைக் கிழங்கின்குணம்.

புளிநரளை யின்கிழங்கோ பொன்போலச் செம்பைத்
தெளிவாகச் சுத்தியது செய்யும்-வெளியான
மூல முளைபறக்கு முந்துசுவைக் கேதுவுமாங்
கோல மடமயிலே கூறு.

இ-ள். மூலமுளைபோம், செம்புசுத்தி, உண்டாம். (சஉஎ)

மாவலிக் கிழங்கின்குணம்-இதுவே-பருநன்னாரி.

அனலைபதி பித்தத்தை யாற்றும் பசியாம்
அனலையெழுப் புங்கபம றுக்கும்-அனிலத்தாம்
வேகானத் தைத்தணிக்கு மென்கொடியே காட்டில்வளர்
மாசாளிக் கத்தமிது வாம்.

இ-ள். அனல், பித்தம், கபமும்போம், தீபாக்கினி,வாய்வும்உண்டாம். (சஉஅ)

தண்ணீர்விட்டான் கிழங்கின்குணம்.

நீரிழிவைப் போக்கும் நெடுநாட்சு ரத்தையெல்லாம்
ஊரைவிடுத் தோடவு ரைக்குங்காண்-நாரியரே
வெண்ணீர்பெய் சோமநோய் வெட்டை யனல்தணிக்குந்
தண்ணீர்விட் டான்கிழங்கு தான்.

இ-ள். நீரிழிவு, சுரம், சோமநோய், வேட்டை, அனலும், போம். (சஉகூ)

தாமரைக்கிழங்கின் குணம்.

கண்ணுக் கொளிகொடுக்குங் காசபித் தம்போக்கும்
எண்ணுங் குளிர்ச்சிதரும் ஏந்திழையே-புண்ணுகளில்
தூமரைப்புண் ணும்போக்குந் தொந்திக்க டுப்பகற்றுந்
தாமரைக் கந்தமது தான்.

இ-ள். காசம், பித்தம் தவளைப்புண், வயிற்றுக்கடுப்பும் போம் கண்ணொளி குளிர்ச்சியும் உண்டாம். (சஉகூ)

சிவந்த அல்லிக்கிழங்கின் குணம்.

செம்பைக்க ளிம்பகற்றிச் சிந்தூரம் ஆக்கிவிடும்
வெம்புபித்த மேகம் விலகுங்காண்- அம்புவியில்
அல்லிற் கறுத்தகுழ லாரணங்கே நற்சிவப்பாம்
அல்லிக்கி ழங்கென்பது.

இ-ள். பித்தம் மேகமும்போம், செம்பைக்களிம்பகற்றி சிந்தூரஞ் செய்யும். (சஙக)

நெய்தற் கிழங்கின்குணம்.

கண்ணுங் குளிரும்அக்கி காணு து காந்துபித்தம்
எண்ணுந்தோ ஷம்மேகம் ஏகுங்காண்-பெண்ணே
வயிற்றுக் கடுப்பிரத்த மாறுநெய்த லுக்குப்
பயித்தியம்போம் விந்தூறும் பார்.

இ-ள். அக்கி, காந்தல், பித்தம், தோஷம், மேகம், வயிற்றுக்கடுப்பிரத்தம், பயித்தியமும்போம், கண்குளிர்ச்சி, விந்தும் உண்டாம்.

செங்கழுநீர்க்கிழங்கின்குணம்.

கண்ணுங் குளிர்ந்திருக்குங் காசம்போம் பித்தமறும்
எண்ணரிய மேகம் இடையுங்காண்-பெண்மணிகேள்
போங்கமொடு மாதைப்பு ணர்ந்தவழ லுந்தணியுஞ்
செங்கழு நீர்க்கிழங்காற் றேர்.

இ-ள். காசம், பித்தம், மேகம் ஸ்திரிகளால்வந்த அழலும் போம், கண்குளிர்ச்சியுண்டாம். (௩௩௩)

கொட்டிக் கிழங்கின்குணம்.

கொட்டிக் கிழங்கு குளிர்ச்சியென்பார் தேமலுடன்
ஒட்டிநின்ற மேகம் ஒழிக்குங்காண்-வட்டமுலை
மானே யகக்கடுப்பும் வந்தஅழ லுந்தணிக்குந்
தானே யிதைபறிந்து சாற்று.

இ-ள். தேமல், மேகம், அகக்கடுப்பு, அழலும்போம், குளிர்ச்சியுண்டாம். (௩௩௪)

கிட்டிக்கிழங்கின் குணம்.

கிட்டிக் கிழங்கால் கிளர்தீபனமுண்டாம்
எட்டிக் கிழமேகம் ஏகுங்காண்-துட்டஞ்செய்
பித்த சமனமுமாம் பேசில்கப நாசமுமாம்
நித்த மயிலே நிகழ்த்து.

இ-ள். மேகம், கபமும்போம், தீபனம், பித்தஞ்சமனும் உண்டாம். (௩௩௫)

சின்னிக்கிழங்கின் குணம்.

சின்னிக் கிழங்கு சிறுசிரங்கு புண்வளர்க்கும்
உன்னிலது ஊர்ப்பன்றிக் கோவ்வுங்காண்-அன்னமே
மூலம் அறுக்கும்அது மோதுரத்தஞ் சிழ்மாற்றுந்
தால மறியுநிசர் தான்.

இ-ள். சிழ்ரத்தமூலம்போம், சிரங்கு, புண், ஊர்ப்பன்றிக்குண்டாகிய குணமும் உண்டாம். (௩௩௬)

பெருவள்ளிக்கிழங்கின்குணம் இதுவேஆர்வள்ளி.

வாதகபம் பித்தமொடு மாமூலம் வாதகுன்மம்
ஓதுபல நோய்மந்தம் உண்டாகும் போதின்

மருவள்ளிக் கொண்டகுழன் மாதே யுலகிற்
பெருவள்ளி யின்கிழங்காற் பேசு.

இ-ள். வாதகபம், பித்தம், மூலம், வாதகுன்மம், பலநோய், மந்தமும் உண்டாம். (௪௩௭)

சிறுவள்ளிக்கிழங்கின் குணம்.

மந்தமிகுந் தீபனம்போம் மாறாக் கரப்பானுஞ்
சிந்த மிகுகபமுஞ் சேருங்காண்-தொந்தமாய்
மூல முலைவளரும் முட்டைச் சிறுகிழங்கால்
ஏல வளகமின்னே யெண்.

இ-ள். தீபனம்போம், மந்தம், கரப்பான், கபம், முளைமூலமும் உண்டாம். (௪௩௮)

காய்வள்ளிக்கிழங்கின்குணம்-இதுவே-வெற்றிலைவள்ளியாம்.

அக்கினிவெப்பை யடக்குமென்பார் வாதமொடு
தொக்கில்அதி புண்சிரங்கைத் தூண்டிவிடும்-மிக்குபசும்
வேயையுடை தோளணங்கே வெற்றிலையாம் வள்ளியெனுங்
காயையுடை வள்ளியது காண்.

இ-ள். அக்கினிவெப்பும்போம், வாதம், புண், சிரங்கும் உண்டாம். (௪௩௯)

சருக்கரைவள்ளிக்கிழங்கின்குணம்.

உள்ளிற் கொள் நன்மருந்தை யும்முறிக்குஞ் சர்க்கரையாம்
வள்ளிக் கிழங்கதிக மந்தத்தால்-உள்ளில்முளை
மூலம் விலையுதிதம் மோடிரைச்ச லுண்டாகுங்
கோலவயி றுங்கடுக்குங் கூறு.

இ-ள். மருந்துமுறிவு, மந்தம், முளைமூலம், வயிறிரைச்சல்,வயிற்றுக்கடுப்பும் உண்டாம். (௪௪0)

உருளைக்கிழங்கின் குணம்.

(சுபாவம்) குளிர்ச்சியும் வறழ்ச்சியுமாம், (பிரயோசனம்) தடித்த இரத்தமும் அதிக வுணவுமாம், (சௌக்கியம்) தேகபுஷ்டி யுண்டாகும், தும்மலை நிறுத்தும், (வியாதி) மந்திக்கும், தினிப்பைக் குதவாது, காற்றை விளைவிக்கும், (பரிகாரம்) இஞ்சி, போதினா, பழச்சாறு.

கொடியின் கிழங்குவகை-முற்றிற்று.

புல்லின் கிழங்குயலங்க.

அறுகக் கிழங்கின் குணம்.

அழு அழலெல்லா மாறுமுத் தோஷமது
விழு திருக்குநல்ல மேனிதரும்-மாறுக்
கடியமா லங்கலணி காராளக மின்னே
கொடியறுகம் புற்கிழங்கைக் கூறு.

இ-ள். தேக அழல், முத்தோஷமும் போம், நல்லமேனி யுண்டாம். (௪௪௧)

கோரைக்கிழங்கின்குணம்-இதுவே முத்தக்காசு.

சீத சுரந்தீர்க்குஞ் செம்புனல்பித் தம்போக்கும்
வாத சுரந்தணிக்கும் வையகத்தில்-வேதைசெய்ய
வந்த பிணியையெல்லாம் வாட்டும்முத் தக்காசு
கொந்துலவும் வார்குழலே கூறு.

இதுவுமது.

அதிசாரம் பித்தம் அனற்றாகம் ஐயங்
குதிவாதஞ் சோபங் கொடிய-முதிர்வாந்தி
யாரைத் தொடர்ந்தாலும் அவ்வவர்க்கெலாங்குளத்துக்
கோரைக் கிழங்கைக் கொடு.

இ-ள். சீதசுரம், இரத்தபித்தம், வாதசுரம், பலபிணிகள், அதிசாரம், பித்தம், அனல், தாகம், ஐயம், குதிவாதம், சோபம், வாந்தியும்போம். (௪௪௨) (௪௪௩)

மருட்கிழங்கின் குணம்.

தொண்டைக்கட் டையந் தொலையும் மகோதரமும்
பண்டைப்பல் விக்கம் பறக்குங்காண்-கெண்டைவிழி
மானே மருட்கிழங்கால் மாறுமு லங்களெலாந்
தானே பசியெழும்புந் தான்.

இ-ள். தொண்டைக்கட்டு, ஐயம், மகோதரம், பல்விக்கம், மூலங்களும்போம், பசியுண்டாம். (௪௪௪)

வெங்காயக் கிழங்கின் குணம்.

வெப்பமு லங்கிரந்தி விறுரத்த பித்தமுடன்
செப்புநா அக்கரந்தி ராத்தாகம்-வெப்புக்

கடுப்பறும்மந் தஞ்சந்நி காசம்வயிற் றுப்பல்
தடிப்பேறும் வெங்காயத் தால்.

இ-ள். வெப்பம், மூலம், கிரந்தி, இரத்தபித்தம், நாக்கச்சரம், தாகம், வெப்புக்கடுப்பும்போம், மந்தம், சந்நி, காசம், வயிற்றுப்பலு ம் உண்டாம். (௬௬௫)

நரிவெங்காயக் கிழங்கின் குணம்-இதவே-காட்டீருள்ளி.

நஞ்சோடு சீதகபம் நாடா நி ரைப்பும்அறும்
பஞ்சாக மூல பகந்தரம்போய்-பஞ்சணைசேர்
வீட்டுள் ளிருக்கும் விநோத மடமயிலே
காட்டுள்ளி யின்கிழங்கைக் கண்டு.

இ-ள். நஞ்சு சீதகபம், இரைப்பு, மூலகபந்தரமும் போம். ()

தே - சகலகிழங்குகளின் குணம்.

கிழங்குவகை யின்பேரைக் கேட்கின் மூலத்துண்
முழங்கும்வா தத்தின் முரசம்-வழங்குகின்ற
சூரணக்கி ழங்குகளைத் துய்த்தார்பேர் சொல்லிற்
பீரணக்கு டும்பமெங்கே வீள்.

இ-ள். கருணைக்கிழங்குகள் தவிர மற்றக் கிழங்குக ளெல்லாம் வாதம் உண்டாம். (௬௬௭)

புல்லின் கிழங்குவகை-முற்றிற்று.

மரத்தின்வேர்வகை.

வில்வமரத்தின் வேர்க்குணம்.

வில்லுவத்தின் வேருக்கு வீதுகுன்ம வாயுகபஞ்
சொல்லவொணாப் பித்தந் தொடர்சோபை-வல்லகப
தாகசுரம நீரேற்றஞ் சந்நியொடு மெய்வலியும்
வேக மொடுநீங்கு மே.

இதுவுமது.

அக்கினி மந்தம் அரோசியதி சாரம்விக்கல்
நிற்கரிய பித்தசுரம் நீள்வாந்தி-சுட்கரோ
யாதியநோ யேகும் அழகோடு புஷ்டியுண்டாங்
கோதில்வில்வ வேரதனைக் கொள்.

இ-ள். குன்மவாயு, கபம், பித்தம், சோபை, கபதாகசுரம், நீரேற்றம், சந்நி, வலி, அக்கினிமந்தம், அரோசி, அதிசாரம், விக்கல், பித்தசுரம், வாந்தி, சுட்கநோயும் போம், அழகு, புஷ்டியும், உண்டாம். (சசஅ) (சசகூ)

பாதிரிமரத்தின் வேர்க்குணம்.

பாதிரியின் வேர்க்குணந்தான் பாங்கில்மது மேகம்போம்
ஓதுகரப் பான்உழலை யோடிவிடும்-மாதேகேள்
கண்ணெரிவு காதெரிவு கையெரிவு காலெரிவும்
திண்ணமாய்ப் போகு நிசம்.

இதுவுமது.

மேகத்தால் வந்த மிகுபிளவை மாவிரணம்
போகத்தால் வந்த பொருமூலம்-ஆகத்தில்
வந்தசொறி போடுகப வாதமந்த மும்போகும்
கொந்தட்டும் பாடலத்தாற் கூறு.

இ-ள். மதுமேகம், கரப்பான், உழலை, கண்ணெரிவு, காதெரிவு, கையெரிவு, காலெரிவு, பிளவை, விரணம், மூலம், சொறி, வாதகபம், மந்தமும்போம். (சரு0) (சருக)

சண்பகமரத்தின்வேர்க் குணம்.

நீராத வுட்டினத்தைத் தீர்க்குஞ் சுரம்போக்கும்
நேரே பசியெழுப்பும் நிச்சயமே-ஒருங்கால்
பண்புறுகண் தோஷத்தைப் பற்றறுக்கும் வாசமுள்ள
சண்பக மரத்தின்வேர் தான்.

இ-ள். நீராஉஷ்ணம், சுரம், கண்தோஷமும் போம், பசியுண்டாம். (சருஉ)

மாமரத்தின்வேர்க் குணம்.

சீதரத் தப்போக்கைச் சிக்கெனவே தான்பிடிக்கும்
போதவயிற் றுக்கடுப்பைப் போக்குங்காண்-ஓதுகின்ற
வாந்தியையுந் தீர்க்கும்வெளி மாமரத்தின் வேர்ப்பட்டை
பூந்துகின் மாதே புகல்.

இ-ள். வேர், பட்டை யிலைகளால், சீதரத்தம், வயிற்றுக்கடுப்பு வாந்தியும்போம். (சருங)

இலுப்பைமரத்தின் வேர்க்குணம்.

புண்ணும் புரையும்அறும் போதத் துவர்போகும்
எண்ணும் அகக்கடுப்பி ருக்குமோ-பெண்ணேகேள்
நீரிழிவும் ஏகும் நெடுமோகமை மூலத்தாற்
போரடர் கடுப்புரத்தம் போம்.

இதுவுமது.

மந்தம் அரோசிம காசூலே சர்வசுரம்
விந்துநஷ்டங் தாகமொடு மெய்யிளைப்பும்-மூந்த
அலுப்பைபெற் றேகும் அளகளத்திற் காகா
இலுப்பைக்குச் சூடதிக மெண்.

இ-ள். புண்புரை, அகக்கடுப்பு, நீரிழிவு, இரத்தக்கடுப்பு, மந்தம், அரோசி, மகாசூலை, சர்வசுரம், தாது நஷ்டம், தாகம், இளைப்பும் போம், துவர்ப்பாகும், தலைமயிருக்காகாது, சூடதிகம். () (சருடு)

மருதோன்றிமரத்தின் வேர்க்குணம்.

சோணித தோஷமெலாஞ் சொல்லாம லேகிவிடும்
பேணுவர்க்கி ரத்தமொடு பித்தம்போங்-காணு
ஒருதோன்ற லென்னுமத னேதுமெழியின் மாதே
மருதோன்றி வேரால் மறைந்து.

இ-ள். சோணிததோஷங்கள், இரத்விபித்தமும்போம். (சருசு)

வெண்காலிமரத்தின் வேர்க்குணம்.

விம்மு மகோதரமும் மேல்நோக்கு பித்தமொடு
ஜிம்மகி ருஷ்ணதோஷமும்உட் சேருமோ-கம்முகின்ற
கள்ளைப் பெருநீருங் காணுது கைப்பையுறும்
வெள்ளைக் கருங்காலி வேர்க்கு.

இ-ள். மகோதரம், பித்தம், நாக்கைக் கறுக்கச்செய்யுந் தோஷம் மதுமேகமும்போம், கைப்புண்டாம். (சருஎ)

கருங்காலிமரத்தின் வேர்க்குணம்.

கைப்புற் றிருக்குங் கருங்காலி வேர்க்கு
மைப்புழுவும் பாகாம் மதுநீரும்-மெய்க்குளெழு
குஷ்டம்உதி ரப்போக்குங் கூவி பழுதகலும்
மட்டுறுபூங் கோதாய் வழுத்து.

இ-ள். புழு, மதுமேகம், குஷ்டம், உதிரப்போக்கும்போம், கச ப்பாக விருக்கும். (சரு௯)

எட்டிமரத்தின் வேர்க்குணம்.

ஆலவிஷம் ஒக்கும் அருந்தக் கடிதீரும்
ஞாலமதிற் பித்தகுண நாசமாம்-ஆலைக்கோல்
அட்டாயபா காமொழியே யானவிஷ முஷ்டியெனும்
எட்டி மரவே ரிது.

இ-ள். விஷகடி, பித்தகுணமும்போம். (சருசு)

புங்கமரத்தின் வேர்க்குணம்.

வாதக் கடுப்பு மகாமூர்ச்சை தாபசுரம்
வாதகுன்மம் ரத்தத்தால் வந்திடுநோய்-ஓதுகின்ற
புண்புரையும் வல்விஷமும் போகுந் திரண்டுருண்டே
பண்புறுபுங் கம்வேர்க்குப் பார்.

இ-ள். வாதக்கடுப்பு, மகாமூர்ச்சை, தாபசுரம், வாதகுன்மம், இரத்தமோடுகிறநோய், புண்புரை, வல்லவிஷமும்போம். (சசுO)

நாவல்மரத்தின் வேர்க்குணம்.

வாத மறுக்கரப்பன் மாறும்விரணமொடு
ஓதமுறு நீரிழிவும் உந்தூரத்த-சீதமுங்காய்
மாவன் சுரமும் வளர்மேக மும்போகும்
நாவன்மர வேரதனை நாடு.

இ-ள். வாதம், கரப்பான், விரணம், நீரிழிவு, சீதரத்தம், சுரம் மேகமும்போம். (சசுக)

கருவேல்மரத்தின் குணம்.

கருவேலின் வேர்க்குக் கடுப்பிரத்தம் மாந்தம்
பருவாதம் ஊறுகரப் பாறும்-பெருகு
பெரும்பேதி யும்போகும் பேசவி னிக்குங்
கருட்பே யிதனைக் கருது.

இ-ள். கடுப்பு, இரத்தம், மாந்தம், வாதம், ஊறுகரப்பான், பேதியும்போம். (சசுஉ)

ஒதிமரத்தின் வேர்க்குணம்.

புண்புரைகி ராணிரத்தப் போக்கதிசா ரங்கடுப்புந்
திண்பெருதா கஞ்சோபஞ் சீதளமும்-மண்மில்

அதிவிரைவாய்த் தாண்டு மணங்கே பருத்த
ஓதிமரத்தின் வேருக் கொதுங்கி.

இ-ள். புண்புரை, கிராணி, இரத்தப்போக்கு, அதிசாரம், கடுப்பு தாகம், சோபம், சீதளமும் போம். (௬௯௩)

அகத்திமரத்தின் குணம்.

நல்லகத்தி வேரதனை நாடுங்கால் மேகமெனுஞ்
சொல்லகலுந் தாகம் அறும் தோகையே-மெல்லமெல்ல
மெய்யெரிவு மேகனத்தி னுள்ளெரிவும்
ஐயெரிவும் போமென் றறி.

இ-ள். மேகம், தாகம், மெய்யெரிவு, கையெரிவு, ஆண், பெண், குறியெரிவு, ஐம்பொறி யெரிவும்போம். (௬௯௪)

நெல்லிமரத்தின் வேர்க்குணம்.

வமனம் அரோசியறும் வாதமுன் மூன்றுஞ்
சமன முறுமமலமுஞ் சாறும்-அமானசுரம்
புல்லிவரு தோஷசந்நிப் பொல்லாச் செயலும்போம்
நெல்லிமர வேரை நினை.

இ-ள். வாந்தி, அரோசி, திரிதோஷம், மலக்கட்டு, சுரம், தோஷசந்நியும்போம். (௬௯௫)

அருநெல்லிமரத்தின் வேர்க்குணம்.

சுத்த சுரம்அருசி தோலாப் பெரும்வாந்தி
பித்தசந்நி பாதமிவை பேருங்காண்-மெத்தமணம்
நாறுமலர்க் கூந்தன்மின்னே நாவுக்கினிமையெனக்
கூறுமரு நெல்லின்வேர்க் கு.

இ-ள். சுரம், அருசி, ஓயாதவாந்தி, பித்தசந்நி, பாதமும் போம். (௬௯௬)

மரத்தின் வேர்வகை-முற்றிற்று.

செடியின் வேர் வகை.

ஆடாதோடை வேர்க்குணம்.

காசமொடு மந்தக் கதித்தபித் தங்கொடுஞ்சு
வாசங் கழுத்து வலிமுதனோய்-கூசியே
ஓடாதி ராதிங் கொருநாளு மொண்டொடியே
ஆடாதோ டைத்தூருக் கஞ்சி.

இ-ள். காசம், மந்தம், பித்தம், சுவாசம், கழுத்துவலி முதலிய நோயும போம். (சகூஎ)

சங்கம்வேர்க்குணம்.

சங்கம்வேர்ப் பட்டை சளியிரும லச்சுரத்தை
அங்கவா தக்கடுப்பை ஆடதப்பைப்-பங்கமே
செய்யுங் கிரந்தியையுள் ளிகால் கிருமியையிவ்
வையக் தனிலொழிக்கு மால்.

இ-ள். வேர், பட்டை, இவைகளால், சளி, இருமல், சுரம், வாத க்கடுப்பு, வீக்கம், கிரந்தி, பித்தவாதம், கிருமியும்போம். (சகூஅ)

தே-பேராமுட்டிவேர்க் குணம்.

வாதசுரந் தாகம் மதலைக் கணமாந்தஞ்
சீதசுரம் பித்தமெனச் செப்பணங்கும்-ஓதுநம்மாற்
சேராமுட் டிக்கேகுஞ் செப்ப மடமயிலே
பேராமுட்டித் தூரைப் பேசு.

இ-ள். வாதசுரம், தாகம், கணமாந்தம், சீதசுரம், பித்தமும் போம். (சகூகூ)

சிற்றாமுட்டிவேர்க்குணம்-இதுவே-குறுந்தொட்டி.

அத்தி சுரமுதல் அனந்தசுரம் பித்தமும்போம்
மெத்த விழிக்கொளியாம் வீறுதயிலத்திற்காம்
நற்று மரைத்திருவு நாடு மெழிற்றிருவே
சிற்றாமுட் டித்தூரைச் செப்பு.

இ-ள் அஸ்திரம், அநேகசுரம், பித்தமும், போம், கண்ணுக் கொளிவு உண்டாம், தைலத்திற்காகும். (சஎ0)

செங்தொட்டி வேர்க்குணம்.

சந்து வலிவாதந் தாகஞ் சுரங்கரப்பான்
உந்துசுவா சக்கபமும் ஓடுங்காண்-அந்தமிகும்
இந்தொட் டியவதன இன்ப மடமயிலே
செங்தொட்டி வேராற் சிதைந்து.

இ-ள். கில்வலி, வாதம், தாகம், சுரம், கரப்பான், சுவாசம் கப மும்போம். (சஎக)

தே-மூக்காவேளை வேர்க்குணம்.

தாகாதி மந்தமதி சார மதிவறட்சி
போகாச் சுரந்தாயம் போக்கமருந்-தோகையிற்

சிக்காவே லைப்பதத்தைத் தின்னச்செய் விக்கவென்றுன்
முக்காவே ளைப்பதத்தை முன்.

இ-ள். தாகம், மந்தம், அதிசாரம், வறட்சி, சுரம், தாபமும் போம். (சஎ௨)

மரக்காரைவேர்க்குணம்.

மரக்காரை யின்வேர்தான் வாந்தி மருந்தாந்
திருக்காஞ்சி லேஷ்மமதைத் தீர்க்கும்-முருக்காருஞ்
செய்யவிதள் காதே திரிதோஷ மும்போக்கும்
வெய்ய மருந்தெனவே விள்.

இதுவுமது.

சீதக் கடுப்பகலுஞ் சேராது ரத்தபித்தம்
மாதே கரப்பான்போம் வாதம்போம்-பேரீதப்
பெருக்கான மாந்தகணம் பேரும் உலகில்
மரக்காரை வேரருந்து வார்க்கு.

இ-ள். வாந்தியுண்டாம், சிலேஷ்மம், திரிதோஷம்,சீதக்கடுப்பு, இரத்தபித்தம், கரப்பான், வாதம், மாந்தகணமும்போம். () (௩எச)

அவுரிவேர்க்குணம்-இதுவே-நீலி.

எல்லா விஷங்களுக்கும் ஏற்ற முறிப்பாகும்
பொல்லாச் சுரமூர்ச்சை பொங்குவெட்டை-நில்லாப்
பவுரிதருங் குன்மமுதல் பன்னோ யொழியும்
அவுயுதரும் வேருக் கறி.

இ-ள். விஷங்கள், சுரம், மூர்ச்சை, வெட்டை, குன்மம், பல் நோயும்போம். (சஎ௫)

களாவேர்க்குணம்.

விடத்துறுநோய் பித்தம்ஐயம் வேர்வையதி தாகந்
திடத்தஉதி ரத்தினது சிக்கல்-சடத்துளெழும்
அக்கினி மந்தம்இவை யண்டா தொருநாளுஞ்
சிக்கெனக்க ளாவேரைச் சேர்.

இ-ள். விஷம், பித்தம், ஐயம், வியர்வை, தாகம், பிரசவ அழுக்குச்சிக்கல் அக்கினி மந்தமும்போம். (சஎசு)

தே-வெட்டிவேர்க்குணம்-இதுவே-குருவேர்-க-க-றை.

பித்தவி தாகஞ் சசிகா மிலங்கறைப் பித்தமனற்
றத்திடு குட்டஞ் சிரநோய் களமடி நாதுநட்ட
மத்தம னற்புண்ட னப்புண்வன் மூர்ச்சை வரிவிழிநோய்
வித்திர மேகத்தின் கட்டியும் போம்வெட்டி வேரினுக்கே.

இ-ள். பித்தத்தால் அகாலத்தில் உண்டாகின்ற தாகம்,சசி,சோமரோகம், காமிலம், காமாலை, கறைப்பித்தம், ரத்தபித்தம், அனல், சுரம், குஷ்டம், தலைநோய், களமடி, கழுத்துநோய், சுக்கிலநஷ்டம், மத்தம், உன்மாதம், அனல்புண், திபால்வந்தபுண், தனப்புண்,முலைச்சிலந்தி, மூர்ச்சை, நேத்திரரோகம், வித்திரம்,வித்திரதிக்கட்டி, மேகக்கட்டியும் போம். (௭௭)

செடியின் வேர்வகை முற்றிற்று.

கொடியின் வேர்வகை

காட்டுமல்லிகை வேர்க்குணம் வெ-பா.

சுரங்களொடு நாவறட்சி தொந்திமந்தம் பேதி
யுரங்கதித்த தாகம்இவை பொட்டும்-வருஞ்சோரர்
தாமல்லி லோடுர் தகைமைபோல் ஓடிவிடுங்
காமல் லிகைவேராற் காண்.

இ-ள். சுரங்கள், நாவறட்சி, வயிற்று மந்தம், பேதி, தாகமும் போம். (௭அ)

சிறுகுறிஞ்சாவேர்க்குணம்.

சிறுகுறிஞ்சா வேர்விஷத்தைத் தீர்க்கும் அனிலத்
துருசுரங்கள் வாதம் ஒழிக்குந்-தெறிபாணக்
கண்ணு யிருமல்முதற் காசசுவா சந்தணிக்கும்
விண்ணுட ருக்கிதனை விள்.

இ-ள். விஷம், வாதசுரம், வாதம், இருமல், காசசுவாசமும் போம். (௭௯)

பேய்ச்சுரைவேர்க்குணம்.

கடுவேறு பேய்ச்சுரைவேர் கண்டால் அரவின்
கடுவேறு தன்மைமுக் காலுங்-கொடுவிஷமும்

ஈளை யிருமலும்விட் டேகும்உண்டால் வாந்தியுண்டாம்
வாளையுறுங் கண்ணுப் வழுத்து.

இ-ள். பாம்புவிஷம், மற்றக்கொடுவிஷம், ஈளை, இருமலும்போம், வாந்தியுண்டாம். (சஅ௦)

தே-முசுமுசுக்கை வேர்க்குணம்.

கந்தம் பரவு களிச்சுளியும் புன்விடமு
மந்தம் பெறுவிடமும் வாந்திகளும்-அந்தம்
பெருகுரங்குக் கிச்சூடும் பித்தமுமி ருங்கா
திருகுரங்குக் கைவேருக் கே.

இ-ள். சளி, புன்விஷம், மந்தம், பெறுவிஷம், வாந்திகள், மார்புநோய், வயிற்றுநோய், பித்தமும்போம். (சஅக)

வெண்காக்கட்டான் வேர்க்குணம்.

மாதரால் வந்தவெட்டை வன்மேகஞ் சென்னிவலி
ஓது சுரம்விழிநோ யோடுங்காண்-பேதிபொடு
மாக்கட்டாஞ் சீதம்அறும் மாமூலி யாம்வெள்ளைக்
காக்கட்டான் வேரைக் கருது.

இ-ள். வெட்டை, மேகம், தலைநோய், சுரம், விழிநோய், பேதி, சீதக்கட்டும்போம். (சஅஉ)

கருங்காக்கட்டான் வேர்க்குணம்.

மாந்தங் கிருமியடல் வாதங் கபஇனமுஞ்
சேர்ந்தமலக் கட்டுஞ் சிதையுங்காண்-சூழ்ந்த
அருங்காக் குவடுகளி லண்டா மயிலே
சுருங்காக்கட் டான்வேரைக் கண்டு.

இ-ள். மாந்தம், கிருமி, வாதம், கபக்கூட்டம், மலக்கட்டும்போம். (சஅ௩)

கொடிவேலிவேர்க்குணம்-இதுவே-சித்திரமூலம்.

கட்டிவிர ணங்கிரந்தி கால்கள் அரைப்புக்
கட்டிசூ லைவீக்கங் காழ்மூலம்-முட்டிரத்தக்
கட்டுநீ ரேற்றங் கனத்த பெருவயிறும்
அட்டுங் கொடிவேலி யாம்.

இ-ள். கட்டி, விரணம், கிரந்தி, வாயுக்கள், அரையாப்புக்கட்டி, சூலை, வீக்கம், மூலம், இரத்தக்கட்டு, நீரேற்றம், பெருவயிறும்போம். (சஅ௪)

பெருமருந்தின் வேர்க்குணம்.

பெருமருந்தின் வேர்பித்தம் பிறிரைப்பு காசம்
வருசுரம் உடம்புவலி வாதம்-உருவுவிஷம்
ஒன்றிய மாகடிகள் ஓட்டும் உலகிலது
அன்றியது கோச்சிகிச்சைக் காம்.

இ-ள். பித்தம், இரைப்பு, காசம், சுரம், உடம்புவலி; வாதம், விஷக்கடிகளும் போம், மாட்டு நோய்களுக்கும் ஆகும். (௪௮௫)

பெருங்காஞ்சொறி வேர்க்குணம்.

காசஞ் சுவாசங் கபச்சுரங்க ளோடிவன
வாசஞ்செய் யும்ஊர்க்குள் வாராமல்-வாசம்
பெருக்கு முலையாய் பெருங்காஞ் சொறிவேர்
இருக்கு மெனமனத்து ளெண்ணி.

இ-ள். காசம், சுவாசம், கபசுரமும் போம். (௪௮௬)

சிறுகாஞ்சொறி வேர்க்குணம்.

சிறுகாஞ் சொறிவேர் சிலேஷ்மசுவா சத்தைக்
குறிபாத முச்சுரக்கு மூத்தைச்-சொறியுங்
கரப்பான் சிறுசிரங்கைக் காலித்தா கத்தை
உரப்பாகச் சாடுமென வோது.

இ-ள். சிலேட்டுமசுவாசம், திரிதோஷத்தால் பிறக்கும், சுரக்கூட்டம், சொறி, கரப்பான், சிறுசிரங்கு, வாயு, தாகமும் போம். ()

கருங்காஞ்சொறி வேர்க்குணம்.

குத்திருமல் நீரேற்றங் கோர கபருட்டை
நித்தியஅ ரோசகமும் நீங்குங்காண்-ரத்ன
அருங்காஞ்சி வாய்ந்தவிடை யன்னமே சுத்தக்
கருங்காஞ் சொறிவேரைக் கண்டு.

இ-ள். குத்திருமல், நீரேற்றம், கபருட்சை, அரோசகமும் போம். (௪௮௮)

பச்சைத்திப்பிலி வேர்க்குணம்.

தாகமுடன் சோபந் தணிக்குங்காண் எவ்வகையின்
மேகமுடன் பித்தம் விலக்குமே-போகமிகும்
கவ்விய ரன்ன நபங்கொடுக்கும் பச்சையாஞ்
செவ்விய மூலச் செயல்,

இ-ள். தாகம், சோபம், மேகங்கள், பித்தமும்போம், போகம் உண்டாம். (௪௮௯)

இன்புரு வேர்க்குணம்.

இன்புரு வேரை யிதமாய் அருந்தினர்க்குப்
பின்புரு மையமொடு பித்தமுமே-துன்பாம்
இருமல் சுவாசம் எரிசுரம் வயிற்றுப்
பொருமல்உப்பி சம்பறந்து போம்.

இ-ள். ஐயம், பித்தம், இருமல், சுவாசம், எரிச்சுரம், வயிற்றுப் பொருமல், உப்பிசமும்போம். (௪௯0)

தே-நன்னாரி வேர்க்குணம்.

நன்னாரி வேரை நருக்கி யரைத்துமதன்
வின்னாரி யூறல் வெதுப்பியே-தின்னவெறி
தோணாது கற்றாழைச் சோற்றிற் கலந்துண்ணக்
காணாது வண்டு கடி.

இதுவுமது.

சலதோஷம் பித்தம்அதி தாகம் உழலை
சலமேறு சீதமின்னூர் தஞ்சூ-டுலகமதிற்
சென்றுமதுமே கம்புண் சுரம்இவையெ லாம்ஒழிக்கும்
மென்மதுர நன்னாரி வேர்.

இ-ள். தேனிலரைத்து வெதுப்பியுண்ண வெறியும், கற்றாழைச் சோற்றிற் கலந்துண்ண வண்டுகடியும், சலதோஷம், பித்தம், தாகம், உழலை, ஸ்திரீகளா லுண்டாகுஞ் சூடு, மடமேகம், புண், சுரமும்போம். (௪௯௧) (௪௯௨)

கொடியின் வேர்வகை-முற்றிற்று.

புல்லின் வேர்வகை.

பச்சைவிலாமிச்சு வேர்க்குணம்.

திரிதோஷந் தாகஞ் செறிகுஷ்டம் ஈளை
பெரிதான சூலைமந்தம் பேராச்-சுரவெப்பம்
மச்சையுண்ணுங் கிடமுதன் மாறுமெய்க்குங் காந்தியுண்டாம்
பச்சைவிலா மிச்சுக்குப் பார்.

இ-ள். திரிதோஷம், தாகம், குஷ்டம், ஈளை சூலை, மந்தம், சுர வெப்பம், எலும்புக்குள் இருக்கும் மூளையையுண்ணும் புழுவும் போம், தேககாந்தி யுண்டாம். (௪௬௩)

பஞ்ச மூலத்தின்குணம்.

செவ்வியம் பேராத்தை சித்திரமூ லஞ்சுக்கோ
டொவ்வுகண்டு பாரங்கி யோரைந்தும்-வெவ்வினையைச்
சண்ணு பஞ்ச மூலமெனத் தாரணியெ லாம்அறிய
வண்ண மயிலே வழுத்து.

இ-ள். செவ்வியம், பேராத்தை,சித்திரமூலம், சுக்கு,கண்டுபாரங்கி, இவைகளுக்கு அநேகவியாதிகளெல்லாம்போம். (௪௬௪)

சிறுபஞ்ச மூலத்தின்குணம்.

சிறிய வழுதுணைவேர் சின்னெரிஞ்சில் மூலஞ்
சிறுமலிகண் டங்கத் தரிவேர்-நறிய
பெரியமலி யோரைந்தும் பேசபன்னோய் தீர்க்கும்
அரியசிறு பஞ்சமூலம்.

இ-ள். சிறுவழுதுணைவேர், சிறுநெருஞ்சில்வேர், சிறுமல்லிகைவேர், கண்டங்கத்திரிவேர், பெருமல்லிகைவேர், இவைகளால் பலபிணியும்போம். (௪௬௫)

பெரும்பஞ்ச மூலத்தின்குணம்.

பாதிரிவேர் வாகை பருங்குமிழ் மாலூரம்
ஓதுதழு தாழையிவ்வேர் ஓரைந்தும்-போதிலம
ருஞ்சிலநோ தற்றிருவே போதுபெரும் பஞ்சமூ
லஞ்சிலநோ யேகுமிதி லாய்.

இ-ள். பாதிரிவேர், வாகைவேர், பெருங்குமிழ்வேர், வில்வவேர் தழுதாழைவேர், இவைகளால் சிலபிணிகள்போம். (௪௬௬)

அஷ்டமூலத்தின் குணம்.

கோரை யரிகரந்தை கூலங்க ளுசிகஞ்சாங்
கோரையா டாதோடை கோத்துளசி-விரியபற்
பாடகமிவ் வெட்டும் பல்விஷக்கு ழாமிரியச்
சாடுமஷ்டமூலமென்பார் தாம்.

இ-ள். கோரை, விஷ்ணுகரந்தை, பேய்ப்புடல், சிந்தல்,கஞ்சாங்கோரை, ஆடாதோடை, துளசி, பர்ப்பழகம், இவைகளால், பலவிதமான வியாதிகள்போம். (௪௬௭)

தசமூலத்தின் குணம்.

வில்வம் பெரியகுமிழ் மென்னெரிஞ்சில் முன்னையிரு
மல்லி சிறிய வழுதணைவேர்-நல்லகண்டங்
கத்தரி புன்காலிபெரு வாகையிவை வன்றோயைக்
குத்துந் தசமூலங் கூறு.

இ-ள். வில்வம், பெரியகுமிழ், நெருஞ்சில், முன்னை, மல்லி, வழுதணைவேர், கண்டங்கத்திரி, பாதிரி, பெருவாகை, தழுதாழை, இப்பத்துக்கும் அநேக நோய்கள்போம். (௪௯௮)

புல்லின்வேர்வகை முற்றிற்று.

மரப்பட்டையின் வகை.

அத்திமரப் பட்டையின்குணம்.

வீறு கடுப்பிரத்தம் வெண்சீத ரத்தமொடு
நாறுவிர ணங்களெலாம் நாடாவாங்-கூறுங்கால்
அத்திதரு மேகம்போம் ஆயிழையே யெஞ்ஞான்றும்
அத்திப்பாற் பட்டைக் கறி.

இ-ள். இரத்தக்கடுப்பு, சீதக்கடுப்பு, நாறுகிற விரணங்கள், மேகமும்போம். (௪௯௯)

நாவல்மரப் பட்டையின்குணம்.

ஆசியநோய் காசம் அசிர்க்கபஞ்சு வாசவினை
கேசமுறு பால கிரகநோய்-பேசரிய
மாவியங்க லாஞ்சனம்இவ் வன்பிணியெ லாமேகும்
நாவலுறு பட்டையத னால்.

இ-ள். வாய்நோய், காசம், பெரும்பாடு, சுவாசம், பாலகிரகதோஷம், பிறவிமறு, மச்சபேதங்களும்போம். (௫௦௦)

முருங்கைமரப் பட்டையின்குணம்.

முருங்கைவேர்ப் பட்டைக்கு மூடு கபத்தோ
டொருங்குறுச் சந்நிசுரம் ஓடும்-அருங்கனக
வட்டைப் பொருமுலையாய் வாய்வொடுவி ஷங்களுமேற்
பட்டைக்குப் போமே பறந்து.

இ-ள். வேர், பட்டையிவைகளுக்கு, கபம், சந்நிசுரம், வாயு, விஷங்களும்போம். (௫௦௧)

புளியமரப்பட்டையின்குணம்.

புளிய மரத்தின் புறணிதனைக் கண்டால்
உளைமாந்தை குன்மவலி யோடும்-வளியார்ந்த
பேதிகட் டுஞ்சுரம்போம் பித்தமுறுந் தீபனமாம்
ஓதஅ சிரணமே தன்னு.

இ-ள். உளமாந்தை, குன்மவலி, வாயு, சுரம், அசிரணமும்போம், பேதிகட்டு, பித்தம், தீபனமும் உண்டாம். (௫0உ)

பெருமரப் பட்டையின்குணம்.

பெருமரப் பட்டையது பேதிகிராணி
மருவிரத்த நோயினத்தை மாற்றுந்-திருவே
நடலைபுரி வாதத்தை நாடாத கற்றும்
உடலையிரட் சிக்குமென வோது.

இ-ள். பேதி, கிராணி, இரத்தநோய், வாதமும்போம், உடலைக் காக்கும். (௫0௩)

கருவேல்மரப் பட்டையின்குணம்.

தந்தம் இறுகுந் தவிச்சூதப் புண்ஆறும்
வந்தசுரம் பித்தம் மடியுங்காண்-பந்த
மருவே பகலா மரலளக மாதே
கருவேலம் பட்டைக்குக் காண்.

இ-ள். பல்லிறுகல் உண்டாம், சூதப்புண், சுரம், பித்தமும் போம். (௫0௪)

கருங்காலிமரப் பட்டையின்குணம்.

மேகநீ ரைக்கெடுக்கும் வீறுதந்த மூலத்துள்
ஆகிய வேதனையை யாற்றுங்காண்-சோகந்
தருங்காசம் ஈளையிவை சாரா தகற்றுங்
கருங்காலிப் பட்டையது காண்.

இ-ள். மேகநீர், மூலவியாதி, காசம், ஈளையும்போம். (௫0௫)

மாவிலிங்கு எருக்கு கருவேல் இவைகளின் பட்டைகுணம்.

மாவிலிங்கப் பட்டையினால் வாதமொடு சந்நிகளும்
பாவுகின்ற கல்லடைப்பும் பாறுமே-மாவெருக்கம்
பட்டைசந்நி வாதம் பலவிஷம்போக் குங்கருவேல்
பட்டைநா நோய்தீர்க்கும் பார்.

இ-ள். மாவிலிங்கப்பட்டைக்கு வாதம், சந்நிகள், கல்லடைப்பும் போம், எருக்கம்பட்டைக்கு சந்நி, வாதம், பலவிஷங்களும் போம் கருவேல்பட்டைக்கு நாவின்புண் ணாறும். (ருOசு)

கள்ளி-நொச்சில்-இவைகளின் பட்டைக்குணம்.

நரம்புச் சிலந்தி களிர்வாத சந்நி
உரம்பெரிய வாதம்இவை யோடும்-பெரும்புவியிற்
கள்ளிமரப் பட்டை யினாற் காநொச்சிற் பட்டையது
துள்ளுசந்நி வாதம்அகற் றும்.

இ-ள். கள்ளிப்பட்டைக்கு நரம்புச்சிலந்தி,களிர்,வாதசந்நி, வாதமும்போம், நொச்சில்பட்டைக்கு, வாதசந்நிபோம். (ருOஎ)

கிளியூறற் பட்டையின்குணம்.

மணவருக்க மாகும் சுருசுரந்தைப் போக்குந்
தலைசாய வெப்பைத் தணிக்குங்-குணமார்
கிளியூறற் பட்டையது சீதம் பயிலும்
அளியூருங் கூந்தல்மின்னே யாய்.

இ-ள். மணம் உண்டாம், சுரம், வெப்பும்போம். (ருOஅ)

அக்காரப் பட்டையின்குணம்.

அக்காரப் பட்டைக் கறல்நா வறட்சிகளும்
எக்குசந்நி பாதசுரம் என்பவையும்-பக்கச்
சகலதலை நோய்வாய்வுந் தாழ்ந்தே யொழியும்
புகலிரத்த கந்தமது போம்.

இ-ள். நாவறட்சிகள், சந்நிபாதசுரம், சகலதலைநோய், வாய்வு, இரத்தநாற்றமும்போம். (ருOகூ)

பஞ்சவல்க்கத்தின்குணம்.

ஆலரசு சம்புடனே யத்திகுரு வேல்அவற்றின்
தோல்ஐந்தும் பஞ்சவல்க்கந் தொல்லுலகில்-ஏலும் அதால்
காசஞ் சுவாசங் கபங்கொங்கை வித்திரதி
நாசமுறு மென்றே நவில்.

இ-ள். ஆல், அரசு, நாவல், அத்தி, வேல், இவைகளின் பட்டையால் காசம், சுவாசம், கபம், இஸ்திரிகள் மூலைநரம்பு கட்டியும் போம். (ருகo)

மரப்பட்டையின்வகை முற்றிற்று.

மரத்தின் பிசின்வகை.

மலைவேப்பம்பிசின்குணம்.

மலைவேம்பு தன்பிசின்றான் வாத கரப்பான்
வருமேகக் கட்டியிவை மாற்றும்-நலமீறு
தாதுவையுண் டாக்குஞ் சலப்பேதி யைக்கட்டும்
மாதே யிதனை வழுந்து.

இ-ள். வாதக் கரப்பான், மேகக்கட்டி, சலபேதியும்போம், தாது உண்டாம். (ருகக)

கருங்காலிப் பிசின்குணம்.

கருங்காலி யின்பிசின்றான் காரார் கரப்பான்
வருமேக நீரிழிவை மாற்றும்-விரைவாய்ப்
பெரும்பாட்டை நீக்கும் பெருந்தாது விர்த்தி
அரும்பு மெனக்கண் டறி.

இ-ள். கரப்பான், நீரிழிவு, பெரும்பாடும்போம், தாதுவிர்த்தியுண்டாம். (ருகஉ)

வாகைப்பிசின்குணம்.

வாகைப் பிசின்மேகம் வன்கிரந்தி கட்டியையும்
ஏகத் துரத்தும் இதுநிசமே-மாகனக
மேனி கொடுக்கு மிகுத்தபலன் உண்டாக்குந்
தேனினிய மென்மொழியே தேர்.

இ-ள். மேகம், கிரந்தி, கட்டியும்போம், மேனி பலம் உண்டாம். (ருகங)

விளாம்பிசின் குணம்.

நல்ல விளாம்பிசினை நற்பாகஞ் செய்தருந்தத்
தொல்லையதி சாரந் தொலைவதொன்றோ - மெல்லியரால்
வந்தவெள்ளை தன்னுடனே மாதர் பெரும்பாடும்
உந்துநீர்ப் போக்குமபோ யுன்.

இ-ள். அதிசாரம், வெள்ளையொழுகல், மாதர் பெரும்பாடு, நீரிழிவும்போம். (௫கச)

முருங்கைப்பிசின்குணம்.

மூத்திரநீ ரைத்தடுக்கும் யோனிப்போ லேயொழுகும்
விந்துவைத்த டிப்பித்து மேனிதருந் - தொந்தக்
கரியபிற வாயுதனைக் காதிவிடு நாளும்
பெரிய முருங்கைப் பிசின்.

இ-ள். நீரிழிவு, வாய்வும்போம், விந்துதடிப்பு, மேனியும் உண்டாம். (௫கரு)

விடத்தேரின்பிசின்குணம்.

விடதேரின் றன்பிசின்றான் வெண்மேகம் போக்கும்
அடுத்தபிற மேகத்தை யாற்றுந் - தொடுத்த
மேகக் கரப்பானை விட்டோடும் என்றுலகில்
நாகரிக மாதே நவில்.

இ-ள். வெண்மேகம், பிரமேகம், மேகக்கரப்பானும் போம்.

மரத்தின்பிசின்வகை முற்றிற்று.

மரத்தின் இலைவகை.

புளியிலையின் குணம்.

அழுபுண்ணை நீக்கும் அடல்சோபை மாற்றும்
எழுபாண்டு வைப்போக்கும் இப்பால்-முழுதும்
அளியச்சி வந்தகண்ணோ யாற்றுங் கனலாம்
புளியிலையை நன்றாய்ப் புகல்.

இ-ள். புண், சோபை, பாண்டு, கண்ணோயும் போம், கனல் உண்டாம். (௫கஎ)

தே-வேப்பிலையின்குணம் இதுவே-நிம்பயிலை.

கிருமிகுஷ்ட மாந்தங் கெடுவிடஞ்சு ரங்கள்
பொருமியம் சூரிகைமின் புண்க-ளொருமிக்க
நிம்பத் திலையிருக்க நீடுலகி னீங்காமற்
கம்பத் திலையிருக்கக் காண்.

இ-ள். கிருமி, குஷ்டம், பாந்தம், விஷம், சுரங்கள், வைசூரிப் புண்களும்போம், வேப்பிலை யிருப்பதினால் மேற்சொல்லிய வியாதிகள் நீங்காமலிருப்பதற்குப் பத்துத்தலைகளில்லை நீங்கிவிடுமென்பது கருத்து. (ருக௮)

முருங்கையிலையின்குணம்.

செறிமந்தம் வெப்பந் தெறிக்குந் தலைநோய்
வெறிமூர்ச்சை கண்ணோய் விலகும்-மறமே
நெருங்கையிலை பொத்தவிழி நேரிழையேநல்ல
முருங்கை யிலையை மொழி.

இ-ள் மந்தம், வெப்பம், தலைநோய், வெறி, மூர்ச்சை, கண்ணோயும்போம். (ருகக)

அகத்தியிலையின்குணம்.

மருந்திடுதல் போகுங்காண் வன்கிரந்திவாய்வாந்
திருந்தஅசனஞ் செரிக்கும்-வருந்தச்
சகத்திலெழு பித்தமது சாந்தியாம் நாளும்
அகத்தியிலை தின்னு மவர்க்கு.

இ-ள். மருந்திடுதல்போம், கிரந்தி, வாய்வு, சாதஞ்செரிப்பு, பித்தசாந்தியும் உண்டாம். (ருஉ௦)

செவ்வகத்தியிலையின்குணம்.

செவ்வகத்திப் பன்னஞ் சிலேஷ்மமதையுண்டாக்கும்
வவ்வுபல சிந்தூரம் வைப்பதற்காங்-கவ்வு
நவநீத பஸ்பமதை நாளுமுடிப் பிக்குஞ்
சிவமாக்குந் தாளகத்தைத் தேர்

இ-ள். சிலேட்டுமம், பலசிந்தூரம், நவநீதபஸ்பம், தாளகவெள்ளையும் உண்டாம். (ருஉக)

தே - பசுமுன்னையிலையின் குணம்.

வாயருசி சோபைஐய மாருக் கரப்பனெழும்
வாயுமந் தாக்கினிம யக்கமென்ற-நோய்கள்
அறமுன்னை யுன்னுவர்கட் காழி யுலகில்
நறமுன்னை தன்னிலையை நாடு.

இ-ள். அருசி, சோபை, ஐயம், கரப்பானும் உண்டாம், வாயு, மந்தாக்கினி, மயக்கமென்கிற நோய்களும் நீங்காம். (ருஉஉ)

கருவேப்பிலையின் குணம்.

வாயி னருசி வயிற்றுளைச்சல் பேருசுரம்
பாயுகின்ற பித்தமுமென் பண்ணுங்காண்-தூய
மருவேறு காந்தளங்கை மாதேயுலகிற்
கருவேப் பிலையருந்திக் காண்.

இ-ள். அருசி, வயிற்றுளைச்சல், சுரம், பித்தமும்போம். (ருஉ௩)

தெங்கு-பனை-இவைகளின் குருத்துக்குணம்.

தென்னங் குருத்தாற் சிலேஷ்ம வலிநீங்கும்
மன்னுதிர மூலமது மாலுங்காண்-உன்னும்
பனங்குருத்து தின்றாற் பகர்உதிர மூலஞ்
சனம்பெருகும் பேதியுமாங் காண்.

இ-ள். தென்னங்குருத்துக்கு, சிலேஷ்மவலி, உதிரமூலமும்போம், பனங்குருத்துக்கு, உதிரமூலம், பேதியுமுண்டாம். (ருஉச)

பேரீச்சு-சிற்றீச்சு-இவைகளின் குருத்துக்குணம்.

பேரீச்சு தன்குருத்தைப் பேணியே தின்பவருக்
கிரீச்ச குன்மவலி யேகுங்காண்-ஊரிற்
சிறியஈச் சுக்குருத்தைத் தின்றால் வயிற்றின்
மறியுதிர வாயுவறும் வாழ்த்து.

இ-ள். பேரீச்சங்குருத்துக்கு குன்மவலிபோம், சிற்றீச்சங்குருத்துக்கு உதிரவாய்வுபோம். (ருஉரு)

தே-மூங்கில் இலையின் குணம்.

குடற்கட்டுச் சூலையுடன் குன்மம்உதிரம்
உடற்கெட்டா தோடி யொழியும்-அட்டறங்கு
வேல்விழிமா தேகேளாய் வேயின் இலைதனக்குக்
கால்வழியுஞ் சோணிதம்போங் காண்.

இ-ள். குடல்கட்டு, சூலை, குன்மம், உதிரம், சூதக் கட்டும் போம். (ருஉசு)

தேயிலையின் குணம்.

(சுபாவம்) சூடும் வறட்சியுமாம், (பிரயோசனம்) சுத்த இரத்தமுண்டாம், குறைந்த வுணவாம், (சௌக்கியம்) தேகத்துக்கும், ஆத்துமத்துக்கும் வலிவு அதிகரிக்கும், உதிரத்தின் அழுக்கைப் போக்கித் தெளியப்படுத்தும், சளிப்பைமாற்றும்,(வியாதி)சூட்டுடம்புக்குதவாது, (பரிகாரம்) பசுவின்பால், சருக்கரையாம்.

மரத்தின் இலைவகை-முற்றிற்று.

செடியின் இலைவகை.

ஆடாதோடை யிலையின்குணம்.

ஆடாதோ டைப்பன்னம் ஐயறுக்கும் வாதமுதற்
கோடாகோ டிச்சந்திரன் கோதொழிக்கும்-நாடின்
மிகுத்தெழுந்த சந்நிபதின் மூன்றும் விலக்கும்
அகத்துநோய் போக்கும் அறி.

இ-ள். ஐயம், வாதம், பலவித சுரங்கள், சந்நி-யரு-ம், உடல்வலியும்போம். (௫உஎ)

தே-வெண்ணொச்சி யிலையின்குணம்.

நாசந் தருவாதம் நாசிப் பிணியழற்சு
வாசந் தசனவுரு வன்றேடங்-காசம்அறல்
உச்சி படையை யுறைநோயும் என்படுமோ
சொச்சி படையை நூவல்.

இ-ள். வாதம், நாசிப்பிணி, அழர்ச்சி, சுவாசம், பல்வேதனை, தோஷம், காசம், சிரசில், அடைபைப்போல் உறைந்த சிலேஷ்மரோயும்போம். (௫உஅ)

கருநொச்சிலையின் குணம்.

வாதக் கடுப்பகலும் மாருத பிரசம்போம்
ஓதப்பேய் ஓடி யொளிக்குங்காண்-வேதைசெய்யும்
மண்டைக் குடைச்சலறும் மாசிற்கரு நொச்சிலுக்குப்
பண்டைத் தலைவலிபோம் பார்.

இ-ள். வாதக்கடுப்பு, பிரசம், பேய், மண்டைக்குடைச்சல், தலைவலியும்போம். (௫உ௯)

வெள்ளாமணக் கிலையின் குணம்.

மந்தங் கதித்தெழுந்த வாதம் மருமவலி
பந்தமல மியாவும் பறக்குங்காண்-சந்ததமும்
பூமணக்கு நெய்த்த புரிகுழன்மா தேவெள்ளை
யாமணக்குப் பத்திரியால் ஆய்.

இ-ள். மந்தம், வாதம், மார்புநோய், மலபந்தங்களும்போம். ()

செவ்வாமணக் கிலையின்குணம்.

குன்மமொடு மந்தங் கொடுவாதம் மெய்வலியுஞ்
சன்மமட்டும் வாராமல் தாண்டுங்காண்-நன்மைதரும்
எவ்வா மணக்குகட்கும் ஏற்றமென்பார் காந்தியுள்ள
செவ்வா மனக்கிலைபைச் சேர்.

இ-ள். குன்மம், மந்தம், தேகவலியும்போம். (ருஙக)

தே-செம்பையிலையின் குணம்.

கட்டி யொடுவீக்கங் காமத்துள் நீரேற்றம்
ஒட்டிவரு வாதகபம் ஓட்டுலகு-தொட்டுவிடும்
அம்பையிலை வேலைவென்ற வங்கண் மடமாதே
செம்பையிலை வேலையெனத் தேர்.

இ-ள். கட்டி, வீக்கம், நீரேற்றம், வாதகபமும்போம். (ருஙஉ)

கருஞ்செம்பை யிலையின் குணம்.

விப்புருதிப் புண்ஆறும் மீறுகரப் பானும்போந்
தப்பாமல் மேகந் தணியுங்காண்-வெப்பார்
கபரோகம் ஏகுங் கருஞ்செம்பை யொன்றுக்
கிபவா முலைமாதே யெண்.

இ-ள். விப்புருதி, புண், கரப்பான், மேகம், கப ரோகமும் போம். (ருஙங)

பாவட்டை யிலையின் குணம்.

சிதவா தங்களாறுந் நிபனமோ உண்டாம்
வாதங் கபம்ஒழியும் வார்குழலே-போதவே
ஆவட்டைத தாகசுரம் அற்றுவிடுந் தோஷம்போம்
பாவட்டைப் பத்திரிக்குப் பார்.

இ-ள். சீதவாதங்கள், வாதகபம், தாகசுரம், தோஷமும் போம், தீபனம் உண்டாம். (௫௬௪)

பெருஞ்சின்னி யிலையின்குணம்.

காணாக் கடியும்எதிர் கண்ட விஷக்கடியும்
காணா திருந்திடவும் ஞாயமுண்டோ-தோணா
வருஞ்சின் மதலைமொழி மாதரசேகேளாய்
பெருஞ்சின்னி மூலியுண்ட பேர்க்கு.

இ-ள். காணாக்கடி, மற்றவிஷக்கடியும் போம். (௫௬௫)

சிறுசின்னி யிலையின்குணம்.

கடிவிஷமுங் காணாக் கடிவிஷமும் மாதர்
இடுவிஷமும் ஓடும்இது வன்றி-நெடியவிழிக்
கன்னிகையே மேகங் கணைக்காய்ச்சல் மாந்தமும்போஞ்
சின்னி யிலைக்குத் தெறித்து.

இ-ள். கடிவிஷம், காணாக்கடிவிஷம், மாதரிடுமருந்து, மேகம், கணைக்காய்ச்சல், மாந்தமும் போம். (௫௬௬)

தே-தழுதாழை-யிலையின் குணம்.

வாதப் பிடிப்பென்ற வற்காலி யைப்புலிபோற்
போதப் பிடிக்கும் புகலவற்கேறு-காத
அழுதாழைப் பீநசத்தை யுண்டா தகற்றுந்
தழுதாழைப் பன்னமது தான்.

இதுவுமது.

சேர்ந்த சொறிசிரங்குஞ் சேர்வாதம் என்பதும்போம்
ஆய்ந்திடிற் பித்தம் அதிகரிக்கும்-மாந்தம்அறும்
ஐயின் சுரந்தணியும் ஆனதழு தாழைக்கு
மெய்யின் கடுப்பும்போம் விள்.

இ-ள். வாதப்பிடிப்பு, பீநசம், சொறிசிரங்கு, வாதம், ஐய-ம், மாந்தம், கபச்சுரம், தேகக்கடுப்பும் போம், பித்தம்உண்டாம். () ()

எருக்கிலையின் குணம்.

எவ்விஷங் குட்டம்ஐயம் ஏறு கிருமி
வலிகுலை வாயுவிஷம் மந்தம்-மலபந்தம்
எல்லாம் அகலும் எருக்கிலையைக் கண்டால்
வில்லார் நுதலே விளம்பு.

இ-ள். எலிவிஷம், குஷ்டம், ஐயம், கிருமி, வலி, சூலை வாயு, விஷம், மந்தம், மலபந்தமும்போம். (௩௱௩௯)

காட்டாமணக் கிலையின்குணம்.

கட்டி விரணங் கரப்பான்பீ லிகம்அந்தி
கெட்டியுறு குன்மங் கிளைத்தசிரங்-கொட்டுமே
கூட்டோ டொழியுங் குவடனைய கொங்கைமின்னே
காட்டா மணக்கிலையைக் கண்டு.

இதுவுமது.

காட்டா மணக்காற் கபவாத சூலையுடன்
வீட்டு தலைநோய் விரிகிரந்தி-வாட்டுமின்ற
உண்மூலம் போகும் உடம்புலர்த்தல் வெட்டைஅறுந்
திண்மூல தாதுவுமாஞ் செப்பு.

இ-ள். கட்டி, விரணம், கரப்பான், பீலிகம், குன்மம், சிரங்கு, ஒட்டுமேகம், கபவாதம், சூலை, தலைநோய், கிரந்தி, உள்மூலம், உலர்த்தல், வெட்டையும்போம், விந்துஉண்டாம். (௫௪0) (௫௪௧)

தவசு முருங்கையிலையின் குணம்.

தவசுமுருங் கைத்தழைக்குத் தையலே கேளாய்
அவசியம் பீநசம்உண் ணாக்கும்-உவசர்க்க
ஐயஞ்சு வாசகபம் அண்டாது குத்திருமல்
வையம்விடுத் தேகும் வழுத்து.

இ-ள். பீநசம், உண்ணாக்கும் பெருக்கல், ஐயம், சுவாசகபம், குத்திருமலும்போம். (௫௪௨)

வெதுப்படக்கி யிலையின் குணம்.

வெள்ளெடுப்பு சீதம் வெதும்பல் சுரத்துடனே
அள்ளெடுக்கு மாந்தம் அதிவாதந்-தெள்ளுமொழி
மாதே வெதுப்படக்கி வன்றழையுட் காய்ச்சலொடு
கோதேறி ரத்தமும்போக் கும்.

இ-ள். வெளுத்தபேதி, சீதம், வெதும்பல், சுரம், அள்ளெடுக்கு மாந்தம், வாதம், உட்காய்ச்சல், இரத்தமும்போம். (௫௪௩)

பெரியாநங்கை யிலையின்குணம்.

பெரியாநங் கைத்தழைக்கும் பித்தம்என்ப தெல்லாந்
தெரியாமல் ஓடும்இது திண்ணம்-பிரியா

மலம்அறுக்கும் பஸ்பவகை வைப்பதற்கும் ஆகுஞ்
சிலைநுதலே நன்றாய்த் தெரி.

இ-ள். எல்லாவித பித்தமும், மலமும்போம், பஸ்பவகை வைப்பதற்கு ஆகும். (ருசச)

சிறியாநங்கையிலையின்குணம்.

சிறியாநங் கைத்தழையைச் சேவித்தபேரைப்
பிறியார் மடந்தையர்கள் பின்னும்-அறியதனு
டங்கணமும் நீறுந் தனியழகும் உண்டாகுந்
திங்கண்முக மாதே தெளி.

இ-ள். பெண்வசியம், வெண்காரம் நீறும், அழகும் உண்டாம்.

பருத்தி யிலையின்குணம்.

பருத்தியிலை மொட்டிரண்டைப் பாலிலரைத் துண்ண
வருத்துகின்ற மேகம்எல்லா மாறும்-பருத்த
விரத்தபித்தத் தோடு விரணவிக் கம்போம்
அரத்தவிதழ் மாதே யறை.

இ-ள். இலைமொக்குஇவைகளை பாலிலரைத்துண்ண எல்லாமேகங்கள், இரத்தபித்தம், இரணவிக்கமும்போம். (ருசசு)

கூத்தங்குதம்பை யிலையின்குணம்.

குத்துகின்ற நோய்போக்குங் கோரபித்தம் உண்டாக்கும்
அத்திசெய்யுஞ் சந்நி யகற்றுங்காண்-சத்திக்கு
மாத்தங்கு வாய்மொழிக்கும் மண்டூரத் திற்குதவுங்
கூத்தங் குதம்பைக் குழை.

இ-ள். குத்துகின்றநோய், சந்நி, சுரோணித வாய்வும்போம், பித்தம் உண்டாம், மண்டூரத்திற்குதவும். (ருசஎ)

துத்தி யிலையின்குணம்.

மூலநோய்கட்டி முளைப்புழுப்புண் ணறுயபோகுஞ்
சாலவதக் கிககட்டத் தையலே-மேலும்அதை
எப்படியே யுண்புக்க எப்பிணியுஞ் சாந்தமுறும்
இப்படியிம் துத்தியிலை யை.

இ-ள். வதக்கிக்கட்டமூலநோய், கட்டி முளை, புழு, புண்ணும் போம், இதைபெவ்வித்தநலாவது உண்டால், எல்லாநோயுஞ்சாந்தமாகும். (ருசஅ)

விழுதி யிலையின்குணம்.

விழுதித் தழைகரப்பான் வெண்மேகம் நீக்கும்
பழுபடுவன் சூலைநோய் பாறும்-எழுபேதி
யாக்கும்அந்தி மாந்தம் அகக்கிருமி துன்மலமும்
போக்கும் அதுவே புகல்.

இ-ள். கரப்பான், வெண்மேகம், சூலை, மாந்தம், கிருமி, துன்மலமும்போம், பேதியுண்டாம். (ருசக)

கணப்பூண்டினது இலையின்குணம்.

கணப்பூண் டிலைமேகக் கட்டியைக்க ரைக்கும்
மணக்குமிக வாய்க்கு மறாஞ்-சினுக்கான
வாதகணம் பித்தகணம் மாற்றுங் கபச்சுரத்தின்
பேதம்அறப் போக்குமெனப் பேசு.

இ-ள். மேகக்கட்டி கரையும், வாதகணம், பித்தகணம், கபசுரமும்போம். (ருரு௦)

காரை-சேம்பு-இவைகளின்-இலைக்குணம்.

காரைத் தழைக்குக் கடுப்பிரத்தம் போம்புளியைச்
சேரப்பெய் தாக்கிச் சுவைத்தறிநீ-பாரிலுள்ள
சேம்பிலைக்கு நற்புளியைச் சேர்த்துச் சமைத்துண்டாம்
கூப்பிட்டமூலம்அறுங் கூறு.

இ-ள். காரையிலைக்கு, இரத்தக்கடுப்பும்போம், சேம்பிலைக்கு மூலம்போம், புளிசேர்த்து சமைத்து உண்ணவேண்டும். (ருருக)

அவுரியிலையின்குணம்.

உரியஅவு ரித்தழைதான் ஓது பதினெண்
அரியநஞ்சைத் தின்றவர்க்கும் ஆகும்-தெரிவரிய
வாதவெப்பு காமாலை மைந்தர்க் குறுமாந்தஞ்
சீதம் அகற்றுந் தெரி

இதுவுமது.

சந்நி பதின்மூன்றுஞ் சங்தொடுத்த வாதமுதல்
உன்று விஷக்கடியும் ஒடுங்கும்கண்-மின்னும்
சவுரிநிறம் உண்டாகுங் காசினியுள் நல்ல
அவுரியிலை தன்னால் அறி.

இ-ள். நஞ்சு, - ம்அ - வாதம், வெப்பு, காமாலை, மாந்தம், சிதம், சந்நி - ம்ங - கில்வாதம், விஷக்கடியும் போம், நீல மருந்துண்டாம். (ருருஉ) (ருருங)

தே-குப்பைமேனி யிலையின்குணம்-இதுவே-மேனி.

தந்தமூ லப்பிணிநித் தந்திடுபுண் சர்வவிஷம்
உந்துகுன்மம் வாதம் உதிரமூ-லந்தினவு
சூலஞ்சு வாசம் தொடர்பீந சங்கபம்போம்
ஞாலங்கொள் மேனியத னால்.

இ-ள். தந்தமூலம் ·நிபுண், சர்வவிஷம், குன்மம், வாதம், உதிரமூலம், தினவு, சூலைநோய், சுவாசம், பீநசம், கபமும்போம். ()

மிளகுதக்காளி யிலையின்குணம்.

மந்தாக் கினிசோபை வாந்திகழல் வாயுவெப்பம்
இந்துநோய் பாண்டோ டெதிர்விக்கல்-முந்த
வாருமுத் தோஷநோய் மாற்றுங்கைப் பாண
மிளகுதக் காளியிலை மெய்.

இதுவுமது.

மிளகுதக் காளியிலை வெண்நாகக் கட்டும்
இளகுபல சிந்தூரத்திற் கேற்கும்-கொளுவுகின்ற
மேகச் சொறிபகற்றும் வெட்டை யனல்தணிக்கும்
மாகச் சனிமுலையாய் வாழ்த்து.

இ-ள். மந்தாக்கினி, சோபை, வாந்தி, கழல்வாய்வு, வெப்பம், சோமநோய், பாண்டு, விக்கல், திரிதோஷம், மேகச்சொறி, வெட்டை, அனலும் போம், கைப்பு, வெண்நாகக்கட்டு, பலசிந் தூரங்களும் உண்டாம். (ருருரு) ருருசு)

தும்பை யிலையின் குணம்.

சீறுகின்ற பாம்போடு சிலவிஷங்கால் சென்னிவலி
ஏறுகபம் மாந்தம் இருக்குமோ-நாறுமலர்க்
கொம்பனைய மாதே குளிர்சித சந்நிவிடுந்
தும்பையிலை யென்றுரைக்காற் சொல்.

இதுவுமது.

தும்பையிலை யையுண்ணுஞ் சோற்றுக்கொலாங்கறியாய்
அம்புவியோர் மிக்க அருந்துங்கால்-வெம்பிவரு

மேகமொடு கண்புகைச்சல் வீறுகை காலசதி
தாகம்அதி சோம்பலுறுந் தான்.

இ-ள். பாம்பு முதலான விஷங்கள், வாதம், தலைவலி, கபம், மாந்தம், குளிர், சிதசந்நியும்போம், இதையுண்டால் மேகம், கண்புகைச்சல், கைகால், அசதி; தாகம், சோம்பலும், உண்டாம் (). ()

முள்ளங்கி யிலையின் குணம்.

வாயுமிகும் பித்தம் வளருங் கிருமியுமாம்
ஒப்புவுறு நெஞ்செரிவும் உண்டாங்காண்-தூயநிற
முள்ளங்கி யின்யிலையை முற்றும்உண்டாற் குன்மவலி
யுள்ளாங் கிளம்பா துரை.

இ-ள். வாய்வு, பித்தம், கிருமி, நெஞ்செரிவும், உண்டாம், குன்மவலி போம். (ருருசு)

புகை யிலையின்குணம்.

மருந்தை முறித்துவிடும் வாய்வளறச் செய்யுந்
திருந்து பலவீனஞ் சேர்க்கும்-பொருந்துபித்தம்
உண்டார்க்கும் விந்தழிக்கும் ஓது புகையிலையைக்
கண்டார்க்கும் ஆகாது காண்.

இ-ள். மருந்துமுறிவு, வாய்வறளல், பலவீனம், பித்தம், விந்தழிவும் உண்டாம். (ருசு0)

செடியின் இலைவகை - முற்றிற்று.

கொடியின் இலைவகை.

தே-தூதுளை யிலையின் குணம்.

காதுமந்தங் காதெழுச்சி காசந் தினவுமதம்
ஓதுமந்த முத்தோஷம் உட்சூலை-தாதுநட்ட
மீதுளைப் பத்திரியை மேவச்செய் வாராய்ந்தோர்
தூதுளைப் பத்திரியைத் துய்த்து.

இ-ள். காதுமந்தம், காதெழுச்சி, காசம், தினவு, மதம், மந்தம், முத்தோஷம், உட்சூலை, தாதுநஷ்டம், மேலுளைப்பும்போம். ()

பறங்கியிலையின் குணம்-இதுவே-பூசினி.

பித்தமொடு வாதம் பெருந்தாக மும்பெருகுஞ்
சத்தமொடு பேதி தலைப்படுங்காண்-சுற்றுங்

கறக்காகு மேனியுள்ளே கவ்வுபுழுச் சேரும்
பறங்கி யிலைக்குப் பகர்.

இ-ள். பித்தம், வாதம், தாகம், பேதி, புழுவும் உண்டாம். ()

சுரை யிலையின் குணம்.

நீரிழிவும் விக்கம்போம் நேரே மலம்இறங்கும்
பாரமுறு சோகை பறக்குங்காண்-திராத்
திரிதோஷம் போகுஞ் செறிந்த சுரையின்
உரிய கொழுந்திலையை யுண்.

இ-ள். நீர்க்கட்டு, விக்கம், மலக்கட்டு, சோபை, திரிதோஷமும் போம். (௫௬௩)

பேய்ச்சுரை யிலையின் குணம்.

மூலரோ கத்தின் முளையைக் களைந்துவிடும்
ஆலவி ஷத்தையும் அகற்றுங்காண்-ஞாலமதில்
வாய்ச்சிவிடந் திட்டவரு மாவருத்தம் வெம்பிலுறும்
பேய்ச்சுரையின் பத்திரத்தைப் பேசு.

இ-ள் மூலரோகமுளை, கடினவிஷமும் போம். (௫௬௪)

பாகல்-இலையின் குணம்.

பிறியாக் கிருமியறும் பேதியுண்டாந் தோஷம்
முறியும் இரதம் முறியுங்-குறியாத
மாகாற் புடைய மடமயிலே யெப்போதும்
பாகாற் றழைக்குப் பயந்து.

இ-ள். கிருமி, தோஷமும் போம், பேதி, பாதரசமுறிவும் உண்டாம். (௫௬௫)

அவரை யிலையின் குணம்.

அவரையிலைக் குத்தலைநோய் ஆழ்ந்தகிராணி
யிவரும் விஷிசிமுதல் ஏகுந்-தவறுமல்
கொண்டவர்க்குத் தீபனமாம் கோதாய் விரணமறுங்
கண்டவர்க்குத் தோற்றுமிது காண்.

இ-ள். தலைநோய், கிராணி, விஷிபு, விரணமும்போம், தீபனம் உண்டாம். (௫௬௬)

காரமணி யிலையின்குணம்.

காரா மணியிலையைக் காய்ச்சியுண்டால் நாவுரிசை
வாராத வாயுமிக வற்றுறுமே-நேரேகேள்
மூலம் விளையு முசியாக் கழிச்சலுண்டாந்
தாலம்அதில் அவ்விலையைத் தள்.

இ-ள். வாய்வு, மூலம், கழிச்சலும், உண்டாம். (ருசுஎ)

கொடிக்குறிஞ்சா இலையின்குணம்.

கரப்பான் கிரந்தி கடிய விருமல்
உரப்பாம் விஷபாகம் ஓட்டும்-நிரைப்பான
அக்கரத்தை மாற்றிவிடும் ஆயிழையே பித்தமுமாந்
தக்ககுறிஞ் சாவினிலை தான்.

இ-ள். கரப்பான், கிரந்தி, இருமல், விஷப்பாகம், நாக்குச்சரமும்போம். (ருசுஅ)

கறிப்பாலை யிலையின் குணம்.

மேகம்அனல் வெட்டைசுரம் வீறுபித்த முந்தோலையும்
போகமுறும் மெய்ம்மருந்தும் பொய்மருந்தாம்-பாகுமொழி
மானே கறிப்பாலை மன்னும்இலை யைத்தினமுந்
தானே யருந்துவர்க்குத் தான்.

இ-ள். மேகம், அனல், சுரம், பித்தம், மருந்துபலமும் போம், போகம், உண்டாம். (ருசுகூ)

கோவை யிலையின்குணம்.

கண்ணுங் குளிர்ச்சிபெறுங் காசமொடு வாயுவறும்
புண்ணுஞ் சிரங்கும் புரண்டேகும்-நண்ணுடலம்
மீதிலார் வெப்பகலும் வீழாநீர்க்கட்டேகுங்
கோதிலாக் கோவையிலைக்கு.

இ-ள். காசம், வாய்வு, புண், சிரங்கு, வெப்பு, நீர்க்கட்டும்போம் கண்குளிர்ச்சி யுண்டாம். (ருஎ0)

முசுமுசுக்கையிலையின் குணம்.

இருமலுடன் ஈளை யிரைப்பு புகைச்சல்
மருவுகின்ற நீர்த்தோஷ மாறுந்-திருவுடைய
மானே முசுமுசுக்கை மாமூலி யவ்விலையைத்
தானே யருந்துவர்க்குத் தான்.

இ-ள். இருமல், ஈளை, இரைப்பு, புகைச்சல், நீர்த்தோஷமும் போம். (ருஎக)

கோழியவரை யிலையின்குணம்

ஆழிசுற்றும் வையத் தடர்ந்தபே ராமையொரு
நாழியினிற் கெட்டு நலியுக்காண்-தோழிகேள்
கோழியவ ரைத்தழைக்குக் குன்மங் குடல்வாதம்
ஊழிவரைக் கும்வாரா தோது.

இ-ள். வயிற்றில் காணும் பருத்த ஆமைக்கட்டி, குன்மம், குடல்வாதமும்போம். (ருஎஉ)

முசற்கா திலையின்குணம்.

பிசத் தெழுந்த பெருவீக்கங் கைகாலில்
விசிப்பு டைத்த வெறும்வீக்கம்-பேசாமல்
ஏகும் முசற்கா திலையிருக்கும் ஊரைவிட்டுப்
பாகுமொழி மாதே பகர்.

இ-ள். பிசத்தி லெழுந்தவீக்கம், கைகாலி லுண்டான வீக்கமும்போம். (ருஎங)

கழற்சி யிலையின்குணம்-இதுவே-வச்சிரம்.

விரைவாதஞ் சூலைபறம் வெட்டையனல் ஏகும்
நிரைசேர்ந்த குன்மம் நிலையா-துரைசேர்
அழற்சி விலகும் அருந்திற் கசப்பாங்
கழற்சியிலை யென்றுரைக்குங் கால்.

இ-ள். விரைவாதம், சூலை, வெட்டை, அனல், பலவாகச்சேர்ந்த குன்மம், அழற்சியும் போம், கசப்பாக விருக்கும். (ருஎச)

வெண்கழற்சி யிலையின் குணம்.

ஏறண்டத் தோடே யிறங்கண்டம் மெத்தவுமே
யிறண்டம் எல்லாம் விலக்குங்காண்-தூரண்ட
வள்ளைக் குழைபடிபோம் வாள்விழிமா தேநல்ல
வெள்ளைக் கழற்சியிலை விள்.

இ-ள். ஏறண்ட வாயு, இறங்கண்ட வாயுவென்கிற வியாதிகள் போம். (ருஎரு)

தே-வரிக்குமட்டி யிலையின் குணம்.

பற்றுநிரப் பூச்சிகளைப் பற்பலவா மந்தத்தைச்
சுற்றுநிரப் பித்தத்தைத் தூவிடத்தை-முற்றும்

அரிக்கும் அட்டி யாயிலேமா தங்கருரை யன்றே
வரிக்குமட்டி யாயிலேமா தே.

இ-ள். உதிரப்பூச்சி, பலபலமந்தம், இரத்தபித்தம், விஷமும் போம். (௩௭௬)

சிறுபூனைக்காலி யிலையின்குணம்.

சிறுபூனைக் காலியிலை சில்விஷத்தைப் போக்கும்
உறுகாந்தத் தைச்சிந் தூரிக்குஞ்-சிறுமாந்தம்
ஐயங் கபந்தீர்க்கும் ஆர்ந்தகய நோய்விலக்கும்
வையந் தனில்இதனை வாழ்த்து.

இ-ள். சில்விஷம், மாந்தம், ஐயம், கபநோயும் போம், காந்தசிந் தூரம் உண்டாம். (௩௭௭)

வேலிப்பருத்தி யிலையின்குணம்-இதுவே-உத்தாமணி.

ஆலித் தெழுந்தநோய் அந்தனையுந் தீருமே
வேலிப் பருத்தியதின் மேல் இலையால்-வேலோத்துக்
கண்டிக்கும் வாதங் கடுஞ்சந்நி தோஷமும்போம்
உண்டிக்கும் வாசனையாம் ஓது.

இதுவுமது.

உத்தா மணியிலையால் உள்வயிற்றுக் குன்மமொடு
குத்தாம் வலியுங் குளிரும்போம்-பற்றி
இசிக்கும் வலியிரைப்பும் எத்தடிப்பும் ஏகும்
பசிக்கும்அதி மாந்தமும்போம் பார்.

இ-ள். அனேக வியாதிகள், வாதம், சந்நி தோஷம், குன்மவலி, குளிர், இசிவு வலி, இரைப்பு, பலவிதத் தடிப்பு, மாந்தமும்போம். ()

தாரா யிலையின் குணம்.

புண்கிரந்தி கட்டி பொருசந்நி கீடமும்போங்
கண்புகைச்சல் காசங்க திக்கும்என்பார்-பெண்களுக்கும்
பாலும் பெருகும்உள்ளே பற்றுதிரச் சிக்கல்விடும்
எலுந்தா ராவின் இலைக் கு.

இ-ள். புண், கிரந்தி, கட்டி, சந்நி, புழு, ஸ்திரிகள் உதிரச் சிக்கலும்போம், கண்புகைச்சல், காசம், பெண்களுக்கு பாலும் உண்டாம்.

செந்தாயிலையின் குணம்.

அனில முளையும் அரோசகமும் நீங்கும்
தனியான தோஷம்அது தாழுங்-கனிமொழியே
வெந்தாரைச் சூடும் விடாயும்போந் தீபனமாஞ்
செந்தரா வின்தழைக்குச் செப்பு.

இ-ள். வாதக்குத்தல், அரோசகம், தோஷம், நீர்த்தாரையைப் பற்றிய கொடிசூடும், விடாயும் போம், தீபனம் உண்டாம. (ருஅக)

விஷமூங்கில் இலையின் குணம்.

பிளவை யுகிர்ச் சுற்று பெரும்படுவன் வீக்கம்
அளவில்நோய் காதெழுச்சி ஆற்றும்-அளவையுறு
தோங்கி வளர்ந்தமூலை யோவியமே நீண்டவிஷ
மூங்கில்இலை நன்மூலி முன்.

இ-ள். பிளவை, நகத்தைப்பற்றிய விரணம், படுவன், வீக்கம், அனேகநோய், காதெழுச்சியும் போம். (ருஅஉ)

கொடியின் இலைவகை-முற்றிற்று.

கிரைவகை.

கருணைத்தண்டின் கிரைகுணம்-இதுவே-சூரணத்தண்டு.

சுத்தகு தாங்குரத்தைத் துட்டகபம் மேதையதி
கத்தை விலக்கும் கறிஅமைக்கில்-பத்தியமாஞ்
சிரணத்தை யுங்கொடிய தீபனத்தை யுங்கொடுக்குஞ்
சூரணத்தின் தண்டெனவே சொல்.

இ-ள். முளைமூலம், கபம், தாதுவிர்த்தியும்போம், பத்தியத்திற்காகும், சிரணம், தீபனமும் உண்டாம். (ருஅங)

கிரைத்தண்டின் குணம்.

தண்டுமெத்த வாய்வு தணியாத சீதளமாம்
விண்டுரைக்கில் சின்நோய்போம் விள்ளவோ-கொண்டக்கால்
நீர்க்கடுப்பு வெட்டையனல் நில்லாது நேரிழையே
போர்க்கடுப்பி ரத்தமும்போம் போம்.

இ-ள். வாய்வு, சீதளமும் உண்டாம், சிலநோய், நீர்க்கடுப்பு, வெட்டை, அனல், இரத்தக்கடுப்பும் போம். (ருஅச)

வெண்கிரைத் தண்டின் குணம்.

வெண்கிரைத் தண்டுவி யாதியற்ற நற்கறியாங்
கண்காணு தோடிவிடுங் காந்தலெல்லாங்-கண்காணும்
மூலம் அதற் கேற்கும் முசியா எரிவகற்றுந்
தாலமதில் அக்குணத்தைச் சாற்று.

இ-ள். காந்தல்கள், மூலம், எரிவும்போம். (ருஅரு)

செங்கிரைத் தண்டின் குணம்.

செங்கிரைத் தண்டதுதான் தீராத பித்தத்தைத்
தங்காமல் ஓட்டிவிடுந் தையலர்க்குப்-பொங்கும்
பெரும்பாட்டை நீக்கும் பெரிய கறியாந்
தரும்பாட்டு வெப்பகற்றுந் தான்.

இ-ள். பித்தம், ஸ்திரிகள் பெரும்பாடு வெப்பும் போம். ()

முளைக்கிரையின் குணம்.

தளர்ந்தவர்க்கும் பாலருக்குந் தக்கவய தோர்க்கும்
இளங்கிரை நாவுக் கிதமாங்-கிளம்பு
சுரகாசம் போக்குந் தொடர்பசிஉண் டாக்கும்
பிரகாச மாயெடுப்துப் பேசு.

இ-ள். சுரகாசம்போம், பசியுண்டாம். (ருஅஎ)

தே-முள்ளிக் கீரையின் குணம்-இதுவே-குப்பைக் கீரை.

நீரைப் பெருக்கிவிடு நீடனலைத் தானெழுப்பும்
பாரநறுந் தங்கத்தைப் பஸ்பிக்கும்-நேரே
விடவிருக்கும் பொற்றட்டை மேவுமல்குன் மாதே
அடவிநிற்கு முள்ளுக்கீ ரை.

இ-ள். நீர்பெருக்கும், அனலும் உண்டாம், தங்கபஸ்பமாம். ()

அறு கீரையின் குணம்.

காய்ச்சல் குளிர் சந்நி கபநோய் பாலபிணிக்கும்
வாய்ச்ச கறியாய் வழங்குங்காண்-வீச்சாய்க்
கறுவுமோ வாறவினங் காமமிக வுண்டாம்
அறுகிரை யைத்தின் றறி.

இ-ள். காய்ச்சல் குளிர், சந்நி, கபநோய் முதலிய பலபிணியாளருக்குப் பத்தியஞ்செய்ய மருந்து பலிதமும் காமமும்உண்டாம், வாய்வும்போம். (ருஅசு)

புளிச்சிறு கிரையின்குணம்.

தேகசித்தி யாகுஞ் சிறுகாசம் மந்தம்அறும்
போகம்உறும் விந்துவும்நற் புஷ்டியுண்டாம்-வாகாம்
வெளிச்சிறுமான் நோக்குவிழி மென்கொடியே நாளும்
புளிசசிறுகீ ை யுண்ணும்போது

இ-ள். காசம், மந்தமும்போம், தேகசித்தி, போகம், தாதுபுஷ்டியும் உண்டாம். (ருசுO)

சிறு கிரையின் குணம்.

கண்புகைச்சல் நேத்திரநோய் காசம் படலம் ரசப்
புண்கிரிச்ச ரஞ்சோபை பொங்குபித்தம்-மண்பரவு
தாவரவி ஷங்களும்போம் தாழாத் திருவும்உண்டாம்
கூவுசிறு கிரைதனைக் கொள்.

இ-ள். கண்புகைச்சல், நேத்திரநோய், காசம், படலம், ரசப்புண், கிரிச்சிரம், சோபை, பித்தம், நாவி, பாஷாணமுதலிய விஷங்களும்போம், இலக்ஷுமி கடாக்ஷம் உண்டாம். (ருசுக)

கலவைக் கீரையின் குணம்.

வாதபித்த ஐயத்தை மாற்றும் மலம்அறுக்கும்
ஓதுகுடல் வாதம்அதை ஓட்டுங்காண்-போதின்
பலகலவைக் கோதாய்நற் பத்தியத்திற் கொவ்வும்
பலகலவைக் கிரையுண்டு பார்.

இ-ள். வாதம், பித்தம், ஐயம், மலக்கட்டு, குடல்வாதமும்போம் பத்தியத்திற் காகும். (ருசுஉ)

மணலிக் கிரையின்குணம்.

வாதம்அறும் நெஞ்சேறி வந்த கபம்விலகும்
சீதமுடன் நோய்பலவுந் தீருங்காண்-போதின்
விறு கிருமியொடு மேவாப் பயித்தியம்போங்
கூறுமண லிக்கிரைக் கு.

இ-ள். வாதம், நெஞ்செறிவு, கபம், சீதநோய், கிருமி, பைத்தியமும்போம். (ருசுங)

தே-நீர்ஆரைக் கிரையின்குணம்-இதுவே-ஆரைக்கீரை.

தின்றால் உரிசைதருந் தீராப் பயித்தியத்தைப்
பொன்றாத நீரிழிவைப் புண்ணீரை-என்றும்இந்த
ஊராரைச் சாராமல் ஓட்டிவிடும் நால்இதழாம்
நீராரைக் கீரையது நீ.

இ-ள். உருசியாக விருக்கும், தீராபைத்தியம், நீரிழிவு, இரத்தப் போக்கும்போம். (ருசச)

புளியாரைக் கீரையின்குணம்.

பித்த மயக்கம்அறும் பேருலகில் மானிடர்க்க
நித்தம்அருள் வாதகபம் நேருமோ-மெத்தெனவே
மூலக் கிராணிஅறும் மூல உதிரம்அறுங்
கோலப் புளியாரைக் கு.

இ-ள். பித்தமயக்கம், வாதகபம், மூலக்கிராணி, மூலஉதிரமும் போம். (ருசரு)

வள்ளைக்கீரை-பருப்புக்கீரை-இவைகளின்குணம்.

வள்ளைக்கீ ரைக்கனிலம் மாறும்பால் உண்டாகும்
பிள்ளைப் பருப்பிலைக்குப் பித்தம்அறுங்-கொள்ளத்
தெரிவுங் கடல்சூழ்இத் தேசத்தோ ருக்குக்
கரிய குழலணங்கே காண்.

இ-ள். வள்ளைக்கீரைக்கு, வாய்வுபோம், பாலுண்டாம், பருப்புக் கீரைக்கு பித்தம்போம். (ருசசு)

கொடிவசலைக்கீரையின்குணம்.

போகம் மிகக்கொடுக்கும் போர்செய்கபத் தைப்பெருக்கும்
ஆகம்அதிற் றாகம்அனலைத்தணிக்கும்-மாகுடரின்
மன்னு மலம்இளக்கும் மாறாஉரிசைதருந்
தின்னுங் கொடிவசலை செப்பு.

இ-ள். போகம், கபம், மலம்இளகல், உரிசையும் உண்டாம் தாகம், அனலும்போம். (ருசஎ)

பசலைக்கீரையின்குணம்-இதுவே-பசறை.

நீர்க்கடுப்பு நீர்அடைப்பு நீங்காத மேகமும்இவ்
வூர்க்கடுத்து வாராமல் ஓட்டுங்காண்-பார்க்கவொண்ணு

அற்பவிடை மாதே அரோசிசர்த்தி யைத்தொலைக்கும்
நற்பசலைக் கிரையது நன்று.

இ-ள். நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மேகம், சர்த்தியும்போம். ()

பாற்சொரிக்கிரையின்குணம்.

வயிற்றுக் கடுப்பு மலஞ்சிதம்பேதி
நியத்த ரத்தப் போக்கிவைநீ றுத்துங்-குயத்தையொரு
பாற்சரியக் காட்டும் பருவ வணங்கரசே
பாற்சொரிக் கிரையது பார்.

இ-ள். வயிற்றுக்கடுப்பு, மலம், சிதபேதி, இரத்தப் போக்கும் போம். (ருகூகூ)

சாணக்கிக் கிரையின் குணம்.

கோழையொடு மாந்தம் குழந்தைச் சுழிக்கணமும்
பேழையெனச் சொல்லும் பெருவயிறுங்-கீழொருவர்
காணுக் கிருமிகளைக் கக்கும் அளிபுண்ணுஞ்
சாணுக்கிக் கிரைபிற்போஞ் சாற்று.

இ-ள். கோழை, மாந்தம், சுழிக்கணம், பெருவயிறு கிருமிகள், அளிப்புண்ணும் போம். (சூOO)

துயிலிக்கிரையின் குணம்.

சிதம் விளையுஞ் சிறுசிரங்கு புண்ணுமாங்
காது பழமலமுங் கட்டறுங்காண்-கிதக்
குயிலனையாய் வெட்டைபோங் கூறஅழ கில்லைத்
துயிலி இலைக்கிரிக்குச் சொல்.

இ-ள். சிதம், சிறுசிரங்கு, புண்ணும் உண்டாம், பழமலம், வெட்டை, அழகும்போம். (சூOக)

பண்ணைக் கிரையின் குணம்.

பண்ணையிளங் கிரையது பற்று மலம்இளக்கும்
எண்ணுங் குடலுக் கிதங்கொடுக்கும்-பெண்ணேகேள்
சிதங் கரப்பான் சிரங்குபுண் மாற்றிவிடுங்
கோதக் கிலையதனைக் கொள்.

இ-ள். மலமிளகலும், குடலுக்கிதமும் உண்டாம், சிதம் கரப்பான், சிரங்கு, புண்ணும்போம். (சூOஉ)

பரட்டைக் கீரையின் குணம்.

பரட்டைநறுங் கீரையது பத்தியத்திற் காகும்
வெருட்டுகின்ற பித்தம் மிகமீறும்-புரட்டுங்
கபமுடனே வாதங் கரப்பானும் ஏகுஞ்
சுபவசன மாதேநீ சொல்.

இ-ள். பத்பத்திற்காகும், பித்தமுண்டாம், கபம், வாதம், கரப்பானும் போம். (சுOஈ)

கோழிக் கீரையின் குணம்.

சொறியுங் கரப்பானுந் தோற்றும் மேன்மேலுஞ்
செறியுங் கிருமிமிகச் சேரும்-எறிகின்ற
ஆழிச்கீ டானவிழி யாரணங்கே வையகத்திற்
கோழிக்கீ ரைக்குணத்தைக் கூறு.

இ-ள். சொறி, கரப்பான், கிருமியும் உண்டாம். (சுOச)

புளிப்புக் கீரையின் குணம்.

வாதம் அறும் பித்தம்உறும் மாறு அரோசிகியுஞ்
சீதம்உடனே அகலுஞ் சேயிழையே-போதப்
புளித்த இலைக்கறிக்குப் போம்இரத்த பித்தங்
களித்த கரப்பனொடு காண்.

இ-ள். வாதம், அரோசி, சீதம், இரத்தபித்தம், கரப்பானும் போம், பித்தம் உண்டாம். (சுOரு)

பிண்ணாக்குக் கீரையின் குணம்.

மலம்இறங்கும் வாதமுடன் வன்கரப்பன் உண்டாஞ்
சலம்இறங்கு மேகந் தணியும்-மலர்விழியாய்
உண்ணாக்குக் கின்பமாம் ஓடும் அனல் வெட்டையெலாம்
பிண்ணாக்குக் கீரைஉண்ட பேர்க்கு.

இ-ள். மலம் நீரடைப்பு, மேகம், அனல், வெட்டையும் போம் வாதம், கரப்பானும் உண்டாம். (சுOசு)

முக்குளிக் கீரையின் குணம்.

ஐயம் மிகக்கொடுக்கும் ஆர்க்கபோ கந்தருங்காண்
மெய் அனலை எல்லாம் விலக்குமே-தையலே

பேதி அளிக்கும் பெருமுக் குளிக்கிரை
சீதம் விளைக்கும்எனச் செப்பு.

இ-ள்: ஐயம், போகம், பேதி, சீதமும், உண்டாம், அனல் போம். (சுபஎ)

வெந்தயக் கிரையின்குணம்.

பொருமல்மந்தம் வாயுகபம் போராடு கின்ற
இருமல் அருசியிவை ஏகும்-தரையில்
நிதி துயர்கமனைச் சிறும் விழியணங்கே
கோதில்வெந்த யக்கிரை கொள்.

இ-ள். பொருமல், மந்தம், வாயு, கபம், இருமல், அருசியும், போம். (சுOஅ)

கொத்துமல்லிக் கிரையின் குணம்.

கொத்துமல்லிக் கிரைஉண்ணில் கோரஅரோசகம்போம்
பித்தம்எல்லாம் வேநடனே பேருங்காண்-சத்துவமாம்
வெச்செனவே போகம் விளையுஞ் சுரந்திருக்
கச்சுமுலை மாதேநீ காண்.

இ-ள். அரோசகம், எல்லாவித பித்தம், சுரமும், போகம் உண்டாம். (சுOகூ)

போகம்விளைக்குங்கிரைகள்.

தாளி முருங்கைத் தழை தூ துளம்பசலை
வாளில்அறு கிரையும்செய் வார்த்துண்ணில்-ஒளியென
விஞ்சுவார் போகத்தில் வீப்புரைத்த பெண்கவொலாங்
கெஞ்சுவார் பின்வாங்கிக் கேள்.

இ-ள். தாளிக்கிரை, முருங்கக்கிரை, தூதுளங்கிரை, அரைக்கிரை, இவைகளை நெய்வார்த்துப் பிரட்டியுண்டால் அதிகபோகம் உண்டாம். (சுகO)

கிரைவகை-முற்றிற்று.

மரத்தின் புஷ்பவகை

பச்சைக் குங்குமப் பூவின் குணம்-வி-ம்·

சங்கையின் மதுரதோஷஞ் சலதோஷம் பீந சங்கள்
செங்கயற் கண்ணின் ரோஷஞ் சேவித்தோஷம் பித்ததோஷங்

செங்கையாங் கபதோ ஷங்கள் செஞ்சிடும் பச்சையான
குங்குமப் பூவி னாலே கோதையே யிதனைக் கொள்ளே.

இ-ள். மதுதோஷம், சலதோஷம், பீநசங்கள், கண்தோஷம், செவிதோஷம், பித்ததோஷம், கபதோஷங்களும்போம். (௬௧௧)

கொன்றைப் பூவின்குணம்-வெண்பா.

மலக்கிருமி யோடும் மதுநீர் குடலாந்
தலத்துநோ வுங்குலைந்து சாயும்-நிலத்திற்குள்
என்றைக்கும் வாடாத வின்ப மலர்க்கொம்பே
கொன்றைப் பசுமலரைக் கொள்.

இ-ள். மலக்கிருமி, மதுமேகம், குடல்நோயும்போம். (௬௧௨)

மைக்கொன்றைப் பூவின்குணம்.

மைக்கண் விழியனமே வையகத்தில் எப்போதும்
மைக்கொன்றைப் பூமேகம் மாற்றுங்காண்-மிக்கவதைக்
கொண்டால் சலமேகங் கூகூவென் றேபதறி
அண்டாதி துண்மை அறி.

இ-ள். மேகம், சலமேகமும்போம். (௬௧௩)

காட்டாத்திப் பூவின்குணம்.

உதிரக் கடுப்போ டுதிரக் கழிச்சல்
விதிரக் கடும்பேதி மேகம்-எதிர்நிற்க
மாட்டா தகலும் வனச மலர்த்திருவே
காட்டாத்திப் பூத்தனக்குக் காண்.

இ-ள். உதிரக்கடுப்பு, உதிரக்கழிச்சல், பேதி, மேகமும்போம்.

சண்பகப் பூவின்குணம்.

வாதபித்தம் அஸ்திசுரம் மாமேகஞ் சத்தசுரந்
தாதுநஷ்டங் கண் அழற்சி தங்காவே-மாதேகேள்
திண்புறு மனக்களிப்பாந் திவ்யமணம் உட்டினஞ்சேர்
சண்பகப் பூவதற்குத் தான்.

இ-ள். வாதபித்தம், அஸ்திசுரம், மேகம், சுரம், தாதுநஷ்டம், கண்ணழற்சியும்போம், மனக்களிப்பு, மணம், உட்டினமும் உண்டாம்.

பாதிரிப்பூவின்குணம்.

பித்த சுரந்தணியும் பெண்வசியம் உண்டாகும்
முற்றியதோர் வெட்டை முடியுங்காண்-மெத்தவுமே
மாதுரியம் நீங்கா வசன மடவனமே
பாதிரியின் பூவையுண்டு பார்.

இ-ள். பித்தசுரம், வெட்டையும்போம், பெண்வசியம் உண்டாம். (சுகசு)

மந்தாரப் பூவின்குணம்.

மந்தாரப் பூகுளிர்ச்சி மன்னர் வசியமுமாம்
செந்தா மரைத்திருவே செப்பக்கேள்-மந்தாரங்
கண்ணுக்கு மாகுளிர்ச்சி காணுங் கொதிப்பகற்றும்
மண்ணில்நறும் பூவெனவே வை.

இ-ள். தேகக்குளிர்ச்சி, மன்னர்வசியம், கண்ணுக்குக் குளிர்ச்சியும் உண்டாம், தேகக் கொதிப்பும்போம். (சுகஎ)

புன்னைப் பூவின்குணம்.

புன்னைப்பூ பித்தம்என்பார் போராடு வன்மேகம்
வின்னப்ப டாசித்த விப்பிரமம்-பின்னுங்
கரப்பான் சொறிசிரங்குங் காணு தகற்றும்
உரப்பாம் மயக்கம்உண்டாக் கும்.

இ-ள். மேகம், சித்தப்பிரமை, கரப்பான், சொறிசிரங்கும்போம், பித்தமயக்கம் உண்டாம். (சுகஅ)

மகிழப்பூவின்குணம்-இதுவே-வகுளம்பூ.

வெகு அனலம் ஆரும் விரகமிக உண்டாம்
முகர அரோசி முறியும்-மிகவும்
மகிழச் சுரத வகைகாட்டு மாதே
மகிழத் தரும மலர்க்கு.

இ-ள். அனல், விரகமும் உண்டாம், அரோசிபோம். (சுககூ)

பன்னீர்ப்பூவின்குணம்.

சர்தந்தி அரோசம்உள் தாதுநஷ்டம் மேல்வறட்சி
ஒத்த அழலும் ஒதுங்குங்காண்-எத்தரத்துந்

தன்னீர்மை குன்றாத் தனிர்வண்ண மாதரசே
பன்னீர் மரப்பூவைப் பார்.

இ-ள். சர்த்தி, அரோசகம், தாதுநஷ்டம், வறட்சி, அழலும் போம். (௬௨௦)

குருக்கத்திப் பூவின்குணம்-இதுவே-மாதவி.

சிரரோகந் தாகஞ் சிலேஷ்ம விரணம்
பொருபித்தம் பல்விஷமும் போக்கும்-வரிசேர்
கருக்கொத்த வாள்விழியாய் கைப்புமது ரஞ்சார்
குருக்கத்திப் பூவின் குணம்.

இ-ள். சிரோகம், தாகம், சிலேஷ்மம், விரணம், பித்தம், பல விஷமும்போம், கைப்பும், மதுரமாகவும் இருக்கும். (௬௨௧)

செந்தாழம் பூவின்குணம்.

தலைநோய் சலதோஷஞ் சண்ணுகபங் காசம்
உலைவாதம் எல்லாம் ஒடுக்கும்-நிலைசேர்
திருந்துடற்குக் காந்திதருஞ் செம்மணமுஞ் சூடும்
பொருந்துகின்ற செந்தாழம் பூ.

இ-ள். தலைநோய், சலதோஷம், கபம், காசம், வாதமும்போம், மேனியுண்டாம். (௬௨௨)

முருங்கைப் பூவின்குணம்.

விழிகுளிரும் பித்தம்போம் வீறருசி யேகும்
அழிவிந்துவும் புஷ்டி யாகும்-எழிலார்
ஒருங்கையக லாக்கற் புடைவா ணகையே
முருங்கையின் பூவை மொழி.

இ-ள். பித்தம், அருசியும்போம், விழிகுளிர்ச்சி, தாதுபுஷ்டியும் உண்டாம். (௬௨௩)

அகத்திப் பூவின்குணம்.

புகைப்பித்த மும்அழலாற் பூரிக்கும் அந்த
வகைப்பித்த மும்அனலும் மாறும்-பகுத்துச்
சகத்தி லிருந்தாத் தனியமிர்தே நாளும்
அகத்தி மலருங் கறி.

இ-ள். புகையாலும், அனலாலும் உண்டாகிற பித்தமும் இன் பமும்போம். (கஉச)

புளியம்பூவின்குணம்.

பித்தத் துடனே பெருத்தஅ ரோசகம்போம்
மெத்தஎழும் வாந்திமி தந்துள்நிற்கும்-மெத்தக்
கனத்தப்பூ ரித்தமுலைக் காரிகையே வெற்பார்
வனத்துப் புளியும்பூ வால்.

இ-ள். பித்தம், அரோசகம், வாந்தியும்போம். (கஉரு)

இலுப்பைப் பூவின்குணம்.

குன்று இலுப்பையின்பூ சுர்மதுரம் வாசனையாக்
தின்றால் பயித்தியமுஞ் சேருங்காண்-மன்றல்உறுந்
தார்குழலே பித்தசுரந் தாகந் தணிக்துவிடும்
வார்தயக்கம் எய்தும் வழுத்து.

இ-ள். பித்தசுரம், தாகமும்போம், பயித்தியமும், மயக்கமும் உண்டாம். (கஉசு)

தே-முள்முருக்கம் பூவின்குணம்.

கருப்பா சயத்திற் கறுத்துத் தடித்தே
பருததவுதி ரத்திரளைப் பஞ்சாய்த்-துரத்திவிடும்
பண்முருக்கு மின்பமொழிப் பாவா யுலகறிய
முண்முருக்கம் பூவை மொழி.

இ-ள். இஸ்திரிகள் உதிரக்கட்டும்போம். (கஉஎ)

வாகைப் பூவின்குணம்.

வாதசம னஞ்செய்யும் வல்விஷத்தைப் போக்கிவிடுஞ்
சீதசிலேஷ் மத்தைச் சிதைக்குங்காண்-போதவுள்ளே
மாகைப்பை வைத்திருக்கும் மாநிலத்தி லேபெரிய
வாகைப்பூத் தன்னை வழுத்து.

இ-ள். விஷம், சிலேஷ்மமும்போம், வாதசமன், கைப்பும் உண்டாம். (கஉஅ)

தென்னம் பூவின்குணம்.

மேகம் அகக்கொதிப்பு விறவி ரத்தபித்தம்
வேக அசிர்க்கரநோய் விம்பிரமி-தேகத்தில்

வின்னம்பா விக்கும் விஷபாகம் போகவென்றால்
தென்னம்பா ளைப்பூவைத் தின்.

இ-ள். மேகம், அகக்கொதிப்பு, இரத்தபித்தம், அசிர்க்கரநோய் பிரமியம், விஷமும்போம். (கூஉகூ)

பனம் பூவின்குணம்.

பனையில்உறு பூவதுதான் பங்கமுறுக் குன்ம
வினைஅகற்றும் நீர்க்கட்டை மீட்கும்-முனையான
பன்னோய் ஒழிக்குமெ பழஞ்சுரத்தைப் போக்கிவிடும்
மின்னே இதனை விளம்பு.

இ-ள். குன்மம், நீர்க்கட்டு, பல்லிநோய், சுரமும்போம். (கூ௱௦)

தே- வேப்பம் பூவின்குணம்.

பித்தத் தெழுந்த பெருமூர்ச்சை நாத்தோஷஞ்
சத்தத் தெழுமனந் தங்கருசி-முற்றியகால்
ஏப்பல் கிடமிவை யேகுமே நாட்சென்ற
வேப்பமல ருக்கு வெருண்டு.

இ-ள். பழம்பூவுக்கு பித்தமூர்ச்சை, நாவின்தோஷம், வாந்தி அருசி, ஏப்பம், மலப்புழுவும்போம். (கூ௱க)

மாதுளம் பூவின்குணம்.

வாந்திபித்த தோஷமொடு மாறாக் கடுப்பனலஞ்
சேர்ந்துநின்ற மூலரத்தந் தீர்க்குங்காண்-மாந்தளிர்க்கை
மாதேயி ரத்தபுஷ்டி வல்லபலன் உண்டாக்கும்
பூதலத்துள் மாதுளையின் பூ.

இ-ள். வாந்தி, பித்ததோஷம், கடுப்பு, அனல், இரத்தமூலம் போம், இரத்தபுஷ்டி, பலமும் உண்டாம். (கூ௱உ)

வாழைப் பூவின்குணம்.

வாழைப்பூ மூலரத்தம் மாபிரமி வெட்டைபித்தங்
கோழைவயிற் றுக்கடுப்பு கொல்காசம்-ஆழியனல்
என்னரி கைகால் எரிவுந் தொலைத்துடலில்
மன்னவளர்க் குந்தாது வை.

இ-ள். இரத்தமூலம், பிரமி, வெட்டை, பித்தம் கோழை, வயிற்றுக்கடுப்பு, காசம், கைகால் எரிவும்போம், தாது உண்டாம். ()

மரத்தின் புஷ்பவகை-முற்றிற்று.

செடியின் பூவகை.

ஆவாரம் பூவின் குணம்.

தங்கம் எனவே சடத்திற்குங் காந்திதரும்
மங்காத நீரை வறட்சிகளை-அங்கத்தாம்
மாவைக் கற்றாழை மணத்தை கற்றிவிடும்
பூவைச்சேர் ஆவாரம் பூ.

இ-ள். நீரிழிவு, வறட்சி, தேகத்திற்பூக்கின்ற உப்புமாவு, கற்றாழை நாற்றமும்போம், தேககாந்தியுண்டாம். (சுங-ச)

கருஞ் செம்பைப் பூவின்குணம்.

தலைக்குத்தல் ஐயஞ் சலதோஷம் வாதம்
உலைப்பீ நசமும்இந்த ஊர்க்குள்-நிலைக்கா
தருஞ்சண் பககாசி யாயிழையே சுத்தக்
கருஞ்செம்பைப் பூஇருக்குங் கால்.

இ-ள். தலைக்குத்தல், ஐயம், சலதோஷம், வாதம், பீநசமும் போம். (சுங-ரு)

செம்பரத்தம் பூவின்குணம்.

செம்பரத்தை மேகவெட்டை நீராப் பிரமியொடு
வம்பிரத்த வெள்ளை வழுவழுப்பும்-வெம்பும்
பெரும்பாடு ரத்தபுத்த பேதம் அகற்றுங்
கரும்பா மொழிமயிலே காண்.

இ-ள் மேகவெட்டை, பிரமியம், இரத்தவெள்ளை, பெரும்பாடு, இரத்தபித்தமும்போம். (சுங-சு)

அலரிப் பூவின்குணம்.

வெப்பருசி குஷ்டம் விதாகஞ் சொறிசிரங்கு
செப்பிரதம் புன்பித்தம் சென்னிபெரி-விப்படியில்

தங்குமோ கும்பத் தனத்தணங்கே வாசஞ்சேர்
கொங்கலரிப் பூப்பெயரைக் கூறு.

இ-ள். வெப்பு, அருசி, குஷ்டம், தாகம், சொறிசிரங்கு, இரத்தம், புண், பித்தம், தலையெரிவும்போம். (கூ௩௭)

செம்பருத்திப் பூவின்குணம்.

செம்பருத்திப் பூஅழலைத் தீயரத்த பித்தத்தை
வெம்புவயிற் றிக்கடுப்பை விந்துவைநீற்-றம்மெனச்செய்
மேகத்தை வெட்டை யை விஷூசிமுதற் பேதியையுள்
தாகத்தை ஓட்டிவிடுந் தான்.

இ-ள். அழலை, இரத்தபித்தம், வயிற்றுக்கடுப்பு, விந்துவைநீற்றும்மேகம், வெட்டை, விஷூசி, பேதி, தாகமும்போம். (கூ௩௮)

நந்தியாவட்டப் பூவின்குணம்.

காசம் படலங் கரும்பாவைத் தோஷமெனப்
பேசுவிழி நோய்கள்தமைப் பேர்ப்பதன்றி-ஓசைதரு
தந்திபோ லேதெறித்துச் சாருமண்டை நோய்அகற்றும்
நந்தியா வட்டப்பூ நன்று.

இ-ள். கண்காசம், கண்படலம், கருவிழிநோய்கள், மண்டைக்குத்தலும்போம். (கூ௩௯)

துத்திப் பூவின்குணம்.

துத்தி மலரைநிதந் துய்க்கின்ற பேர்களுக்கு
மெத்தவிந்து வும்பெருகும் மெய்குளிருஞ்-சத்தியமே
வாயல் விழும்இரத்தம்மாறும் இருமல் அறும்
தேயா மதிமுகத்தாய் செப்பு.

இ-ள். வாயால் விழுகிற விரத்தம், இருமலும்போம், விந்தும் மெய்குளிர்ச்சியும், உண்டாம். (கூ௪௦)

செவ்வந்திப் பூவின்குணம்.

அலைமயக்கஞ் சுற்றல் அறும் அட்சிக்கொளியாந்
தலைமயிர்உண் டாம்இனலஞ் சாரும்-நிலைமணமாம்
ஒவ்வாதி வான்பிறையை யொத்த நுதற்றிருவே
செவ்வந்திப் பூஅதனைச் செப்பு.

இ-ள். மயக்கம், தலைசுற்றலும்போம், கண்ணொளி, தலைமயிர் வளர்ச்சி, அனல், மணமும் உண்டாம். (௬௪௧)

தே-தும்பைப் பூவின்குணம்.

தாகங் கடிதொழியுஞ் சங்கிபா தங்கள் அறும்
ஆகந் தனில்விழிநோய் அண்டுமோ-மாகந்த
வம்பைப்பி றங்குபத்து மாதேயின் செங்கரத்தால்
தும்பைப்பூத் தன்னைத் தொடு.

இ-ள். தாகம், சந்நிபாதங்கள் கண்ணோயும்போம். (௬௪௨)

வேளைப் பூவின்குணம்.

கணமாந்தம் வாதங் கபக்கோவை கோழை
அணுமாந்த வெப்பும் அகலும்-மணமாரும்
பாளைக் குழலே பசிமெத்த உண்டாகும்
வேளைபபூ என்றொருக்காய் விள்.

இ-ள். கணமாந்தம், வாதம், கபக்கோழை, மாந்தசுரமும்போம், பசியுண்டாம். (௬௪௩)

சிற்றாமரைப் பூவின்குணம்-இதுவே-பன்னீர்ப்பூ.

சிற்றா மரைப்பூவால் சேர்ந்தமலக் கட்டுவிடும்
உற்றவெப்பு தாகம் அதி ஒக்காளஞ்-சற்றுவிடா
மூல் எரிவுரத்தமூத்திரம் வயிற்றிசிவும்
ஞாலம்விடுத் தேகும் நவில்.

இ-ள். மலக்கட்டு, வெப்பு, தாகம், ஒக்காளம், மூலஎரிவு, இரத்தமூத்திரம், வயிற்றிசிவும்போம், இதனை ரோசாப்பூ என்பர். (௬௪௪)

காளாப் பூவின்குணம்.

கண்ணிற் படருங் கரும்படலம் வெண்படலம்
வண்ண உதிரப்பட லம் வன்சதைகள்-எண்ணாற்
காளிவ்நோய் போக்கும் அணங்கே சிறிய
களாவினது பூவொன்றுங் காண்.

இ-ள். கண்ணிற்படருங் கரும்படலம், வெண்படலம், உதிரப்படலம், சதைப்படலமும்போம். (௬௪௫)

செடியின் பூவகை-முற்றிறு.

கொடியின் பூவகை.

தாமரைப் பூவின் குணம்.

பருத்தநற் றாமரைப்பூ பல்வாந்தி நோயைத்
துரத்திவிடும் இன்னுஞ் சொலவோ-கரத்தில்
எடுத்தணைக்கக் கண்குளிரும் ஏகுஞ் சுரமும்
எடுத்தவி தாகமும்போம் எண்.

இ-ள். பலவாந்தி, சுரம், தாகமும்போம், கையிலெடுத்து ஒத்தினால் கண்குளிர்ச்சியுண்டாம். (௬௪௬)

வெள்ளைத்தாமரைப்பூவின் குணம்.

ஈரலைப் பற்றிமிக ஏறுகின்ற வெப்பமும்போங்
கோர மருந்தின் கொடுமைஅறும்-பாருலகில்
தண்டா மணத்தையுள்ள தாழ்குழலே காந்தல்விடும்
வெண்டா மரைப்பூவால் விள்.

இ-ள். ஈரல்வெப்பம், மருந்தின்கொடுமை, காந்தலும்போம்.()

அல்லிப் பூவின்குணம்.

மேகம்அறும் புண்ஆறும் விட்டேகும் நீரிழிவு
தாகந் தணியுந் தழல்அகலும்-வாகான
மெல்லியலே ஆயுண்மறை வேதியரெல் லாம்உரைக்கும்
அல்லிமக ராலே அறி.

இ-ள். மேகம், புண், நீரிழிவு, தாகம், அழலும்போம். (௬௪௮)

செவ்வல்லிப் பூவின் குணம்.

செவ்வல்லிப் பூவுக்குச் சேர்ந்திறங்கு நீர்ப்பிணியோ
டொவ்வுமே கப்பிணியும் ஓய்வதன்றி-இவ்வுலகிற்
கண்ணினோய் தீருங் கனத்தபித்த ரத்தமொடு
புண்ணினோய் பன்னோயும் போம்.

இ-ள். நீரிழிவு, மேகம், கண்ணோய், இரத்தபித்தம், புண், பல்நோயும்போம். (௬௪௯)

கழுநீர்ப்பூவின் குணம்.

உடற்குக் குளிர்ச்சியதாம் உள்உழலை மாற்றும்
அடற்கபஅ ரோசகத்தை ஆற்றுங்-கடற்குள்

எழு நீர்க் குமிழி யிகழு முலையாய்
கழுநீர் மலர்எனவே காண்.

இ-ள். உழலை, கபம், அரோசகமும்போம், குளிர்ச்சியுண்டாம்.

சாதிப்பூவின்குணம்-இதுவே-பிச்சிப்பூ.

முத்தோஷஞ் சென்னிவலி மூடுஞ்ச ரீரவெப்பம்
ஒத்த விழிகளின்நோய் ஓடுங்காண்-நித்தம்
விலகாத காந்தியுண்டாம் மேனிதனில் வாசங்
குலவுசா திப்பூவுக் கு.

இ-ள். முத்தோஷம், தலைவலி, உடல்வெப்பம், விழிநோயும் போம், தேககாந்தி, வாசமும் உண்டாம். (கருக)

மல்லிகைப் பூவின்குணம்.

போகமிக உண்டாகும் பொங்குகபங் கட்பிரமை
ஆகஅனல் சூனியமும் அண்டுமோ-பாகனையாய்
மன்னு திருவசியம் வாய்க்குஞ்சூ டென்றெவரும்
பன்னுமல்லி கைப்பூவாற் பார்.

இ-ள். கபம், கண்பிரமை, உடல்வெப்பம், சூனியமும் போம், போகம், இலட்சுமிவசியம், சூடும்உண்டாம். (கருஉ)

முல்லைப் பூவின்குணம்.

முல்லையெனும் ஊசிமல்லி மொய்த்தமலர் எவர்க்கும்
ஒல்லைமன நோயை ஒழிக்குங்காண்-மெல்ல
அழலைத் தணிக்கும் அரோசகத்தைப் போக்கும்
மழலைமொழி யாயறிந்து வை.

இ-ள். மனநோய், அழல், அரோசகமும்போம். (கருங)

வெட்சிப் பூவின்குணம்.

வெட்சிப்பூ மேகஅழல் விட்டோட்டும் வாசனையாம்
அட்சிவழி யாயுயிர்கொள் காரணங்கே-எச்சுஞ்
சுரமுடனே தாகந் தொலைக்கும் உலகில்
விரைவாய் இளைப்பகற்றும் பின்.

இ-ள். மேகவழல், சுரம், தாகம், இளைப்பும்போம், வாசமாக விருக்கும். (கருச)

தே-தூதுளம்-பூவின்குணம்.

புஷ்டியுண்டாந் தாதுவுமாம் பொங்கழகோ டாற்றன்மிகும்
முட்டற வைத்து முதிர்ந்தவனைக்-கட்டழகு
மாதுளத்தி னிங்கா துவைத்திடவும் எண்ணம்உற்றால்
தூதுளத்தின் பூவுண்ணச் சொல்.

இ-ள். தேகபுஷ்டி, தாதுபுஷ்டி, அழகு பலமும் உண்டாம். ()

வெங்காயப் பூவின்குணம்.

வயிற்றுச் சிறுநோயை வாத வலியை
உயித்தியஞ் செய்யாமல் ஓட்டும்-குயிற்றுத
சிங்காரக் கொங்கைச் செழுந்திருவே நாட்டினுறை
வெங்காயப் பூவெனவே விள்.

இ-ள். வயிற்றுநோய், வாதவலியும்போம். (சுருசு)

கொடிப்பூவகை-முற்றிற்று.

மரம்-செடி-கொடி-பிஞ்சுவகை.

வாழைப் பிஞ்சின்குணம்.

உதிரம் விழுகடுப்போ டுண்மூல ரத்தம்
உதிரில்விழு நீரிழிவும் ஏகும்-மதிநுதலே
பேழை வயிற்றுப்புண் பேருந் துவர்ஆர்ந்த
வாழைக்கச் சற்கு மருண்டு.

இ-ள். உதிரக்கடுப்பு, இரத்தமூலம், நீரிழிவு, வயிற்றுப்புண்ணும்
போம். (சுருஎ)

பலாப் பிஞ்சின்குணம்.

தாகம்போம் வந்தபித்தஞ் சாந்தமாம் ஆடவர்க்குப்
போகம் மிகப்பொழியும் பொய்யன்றே-மூகம்
அலஜ மந்தங் குன்மம்இவை அண்டிவருஞ் சொன்னேன்
கலசப்ப லாப்பிஞ்சுண் காண்.

இ-ள். தாகம், பித்தமும்போம், போகம், மந்தம், குன்மமும்,
உண்டாம். (சுருஅ)

அத்திப் பிஞ்சின்குணம்.

மூலக்கி ராணிஅறும் மூலவிரத் தந்நீருஞ்
சாலக் கடுப்புந் தரிக்குமோ-மாலரவத்

தூக்கிப் படவல்குற் றேகாய் துவர்ப்பைஉறும்
அத்திச் சிறுபிஞ்ச ருந்து.

இ-ள். மூலக்கிராணி, மூலரத்தம்; ஆசனக்கடுப்பும்போம். ()

தே-முருங்கைப் பிஞ்சின்குணம்.

சிக்குருக்கு யப்பிஞ்சத் திச்சுரத்திற் குஞ்சநீக்கும்
அக்குருக்கு ருப்பம் அரோசிகட்குஞ்-சுக்கிலத்தின்
கொச்சை யுறவருந்திக் கூறுவற்கு மாமதனைப்
பச்சையுற வருந்திப் பார்.

இ-ள். அஸ்திசுரம், எலும்புருக்குகிற வெப்பம், அரோசிகம் விந்துநஷ்டமும்போம். (௬௬0)

மாம்பிஞ்சின்குணம்-இதுவே-சூதப்பிஞ்சு.

கவைவாத பித்த கபம்அருசி வாந்தி
சுவைமறுத்த மந்தமெனுந் தோஷம்-இவையெல்லாங்
காதத்துக் கப்புறம்போங் கான மடமயிலே
சூதத்தின் புன்வடுவைத் துய்.

இ-ள். தொந்தவாதம், பித்தகபம், அருசி, வாந்தி, மந்ததோஷமும்போம். (௬௬௧)

நாரத்தங்கச்சலின் குணம்-இதுவே-போஜனகஸ்தூரி.

சீதம் விளையாது தீபனமும் உண்டாகும்
போத வயிற்றுப் பொருமலும்போம்-மாதேகேள்
எச்சும் தயிற்றில் எரிப்புழுச்சாம் நாரத்தங்
கச்சல் தனைஅருந்துங் கால்.

இதுவுமது.

அன்னம் இறங்கும் அரோசிகெடுந் தீபனமாம்
வன்னமிகுந் தாதுவும்வ ளர்ந்தேறும்-மன்னுமலர்
வாசனையே றுங்குழலார் வன்னேய் தனில்உண்ணும்
போசனகஸ் தூரிக்கெப் போதும்..

இ-ள். சீதம், வயிற்றுப்பொருமல், எரிப்புழு அரோசியும்போம் தீபனம், தாதுவும் உண்டாம், பத்தியத்திற்காகும். (௬௬௨) (௬௬௩)

மாதளம் பிஞ்சின்குணம்.

மலக்கழிச்சல் சீதத்தால் வந்த கழிச்சல்
சலக்கழிச்சல் சோரியாற் சாரும்-பலக்கழிச்சல்

மாளும் புளிப்பான மாதுளம்பிஞ் சால்அயிலே
ஆளுங்கண் மாதே அறி.

இ-ள். மலக்கழிச்சல், சீதக்கழிச்சல், சலக்கழிச்சல், இரத்தக்கழிச்சலும்போம். (சுசுச)

முகிழ்விரியாக்கத்தரிப்பிஞ்சின் குணம்.

அனலுடனே பித்தம் அகலும் மலம்போந்
தொனியுண்டாம் ஐயந் தொலையுஞ்-சனியாத
முத்திருக்கும் வெண்ணகையீர் மூடு முகிழ்விரியாக்
கத்தரிப்பிஞ் சுண்பவர்க்குக் காண்.

இ-ள். அனல், பித்தம், மலம், ஐயமும்போம், குரலின் ஓசையுண்டாம். (சுசுரு)

தே-அவரைப் பிஞ்சின் குணம்.

கங்குலுண விற்குங் கறிக்கு முறைகளுக்கும்
பொங்குதிரி தோடத்தோர் புண்சுரத்தோர்-தங்களுக்குங்
கண்முதிரைப் பில்லநோய்க் காரருக்குங் காமுறையா
வெண்முதிரைப் பிஞ்சாம் அதி.

இ-ள். இராக்காலப்போசனத்திற்கும், உண்ணும் மருந்துகளுக்கும், திரிதோஷத்தோருக்கும், புண்சுத்ததோருக்கும், கண்படலத்தோருக்கும், சுகமுண்டாம். (சுசுசா)

மரம்-செடி-கொடி-பிஞ்சுவகை-முற்றிற்று.

மரத்தின் காய்வகை.

வாழைக்காயின் குணம்.

வாந்திபித் தம்பேதி வாய்நீர் வயிறூதல்
ஆர்ந்தஅன லங்காசம் அண்டாதாஞ்-சூழ்ந்தேறு
செம்புனலுந் தென்பும்உண்டாந் திண்டி மிகப்பெருகும்
அம்புவியுள் வாழைக் காய்.

இ-ள். வாந்தி, பித்தம், பேதி, வாய்நீரூறல், வயிறூதல், அனல் காசமும்போம், உதிரம்பெருக்கு சந்தோஷம், அதிகபோஜனங் கொள்ளலும் உண்டாம். (சுசுஎ)

பலாக் காயின் குணம்.

உண்ணில்மிகு மந்தம் உறுதியாம் வாதநோய்
அண்ணும் இளைப்பிரைப்பும் அண்டுங்காண்-வண்ணப்

பலாக்காய்க்கு விந்துவுமாம் பாரி லுவமை
சொலாக்காம வாரிதியே சொல்.

இ-ள். மந்தம், வாதநோய், இளைப்பு, இரைப்பு, சாதுவும் உண்டாம். (௬௬௮)

அத்திக் காயின் குணம்.

அத்திக்காய் தன்னை அருந்தினால் ஆரணங்கே
எத்திக்கும் மேகம் இருப்பதுண்டோ-சத்திக்கும்
வாதம் அகலும் மலங்கழியுஞ் சூலையொடு
பீதன லும் புண்ணும்போம் விள்.

இ-ள். மேகம், வாதம், மலம், சூலை, சரீரவெப்பம், புண்ணும் போம். (௬௬௯)

முருங்கைக் காயின் குணம்.

சொல்லும் பிணியெல்லாந் தோல்வியாம் ஐயம்அறும்
பல்லுயிர்க்குத் தாதுமிகும் பத்தியமாம்-வில்லார்
பெருங்கைக்கா மன்றுதிக்கும் பெண்ணே நறிய
முருங்கைக்காய் தன்னை மொழி.

இ-ள். வாதமுதலிய பலநோய், ஐயமும்போம், தாதுஉண்டாம், பத்தியத்திற்காகும். (௬௭0)

அருநெல்லிக் காயின் குணம்.

அருநெல்லிக் காய்குளிர்ச்சி யாம்பித்தம் போக்கும்
மருவுதுவர்ப் பால்துரிசை மாற்றும் விரியுலகில்
தாகந் துயர்நீக்குஞ் சார்இரும லைத்தொலைக்கும்
ஆகக் கொதிப்பகற்றும் ஆங்கு.

இ-ள். பித்தம், துன்பம், தாகம், துயர், இருமல், உடல்கொதிப்பும்போம், குளிர்ச்சியுண்டாம். (௬௭௧)

தே-நெல்லிக் காயின் குணம்.

பித்தமன லைப் பிரசம்வாய் நீர்வாந்தி
மத்தமலக் கட்டும் மயக்கமுமில்-ஒத்தவுரு
வில்லிக்கா யம்மருக்கா மென்றாட்கா லந்தோர்நே
நெல்லிக்கா யம்மருந்து ணி.

இதுவுமது.

நெல்லிக்காய்க் குப்பித்தம் நீங்கும் அதன்புளிப்பால்
செல்லுமே வாதம்அதிற் சேர்துவரால்-சொல்லும்ஐயம்

ஓமேம்இதைச் சித்தத்தில் உன்ன அனலுடனே
கூடுபிற மேகமும்போங் கூறு.

இ-ள். பித்தம், அனல், ஐயம், பிரசம், வாய்நீரூறல், வாந்தி, உன்மத்தம், மலக்கட்டு, மயக்கமும்போம், மன்மதன் சரீரத்தினுடைய அழகு உண்டாம், பகற்காலத்தை, அறிந்து, நெல்லிக்காயாகிய அமிர்தத்தை, நீ உண், காய்க்கு, பித்தம், புளிப்புக்கு, வாதம், துவருக்கு, ஐயம், இதைநினைக்க, அனலும்,பிறமேகமும்போம். (கூஎஉ)(கூஎங)

புளியங்காயின்-குணம்.

சோபமொடு பித்தந் தொலைக்கும் உரிசைதருங்
கோபமுற வாயுவையே கொண்டாடுங்-தாபக்
கருப்பமட வார்க்குக் கனவிருப்பம் உள்ளே
பருப்பைஉறுப் பைம்புளியங் காய்.

இ-ள். சோபம், பித்தமும்போம், வாய்வு, கருப்பஸ்திரிகளுக்கு விருப்பமும் உண்டாம். (கூஎச)

மாங்காயின் குணம்.

தாதுநஷ்டம் வாதந் தனிக்கிரந்தி யாம்பசிபோம்
காதுமுட்டப் பக்குவிடுங் காயமதில்-ஓதுகின்ற
பாங்காறுப் புண்வளரும் பற்கூசுஞ் சொற்குளறும்
மாங்காய்உண் பாரை மறு.

இ-ள். தாதுநஷ்டம், வாதம், கிரந்தி, ஆறுப்புண், பல்கூசல்,சொல்குளறுதலும், உண்டாம், பசியும், அறிவும்போம். (கூஎரு)

மரியங்காயின்குணம்-இதுவே-புளிமாங்காய்.

வாயின் கசப்பகலும் மாறு அரோசகமும்
ஓயுஞ் சுரத்தோர்க் குவப்பாகுந்-தூயவரித்
தேனமரும் வார்கூந்தற் றெய்வப் பெடையனமே
கானமரி யங்காயைக் கண்டு.

இ-ள். வாய்கசப்பு, அரோசகமும்போம், சுரத்தோர்க்காகும்.()

பச்சைக்கடுக்காயின்குணம்-இதுவே-அரிதகிக்காய்.

பச்சை அரிதகிக்காய் பண்ணும் வகைகேளாய்
இச்சைஉறத் துவைத்துப் பிட்டமூத்தி-வைச்செடுத்துத்

தின்ன அரோசிஅறுந் தீபனமாம் முன்மலம்போம்
அன்னநடை மாதே அறி.

இ-ள். இடித்து உப்புசேர்த்துஉண்ண, அரோசி, மலமும்போம், தீபனம் உண்டாம். (சுஎஎ)

கொடிஎலுமிச்சங் காயின்குணம்.

வாந்திமயக்கம் வயிற்றுக் கழிச்சல் அனல்
சேர்ந்த அரோசகமுந் தீருங்காண்-தீர்ந்த
தொடியமரு மங்கையிளந் தோகாய் அடவிக்
கொடியெலுமிச் சங்காயைக் கூறு.

இ-ள். வாந்தி, மயக்கம், கழிச்சல், அனல், அரோசகமும் போம். (சுஎஅ)

எலுமிச்சங்காயின் குணம்.

திதில்எலு மிச்சங்காய் சேர்முத்தோ ஷத்தையும்உள்
வாதகபஞ் சூலையையும் மாகொடிய-சாதியெனுஞ்
சர்த்திகுன் மத்தையும்உள் தங்கமருந் திட்டதையும்
பித்தவெப்பை யுந்தணிக்கும் பேசு.

இ-ள். முத்தோஷம், வாதகபம், சூலை, சர்த்திகுன்மம், மருந்திடுதல், பித்தவெப்பமும் போம். (சுஎசு)

எலுமிச்சங் காயின் குணம்.

தந்தம்விழப் பண்ணுஞ் சலவை தனைக்கொடுக்கும்
வெந்துமிக விந்துவைவீ ழச்செய்யும்-அந்த
எலுமிச்சங் காய்போல் இருக்குங் கொடிய
கலுமிச்சங் காய்க்குணத்தைக் காண்.

இ-ள். பல்லின்பலமும் விந்தின் பலமுங்கெடும், சலவை யுண்டாம். (சுகுO)

நாரத்தங்காயின் குணம்.

நன்றி யுறவுலவில் நாரத்தங் காய் அருந்த
வென்றி தரும்புளிப்பால் மெய்ச்சுத்தம்-அன்றியுமோ
வாதமொடு குன்மம்அறும் வாற்கிருமி யும்போகும்
காதலுறு தீபனமாங் காண்.

இ-ள். வாதம், குன்மம், வாலுள்ள புழுவும்போம், தேகசுத்தமும், தீபனமும் உண்டாம்.

கடாரநாரத்தங் காயின்குணம்.

பித்தமொடு வாயிற் பெருகறல் அரோசகம்
பத்தியமாம் நோயிற் பருகலாங்-குத்துங்
கடாரி யனையவிழிக் கன்னிமட மாதே
கடாரநாரந் தங்காயைக் கண்டு.

இ-ள். பித்தம், வாய்நீரூறல், அரோசகமும்போம், பத்தியத்திற் காகும். (சுஅ௨)

கொளுஞ்சிநாரத்தங்காயின்குணம்-இது-கொடியநாரத்தை.

சொல்லுங் கொளுஞ்சிக்காய் தோன்றுகின்ற காசத்தை
வல்லவுள் சீதத்தை யாருதத்தைப்-பொல்லாத
ஐயத்தைத் தாகத்தை அப்பொழுதே நீக்கிவிடும்
வையத்துட் பெண்ணரசே வாழ்த்து.

இ-ள். காசம், சீதம், வாய்வு, ஐயம், தாகமும்போம். (சுஅ௩)

தேங்காயின் குணம்.

(சுபாவம்) சூடும், வறட்சியுமாம், (பிரயோசனம்) அதிகவுணவாம், (சௌக்கியம்) சுத்தஇரத்தமுண்டாகும், தாதுவிளையும், இடுப்புவலி, கீல்வாதம், பாரிசவாதமுதலிய வாதரோகங்களைக் கண்டிக்கும், ஈரலுக்கு வலிவுகொடுக்கும், உள்புண்களையும், மூலத்தையும் ஆற்றும், வாய்நாற்றத்தையெடுக்கும் இதின்வழுக்கையில் கற்கண்டு சேர்த்துச் சாப்பிட்டுவர மூலச்சூட்டை யெடுக்கும், விந்துவிளையும் முற்றினதேங்காய்ப் பால்சாப்பிடப் பேதியாகும், இதின் இளநீரில் வறுத்த கொத்தமல்லிச்சூரணம் ஊறவைத்துக் குடிக்க நீர்த்தாரையில் உதிரம் ஒழுகுவதைநிறுத்தும், இதின்கொப்பரையில்அழவணஇலை சேர்த்து அரைத்து பூசிஸ்நானஞ் செய்யச்சொறி, தினவு முதலியதுந்தீரும், இதை நெல்லோடு வேகவைத்துக் குழந்தைகளுக்குக் கொடுக்க வயிற்றிலுள்ள கிருமிகள்சாகும், இதின் தயிலத்துக்குப் புத்தியதி கரிக்கும், இடுப்புவலி, மூலவலி முதலியவைகள் சொஸ்தமாகும், (வியாதி) சூட்டுடம்புக்குதவாது, நெஞ்சுகரிப்பு, ஒக்காலம், இவையுண்டாகும், (பரிகாரம்) எலுமிச்சம்பழ முதலிய புளித்தபதார்த்தங்களாம்.

மரத்தின்காய்வகை முற்றிற்று.

செடியின் காய்வகை.

தே-கத்தரிக் காயின்குணம்-வி-ம்.

பண்டு மாண்ட கிரந்தியைப் பாலிக்கும்
உண்ட கைக்குந் தினவையுண் டாக்கிடும்
கண்டு கட்குங் குரங்கென நாளுமாங்
கண்டுவிட்டது கத்தரிக் காயதே.

இ-ள். கிரந்தி, தினவும் உண்டாம். (சுஅச)

கத்தரிக்காய்-அதின்பிஞ்சு-இவைகளின் குணம்-வெண்பா.

கத்தரிக்காய் பித்தங் கனன்றகபந் தீர்த்துவிடுந்
தொத்து சொறிசிரங்கைத் தூண்டிவிடும்-மெத்தவுந்தான்
பிஞ்சான கத்தரிக்காய் பேசமுத்தோ ஷம்போக்கும்
மஞ்சார் குழலே வழுத்து.

இ-ள். காய்க்கு, பித்தம், கபமும்போம், சொறி, சிரங்கும் உண்டாம், பிஞ்சுக்கு முத்தோஷமும்போம். (சுஅரு)

கண்டங்கத்தரிக் காயின்குணம்.

ஐயம்அறுந் தீபனமாம் ஆமமலக் கட்டுகளும்
பையவெளி ஆகிவிடும் பார்மீதிற்-செய்யமலர்த்
தொத்திருக்கும் வார்குழலே தூமண லாருங்கண்டங்
கத்தரிக்கா யைப்புசிக்குங் கால்.

இ-ள். ஐயம், ஆமம், மலக்கட்டும்போம், தீபனம் உண்டாம். ()

முள்ளிக் காயின்குணம்.

வாதபித்த ஐயத்தை மாற்றும் அனல்போக்கும்
ஓது சுவாசத்தை ஒட்டுங்காண்-பூதலத்துள்
துள்ளிப்பாய் கெண்டைவிழித் தோகாய்கேள் எப்போதும்
முள்ளிக்காய் செய்யும் முறை

இ-ள். வாதம், பித்தம், ஐயம், அனல், சுவாசமும்போம். ()

கொத்தவரைக் காயின்குணம்.

கொத்தவரைக் காய்பித்தங் கூடாது பத்தியத்தில்
மெத்தெனவும் ஐயம் விளைக்குங்காண்-பித்தத்தால்
சீதம் அகற்றும்என்பார் தின்மருந்தைப் பாழாக்கும்
வாதக் குடைச்சல்தரு மால்.

இ-ள். சீதம்போம், பித்தமும், வாதக்குடைச்சலும் உண்டாம், பத்தியத்திற்காகாது, ஐயமுண்டாம், மருந்தைப் பாழாக்கும். ()

வெண்டைக் காயின்குணம்-இதுவே-வெண்டைக்காய்.

கண்ட கிராணி கடிய அதிசாரம்
விண்டவெண் சீதரத்தம் மேவுங்காண்-ஒண்டொடியே
வண்டற்காய் வெய்யகப வாதமிகும் வாய்க்குணவாம்
வெண்டைக்காய் உண்பார்க்கு விள்.

இ-ள். கிராணி, அதிசாரம், வெண்சீதரத்தம், கபவாதமும்உண்டாம், வாய்க்கு உணவாகும். (௬௮௯)

மணத்தக்காளிக் காயின்குணம்.

மலம்இளகுந் தானே மகாகபமும் போகும்
பலமிகுந்த வாதம்போம் பார்க்குள்-மலைபோற்
பணைத்தப்பூ ரித்தமுலைப் பாவாய்கேள் நல்ல
மணத்தக்கா ளிக்காயை வாழ்த்து.

இ-ள். மலம் இளகும், கபம், வாதமும்போம். (௬௯௦)

மணத்தக்காளி வற்றலின்குணம்.

நீர்ப்பேதி யாகும் நில்லவமனம் போம்வாயிற்
கூர்ப்ப இளைப்பும்அறுங் கூறுவதோ-பார்க்கிலினும்
மிக்கான நோயோர் விரும்புகின்ற நல்லமணத்
தக்காளி வற்றலுக்குத தான்.

இ-ள். நீர்ப்பேதி யுண்டாம், வாந்தி, இளைப்பும் போம், பிணியாளர்க்காகும். (௬௯௧)

சுண்டைக் காயின்குணம்.

நெஞ்சின் கபம்போம் நிறைகிருமி நோயும்போம்
விஞ்சுவா தத்தின் விளைவும்போம்-வஞ்சியரே

வாயைக் கசப்பிக்கும் மாமலையில் உள்ளசுண்டைக்
காயைச் சுவைப்பர்க்குக் காண்.

இ-ள். கபம், கிருமி, வாதமும்போம், கசப்பாக விருக்கும். ()

சுண்டைக்காய் வற்றலின்குணம்.

பித்தஅ ரோசகம்போம் பேராப் புழுச்சாகும்
உற்ற கிராணிஅறும் உட்பசியாஞ்-சத்தியமாய்ப்
பண்டைக் குதஆமம் பற்றறும்இங் கியாரையுந்தான்
சுண்டைக்காய் வற்றல்உண்ணச் சொல்.

இ-ள். பித்தஅரோசகம், புழு, கிராணி, சீதமும்போம், பசியுண்டாம். (சுகூங)

பாவட்டங் காயின்குணம்.

வாத சுரந்தணியும் வாய்அருசி ஏகிவிடுஞ்
சீதக் கடுப்பகலுந் தேமொழியே-வாதுபுரி
பித்தஅதி சாரமொடு பேராக் கபமுமறும்
உற்றபா வட்டங்காய்க் கு.

இ-ள். வாதசுரம், அருசி, சீதக்கடுப்பு, பித்தஅதிசாரம்,கபமும் போம். (சுகூச)

களாக்காயின்குணம்-இதனைக்-கிளாக்காய்-என்பர்.

காதுவிடாய் தாகங் கடியபித்தம் வாந்தியும்போம்
மாதே அரோசகமும் மாறுங்காண் - தீதாம்
இரத்தபித்தம் போகும் இனிய களாக்காய்க்
குரத்த பசியும்உண்டாம் இது.

இ-ள். காதுவிடாய், தாகம், பித்தம், வாந்தி, அரோசகம், இரத்த பித்தமும்போம், பசியுண்டாம், களா-கிளாஎனமருவியது. ()

ஊமத்தங் காயின்குணம்.

வாதம்அறும் பித்த மயக்கம்உறும் மாநிலத்தில்
தீதுகரப்பான் சிரங்ககலுங் - கோதாய்கேள்
மாமத்த மாகும் வறட்சிஎல் லாம்போகும்
ஊமத்தங் காய்க்கென் றுரை.

இ-ள். பித்தம், மயக்கம், பயித்தியமும் உண்டாம், வாதம் கரப்பான், சிரங்கு, வறட்சிகளும்போம். (சுகூசு)

செடியின் காய்வகை-முற்றிற்று.

கொடியின் காய்வகை.

கலியாணப் பூசினிக்காயின் குணம்.

பெரும்பூ சினிக்காய்க்குப் பித்தமொடுட் காய்ச்சல்
அருஞ்சார நீர்க்கட் டருகல்-மருந்திடுதல்
பித்தசுரம் அஸ்திசுரம் பேய்வறட்சி மேகமும்போம்
மெத்த அனிலம்உறும் விள்.

இ-ள். பித்தம், உட்காய்ச்சல், நீர்க்கட்டு, நீரருகல், மருந்திடுதல், பித்தசுரம், அஸ்திசுரம், வரக்ஷி, மேகமும்போம், வாயுஉண்டாம். ()

பறங்கிகாயின்குணம்-இதுவே-பூசிணிக்காய்.

அனல்அழலை நீக்கும் அதிபித்தம் போக்குங்
கனல்எனவே வன்பசியைக் காட்டும்-புனல்ஆரும்
மிக்கஐயம் உண்டாக்கும் மென்கொடியே எப்போதும்
சர்க்கரைப்ப றங்கிக்காய் தான்.

இ-ள். அனலால்வரும் அழற்சி, பித்தமும்போம், பசி, ஐயமும் உண்டாம். (சுசுஅ)

குழிப்பறங்கிக்காயின்குணம்-இதுவே-கோடைப்பூசினி.

வாதக் குடைச்சலுடும் மாறாத ஐயமுமாம்
போதவளிச் சூலையுண்டாம் பொற்கொடியே-ஓதுங்
குழிப்பறங்கிக் காய்க்குக் குளிர்ச்சி நிறையும்
பழிக்கடுத்த மாந்தமிகும் பார்.

இ-ள், வாதக்குடைச்சல், ஐயம், வாதசூலைநோய், குளிர்ச்சி, மாந்தமும் உண்டாம். (சுசுசு)

குமட்டிக்காயின் குணம்-இதனை-மூலாங்காய்-என்பர்.

தந்தம் விழுந்திடுமே தாதுமெலிந்திடுமே
விந்தைமிகுங் காந்தி விலகிடுமே-சந்ததமும்
வாதம் மிகுந்திடுமே வந்துகபஞ் சேர்ந்திடுமே
ஓதுகுமட் டிக்காயால் உன்.

இ-ள். பல், தாது, காந்தியும் போம், வாதம், கபமும், உண்டாம். (எ00)

சுரைக்காயின் குணம்.

வாதபித்தம் வாய்அருசி வல்பிலி கஞ்சிதம்
ஒதிருத்து நோயும்உண்டாம் உள்ளனல்போம்-ஓதத்
திருப்பாற் கடற்றிருவே திக்குணத்தை மேவுஞ்
சுரைக்காயைத் தின்பவர்க்குச் சொல்.

இ-ள். வாதபித்தம், அருசி, பிலிகம், சிதம், மார்புநோயும் உண்டாம், உள்ளனல்போம். (எ0க)

வெள்ளரிக்காயின் குணம்.

உண்டருந்தத் திளமூப்பும் உண்மருந்தைத் தான் முடிக்குங்
கண்டகரப் பானைக் கடுக்குங்காண்-பண்டிதரே
உள்ளரிப்பை நீர்க்கடுப்பை ஊரைவிடுத் தோட்டிவிடும்
வெள்ளரிக்கா யின்குணத்தை விள்.

இ-ள். கரப்பான், உள்ளரிப்பு, நீர்க்கடுப்பும்போம், புசித்தஉடன் உண்ணபசியுண்டாம், தின்மருந்துக்காகும். (எ0உ)

வெள்ரிப்பிஞ்சு-காய்-பழம்-விதை-இவைகளின்குணம்.

பிஞ்சவெள்ள ரிக்காய்க்குப் பேசுதிரி தோஷம்போம்
வஞ்சியரே முறிக்காய் வாதமுமாம்-நைஞ்சகனி
உண்டாற் சயித்தியமாம் உள்ளிருக்கும் அவ்விதையைக்
கண்டாலும் நீர்இறங்குங் காண்.

இ-ள். பிஞ்சுக்கு, திரிதோஷம்போம், காய்க்கு, வாதம், உண்டாம், பழத்துக்கு சைத்தியம் உண்டாம், விரையைக் கண்டாலும் நீர்இறங்கும். (எ0ந)

கக்கரிக் காயின்குணம்-இதுவே-முள்வெள்ளரிக்காய்.

கக்கரிக்காய் பித்தங் கடியுங் கபமுயர்த்தும்
மெய்க்குக் குளிர்ச்சிதரும் மென்னுதலே-முக்குகின்ற
மூல அழல்தணிக்கும் முடிராத்த பித்தத்தைச்
சால அகற்றிவிடுஞ் சாற்று.

இ-ள். பித்த, மூலச்சூடு, இரத்தபித்தமும் போம், கபம், குளிர்ச்சியும் உண்டாம் (எ0௪)

ஆகாயக்கக்கரிக் காயின்குணம்.

ஐயம் விளையும் அழல்கரப்பான் பித்தமும்போம்
மெய்யுள் அதி போகம் விளையுங்காண்-செய்மருந்தின்
காந்தியும்போம் ஆகாயக் கக்கரிக்காய் தின்றவர்க்கு
வாந்தியும்போம் மாதே வழுத்து.

இ-ள். அழல், கரப்பான், பித்தம், மருந்தின்வேகம், வாந்தியும் போம், ஐயம், போகமும், உண்டாம். (எ0ரு)

அவரைக் காயின்குணம்.

கொட்டைஅவ ரைக்காயால் கோர அரோசகநோய்
கிட்டாதென் பார்மருந்தின் சீர்த்திகெடுந் துட்டமந்தம்
பையஉண்டாம் பேதிஉண்டாம் பாரிப் பனிலம்உண்டாம்
ஐயம்உண்டாஞ் சூலையும்உண் டாம்.

இ-ள். அரோசகம், மருந்தின்பலமும்போம், மந்தம், பேதி, பாரிப்பு, அனிலம், ஐயம், சூலையும்உண்டாம். (எ0சு)

வாள்அவரைக் காயின்குணம்.

அதிபித்தம் வாந்தி அரோசகமும் உண்டாங்
குதிவாதம் வாய்ச்சுரப்புங் கூடுந்-துதிசக்ர
வாளவரை யொத்தவனமுலைமா தேபெரிய
வாளவரைக் காயால் மதி.

இ-ள். பித்தம், வாந்தி, அரோசகம், குதிவாதம், வாயில்நீர் சுரக்குதலும் உண்டாம். எ0எ)

பீர்க்கங் காயின்குணம்.

தின்லவுடன் பீர்க்கங்காய் சீதம்உறுங் காண்பித்தம்
ஒன்றுமழுன் முசலயாநேமே-மன்றலணிக்
காரளகக் கச்சுமுலைக் காரிகைமீ வாதகபம்
நேர்அளவைத் தாண்டும் நினை.

இ-ள். சீதம், பித்தம், வாதகபமும், உண்டாம். (எ0அ)

புடலங் காயின்குணம்.

போகம் விளையும் பொருந்தி வளரும்ஐயம்
ஆகம்அதிற்பித்தம் அணுகுங்காண்-மேக
படலங் கயிலளகப் பாவாய்கேள் நாளும்
புடலங்காய்க் குள்ள புகழ்.

இ-ள. போகம், ஐயம், பித்தம், மேகபடலமும் உண்டாம். ()

பன்றிப்புடலங் காயின்குணம்.

கரப்பான் சொறிசிரங்கு காணுச்சிலந்தி
உரப்பாம் விஷக்கடியும் உண்டாம்-உரைத்தவகை
அன்றிச் சயித்தியமும் ஆம்பன்றி தன்னையொத்த
பன்றிப் புடலுக்குப் பார்.

இ-ள். கரப்பான், சொறிசிரங்கு, காணுசிலந்தி, இறங்கியவிஷம் ஏறுதல், சயித்தமும் உண்டாம். (எகo)

மிதிபாகல் காயின்குணம்.

பித்தமொடு வாதப் பெருக்கைமிக உண்டாக்குந்
தந்தகரப் பானைத் தருவிக்கும்-பற்றிரத
தாரபா ஷாணந் தமைமுறிக்குந் தப்பாது
காரவல்லி யாம்பாகற் காய்.

இ-ள். பித்தம், வாதபெருக்கம், கரப்பானும் உண்டாம், இரச பாஷாணங்களை குறிக்கும். (எகக)

கொம்புப்பாகல் காயின்குணம்.

மருந்துகளின் நற்குணத்தை மாற்றும் அஃதொன்றோ
திருந்தவளி வாதத்தைச் சேர்க்கும்-பொருந்துபித்தங்
கூட்டும்அவ பத்தியத்தைக் கொண்டிருக்கும் வன்கரப்பன்
காட்டுங்கொம் புப்பாகற் காய்.

இ-ள். மருந்துகளின் குணம்போம், வளி, வாதம், பித்தம், கரப் பானும் உண்டாம், பத்தியத்திற்காகாது. (எகஉ)

காட்டுப்பழுபாகல் காயின்குணம்.

போஜனம்உட் செல்லும் பொருந்துபசி உண்டாகும்
காசபித்த வாதமிகக் காணுவாம்-நேசமுற

வாட்டுப் படாக்கொங்கை மாதே குறிஞ்சிநிலக்
காட்டுப் பழுப்பாகற் காய்க்கு.

இ-ள். போஜனவிருப்பம், பசியும் உண்டாம், காசம், பித்தம்வா தமும்போம். (எகங)

அதளைக் காயின்குணம்.

அதளைக்காய் வாய்க்குருசி யாய்இருக்குந் தின்றாற்
கதளவொட்டாப் பித்தங் கதிக்கும்-பதலத்தின்
மந்தம்உண்டாம் வாயுமிக வந்தடருந் தப்பாதே
கந்த மலர்க்குழலாய் காண்.

இ-ள். பித்தம், மந்தம், வாய்வும் உண்டாம், வாய்க்குருசியாயி ருக்கும். (எகச)

தூதுளங் காயின்குணம்.

ஐயமுடன் பித்தம் அகலும் அரோசகம்போந்
தையலே வாதந் தணியுங்காண்-வையமிசை
சூழுங் குடல்வாதம் ஓடும் மலம்ஒழியுந்
தூதுளங் காய்உண்ணச் சொல்.

இ-ள். ஐயம், பித்தம், அரோசகம், வாதம், குடல்வாதம், மல மும்போம். (எகரு)

பயற்றங் காயின்குணம்.

ஐயம் அகலும் அரோசிகெடுந் தீபனமாம்
பையுதிர வாய்வும் பறக்கும்என்பார்-செய்யும்
நயத்த அவுஷதமும் நாசம் அடையும்
பயற்றங்காய் தன்னைஉண்டு பார்.

இ-ள் ஐயம், அரோசி, உதிரவாய்வும்போம், தீபனம், அவிழ்த நாசமும் உண்டாம். (எகசு)

கோவைக் காயின்குணம்.

வாயின் அரோசகம்போம் மாறா அழலைஅறும்
[illegible]ற் கபம்அகலும் நுண்ணிடையே-தூய அதன்
[illegible] கருசி மருவுகரப் பான்போகுஞ்
சுத்தக்கோ வைக்காயைச் சொல்.

இ-ள். காய்க்கு, அரோசகம், அழலை, கபமும்போம், வற்றலுக்கு, அருசி, கரப்பானும்போம். (எகஎ)

சுக்கான் காயின்குணம்.

மைக்குழலே நீகேளாய் வாதம்அறும் பித்தம்என்பார்
சுக்கான்காய் வற்றல்அது தொல்லுலகில்-கைக்கின்ற
வாயுவை நீக்கும் வரும்அருசி போக்கிவிடும்
நீயும் அறிவாய் நிசம்.

இ-ள். காய்க்கு, வாதம்போம், பித்தம் உண்டாம், வற்றலுக்கு, வாய்வு, அருசியும்போம். (எகஅ)

மிளகுக் காயின்குணம்.

அளவைஉறுக் காரம் அடைந்திருக்கும் வாத
விளைவை எல்லாம்அறுக்கும் மெய்யே-மிளகின்காய்
கண்டவர்க்கும் இன்பமாங் காரிகையே சிழ்மூலங்
கொண்டவர்க்கு நன்மருந்தாங் கூறு.

இ-ள். வாதம், சிழ்மலமும்போம், அதிககாரம், இன்பமும்உண்டாம். (எகக)

தே-ஆற்றுத் தும்மட்டிக் காயின்குணம்-இதுவே-கலிங்கம்.

கிடையெங்கே சோம்பலெங்கே கேடுறச்செய் வாதக்
கடையெங்கே யாற்றுக் கலிங்க-மடைதிறக்கின்
அண்டை யடைசலெங்கே யாயிழையார் சூதகத்தின்
உண்டை யுடைசலெங்கே யோது.

இ-ள். சோம்பல், வாதம், ஸ்திரிகள், சூதக்கட்டியும்போம். ()

சிகைக் காயின்குணம்-இதனைச்சியக்காய்-என்பர்.

வாந்திதரும் பேதிதரும் வஸ்திரகா யஞ்செய்து
மோந்தால் நசியம்வெகு முக்கியமாம்-நேர்ந்த
வகைநெய்யைப் போக்கிவிடும் மாதரசே நாளுஞ்
சிகைக்காய் அதனைத் தெரி.

இ-ள். வாந்தி, பேதியும் உண்டாம், தலைமுதலான விடங்களில் பூசும் நெய்யைப்போக்கிவிடும், நசியத்திற்கு வெகுமுக்கியம். (எ௨க)

கொடியின் காய்வகை முற்றிற்று.

மரத்தின் பழவகை.

விளாம்பழத்தின் குணம்.

எப்போதும் மெய்க்கிதமாம் ஈளையிரு மல்கபமும்
வெப்பாருந் தாகமும்போம்மெய்ப்பசியாம்-இப்புவியில்
என்றாகிலுங் கனிமேல் இச்சைவைத்துத் தின்னவெண்ணித்
தின்றால் விளாங்கனியைத்தின்.

இ-ள். ஈளை, இருமல், கபம், வெப்பு, தாகமும்போம், பசியுண்டாம். (எஉஉ)

இலந்தைப் பழத்தின்குணம்.

பித்தம் மயக்கருசி போராப் பெரும்வாந்தி
மொத்தனிலம் எல்லாம் முடிந்திடுங்காண்-மெத்த
உலர்ந்த வெறும்வயிற்றில் உண்டால் எரிவாம்
இலந்தை நறுங்கனியை எண்.

இ-ள். பித்தமயக்கம், அருசி, மிகுவாந்தி, வாதமும்போம், வெறும்வயிற்றில் தின்றால் எரிவு உண்டாம். (எஉங)

தே-வாழைப்பழத்தின்குணம்-இதுவே-அரம்பைக்கனி.

சுத்த அருச்சுனஞ்செய் சோமநோ யென்பதுவும்
பித்தநோ யென்னப் பிறந்தவையு-முற்றி
வரம்பைக் கடந்த மதமூர்ச்சை யும்போம்
அரம்பைக் கனியுண் டறி.

இ-ள். சோமநோய், பித்தநோய், மதமூர்ச்சையும்போம். ()

எண்வகை-வாழைப்பழத்தின்குணம்.

செவ்வாழை வெள்வாழை சேர்ந்தரச தாளிமொந்தன்
ஒவ்வும்இவை நோயோர்க் குலகத்தில்-கவ்வடுக்கு
வாழைமலை வாழைபசும் வாழைகரு வாழைகளில்
ஊழிகரு வாழைநன்றும் ஓது.

இதுவுமது.

ஓதல்உற்ற வாழைஎட்டில் உற்ற கனிகள்எல்லாம்
வாதநோய்க் காகாது வையகத்தோர்-போதஉண்ண

எண்ணம்உண் டாயின் இதற்கிசைந்தசத்துருவே
டுண்ண இடர்இல்லை உரை.

இ-ள். எட்டுவிதவாழைப்பழமும் வாதம்உண்டாம், உண்ணவே ண்டுமானல் அதன் சத்துருவுடன் உண்ணவும். (எ௨௫) (எ௨௬)

பேயன் வாழைப்பழத்தின்குணம்.

பேயன் பழம்அருந்தில் பித்தரோ கம்போகும்
வாயுஉண் டாகும் மலங்கழியுந்-தீயே
தாகத்தில் அதிகுளிர்ச்சி ஆகும் அணங்கே
சகத்தில் இதைஅறியச் சாற்று.

இ-ள். பித்தரோகம், மலம், வெப்பும்போம், வாய்வு, குளிர்ச்சி யும் உண்டாம். (எ௨எ)

மொந்தன் வாழைப்பழத்தின்குணம்.

மந்தமுட னேய்களத்தல் வாதம் வலிசிதந்
தொந்தம்உறு தாகம்இவை தோன்றுங்காண்-புந்திவலி
ஒட்டுபித்தங் காமாலை உள்வறட்சி யுந்தொலையும்
நாட்டுமொந் தன்பழத்தி னல்.

இ-ள். மந்தம், நோய்கள், வாதம், வலி, சிதம் தாகமும் உண் டாம், மனதின்பலம், பித்தம், காமாலை, உள்வறட்சியும்போம். ()

நவரை வாழைப்பழத்தின்குணம்.

மாந்தமொடு நமைச்சல் வாதகப மும்பெருகும்
பாந்தல் உறுகரப்பான் பாவுங்காண்-பூந்தடைக்கை
யாழைப் பழித்தமொழி யன்னமே கேள்நவரை
வாழைப் பழத்தால் மதி.

இ-ள். மந்தம், நமைச்சல், வாதகபம், கரப்பானும் உண்டாம். ()

பலாப் பழத்தின்குணம்.

தித்திக்கும் வாதசி லேஷ்மபித்தம்உண்டாக்கும்
மெத்தக் கரப்பான் விளைவிக்குஞ்-சத்தியமாய்ச்
சேராப் பிணியைஎல்லாஞ் சேர்க்கும் ஒருநொடியிற்
பாராய் பலாவின் பழம்.

இ-ள். வாதம், சிலேஷ்மம், பித்தம், கரப்பான், மற்று மநேகவி யாதிகளும்உண்டாம். (எ௩0)

தின்றாற் றினவெடிக்குந் தீபனம்போம் நெஞ்செரிவாம்
அன்றே விழிநோய் அடருங்காண்-துன்றிமிக
வாதக் கரப்பானும் வன்கிரந்தி யும்பெருகுஞ்
சூதக் கனியின் சுகம்.

இ-ள். தினவு, நெஞ்செரிவு, விழிநோய், வாதக்கரப்பான், கிரந்தியும் உண்டாம், தீபனம்போம். (எ௬க)

மாம்பழம்-காய்-பிஞ்சு-இவைகளின்குணம்-வி-ம்.

வேத சத்திய மாக விளம்புவோர்
தாது விர்த்திக்குந் தம்பன மாங்கனி
போதம் மர்த்தனம் புன்காயி னால்வடு
வாத பித்த கபங்களை மாற்றுமே.

இ-ள். பழத்துக்கு தாதுவிர்த்தியுண்டாம், காய்க்கு, அறிவுகேடு உண்டாம், பிஞ்சுக்கு, வாதம், பித்தம், கபமும்போம். (எ௬உ)

புளியம்பழத்தின்குணம்-வி-ம்.

புததியும் மந்த மாகும் பொருமியே உடலம் ஊறும்
பத்தியந் தவறுஞ் சந்நி பாதமாஞ் சுரங்கள் வீறுஞ்
சர்த்தியும் பித்துந் தீருந் தனுவெலாம் வாதம் ஏறும்
மத்தியந் தாது புஷ்டி வருந்திரைநரைபு ளிக்கே.

இ-ள். புத்திமந்தம், உடலூதுதல், பத்தியந்தவறுதல், சந்நிபாத சுரங்கள், உடலில் வாதநோயதிகமும் உண்டாம், சர்த்தி, பித்தம், தாதுபுஷ்டியும்போம். (எ௬௩)

பழம்புளியின்குணம்-வெண்பா.

தீதில் பழம்புளியைச் சேர்க்கத் திரிதோஷம்
வாதமொடு சூலைகபம் மாறுங்காண்-ஓதுசுரஞ்
சர்த்தியென்ற தோஷம்இவை சாந்தமாங் கண்ணோய்போம்
பித்தமென்ற பேர்ஒழியும் பேசு.

இ-ள். திரிதோஷம், வாதம், சூலை, கபம், சுரம், சர்த்தி, கண்ணோய், பித்தமும்போம். (எ௬௪)

பனம்பழத்தின்குணம்.

நாளும் பனம்பழத்தை நல்அமு தாய் உண்ணுங்கால்
ஆளுங் கரப்பான் அழுகிரந்தி-நீளுமலஞ்

சிக்கும்பித் தத்தில்வளி சேருதலால் நோய்க்கணமு
திக்கும்ப லக்கும்எனச் செப்பு.

இ-ள். கரப்பான், அழுகிரந்தி, மலச்சிக்கு, பித்தவாயுவினால்மற்றும்பல நோய்களும் உண்டாம். (எகரு)

தேற்றான்பழத்தின்குணம்.

தேற்றான் கனிதனக்குச் சேயிழையே வன்காசந்
தோற்று தொழியுஞ்சு வாசமும்போஞ்-சாற்றின்மிக
வாந்தி பெருகும் மலம்போம்முத் தோஷத்தைச்
சேர்ந்த பிணிகளும்போஞ் செப்பு.

இ-ள். காசம், சுவாசம், முத்தோஷத்தைச் சேர்ந்த பிணிகளும் போம், வாந்தி பேதியும் உண்டாம். (எகசு)

நாவல்பழத்தின்குணம்-இதனை-நாகப்பழம்-என்பர்.

மாந்தம் விளையும் வலிகரப்பான் உண்டாகுஞ்
சேர்ந்ததொரு நீரிழிவுஞ் சேருமோ-நாந்தலொடு
வாய்வுங் கடுப்பும் வருங்கொதிப்புந் தாகமும்போந்
தூபநா வற்பழத்தால் சொல்.

இ-ள். மாந்தம், கரப்பானும்உண்டாம், நீரிழிவு, வாய்வு, கடுப்பு, கொதிப்பு, தாகமும்போம். (எகஎ)

வெண்நாவல் பழத்தின்குணம்.

உதிரமொடு விந்துவையும் உண்டாக்கும் உள்ளே
அதிர்அழலை தன்னை அகற்றும்-பதியதனிற்
கண்ணுவ ளியார்க்குங் கதிக்கநோக் குந்திருவே
வெண்ணாவ லின்கனியை விள்.

இ-ள். உதிரம், விந்தும் உணடாம், அனல்போம். (எகஅ)

சம்புநாவல்பழத்தின்குணம்.

அனில அழலும் அருப்பித்த வெப்பந்
தனிபுலவு தாகமுந் தயங்கும்-தனிவேடன்
அம்புநா வுங்கண் அணியிழையே கானில்உறுஞ்
சம்புநா வற்கனிக்குத் தான்.

இ-ள். வாதவெப்பு, பித்தவெப்பு, தாகமும்போம். (எகசு)

பாலைப்பழத்தின்குணம்.

வாத கரப்பன் அறும் வல்லசி லேஷ்மமும்போம்
வேது கிரந்தியுஞ்சாம் மென்பசியாம்-ஓதுமதன்
கோலைப் பழித்தவிழிக் கோதா யினிமையுள்ள
பாலைப் பழத்தைப் பருகு.

இ-ள். வாதக்கரப்பான், சிலேஷ்மம், கிரந்தியும்போம், பசியும், இனிப்பும், உண்டாம். (எசo)

பேரீச்சம்பழத்தின்குணம்-இதுவே-கர்ச்சூரம்.

பேரீந் தெனுங்கனிக்குப் பித்தமத மூர்ச்சைசுரம்
நீராந்தஐயம் நெடுந்தாகம்-பேரா
இரத்தபித்தம் நீரிழிவி லைப்பறும் அரோசி
உரத்தமலக் கட்டுமறும் ஓது.

இ-ள். பித்தம், மதமூர்ச்சை, சுரம், ஐயம், தாகம், இரத்தபித்தம் நீரிழிவு வாய்இலைப்பு, அரோசி, மலக்கட்டும்போம். (எசக)

கொட்டைமுந்திரிப் பழத்தின்குணம்.

தாகந் தணியுஞ் சகிக்காக் கரப்பானும்
ஆகத்திற் சேர்ந்த அழலும்அறும்-வேகின்ற
துட்டவன்சி ரங்கொடுபுண் தோற்றுங் கறகறப்பாங்
கொட்டைமுந்தி ரிப்பழத்தால் கூறு.

இ-ள். தாகம், அழலும்போம், கரப்பான், சிரங்கு, புண், நெஞ்சுகறகறப்பும், உண்டாம். (எசஉ)

தமரத்தம் பழத்தின்குணம்-இதுவே-தத்தசடம்.

வாதபித்தம் வாதகபம் வாந்திகுரற் கம்மல் கண்ணோய்
தாதுநஷ்டம் பித்தந் தலைநோயோ-டோதுசித்தத்
துற்ற பிரமையும்போம் ஒண்டொடியே மாபுளிப்பாம்
நற்றமரத் தம்பழத்தை நாடு.

இ-ள். வாதபித்தம், வாதகபம், வாந்தி, குரல்கம்மல், கண்ணோய், தாதுநஷ்டம், பித்தம், தலைநோய், சித்தபிரமையும்போம். (எசங)

கொய்யாப்பழத்தின்குணம்.

திரிதோஷஞ் சென்னித் திருப்பம் அரோசி
பொருமாந்தம் வாந்தி பொருமல்-கரப்பானும்
மெய்யாய்ப் பரவும்மலம் மெத்தவிடும் போகம்உண்டாம்
கொய்யாப் பழத்தினாற் கூறு.

இ-ள். திரிதோஷம், தலைசுற்றல், அரோசி, மாந்தம், வாந்தி, பொருமல், கரப்பான், மலம், போகமும் உண்டாம். (எசச)

எலுமிச்சம்பழத்தின்குணம்.

தாகங் குநகநோய் தாழாச் சிலிபதநோய்
வேகங்கொள் உன்மாதம்-வீறுபித்தம்-மாகண்ணோய்
கன்னநோய் வாந்தியும்போங் கட்டுவா திக்கொழிலில்
மன்னெலுமிச் சங்கனியை வாழ்த்து.

இ-ள். தாகம், குநகநோய், சிலிபதநோய், உன்மாதம், பித்தம், கண்ணோய், காதுநோய், வாந்தியும்போம். (எசரு)

நாரத்தம்பழத்தின் குணம்.

பித்தவழிக் குன்மம்அறப் பேராத தீபனமாம்
வித்தான தாதுவும்வி ளைந்திடுங்காண்-முத்திணைத்த
ஆரத்தைத் தாங்குமுலை யாயிழையே எக்காலும்
நாரத்தை யின்கனியி னால்.

இ-ள். பித்தகுன்மம்போம், தீபனமும், தாதும் உண்டாம். ()

சாதிநாரத்தை-கொளுஞ்சிநாரத்தைப் பழங்களின் குணம்.

சாதிநாரத் தம்பழந்தான் தாகந் தனையகற்றும்
ஓதருசி வாய்க்கசப்பை ஓட்டுங்காண்-வேதார்
அளிஞ்சமே கத்தேகர்க் காம்வறட்சி போக்குங்
கொளுஞ்சிநாரத் தம்பழந்தான் கூறு.

இ-ள். சாதி நாரத்தைக்கு, தாகம், அருசி, வாய்க்கசப்பும்போம், கொளுஞ்சி நாரத்தைக்கு, வறட்சிபோம், மேகதேகத் தோருக்காகும். (எசஎ)

சித்தாப்பழத்தின் குணம்.

பித்தகப மெத்தப் பெருகுமந்தம் மேலாடுஞ்
சித்த மதிற்றயக்கஞ் சேருங்காண்-தத்துலவும்
பூத்தானத் தாரும் புனல்கொடியே பூவுலகிற்
சித்தாக் கனிக்குணத்தைத் தேர்.

இ-ள். பித்தகபம், மந்தம், தயக்கமும் உண்டாம். (எசஅ)

தே-மாதுளம்பழத்தின்குணம்-இதுவே-தாடிமக்கனி.

சங்கையறச் சொற்றவிர்க்குஞ் சந்நியா சஞ்சர்த்தி
யங்கையதி தாகமமைச் சாருமோ-கங்கை
இருந்தாடி மக்கட் கிரத்தலேச்செய் நோய்போம்
இருந்தாடி மக்கனிகட் கெண்.

இதுவுமது.

வாய்நீர் ஊறல்கசப்பு வாந்திவிக்கல் மந்தமிகக்
காய்வெப்பம் நெஞ்செரிவு காதடைப்பும்-ஓயா
மயக்கமுந் தீர்ந்துவிடும் மாதுளம் பழத்தால்
தயக்கம் அறத் தேமொழியே சாற்று.

இதவுமது வி-ம்.

வெடித்துவீழ் பழத்தை வாங்கி மெல்லிய சீலே கட்டி
கடுக்கெனப் பிழிந்து கொண்டு கண்டுசக் கரையுங் கூட்டிக்
குடித்கிட வெப்பு மாறுங் குளிர்ந்திடும் அங்கமெல்லாம்
வடித்தகன் மொழி யினுளே மாதுளம்பழத்தின் சாறே.

இ-ள். சந்நியாசம், சர்த்தி, தாகம், பித்தம், மலட்டுநோய், வாய் நீரூறல், கசப்பு, வாந்தி, விக்கல், மந்தம், வெப்பு, நெஞ்செரிவு, காதடைப்பு, மயக்கமும்போம், குளிர்ச்சியுண்டாம். () (எகூ0) (எகூக)

கொமட்டிமாதுளம் பழத்தின்குணம்-வெ-பா.

அருசிகெடும் பித்தம் அகலும்ஐயந் தீரும்
உரிசை யுறுங்கபமும் ஓடுஞ்-சரசமுறக்
காதளவும் பாயும்விழிக் காரிகையே நற்கொமட்டி
மாதுளையின் பொற்கனியை வாழ்த்து.

இ-ள். அருசி, பித்தம், ஐயம், கபமும்போம். (எகூஉ)

மரத்தின் பழவகைமுற்றிற்று.

செடியின் பழவகை.

சிற்றீச்சம்பழத்தின் குணம்.

சிற்றீங் தெனுங்கனிக்குச் சீதம்உழலையொடு
உற்ற சிரங்குகளும் உண்டாகுஞ்-சுற்றிச்
செறியும் பலபிணியுந் தேமொழியோராளும்
அறிவும் மழுங்கும் அறி.

இ-ள். சீதம், அடிக்கடிவாயில் நீரைக் கொப்பளிக்கச் செய்யும் நோய், சிரங்கு, பலபிணியும்உண்டாம், அறிவுபோம். (எருச)

பூந்தாழம்பழத்தின் குணம்.

மேகவெட்டை வாந்திபித்த மீறுவாம மேனியிடுந்
தாகமுமட் டாகுந் தலைவலிபோக்-பாகமுறு
பூந்தாழை யின்பழத்தைப் பூரிப் புடன்புசிக்க
லாந்தாழ்வும் இல்லையறி.

இ-ள். மேகவெட்டை, வாந்தி, பித்தம், தாகம், தலைநோயும் போம், மேனியுண்டாம். (எருச)

கத்திரிப்பழத்தின்குணம்.

பித்தங் கரப்பான் பெருங்கிரந்தி குஷ்டம்இவை
மெத்தவுமாம் மெய்யிவ் அழல் வீறுங்காண்-சத்தான
தா துநஷ்ட மாங்கபங்கால் சார்ந்தசுவாசமும்போம்
ஓதுகத்த ரிப்பழத்தா லுண்.

இ-ள் பித்தம், கரப்பான், பெருங்கிரந்தி, குஷ்டம் அழல்தாது நஷ்டமும் உண்டாம், கபம், வாதம், சுவாசமும்போம். (எருரு)

[illegible]கத்திரிப் பழத்தின்குணம்.

காசஞ் சுவாசங் கபஞ்சீதம் பல்லரணை
வீசு சொறிதினவை விட்டோட்டும்-பேசுடலை
உத்தரிக்குந் தீபனத்தை யுண்டாக்கி டுங்கண்டாங்
கத்தரிப்ப ழக்குணத்தைக் காண்.

இ-ள். காசம், சுவாசம், கபம், சீதம், பல்லரணை, சொறி, தினவும் போம், தீபனம், உண்டாம். (எருசு)

காரைப் பழத்தின்குணம்.

சீதக் கடுப்புஞ் செறிந்தவுரத் தக்கடுப்பும்
ஓதும்அதி சாரமும்போம் உண்மையே-மோதுகடல்
நீரைப் பருகுமுகி னேரளக மின்கொடியே
காரைப் பழத்திற்குக் காண்.

இ-ள். சீதக்கடுப்பு, இரத்தக்கடுப்பு, அதிசாரமும்போம். (எருஎ)

மரக்காரைப் பழத்தின்குணம்.

சுரமும் பொருமலும்போந் தொல்மயக்க மில்லு
தரவூதல் போம்அறிவுந் தங்கும்-பருக
அரக்காரு மெல்லிதழ்வாய் ஆரணங்கே கான
மரக்காரை யின்கனியை வாழ்த்து.

இ-ள். சுரம், பொருமல், மயக்கம், உதிர வூதலும்போம், அறிவு உண்டாம். (எருஅ)

சூரைப் பழத்தின்குணம்.

மந்தம் அதிகரிக்கும் வன்சீத ளஞ்சேரும்
உந்து குடல்வலியும் உண்டாங்காண்-முந்துகவில்
காரைப் பழத்தில் கதித்தஒரு பேதமுமாஞ்
சூரைப் பழத்திற்குச் சொல்.

இ-ள். மந்தம், சீதளம், குடல்வலியும்உண்டாம். (எருகூ)

முளகாய்ப் பழத்தின்குணம்.

மூல விரத்த முளைகடுப்பும் உண்டாகுந்
தாலம்அதில் தாதுவுந் தழைக்கும் என்பார்-ஆலம்எனும்
மந்தம்அ ரோசிகுன்மம் வாய்வும் பொருமலும்போம்
உந்துமுள காய்ப்பழத்தால் ஓது.

இ-ள். மூலரத்தம், முளைகடுப்பு, தாதுவும், உண்டாம், மந்தம், அரோசி, குன்மம், வாய்வு, பொருமலும்போம். (எசுo)

செடியின்பழவகை முற்றிற்று.

கொடியின் பழ வகை.

கொடிமுந்திரிப்பழத்தின் குணம்-இதுவே-திராட்சி.

வெப்பருசி தாகம் விரணஞ்சு வாசகயம்
எய்ப்புடைய பித்தம் இரத்தபித்தஞ்-செப்பும்

மடிமந்தம் மேகம் மதமூர்ச்சை யும்போங்
கொடிமுந்தி ரிக்கனிக்குக் கூறு.

இதுவுமது.

சோமநோய் தாவரத்தால் தோன்றுவிஷம் உன்மாதம்
நாமமுறு மூத்திரநோய் நாடுமோ-சாமசுரம்
விண்ஞழியும் மெய்குளிரும் வீறுகொடி முந்திரிக்குக்
கண்ணொளியுந் தாதுவுமாங் காண்.

இ-ள். வெப்பு, அருசி, தாகம், விரணம், சுவாசம், கபம், இளைப்பு, பித்தம், இரத்தபித்தம், வயிறுமந்தம், மேகம், மதமூர்ச்சை சோமநோய், தாபரவிஷம், உன்மாதம், மூத்திரநோய், சாமசுரமும்போம், தேகக்குளிர்ச்சி, கண்ணொளி, தாதுவும் உண்டாம். (எசுக) (எசுஉ)

தூதுளம் பழத்தின் குணம்.

கபக்கட்டு கோழை கதித்ததிரி தோஷங்
குபுக்கென் றெழும்புநீர்க் கோவை-கபுக்கென்
றழுத்துவிஷ மும்போம் அடர்தூது ளத்திற்
பழுத்துவிழுங் காயையுண்டு பார்.

இ-ள். கபக்கட்டு, கோழை, திரிதோஷம், நீர்க்கோவை, விஷமும் போம். (எசுங)

பாகல் பழத்தின் குணம்.

சுரமேகங் காசஞ்சு வாசமொடு மூலந்
திரிதோஷங் குஷ்டம்இவை தீருங்-கிருமியறும்
மோகப் புணரிபெறு மொய்குழலே வெம்பிவிழாப்
பாகற் பழத்தையுண்டு பார்.

இ-ள். சுரம், மேகம், க்ாசம், சுவாசம், மூலம், திரிதோஷம், குஷ்டம், கிருமியும்போம். (எசுச)

சவுரிப் பழத்தின்குணம்.

தலைவலி குடைச்சல் சலப்பீந சங்கள்
குலைகுலைந்து காட்டிற் குடிபோம்-நிலைவா
னவரிப் படிமாதென் றையுறமெய்ம் மாதே
சவுரிப் பழத்தாற் சலித்து.

இ-ள். தலைவலி, குடைச்சல், சலப்பீநசமும்போம். (எசுரு)

கொடியின் பழவகை முற்றிற்று.

மரத்தின்வித்துவகை.

தே-மாங்கொட்டையின் குணம்.

பேசுமே சீதம் பெருகுஞ்சோ ரிக்கடுப்பும்
வீசுமோ மூலமுறு வெங்கொதிப்பு-மாசுடைய
பூங்கொட்டை யைத்தள்ளிப் போட்டுக் கனியில்வந்த
மாங்கொட் டை யைக்காணில் வாது.

இ-ள். பழத்திலிருக்குங் கொட்டைக்கு, சீதம், இரத்தக்கடுப்பு, மூலக்கொதிப்பும்போம். (எசுசு)

தே-பலாக்கொட்டையின்குணம்.

அள்ளேறு நீர்குடறி னப்பான் மலக்கட்டுங்
கள்ளேறு நெஞ்சர்நெஞ்சாங் கல்லகட்டி-யுள்ளே
சலாக்கொட்டை யிட்டசுகந் தானுங் கருக்கும்
பலாக்கொட்டை யிட்ட பலன்.

இ-ள். மலக்கட்டு, மலக்கருகளும் உண்டாம். (எசுஎ)

புளியங்கொட்டையின்குணம்.

சுக்கில மேகம்அனற் றுன்னும்அதி சாரமொடு
மிக்கிரணம் நீர்க்கடுப்பு வெட்டையறுந்-தொக்குள்துவர்
உற்றபுளி வித்திற் குறுகுணத்தை மேன்மேலும்
நற்றரையுண் மாதே நவிற்று.

இ-ள். சுக்கிலமேகம், அனலாலுண்டாகிய அதிசாரம், விரணம் நீர்க்கடுப்பு, வெட்டையும்போம். (எசுஅ)

தேற்றான்கொட்டையின்குணம்.

கூற்றென்று ரைக்கும்விழிக் கோமளமே எப்போதும்
மேற்றும் பிரமியமும் உட்புண்ணும்-ஆற்றல்இலா
வெட்டை அகக்கடுப்பும் வீறிவரிற் றேற்றாங்
கொட்டைதனை நீயெடுத்துக் கொள்.

இதுவுமது.

தேற்றாம் விதையதுதான் தீபனத்தைப் போக்கும்அனல்
ஆற்றும்இரு கண்ணுக் கருமருந்தாங்-கூற்று

பிருத்தும கிரிச்சரத்தை எங்குமிலா தோட்டுங்
குருத்துவம்உண் டாக்குங் குறி.

இ-ள். பிரமியம், உள்புண், வெட்டை, அகக்கடுப்பு, தீபனம், அனல், கண்ணெரிவு, கிரிச்சரமும்போம், மந்தம் உண்டாம். () ()

எட்டிக்கொட்டையின்குணம்.

கைக்கற்ப்பு சந்தி கடிவிஷங்குஷ்ட் டூதைவலி
எய்க்கவரு தாதுநஷ்டம் என்பதும்போம்-மைக்கண்ணாய்
கட்டி கரப்பான் கனமயக்கு பித்தமுமில்
எட்டிமரக் கொட்டையினு லே.

இ-ள். கைப்புறப்பு, சந்தி, கடிவிஷம், குஷ்டம், ஊதைவலி, தாதுநஷ்டம், கட்டிகரப்பான், மயக்கம், பித்தமும்போம். (எஎக)

புரசங்கொட்டையின்குணம்-இதுவே-பலாசம்.

வயிற்றுக் கிருமிகனம் வாதமொடு சீதம்
நியத்தபடர் தாமரையும் நீங்கும்-வயிற்று
வலியிரைச்சல் வன்கரப்பான் மாறும்பித் துண்டாம்
மலிபுரசங் கொட்டைதனை வாழ்த்து.

இ-ள். வயிற்றுகிருமி, கணம், வாதம், சீதம், படர்தாமரை, வயிற்றுவலி, வயிற் றிரைச்சல், கரப்பானும்போம், பித்தம் உண்டாம். ()

புன்னைக்கொட்டையின்குணம.

கன்ன விரணங் கடுஞ்சந்நி பாதமுடன்
இன்னல்உறு வாதை அவைஅகலும்-புன்னைக்கொட்
டைக்கம்மட் டோவென்னில் ஆர்சூதி காவாய்வும்
மெய்க்கம்மிட் டாழ்வாய்வும் இல்.

இ-ள். காதப்புண், சந்நிபாதம், சூதகவாய்வு, மெய்க்கு, தேகத்தில், அம்இட்டு, சலத்தையுண்டாக்கி, ஆழ், அழுந்தியிருக்கின்றவாய்வும்இல், வாய்வும்இல்லை, சிதளவாய்வு, நீங்கிவிடும், என்பது கருத்து.

இலுப்பை-அழிஞ்சில்-இவ்வித்துகளின்குணம்.

இலுப்பைவிதை அந்தரவாய் விற்கும் விஷத்திற்கும்
அலுப்பையுண்டாக்கி அகற்றும்-நிலத்தில்

தொழுஞ் சகமோ கக்கரப்பிற் சொல்அஞ்சனமாம்
அழிஞ்சில் விதையென் றறி.

இ-ள். இலுப்பைவித்துக்கு, அந்தரவாய்வும், விஷமும்போம், அழிஞ்சல்வித்து, சகமோகமறைப்புமை யுண்டாம். (எஎச)

புங்கு-காட்டுப்புங்கு-இவ்வித்துக்களின்குணம்.

புங்கின்விதை காற்கிரந்தி புண்கரப்பான் காதெழுச்சி
அங்கசந்நி கண்ணோய்க்கும் ஆம்பேதி-யுங்கட்டுங்
காட்டுப்புங் கின்விதைக்குக் கண்டதே மற்சொறிமெய்ப்
பூட்டுப்பங் கின்வாய்வும் போம்.

இ-ள். புங்கின்விதைக்கு, காற்கிரந்தி, புண், கரப்பான், காதெழுச்சி, சந்நி, கண்ணோய், பேதியும்போம், காட்டுப்புங்கின்விதைக்கு தேமல், சொறி, முடக்குவாய்வும்போம். (எஎடு)

மருதோன்றி-வேம்பு-இவ்வித்துக்களின்குணம்.

மருதோன்றி யின்விதைக்கு மாபில்லி சூனியம்
விருதாண்ட பேய்பூதம் மேவும்-கருதூன்றி
வேம்பின் விதைக்கு விஷஞ்சந்நி பாதமுதல்
தேம்பிவிழுந் தோடுமேனத் தோர்.

இ-ள். மருதோன்றிவித்துக்கு, பில்லி, சூனியம், பேய்பூதமும் உண்டாம், வேம்பின்வித்துக்கு, விஷம், சந்நிபாதமும்போம். ()

கடப்பம்வித்தின்குணம்.

கடப்பம் விதைக்குக் கடிவிஷமும் உண்டோ
தொடுப்புமண்டை நீருந் தொலையும்-இடக்காண
வாத வகையொழியும்மந்தங்கள் ஏகிவிடுங்
கீதமொழி மாதே கிளத்து.

இ-ள். கடிவிஷம், மண்டைநீர், வாதம், மந்தமும்போம்.

பகிழம்வித்தின் குணம்.

தாதுவைநன் மெய்பழகைச் சந்நியையுண்டாக்கிவிடும்
சீதளம்நன் பார்களக்கஞ் செய்மருந்தாம்-வாதை
மலத்தைவிழிந் தோஷத்தை வாட்டுவிஷ வெப்பை
விலக்கும் பகிழம் விதை.

இ-ள். தாது, தேகவழகு, பலம், சீதளமும்உண்டாம், கவிக்கத்திற்காகும, மலம, விழிதோஷம், விஷம், வெப்பும்போம். (எஎஅ)

தில்லம்வித்தின்குணம்.

தில்லம் விதைக்குச் சிறுவிஷம் மகாவிஷமுஞ்
செல்வஞ் செருக்குத் திமிர்வாய்வும்-வெல்லங்கொள்
வாரை வருத்துகின்ற வன்கபமுங் குஷ்டமும்இவ்
வரைவிடுத் தேகும் உரை.

இ-ள். சிறுவிஷம், பெருவிஷம், திமிர்வாய்வு, கபம், குஷ்டமும் போம். (எஎகூ)

ஆளிவித்தின்குணம்.

விக்கம் அதிவாந்தி மேனி வலிவாய்வுக்
தாக்குநரம் பின்குத்தல் தொல்லழலை-ஒக்காளம்
மிளிபருசி விரைவாத மும்போகும்
ஆளிவிதை தன்னால் அறி.

இ-ள. விக்கம், வாந்தி, வலி, வாய்வு, நரம்பின்குத்தல், அழலை ஒக்காளம், அருசி, விரைவாதமும்போம். (எஅ0)

உருத்திராக்ஷ வித்தின்குணம்

நீளும்அதி தாகத்தை நீங்காமுத் தோஷத்தை
ஆளும்விக்கல் பித்தத்தை யாற்றுங்காண்-நாளும்
மிருத்திரா மற்கபத்தை விட்டுமேகல்ல
உருத்திராக் கத்தின்வலி ஓது.

இ-ள். தாகம், முத்தோஷம், விக்கல்; பித்தம், கபமும்போம். ()

முருக்கைவித்தின்குணம்.

சீரான வித்துவுமோ நீண்டபசி யைத்தடிக்குஞ்
சீராக மேனி செழிக்குங்காண்-பாராய்
முருங்கை விதைஅதனால் மொய்த்தஇலைநார்க்கோ
ஒருங்கையுற நீரிறக்கும் உன்.

இ-ள். வித்ததடிப்பு, மேனியழகும் உண்டாம், இதின் இலைக்கும் நார்க்குக்கும், நீர் இறங்கும். (எஅஉ)

மாதுளம் வித்தின்குணம்.

சுக்கிலத்தைக் கட்டும்அந்தச் சுக்கிலதோ ஷம்போக்கும்
அக்கணம்மே கக்கடுப்பை ஆற்றுங்காண்-எக்காலுங்
கோதுளத்தெண் ணுதமலர்க் கொம்பனைய மாதேசெம்
மாதுளத்தின் பீச வலி.

இ-ள். சுக்கிலக்கட்டு உண்டாம், சுக்கிலதோஷம், மேகக்கடுப்பும்போம். (எஅ௩)

முந்திரிப் பருப்பின்குணம்.

மெத்தஇனிப் பாகும்அது மென்கொடியே தின்றக்கால்
பித்தஅனிலம் பிறக்கும்என்பார்-எத்தலத்தும்
இந்திரியப் புஷ்டி யிலேக்காது மாந்தம்உண்டாம்
முந்திரியின் நற்பருப்பை முன்.

இ-ள். இனிப்பு, பித்தவாய்வு, இந்திரியபுஷ்டி, மாந்தமும் உண்டாம். (எஅ௪)

வாதுமைப்பருப்பின்குணம்-இதுவே-அடப்பம்விதை.

அடப்பம்விதை யாம்வாது மைப்பருப்பி னாலே
மடற்பெரிய கண்படலம் மாறுஞ் - சடக்கெனவே
புண்மேற் கொழுப்பகலும் போ கமும்உண் டாகுமென
மண்மேற் புகல்வார் மகிழ்ந்து.

இ-ள். பெரியகண்படலம், புண்மேலிருக்கிற கொழுப்புப்போம், போகம் உண்டாம். (எஅரு)

சாரப்பருப்பு-மிசரிப்பருப்பு-இவைகளின்குணம்.

சாரப் பருப்பால் தனிமுசரி யின்பருப்பால்
நீரப் பருங்கடுப்பு நீர்ச்சிதந் - தீரத்
தொலையும்இர தங்கந்தி துய்த்தார்க்கு நன்றுங்
கலையும்விந்து வுக்கூக்கங் காண்.

இ-ள். நீர்க்கடுப்பு, வெள்ளைபொழுகலும்போம், இரதங்கந்திசாப்பிட்டவர்களுக்காகும், விந்து கட்டுண்டாம். (எஅசு)

மரத்தின் வித்துவகை முற்றிற்று.

செடியின் வித்துவகை.

காப்பிக்கொட்டையின்குணம்.

(சுபாவம்) அற்பச்சூடும், அதிக வறட்சியுமாம், (பிரயோசனம்) சுத்தஇரத்தமுண்டாம். குறைந்தவுணவாம், (சௌக்கியம்) உதிரக் கொதிப்பையடக்கும், சளிப்பைமாற்றும், மார்ச்சளி, இருமல், இளைப்பைப்போக்கும், தினிப்பைக்குவலிவைக்கொடுக்கும், அசதிநீங்கும், மூளையில் மாசுகளடையாமற் காக்கும், இதைப்பொன்வறலாய்வறுத்துப் பொடிசெய்து சலத்திற்கலந்து குடிக்கப் பேதிகளைக்கட்டும் (வியாதி) நித்திரைபிடியாது, தாதுநஷ்டப்படும் (பரிகாரம்) பசுவின்நெய், சருக்கரை.

துத்திவித்தின்குணம்.

கையிற்கா லிற்படர்ந்த கார்மேகம் போய்ஒழியும்
மெய்யில்உறு குஷ்டம்போம் வெப்பகலும்-துய்யதிரை
பத்திதனை யொத்தவிழி யாரணங்கே காட்டி லுள்ள
துத்தி விதையைச் சுவை.

இ-ள். கைகாலிற் படர்ந்த கருமேகம், குஷ்டம், வெப்பும் போம். (எ௭௭)

தகரைவித்தின்குணம்.

வண்டு கடியுடனே வன்கடுவ னும்பலவாம்
பண்டு நமைபுடையும் பண்டிதர்கள்-கண்டுரைக்கப்
பித்த அனலும் பெருத்த தகரைவிதைக்
கித்தரையுள் நில்லா திசை.

இ-ள். வண்டுகடி, கடுவன், நமை, புடை, பித்தவனலும் போம்.

நீர்முள்ளி வித்தின்குணம்.

விந்துவுமாந் தாதுவுமாம் மேகரோ கந்தொலையும்
உந்தும்அதி சாரம் ஒழியுங்காண்-வந்துடலில்
எதிபசிர் விக்கம் இறங்கும் இளைப்பும்அறுங்
கூதிபசீர் முள்ளிவிதைக் கு.

இ-ள். மேகரோகம், அதிசாரம், நீர்விக்கம், இளைப்பும்போம், விந்து தாதுவும் உண்டாம். (எ அகூ)

ஊமத்தம் வித்தின்குணம்.

சுரம்போம் விஷம்போந் தொலையாத சந்நி
உரம்போம் அதிசாரம் ஓடும்- நிரம்பவே
மாமத்தம் உண்டாம் வளரிளங்கொக் கைத்திருவே
ஊமத்தந் தன்விதையை யுண்.

இ-ள். சுரம், விஷம், சந்நி, அதிசாரமும்போம், வெறியுண்டாம். (எகூ0)

செடியின் வித்துவகை முற்றிற்று.

கொடியின் வித்துவகை.

பூசினிவித்தின்குணம்.

பித்தம்போம் மேகம்போம் போரா அனலமும்போம்
மெத்தஉட லங்குளிரும் மேனியிடும்-இத்தலத்துள்
ஆசினியொன் றில்லா வயிர்ந்தவன சத்திருவே
பூசினிவித் தைத்தின்னும் போது.

இ-ள். பித்தம், மேகம், அனலமும் போம், உடல்குளிர்ச்சி, மேனியும் உண்டாம். (எகூக)

வெள்ளரி வித்தின்குணம்.

கடுப்பொடுநீர்க் கட்டுவெறுங் கல்லடைப்பு தாரை
வெடிப்பு சதையடைப்பு மேகம்-எடுத்துரைக்கா
உள்ளரிவி என்னும் உறைகிரிச்ச ரம்இவைகள்
வெள்ளரிவி தைக்கேகும் விள்.

இ-ள். நீர்க்கடுப்பு, நீர்க்கட்டு, கல்லடைப்பு, நீர்த்தாரைவெடிப்பு, சதையடைப்பு, மேகம், கிரிச்சரமும்போம். (எகூஉ)

கழற்காய்-பேய்ப்பீர்க்கு-இவ்வித்துக்களின்குணம்.

கழற்காய் விதைக்குக் கனஅண்ட வாதந்
தழற்புக்கச் சூலைகுன்மஞ் சாந்தி- கழற்காலிற்

காய்ப்பாக்குர் துஷ்டக் கடிவிஷமெல் லாம்போக்கும்
பேய்ப்பீர்க்கி னுள்விதையைப் பேசு.

இ-ள். கழற்காய்வித்துக்கு, அண்டவாதம், பக்கச்சூலை, குன்மமும்போம், பேய்ப்பீர்க்குவித்துக்கு, கடிவிஷங்கள், எல்லாம் போம். (எசுஙா)

பூனைக்காலி வித்தின்குணம்.

தழுதளைநாற் றத்தோடு சார்இரத்தப் போக்கும்
பழுதுபுரி யின்றகரப் பானும் - அழூதேகுர்
தாலமிசை விந்துவு மாஞ் சாற்றற் கரும்பூனைக்
காலி விதையைக் கழறு.

இ-ள். இரத்தப்போக்கு, கரப்பானும்போம், விந்துஉண்டாம்.()

உகாவித்தின்குணம்.

வாதமுதல் முப்பிணியால் வந்த பிணியையெலாங்
கோதிற் சமனமிகக் கொண்டொழிக்குஞ் - சீத
மகாவனசத் தன்னில் வளர்ந்திருக்கு மாதே
உகாவிதையை நன்று யுரை.

இ-ள். வாதமுதலாகிய முப்பிணியால் வந்தபிணியெல்லாம் போம். (எசுரு)

குன்றிவித்தின்குணம்-இதுவே-குன்றிமணி.

நேத்திரநோய் பித்தம் நிறமழுங்கல் காமாலை
வேர்த்திடுதாபச்சோப வெப்புடனே - கோத்திட்ட
ஐயமுதல் யாவும்போம் ஆயிழையே காட்டிலுறை
செய்யகுன்றி யின்விதையைச் சேர்.

இ-ள். நேத்திரநோய், பித்தம், நிறமழுங்கல், காமாலை, தாபசோபம், வெப்புஐயம், முதலாகியநோய்களும்போம். (எசுசு)

நெருஞ்சில் வித்தின்குணம்.

சொல்லவொண்ணா நீர்க்கட்டு துன்மா மிசம்அருகல்
கல்லடைப்பெ னும்பிணிகள் கண்டாக்கால் - வல்லக்
கருஞ்சினவேற் கண்மாதே காசினிக்குள் நல்ல
நெருஞ்சில்தரும் வித்தை நினை.

இ-ள். நீர்க்கட்டு, துன்மாங்கிஷம், அருகல், கல்லடைப்பும் போம். (எகூஎ)

கொடியின் வித்துவகை முற்றிற்று.

தானியவகை

செந்நெல் வகைக்குஞ் சிறுதா னியவகைக்கும்
இந்நிலத்தில் உண்டோ இலக்கென்ப-துன் னுங்கால்
கண்டமட்டி லேபெயராங் கண்ட அவரவர்கள்
உண்டமட்டி லேசுவையாம் ஓது.

இ-ள். தானியவகையைச்சொல்ல இந்தபூமியில் கணக்குண்டா இல்லேயாயினும் அவரவர்கள் கண்டமட்டில் பெயரும், உண்டமட்டில் சுவையுமாம். (எகூஅ)

கார் அரிசியின்குணம்.

காரரிசி மந்தங் கனப்புடலில் தூலிப்பும்
பாரறிய வாயுவையும் பண் ணுங்காண்-நேரே
கரப்பான்என் பார்பொருந்தின் காயம்அது மெத்த
உரப்பாகும் என்றே யுரை.

இ-ள். மந்தம், தேகதூலிப்பு, வாய்வு, கரப்பான், ஒத்துக் கொண்டால் தேகத்திற்கு பலமும் உண்டாம். (எகூஅ)

மணக்கத்தை-வாலா-கருங்குறவை-என்னும் இவ் அரிசிகளின்குணம்.

மணக்கத்தை வாலான் கரும்குறவை மூன்றும்
பிணக்குஷ்டைச் சில்விஷத்தைப் பேர்க்கும்-இணக்கமுற
ஆச்சியுண் டாற்கரப்பான் ஆரும்என்பார்கள்சிலர்
பார்க்குளதை எண்ணிப் பார்.

இ-ள். குஷ்டம், சில்விஷம், கரப்பா னும்போம். (அ௦௦)

ஈர்க்குச்சம்பா அரிசியின்குணம்.

ஈர்க்குச்சம் பாஎன் றியம்பும் அரிசியது
நாக்குக் கதியுரிசை நல்குங்காண்-பார்க்குமிடத்

தெல்லார்க்கும் காதல் இயற்றும்அற்பப் பித்தம்என்பார்
வில்லூரும் பூசைகட்காம் விள்.

இ-ள். நாக்குக்கு உருசை, ஆசை, அற்பப்பித்தமும், உண்டாம் பூசைகளுக்காகும். (அOக)

புழுகுசம்பா அரிசியின்குணம்.

புழுகுசம் பாஅரிசி பூதலத்தில் உண்பார்க்
கழகும்ஒளி வுஞ்சேர்வ தன்றி-அழலாம்
பசிதாகந் தீரும் பலமுமிக உண்டாம்
முசிவே துடற்சுகமா முன்.

இ-ள். அழகு, ஒளிவு, அழல், பலம், உடல்சுகமும் உண்டாம் பசிதாகமும்போம். (அOஉ)

கைவரைச்சம்பா அரிசியின்குணம்.

கைவரச்சம் பாஅரிசி கண்டால் அவரவர்தம்
மெய்வரையாம் என்றும் மிகுபலமாம்-மையல்
அடையாதென் பார்கள் அடர்சுக் கிலமும்
உடையா ததிசுகமாம் ஓது.

இ-ள். அதிகபலம், சுக்கிலமும், உண்டாம். (அOங)

செம்பா அரிசியின்குணம்.

செஞ்சம்பாத் தண்டுலத்தால் தீராச் சிறுசிரங்கும்
விஞ்சுபுண் ணும் வன்சொறியும் மெய்க்கணியாம்-விஞ்சும்
அதிகபசி தானே அனங்கரசே யிந்தப்
பதியதனில் நாளும் பகர்.

இ-ள். சிறுசிரங்கு, புண், சொறி, பசியும், உண்டாம். (அOச)

கல்லுண்டைசம்பா அரிசியின்குணம்.

கல்லுண்டைச் சம்பாவைக் கண்டருந்தி நின்றவர்முன்
வல்லுண்ட பேர்எதிர்க்க வாய்க்குமோ-வில்உண்டை
போலுரையாம் நல்ல புசபலமாம் இன்சுவையாம்
பாலனைய மென்மொழியே யார்.

இ-ள். புசபலபராக்கிரமம் இனியசுவையும் உண்டாம். (அOரு)

குண்டச்சம்பா அரிசியின்குணம்.

குண்டச்சம் பா அரிசி கொண்டுண்ணும் பேர்களுக்குப்
பண்டையில்லா மந்தநோய் பாரிக்கும்-அண்டபடாத்
தாகம்எல் லாம்ஒழியுந் தையலே வன்கரப்பான்
தேகம் எல்லாம்பரவுஞ் செப்பு.

இ-ள். எல்லாத்தாகமும்போம், மந்தநோய், கரப்பானும் உண்டாம். (அ0சு)

மல்லிகைசம்பா அரிசியின்குணம்.

மல்லிகைசம் பா அரிசி வாய்க்குரிசை யாயிருக்கும்
நல்லது மெய்க்கு நலஞ்செய்யும்-பொல்லாக்
கரப்பானை மேகத்தைக் கண்அழலை நீக்கும்
உரப்பாம் பலங்கொடுக்கும் உன்.

இ-ள். கரப்பான், மேகம், கண்ணழலும்போம், உடலுக்கு, நன்மையும், பலமுங்கொடுக்கும், வாய்க்குரிசையாயிருக்கும். (அ0எ)

இலுப்பைப்பூச்சம்பா அரிசியின்குணம்.

பித்த மிகப்பெருக்கும் பேருலகில் யாவருக்கும்
உற்ற தலைவலிநோய் உண்டாக்குஞ்-சத்தியமாய்த்
தாகம்எடுப் பிக்குந் தழல்இலுப்பைப் பூச்சம்பா
ஆகம்அதில் நோய்வளர்க்கும் ஆய்.

இ-ள். பித்தம், தலைவலி, தாகம், மற்றநோய்களும் உண்டாம்.

மணிச்சம்பா அரிசியின்குணம்.

நல்ல மணிச்சம்பா நாடுகின்ற நீர்இழிவைக்
கொல்லும் மிகுந்தசுகங் கொண்டளிக்கும்-மெல்லப்
பசியளிக்கும் மூத்தோரைப் பாலர்களை மாளும்
முசியாம லேவளர்க்கும் முன்.

இ-ள். நீரிழிவுபோம், சுகம், தேகவளர்ச்சியும்உண்டாம். (அ0கூ)

வளைதடிசம்பா அரிசியின்குணம்.

வளைதடிச்சம் பாவரிசி வாதபித்தம் உண்டாம்
உளையும் மடிபொருமி யுப்புங்-கொளகொளெனத்

தானே கரப்பானுந் தாங்கொணு மாந்தமுமாந்
தேனே யிதனைத் தெளி.

இ-ள். வாதபித்தம், வயிறுளைவு, வயிறுபொருமல், வயிறுப்பல், கரப்பான், மந்தமும் உண்டாம். (அகo)

கோரைச்சம்பா அரிசியின்குணம்.

கோரைச்சம் பாநற் குளிர்ச்சியென்பார் பித்தத்தைப்
போரா அழலைப் பிரித்தோட்டுந்-தீராத
மேக மொடுதினவை வீட்டுஞ் சுகங்கொடுக்கும்
மேக முறைகுழலாய் விள்.

இ-ள். பித்தம், அழல்மேகம், தினவும்போம், குளிர்ச்சி சுகமும் உண்டாம். (அகக)

குறுஞ்சம்பா அரிசியின்குணம்.

குறுஞ்சம்பா பித்தங் குடியிருக்கச் செய்யும்
வெறுங்கரப்பான் உண்டாக்கும் மெய்யில்-நொறுங்கச்செய்
வாதம்அருள் வாயுவினை மாற்றும்போ கங்கொடுக்குஞ்
சீதவன சத்திருவே செப்பு.

இ-ள். பித்தம், கரப்பான், போகமும், உண்டாம், வாய்வு, போம். (அகஉ)

மிளகுச்சம்பா அரிசியின்குணம்.

மிளகுச்சம் பாஅரிசி மென்சுகத்தைச் செய்யும்
அளவில்பல நோயை அகற்றுங்-களகளெனத்
தீபனத்தைத் தூண்டிவிடுந் தீரா வளிதொலைக்குஞ்
சோபனத்தைச் செய்நகையாய் சொல்.

இ-ள். சுகம், தீபனமும் உண்டாம், பலவிதநோய், வாய்வும் போம். (அகங)

சீரகச்சம்பா அரிசியின்குணம்.

சீரகசம் பாஅரிசி தின்னச் சுவையாகும்
போகத்து வாதம்எல்லாம் போகுங்காண்-வாருலகில்
உண்டவுட னேபசியும் உண்டாகும் பொய்யலவே
வண்டருறை பூங்குழலே வாழ்த்து.

இ-ள். வாதமெல்லாம்போம், பசியுண்டாம், இன்ன ருசியாயி ருக்கும். (௧௪௪)

காளான்சம்பா அரிசியின்குணம்.

காளான்சம்பா அரிசி கல்லையொத்த மாபலத்தைக்
கேளாம லேகொடுக்குங் கேள்இன்னும் - நீளும்
அனிலத்தைப் போக்கிவிடும் ஆரோக்கி யத்தை
நனிலத்திற் செய்துவிடும் நாடு.

இ-ள். கல்லைப்போன்ற, பலமும், ஆரோக்கியமும், உண்டாம், வாய்வுபோம். (௧௪௫)

மைச்சம்பா அரிசியின்குணம்.

மைச்சம்பாத் தண்டுலத்தால் வாய்அருசி போயொழியும்
வெச்சென்ற வாதபித்தம் மெய்யைவிடும்-நச்சுந்
தனிவாயு வுஞ்சுரக்குஞ் சாத்தியும்போம் இன்பக்
கனிமொழியே நன்றாகக் காண்.

இ-ள். அருசி, வாதபித்தம், சர்த்தியும்போம் வாய்வு, உண் டாம். (௧௪௬)

கோடைச்சம்பா அரிசியின்குணம்.

கோடைச்சம் பாஅரிசிகொண்டாற் றிரிதோஷ
வாடைக் கதிகவலி யும்உண்டோ - நீடும்
உறிப்பில்உள்ள நோயெல்லாம் ஓதாமல் ஏகுங்
கறுப்பி லுயர் வார்குழலே காண்.

இ-ள். திரிதோஷம், வாய்வு, தேகத்திலுள்ள, வியாதியெல்லா மும்போம். (௧௪௭)

காடைச்சம்பா அரிசியின்குணம்.

காடைச்சம் பாஅரிசி கண்டுதரி சித்தவர்க்கு
நீடுற்ற மேகஅனல்நிற்குமோ - காடைப்
பறவைபோல் நோயும் பறக்கும் பலத்தின்
உறவையெவர் சொல்வார் உரை.

இ-ள். மேகம், அனலும்போம், பலம்உண்டாம். (௧௪௮)

குன்றிமணிச்சம்பா அரிசியின்குணம்.

குன்றி மணிச்சம்பா கொண்டால் அனிலம்அறும்
வென்றி தருமபலமி குக்குங்காண்-துன்றியநோய்

எல்லாம் பறக்கும்உறை யிந்திரியப் புஷ்டியுண்டாம்
நல்லா ரறிய நவில்.

இ-ள். வாய்வு, அனேகவியாதியும்போம், பலம், இந்திரியபுஷ்டி யும்உண்டாம். (அகக௯)

அன்னமழகி அரிசியின்குணம்.

அன்ன மழகியரி ஆரோக்கி யங்கொடுக்குந்
தின்ன வெகுருசியாஞ் செப்பக்கேள்-இந்நிலத்து
நோயனைத்துந் தாளாய் நொறுங்கத்த கர்த்துவிடுந்
தீயனலைப் போக்குந் தெளி.

இ-ள். ஆரோக்கியம்உண்டாம், தின்ன ருசியாயிருக்கும், பலவி தரோகமும், தேகவனலும்போம். (அஉ0)

பச்சை அரிசியின்குணம்.

சுத்த அனிலமந்தந் தோன்றும்எரி பித்தம்போம்
பத்தியத்தில் எண்ணார்கள் பண்டிதர்கள்-மெத்தவுமே
வைச்சுவை தாங்க வலியுண்டாந் தேகத்திற்
பச்சரிசி யைப்புசித்துப் பார்.

இ-ள். வாய்வு, மந்தம், பலமும்உண்டாம், எரிபித்தம்போம், பத் தியத்திற்காகாது. (அஉக)

புழுங்கல் அரிசியின்குணம்.

புழுங்கல் அரிசியது புத்திரர்க்கும்ஆகும்
அழுங்குகின்ற வாயுவிற்கும் ஆகும்-ஒழுங்காய்
நிலைத்தபத்தி யத்திற்கும் நீட்டலாம் மெய்க்குப்
பலத்தைக் கொடுக்காது பார்.

இ-ள். பிள்ளைகளுக்கும், பத்தியத்திற்குமாகும், வாய்வுபோம், பலங்கொடாது. (அஉஉ)

பழமை அரிசியின்குணம்.

பழஅரிசி மூத்தோர்க்கும் பாலர்கட்கும் ஆகும்
அழல்மிகவும் ஆகும் அருந்தில்-நிழலைப்போல்
ஆகும்உடல்குளிர்ச்சி ஐயம்அறும்நோயுற்றோர்க்
காகும்பன் னோய்போம் அறி.

இ-ள். ஐயம், பலநோயும்போம், தீபாக்கினியும், உடல்குளிர்ச்சியும் உண்டாம், சகலருக்கும் ஆகும். (௮௨௩)

சவ்வரிசியின்குணம்-இவ்வரிசி-ஒருவர்பட்சம்.

மேகம்அத்தி மேகஞ்சீழ் மேகரத்த மேகமும்போந்
தேகத்திற் றாதுவுஞ்சி லேஷ்மமும்உண்-டாகும்எழிற்
செவ்வரிப டர்ந்தவிழித் தேமொழிமா தேயுலகிற்
சவ்வரிசி யின்குணத்தைச் சாற்று.

இ-ள். அத்திமேகம், சீழ்மேகம், இரத்தமேகம், மேகமும்போம், தாதுவும், சிலேஷ்மமும் உண்டாம். (௮௨௪)

மூங்கில் அரிசியின்குணம்.

உதிரபித் தந்தீர்க்கும் ஓங்குசுரத் திற்கும்
அதிரவரு கண்ணோய் அதற்கும்-புதிதாகக்
கஞ்சிசெய்ய லாகுங் கருதிற்சித் றுண்டியுமாஞ்
செஞ்சிலம்பார் மூங்கில் அரிசி.

இ-ள். இரத்தபித்தம், சுரம், கண்ணோயும்போம், சிற்றுண்டிகளுக்காகும். (௮௨௫)

திப்பிலி அரிசியின்குணம்.

திப்பிலியின் தண்டுலஞ்சி லேஷ்மத்தைப் போக்கிவிடும்
உப்பிசத்தை மேகத்தை ஓட்டுங்காண்-தப்பாமல்
வாத சுரந்தணிக்கும் மாகபரோ கந்தொலைக்குந்
தாதுவை வளர்ப்பிக்குஞ் சாற்று.

இ-ள். சிலேஷ்மம், உப்பிஷம், மேகம், வாதசுரம், கபரோகமும்போம், தாதுஉண்டாம். (௮௨௬)

கோதுமை அரிசியின்குணம்.

கோதுமையின் நற்குணந்தான் கோதிற்ப லங்கொடுக்குந்
தாதுவிர்த்தி யாக்குந் தனிவாய்வைச்-சேதிக்கும்
பித்தம் அளிக்கும் பிரமேகத் தைக்கெடுக்கும்
உத்தமமாம் என்றே உரை.

இ-ள். பலம், தாதுவிர்த்தி, பித்தமும் உண்டாம், வாய்வு, பிரமேகமும்போம். (௮௨௭)

தானியவகை முற்றிற்று.

புன்செய்த் தானியவகை.

கேழ்வரகின்குணம்-இதனைக்-கேவரகென்பர்.

சுத்தஅனி லத்தன்னைத் தோன்றுவிக்கும்அல்லவெனில்
பித்தஅனி லத்தைப் பிறப்பிக்குஞ்-சித்ரமலர்த்
தார்குழலே நீடுபஞ்சந் தாங்கியெனச் சொல்லுமின்ற
கேழ்வரகின் செய்தியிது கேள்.

இ-ள். வாய்வு, பித்தமும் உண்டாம். (அஉ௪)

கம்பு அரிசியின்குணம்.

கம்பு குளிர்ச்சியெனக் காசினியிற் சொல்லுவர்காண்
பம்புசொறிசிரங்கைப் பாலிக்கும்-வெம்பும்
உடலின் கொதிப்பகற்றும் உட்பலம்உண்டாக்கும்
அடலயிற்கண் மாதே யறி.

இ-ள். குளிர்ச்சி, சொறிசிரங்கு, பலமும்உண்டாம், உடல்கொதிப்பும்போம். (அஉரு)

சாமை அரிசியின்குணம்.

உடலிற்உறு தாகசுரம் ஓடும்மே கம்போம்
அடலின்உறு வாதம் அகலுங்-கடலிலுறை
ஆமை யனையபதத் தன்னமே மேனியிடுஞ்
சாமை யரிசிக்குத் தான்.

இ-ள். தாகசுரம், மேகம், வாதமும்போம், மேனியுண்டாம். ()

தினை அரிசியின்குணம்.

சர்திசுரம் ஐயந் தனிவாத மும்போகுந்
துன்னுபித் தத்தைமிகத் தூண்டிவிடுந்-தின்னப்
பின்னையும் பசியாம் பெருவிக்கம் நீக்குந்
தினையரிசி யின்குணத்தைத் தேர்.

இ-ள். சர்தி, சுரம், ஐயம், வாதம், விக்கமும்போம், பித்தம்,பசியும் உண்டாம். (அஉகா)

செஞ்சோள அரிசியின்குணம்.

செஞ்சோளந் தின்றால் சிறுசிரங்கு புண்ணுக்ளும்
விஞ்சும் எழிலான மேனிகெடும்-நெஞ்செரிந்து
மந்தமிகுந் தீபனம்போம் மாறாக் கரப்பானும்
கந்தமலர்ப் பூங்குழலே காண்.

இ-ள். சிறுசிரங்கு, புண்கள், மந்தம், கரப்பானும் உண்டாம், அழகு, தீபனமும்போம். (அாஉ)

கருஞ்சோள அரிசியின்குணம்.

சொறியைச் சிரங்கைத் தொலையாத புண்ணை
மறிவிலா மெய்யில் வளர்க்குங்-குறியா
அழகுகொடுக்கும் அசதியைஉண் டாக்கும்
பழகுகருஞ் சோளம்அதுபார்.

இ-ள். சொறி, சிரங்கு, புண், அழகு, அசதியும், உண்டாம். ()

புன்செய்தானியவகை - முற்றிற்று.

காய்த்தானியவகை.

தே - துவரையின்குணம்.

பஞ்சமுட்டிக் காகுமரும் பத்தியவி யஞ்சனமாம்
விஞ்சுசுரஞ் சந்நிகட்கு மெத்தநன்றாம்-பஞ்சின்
விழுந்துவரை யாது மெலிந்தாரைத் தேற்றுங்
கொழுந்துவரை யாயினீ கொள்.

இ-ள். லங்கனதாரகத்துக்கும், பத்தியத்திற்கும், சுரம், சந்நிகளுக்கும், பஞ்சனேயேகிடையாய் எழுந்திருக்கச் சத்தியில்லாமல்மிகவும் மெலிந்தவருக்கும், ஆகும். (அாச)

உழுந்தின்குணம்-இதனை-உளுந்தென்பர்.

செய்யஉழுந் திற்குச்சி லேஷ்மஅனி லம்பிறக்கும்
வெய்யபித்தம் போம்மந்தம் வீறுங்காண்-மெய்அதனில்
என்புருக்கி தீரும் இடுப்புக் கதிபலமாம்
முன்பு விருத்திஉண்டாம் முன்.

இ-ள். சிலேஷ்மம், வாய்வு, மந்தம், இடுப்புக்குப்பலம், சுக்கில தாதும்உண்டாம், பித்தம், எலும்புருக்கியும்போம். (௬௫அ)

கடலையின் குணம்.

கடலை வயிறூதல் கனல்தாகஞ் செய்யுங்
குடலைவலிப் பித்துமலங் கொட்டுந்-திடமருந்தைச்
சேதம்உறப் பண்ணுந் தியக்கமொடு வாயுவையும்
போதஅழைக்கும் புகல்.

இ-ள். வயிறூதல், கனல், தாகம், குடல்வலி, மலங்கொட்டல் மருந்துமுறிவு, தியக்கம், வாய்வும்உண்டாம். (அ௬௬)

மொச்சைக்கொட்டையின்குணம்.

அனிலபித்த ஐயம் அனைத்தையும்உண்டாக்குந்
தொனியெடுக்க வாயுவினைத் தூண்டுந்-தனிவேள்
குனிக்குஞ் சிலைப்புருவக் கோதையே நாளும்
இனிக்குமொச் சைக்கொட்டையே.

இ-ள். வாதபித்தம், ஐயம், வாய்வும் உண்டாம். (அ௬எ)

பெரும்பயற்றின்குணம்-இதுவே-பருங்காராமணி.

பெரும்பயற்றை மேன்மேலும் பேணிஉண்ணுவார்க்கும்
பெருஞ்சாட ராக்கினிபோம் பின்னும்-வரும்மந்தம்
பேதி அதிகரிக்கும் பேராக் கபங்கதிக்கும்
வாதகுடி லம்பெருகும் வாழ்த்து.

இ-ள். பசிபோம், மந்தம், பேதி, கபம், வாதமும்உண்டாம். ()

சிறுபயற்றின்குணம்-இதுவே-பனிப்பயறு.

ஐயைப்பித் தத்தை அரோசகத்தைப் போக்கிவிடும்
வெப்பவா தத்தை விளைவிக்கும்-மையாம்
மறுவொழிந்த தூய மதிவதன மாதே
சிறுபயறு செய்யுஞ் செயல்.

இ-ள். ஐயம், பித்தம், அரோசகமும்போம், வாதம் உண்டாம்.

பச்சைப்பயற்றின்குணம்.

பச்சைப் பயறுதான் பாரிற் பயித்தியத்தை
அச்சம்அறநாளும் அகற்றுங்காண்-கச்சுலவு

கொங்கைமட மாதே குளிர்ச்சியென்பார் எப்போதுந்
தங்குவா தத்தைத் தரும்.

இ-ள். பயித்தியம்போம், குளிர்ச்சி, வாதமும் உண்டாம். ()

தட்டைப்பயறு-வெண்பயறு-கறும்பயறுகளின் குணம்.

தட்டைப் பயறுமந்தஞ் சந்நிதரும் வெண்பயறு
முட்டியே மெய்யில் முதிர்வாதக்-கட்டறுக்கும்
காணுங் கரும்பயறு கம்மநீர் வாதம்உடன்
கோணுவா தத்தையும்போக் கும்.

இ-ள். தட்டைப்பயறுக்கு மந்தம், சந்நியும்உண்டாம், வெண்பயறுக்கு, வாதம்போம், கரும்பயறுக்கு, நீர்வாதம், கோணுவாதமும் போம். (அ௬௧)

கொள்ளின்குணம்.

குடல்வாதங் குன்மம்உண்டாங் கொள்மருந்தோ நாசங்
அடல்ஏறு பித்தமிக ஆகுங்-கடுகடுத்த
வாதநீ ரேற்றமொடு மன்னுகுளிர் காய்ச்சலும்போஞ்
சாதிநலுங் கொள்ளுக்குத் தான்.

இ-ள். குடல்வாதம், குன்மம், மருந்துமுறிவு, பித்தமும் உண்டாம், வாதநீரேற்றம், குளிர்காச்சலும்போம். (அ௬௨)

எள்ளின்குணம்.

எள்ளுவருந் தைக்கொடுக்கும் ஏறனலாந் திண்மைதரும்
உள்ளில்ஐயஞ் சேர்க்கும் உதிரத்தைத்-தள்ளும் இரு
கண்ணுக் கொளிகொடுக்குங் காசம்உண்டாம் பித்தமுமாம்
பண்ணுக் கிடர்புரியும் பார்.

இ-ள். மருந்தின்பலம்போம், அனல், பலம், ஐயம், உதிரப்போக்கு, கண்ணொளி, காசம், பித்தமும் உண்டாம். (அ௬௩)

காய்த்தானியவகை-முற்றிற்று.

இறைச்சிவகை.

வெள்ளாட்டு இறைச்சியின்குணம்.

உள்ளாடும் நோயெல்லாம் ஓடும் உடல்பறக்குந்
தள்ளாடு வாதபித்தஞ் சாந்தமாம்-வெள்ளாட்டின்

நற்கறியை உண்பார்க்கு நாடுகய ரோகமும்போம்
மற்குரிய வன்பலனும் வாழ்த்து.

இ-ள். தேகத்திலுள்ள வியாதிகள், வாதபித்தம், கயரோகமும் போம், உடல்பருத்தல், தேகபலமும் உண்டாம். (அசச)

கொடியாட்டு இறைச்சியின்குணம்.

கொடியாடு நற்கறியாங் கொள்ளும்வகை கேளாய்
தடியாமற் பூப்போற் சமைத்து-விடியாலே
கொண்டால் இடுப்புவலி குத்திருமல் வெட்டையும்போங்
கண்டாலும் வாதம்அறுங் காண்.

இ-ள். இதை பூப்போல்சமைத்து காலையில் உண்டால், இடுப்பு வலி, குத்திருமல், வெட்டைவாதமும்போம். (அசரு)

தே-வரையாட்டு இறைச்சியின்குணம்.

பத்தியத்திற் கொவ்வும்வளர் பாரநோ யைத்தாக்கும்
மெத்த மெலிந்தார் மெலிவகற்றுஞ்-சுத்தமணம்
ஊட்டுவரை ஒத்தமுலை ஒண்டோடியே பன்மூலிக்
காட்டுவரை யாட்டுக் கறி.

இ-ள். பத்தியத்திற்கு ஆகும், பாரநோய்கள், தேகமெலிவும் போம். (அசசு)

செம்புலியாட்டு இறைச்சியின்குணம்,

அம்புலிபித் செங்கரப்பான் அண்டுவது மாத்திரமோ
செம்புலியாட் டுக்கறியைத் தின்றக்கால்-கொம்பில்
இருந்து குதித்தாற்போல் எப்பிணியும் உண்டாம்
அருந்துபாம் நீங்கா தறி.

இ-ள். செங்கரப்பான், எப்பிணியும் உண்டாம், துன்பம் நீங்காது, இதும்வ செம்மறியாடு. (அசஎ)

பள்ளையாட்டு இறைச்சியின்குணம்.

மந்தமிகுந் திபனம்போம் மாறு அரோசகமாந்
தொந்தநோய் எல்லாந் தொ ருங்காண்-இந்துநுதன்
மானே கபம்உவரும் வன்பள்ளை யாட்டுக்குத்
தானே மிகும்வாயு சாற்று.

இ-ள், திபனம்போம், மந்தம், அரோசகம், தொந்தநோய், கபம் வாய்வும் உண்டாம். (அசஅ)

குறும்பாட்டு இறைச்சியின்குணம்.

குறும்பாட் டிறைச்சிதனைக் கொறிப்பார்கட் கெல்லாம்
எறும்பார் சொறிசிரங்கும் எய்தும் - இறங்கும்
குடல்வாதஞ் சூலை கொடுஅனிலக் கூட்டம்
உடனே அடரும்என வோது.

இ-ள். சொறிசிரங்கு, வாய்வும் உண்டாம், குடல்வாதம், சூலையும்போம். (அ௪௯)

மான் இறைச்சியின்குணம்.

மானிறைச்சி உண் டார்தமக்கு மாதொந்த நோய்கபநோய்
ஊன்பகந்த ரங்கழலின் ஊதையொடு - தான்பரவு
வாதநமை யார்தினவும் வாங்குங்கண் ணிற்புகைபாம்
மோதுபித்தம் வீறும் மொழி.

இ-ள். தொந்தநோய், கபநோய், கழல்வாதம், கண்புகை, பித்தமும் உண்டாம், வாதம் தினவும்போம். (அ௫௦)

கலைமான் இறைச்சியின்குணம்.

மேகப் பிடிப்பகலும் வெட்டை அனலும்அறும்
போகம் உறும்பலனும் பூவையரே - தேகத்தில்
பித்தவா தங்கள்அறும் பேரா அழலையும்போந்
தத்துகலை மான்கறிக்குத தான்.

இ-ள். மேகப்பிடிப்பு, வெட்டை, அனல், பித்தவாதங்கள், அழலையும்போம், போகம், பலமும் உண்டாம். (அ௫௧)

கடமான்இறைச்சியின்குணம்.

உடலம் வலுவாகி ஓங்கிப் பருக்குங்
குடலில்அதி வாதங் குதிக்கும் - வடமார்
கடமா மெனுங்கொங்கைக் காரிகையே கானக்
கடமான் இறைச்சி உண்ணுங் கால்.

இ-ள். உடல்வலுத்துப்பருத்தலும், குடல்வாதமும் உண்டாம்.

வார்ப்பன்றி இறைச்சியின்குணம்-வி-ம்.

வாதபித் தங்கள் சேரும் மருவிய புண்ணும் உண்டாந்
தாதுவுங் கபமும் பொங்குந் தாங்கொணா அசதி யாகும்

வாதற அனந்த நோய்கள் வளர்ந்தெழுந் துன்பம் எய்தும்
ஓதியுண் மருந்து நாசம் ஊர்ப்பன்றிக் கறியுண் பார்க்கே.

இ-ள். வாதம், பித்தம், ..., தாது, கபம், அசதி, பலவியாதிகள், துன்பம், மருந்து நாசமும் உண்டாம். (அ௫௩)

காட்டுப்பன்றி இறைச்சியின்குணம்-வி-ம்.

ஏறிய வாதம் போகும் எழும்பிடுங் காச நோய்கள்
வீறிடும் விழிநோய் சீதம் விஷக்கடி கிரந்தி யுண்டாங்
கூறிடு மூலங் கிலங் குதங்குடல் வாதம் நாசம்
மாறிடு காட்டுப் பன்றி மாங்கிசந் தனையுண் பார்க்கே.

இ-ள். காசநோய்கள், விழிநோய், சீதம், விஷக்கடி, கிரந்தியும் உண்டாம், வாதம், மூலம், சருமகிலரோகம், குதநெகிழ்ச்சிரோகம், குடல்வாதமும்போம். (அ௫௪)

முள்ளம்பன்றி இறைச்சியின்குணம்-வெண்பா.

காட்டுப்பன் றிக்குணமுங் காயம்எல் லாமுள்ளே
நீட்டுப்பன் றிக்குணமும் நேர்ஒன்றாய்க் - காட்டுகினும்
இப்பன்றிக் கங்கம்இறுகுவதால் இப்பன்றிக்
கெப்பன் றியுங்கிரோ எண்.

இ-ள். இதற்குக் காட்டுப்பன்றிக்குண்டாகிய குணங்கள்எல்லாம் உண்டாயிருந்தாலும் தேகபிறுகலும் உண்டாம். (அ௫௫)

முசல்இறைச்சியின்குணம்-வி-ம்.

கடுகிய நடை உண்டாகுங் கனத்ததோர் பித்தம் ஏகும்
முடுகிய ஈளை காசம் முதிர்ந்ததோர் சுவாசம் போகுஞ்
சடுதியில் வெருண்டே யோடுந் தனிமுயற் கறியி னாலே
கொடுமையிற் கண்ணுப் வாதங் குறைந்திடும் மலம் இறுகும்.

இ-ள். கடுநடையுண்டாகும், பித்தம், ஈளை, காசம், சுவாசம், வாதம், மலமும்போம். (அ௫௬)

உடும்புஇறைச்சியின்குணம்-வெண்பா.

கிட்டும் உடும்பிறைச்சி கேள்விநோய் மூலமுலை
வெட்டை சிர நோய்சோபை மேகம்புண் - குஷ்டகபஞ்
சீதம்இரத் தக்கடுப்பு நீராக் குடல்வாதம்
பேதிவிவை போக்குமெனப் பேசு.

இதுவுமது.

சொல்லும்வாத பித்தமொடு தொல்வறட்சி யும்போம்
பலம்இலாத் தூர்ப்பலர்க்கும் பாரில்-பலம்வந்
திடுந் துவர்ப்பி னிப்பும் இயற்கையிலே உள்ள
உடும்பின் இறைச்சிதனை உண்.

இ-ள். காதுநோய், மூலமுளை, வெட்டைசிரநோய், சோபை, மேகம், புண், குஷ்டம், கபம், சீதம், இரத்தக்கடுப்பு, குடல்வாதம், பேதி, வாதம் பித்தம், வறட்சியும்போம், அதிகபலம் உண்டாம். ()

புலி-கரடி-சிறுபுலி இவைகளின் இறைச்சியின்குணம்-வி-ம்.

வருபுலி மாங்கிசத்தால் மாறும்உன் மாத ரோகங்
கரடிமாங் கிசத்தால் வாதங் கபங்கொடும் வலிப்பு நீங்குந்
திரிசிறு புலியி றைச்சி தீர்த்திடுஞ் சிலரோ கத்தை
வரிவிழி மாதே யிந்த வகையறிந் தோது வாயே.

இ-ள். புலியிறைச்சிக்கு; உன்மாதரோகம்போம், கரடி இறைச்சிக்கு, வாதம், கபம் வலிப்பும்போம், சிறுபுலியிறைச்சி, சிலரோகங்களைப்போக்கும். (அ௬௯)

மாடு-முதலை-இவைகளின் இறைச்சிக்குணம்-வெ-பா.

கோமாங் கிசத்தைக் குறித்துண்ட பேர்உடம்பில்
ஆமாவி யாதிக் களவுண்டோ - வாம
மதலைக் குறுகக்கு வான் அனிலஞ் சீதம்
முதலைத் தசைக்கிருக்கு மோ.

இ-ள். பசுமுதலிய மாட்டுஇறைச்சிக்கு ஆமம் உண்டாகும், முதலைஇறைச்சிக்கு, கக்குவான், வாதம், சீதமும்போம். (அ௭0)

பூனைஇறைச்சியின்குணம்.

பூனைக் கறியைப் புசித்தால் எழிலணங்கே
மேனிக் கழகுண்டாம் மேல்விரணந் - தான்அகலுஞ்
சூடும் அதிகரிக்குஞ் சோரியது மேன்மேலும்
நீடும்என நாளும் நினை.

இ-ள். இரணம்போம், மேனிஅழகு, சூடு, இரத்தபுஷ்டியும் உண்டாம். (அ௭௧)

புழுகுப்பூனை இறைச்சியின்குணம்.

இடுப்பில் உரதத்தில் எழுநோய் அகற்றுங்
கடுப்பு ருவா தத்தைக் கடுக்குந் - தொடுப்பில்
அமிழ்தாது வும்நல் அரும்பசியும நல்குங்
கமழ்புழுகுப் பூனைக் கறி.

இ-ள். இடுப்பில் - மார்பில்உண்டாகியநோயும், வாதநோயும் போம், தாதுவும் பசியும் உண்டாம். (அசுஉ)

கீரிஇறைச்சியின்குணம்.

கீரி இறைச்சிக்குக் கெம்பீரம் உண்டாகும்
நீரிழிவும் ஏகும்என்பார் நிச்சயமே - வீரியமாஞ்
சில்விஷம்விட் டேகுஞ் சிரங்கு சொறி அகலும்
பல்லரணை போகும் பறந்து.

இ-ள். நீரிழிவு, சில்விஷம், சிரங்கு, சொறி, பல்லரணையும்போம், கெம்பீரம், வீரியமும். உண்டாம். (அசுஙு)

மரநாய் இறைச்சியின் குணம்.

மரநாய் இறைச்சிக்கு வன்கிரந்தி மேகம்
உறும்அறவே ஓடிஒளிக்கும் - விரைவாதஞ்
சூலைகன வாதந் தொலையுஞ் சுரம்போகும்
ஞாலமிசை இக்குணத்தை நாட்டு.

இ-ள். கிரந்தி, மேகம், விரைவாதம், சூலைவாதம், சுரமும் போம். (அசுச)

எலி இறைச்சியின்குணம்.

எலி இறைச்சி குன்மம்பி லீகம் உரநோய்
நலிவித் திரப்புண் நமைச்சல் - மெலிவோட்டும்
மீதுமட்டி டாப்புளகம் மேவச்செய் யும்புணரத்
தாதுவுக்கும் புஷ்டிதருந் தான்.

இ-ள். குன்மம், பிலீகம், மார்புநோய், புண், நமைச்சலும் போம், தாதுபுஷ்டியுண்டாம். (அசுரு)

வெள்ளெலி இறைச்சியின்குணம்.

தெம்மைப் குன்மஞ் செறிமூலம் வித்திரதி
பேதிதொந்த ரோகம் பிலீகமும்போம்-தாதுவுமாஞ்

சேரும் உதிரம்அது தேகம்எல்லாம் பரவுஞ்
சாருமின்ற வெள் எலிக்குத் தான்.

இ-ள. சீதம், ஐயம், குன்மம், மூலம், நரம்பிலுண்டாகும் கட்டி, பேதி, தொந்தரோகம், பிலீகமும்போம், தாதுவும், உதிரமும் உண்டாம். (அசசு)

பெருச்சாளி இறைச்சியின்குணம்.

வாதபித்தந் தாள்பிடிப்பு வன்பீந சங்குஷ்டம்
ஓதுதிர ரோயோ டிறைகீடம்-பேதிஇவை
போர்ந்தகல ஓடும் பெருச்சாளி யின்கறியால்
தீர்ந்தவெழில் ஓவியமே செப்பு.

இ-ள். வாதபித்தம், தாள்பிடிப்பு, பீநசம், குஷ்டம், உதிரநோய், புழு, பேதியும்போம். (அசஎ)

இறைச்சிவகை-முற்றிற்று.

பறவைஇறைச்சி-அல்லது-கறிவகை.

கோழிக் கறியின்குணம்.

கோழிக் கறிநெருப்பாங் கொள்ளில் மருந்தூரம்வங்
கூழைக் கடுப்புமந்தங் கூறரசம்-மாழ்கிப்போம்
நீளுற்ற போகம் நிணக்கிரந்தி பித்தம் உண்டாந்
தூளித்த மெய்இளைக்குஞ் சொல்.

இ-ள். மருந்தின்பலம், வாய்வு சிலேஷ்மம், கடுப்பு, மந்தம் மூலமும்போம், போகம், கிரந்தி, பித்தம், தேகமிளைத்தல், அதிகச் சூடும் உண்டாம். (அசஅ)

கருங்கோழிக் கறியின்குணம்.

குட்டங் கடிகிருமி கோரவா தக்கூட்டம்
மட்டிடாச் சூலைபறும் மாதரசே-துட்டக்
கிரந்தியொடு புண்வலிபோங் கேள்உடல்உரக்கும்
அருந்துகருங் கோழிக் கறி.

இ-ள். குஷ்டம், கடி, கிருமி, வாதக்கூட்டம், சூலை, கிரந்தி, புண் வலியும்போம், தேகபலம் உண்டாம். (அசகு)

காருங்கோழிக் கறியின்குணம்.

உத்தமமாம் நோயனேகம் ஓடும் இருமல்அறும்
பத்தியமாம் நோயோர்க்குப் பார்மீதில்-முத்தநகை
மானே கரப்பான்போம் மாசு மறுஅகலுங்
காருங்கோ ழிக்கறியைக் காண்.

இ-ள். அநேகநோய், இருமல். கரப்பான், மாசு, மறுவும்போம் பத்தியத்திற்காகும். (அஎ0)

வான்கோழிக் கறியின்குணம்.

போகமிகும் மெய்யிற் புளகிதம்வான் கோழிக்கு
ஆகமதில் ஐயம் அதிகமுமாம்-தேகம்எல்லாந்
தானே கரப்பானுஞ் சாற்ற உரிசையுமாந்
தேனே யிதனைத் தெரி.

இ-ள். போகம், தேகப்புளகிதம், ஐயம், கரப்பான், உரிசையும் உண்டாம். (அஎக)

சம்பக்கோழிக் கறியின்குணம்.

வரட்சி சொறிசிரங்கு வன்கரப்பன் என்னுந்
திரட்சி பொருபலநோய் தீரும்-பொருட்சிகரி
கும்பக்க டாக்களிற்றின் கோடெனச்சொல் பூண்முலையாய்
சம்பங்கோ ழிக்கறிக்குத் தான்.

இ-ள். வறட்சி, சொறி சிரங்கு, கரப்பான், வீக்கம், பலநோயும் போம். (அஎ௨)

வாத்துக் கறியின்குணம்.

வாத்துக் கறிஅருந்த வற்றிஉலர் புண்சிரங்குங்
கோத்த கபமுங் குலாவுங்காண்-ராத்திரியிற்
போகம் உறுதியுமாம் பொல்லா அரோசகநோய்
ஆகும் அதில் ஊறும் அறி.

இ-ள், வற்றியுலர்ந்தபுண், சிரங்கு, கபம், போகம், அரோசிக நோயும் உண்டாம். (அஎ௩)

கோழி முட்டையின் குணம்.

வாதபித்தஞ் சேர்ப்பிக்கும் வன்றோஷம் புண்போக்குந்
தாதுவை மெத்தத் தழைப்பிக்கும்-ஓது
கபத்தை அடக்குங் கரப்பான்உண்டாக்கும்
இபத்தைஉறுங் கோழிமுட்டை எண்.

இ-ள். வாதம், பித்தம், தாது, கரப்பானும் உண்டாம், தோஷம், புண், கபமும்போம். (அஎஎ)

காடைக் கறியின் குணம்.

கட்டுற் றிடப்பார்க்குக் காட்டிற் படுங்காடை
மட்டவிழுங் கோதாய் மருந்தன்றோ-இஷ்டம்உறச்
சோறுபுகுஞ் சோபைஅறுந் துன்னோய்எல்லாம்ஏகும்
வேறுமருந் தேற்றுவதேன் விள்.

இ-ள். சோபை, பலநோயும்போம், பத்தியத்திற்காகும். ()

கவுதாரிக் கறியின் குணம்.

சிவல்இறைச்சி பித்தஞ்சி லேஷ்மமந்தம் வாதக்
கவலைஅற ஒட்டிஉடல் காக்கும்-புவனமதில்
மெய்க்குப் பலஞ்செய்யும் வீரியமும் உண்டாக்குஞ்
சிக்கிய மலங்கழிக்குஞ் செப்பு.

இ-ள். பித்தம், சிலேஷ்மம், மந்தம், வாதம், சிக்கிய மலமும் போம், தேகபலமும், வீரியம் உண்டாம். (அஎகூ)

ஊர்க்குருவிக் கறியின் குணம்-வி-ம்.

மருவிய திரிதோ ஷம்போம் மறப்புறாப் புணர்ச்சி யுண்டாம்
பெருகிய சுரமே கம்போம் பிறந்திடும் இளமை மெய்யில்
கருகிய வன்னம் நீங்கிக் கனகம்போல் ஒளிவுஞ் சேரும்
உருவமுந் திரமாம் நாளும் ஊர்க்குரு வியின்ற சைக்கே.

இ-ள். திரிதோஷம், மேகசுரமும்போம், மாறாப்புணர்ச்சி, பலம், மேனிபொன்னிறமும் உண்டாம். (அஎ௦)

வானம்பாடிக் கறியின் குணம்-வெண்பா.

வெட்டை அனலமொடு வீறுபல நோய்அகலும்
மட்டிலாக் காமம் வளருங்காண்-மட்டணிபிற்
கானம்பா டிக்களிக்குங் காமரசப் பைங்கிளியே
வானம்பா டிக்கறி வறு.

இ-ள். வெட்டை, அனல், பலநோயும்போம், காமம் உண்டாம்.

விச்சுளிக் கறியின்குணம்.

ஐயுடனே பித்த அரோசகத்தை மாற்றிவிடுஞ்
சையோக போகந் தழைப்பிக்கும்-மெய்யாகாப்
பத்தியமாம் யார்க்கும் பசும்விச்சு ளிக்குருவி
உத்தமத்தில் உத்தமமாம் ஓது.

இ-ள். ஐயம், பித்தம், அரோசகமும்போம், போகம் உண்டாம, பத்தியத்திற்காகும். (அஎசு)

தூக்கணங்குருவிக் கறியின் குணம்.

ஐயம் அருசி அகட்டின்மல மும்போக்குந்
துய்ய பசியைமேத் தூண்டிவிடும்-மெய்யில்
மினுத்தஅழ குண்டாக்கும் மென்பத் தியமாந்
தனித்தூக்க ணங்குருவி தான்.

இ-ள். ஐயம், அருசி, மலமும்போம், பசி, அழகும் உண்டாம், பத்தியத்திற்காகும். (அஎஎ)

கருங்குருவிக் கறியின் குணம்-இதுவே-வலியன்.

வாதகா மாலைபறம் மாதே கபமும்போம்
ஊதகா மாலைவிழுந் தோடுங்காண்-வாதுசெய
வந்தகரப் பான்உடனே மாறுஞ் சொறியும்போங்
குந்து கருங்குருவி கொள்.

இ-ள். வாதகாமாலை, கபம், ஊதுகாமாலை, கரப்பான், சொறியும்போம். (அஎஅ)

சிட்டுக்குருவிக் கறியின் குணம்.

பூவிரணம் போக்கிவிடும் பொல்லாக் கிருமிகளைப்
பாவுமலத் தோடு றக்கப் பண்ணுங்காண்-பூவணையிற்
கட்டுற்ற மாதர்எலாங் கைகுவிக்கக் கௌ ரவிக்கும்
சிட்டுக் குருவித் திறம்.

இ-ள். ஆண்குறிப்புண், கிருமியும்போம், போகத்தில், இஸ்திரீகள் கைகுவிப்பார்கள். (அஎகூ)

உள்ளான் கறியின்குணம்.

உத்தமாம் பத்தியத்திற் கொவ்வும்உள் ளான்கறிதான்
சத்தியமாய் வாதபித்த சாந்திசெய்யும்-முத்த
நகையீர்மே கம்போக்கும் நற்பசியுண் டாக்குந்
தகைமந்தந் தீர்த்துவிடுஞ் சாற்று.

இ-ள். வாதபித்தம், மேகம், மந்தமும்போம், பத்தியத்திற்காகும், பசியுண்டாம். (அஅ௩)

கொசுஉள்ளான் கறியின்குணம்.

கொசுஉள்ளான் றன்கறியைக் கூட்டியுண் பார்க்குப்
பசியெழும்பும் மேகம் பறக்கும்-பசபசத்த
நின்ற தினகவலும் நீள்காத போகம்உறும்
மன்றலுறை வார்குழலே வாழ்த்து.

இ-ள். மேகம், தினவும்போம், பசியும் போகமும் உண்டாம். ()

கோரையுள்ளான் கறியின்குணம்.

நாட்டில்உள்ள பட்சிகளில் நன்றிதுவே பத்தியமாங்
கூட்டில்உள்ள தோஷம் குலையுங்காண்-தாட்டிகமாய்
ஆரென்ன சொன்னாலும் அம்புவியில் நோயோர்க்குக்
கோரையுள்ளான் கறியைக் கூட்டு.

இ-ள். பத்தியத்திற்கு ஆகும், தோஷம்போம். (அஅ௫)

மயில் கறியின்குணம்.

சூலைப் பிடிப்புகளைச் சோரிவளி பைப்பித்தை
வேலைச்சி லேட்டுமத்தை வீட்டுங்காண்-நூலொத்த
அற்பவிடை மாதே! அனலாம் மயில்இறைச்சி
நற்பசிஉண் டாக்கும் நவில்.

இ-ள். சூலைப்பிடிப்பு, இரத்தவாய்வு, பித்தம், சிலேஷ்மமும்போம், அனல், பசியும் உண்டாம். (அஅ௬)

குயில் கறியின் குணம்.

நல்லதொரு பத்தியமாம் நாடாது வாதபித்தஞ்
சொல்லரிய மானே சொறிசுகும்-வல்ல
குயில்அருந்த மேகம்போங் குன்மவலி தீரும்
துயிலில்அதி போகம்உறுஞ் சொல்.

இ-ள். பத்தியத்திற்கு ஆகும், வாதபித்தம், சொறி, மேகம்குன் மவஸியும்போம், போகம்உண்டாம். (அஅஎ)

கொக்குக் கறியின்குணம்.

கொக்கருந்த மேகம்உண்டாங் கூடும் அரோசகநோய்
மைக்குழலே புண்கரப்பான் வந்துரையும்மெய்க்கு
நியத்தமருந் துண்ணில் இதன் நீல்கவிச்சா காது
வயிற்றுக் கிருமிபோம் மாறி.

இ-ள். மேகம், அரோசகநோய், புண் கரப்பானும் உண்டாம், மருந்துண்ணும்போது இதின் கவிச்சு ஆகாது, வயிற்றுக்கிருமி போம். (அஅஅ)

கருங்கொக்குக் கறியின்குணம்.

கருங்கொக்கின் றன்கறிக்குக் காணுக் கரப்பன்
மருங்கொக்கும் புண்ணும் வளரும்-பெருங்கிரந்தி
உண்டாஞ் சிலேஷ்மம் உலவும்உடலம்எலாம்
வண்டார் குழலே வழுத்து.

இ-ள். கரப்பான், புண், பெருங்கிரந்தி, சிலேஷ்மமும் உண்டாம். (அஅக)

தாராக்கறியின் குணம்.

தாராக் கறி அருந்தத் தாதுமிக வுண்டாகும்
பேராக் கபமவளரும் பெண்மயிலே-நீராத
வாந்தி அரோசகமும் வன்கரப்பன் புண்ணுமிகச்
சேர்ந்துவரும இப்பலன்னச் செப்பு.

இ-ள். தாது, காமம், வாந்தி, அரோசகம், கரப்பான், புண்ணும் உண்டாம். (அகூ0)

நாரைக்கறியின் குணம்.

நாரைக் கறியருந்த நாமுகரப் பான்புண்ணும்
வரைத் தொடர்ந்து தொடர்ந் தொட்டுநாண்-பாரித்த
மேகமொடு வாதம் விளையுமே நீரிழிவுக்
காகும்என் பார்கள் அறி.

இ-ள். நாமுகரப்பான், புண்ணும்போகும், மேகம் வாதமும் உண்டாம், நீரிழிவுக்கு ஆகும். (அகூக)

ஆள்காட்டிப்பக்ஷிக் கறியின்குணம்.

ஆட்காட்டிப் பட்சிக் கடல்மேகம் போய்ஒளிக்குந்
தோட்காட்டு வாதந் தொடராதே-வாட்கண்
அரிவையே பத்தியத்திற் காகும் புவியில்
தெரியமரைப் பில்லாமற் செப்பு.

இ-ள். மேகம், வாதமும்போம், பத்தியத்திற்கு ஆகும். (அகூஉ)

கிருட்டிப்பட்சிக் கறியின்குணம்.

மருட்டு விழியுடைய மாதே புவிக்குள்
கிருட்டிக் கறியருந்திற் கேளாய்-மருட்டுபித்தம்
வாதங் கடுப்பு வளமிரத் தக்கழிச்சல்
காதம்போம் வாந்தியறுங் காண்.

இ-ள். வாதம், பித்தம், கடுப்பும், உண்டாம், இரத்தக்கழிச்சல், வாந்தியும்போம். (அகூங)

சூறைப்பட்சிக்கறியின்குணம்.

குஷ்டங் கிருமிகுன்மங் கோரவா தஞ்சோபை
துஷ்டம் பகந்தரநோய் தோன்றுமோ-இஷ்டமுறப்
பத்தியத்திற் காகும் பருவில் உருசையுமாங்
கைத்திடாச் சூறைக் கறி.

இ-ள். குஷ்டம், கிருமி, குன்மம், கோரவாதம், சோபை, ஆரு தவிரணம், பெண்குறிநோயும்போம், பத்தியத்திற்காகும், உருசை யாயிருக்கும். (அகூச)

கிளுவைக் கறியின்குணம்.

பாலிலா மாதர்க்குப் பாலுண்டாம் போகமுமாந்
தாலமிசை பித்தர் தரிக்குமோ-சாலச்
சிரங்குபுண்க ளெல்லாமே சிழ்வற்றி யாறும்
அருங்கிளுவை யைத்தின் றறி.

இ-ள். மாதர்களுக்கு முலைப்பாலும், போகமும்உண்டாம், பித்தம், சிரங்கு, புண்ணும்போம். (அகூரு)

மடையான்கறியின் குணம்.

அன்னநடை பின்னுசடை அங்கண் மடமாதே
வன்னமடை யான்கறியை மாந்தினர்க்குத்-துன்னு

கரப்பான் சொறிசிரங்குங் காணுதஐய வாதம்
உரப்பாக நீடும் உரை.

இ-ள். கரப்பான், சொறி, சிரங்கு, ஐயம், வாதமும் உண்டாம்.

கூழைக்கடாக் கறியின்குணம்.

நெடுநாளின் நீரிழிவை நேராகக் கட்டும்
அடலான சூலைஅகற்றும்-மடவாருங்
கூழைக் கடாக்கறிதான் கோரகரப் பான்புண்ணை
ஆழத்தே கத்திருத்தும் ஆய்.

இ-ள். நீரிழிவு, சூலையும்போம், கரப்பான், புண்ணும்உண்டாம்.

நமிட்டுக்கறியின் குணம்.

நமிடுகரப் பான்வாதம் நாட்சோபை மாற்றும்
அமிர்தகுணம் ஆம்உரிசை ஆகுஞ்-சமம்உரைக்கில்
எல்லாக் கறிக்கும்இஃ தின்பாகும் இக்கறிக்குப்
பொல்லாக் கபநோய்போம் போம்.

இ-ள். கரப்பான், வாதம், சோபை, கபநோயும்போம், எல்லாக் கறிகளுக்கும் மேலாகிய உருசியாக விருக்கும். (அகூஅ)

சிறவிப்பட்சிக் கறியின்குணம்.

வாராய் மடமானே வாதகபம் உண்டாகுஞ்
சேராச் சிறவிதனைத் தின்றக்காற்-போராத்
தினவுகரப் பான்கிரந்தி சேருமோ நாளுங்
கனஉறுதி யாம்போகங் காண்.

இ-ள். வாதகபம், போகமும் உண்டாம்தினவு, கரப்பான் கிரந்தியும்போம். (அகூகூ)

பொன்னுத்தட்டான் கறியின்குணம்.

மேக அழல்தணியும் மிக்கஅழ குண்டாகும்
போக மிகுங்கரப்பான் போகுங்காண்-பாகான
பொன்னுத்தட் டான்கறியைப் போற்றிஉண்ணில்நற்சுவையாம்
மின்னுத்தே கம்புவியில் விள்.

இ-ள். மேகஅனல், கரப்பானும் போம், அழகு போகமும் உண்டாம். (கூ00)

கடல்இறஞ்சிக்கறியின்குணம்.

பத்தியத்திற் கொவ்வும்இந்தப் பாரிற் கடல்இறஞ்சி
உத்தமமாம் நோயனைத்தும் ஓட்டுங்காண்-மெத்தச்
சொறிகரப்பான் வன்சிரங்கு தொல்மேகம் போக்குஞ்
செறிநரைநீக் குஞ்சுவையாம் செப்பு.

இ-ள். பலவிதநோய், சொறி, கரப்பான், சிரங்கு, மேகம்,நரையும்போம், பத்தியத்திற்கு ஆகும், உருசியாயிருக்கும். (கூ0க)

வெண்புறாக் கறியின்குணம்.

வெண்புறா வாதபித்தம் வீறுகபம் மேகம்இவை
திண்புவியை விட்டோடச் செய்யுங்காண்-புண்பரவு
வெண்குஷ்டம் நீள்கரப்பான் மெய்வறட்சி யும்போக்கும்
பண்புற்ற பத்தியமாம் பார்.

இ-ள். வாதபித்தம், கபம், மேகம், வெண்குஷ்டம், கரப்பான், மெய்வறட்சியும்போம், பத்தியத்திற்கு ஆகும். (கூ0உ)

பச்சைப்புறாக்கறியின்குணம்.

இச்சைதரும் புன்முறுவ லேந்திழையே மாந்தர்மிகப்
பச்சைப்பு றாவூன் பருகினல்-கொச்சைதரும
வாதபித்த ஐயம்போம் மாபலமுந் தாதுவுமாம்
ஓதுசீ தம்போம் உரை.

இ-ள். வாதபித்தம், ஐயம் சீதமும்போம், பலம், தாதுவும், உண்டாம். (கூ0ஙு)

மாடப்புறாக்கறியின்குணம்.

உண்டாற் பசியாம் உறைநாது வும்பெருகுங்
கண்டாலும் வாதங் கலங்குங்காண்-வண்டாருங்
காரின்மிகு மைக்கூந்தற் காரிகையே பத்தியமாம்
பாரின்மா டப்புறாவைப் பார்.

இ-ள். வாதம்போம், தாது, பசியும் உண்டாம், பத்தியத்திற்கு ஆகும். (கூ0ச)

வரிப்புறாக்கறியின்குணம்.

வரிப்புறா வின்றசையே மாஉருசி தின்றால்
தரிப்புறு வாதபித்தந் தாளும்-அரிப்பான

சோபாரோ கங்கள் தொடார் எவர்களுக்கும்
நீபார் கனிவாய் நினைத்து.

இ-ள். சோபரோகம், வாதபித்தமும்போம். (கூ0௫)

வன்னப்புறுக் கறியின்குணம்.

ஈளை இரைப்போ டிரத்தபித்தம்போக்கிவிடும்
வாளைவென்ற கண்ணாய் மலங்கழிக்கும்-நாளுமோ
அன்னம்மூட் டும்பசிமூட்டும்அருசி ஓட்டும்நல்ல
வன்னப்பு றுவைநகர் வாய்.

இ-ள். அருசி, இரத்தபித்தம் இரைப்பு,ஈளை,மலக்கட்டும்போம் பசியுண்டாம். (கூ0௬)

மணிப்புறுக் கறியின்குணம்.

கணிப்புறு இன்பக் கஞ்சிபமே கேளாய்
மணிப்புறுப் பத்தியமாம் வாதப்-பிணிப்பறும்உள்
கொண்டாற் சயந்திருங் குன்மரோ கங்கள் அறுங்
கண்டாலும் ஐயம்போங் காண்.

இ-ள் ஐயம், சயம், குன்மரோகம், வாதக்கட்டும்போம், பத்தியத்திற்கு ஆகும். (கூ0௭)

மணிப்புறுக் கறியின்குணம்.

பத்தியத்திற் காகாது பல்மணிப்பு றுக்கறிதான்
ஒத்தகரப் பான்சொறியை உண்டாக்கும்-மெத்தவுமே
நாவுருசி யாயிருக்கும் நற்சுக்கி லம்பெருக்குந்
தாவு கயல்விழியாய் சாற்று.

இ-ள். கரப்பான், சுக்கிலம், சொறியும் உண்டாம், பத்தியத்திற்கு ஆகாது. (கூ0௮)

தவிட்டுப்புறுக் கறியின்குணம்.

ஓடுகரப் பான்சோபை உட்சொறிகா மாலைபித்தம்
ஆடு பெருமூச் சடைப்பும்போம்-நீடு
கவட்டுக் கலகவிழிக் காரிகையே நாளுந்
தவிட்டுப் புறுக்கறிக்குத் தான்.

இ-ள். கரப்பான், காமாலை, சொறி, சோபை, பித்தம், மூச்சடைப்பும்போம். (கூ0௯)

நீர்க்காக்கைக் கறியின்குணம்,

பாண்டோடு சோபை பருவயிறும் போங்கரப்பன்
மீண்டுசொறி யும்விலையும் மெய்த்தவரை-நீண்டமதன்
ஊர்க்காக்கு மாதரசே ஒக்குபுலால் நாற்றம்உறும்
நீர்க்காக்கை தன்னை நினை.

இ-ள். சோபை, பாண்டு, பெருவயிறும்போம்,கரப்பான்,சொறி புலால்நாற்றமும் உண்டாம். (கூகo)

அண்டங்காக்கைக் கறியின்குணம்.

பித்தவெட்டை சோபை அறும் பேதித் தெழுந்துடலில்
ஒத்தபெரும் பாண்டுவகை ஓடுங்காண்-நித்தியமோர்
கண்டஞ்செய் காமிலம்போங் காக்கைக்குள் ஓர்பிரிவாய்
அண்டங்காக் கைக்கறிஉண் டால்.

இ-ள். காமாலை, சோபை, பாண்டு, பித்தவெட்டை, பெரும்பாடும்போம். (கூகக)

கோட்டான் கறியின்குணம்.

கோட்டான் கறிக்குக் கொடும்பசியாம் நோய்கள்தலை
காட்டா தடங்கும்இது கைவல்யங்-காட்டானை
மாமதம்போற் காமம்உறும் வன்மருந்தின் பத்தியமாம்
பூமயிலே யாவர்க்கும் போதி.

இ-ள். நோய்களெல்லாந் தலைக்காட்டாமல்போம், அதிகபசி, காட்டானை மதம்போன்ற காமமும் உண்டாம், பத்தியத்திற்காகும். ()

பறவைக்கறிவகை-முற்றியது.

மீனக்கறி வகை.

வரால்மீன் கறியின்குணம்.

உடலை வளர்க்கும் உறுபிணியைத் தீர்க்குங்
குடலுக் சுகிசுகங்கொ டுக்குங்-கடலை
யுழக்கும் வராலைவிட்டிவ் வூர்க்குளத்துச் சேற்றை
யுழக்கும் வரால்அதனை யுண்.

இ-ள். தேகப்பிணிகள்போம், உடல்வளர்ந்தி, குடலிற்குச் சுகமும் உண்டாம், கடல்வராலைச் சாப்பிடக்கூடாது. (கூகஉ)

குறவைக் கறியின்குணம்.

முட்டு குடல்வலிபோம் மூடிருமல் ஏகுமலக்
கட்டுரக்கும் வாய்அருசி காணுங்காண்-முட்ட
குறவைப்பெற் றோருந் துதிக்கும்எழின்மாதே
குறவைமீனின்குணத்தைக்கூறு.

இ-ள். இருமல், குடல் வலியும்போம், அருசி, மலக்கட்டும் உண்டாம். (கூகச)

அயிரைக் கறியின்குணம்.

உயிரை வளர்க்கும் உடற்பிணியை நீக்கும்
மயிரைவளர்க் கும்அருசி மாற்றும்-வயிரச்
செயிரையுறுச் சற்குணநற் றெள்ளமிர்தே நாளும்
அயிரைஎனுமீன் அது.

இ-ள். அருசி, தேகப்பிணியும்போம், சரீரமும், தலைமயிரும்வளர்த்திமிகவும் உண்டாம். (கூகரு)

இறால் கறியின்குணம்.

வாதமொடு மந்தம்உறும் மாறாப் பொருமல்மிகுஞ்
சீதம் விளையுந் தினவுண்டாம்-மாதே
உதிர மிகப்பெருகும் ஓங்கும்இறால் உண்டால்
எதிரில்அங்க மாங்கிசமாம் எண்.

இ-ள். உதிரப்பெருக்கு, சீதம், தினவு, பொருமல், மந்தம்,வாதமும் உண்டாம். (கூகசா)

கெண்டைக் கறியின்குணம்.

அண்டையில்நிற் பார்களுக்கும் ஆரோசி கங்காணும்
பண்டையுள நோய்முதிர்ந்து பாரிக்கும்-கெண்டையுண்டால்
வாயுவும்உண் டாகும வயிற்றுவலி யுஞ்சேரும்
நீயும அறிவாய் நிசம்.

இ-ள். அநேகம்நோய், அரோசி, வயிற்றுவலி, வாய்வும் உண்டாம். (கூகஎ)

சன்னக் கெண்டையின்குணம்.

மின்னை நிகருமிடை மெல்லியலே மேனியது
சன்னமீன் உண்டால் தளராதா-முன்னைக்

கரப்பானும் புண்ணுங் கடியகப மும்போம்
உரப்பாக நாளும் உரை.

இ-ள். க-ம். கரப்பான், புண்ணும்போம், தேகபலம் உண்டாம். (௬௧அ)

பேராரால் கறியின்குணம்.

வாராய் மடமானே வந்தபிணி அத்தனையும்
பேராரால் மீனுக்குப் பின்னிடையும்-பேரா
திருந்த பழமலம்போம் எய்தும்ஆ ரோக்கியம்
மருந்தோடே ஒக்கும்என வை.

இ-ள். பலபிணிகளும், பழமலமும்போம், ஆரோக்கியம் உண்டாம். (௬௧௯)

சிற்றுரால் கறியின்குணம்.

சிற்றுரால் மீன்அருந்தச் சிக்கு மசலம்போம்
உற்ற கபங்கரப்பான் உண்டாகுஞ்-சற்றேதான்
மந்தம்உறுந் தீபனம்போம் வாயிற் சலம்ஊறுங்
கந்தமலர்ப் பூங்குழலே காண்.

இ-ள். தீபனம், மலசலச்சிக்கலும் போம், கபம், கரப்பான்,மந்தம் வாயில் சலம்ஊறலும் உண்டாம். (௬௨௦)

கச்சற்கருவாட்டுக் கறியின்குணம்.

வாதம்அறும் அப்பொழுதே வன்பித்தம் உண்டாகுஞ்
சீதம்அகலுந் தினவும்போம்-கோதாய்கேள்
கண்டால் பசிஎழும்புங் கச்சற் கருவாடு
கொண்டால் சுரமும்விடுங் கூறு.

இ-ள். சீதம், சுரம், தினவு, வாதமும்போம், பித்தம், பசியும் உண்டாம். (௬௨௧)

உழுவைக்கறியின்குணம்.

முழிதும் புசிக்கலாம் முள்ளுமில்லை அந்த
உழுவைக் குடர்பிணிவிட் டோடும்-வழுவான
முன்மலமுஞ் சாரும் முதிர்கரப்பான் உண்டாகும்
வன்முலையாய் நீயறிந்து வை.

இ-ள். உடல்பிணிபோம், கரப்பான், மலமும்உண்டாம். (௬௨௨)

வாளைக் கறியின்குணம்.

ஆளை வளர்க்கும் அதி ஆண்மைதனை உண்டாக்கும்
வாளையென்ற கண்மாதே வாயுவென்பார்-வேளை
அறியாமல் உண்டால் அணுகுமே வாதங்
குறியார்கள் வாளைக் குணம்.

இ-ள். ஆண்மையும், வாய்வும், உண்டாம். (கூஉ௩)

சேல்கெண்டைக்கறியின்குணம.

குடல்வாத சூலை கொடுக்குஞ்சேற் கெண்டை
அடல்வாத மேகமும் உண்டாக்குஞ்-சடமீது
புண்ணுஞ் சிரங்கும் பொருந்திடிற்கச் செய்துவிடும்
உண்ண மிகுசுவையாம் ஓது.

இ-ள். குடல் வாதசூலை, சிரங்கு, புண், வாதமேகமும் உண்டாம். (கூஉ௪)

கடல்மீன் கறிவகை

கெளிற்றுக்கறியின்குணம்.

நெய்த்திருக்கும் நொய்த்திருக்கும் நீங்காத சுக்கிலமாம்
ஒத்திருக்கும் வன்கெளிற்றை யுண்டாக்கால்-மெத்த
கரப்பானும் புண்ணுங் கபமும் பெருகுந்
தரைக்குள் எவருக்குஞ் சாற்று.

இ-ள். கபம், கரப்பான், சுக்கிலம், புண்ணும் உண்டாம். ()

ஒலைவாளைக்கருவாட்டுக்கறியின்குணம்.

ஆலைவாய்ப் பித்தம் அணுகாதாம் அம்புவியில்
ஒலைவாளைக்கருவா டுண்டக்கால்-சாலப்
பசித்தீ பனமாம் பறக்குமே வாதம்
புசிபார்க் கிதனைப் புகல்.

இ-ள். பித்தம், வாதமுமபோம், பசித்தீபனம் உண்டாம். (கூஉ௬)

சுறாக்கறியின்குணம்.

வாத கபம் அறுக்கு மன்னுமிசி டம்போக்கும்
ஓது குடல்வாதம் ஒடுக்காண்-ஆதாவாய்

எல்லாப் பிணிக்கும் இதமாகும் நல்லசரு
நல்லா ரறிய நவில்.

இ-ள். வாதகபம், புழு, குடல்வாதமும் போம், பத்தியத்திற்காகும். (கூஉஎ)

சுருக்கருவாட்டுக்கறியின்குணம்.

சூலை கிராணிகுன்மந் துஷ்டஅதி சாரமிவை
வேலை யுலகை விடுத்தோஷஞ்-சால
அருப்பசியுண் டாகும் அபத்தியமல் லாத
சுருக்கருவாடுண்பார்க்குச் சொல்.

இ-ள். சூலை, கிராணி, குன்மம், அதிசாரமும் போம், பசியுண்டாம், பத்தியத்திற்கு ஆகும். (கூஉஅ)

கொள்ளிக்கருவாட்டுக்கறியின்குணம்.

கொள்ளிக் கருவாடு கொண்டாய் உடம்பெல்லாங்
கொள்ளிகொண்டு சுட்ட குறிப்பாகும்-விள்ளக்
கரப்பானும் புண்ணுங் கனசிரங்கும் பைய
உரப்பாம் அழகுகெடும் ஓது.

இ-ள். அழகுபோம், கொள்ளியால் சுட்டபுண்போலக் கரப்பான், சிரங்கு, புண்ணும் உண்டாம். (கூஉகூ)

சன்னக்கூனிக்கறியின்குணம்.

சன்னக்கூ னிக்கறியைத் தான் அருந்தில் அக்கணமே
தின்னப் படும்அன்னஞ் சீரணமாம்-பின்னும்
பசிக்கும் அதிநெருப்பாம் பாரில்நோ யெல்லாம்
நசிக்கு மெனவு நவில்.

இ-ள். நோய்களெல்லாம் போம், அன்னஞ்சீரணம், சூடு, பசியும் உண்டாம். (கூஙo)

திருக்கைக்கறியின்குணம்.

வாதமொடு தாது வளர்ந்துள்ளே சேருமென்றுங்
ஓதுபித்தஞ் சோபம்இவை யோடுமென்றுங்-கீதச்
செருக்கையடை வாரைத் திருத்துமொழி மாதே
திருக்கைமீன் உண்பார்க்குச் செப்பு.

இ-ள். சோபம், பித்தமும்போம், தாது, வாதமும் உண்டாம்.

மடவைக்கறியின்குணம்.

மடவைமீன் வாதமொடு மந்தமுளை மூலங்
குடல்வாதஞ் சூலை கொடிய-அடல்கரப்பான்
உண்டாக்கும் மாங்கிஷங்கள் ஊறு மெனப்புகல்வார்
வண்டார்க்கும் வார்குழலே வாழ்த்து.

இ-ள். ஊறல், கரப்பான், குடல்வாதம், சூலை, மந்தம், முளைமூலம், வாதமும் உண்டாம். (கூ௬உ)

சுரும்புக்கறியின்குணம்.

சுரும்புமீன் பத்தியமாஞ் சொல்லுவார் உள்ளில்
அரும்பிணியை யெல்லாம் அகற்றும்-பெரும்போகந்
தீபனம்உண்டாக்கும்அது தின்னச் சுவைகொடுக்குஞ்
சோபனமின் னாரசே சொல்.

இ-ள். பிணிகள்எல்லாம்போம், தீபனம், போகமும் உண்டாம்.

உல்லமீன்கறியின்குணம்.

உல்லமெல்லாஞ் சன்னஎலும் போவியமே யிக்கறிதான்
நல்லகறி யாம்அதனை நாளும்உண்டால்-மெல்லக்
கழிச்சல் பிளவையொடு காணுக் கடியும்
விழிச்சுக்கொண் டாடுமென விள்.

இ-ள். கழிச்சல், காணுக்கடி, பிளவையும்போம். (கூ௬சு)

கற்றளைமீன் கறியின்குணம்.

கற்றளைமீன் றன்னைக் கருதிநிதம் உன்பாருக்
குற்ற வயிறும் உறுமிபெழுஞ்-சற்றொழியாப்
பேதி யெடுக்கும் பிறகுகரப் பான்ஒழியுஞ்
சாதி மடமயிலே சாற்று.

இ-ள். கரப்பான்போம், பேதி, வயிறுறுமலும் உண்டாம். ()

வெள்வவ்வால்கறியின்குணம்.

வெள்ளைவவ்வால் தன்னை விரும்பிநிதம் உண்பார்க்குத்
தள்ளுகின்ற பித்தந் தரிக்குமோ-தள்ளி
வருங்கரப்பான் ஏகும் மயிலே புவியில்
அரும்பத் தியமாம் அறி.

இ-ள். கரப்பான், பித்தமும்போம், பத்தியத்திற்கு ஆகும். ()

கருவவ்வால் கறியின்குணம்.

செங்கரப்பான் மேகஞ் சிறுசிரங்கும் உண்டாகும்
வெங்கொடிய நீரிழிவும் விர்த்தியாங்-கொங்கைதனிற்
பாலூறும் மெத்தப் பருசிற் கருவவ்வால்
மேலூறும் போகம் விதி.

இ-ள். சிறுசிரங்கு, செங்கரப்பான், நீரிழிவு, போகம், முலைப் பால், மேகமும் உண்டாம். (௩௩௭)

நெய்த்தோலிக் கறியின்குணம்.

மந்தம்உறுங் தீபனம்போம் வாயிலைப்பும் உண்டாகுந்
தொந்தமுறு வாதபித்தந் தோன்றும்பின்-நொந்தே
வயிறும் பொருமும் வலியநெய்த்தோ லிக்குத்
துயர மிகும்இதனைச் சொல்.

இ-ள். தீபனம்போம், மந்தம், வயிறுபொருமல், வாதபித்தம், வாயிலைப்பு, துயரமும் உண்டாம். (௩௩௮)

மயறிமீன்கறியின்குணம்.

மயறி கரப்பன்ஐயம் வாதபித் தத்தோ
டுயருகின்ற சோபம் ஒழிக்கும்-நியமாய்
உதரத்தன் உள்ளும் உறைவாதம் போக்கும்
பதியில் இதனைப் பகர்.

இ-ள். ஐயம், கரப்பான், சோபம், வயிற்றுள்வாதம், வாதபித் தமும்போம். (௩௩௯)

விலாங்குமீன்கறியின்குணம்.

விலாங்குமீன் றன்னை விரும்பிமிக உண்டால்
குலாங்கிஷமாய் ஐயங் குலாவும்-இலங்கருசி
போக மொடுசொறியும் புண்கரைப்ப னுங்கதிக்குங்
கோகனக மாதே குறி.

இ-ள். அருசி, ஐயம், கரப்பான், சொறிபுண், போகமும் உண் டாம். (௩௪௦)

கிழங்கான்மீன் கறியின்குணம்.

பத்தியத்திற் கேற்ற பருங்கிழங்கான் மீன்அருந்த
உற்ற பிணியனைத்தும் ஓடுங்காண்-மெத்தப்

பசிபெரும்புஞ் சேர்ந்த பழமலமுஞ் சாரும்
முசியா துடல்வளரு முன்.

இ-ள்- பழமலம், பிணிபலவும்போம், உடல்வளரல், பசியும் உண்டாம், பத்தியத்திற்கு ஆகும். (௬௪௧)

ஆற்றுமீன்-கிணற்றுமீன் கறிகளின்குணம்.

ஆற்றுமீன்தாதுவையுண் டாக்கும்ஐய வெப்பத்தை
ஊற்றும் அருசியைவிட் டோட்டுங்காண்-சாற்றுங்
கிணற்றுமீன் வாதகுன்மங் கிறபித்தங் குஷ்டம்
பிணைத்தபிலீ கங்கொடுக்கும் பார்.

இ-ள். ஆற்றுமீன், தாதுஉண்டாம், ஐயம், வெப்பம், அருசியும் போம், கிணற்றுமீன், வாதகுன்மம், பித்தம், குஷ்டம், பிலீகமும் உண்டாம். (௬௪௨)

மடு-குளம்-ஏரி-இவைகளிலுள்ளமீன்கறியின்குணம்

ஓதுமடு மீனால் உலவைபித் தங்கள்அறுங்
தாதுமே கங்கபமந் தங்கள்உண்டாங்-கோதில்குளம்
ஆருமீன் றன்னால் அழற்பிணிமந் தந்திரும்
ஏரிமீன் மேகம்அடும் எண்.

இ-ள். மடுமீன், உலவை, பித்தமும்போம், சுக்கிலம், மேகம் கபம், மந்தமும்உண்டாம், குளத்துமீன், அழற்பிணி, மந்தமும்போம் ஏரிமீன், மேகம்உண்டாம். (௬௪௩)

கடல்நண்டுகறியின்குணம்.

குன்ம வலிவாதங் கொடுங்கரப்பான் உண்டாக்குஞ்
சன்மச் சொறியைத் தருவிக்கும்-பின்னும்
உதிரக் கழிச்சல்தனை ஒங்குவிக்கு மாதே
அதிரக் கடல்நண் டது.

இ-ள். உதிரக்கழிச்சல், கரப்பான், குன்மவலி, சொறி, வாதமும் உண்டாம். (௬௪௪)

வயல்நண்டுக் கறியின்குணம்.

வயலில்உறு நண்டருந்த வாதக் குடைச்சல்
அயலிலும் இருக்கா தணங்கே தபிலவொட்டா

வன்சயித்தி யங்கரப்பன் மன்குடல்இரைச்சலும்போம்
முன்பயித்தி யங்கதிக்கு முன்.

இ-ள். கரப்பான், குடலிரைச்சல் சைத்தியம், வாதகுடச்சலும் போம், தூக்கம் இல்லாமை பித்தமும் உண்டாம். (௬௪௫)

நத்தைக்கறியின்குணம்.

நத்தைக் கறிதனக்கு நாடாது மூலமுதல்
ஒத்தமல ரோகமெல்லாம் ஓடுங்காண்-நித்தநித்தம்
தின்றாற் செரியாது தேடரிய தாதுவிர்த்தி
நன்றாகு மாதே நவில்.

இ-ள். மலரோகம், மூலமும்போம், தாதுவிர்த்தி, நித்தியந்தின்றால் செரியாக்குணமும் உண்டாம். (௬௪௬)

ஆமைக்கறியின்குணம்.

ஆமைக் கறியருசி ஐயம்பித் துண்மூலஞ்
சேமக் கனல்சூதி காமேகம்-நாமரத்தப்
பேதி கிராணிமலப் பேதியகற் றும்பசியுந்
தாதுவும்வ ருங்கொடுக்குந் தான்.

இ-ள். அருசி, அனல், இரத்தபேதி, உள்மூலம், கிராணி, சூதி காமேகம், பித்தம், மலபேதியும்போம், அழகு, பசி, தாதுவும் உண் டாம. (௬௪௭)

மீன்கறிவகை-முற்றிற்று.

கடைச்சரக்கு வகை.

சுக்கின்குணம்.

சூலைமந்தம் நெஞ்செரிப்பு தோஷம்ஏப் பம்அழலை
மூலம் இரைப்பிருமல் மூக்குநீர்-வாலகப
தோஷம்அதி சாரந் தொடர்வாத குன்மம்நீர்த்
தோஷம்ஆ மம்போக்குஞ் சுக்கு.

தே-இதுவுமது-எண்சீர்ச்சந்தவிருத்தம்.

வாதப் பிணிவயி றூதற் செவிவாய்
வலிதலை வலிகுலை வலியிரு விழிநீர்

சீதத் தொடுவரு பேதிப் பலரோ
　சிகமலி முகமக முகஇடி கபமார்
சீதச் சுரம்விரி பேதச் சுரநோய்
　தெறிபடும் எனமொழி குவர்புளி தனிலே
ஈதக் குதவுமி நீதக் குதவா
　தெனும்விதி யிலைநவ சுருகுண முனவே.

இ-ள். சூலை, மந்தம், நெஞ்செரிப்பு தோஷம், ஏப்பம், அழலை, மூலம், இரைப்பு, இருமல், மூக்குநீர்பாய்ச்சல், கபதோஷம், அதிசாரம், வாதகுன்மம், நீர்த்தோஷம், ஆமைக்கட்டி, வாதநோய் வயிறூதல், செவிநோய், வாய்நோய், தலைநோய், குலைநோய், இருவிழிநீர், சீதபேதி, பலரோகம், அவிமுகப்பாண்டு, வயிற்றுக்குள்குத்தல், சீதசுரம், பலபேதச் சுரநோயும்போம். (௬௪அ) (௬௪௧)

தே-மிளகின்குணம்-வெண்பா.

சீதசுரம் பாண்டு சிலேஷ்மங் கிராணிகுன்மங்
வாதம் அருசிபித்தம் மாமூலம்-ஓதசன்னி
பாசம்அபஸ் மாரம் அடன்மேகம் காசம்இவை
நாசங் கறிமிளகி னால்.

தே-இதுவுமது.

கோனுகின்ற பங்கவலி குப்பஉரோ கம்வாத
சோணிதக்க முத்திற்குள் தோன்றுநோய்-காணரிய
காதுநோய் மாதர்குன்மங் காமாலை மந்தம்என்றீர்
ஏதுநோய் காய்இருக்கில் ஈங்கு.

இ-ள். சீதசுரம், பாண்டு, சிலேஷ்மம், கிராணி, குன்மம்,வாதம் அருசி, பித்தம், மூலம், சந்நியாசம், அபஸ்மாரரோகம், மேகம், காசம், கோனுகிறவலி, குப்பரோகம், வாதசோணிதம், கழுத்துநோய் காதுநோய், மாதர்குன்மம், காமாலை, மந்தமும்போம். () (௬௫௧)

வெள்ளை மிளகின்குணம்.

வெள்ளை மிளகருந்த வீறு கிரகணிபோந்
தள்ளு கபவாதந் தான்ஏகும்-உள்ள
சுரம்போகுந் தீபனம்ஆந் தொல்மேகம்போம்இந்
திரம்பார் எவர்களுக்குஞ் செப்பு.

இ-ள், கிராணி, வாதகபம், சுரம், மேகமும்போம், தீபனம் உண்டாம். (கூருஉ)

வால்மிளகின் குணம்.

வாதபித்த மையம் வயிற்றுவலி தாகஞ்
சீதம் பலநோய் சிதையுங்காண்-போத
அதிதீ பனம்ஆம் அனங்கரசே காளுந்
துதிவால் மிளகருந்தச் சொல்.

இ-ள். வாதம், பித்தம், ஐயம், வயிற்றுவலி, தாகம், சீதம், பல நோயும்போம், தீபனம், உண்டாகும். (கூருங)

தே-திப்பலியின்குணம்-கட்டளைக்கலிப்பா.

இருமல் குன்மம் இரைப்பு கயப்பிணி
ஈளை பாண்டுசங் கியாசம் அரோசகம்
பொருமல் ஊதை சிரப்பிணி மூர்ச்சைநோய்
பூரிக்குஞ் சல தோஷம்பி லீகமுகம்
வருமலப் பெருக் கோடு மகோதரம்
வாதம் ஆதிமுத் தோஷஞ் சுரங்குளிர்
பெரும லைப்புரி மேகப் பிடகமும்
பெருந் திப்பலிப் பேரங் குரைக்கவே.

தே-இதுவுமது- வெ-பா.

ஆசனநோய் தொண்டைநோய் ஆவரண பித்தமுதல்
நாசிவிழி காதிவைநோய் நாட்புழுநோய்-வீசிவிடு
யங்கலாஞ்ச னஞ்சிதையும் அம்பாய் அழிவிந்தும்
பொங்கலாஞ்ச நங்கையர்கோட் போல்.

இ-ள். இருமல், குன்மம், இரைப்பு, கபநோய், ஈளை, பாண்டு, சங்கியாசம், அரோசகம், பொருமல், ஊதை, தலைநோய், மூர்ச்சைநோய், சலதோஷம், பிலீகம், மலப்பெருக்கு, மகோதரம், வாதம், முத்தோஷம், சுரம், குளிர், மேகப்பிடகம், ஆசனநோய், தொண்டைநோய், ஆவரணபித்தம், நாசிநோய், விழிநோய், காதுநோய், புழுநோய், விபங்கலாஞ்சனமும் போம், தாதுவிர்த்தியுண்டாம். (கூருச)(கூருரு)

யானைத்திப்பலியின் குணம்.

வாதம்அறுந் தீபனம்ஆம் மாறுங் கபங்கரப்பான்
ஓதுகுரற் கம்மல்இவை ஓடுங்காண்-பூதலத்தில்
சோனையைநேர் நாசியில்நீர் தோலாச்சு வாசமும்போம்
யானையினல் திப்பலிய தால்.

இ-ள். வாதம், கபம், கரப்பான், குரல்கம்மல், நாசிநீர், ஒழியாத சுவாசமும்போம், தீபனம் உண்டாம். (கூ௰சு)

திப்பலிமூலத்தின்குணம்.

தாகபித்தஞ் சோகந் தணியாச் சுரம் இருமல்
மேகங் குரற்கம்மல் மெய்க்கடுப்பும்-ஏகுங்காண்
திப்பலிமூ லங்கண்டத் திப்பலிய தாம்நறுக்குத்
திப்பலியென் றேயொருக்காற் செப்பு.

இ-ள். தாகபித்தம், சோகம், சுரம், இருமல், மேகம், குரல்கம்மல், தேகக்கடுப்பும்போம். (கூ௰எ)

தே-திரிகடுகின்குணம்-இது-சுக்கு-மிளகு-திப்பலி.

முக்கடுகால் ஆசியநோய் மூலங் கொடிறுபிணி
திக்கடுபாண் டோடு சிரத்துறுநோய்-அக்கடுக்குந்
தாவரநஞ் சென்றலகிற் சாற்றுமிந் நோய்முழுதுந்
தீவரநஞ் சுண்டிறக்கும் தேர்.

இதுவுமது.

திரிகடுகால் சீதபித்தஞ் சிக்குவைநோய் கிடக்
எரிகடுதேள் ஈளை யிருமல்-முடுகுசந்நி
யாசம் அருசி யபஸ்மாரம் அற்புதப்புண்
வீசுசர்க்க ராற்புதம்போம் விள்.

இ-ள். ஆசியநோய், மூலம், கன்னநோய், பாண்டு, தலைநோய், எதுவைப்பற்றிய தாவர விஷநோய்கள், சீதம், பித்தம், நாக்குநோய், புழு, தேள்விஷம், ஈளை, இருமல், சந்நிபாசம், அருசி, பஸ்மாரரோகம், அற்புதப்புண், ஒருவித விரணமும்போம். (கூ௰அ)

கடுக்காயின் சிறப்பு.

கடுக்காயுந் தாயுங் கருதில் ஒன்றென்றாலுங்
கடுக்காய்அத் தாய்க்கதிகங் காண்நீ-கடுக்காய்நோய்

ஓட்டி யுடல்தேற்றும் உற்றஅன்னை யோசுவைகள்
ஊட்டியுடல் தேற்றும் உவந்து.

இ-ள். கடுக்காயும் தாயும் நினைக்கும் இடத்து ஒன்றேயானாலும் கடுக்காய் அத்தாய்க்கு அதிகமென்று நீயறி அது எப்படியென்றால், கடுக்காய் நோயைப்போக்கி யுடலைவளர்க்கும், பொருந்திய தாயோ வெனில் மதுரம் பொருந்திய வுணவுகளை யூட்டி சந்தோஷமாக வுடலைவளர்ப்பாள் இதனால் நோயுண்டாம் என்பது கருத்து. (கூகூ0)

தே-கடுக்காயின் குணம்-இதுவே-வரிக்காய்.

தாடை கழுத்தக்கி தாலு குறியிவிடப்
பீடை சிலிபதமுற் பேதிடமும்-ஆடையொட்டத்
தூலமிடி புண்வாத சோணிகா மாலைஇரண்
டாலமிடி போம்வரிக்கா யால்.

இ-ள். கண்ணோய், நாக்குநோய், ஆண்குறிநோய், யானைக்கால், அதிநூலநோய், இடிபட்டபுண், வாதசோணிதநோய், தாவாசங்கம விஷங்களால் வருகின்றநோயும் போம். (கூகூக)

தே-கடுக்காய்ப்பிஞ்சின் குணம்.

வனதுர்க்கிச் சேய்க்கு மணித்தயிலம் பூசி
அனலிற் பொரித்தாங் கருந்தத்-தினமுமலச்
சிக்கலக்க டுப்பநின்ற சீதம்அறுங் காற்றுகைத்த
முக்கலக்க டுப்பிருக்கு மோ.

இ-ள். வனதுர்க்கி, கடுக்காய்மரம், அதன் பிஞ்சுக்கு ஆமணக்கு நெய்தடவி தீயில்வறுத்துத் தூள்செய்து அப்போதே உண்டால் மலச்சிக்கலும் எலும்பைப்போல வெளுத்துநின்ற சீதமும் நீங்கும், மூலவாயுவினால் பிறந்த முக்கலும் அவ் ஆசனக்கடுப்பும் இருக்குமோ? இராதென்பது கருத்து. (கூகூஉ)

கடுக்காயின் பேதம்.

ஆதி விசயன் அரோகிணியோ டேபிருதிவி
நீதில் அமிர்தை சிவந்திமலை-மீதார்
திரிவிரு தநிஅபயன் செப்பில்இவை ஏழாம்
அரிதகியின் பேதம் அறி.

இ-ள். விசயன், அரோகணி, பிருதிவி, அமிர்தம், சிவந்தி, திரிவிருதநி, அபயன், என்று சொல்லும்படியான எ-பெயர்களையுடைத்தாயிருக்கும் அரிதாகியென் கடுக்காயின்போதம். (கூசுங)

விசயனென்னும் கடுக்காயின் குணம்.

விசயன் எனுங்கடுக்காய் வீரியத்தைச் சொல்வோம்
நிசம்அதுதான் வாதத்தை நீக்கும்-மிசையுரைக்கப்
பேய்ச்சுரைக்காய் போல்இருக்கும் பேர்அவந்தி யாதேசம்
வாய்ச்சிருக்கும் அக்காயை வாழ்த்து.

இ-ள். வாதம்போம். (கூசுச)

அரோகிணிக் கடுக்காயின் குணம்.

ஓதும் அரோகிணிக்காய் ஒன்றுண்டா னூற்சந்நி
பாதமொடு சிதம் பறக்குங்காண்-மீதுகுறி
நான்குவரி யாய்த்தோற்றும் நங்காய் அதன்தேசம்
ஆங்குகன்னி யாகுமரி யாம்.

இ-ள். சந்நிபாதம், சீதமும்போம். (கூசுரு)

பிருதிவிக் கடுக்காயின் குணம்.

தோற்றும் பிருதிவிதான் தோலாப் பயித்தியத்தை
மாற்றும் வயதை வளர்க்கும்அதன்-மேற்றோலா
மெல்லியதாம் அக்காய் விளைதேசம் ஏதென்னில்
வல்லசவு ராட்டிரமாம் வாழ்த்து.

இ-ள். பயித்தியம்போம், வயதுவளர்ச்சி யுண்டாம், மெல்லிய தோலுள்ளதாக விருக்கும். (கூசுசா)

அமிர்தக் கடுக்காயின் குணம்.

அமிர்தம் எனுங்கடுக்காய் அப்புவியில் உள்ள
திமிர்தரு சிலேட்டுமத்தைத் தீர்க்கும்-விமிதச்
சதைப்பற்றுண் டாயிருக்குஞ் சாற்றில்அதன் றேசங்
கதிக்கொத்த காசியென்பர் காண்.

இ-ள். சிலேட்டுமமும், மற்றும் அநேக வியாதிகளும்போம். ()

சிவந்திக் கடுக்காயின் குணம்.

சிவந்தி எனுங்கடுக்காய் செய்குணத்தைக் கேள்வா
யுவந்தமூ லத்தையெலாம் ஓட்டும்-சிவந்தநிகப்

பொன்னிறம தாயிருக்கும் பூங்குழலே அந்தக்காய்
தான் னுவனந் தோறும்உண்டாஞ் சொல்.

இ-ள். வாய்வினால்வந்த எல்லாமூலங்களும்போம். (௬௬அ)

திரிவிருதநிக்கடுக்காயின்குணம்-இதுவே-மொத்தன்.

திரிவிருத நிக்கடுக்காய் தேகத்தில் நாளும்
வருவிரணம் போக்கும்அதன் வன்னம்-ஒருவிதமோ
பஞ்சவன்னம் மூவரம்பு பற்றி யிருக்கும்அது
விஞ்சுமலே தோறும்உண்டாம் விள்.

இ-ள். விரணம்போம், பஞ்சவர்ன கொடிபோன்ற மூன்றுவரம்பாகவிருக்கும். (௬௬௯)

அபயனென்னும்கடுக்காயின்குணம்.

அபயன் எனுங்கடுக்காய் அங்கநோய்எல்லாம்
அபயமிட் டோட அடிக்கும்-அபயங்
கதிக நிறக்கருப்ப தாகும்விளை பூமி
பொதிய மலையாம் புகல்.

இ-ள். அங்கத்திலுள்ள நோயெல்லாம் போம். (௬௭0)

கருங்கடுக்காயின்குணம்.

பழமலத்தைப் போக்கும் பகரில் உடலுக்
கலகுதரும் புத்தி அளிக்கும்-பழகி
மருங்கடுத்த வாதபித்த வன்கபத்தைத் தீர்க்குங்
கருங்கடுக்காய் என்றுளத்திற் காண்.

இ-ள். பழமலம், வாதபித்தம், கபமும்போம், அழகும், புத்தியும் உண்டாம். (௬௭௧)

செங்கடுக்காயின்குணம்.

சுத்தியொடு புத்தி சுகமும்புகழும்உண்டாம்
மெத்தஒளிர் பொன்னிறம்ஆம் மேனியெல்லாஞ்-சுத்தகப
வங்கடுத்த ஈளைபல வன்காச மும்மலமுஞ்
செங்கடுக்காய்க் கில்லையெனத் தேர்.

இ-ள். சுத்தி, புத்தி, சுகம், புகழ், தேகம் பொன்னிறமும் உண்டாம், சலாசயத்தின் துவாரத்திலுள்ள ஈளை, காசம், மலமும்போம். ()

வரிக்கடுக்காயின் குணம்.

மிடுக்காக்குந் தேகத்தை விந்துவையுண் டாக்குஞ்
சடக்கெனவே யுண்டிப்பபுட் சாடுந்-நடுக்கான
வாதபித்த ஐயகற்றும் வன்னியொடு கவ்விதருஞ்
சாதி வரிக்கடுக்காய் தான்.

இ-ள். அதிகபலம், விந்து, சிரணம், பசி, அழகும், உண்டாம், வாதம், பித்தம், ஐயமும்போம். (௬௭௩)

பால்கடுக்காயின்குணம்.

ஆமங் கெடுங்கர்ண் அழகும் பொலிவுமிகுஞ்
சேமம் பெறுபலமுஞ் சேருமே-தாமனெடும்
வேற்கடைக்கண் கும்பமுலை மெல்லியலே எப்போதும்
பாற்கடுக்காய் உண்பவரைப் பார்.

இ-ள். சிதபேதிபோம், அழகு, தாதுவிருத்தி, பலமும் உண்டாம். (௬௭௪)

தே-நெல்லிமுள்ளியின்குணம்.

ஆகவன லஞ்சசிஅ சுர்க்கென்பு ருக்கிகண்ணோய்
தாக முதிரபித்தந் தாதுநஷ்டம்-மேகனத்தின்
இல்லிமுள்ளி போல்அருகல் எங்கா மியவியங்கம்
நெல்லிமுள்ளி யார்போ நினை

இதுவுமது.

நல்லநெல்லி முள்ளியறு நாக்குக் குருசிதரும்
அல்லல்விரி பித்தம் அகற்றும்அதை-மெல்லத்
தலைமுழுகக் கண்குளிருந் தாவுபித்த வாந்தி
இலையிழிமே கங்களும்போம் எண்.

இ-ள். அனல், ஆண்குறியிற் சிறுகொப்பிளம், இரத்தபித்தம், என்புருக்கி, கண்ணோய், சிதளம், தாகம், தாதுநஷ்டம், நீர்துவாரத்தில் முள்ளருகல், பித்தம், பெரும்பாடு, மேகநீரிழிவு, வாந்தியும் போம், தலைமுழுகக் கண்குளிர்ச்சியுண்டாம். (௬௭௫) (௬௭௬)

தே-தான்றிக்காயின்குணம்-இதனைத்தாணிக்காய்என்பர்.

சிலந்திவிடங் காமியப்புண் சிழான மேகஞ்
கலந்திலரும வாதபித்தங் காலோ-டலர்ந்துடலில

...ன்றிக்காய் வெப்ப முதிரபித் துங்கரக்குர்
தான்றிக்காய் கையிலெடுத் தால்.

இதுவுமது.

ஆணிப்பொன் மேனிக் கழகும் ஒளியுமிகுங்
கோணிக்கொள் வாதபித்தக் கொள்கைபோங்-தாணிக்காய்
கொண்டவர்க்கு மேகங் அறுங் கூறு அனல்தணியுங்
கண்டவர்க்கு வாதம்போங் காண்.

இ-ள். அனல், ஆண்குறிப்புண், இரத்தபித்தம், சிலந்தி விஷம், சீழ்மேகம், சுவாசம். பித்தம், மேகம், வாதம், வாய்வு, வெப்பும், போம், தேகவழகு, ஒளிவும்உண்டாம். (௬௭௮)

தே-திரிபலத்தின்குணம்-கடு-நெல்லி-தான்றிக்காய்.

வித்திரதி நாசிநோய் வெண்குஷ்டம் ஆசனப்புண்
குத்திருமல் பாண்டுகுஷ்டங் குன்மம் இரைப்-பெற்றுமத
மூர்ச்சைபிலி கம்பிரமி யோடுருபுண் சர்வவிட
மூர்ச்சையறு முப்பலத்தான் முன்.

இ-ள். நாம்பிலுண்டாகுங், கட்டி, நாசிநோய், வெண்குஷ்டம், ஆசனப்புண், குத்திருமல் பாண்டு, குஷ்டம், குன்மம், இரைப்பு மத மூர்ச்சைபிலீகம், பிரமியம், வயிற்றுவலி, புண், சர்வவிஷம், மூர்ச்சையும்போம். (௬௭௯)

தே-கண்டபரங்கியின்குணம்-இது-சிறிதேக்கு-வி-ம்.

கண்டுபா ரங்கியெனுஞ் சிறுதேக்குண்டேல்
காலெங்கே பித்தம்எங்கே கபந்தான்எங்கே
தொண்டுதொட்டுத் தொடர்சுவாச காசம் எங்கே
சுரம்எங்கே வெறியெங்கே தொனிநோ யெங்கே
மிண்டுபுரி பீசநீர்க் கோவை யெங்கே
வெளிநீருண் ணீரெங்கே வுரக்கா லெங்கே
அண்டபடாச் சீதசுரங் கடுப்பு மெங்கே
யழலையக நோயெங்கே யறைகுவீரே.

இ-ள். வாயு, பித்தம், கபம், சுரம், வெறி, தொண்டைநோய் பீநசம், நீர்க்கோவை, வெளிநீர், உள்நீர், புச்சாவர்த்தவாயு, சீதசுரம் கடுப்பு, அழலை, அகநோயும்போம். (௬௮௦)

அரத்தையின்பொதுக்குணம்-வெண்பா.

தொண்டையிற்கட் டுங்கபத்தைத் தூரதூரத்திவிடும்
பண்டைச்சி தத்தைப் பறக்கடிக்கும்-கெண்டைவிழி
மின்னே கரப்பனைவே ருக்கும் பசிகொடுக்குஞ்
சொன்னேம் அரத்தைச் சுகம்.

இதுவுமது.

மார்பை அடர்பிணிசு வாசகா சம்மூலஞ்
சோபைதட்டச் சூர்வாத சோணிதநோய்-தீபச்
சுரத்தை யடுபடர்பல் தூருநுகண் நேரின்
அரத்தை யெடுதுகளை தாம்.

இ-ள். கபம், சிதம், கரப்பான், மார்புநோய், சுவாசம், மூலம், சோகை, பல்நோய், வாதசுரோணித நோய், பித்தம், சுரமும் போம், பசியுண்டாம். (௬௮௧) ௬௮௨)

பேர்அரத்தையின்குணம்.

அரத்தை கபத்தை பறக்குங்கால் ஒட்டுஞ்
சிரத்தில்உறும் ஈளையைச்சி தைக்கும்-இரைத்துவரும்
பித்ததோ ஷத்தைப் பிறவசிப்பை மாற்றிவிடும்
உற்றசர்வ வல்விஷம்போக் கும்.

இதுவுமது.

சந்தி யுபட்சிரணஞ் சார்ந்தசி தச்சுரம்போம்
வன்ன மிகுந்து வளருங்காண்-கன்னியர்கள்
மாதவிடாய்க் காகும்வலி வாதக் கடுப்பகலும்
பேதமில்லை பேர்அரத்தை பேறு.

இ-ள். கபம், வாயு, ஈளை, பித்ததோஷம், பிறவசிப்பு, சர்வவிஷம், சந்தி, சிதச்சுரம், வலி, வாதக்கடுப்பும்போம், தேக ஒளியுண்டாம், ஸ்திரிமாதவிடாய்க்காகும். (௬௮௩) (௬௮௪)

தே-சிற்றரத்தையின்குணம்.

வாந்திபித் தங்கரப்பான் வாதஞ்சி ரோரோகஞ்
சேர்ந்தகப முத்தோஷஞ் சீதமொடு-நேர்ந்தசுரம்
மற்றரத்தைச் சாட்டி வரும்இருமலுந்தீருஞ்
சிற்றரத்தை வன்மருந்தால் தேர்.

இ-ள். வாந்தி, பித்தம், கரப்பான், வாதம், சிரரோகம், கபம், முத்தோஷம், சீதம், சுரம், இருமலும்போம். (கூஅரு)

கோஷ்டத்தின்குணம்-இதுவே-விரனுரி.

நாட்டில்உறு வெட்டை நடுக்கம் எனுநோய்கள்
கோஷ்டம்எனச் சொன்னூர் குலையுங்காண்-கூட்டிற்
சுரதோஷந் தொண்டைநோய் தோலாத பித்தம்
பரதேசம் போமே பறந்து.

தே-இதுவுமது-வி-ம்.

திட்டிகவுள் அகடுகளஞ் சென்னி நாவாய்
செறிதணிவெப் பதைப்புதா வர்த்தம் ஊதை
முட்டியெழு மூலவிரணஞ் சுவாச காசம்.
மூடிகத்தோ டரவுமர விடங்கள் மேகக்
கட்டிஅஜ கல்விட பாகம் பூத
கணம்பால கிரகமொடு தாது நட்டஞ்
சொட்டிவரு பிரமிபித்தம் இவையொ ருங்கே
தொலையும்விர னுரிக்குச் சுகப்போருமே.

இ-ள். வெட்டை, நடுக்கம், சுரதோஷம், தொண்டைநோய், பித்தம், கண், கபோலம், வயிறு, கழுத்து, தலை, நா, வாய், இவ்விடத்து நோய்கள், சுரம் அதைப்பு, உதாவர்த்தரோகம், வாயு, மூலமுளை, எலி, பாம்பு, விருச்சம், இவைகளின்விஷம், அஜகல்விகாரோகம், சுவாசகாசம், மேகக்கட்டி, பூதகணம், பாலகிரகம், தாதுநஷ்டம், பிரமி பித்தமும்போம், சுகம்உண்டாம். (கூஅக) (கூஅள)

தே-அதிமதுரத்தின்குணம்-இதுவே-மதுகம்-வி-ம்.

கத்தியரி முப்பிணியால் வருபுண் தாகங்
கண்ணோய்உன் மாதம்விக்கல் வலிவெண்குஷ்டம்
பித்தம்எனும் புருக்கிரிச் சரம்ஆ வர்த்தம்
பித்தமத மூர்ச்சைவிட பாகம் வெப்பங்
தத்திவரு வாதசோ ணிதங்கா மாலை
சருவவிடங் காமியநோய் தாதுநட்டங்
குத்திருமல் ஆசியங்கம் இதழ்நோய் இந்து
குயப் புறும்போம் மதுகமெனக் கூறுங்காலே.

இ-ள். வெட்டுகாயங்களாலும், முப்பிணியாலும்வந்த புண், தாகம், கண்ணோய், உன்மாதம், விக்கல், வலி, வெண்குஷ்டம், பித்தம், எலும்புருக்கி, கிரிச்சரம், ஆவர்த்தநோய், பித்தமதமூர்ச்சை, விடபாகம், வெப்பம் வாதசோணிதரோகம், காமாலை, சருவவிஷம், காமியநோய், தாதுநஷ்டம், குத்திருமல், வாய், சிரசு, உதடுநோய், சோமநோய், முலைக்கட்டியும்போம். (கூஅஅ)

அதிவிடயத்தின்குணம்-வெண்பா.

அதிவிடயஞ் சர்க்க ராற்புதநோய் வெப்பு
கொதிமருவு பேதியொடு கோழை-எதிர்வாந்தி
என்றுரைக்கும் நோய்க் கூட்டம் இல்லா தகற்றிவிடுங்
குன்றை நிகர்முலையாய் கூறு.

இ-ள். கிராணி, வெப்பு, பேதி, கோழை, வாந்தியும்போம். ()

அக்கரகாரத்தின்குணம்.

அக்கர காரம் அதன்பேர் உரைத்தக்கால்
உக்கிரகால் அத்தோஷம் ஓடுங்காண்-முக்கியமாய்க்
கொண்டால் சலம்ஊறும் கொம்பனையே தாகசுரங்
கண்டால் பயந்தோடுங் காண்.

இ-ள். உக்கிரகால் அத்தோஷம், தாகசுரமும்போம், வாயிலடக்க சலம்உண்டாம். (கூகூ௦)

கடுரோகிணியின்குணம்.

மாந்தஞ் சுரம்ஐயம் வாயுகரப் பான்ஆமஞ்
சேர்ந்தமலக் கட்டு திரிதோஷம்-பேர்ந்தபொட்டுப்
புண்வயிறு நோய்இவைபோம் பொற்கொடியே பேதியுண்டாந்
திண்கடுகு ரோகணிக்குத் தேர்.

இ-ள். மாந்தம், சுரம், ஐயம். வாயு, கரப்பான், ஆமம், மலக்கட்டு, திரிதோஷம், பொட்டுப்புண், வயிற்றுநோயும்போம், பேதியுண்டாம். (கூகூக)

பிதரோகிணியின்குணம்.

படர்சீலை காசம படலமொடு பில்லந்
தொடர்இமைக விற்றோன் றுந் தோஷம்-அடரும்
அருவியெனச் சொல்லுகின்ற அக்கினோ யேகும்
ஒருபித ரோகிணியை யுன்.

இ-ள். படர்நீலகாசம், படலம், பில்லம், இமைதோஷம், சலம் வடிகிற அக்கிநோயும்போம். (௬௬௨)

செவ்வளளிக்கொடியின்குணம்.

செவ்வள்ளி யின்கொடிக்குச் சேடித்த குஷ்டமொடு
கவ்வு குறைநோய் கரப்பானும்-இவ்வுலகின்
மானே குடல்வாதம் வல்ல படுவனுடல்
ஆனபரு மூலமும்போம் ஆய்.

இ-ள். மிகுந்தகுஷ்டம், குறைநோய், கரப்பான், குடல்வாதம், படுவன் மூலமும்போம். (௬௬௩)

செவ்வியத்தின்குணம்.

சூலை யருசிசந்நி தொல்லிருமல் ஈளைபித்தம்
மேலைக் குறற்கம்மல் வெங்களநோய்-மூலசுரம்
கவ்வியங்கத் தேறு கனதா விரவிஷமுஞ்
செவ்வியங் கொள்ளவிடுந் தேர்.

இ-ள். சூலை அருசி, சந்நி, இருமல், ஈளை, பித்தம், குரற்கம்மல், கண்ணோய், மூலசுரம், தாவரவிஷமும்போம். (௬௬௪)

சடாமாஞ்சிலின்குணம்-இதுவே-பருங்கோரை.

குட்டஞ் சிலந்திவிஷங் கோர புராணசுரம்
உட்டினங்காஸ் பேதிகண்ணோய் ஒட்டிருமல்-சொட்டிரத்த
பித்தம் இரைப்பேகும் பெருங்கோரை யென்றுரைக்குஞ்
சுத்தசடா மாஞ்சில்தனைச் செ.ல்.

இ-ள். குஷ்டம், சிலந்தி, விஷம், சுரம், உஷ்டம், வாயு, பேதி, கண்ணோய், இருமல், இரத்தபித்தம், இரைப்பும்போம். (௬௬௫)

விலாமிச்சுவேரின்குணம்.

மேகம் விழியெரிச்சல் வீறிரத்த பித்தமொடு
தாகமத மூர்ச்சைபித்தந் தன்மயக்கஞ்-சோகஞ்
சிரநோய் இவையேகுஞ் செய்யவிலா மிச்சுக்
கெரிசுரமும் இல்லை யிசை.

இ-ள். மேகம், விழியெரிச்சல், இரத்தபித்தம், தாகம், மதமூர்ச்சாரோகம், பித்தம், மயக்கம், சோகம், சிரநோய், பித்தசுரமும் போம். (௬௬௬)

தே-பறங்கிப்பட்டையின்குணம்.

தாகம் பலவாதந் தாதுநஷ்டம் புண்பிளவை
மேகங் கடிகிரந்தி விழ்முலந்-தேகமுடங்
குட்டை பகந்தரமேற் கொள்வனம் போம்பறங்கிப்
பட்டையினை யுச்சரித்துப் பார்.

இ-ள். தாகம், பலவாதம், தாதுநஷ்டம், புண், பிளவை, மேகம், கடி, கிரந்தி, மூலம், முடம், குஷ்டம், ஐயம், பகந்தரம் வாந்தியும் போம். (௬௬௭)

பிசின்பட்டையின்குணம்-இதுவே-மயிலாலக்கடி.

தசையிலுஞ் சோரி தனிலும் பரந்தே
வசிபோற்குத் திக்குடையும் வாய்வை-நிசமாகக்
கொல்லும் உடம்பின் கொதிப்பை ஒருநொடியில்
வெல்லும் பிசின்பட்டை விள்.

இ-ள். வாய்வு, உடல்கொதிப்பும்போம். (௬௬௮)

லவங்கப்பட்டையின்குணம்.

தாதுநஷ்டம் பேதி சருவவிஷம் ஆசியநோய்
பூதகிர கஞ்சிலந்திப் பூச்சிவிஷஞ்-சாதிவிஷம்
ஓட்டும்இரைப் போடிருமல் ஆதியநோய்க் கூட்டம்அற
ஒட்டும் இலவங்கத் தரி.

இ-ள். தாதுநஷ்டம், பேதி, சருவவிஷம், ஆசியநோய், பூதம், கிரகம், சிலந்திப்பூச்சிவிஷம், சர்ப்பவிஷம், இரைப்பு, இருமலும் போம். (௬௬௯)

சன்னலவங்கப்பட்டையின்குணம்.

சன்னலவங் கப்பட்டை தான்குளிர்ச்சி யுண்டாக்கும்
இன்னும்இரத் தக்கடுப்பை யீர்க்குங்காண்-முன்னம்உறும்
உந்திக் கடுப்பகற்றும் உள்மூலப் புண்போக்கும்
கந்தமிகு பூங்குழலே காண்.

இ-ள். இரத்தக்கடுப்பு, வயிற்றுக்கடுப்பு, உள்மூலம், புண்ணும் போம், குளிர்ச்சியுண்டாம். (௬௭0)

லவங்கபத்திரியின்குணம்.

வேகசுரம் சீதசுரம் வெட்டைசுவா சங்காசம்
தாகபித்தம் வாந்திசர் வாசியநோய்-மேகத்தின்
கட்டிபொடு தாதுநஷ்டங் கைப்பருசி போக்கிவிடும்
இட்டஇல வங்கத் திலை.

இ-ள். மேகசுரம், சீதசுரம், வெட்டை, சுவாசம், காசம், பித்த தாகம், வாந்தி, விவுர்தாசியநோய், சம்விருதாசியநோய், மேகக்கட்டு, தாதுநஷ்டம், அருசியும்போம். (௧00௧)

லவங்கப்பூவின்குணம்.

புத்த மயக்கம்அறும் பேதியொடு வாந்தியும்போஞ்
சுத்தவிரத் தக்கடுப்புந் தோன்றுமோ-மெத்த
இலவங்கங் கொண்டவருக் கேற்றசுகம் ஆகும்
மலம்அங்கே கட்டுமென வாழ்த்து.

தே-இதுவுமது.

சுக்கிலநட் டங்கர்ன்னச் சூர்வியங்க லாஞ்சனந்தாட்
சிக்கல்விடாச் சர்வா சியப்பிணியும்-அக்கிக்குள்
தங்கப்பூ வோடு தரிபடருந் தோன்றிள்இல
வங்கப்பூ வோடுரைத்து வா.

இ-ள். பித்தம், மயக்கம், பேதி, வாந்தி, இரத்தகடுப்பு, தாதுநஷ்டம், கண்ணநோய், வாய்ப்பூட்டு, சர்வாசியநோய், கண்ணுக்குள் படருகின்ற பூவும்போம், சுகமும், மலக்கட்டும், உண்டாம். () ()

தே-சாதிக்காயின்குணம்-இதுவே-குலக்காய்.

தாதுநஷ்டம் பேதி சருவாசி யஞ்சிரநோய்
ஓதுசுவா சங்காசம் உட்கிரணி-வேதோ
டிலக்காய் வரும்பிணிபோம் ஏற்றமயல் பித்தங்
குலக்கா யருந்துவர்க்குக் கூறு.

இ-ள். தாதுநஷ்டம், பேதி, சருவாசியநோய், சிரநோய், சுவாசம், காசம், உள்கிராணி, வெப்பதருடன் இலக்காய்வருகிற நோயும் போம், மயக்கம், பித்தமும் உண்டாம். (௧00௪)

சாதிபத்திரியின்குணம்.

சாதிதரும் பத்திரிக்குத் தாபச்சுரந்தணியும்
ஓதுசின்ற பித்தம் உயருங்காண்-தாதுவிர்த்தி

யுண்டாங் கிரகணிபோ டோதக் கழிச்சல்அறும்
பண்டாங் குரையே பகர்.

இ-ள். தாபச்சுரம்,கிராணி, சலக்கழிச்சலும் போம், பித்தமும் தாதுவிருத்தியும் உண்டாம். (க௦௦ரு)

சாளிசபத்திரியின்குணம்.

நாசிக ளப்பிணிகள் நாட்பட்ட காசஞ்சு
வாசம் அருசி வமனக்கால்-வீசிவரு
மேகமந்தம் அஸ்திசுரம் விட்டேகுந் தாளிச்சத்தால்
ஆகுஞ் சுகப்பிரச வம்.

இ-ள். நாசிநோய்கள், கழுத்துநோய்கள், காசம், சுவாசம், அருசி, வாந்தி, வாயு, மேகம், மந்தம், அஸ்திசுரமும்போம், சுகப்பிரசவம் உண்டாம். (க௦௦சு)

முழப்பத்திரியின்குணம்.

பத்திரிகள் மூன்றிற் பயிலுங் குணங்கேளாய்
நித்தமலக்கட்டு நீங்கிவிடுஞ்-சுத்தச்சுரம்
தாகமொடு வாந்திவிக்கல் தங்காளக் காலையிலுங்
கோகிலமே யிக்குணத்தைக் கூறு.

இ-ள். மலக்கட்டு, சுரம், தாகம், வாந்தி, விக்கலும்போம். ()

கர்க்கடகசிங்கியின்குணம்-இதுவே-கடுக்காய்ப்பூ.

கர்க்கடக சிங்கி கபங்காசம்ஈளையொடு
முக்கல் கிராணி முதிர்இரைச்சல்-பொக்கெனவே
சாடுகின்ற பேதியையுஞ்சாடும் அரிவையரைக்
கூடு திறங்கொடுக்குங் கூறு.

இதுவுமது.

மூலவிரத் தங்கடுப்பு மோதிரத்த பித்தங்கால்
மேல்அடரும் மேக விரணவெப்பேர-டாலத்
துடுக்காங் கொதிப்பும்அறுந் தோகைமட மாதே
கடுக்காயின் பூவைக் கருது.

இ-ள். கபம், காசம், ஈளை, முக்கல், கிராணி, இரைச்சல், பேதி, மூலஇரத்தக்கடுப்பு, இரத்தபித்தம், காலிலுண்டாகிற மேகவிரணம், வெப்பு, கொதிப்பும்போம், தாதுபுஷ்டியுண்டாம். () (க௦௦௭)

நாகப்பூவின்குணம்.

மதமூர்ச்சை பிரமியஞ்ச வாசகா சம்பு கைச்சல்
விதிர்குறற் கம்மல் கீட விஷஞ்சரு வாசி யந்தேள்
அதிசாரம் கமலப் புண்ணே டரத்தமூ லம்மே கஞ்சூ
டகிநீர்விர் துவிண்ட் டம்போம் அதிநாக மலரி னுக்கே.

இ-ள். மதமூர்ச்சை, பிரமியம், சுவாசகாசம், புகைச்சல், குரல் கம்மல், புழு, விஷம், சருவாசியநோய், தேள்விஷம், அதிசாரம், புண்டரீகக்குஷ்டு, இரத்தமூலம், மேகம், சூடு, நீரிழிவு, விந்துநஷ்டமும்போம். (௧0௧0)

சிறுநாகப்பூவின்குணம்-வெண்பா.

சிறுநாகப் பூவினது செய்கைதனைச் சொல்வோங்
குறியாடும் மேகத்தைக் கொல்லும்-நெறியைவிட்டுத்
தீதாச்செல் வாயுவையுந் தீர்க்கும் இரு மற்போக்குங்
கோதா யிதையறிந்து கொள்.

இ-ள். மேகம், வாய்வு, இருமலும்போம். (௧0௧௧)

கண்டில்வெண்ணெய்யின் குணம்.

கண்டில்வெண் ணெய்மாந்த காந்திப்பிர தாபமுமாந்
தொண்டையினுள் நீர்க்கட்டு தூரிருமல்-மீண்டிவரு
நீர்க்கடுப்பு மூலத்துள் நீர்க்குத்த லும்போக்கும்
பார்க்குள் அறிபப் பகர்.

இ-ள். தொண்டை நீர்க்கட்டு, இருமல், நீர்க்கடுப்பு, மூலத்துள் நீர்குத்தலும்போம், தேககாந்தியுண்டாம். (௧0௧௨)

கூகைநீற்றின்குணம்.

கூகைநீற் றுல்மாதர் குய்யநோய் வித்திரதி
ஆகமெனும் மார்புநோய் அண்டுமோ-போகம்அதில்
வீரியமும் உண்டாகும் வீழ்கிருமி நோயோடும்
தூரிருமல் ஈளையும்போஞ் சொல்.

இ-ள். மாதர்குறிநோய், நரம்புகட்டி மார்புநோய் கிருமிநோய் இருமல், ஈளையும்போம், தாதுபுஷ்டியுண்டாம். (௧0௧௩)

நாகணத்தின்குணம்-இதுவே-நகம்.

தலைவலிநீர் ஏற்றந் தலையிடிப்பு குத்தல்
தொலையா மலட்டுநோய் சோபை-நிலைவிழிநோய்
பாகனைச்சொன் மின்னே பரும்உதர் ரோகமும்போம்
நாகணத்தி னாலே நவில்.

இ-ள். தலைநோய், நீர்ஏற்றம், தலையிடிப்பு, தலைக்குத்தல், சோபை, விழிநோய், உதரரோகமும்போம். (௧0௧௬)

மாசிக்காயின்குணம்.

அக்கரங்கள் போக்கிவிடும் ஆருத வெப்பாற்றும்
மெய்க்குறுதி மாசிக்காய் மென்மேலுர்-தக்கதொரு
பாலர்கண நோய்போக்கும் பன்மேக முந்தொலைக்கும்
வேலனைய கண்ணாய் விளம்பு.

இ-ள். அச்சரங்கள், வெப்பு, பாலர்கணநோய், பலமேகமும் போம், தேகபலம்உண்டாம். (௧0௧௫)

வலம்புரிக்காயின்குணம்.

பூதபை சாசம் பொறுக்கொணு நேத்திரநோய்
சீத மிகுசெவிநோய் கேவல்விக்கல்-ஓதுகுளிர்
தோடமொடு மேகங்கூன் சொன்னவையெ லாம்கடுங்கி
ஓட வலம்புரியை யுண்.

இ-ள். பூதபிசாசு, நேத்திரநோய், செவிநோய், கேவல், விக்கல் குளிர், தோஷம், மேகங்கூனும்போம். (௧0௧௬)

தே-வாய்விளங்கத்தின்குணம்.

பாண்டுகுஷ்டங் குன்மம் பருந்தால நோய்வாதந்
தீண்டு திரிவிடஞ்சி ரந்துண்டம்-பூண்டமடி
நோய்விளங்கக் காட்டாத நண்கிருமி யாசனப்புண்
வாய்விளங்கங் காட்டவிடு மால்.

இ-ள். பாண்டு, குஷ்டம், குன்மம், பருத்ததேகநோய், வாதம், பாம்புவிஷம், தேள்விஷம், நாவிஷம், வயிற்றுநோய், புழுக்கள், ஆசனப்புண்ணும்போம். (௱0௧௧)

தக்கோலத்தின் குணம்.

பாண்டுசுரம் போகும் பசிறிற் பலஞ்சேருந்
தீண்டும்உப யாசியமுந் தீருங்காண்-தீண்டதொரு
தாதுவிர்த்தி யாகுந் தளர்ந்தமல மூங்கட்டுங்
கோதகலுந் தக்கோலங் கொள்.

இ-ள். பாண்டு, சுரம், உபயாசியரோயும்போம், பலம், தாது விர்த்தி, மலக்கட்டும் உண்டாம். (௧0௧௮)

விழல்அரிசியின்குணம்.

விழலரிசி யென்றால் மிகுபித்தம்வரும்
அழல்குடலின் வாதம் அகலுந்-தழவு
திரிதோஷம் மேகம்இவை சேராவாம்நீயுங்
குறியா யிதையறிந்து கொள்.

இ-ள். பித்தம், அழல், குடல்வாதம், திரிதோஷம், மேகமும் போம். (௧0௧௯)

கார்போகஅரிசியின்குணம்.

கார்போக மாம்அரிசி கண்டால் கரப்பான்புண்
பீர்சழிவ ரஞ்சிவைபோம் பித்தமுண்டாம்-பார்மீதில்
வாதகபம்நமைச்சல் வன்சொறிசி ரங்குமறுஞ்
சீத மலர்க்குழலாய் செப்பு.

இ-ள். கரப்பான், புண், சருவரஞ்சு, வாதகபம், நமைச்சல்,சொறி, சிரங்கும்போம், பித்தம் உண்டாம். (௧0௨0)

வாலுழுவை அரிசியின்குணம்.

வயிற்றுக் கடுப்புவலி மாறுக் கிராணி
பயித்தியங் காசமல பந்தஞ்-சயிக்கவொணுச்
சூதிகா வாதமும்போந் தொல்வா லுழிவைவிதைக்
காதிலவ சித்தர்மொழி யாம்.

இ-ள். வயிற்றுக்கடுப்பு, வலி, கிராணி, பயித்தியம், காசம்,மலக்கட்டு, சூதிகாவாதமும்போம். (௧0௨௧)

வெட்பாலைஅரிசியின்குணம்.

வெட்பாலை தன்அரிசி விறுபித்த வாதமொடு
சொட்பார் கரப்பான் குடல்வாத-உப்பிசத்தைக்

கஞ்ம லேகாளுங் கண்டிக்குங் காசினியிற்
பூணர் மூலியாய் புகல்.

இ-ள். பித்தம், வாதம், கரப்பான், குடல்வாதம், உப்பிசமும் போம். (க0உஉ)

காசினிவிதை-துளசிவிதை-இவைகளின்குணம்.

காசினிவி தைக்குக் கதித்த அருசிசர்த்தி
காசினியை விட்டேகுங் கானனமே-பேசும்
அளவில் கபம்போம் அருசிநடுக்குந்
துளவின் நறுவிதைக்குச் சொல்.

இ-ள். காசினிவிதைக்கு, அருசி, வாந்தியும்போம், துளசிவிதைக்கு, கபம், அருசியும்போம். (க0உங)

புத்திரசீவிவிதையின்குணம்.

ஆகியதோர் மூலம் அனலம்வெட்டை மேகமும்போம்
போகம் விளையும் பொருமல்அறுந்-தாகம்போம்
புத்திர சீவியெனப் போற்றும் விதையதனால்
இத்தரையுண் மாதே யியம்பு.

இ-ள். மூலம், அனல், வெட்டை, மேகம், பொருமல், தாகமும் போம், போகம் உண்டாம், இது புத்திரசோகி என மருவியது. ()

சமுத்திரசோஷிவிதையின்குணம்.

ஐயம் அகற்றும் அரோசகத்தை மாற்றிவிடும்
பையுதிர வாயுவையும் பற்றுக்கும்-மெய்யை
அமிழ்த்துகின்ற நீரை அனிலத்தைப் போக்கும்
சமுத்திரசுற் சோஷிவிதை தான்.

இ-ள். ஐயம், அரோசகம், உதிரவாய்வு, நீரிழிவு, வாய்வும்போம், இதனைச் சமுத்திரசோகி என்பர். (க0உரு)

கசகசாவின்குணம்.

சிருபி நமைச்சல் கிராணி அதிசாரஞ்
சிரநீர் அநித்திரைபோஞ், செப்பில்-உருஅழகுங்
காந்தியும்உண் டாகுங் கசகசா வின்குணத்தைத்
தேர்ந்தவர்க்கு விந்துவுமாந் தேர்.

இ-ள். புழு, நமைச்சல், கிராணி, அதிசாரம். சிரநீரும்போம், நித்திரை, அழகு, காந்தி, விந்தும் உண்டாம். (௧௦உ௬)

தே-ஏலத்தின் குணம்-கட்டளைக்கலிப்பா.

தொண்டை வாய்கவுள் தாலு குதங்களில்
தோன்றும் நோய் அதி சாரம்பன் மேகத்தால்
உண்டை போல்எழுங் கட்டி கிரிச்சரம்
உழலை வாந்திசி லந்திவி ஷஞ்சிரம்
பண்டை வெக்கைவி தாகநோய் காசமும்
பாழுஞ் சோபப் பிணிவிந்து நட்டம்உள்
அண்டை யீளைவன் பித்தம் இவைக்கெல்லாம்
ஆல மாங்கமழ் ஏலமருந்ததே.

இ-ள். தொண்டைநோய், வாய்நோய், கன்னநோய், காலுநோய் குதநோய், அதிசாரம், பலமேகத்தா லுண்டாகுங்கட்டி, கிரிச்சரம், உழலை, வாந்தி, சிலந்தி, விஷம், சுரம், வெக்கை, விதாகநோய், காசம் சோமநோய், விந்துநஷ்டம், அண்டவாதம், ஈளை, பித்தமும்போம்.

சிறுஏலத்தின்குணம்-வெண்பா.

மலவாத மோடு வயிற்றுக் கொதிப்பு
சலம்ஊறல் வாய்இனிப்பு தாகஞ்-சலபேதி
வேர்க்குந் தலைநோய் மிகுரூட்சை ஐயமிவை
போக்குஞ்சிற் றேலம் புகல்.

இ-ள். மலாவர்த்தவாதம், வயிற்றுக்கொதிப்பு, சலம்ஊறல்வாய் இனிப்பு, தாகம், சலபேதி, தலைநோய், ரூட்சை, ஐயமும்போம். ()

மலைஏலத்தின்குணம்.

நாவறட்சி தாகசுரம் நாடா தகற்றிவிடுந்
தீவறட்சி நீர்க்கடுப்பைத் தீர்க்குங்காண்-மூவறட்சி
கூடும் அரோசகத்தைக் கூடாமல் ஓட்டிவிடும்
நாடுமலை யேலம் நவில்.

இ-ள். நாவறட்சி, தாகசுரம், பித்தவறட்சி நீர்க்கடுப்பு, திரிதோஷ உட்டினம், அரோசகமும்போம். (௧௦உ௯)

காட்டேலத்தின்குணம்.

தீராத வாந்தி சிலேஷ்மம் அதிசாரம்
போரா அருசிபித்தம் பேருங்காண்-சோராமல்
காட்டேல வார்குழலே காரம் பரிமளஞ்சேர்
காட்டேலம் என்றுரைக்குங் கால்.

இ-ள். வாந்தி, சிலேஷ்மம், அதிசாரம், அருசி,பித்தமும்போம், காரமும் பரிமளமும் உண்டாயிருக்கும். (கoசுo)

மத-சிரகத்தின்குணம்-இதுவே-போஜனகுடாரி.

வாந்தி யருசிகுன்மம் வாய்நோய்பி லீகம்இரைப்
பேந்திருமல் கல்லடைப்பி லாஞ்சனமுட்-சேர்ந்தகம்மல்
ஆசனகு டாரியெனும் அந்தக் கிரகணியும்
போஜனகு டாரியுண்ணப் போம்.

இதுவுமது.

வாயுவொடு நாசிநோய் வன்பித்தஞ்சேராது
காயம் நெகிழாது கண்குளிருந்-தூயமலர்க்
காரளகப் பெண்மயிலே கைகண்ட தித்தனையுஞ்
சீரகத்தை நீதினமுந் தின்.

இ-ள். வாந்தி, அருசி, குன்மம், வாய்நோய், பிலீகம், இரைப்பு, இருமல் கல்லடைப்பு, தொண்டைக்கம்மல், கிராணி, வாயு, நாசி நோய், பித்தமும்போம், காயம்இருகலும், கண்குளிர்ச்சியும் உண் டாம். (கoசுக) (கoசுஉ)

பெருஞ்சிரகத்தின்-இதுவே-சோம்பு.

யோனிநோய் குன்மம் உருட்சைமந் தம்பொருமல்
பேனம்உறி காசம் பிலீகம் இரைப்-பீனஉரை
சேர்க்கின்ற வாதமும்போஞ் சீர்பெரிய சீரகத்தால்
மூக்குநோ யில்லை மொழி.

இ-ள். குய்யநோய், குன்மம், உருட்சை, மந்தம், பொருமல், நுரை, காசம், பிலீகம், இரைப்பு, வாதம், மூக்குநோயும்போம். ()

கருஞ்சிரகத்தின்குணம்.

கருஞ்சீ ரகத்தாள் கரப்பனொடு-புண்ணும்
வருஞ்சிராய்ப் பீநசமும் மாற்றும்-அருந்திறள்

காய்ச்சல் தலைவலியுங் கண்வலியும் போம்உலகில்
வாய்ச்ச மருந்தெனவே வை.

இ-ள். கருஞ்சீரகத்தை உண்டால் கரப்பான்,புண்,சிரப்பீநசம், காய்ச்சல், தலைவலி, கண்வலியும்போம். (கoரு௪)

காட்டுச்சீரகத்தின்குணம்.

கைகறுப்பு மாறுங் கடியமே கம்போக்கும்
மெய்குளிரும் பித்தம் விளையுமோ-வெய்யகரிக்
கோட்டுப் பணைமுலையாய் குன்மவா தந்தொலையுங்
காட்டுநற் சீரகத்தைக் காண்.

இ-ள். கைகறுப்பு, மேகம், பித்தம், குன்மவாதமும்போம், உடல் குளிர்ச்சியுண்டாம். (கoருரு)

பிளப்புச்சீரகத்தின்குணம்.

உடலுக் கழகாம் உறைபித்தம்ஏகும்
அடலுறு வாதம் அதமாம்-கடிசேர்
தளவுநகைக் கோட்டுமுலைத் தையலே நாளும்
பிளவுநறுஞ் சீரகத்தைப் பேண்.

இ-ள். பித்தம், வாதமும்போம், உடலுக்கழகுண்டாம்.(கoருசா)

கொத்துமலியின்குணம்-இதுவே-உருள் அரிசி.

கொத்துமலி வெப்பங் குளிர்காய்ச்சல்பித்தமந்தஞ்
சர்த்திவிக்கல் தாகமொடு தாதுநஷ்டங்-கத்திபெழும்
வாத விகாரம்அடர்வன்காத் தபிவிரணம்
பூதலத்தில் வாதகற்றும் போற்று.

இ-ள். வெப்பம், குளிர், காய்ச்சல், பித்தம், மந்தம்,வார்த்தி, விக்கல், தாகம், தாதுநஷ்டம், வாதவிகாரம், விரணமும்போம், கர்த்தபிவிரணம் என்பதை ஜீவரக்ஷாமிர்தத்தில் காண்க. (கoருஎ)

தே-கடுகின்குணம்.

இடிகாசம் நாசிச்சுரர் ஈளைகபம் பித்தங்
கடிவாத சீதங் கடுப்போ-டுடலிற்
படுகோட்டு நோயென்றும் பங்கிலைக ளைப்புன்
கடுகோட்டும் என்மருந்து காண்.

இதுவுமது.

மந்தமயக் கம்வாதம் வாய்நீர்ச் சுழற்றல்அறும்
உந்துசுகப் பிரசவங்கள் உண்டாம்-இந்துநுதன்
மானே கிராணிகுன்மம் மாறும்முத் தோஷமும்போம்
தானே கடுகிற்குத் தான்.

இ-ள். இடிகாசம், நாசிச்சூர், ஈளை, கபம், பித்தம், கடிவாதம், சிதம், கடுப்பு, வளைவுநோய், முடம், மந்தம், மயக்கம், வாதம், வாய் நீரூறல், கிராணி, குன்மம், முத்தோஷமும்போம், சுகப்பிரசவங்கள் உண்டாம். (கOஙஅ) (கOஙகூ)

வெண்கடுகின்குணம்.

பாலகிர கம்பூத பைசாசம் ஓட்டிவிடும்
ஆல விஷங்கடிகள் ஆற்றுங்காண்-கோலமிகு
வள்ளைச் செவிமாதே மாபங்க நோய்விலக்கும்
வெள்ளைக் கடுகின் விதி.

இ-ள். பாலகிரகம், பூதம், பசாசு, விஷம், கடிகள், பங்கநோயும் போம். (கOசO)

நாய்க்கடுகின்குணம்.

சூதக வாயுவொடு சோணிதத்தின் வாதமும்போம்
வாதவலி குன்மம் மடியுங்காண்-மாதுநல்லாய்
பேய்க்குப் புகைபோடப் பேரா தொழிந்துவிடும்
நாய்க்கடுகை நீவிரும்பி னூல்.

இ-ள். சூதகவாய்வு, இரத்தவாதம், வாதவலி, குன்மம், பேயும் போம். (கOசக)

வெத்தியத்தின்குணம்-இது-மேதி.

பிள்ளை கணைக்காய்ச்சல் பேதிசி தக்கழிச்சல்
தொள்ளைசெய்யும்மேகம் தொலையுங்காண்-உள்ளபடி
வெச்சென்ற மேனி மிகவுங் குளிர்ச்சியதாம்
அச்சமில்லை வெந்தியத்திற் காய்.

இதுவுமது.

பித்தவுதி ரம்போகும் பேராக் கணங்களும்போம்
அத்திசுரந் தாகம் அகலுங்காண்-தத்தும்அதி

வேக இருமலொடு வீறு கயந் தணியும்
போகமுறும் வெந்தியத்தைப் போற்று.

இ-ள். கணக்காய்ச்சல், பேதி, சீதக்கழிச்சல், மேகம், உதிரப்பித்தம், கணம், அஸ்திசுரம், தாகம், இருமல், கயமும்போம், குளிர்ச்சியும், போகமும், உண்டாம், பேதி, எனும்சொல், மெந்தியம்-வெந்தியம்-எனமருவியது. (கOசஉ) (கOசங)

தே-ஓமத்தின்குணம்.

சீதசுரங் காசஞ் செரியாமந் தம்பொருமல்
பேதியிரைச் சல்கடுப்பு பேர்ஆமம்-ஓதிருமல்
பல்லொடுபல் மூலம் பகம்இவைநோ யென்செயுமோர்
சொல்லொடுபோம் ஓமமெனச் சொல்.

இ-ள். சீதம், சுரம், காசம், செரியாமந்தம், பொருமல், பேதி, இரைச்சல், கடுப்பு, ஆமக்கட்டி, இருமல், பல்நோய், பலமூலநோய், பெண்குறியும்போம். (கOசச)

குரோசாணி ஓமத்தின்குணம்.

வெகுமூத் திரம்தாதம் வீரியநஷ் டம்புண்
உகுபேதி யுட்கடுப்பி னோடே-மிகுகரப்பான்
நீராக் கபமஇவைபோம் செய்யகுரோ சானியென்றால்
வாரா மயக்கம்உறு மால்.

இ-ள். வெகுமூத்திரம், வாதம், வீரியநஷ்டம், புண், பேதி, உள்கடுப்பு, கரப்பான், கபமும்போம், மயக்கம்உண்டாம். (கOசரு)

சதகுப்பையின் குணம்.

வாதமொடு சூதிகா வாதம் சிரசுநோய்
மோதுசெவி நோய்கபநோய் மூடுசுரம்-ஓதுகின்ற
மூலக் கடுப்பு முதிர்பீந சம்போக்கும்
ஞாலச் சதகுப்பை நாடு.

இ-ள். வாதம் சூதிகாவாதம், சிரநோய், செவிநோய், கபநோய், சுரம், மூலக்கடுப்பு, பீநசமும்போம். (கOசசு)

தே-பெருங்காயத்தின்குணம்-கட்டளைக்கலிப்பா.

தந்தவேதந்த மூலத்தெழும்பிணி
சருவ காளம் விருச்சிகங் கீடம்மா

மந்தம் மாதம் உதாவர்த்தம் அல்குல்நோய்
மார்ப ணங்கட்ட குன்மம் மகோதரம்
உந்து கெர்ப்பத்தின் வித்திரஞ் சூலைச்சுர்
உதிரப் பூச்சி சிலேஷ்மத்து றும்வலி
வந்த மெய்க்கடுப் போடிவை முற்றுமே
மாயு நாறுநற் காயங்கி டைக்கினே.

இ-ள். பல்வேரின்ஞேப், சருவவிஷம், தேள், புழு, மந்தம், வாதம், உதாவர்த்தநோய், அல்குல்நோய், மார்புநோய், அஷ்டகுன்மம், மகோதரம், கெர்ப்பவித்திரம், கெர்ப்பசூலை, கெர்ப்பபூச்சி, சிலேஷ்மநோய், தேகக்கடுப்பும்போம். (௧0௪௭)

வெள்ளைப்பூண்டின்குணம்-இதுவே-உள்ளி-வெண்பா.

சந்திபொடு வாதந் தலைநோவு நாளின்வலி
மன்னிவரு நீர்க்கோவை வன்சிதம்-அன்னமே
உள்ளுள்ளிக் காண்பாப் உலைமூல ரோகமும்போம்
வெள்ளுள்ளி தன்னுல்வெருண்டு.

இ-ள். சந்தி, வாதம், தலைநோய், வாய்ப்பூட்டு, நீர்க்கோவை, சீதம், மூலரோகமும்போம். (௧0௪அ)

அபினியின்குணம்.

நல்லஅபி னிக்குணத்தை நாடறியும் நாம்புகல்வ
தல்லகுன்மம் வாதம் அருஞ்செவிநோய்-பல்லின்வலி
பேதிமந்தம் அஸ்திநோய் பிநசம்போம் வன்மைஉண்டாம்
சாதியுதி ரச்சுத்தி தான்.

இ-ள். குன்மம், வாதம், செவிநோய், பல்நோய், பேதி, மந்தம், அஸ்திநோய், பிநசமும்போம், பலம், லிங்கம்போல் சிவந்த இரத்த சுத்தியும் உண்டாம். (௧0௪௯)

கஞ்சாவின் குணம்.

மூலக்கிராணி அறும் முன்புள்ள பேதிகட்டும்
சாலமயக் கும்பசியுஞ் சாருங்காண்-தூலஞ்செய்
வாதமொடு ஐயமும்போம் வன்கரப்ப னுந்தொலையும்
கோதறுகஞ் சாச்சடைக் கு.

இ-ள். மூலக்கிராணி, வாதம், ஐயம், கரப்பானும்போம், பேதிகட்டு, மயக்கம், பசியும், உண்டாம். (௧0௫0)

கரியபோளத்தின்குணம்.

மார்புவலி வீக்கம் வயிற்றுவலி பங்கநோய்
வார்மேகக் கட்டியொடு மாவாதம்-பாருலகில்
நீளங்கை காலில் நிலைசூலை யுங்கறுத்த
போளந் தனைக்காணிற் போம்.

இ-ள். மார்புநோய், வீக்கம், வயிற்றுநோய், பங்கநோய், மேகக்கட்டி, வாதம், கைகால்சூலையும்போம். (கOருக)

வாலேந்திரபோளத்தின்குணம்.

சூலைகய ரோகம் சொறிகரப்பான் குன்மம்இவை
ஆலைவா யின்கோல்போல் ஆகுங்காண்-நீலசக்கர
வாளமெனத் தோற்றுமுலை மாதரசே வாலேந்திர
போளந் தனையெடுக்கும் போது.

இ-ள். சூலை, கயரோகம், சொறி, கரப்பான்; குன்மமும்போம்.

வெளிச்சப்பிசின்குணம்.

முகசந்நி பாதமொடு முட்டிமரு நீரும்
அகவாத சந்நிகளும் அண்டா - மகிழும்
களிற்றை நிகருமுலைக் காரிகையே நாளும்
வெளிச்சப் பிசினை விளம்பு.

இ-ள். முகசந்நிபாதம், கண்ணில்முட்டும்நீர், வாதசந்நிகளும் போம். (கOருஙா)

நாவியின்குணம்.

வாதவலி மந்தம்அறல் மாறுக் கபப்பிணிகள்
ஓதுகுஷ்டு குன்மந்தேள் ஓடுங்காண்-காதலர்தம்
புத்திபோ டாருயிரும் பூவும் வனைகுழலே
சுத்திசெய்த நாவின்பேர் சொல்.

இ-ள். வாதநோய், மந்தம், நீரிழிவு, கயநோய்கள், குஷ்டம், குன்மம், தேள்விஷமும்போம். (கOருச)

வெள்ளைநாவியின்குணம்.

குஷ்டங் கடிசூலை கூடுபுரி வன்கிருமி
துஷ்டகுன்ம வாதந் தொலையுங்காண்-வட்டமுலைப்

வெண்ணே சுரந்தணியும் பேருலகத் தார்பகைக்கும்
வெண்ணாவி தன்னை வியம்பு.

இ-ள். குஷ்டம், கடிநூலை, கண்டுகட்டுகிறபுழு, குன்மவாதம், சுரமும்போம். (கoருரு)

கருநாவியின்குணம்.

எண்ணாச் சுரம்போம் இறங்கும்பி லீகம்அறும்
புண்ஆறும் ஊரும் புழுக்கள்விழும்-தண்ணாரும்
வல்லை கவிகைவென வையகத்தோர் சொல்லிடுநோய்
இல்லைபொரு கார்நாவிக் கே.

இ-ள்- சுரம், பிலீகம், புண், புழு, வல்லக்கட்டியும்போம். ()

பச்சைநாவியின்குணம்.

கடியதொரு குஷ்டங் கனத்தவிஷ சந்நி
கொடியதொரு குன்மங் குலையும்-படியில்
தளிர்அஸ்தி வெப்புடனே தாகசுரம் தீரும்
வளர்பச்சை நாவிதனை வாழ்த்து.

இ-ள், குஷ்டம், விஷசந்நி, குன்மம், அஸ்திவெப்பு, தாகசுரமும் போம். (கoருஎ)

சூத்திரநாவியின்குணம்.

காய்ச்சல் தலைநோய் கனத்தசந்நி பாதம்எரி
பூச்சி விஷக்கடிஉட் புண்குஷ்டங்-கூச்சல்தரு
காத்திரத்தே ளுங்குடிபோம் காரளகப் பைங்கிளியே
சூத்திரநா விக்குத் தலண்டு.

இ-ள். காய்ச்சல், தலைநோய், சந்நிபாதம், எரிபூச்சி, விஷக்கடி, உள்புண், குஷ்டம், தூளிததேகமும்போம். (கoருஅ)

நிலஆவாரையின்குணம்.

நிலாவாரை யின்குணந்தான் நீகேள் மயிலே
பலமூல வாயுவெப்பு பரவைவச்-சிலகிரந்தி
பொல்லாத குன்மம் பொருமுமலக் கட்டுமுதல்
எல்லாம் அகற்றுமென எண்.

இ-ள். பலமூலவாய்வு, வெப்பு, ஐயம், கிரந்தி, குன்மம், மலக்கட்டும்போம். (கoருகூ

சிவதைவேரின்குணம்.

உள்ள மலமும் உதாவர்த்த மும்வயிற்றைக்
கொள்ளுபித்த வாதமும்போங் கூறுங்கால்-பிள்ளைகட்குச்
செப்பு கிரகமும்போந் தேனே யுலகத்துள்
தப்பில் சிவதைக்குத் தான்.

இ-ள். மலம், உதாவர்த்தநோய், பித்தவாதம், கிரகதோஷமும் போம். (௧0௬0)

வெண்சிவதைவேரின்குணம்.

கைப்புந் துவர்ப்பும் கலந்திருக்கும் பித்தத்தை
இப்புவியில் நாடொட்டா திவ்வளவோ-செப்புதாத்
தொள்ளைக் கிருமி தொலைக்குமிகு பேதிதரும்
வெள்ளைச் சிவதைதனை விள்.

இ-ள். பித்தம், வயிற்றின் துவாரக்கிருமியும்போம், பேதியுண்டாம். (௧0௬௧)

கருஞ்சிவதைவேரின்குணம்.

காரமுடன் கைப்புமுண்டாங் காணு எலிவிஷத்தைப்
பாரஅனற் குன்மத்தைப் பற்றறுக்கும்-பாரில்
தெரிஞ்சுரைத்தோம் பேதிதருந் தேமொழியே காட்டுக்
கருஞ்சிவதைக் கந்தம்அது காண்.

இ-ள். எலிவிஷம், பித்தகுன்மமும்போம், பேதியுண்டாம். ()

நேர்வாளக்கொட்டையின்குணம்-இது-நேபாளம்.

ஓதில் உதாத் துருமலம்பன் னேய்விலகும்
பேதி மருந்தில் பெரிதாகும்-வாதம்அறுங்
கூர்வாளை யொத்தவிழிக் கொம்பனையே பண்டிதர்சொல்
நேர்வாளக் கொட்டதனை நீ.

இ-ள். மலம், பலநோய் வாதமும்போம், பேதி மருந்துகளில் இதுபெரிது. (௧0௬௩)

இதுவேசிலநோய்க்குமாம்ஆகாதெனல்-வி-ம்.

உரைத்திடு வாத நோய்க்கும் உறைகெடு விஷசந் நிக்கும்
நிரைத்திடு ருலை குன்மம் நீண்டிடு மலக்கட் டிற்குப்

கரைத்திடு வாளந் தன்னைக் கட்டிய மேகத் திற்கும்
அரைத்திடு பித்தத்தோர்க்கும் அகற் பிடு அதனைத் தானே.

இ-ள். வாதரோகத்திற்கும், விஷசந்நிக்கும், சூலைக்கும், குன்மத்துக்கும், மலக்கட்டுக்கும் ஆகும், பேகதத்திற்கும், பித்ததேகிகளுக்கும், ஆகாது. (கOசுச)

நீரடிமுத்தின்குணம்-வெண்பா.

நீரடி முத்திற்கு நீங்காக் கிரந்திகுஷ்டம்
போரிடு வாதமுமே போகுங்காண்-காரடுக்கும்
மென்குழலாய் பித்தம் மிகும்அனலம் உண்டாகும்
முன்கிளர்ந மைச்சல்அறு மூன்.

இ-ள். கிரந்தி, குஷ்டம், வாதம், நமைச்சலும்போம், பித்தம், கூடும் உண்டாம். (கOசுரு)

சேங்கொட்டையின்குணம்-இதுவே-சேராங்கொட்டை.

குஷ்டங் கயரோகங் கொல்லும் விஷபாகந்
துட்டந் தருகிருமி சூலையும்போம்-மட்டலருங்
கூந்தன்மயி லேகிரந்திக் கூட்டம்போஞ் செங்கையில்
ஏந்துசேங் கொட்டைதனை யே.

இதுவுமது.

சேங்கொட்டை மெய்த்திமிரைத் தீராக் கடிவிஷத்தைப்
பாங்கொட்டு மூலத்தைப் பற்றறுக்கும்-ஆங்கெட்டிக்
கொல்லும்வா தத்தினொடு குன்மத்தை யும்மதனை
வெல்லும் அயிற்கண்ணால் விள்.

இ-ள். குஷ்டம், கயரோகம், விஷபாகம், கிருமி, சூலை, கிரந்தி, உடல்திமிர், கடிவிஷம், மூலம், வாதம், குன்மமும்போம்.() (கOசுஎ)

தேங்காய்ப்பிண்ணாக்கின்குணம்.

சொறிசிரங்கு புண்ணுமாந் தோலாக் கரப்பான்
மறுவாக்கும் மேனியெல்லாம் மாதே-சிறுக
வயிற்றிற் புழுவினங்கள் மாறா ததிக்குஞ்
சுயத்தேங்காய்ப் பிண்ணாக்காற் சொல்.

இ-ள். சொறிசிரங்கு, புண், கரப்பான், தேகத்தில் மருவு, புழுக்கட்டமும் உண்டாம். (கOசுஅ)

எள்ளுப்பிண்ணாக்கின் குணம்.

உள்ளிற்புண் ணுங்கிரந்தி யூரலுமி கக்கிளைத்தே
கள்ளின்பிண் ணாக்குக் கெழும்புங்காண்-விள்ளுங்
கரப்பான் விரணங் கத்தநீர் மேகம்
உரப்பாகும் நாளும் உரை.

இ-ள். புண், கிரந்தி, யூரல், கரப்பான், விரணம், நீர்மேகமும்உண்டாம். (க0௬௬)

வேப்பம்புண்ணாக்கின் குணம்.

சந்நியுடன் வாதந் தலைநோய்போம் வாதம் அறும்
முன்னிநின்ற தோஷம் முறியுங்காண்-பன்னுதமிழ்
வல்லவரே வேம்பின்வழி வந்தபிண்ணாக் கொன்றொருக்காற்
சொல்லஐயம் போமே தொலைந்து.

இ-ள். சந்நி, வாதம், தலைநோய், வாதம், தோஷம், ஐயமும்போம். (க0௭0)

இலுப்பைப்பிண்ணாக்கின்குணம்.

பொத்திக் கடுவனொடு புண்ணுங் கரப்பனும்போம்
வித்தகைப்பு தோஷம்இவை வீறுவாம்-மெத்தெனவே
யெண்ணெய்க் கசிவுகளும் ஏகும் இலுப்பைவிதப்
பிண்ணாக்குக் கென்றறியப் பேசு.

இ-ள். கடுவன், புண், கரப்பான், விதைவீக்கம், தோஷம், எண்ணெய்ச்சிக்குகளும்போம். (க0௭க)

சாம்பிராணியின் குணம்.

வாதசீ தங்கண்ணோய் மாறாத் தலைவலியும்
ஓதம்உறு பீநசமும் ஓட்டுங்காண்-பூதலத்தில்
வேம்பிதுதான் என்ன மிருகசப்பை வாய்க்களிக்கும்
சாம்பிராணி யென்னுஞ் சரக்கு.

இ-ள். வாதம், சீதளம், கண்ணோய், தலைநோய், சலப்பீநசமும்போம். (க0௭உ)

கர்ப்பூரத்தின் குணம்.

கிருமிசல தோஷங் கிளைவலிப்பு சந்நி
பொருமுமந்தம் அக்கிபட்ட புண்ணோ-டெரிசுரங்கள்

வாந்திபித்தஞ் சிகமுறு வாதஞ் செவிமுகநோய்
சாந்திகருப் பூரம்ஒன்றாற் சாற்று.

இ-ள். கிருமி, சலதோஷம், வலிப்பு, சந்நி, பொருமுமந்தம், நிப்பட்டபுண், பித்தசுரங்கள், வாந்தி, பித்தம், சிதளவாதம், செவி, நோய், முகநோயும்போம். (௧0௭௩)

பச்சைகர்ப்பூரத்தின்குணம்.

அஷ்டகுன்மஞ் சூலை யணுகாது வாதமொடு
துஷ்டமே கப்பிணியுந்-தோற்றுதே-மட்டலருங்
கூந்தன்முடி மாதே கொடிசி கபம்போகுஞ்
சார்ந்தபச்சைக் கர்ப்பூரத் தால்.

இ-ள் எட்டுவிதகுன்மம், சூலை, வாதம், மேகநோய், கபமும், போம். (௧0௭௪)

பச்சைக்கர்ப்பூரத்தின்பேதம்.

பச்சைக்கர்ப்பூரம் பகருவதில் பேதம்உண்டிங்
கிச்சையொடப் பேதம் இசைக்குங்கால்-இச்சகத்துள்
ஈச னுடுவீமன் ஏற்றபூ தாச்சிறையன்
காசறுமுன் றாகுமென்பர் காண்.

இ-ள். ஈசன், வீமன், பூதாச்சிறையன்என்னுங்குற்றமற்றமுன் றுபெயருண்டு அதில். (௧0௭௫)

ஈச்சன்என்னும் பச்சைக்கர்ப்பூரத்தின்குணம்.

ஈசன்என்னும் பூரம்வெண்மை என்பர்அது காரமுமாம்
பேசரிய சிதம்உஷ்ணம் பித்தம்மயல்-வீசுகின்ற
பீநசம்உள் தாகம்இவை பேர்த்துவிடுங் காந்தியுண்
டான தருவசியம் ஆம்.

இ-ள். வெண்மைநிறமுள்ளது, சிதம், உஷ்ணம். பித்தம், மயக்கம், பீநசம், உள்ளதாகமும்போம், காந்தி, வசியமும் உண்டாம். ()

வீமன்என்னும்பச்சைக்கர்ப்பூரத்தின்குணம்.

வீமன்என்னுங் கர்ப்பூரம் மேகஅழுக்குவெண்மை
சேமம் உறுங்குளிர்ச்சி தின்றக்கால்-நாமருவு

நோயகலுந் தாகம்அறும் நண்பே தியும்ஆகுந்
தூய மதிமுகத்தாய் சொல்.

இ-ள். மேகநிறமுள்ளது, தாகம்போம், குளிர்ச்சியும், பேதியும், உண்டாம். (௧0எஎ)

பூதாச்சிறையன்என்னும்-பச்சைக்கர்ப்பூரத்தின்குணம்.

பூதாச் சிறையன்எனும் பூரமஞ்சள் கைப்பாகுங்
கோதையர்க்காங் காசங் கொடுமேகம்-வாதாதி
என்னுங் தனித்தோஷம் ஏறுமுத்தோ ஷஞ்சொறியுங்
குன்ன விரணமும்போக் கும்.

இ-ள். மஞ்சளுங் கருப்புங்கலந்த நிறமுள்ளது, ஸ்திரிகளுக்காகும், காசம், மேகம், வாதமுதலாகிய மூன்றுதோஷங்கள், சொறி இரணமும்போம். (௧0எஅ)

புழுகுச்சட்டத்தின்குணம்-வி-ம்.

ஆசுறுக் காந்திபண்டாம் அசீரண வாதம் போகுந்
தேசுதான் வளரும்பித்த சிலேஷ்மவல் விஷமும் ஏகும்
மாசறு ஆயுள் உண்டாம் வசனமா தருளுஞ் சேருஞ்
வாசமார் புழுகுச் சட்டமகிமையை யுரைக்குங் காலே.

இ-ள். அசீரணவாதம், பித்தசிலேஷ்மம், விஷமும்போம், காந்தி தேஜசு, ஆயுர்விர்த்தி, இலக்ஷ்மிகடாக்ஷமும் உண்டாம். (௧0எக)

கஸ்தூரியின்குணம்-வி-ம்.

சொல்லரும் வசியங் காந்திசுகமுதல் அணுகும் பின்னும்
மெல்லியார் தமக்கு நாத விர்த்தியாந் தலைநோ யேகும்
பல்லுறு கபமுந் திரும்பகரொணுப் பலமும் உண்டாம்
மல்லடர் சந்நி ரூட்சை மாறுங்கஸ் தூரிக் கென்னே.

இ-ள். வசியம், காந்தி, ஸ்திரிகளுக்கு நாதவிர்த்தி, பலமும் உண்டாம், தலைநோய், கபம், சந்நி ரூட்சையும்போம். (௧0அ0)

கஸ்தூரியின் பேதம்-வெண்பா.

கஸ்தூரி பைந்தாங் கரிகைதில கைகுளுந்தை
கைத்தபிண்ட கைநாய கைமுறைபே-பொய்த்தசிவப்

பெள்ளுகொள்ளு கட்டி சிறிதுபரு மங்களென
விள்ளும்இவைக் கேகும் வினை.

இ-ள். கரிகை-சிவப்புநிறம், திலகை-எள்ளுப்போலிருக்கும், குளுர்தை-கொள்ளைப்போலிருக்கும், பிண்டகை - கட்டி யாயிருக்கும் நாயகை, சிறிதும்பெரிதுமாயிருக்கும், இவைகளுக்குச் சகலவியாதிகளும்போம். (௧௦அக)

சவ்வாதின்குணம்.

சுரமுந் தலைவலியுந் துண்டத்த டைப்பும்
உரமுந்து நோயோ டெற்குள்-பரவிமிகக்
குத்துகின்ற வாயுவும்போங் கோதில்சவ் வாதினுக்கு
மெத்த வசியமுமாம் விள்.

இ-ள். சுரம், தலைநோய், மூக்கு அடைப்பு, மார்புநோய், குடல், வாய்வும்போம், வசியம்உண்டாம். (௧௦அஉ)

தே-குங்குமப்பூவின்குணம்.

விந்துநஷ்டந் தாகம் அண்டம் மேகசலஞ் சூலைகபம்
உந்துசுரம் பித்தங்கால் உச்சிவலி-முந்துகண்ணில்
தங்குபப்பூ வோடுறநோப் சார்த்தியிவை நீங்கவென்றுற்
குங்குமப்பூ ஓர்இழைக் கொள்.

இதுவுமது.

குங்குமப்பூ வைக்கண்டால் கூறுகொண்ட பீநசநோய்
தங்கு செவித்தோஷஞ் சலதோஷம்-பொங்கு
மதுரதோ ஷங்தொலையும் மாதர்கருப்ப
உதிரதோ ஷங்கள் அறும் ஓது.

இ-ள். விந்துநஷ்டம், தாகம், அண்டவாதம், மேகசலம், சூலை, கபம், சுரம், பித்தம், கால்வலி, உச்சிவலி, கண்ணிலுண்டாகும், பூவோடுபொருந்திய நோய், வாந்தி, பீநசநோய், காதுநோய், சலதோஷம், மதுமேகம், மாதர்கருப்ப உதிர தோஷமும்போம். () ()

கோரோசனையின்குணம்.

நீரிழிவு மேகசுரம் நீங்காக் கனல்வேகம்
கூரியடன் மாதம் குழந்தைகள்நோய்-பாரகபம்

வீறும்ம சூரியும்போம் வேதந்தனில்இரண்டாய்க்
கூறுங்கோ ரோசனைகட்கு.

இ-ள். நீரிழிவு, மேகசுரம், கனல்வேகம், உன்மாதம், குழந்தை களநோய், கபம், மசூரியும்போம். (௬௪௫)

சந்தனத்தின் குணம்.

கோதில்சந்தஞ் சிதோஷ்ணங் கொண்டிருக்கும அச்சந்தம்
வாதபித்தம் ஐயம் கனப்பியமை - ஓதுசுரம்
மேகந் தனித்தாகம் வெப்புசொறி யும்போக்கும்
ஆகந் தனக்குறுதி யாம்.

இ-ள். குளிர்ச்சி, வெப்பமும் பொருந்திய சந்தனத்தினால், வாதம், பித்தம், ஐயம், மனப்பிரமை, சுரம், மேகம், தாகம், வெப்பு, சொறியும்போம், உடலுக்குப் பலம்உண்டாம். (௬௪௬)

சந்தனத்தின் பேதம்.

மும்மையெனச் சொல்வார் முருகுசந்தப் பேதம்அவை
செம்மைமஞ்சள் வெண்மையெனத் தேர்முறையே-நன்மை தரு
உத்தமமும் மத்திபமும் ஓததம மும்ஆகும் [ம்
தத்தை மொழியணங்கே சாற்று.

இ-ள். சந்தனத்தின்பேதம் மூன்றுளனச் சொல்வார்கள், அவை சிவப்பு, மஞ்சள், வெள்ளை, இதில் சிவப்பு உத்தமம், மஞ்சள், மத்திமம், வெள்ளை, அதமமாம். (௬௪௭)

பச்சிலை-கிச்சலிக்கிழங்கு-இவைகளின் குணம்.

மச்சிலைக்குக் கந்தம் பரிமளிக்கும் அவ்விலையோ
வெச்சைக் கிரந்திதனை மெய்ப்புழுவைச்-சொச்சமற
ஓட்டும்கற் கிச்சிலியின் ஒண்கிழங்குகளைக் குக்கபமும்
பூட்டுவிஷ மும்புண் ணும் போம்.

இ-ள். பச்சிலைக்கு காங்கையால்பிறந்த நீர்க்கிரந்தி, மெய்ப்புழுவும்போம், கிச்சலிக்கிழங்கு-கபம், விஷம், புண் ணும்போம். ()

உப்பின் குணம்.

அளத்தில்உறை கல்உப் பனல்வாதம் மாற்றுங்
களத்துநோய் தன்னைக் களையுங்-கிளத்தகப

ஆசடைய வல்லநோய் அஷ்டகுன்ம மும்போக்குங்
காசினியுண் மாதே கழறு.

இ-ள். அனல், வாதம், கழுத்துநோய், கபம், வல்லைநோய், அஷ்டகுன்மமும் போம். (க0அகூ)

கறிஉப்பின் குணம்.

மந்தம் பொருமல்அறும் வாயுவும்போம் தீபனம்ஆம்
தொந்தித்த ஐயந் தொடருமோ-சந்ததமும்
அக்கினியின் புஷ்டி அடருங் கறியுப்பால்
சிக்குகின்ற நீர் இறங்குஞ் செப்பு.

இ-ள், மந்தம், பொருமல், வாய்வு, ஐயமும்போம், தீபனம், அக்கினியின்புஷ்டி, நீரிறங்கலும் உண்டாம். (க0கூ0)

கல்உப்பின் குணம்.

ஐயம்அறுஞ் சூலை அரோசித்தம் சர்த்தியொடு
வெப்பபிணி அஷ்டகுன்மம் விட்டேகும்-பெய்வளையே
வாதம்அதி தாகம் மலக்கட்டும் போம்உலகில்
கோதறுகல் உப்பைக் கொடு.

இ-ள். ஐயம், சூலை, அரோசி, பித்தம், வாந்தி, வெய்யபிணி, அஷ்டகுன்மம், வாதம், தாகம், மலக்கட்டும்போம். (க0கூக)

தே-வெடிஉப்பின்குணம் இதுவே கம்பிஉப்பு.

மல்லாரும் அஷ்டகுன்மம் மாதர் உதரக்கட்டி
கல்லாம் அதைப்புநீர்க் கட்டருகல்-எல்லாமே
கம்பிகம்பி யென்றங் கருவுண்டாம் அங்கிநின்ற
கம்பிகம்பி யென்றுரைக்குங் கால்.

இதுவுமது.

சூதக வாயுவொடு சோணிதத்தின் வாதமும்போம்
வாதவலி குன்மம் இவை மாறுங்காண்-மீதாங்
கொடிய வயிறிழியுங் கோழைகபம் ஏகும்
வெடியுப்பு : தன்னை விளம்பு.

இ-ள். அஷ்டகுன்மம், மாதர் உதரக்கட்டி, கல்போன்ற அதைப்பு, நீர்க்கட்டு, அருகல், சூதகவாயு, சோணிதவாதம், வாதவலி, குன்மம், மகோதரம், கோழை, கபமும்போம். (க0கூஉ) (க0கூங)

அட்டுப்பின்குணம்.

பித்தங் குடியிலகும் பேரோத சூலைஅறுஞ்
சர்த்தி அருசியிவை சாராவாம்-ஒத்தகச்சிற்
கட்டுப் படாக்கொங்கைக் காரிகையேசங்கையற
அட்டுப்பின் பேரை யறை.

இ-ள். பித்தம், சூலை, வாந்தி, அருசியும்போம். (௧0௬௪)

வளையல்உப்பின்குணம்.

துளையார் குடல்வாதங் கொரந்த வாதக்தோ
டிளையாச் சுவாசம்அறும் இன்னும்-வளையல்உப்பால்
குன்மவலி சூலைவெப்பங் கூருப்பி லீகம்இவை
சென்மம்விடுத் தோடுமெனத் தேர்.

இ-ள். குடல்வாதம், தொந்தவாதம், சுவாசம், குன்மவலி, சூலை, வெப்பம், பிலீகமும்போம். (௧0௬௫)

அஷ்டகுன்மம் மந்தம் அசுர்க்கரச்சுர் சீதபித்தந்
துட்டஐயம் நாடிப்புண் தோஷங்கள்-கெட்டமலக்
கட்டுவிட விந்துப்பைக் காமியநோய் வன்கரப்பான்
விட்டுவிட விந்துப்பை விள்.

தே-இதுவுமது.

சென்னிகண்நா பல்தூர் செவிகவுள்கண்டம்பகநோய்
சந்நியா சங்காசந் தாகம் இரைப்-புன்இரத்த
மூலஞ் சிலந்திநளி மூடிகநஞ் சூதைவலி
சூலஞ் சிதையும்இந்தாற் சொல்.

இ-ள். அஷ்டகுன்மம், மந்தம். அதர்க்கரசுர், சீதம், பித்தம், ஐயம், நாடிப்புண், தோஷங்கள், மலக்கட்டு, காமியநோய், கரப்பான் தலைநோய், கண்ரோய், நாவின்நோய், பல்நோய், செவிநோய், கபோலநோய், கண்டநோய், பக்கநோய், சந்நியாசம், காசம்,தாகம், இரைப்பு, இரத்தமூலம், சிலந்தி, தேள்விஷம், எலிவிஷம், ஊதைவலி, சூலையும்போம். (௧0௬௬) (௧0௬௭)

தே-பஞ்சஉப்பின்குணம்.

நீராமை அற்புதப்புண் நெஞ்சுவலி மாகுன்மம்
பேராக் கிரகணிபி லீகமந்தம்-தீரக்கால்
விஞ்சஉப்பைக் குக்கிநோய் மெய்ச்சூலை யும்பறக்கும்
பஞ்சஉப்பைத் தின்பையெனிற் பார்.

இதுவுமது.

பஞ்ச லவணம் பயித்தியகுன் மம்போக்கும்
விஞ்சிய சிலேஷ்மததை வீழ்க்குங்காண்-கிஞ்சுகமே
தீபனம்உண் டாக்குந் திரிதோஷம்போக்கிவிடுஞ்
சோபனமாம் இம்மொழியைச் சொல்.

இ-ள். ஆமைக்கட்டி, அற்புதப்புண், நெஞ்சுவலி, குன்மம், கிரா ணி, பிலீகம், மந்தம், வாயு, மிகவும் கனத்தசிலேஷ்ம வயிற்றுநோய் சூலை, பயித்தியம், குன்மம், சிலேஷ்மம், திரிதோஷமும்போம், தீப னம்உண்டாம். (கoகூஅ) (கoகூகூ)

கந்தி உப்பின்குணம்.

உடல்கரையச் செய்துவிடும் உட்டினமாம்பொல்லாக்
குடல்வாதந் தன்னைவெட்டிக் கொல்லும்-அடலாருந்
தந்திமத்த கத்தைபடத் தாவுகொங்கை மாதரசே
கந்தியுப்பை நன்றாய்க் கழறு.

இ-ள். குடல்வாதம்போம், உடல்கரைவும் உட்டிணமும் உண் டாம், இதனைக் கெந்தக உப்புஎன்பர். (ககoo)

சவ்வர்ச்ச லவணத்தின்குணம்.

சவ்வர்ச்சம் என்னுந் தனிலவணத் தால்உலகில்
வெவ்வச் சுரஞ்சூலை வெப்பும்அறும்-கவ்வுகின்ற
நாடி விரணமுடன் நாட்பட்ட குன்மமும்போம்
தேடிபண மேயிதனைச் செப்பு.

இ-ள். சுரம், சூலை, வெப்பு, நரம்புசிலந்தி, குன்மமும்போம். ()

பிடாலவணத்தின்குணம்.

பிடாலவணம் என்றொருக்காற் பேசின் உலகில்
விடாநீர் இழிவகலும் மெய்யே-விடல்அரிய

மந்தம் அகலும் வளரும் அதிகபசி
கந்த மலர்க்குழலே காண்.

இ-ள். நீரிழிவு, மந்தமும்போம், அதிகபசியுண்டாம். (கக0உ)

வெங்காரத்தின்குணம்.

வெங்காரஞ் சாப்ப விஷம்ஐயம் நீர்அடைப்பு
மங்காக் கிராணிரத்த மாம்மூலம்-பங்கஞ்செய்
வாயுவுடன் கல்அடைப்பு வன்கிருமி அஷ்டகுன்மம்
ஓயும் படிபுரியும் ஓது.

இதுவுமது.

அரியவெங் காரந்தான் ஐயமறுக்குங் குய்யம்
மருவு கிரிச்சரத்தை மாற்றுந்-திருவனையாய்
சந்நிக்காஞ் சொல்லுஞ் சகல பிணிக்கும்அதாம்
பொன்னுக்கும் ஆகும் புகல்.

இ-ள். சர்ப்பவிஷம், ஐயம், நீர்அடைப்பு, கிராணி, இரத்தமூலம், பங்கவாய்வு, கல்அடைப்பு, கிருமி, அஷ்டகுன்மம், குய்யகிரிச்சரம், சந்நி, சகலபிணியும்போம், பொன்னுக்குஆகும். () (கக0௪)

சீனக்காரத்தின்குணம்.

சீனமெனுங் காரம்அது சீறிவரு பல்அரணை
ஆனைக்கால் கண்ணோய் அனிலமொடு-மாநிலத்தில்
தூன்மாங் கிசம்வாயு தோலாத உள்அழலை
குன்மம்இவை போக்கும்எனக்கூறு

இ-ள். பல்அரணை, ஆனைக்கால், கண்ணோய், வாதம், துன்மாங்கிசம், வாயு, அழலை, குன்மமும்போம். (கக0ரு)

சவுக்காரத்தின்குணம்.

கரப்பானைச் சீதத்தைக் கண்டிக்கும்பேதி
உரப்பாக்கும் வாயுவைவிட் டோட்டும்-தரைக்குள்
வழலை எனப்பேர் வசித்தசவுக் காரம்
அழலைகுன்மம் போககும் அறி.

இ-ள். கரப்பான், சீதம், வாய்வு, அழலை, குன்மமும் போம் பேதியுண்டாம். (கக0௬)

அப்பளக்காரத்தின்குணம்.

குடல்வாதஞ் சூலை கொடிதான வாதம்
அடல்புரியும் ஐயம் அறுக்கும்-நெடுவயிற்றின்
உப்பிசத்தி னோடே உயர்குன்ம நோய்அகற்றும்
அப்பிளக் காரம் அது.

இ-ள். குடல்வாதம், சூலை, வாதம், ஐயம், வயிற்றின் உப்பிசம். குன்மமும்போம். (சுகஎ)

நவக்ஷாரத்தின்குணம்.

குன்மங் குடற்சூலை கொல்லும் மகோதரத்தை
வன்மையுறு கல் அடைப்பை மாற்றுங்காண்-சன்மக்
கவிச்சுமுத் தோஷங் கனவாதம் நீக்கும்
நவக்ஷாரம் மாதே நவில்.

இ-ள். குன்மம் குடற்சூலை, மகோதரம். கல்அடைப்பு, தோலின் கவிச்சுற்றம், முத்தோஷம், வாதம், இதை சுண்ணும்பில் காற்று போகாமல்தேப்த்து முறிறக்கொடுத்தால் தேள்விஷமும்போம். ()

தே-யவாக்ஷாரத்தின்குணம்.

குப்பம் களம்நா கொடிறுவாய் இவ்விடநோய்
ஐயம் இரைப்பிருமல் ஆசனம்பிண்-பையவுறு
கிடவிடஞ் சோபை கிராணியையும் பமபரம்போல்
ஆடவிடும் மெய்யவா க்ஷாரம்.

இதுவுமது.

அஷ்டகுன்மஞ் சூலை அதிதூலம் உட்டினத்தால்
ஒட்டிவரு வாதம்உதரநோய்-துஷ்டமந்தம்
நீடுகபம் நீர்அடைப்பு நீங்காப் பிலீகம்இவை
ஓடும்யவா க்ஷாரத்தால்உன்.

இ-ள். குப்பநோய், கழுத்துநோய், நாவின்நோய், வாய்நோய், ஐயம், இரைப்பு, இருமல், ஆசனப்புண், புழுவிஷம், சோபை, கிராணி அஷ்டகுன்மம், சூலை, தூலதேகம், உஷ்ணவாதம், உதரநோய், மந்தம், கபம், நீர்அடைப்பு, பிலீகமும்போம். (சுசூகூ) (சுசுல)

சத்திக்ஷாரத்தின்குணம்.

மந்தமொடு தங்கும் மல்சலம்பி லீகம்மடி
உந்திவரு கின்ற ஒலியிருமல்-குந்தவைக்கும்
வாதவலி குன்மம் மகோதரங் கிராணியும்போம்
ஓதுசத்தி க்ஷாரத்தை உன்.

இ-ள். மந்தம், மலம், சலம், பிலீகம், அருமல்,வாதவலி,குன்மம் மகோதரம், கிராணியும்போம். (௧௧௧௧)

தும்பக்ஷாரத்தின்குணம்.

ஈளை யுடனே இரைப்புவலிவாதம்
ஆளைவிடாக் குன்மநோய் ஆயதும்போம்-வேளைஇமைப்
போதில்வெல்லும் வேழப் புருவச் சிலைமயிலே
நோகில்தும்ப க்ஷாரத்தைக் கூறு.

இ-ள். ஈளை, இரைப்பு, வலி, வாதம், குன்மநோயும்போம். ()

உமிக்ஷாரத்தின்குணம்.

குடல்வாதஞ் சூலை கொடுங்குன்மம்ஓடும்
விடல்அரும்நீர்க் கட்டும்-விலகும்-மடலார்
கமல வதனக் கனங்குழலே நாளும்
உமிக்ஷா ரத்தை உரை.

இ-ள். குடல்வாதம், சூலை, குன்மம், நீர்க்கட்டும்போம். ()

துத்தத்தின்குணம்-இதுவே-மடல்துத்தம்.

முற்றிய குறிப்புண் முளைவிரணஞ்சென்னிதனைப்
பற்றிநின்ற வாதம் படர்கரப்பான்-சுத்தவிழிக்
காசங் கணம்பில்லங் கண்ணோய்குந் தம்தொலையும்
வாசமிரு துத்தத்தால் வாழ்த்து.

இ-ள். ஆன்குறிப்புண், முளைவிரணம், சிரவாதம், கரப்பான், நேத்திரகாசம், கணம், பில்லம், கண்ணோப், குந்தமும்போம். ()

துரிசின்குணம்-இதுவே-மயில்துத்தம.

புண்ணாற்றுங் காமியத்தின் புண்ணாற்றுங்கண்ணோயை
விண்ணேற்றும் முத்தோஷ வீறடக்கும்-சண்ணுகின்ற
வாந்தியொடு பேதியரும் வாய்நோய்சுரந்தணிக்குங்
காந்தி தருந்துரிசி காண்.

இ-ள். புண், ஆண்குறிப்புண், கண்ணோய், முத்தோஷம், வாய் நோய், சுரமும்போம், வாந்தி, பேதியுமுண்டாம். (ககக௫)

தே-அன்னபேதியின்குணம்.

முளைவிரணஞ் சூலைமந்த முட்டாமைக்கட்டி
விளைஅறல் மகோதரநோய் வீட்டும்-வளைமலைபோற்
காட்டும்அன்னந் தன்னைக் கணத்திற் சலமாக்கிக்
காட்டும்அன்ன பேதியது காண்.

இ-ள். முளைவிரணம், சூலை, மந்தம், ஆமைக்கட்டி, சலமகோதரமும்போம், மலைபோல், குவிந்த அன்னத்தை சலமாக்கிவிடும். ( )

மாங்கிசபேதியின்குணம்.

துன்மாங்கி சங்கரைக்குஞ் சோபை அழலையொடு
வன்மைமிகு சூலைகபம் மாற்றுங்காண்-நன்மயிலே
ஒப்பறுபீ லிகமென ஓதுகட்டி யைக்கெடுக்கும்
செப்பரிய மாங்கிசபேதி.

இ-ள். துன்மாங்கிசம், சோபை, அழலை, சூலை, கபம், பீலிகமென்கிற கட்டியும்போம். (கககஎ)

அம்பரின்குணம்.

அளகமுள ஆரமிர்தே ஆண்மையையுண்டாக்கும்
பளபளென மெய்யையுறப் பாக்கும்-குளகுளத்த
புண்ணாற்றும் அம்பர் பொரிகரப்பனைப்போக்கும்
விண்ணோர்க்கும் வாசனையாம் விள்.

இ-ள். குளகுளத்தபுண் பொரி கரப்பானும்போம், ஆண்மை, தேகபளபளப்பு, பலம், வாசனையும் உண்டாம். (கககஅ)

குந்திரிக்கத்தின்குணம்.

காச்சு வாசங் கனத்த மேகக்கட்டி
வீசு விஷக்கடி வுறுச்சுருஷ்டம்-பேசு
படர்தா மரைசிரங்கு பண்டைவிர ணங்கள்
இடர்செய்யிற் குந்திரிக்கம் எந்து.

இ-ள். காசசுவாசம், மேகக்கட்டி, விஷக்கடி, துர்கந்தகுஷ்டம, படர்தாமரை, சிரங்கு, இரணங்களும்போம். (ககககூ)

குங்கிலியத்தின்குணம்.

பெரும்பாடு மேகம்போம் பேரா துடலில்
அரும்பியபுண் ஆறும்இவை யல்லால்-துரும்பாம்
எலும்புருக்கி புண்சீழும் ஏகும் உலகில்
சலம்பருகுங் குங்கிலியத்தை தால்.

இ-ள். பெரும்பாடு, மேகம்எலும்புருக்கி, புண்சீழும்போம்.

தே-வெள்ளைக்குங்கிலியத்தின்குணம்-இது-சருவரசம்.

வெள்ளை யளித்த விரணநா பிக்க மலத்
தொள்ளைவிர ணம்மேகந் தோற்றுகினும்-உள்ளே
வருவரச மேற்புண் வரினுஞ் சுவேதச்
சருவரச மேற்பழியைச் சாற்று.

இ-ள். விரணம், நாபிகமலவிரணம், மேகம், புண்ணும்போம். ()

தே-குக்கில்குணம்.

காததர நாசிநோய் கட்டிகடி மேகப்புண்
வாதவித்தி ரஞ்சூலை வன்குநகம்-ஓதிவையித்
திக்கிலி ருக்கத் திடமுமுள வோஉபயக்
குக்கிலி ருக்கநமக் குள்.

இ-ள். காதுநோய், உதடுநோய், நாசிநோய், கட்டி, கடி, மேகப்புண், வாதவித்திரம், சூலை, குநகநோயும்போம். ககஉஉ)

தே-அரக்கின்குணம்.

குஷ்டம் அசுர்க்குபித்தம் குன்மம்இரைப் பென்புருக்கு
பட்டிடிபுண் ஆகச்சூர் பங்கநோய்-தொட்டோர்
அரக்கருக்குஞ் சந்நிசுரம் ஐயமிவைக் கெல்லாம்
அரக்கரக்கு நூலை யறி.

இ-ள். குஷ்டம், அசுர்க்கு, பித்தம், குன்மம், இரைப்பு, எலும்புருக்கி, புண், ஆகச்சூர், பங்கநோய், சந்நி, சுரம், ஐயமும்போம்.

தே-மெழுகின்குணம்.

அரைப்பக்க வாதம் அதைப்பயம் ஊதை
குறைவிந் திகழ்நோய்தேள் கூளி-கறையைப்

புழுகெடுக்க அங்கம்உறு புண்இடிப்புண் தீப்புண்
மெழுகெடுக்க அங்ககலு மெய்.

இ-ள். பக்கவாதம், அதைப்பு, ஐயம்ஊதை, சுக்கிலநஷ்டம், உதடுவெடிப்பு, தேள்விஷம், இரத்தத்தை புழுகெடுக்க அங்கம்உறு, புண், இடிப்புண், தீப்புண்ணும்போம். (கசஉச)

பலவகைமெழுகின்குணம்.

பொன்மெழுகு மாறல் சுரங்கண்ணோய் போக்கிவிடும்
நன்மெழுகு புண்ணோய் நஞ்சாகும்-உண்ணுங்
கோசமெழுகு நாளுங் குறித்தவசி யத்திற்
கிசையும் எந்தி ரத்திற்கும் என்.

இ-ள். பொன்மெழுக்கு, மாறல்சுரம், கண்ணோயும்போம், நல்லமெழுக்கு, புண்ணோய்போம், கோசுகின்மெழுகு, வசியத்திற்கும், எந்திரத்துக்கும் ஆகும். (கசஉரு)

தே-அப்பிரகத்தின்குணம்.

அப்பிரக மென்றறைந்தால் அண்டம்ம கோதரமும்
எப்பிரமி யங்களுமுன் னீரிழிவும்-வெப்பூரற்
பேதமும்போ கர்மேகப் பித்தமுங்கண் ணோய்களும்பல்
வாதமும்போந் தாதுவுமா மால்.

இ-ள். அண்டவாதம், மகோதரம், எல்லாபிரமியங்களும், நீரிழிவு, ஊறல், மேகப்பித்தம், கண்ணோய்கள், பலவாதங்களும் போம் தாது உண்டாம். (கசஉசு)

தே-கல்நாரின்குணம்.

காசபித்தம் வாதங் கடுப்பிறு நோயெரிவு
வீசசர்த்தி நீரடைப்பு விந்துநஷ்டம்-பேசும்அசை
தின்னூரக் கூவுமந்தந் திக்குடர்கால் தாகமிவை
கன்னாரைக் கூவவிடுங் காண்.

இ-ள். காசபித்தம், வர்தம்கடுப்பு, பல்நோய், எரிவு, வாந்தி, நீரடைப்பு, விந்துநஷ்டம், சிரகம்தின்னூர்மந்தம், குடல்வாதம், தாகமும்போம். (கசஉஎ)

சகஸ்திரவேதியின்குணம்.

அஸ்திசுரந் தாகசுரம் ஆசனவி ரத்தமொடு
குத்திவரு வாந்திகபம் கூழுசந்தி-மெதத

நிகழ்த்து கண்நோய் தாதுநஷ்டம் நீங்காமே கம்போம்
சகஸ்திரவே நிக்குத் தளர்ந்து.

இ-ள். அஸ்திசுரம், தாகசுரம், ஆசனவிரத்தம், வாந்தி, கபம், சந்தி, கண்ணோப், தாதுநஷ்டம், மேகமும்போம், சகசிரம்-சகஸ்திரம், எனமருவியது. (௧௧௨அ)

தே-கல்மதத்தின்குணம்.

கண்டப் பிணிமேகங் கல்லொடுநீர் வனடைப்பு
வண்டற் கிரிச்சரநோய் மாபிரமி-யுண்டவினுற்
பன்மலஞ்சேர் தாதுநஷ்டம் பன்னுமிந்நோய்க் கூட்டத்துட்
கன்மதஞ்சே ரக்கரக்குங் காண்.

இ-ள். கழுத்துநோய், மேகம், கல்லடைப்பு, நீர்அடைப்பு,சதை யடைப்பு, கிரிச்சரம், பிரமி, தாதுநஷ்டமும்போம். (௧௧௨௯)

தே-சிலாசத்தின்குணம்.

கல்லடைப்பு மேகங் கனதூலம் வித்திரதி
சொல்லடைக்கு நீர்அருகல் சோணிதக்கால்-மெல்லிடையார்
கில்லகச்சத் தில்லையெனு மிந்திரிய நாட்டமுமாங்
கல்லகச்சத் தில்லையெனுங் கால்.

இ-ள். கல்லடைப்பு, மேகம், தூலவுடல், நரம்புக்கட்டி, நீரருகல், சோணிவாத இந்திரியநஷ்டமும்போம், இல்லகச்சத்து, இவ்வாழ்க்கைக்குரியசத்து, அதாவது, சந்ததிர்த்திக்கு ஏதுவாகிய விந்துவும்நஷ்டமாம், இது, மலைக்குள்ளிருந்து வருவதால், கல்லகச்சத்து என்றார். (௧௧௩௦)

நண்டுக்கல்லின்குணம்.

நீரருகல் நீர்அடைப்பு நீங்காப் பெருவயிறு
நீரொழுகு மேகம்வெட்டை நீங்குங்காண்-ஆரமிர்த்தே
ஐயம் அறுக்கும் அரியதொரு நண்டுக்கல்
செய்யும் குணமிதுவாந் தேர்.

இ-ள். நீரருகல், நீர்அடைப்பு, பெருவயிறு, நீரொழுகு மேக வெட்டை, ஐயமும்போம். (௧௧௩௧)

காவிக்கல்-கடல்நுரை-இவைகளின்குணம்.

அடலுாறற் காவிக்கல் அட்சிநோய் மேகம்
வெடிஅக்கி வாந்திபித்தம் வீழ்க்கும்-கடல்நுரையோர்

நேத்திர நோய்விரணம் நீடுகபங் குன்மம்இவை
தீர்த்திடுந்தப் பாமலெனச் செப்பு.

இ-ள். காவிக்கல்லுக்கு, கண்ரோப், மேகம், வெடிஅக்கி, வாந்தி பித்தமும்போம், கடல்நுரைக்கு, நேத்திரநோய், விரணம், கபம், குன்மமும்போம். (ககஙௗ)

நான்குவகைகிமிளைகளின்குணம்.

தாதுவை வளர்க்குந் தனிப்பித்தத் தைப்போக்கும்
ஓதுசந்நி பாதத்தை ஓட்டுங்காண்-ஓத
ஒருநா வுருதே யுயர் பொன்முதலாம்
ஒருநால் வகைகிமிளை யும்.

இ-ள். பித்தம், சந்நிபாதமும்போம், தாதுவிர்த்தி யுண்டாகும், கிமிளையாவது, பொன்வெள்ளி வெண்கலம் செம்பு. (ககஉங)

ஊதுசங்கின்குணம்.

கசிவாம் உரத்தபித்தங் கண்ரோய்கள் ஏகும்
பசியாரும் வாதம் பறக்கும்-இசிவுடனே
தாங்கு முளைவிரணந் தான் அகலும் ஊதுவெள்ளைச்
சங்கமது உண்டாகிற் றான்.

இ-ள். இரத்தபித்தம், கண்ரோய்கள், பசி, வாதம், முளைவிரண மும்போம். (ககஙச)

முத்துச்சிப்பியின்குணம்.

ஈளை விலகும் இருமல் குடியோடுங்
கோழை விழுகபநோய்க் கூட்டம்அறும்-நீள்உடலில்
கப்பி வருமேகக் கட்டிஐயமு போயமுத்தின்
சிப்பிதனைக் கண்டவிடத் தே.

இ-ள். ஈளை, இருமல், கபநோய்கள், மேகக்கட்டி, ஐயமும், போம். (ககஙரு)

தே-பலகறையின்குணம்.

மந்தந்தா கங்கிரணி மாவிடச்சு ரங்கண்ரோய்
தொந்தம் பரிநாமச் சூலையகம்-இந்த
உலகறையைக் காலொடிவை யோடுரைத்த
பலகறையைக் காணினியம் பார்.

இ-ள். மந்தம், தாகம், கிராணி, விஷசுரம், கண்ணோய், தொந்த நோய், பரிநாமச்சூலை, கயம், சிலேஷ்மவாதமும்போம். (ககாகூ)

சுக்கான்கல்லின்குணம்.

விரணந் தனைஆற்றும் வீறுசன்னி நீக்கும்
மரணஞ்செய் வாயுவையும் வாட்டுங்-கரணத்தில்
மிக்கான இன்பம்அருள் மெல்லியலே தூயவெள்ளைச்
சுக்கான் எனுங்கல்லது சொல்.

இ-ள். விரணம், சன்னி, வாய்வும்போம். (ககாஎ)

கலைமான்கொம்பின்குணம்.

அவயவத்தின் வெப்பம் அதிஅஸ்தி மேகம்
கவிழ்திரிதோ ஷம்பெருந்தா கங்கள்-இவைதான்
நிலைக்குமோ மார்புநோய் நேத்திரநோய் நீங்கும்
கலைக்கொம்பால் பேயும்இலை காண்.

இ-ள். உடல்வெப்பம், அஸ்திமேகம், திரிதோஷம், தாகங்கள், மார்புநோய், நேத்திரநோய், பேயும்போம். (ககாஅ)

சோகி-பீங்கான்-மிருகக்கொம்பு-பல்-எலும்புகளின்குணம்.

சோகிபீங் கான் அறுக்குந் துன்மாங்கி சம்தன்னைக்
கோகுதிரை ஒட்டை குரங்கம் உவா - வேகப்
பலமிருகப் பல்எலும்பும் பல்விழிநோய் தீர்க்கும்
நலமிலகு மாதே நவில்.

இ-ள். பலகரை - பீங்கானும் - துன்மாங்கிஷங்களை அறுக்கும், பசு-குதிரை - ஒட்டை - குரங்கு ஆனை முதலாகியபல மிருகங்களின் பல்-எலும்புகள் - விழிநோய்களைப்போக்கும். (ககாகூ)

பஞ்சலோகம்-ஐந்நெண்ணெய்-குதிரைக்குளம்பு.

கழுதைகுளம்பு-எருமைக்கொம்பு-இவைகளின்குணம்.

பஞ்சலோ கச்சார்வு பற்றறுக்குங் கண்ணோயை
அஞ்செண்ணெய் வாதசன்னி யைப்போக்கும்-விஞ்சு
குதிரை கழுதைக் குளம்பெருமைக் கொம்பும்
குதிரைவலி நீக்கும் குறி.

இ-ள். பஞ்சலோகத்துக்குக் கண்ணோப்போம், ஐங்தெண்ணெய்க்கு வாதசந்திபோம், குதிரை-கழுதை- இவைகளின்குளம்புக்கும் எருமைக்கொம்புக்கும், வலிபோம். (கக௪0)

சீலை-கம்பளம்-மயிலிறகு-இவைகளின்-சாம்பல்குணம்.

அஸ்திபிர மேகம்போம் ஆடைசுட்ட சாம்பலுக்குத்
தத்திவரு ரத்தந் தடைபடுங்காண் சத்தியமாய்க்
கம்பளச்சாம் பல்சந்நி காணும்மஞ்ஞைத் தோகைபஸ்பம்
கும்புவிக்கல் வாந்திகெடுக் கும்.

இ-ள். வஸ்திரஞ்சுட்டசாம்பலுக்கு-அஸ்திபிரமேகம்போம், இரத்தத்தடையுண்டாம், கம்பளச்சாம்பலுக்கு, சந்நிபோம், மயிலிறகுசாம்பலுக்கு, விக்கல், வாந்தியும்போம். (கக௪க)

தே-ஒட்டறையின்குணம்-இதனை-ஒட்டடை-என்பர்.

குட்டங் களநோப் குருதிமூ லம்பேதி
உட்டங்க சிரணம்உள் ளூருகுன்மங் - கெட்டசிரா
அற்புதம்புண் சிரசுரம் அற்பஅகி நஞ்சிவைகள்
புற்புதம்போல் ஒட்டறைபாற் போம்.

இ-ள். குஷ்டம், கழுத்துநோய், இரத்தமூலம்,பேதி,அசிரணம், குன்மம், சிராஅற்புதம், புண், சிதசுரம், சிறுபாம்பு விஷமும்போம்.

பாஷாணவகை.

தே-பாதரசத்தின்குணம்.

விழிநோய் கிரந்திகுன்மம் மெய்ச்சூலை புண்குட்
டழிகால்இல் விந்துவினல் அத்தை-வழியாப்
புரியும்விதி யாதும் புரியினே யெல்லாம்
இரியும்விதி யாது மிலே.

இ-ள். விழிநோய், கிரந்தி, குன்மம், சூலை, புண், குஷ்டம், வாதவியாதிகள், மற்றுந் தேகத்திலுள்ள வியாதிகளும்போம். (கக௪௩)

பாதரசதோஷத்தின்குணம்-வி-ம்.

கலைபைக் கிழிக்கும் அவிழ்த் தெறியுங்
கல்லைத் தேடி பெடுத்தெறியும்

மலையிற் குதிக்கும் புனல் மூழ்கும்
மருள்சேர் பித்தந் தனைக் கொடுக்கும்
உலையில் அனல்போல் உடல் வெதுப்பும்
ஓயா உழலை வியர்வாக்கும்
பலநா லமுமே வாய்பி தற்றும்
பாத ரசதோ ஷமுஇஃதே.

இ-ள். பித்தம், தேகவனல், நீங்காததாகம், வியர்வை, வாய்பித த்தலும் உண்டாம். (௧௧௪௪)

தே-ண்வகைந்தோஷம் நீங்காதபாதரசத்தின்குணம்-வெண்பா.

சர்ப்பவங்கங் கந்திவன்னி சாஞ்சலம்ம லங்காளம்
ஒப்பின்மந்தம் எண்தோஷம் ஓட்டிரதத்-தைப்புசியார்
கொப்புளங்குட் டங்கிஎரி கோதுவிந்தி ளைப்பிறத்தல்
அப்புளமூர்ச் சைக்கும்உரி யார்.

இ-ள் ரசத்துக்கு எட்டுவகைத்தோஷமுண்டு- அதாவதுசர்ப்பம் வங்கம், கந்தி, வன்னி, சாஞ்சலம், மலம், காளம், மந்தம், என்பவை களாம். இந்தத்தோஷத்தை நீக்காமல்உண்பவர்கள் கொப்பிளம் குஷ்டம், அக்கினி, எரிச்சல் கோதுபோன்ற தேகநிறம், விந்துநஷ்டம் மரணம், மூர்ச்சைஎன்கிற எட்டுவித ரோகங்களுக்கும் உரியர்கள் ஆவார்கள். (௧௧௪௫)

ரசாஞ்சனத்தின்குணம்.

அரியர சாஞ்சனத்தால் அம்புவியில் உள்ள
வரிவிழிநோய் எல்லாம் மறையும்-மருவி
வருகா மியவிரணம் மாதும்புண் ஆறும்
ஒருமா மயிலே உரை.

இ-ள். எல்லாகண்ணோயும், ஆண்குறிப்புண், புண்ணும்போம்.

ரசகர்ப்பூரத்தின்குணம்.

டைவாத சூலை எரிசூலை குன்மம்
நீர்டைவாழை வாதமாஞ் சோணி-இடையாதோ
ஒக்குரசு கர்ப்பூரம் ஒன்றே அளவொடுதல்
இக்குவெல்லத் தேபூநாள் ஈ.

இ-ள். சகனுவர்த்தவாதசூலை, பித்தச்சூலை, குன்மம்,தொடைவாழை, சோணிதவாதமும்போம். (கககஎ)

தே-சாதிலிங்கத்திற்குணம்.

பேதிசுரஞ் சந்நி பெருவிரணம் நீரொடுத
காதகடி காசங்கரப்பான்புண்-ஓத
உருவிலிங்க சங்கதமா பூறுகட்டியும்போம்
குருவிலிங்க சங்கமதைக் கொள்.

இதுவுமது.

ஆதி யிரதஉருக் காதலாற் சாதிலிங்கம்
ஓதில் இரதகுணம் உற்றுடலில்-திதுபுரி
குஷ்டங் கிரந்தி கொடுஞ்சூலை வாதமுதல்
உட்டங்கு நோய்களையோட்டும்.

இ-ள். பேதி, சுரம், சந்நி, விரணம், நீரோடுதல், கடி, காசம்,கரப்பான், புண், கட்டி, குஷ்டம், கிரந்தி, சூலை, வாதமுதலாகிய நோய்களும்போம். (கககஅ) (கககசு)

தே-சவ்வீரத்தின்குணம்.

குன்மமொடு குஷ்டம் கொடியஅனி லத்திரட்சி
துன்மாங் கிசப்பெருக்குஞ் சூலைநோய்-வன்மையுறு
காமியப்புண் ஆதியநோய் கண்டாற்சவ் வீரனெனுஞ்
சாமியின்கா மத்தையுச் சரி.

இ-ள். குன்மம், குஷ்டம், வாதக்கூட்டம், துன்மாங்கிசம், சூலைநோய், புண்ணும்போம். (ககஞ0)

நெல்லிக்காய்க்கந்தகத்தின்குணம்.

நெல்லிக்காய்க் கந்திக்கு நீர்பதினெண் குஷ்டமந்தம்
வல்லை கவிகைதுன்ம வாயுகண்ணோப்-பொல்லா
விடக்கடிவன் மேகநோய் வீறுசுரம்பேதி
திடக்கிரக ணிகபம்போக் தேர்.

இ-ள். யஅ-வித குஷ்டம், மந்தம், வல்லைக்கட்டி, துன்னமகோதரம், குன்மம், வாயு, கண்ணோப், விஷக்கடி, மேகநோய், சுரம், பேதி, கிராணி, கபமும்போம். (ககஞக)

வாணக்கந்தகத்தின்குணம்.

வாணக்கு மூக்கந்தி வாசனையைக் கண்டவுடன்
காணக் கிருமிசொறி காணுவாம்-தோணும்
பொருவியா திக்கூட்டம் பெருமதன் றூலில்
மருவியா மூங்கொடியே வாழ்த்து.

இ-ள். கிருமி, சொறி, பெருவியாதிக்கூட்டமும்போம். ()

தாளகத்தின்குணம்.

தாளகத்தின் பேருரைக்கத் தாலுகவுள் நோய்குஷ்டம்
நீளக் குளிர்காய்ச்சல் நீடுகபம்-தாளகங்கொள்
துஷ்டப் பறங்கிப்புண் சூழ்அழுகண் மண்டைநோய்
கிட்டப்படுமோ கிளத்து.

இ-ள். நாக்குநோய், கபோலநோய், குஷ்டம், குளிர்காய்ச்சல், கபம், பறங்கிப்புண், அழுகண், மண்டைநோயும்போம். (௧௧௫௩)

சிவந்தஅரிதாரத்தின்குணம்.

சிவந்தஅரி தாரம்அது செஞ்சிலைபோற் காட்டும்
உவந்ததனை யுண்முறையோ டுண்டால்-இவர்ந்தாழ்
சுரங்குளிர்மா வாதம்உடற் சூலைநமை குஷ்டம்
இரங்குமென் நாளும் இசை.

இ-ள். சுரம், குளி, ர்வாதம், உடல்சூலை, நமைகுஷ்டமும்போம்.

மடல்அரிதாரக்கரடு-மனோசிலை-இவைகளின்குணம்.

மடலரிதா ரத்தில் வருங் கரடி ரண்டும்
உடல்விஷங் களைக்களையும் உண்மை-கொடியகுஷ்டம்
காய்ச்சல் நடுக்கல்அஜ சல்லிஇரைப் புச்சிலந்திப்
பேச்சறு மனோசிலைக்குப் பேசு.

இ-ள். காட்டுக்கு உடலிலுள்ளவிஷங்கள்போம், மனோசிலைக்கு குஷ்டம், காய்ச்சல், நடுக்கல், அஜகல்லிகாரோகம், இரைப்புசிலந்தி, யும்போம். (௧௧௫௫)

மடலரிதாரத்தின்குணம்.

ஈளையுடனே யிருமல் குடிவிலங்கு
கோழை மலம்அகலும் கொம்பனையாய்-நாளும்

அடவுறுகயங்கரப்பான் ஆறுப்புண்ணும்போம்
மடலரிதாரத்தை மதி.

இ-ள். ஈளை, இருமல், கோழை, மலம், கயம், கரப்பான், ஆறுப்புண்ணும்போம். (கசுருசு)

அரிதாரத்தின்குணம்.

காசமுடனே கயநோய் கபவாதம்
பேசரிய குன்மம்எட்டும் பேருங்காண்-மாசகன்று
நிற்று மதிநுதலே கேள்ஆயுள் வேதம்அது
சாற்றும் அரிதாரத் தால்.

இ-ள். காசம், கயநோய், கபவாதம், எட்டுவிதக் குன்மமும் போம். (கசுருஎ)

பொன்அரிதாரத்தின்குணம்.

மந்தாரத் தாலே வளருஞ் சுவாசநோய்
உந்திவரு பித்சுரநோய் ஓடுங்காண்-முந்து
தொனிக்கயஞ்செய் யான்கடியுந் தோற்குஷ்டம் வகுந்
தனிப்பொன் அரிதாரத் தால்.

இ-ள். சுவாசநோய், பித்தசுரம். கயம், செய்யான்கடி, சருமதள குஷ்டமும்போம். (கசுருஅ)

மிருதாரசிங்கியின்குணம்.

மிருதார சிங்கெனவே மெல்லவுரைத் தாலும்
உருவார் புடைகரப்பான் ஓடும்-ஒருவிதமோ
சாலச் சிரங்குபுண்ணுந் தப்பாமல் ஆறிவிடும்
வேலொத்த கண்மயிலே விள்.

இ-ள். கரப்பான், சிரங்கு, புண்ணும்போம். (கசுருகூ)

வெள்ளைபாஷாணத்தின்குணம்.

வெள்ளைப்பா ஷாணம் விஷக்கடிநீ ருப்பூசக்
கொள்ளைச் சுரந்தோஷங் கோரசந்நி-தொள்ளையுறு
நாசிப்புண் வாய்ப்புண் நன்னெரந்தி போமுண்ணை
ஆசிக்கும் கும்பமுலை ஆய்.

இ-ள். விஷம், கடி, சுரதோஷம், சந்நி, நாசிப்புண், வாய்ப்புண், கிரந்தியும்போம். (ககசுo)

கௌரிபாஷாணத்தின்குணம்.

ஆவுரியொடு பாகல்இவை யாற்சுத்தி செய்த
கவுரிபா ஷாணத்தைக் கண்டால்-சவுரியஞ்செய்
வாதநோய் மந்தமொடு வந்த சுரங்கள்எல்லாம்
காதிவிழுந் தோடும்எனக் காண்.

இ-ள். வாதநோய், மந்தம், சுரங்களும்போம். (ககசுக)

நீலாஞ்சனபாஷாணத்தின்குணம்.

சந்நிசுரம் மேகம் சயந்தாகம்-நேத்திரநோய்
வன்னிரச வேகம் மறைவதன்றி-மன்னுடலம்
விஞ்சு குளிர்ச்சியொடு வீறழகு காந்தியுமாம்
அஞ்சனக் கல்லுக் கறி.

இதுவுமது.

வாரிறுக்கும் பூண்முலையாய் வாய்த்தநீ லாஞ்சனத்தால்
நீருறத்துங் கண்ணோய் நிலைகெடுங்காண்-பாரினிலே
எல்லாச் சுரமும் இரத்தபித்த தோஷமுதற்
பொல்லா அறுபுண்ணும் போம்.

இ-ள். சந்நி, சுரம், மேகம், சயம், தாகம், நேத்திரநோய், ரசவேகம், கண்ணோய், எல்லாசுரம், இரத்தபித்ததோஷம், வெட்டுக்காயமும்போம், குளிர்ச்சி, அழகு, காந்தியும் உண்டாம். (ககசுஉ)

தொட்டிப்பாஷாணத்தின்குணம்.

தொட்டிப்பா ஷாணமெனச் சொன்னால்சுரங்கிரந்தி
எட்டிப்பார்க் காவாம் இடருறத்தக்-கிட்டிவரு
வாயுவின் றன்பெருக்கும் மந்தம்முளைக் கட்டியும்போம்
ஆயினது வாதவித்தைக் காம்.

இ-ள். சுரம், கிரந்தி, வாயு, மந்தம், முளைக்கட்டியும்போம், வாதவித்தைக்கு ஆகும். (ககசுந)

பஞ்சபாஷாணத்தின்குணம்.

பஞ்சபா ஷாணமெனப்பாரில்உரைத் திட்டாலும்
வெஞ்சதை ஆணிபுற்றும் வீழுங்காண்-விஞ்சிவளர்
கண்புற்றுத் திரும்அதி காய்ச்சல்குளிர் மேகம்போம்
பண்புற்ற மாதே பகர்.

இ-ள். தன்மாங்கிசம், ஆணிபுற்று, கண்புற்று, காய்ச்சல், குளிர் மேகமும்போம். (௧௧௬௭)

நவபாஷாணத்தின்குணம்.

நவபாஷா ணந்தன்னை நற்சுத்தி செய்தங்
குவகையாய்ச் சிந்தூரித் துண்டால்-நவமாகக்
காயம் இறுகுங் கனத்தரோ யும்போகும்
மாயும்நோய்எல்லாம் மதி.

இ-ள். எல்லாரோய்களும்போம், உடல்இறுகல் உண்டாம். ()

உலோகவகை.

தே-பொன்னின்குணம்.

அடற்ரு வரவிடங்கள் அங்கஒளி மங்கல்
கடத்தாமுத் தோடகயங் காசம்-உடற்ருபஞ்
சேகையிருந் தாதுநஷ்டந் திட்டிநோய்ஈளைஇவை
ஈகையிருந் தால்ஏகும்எண்.

இ-ள். தாபரவிஷங்கள், தேகஒளிமங்கல், முத்தோஷம், கயம், காசம், உடல்தாபம், ஐயம், தாதுநஷ்டம், கண்ணோய் ஈளையும் போம். (௧௧௬௮)

தே-வெள்ளியின்குணம்.

பாய்க்கூட்டல் காட்டாப் பழையசுரந் தாருவிடம்
வாய்க்கூட்டச் செய்மேக வாதமுதல்-நோய்க்கூட்டம்
அண்டாது காணிகொளும் அத்திமே கக்கசிவும்
வெண்டாது காணிமெய்யை மேல்.

இதுவுமது.

இரத்தம் கயம்பித்தம் ஈளை கண்ணோய்காசம்
உரத்தையம் அஷ்டகுன்மம் வாதை-வருத்தும்

விரணஞ் சிலேஷ்மநோய் மெய்ப்புரிபுண் ஊரல்
மரணமுறும் வெள்ளியினால் வாழ்த்து.

இ-ள். பழையசுரம், தாபரவிஷம், மேகவாதம், அஸ்திமேகம், இரத்தக்ஷயம், இரத்தபித்தம், ஈளை, கண்ணோய், காசம், ஐயம், அஷ்டகுன்மம், ஊதை, விரணம், சிலேஷ்மநோய், புண், ஊரலும் போம், தாதுவிர்த்தியுண்டாம். (ககசுஎ) (ககசுஅ)

தாம்பரத்தின்குணம்.

தாம்பரத்தாற் சோரிபித்தம் சந்நி மருவைக்கபம்
விம்பாற்பி லீகமந்தம் வெண்மேகந்-தேம்பழலை
சூதகநோய் புண்கிரந்தி தோஷசுவா சங்கிருமி
தாதுநஷ்டங் கண்ணோய்போம் சாற்று.

இ-ள். இரத்தபித்தம், சந்நி, கபம், பிலீகம், மந்தம், வெண்மேகம், அழலை, சூதகநோய், புண், கிரந்தி, சுவாசதோஷம், கிருமி, தாதுநஷ்டம், கண்ணோயும்போம். (ககஎ௦)

பித்தளையின்குணம்.

தாதுவிர்த்தி யுண்டாகுந் தாபச் சுரம்போகும்
சீதளமும் வாதம் சிதையுங்காண்-பூதலத்துள்
மாட்டியதோர் பித்தகுன்மம் மாறும் மலர்த்திருவே
நாட்டியதோர் பித்தளையி னால்.

இ-ள். தாபச்சுரம், வாதசீதளம், பித்தகுன்மமும்போம் தாதுவிர்த்தியுண்டாகும். (ககஎக)

வெண்கலத்தின்குணம்.

நேத்திரநோய் சோமவினை நீர்ப்பெருக்கி ரத்தபித்தம்
வீழ்த்துசுவா சம்மந்தம் மேகங்கால்-ஆழ்த்துகபம்
வாதவலி சூலை மகோதரம்போம் பித்தமொடு
தாதுவும்ஆம் வெண்கலத்தாற் சாற்று.

இ-ள். நேத்திரநோய், சோமநோய், நீரிழிவு இரத்தம் சுவாசம், மந்தம், மேகம், வாய்வு, கபம், வாதவலி, சூலை, மகோதரமும், போம், பித்தம், தாதுவிர்த்தியும் உண்டாம். (ககஎஉ)

தாவின்குணம்.

சூலையொடு மேகம்இவை தோன்ருமல் ஓட்டிவிடும்
மேலைவரு காலை விலக்குங்காண்-ஆல
அராமே விபவல்குல் ஆரணங்கே வெட்டைத்
தராவெனும் உலோகம் அது தான்.

இ-ள். சூலை, மேகம், வாய்வும்போம். (ககஎங)

வெள்ளியத்தின்குணம்-இதுவே-வெண்ணாகம்.

தாகங் கரப்பான் சலமேகம் பித்தகபம்
மேகம் ஒளிமங்கல் வெப்பபலம்-மாகிரந்தி
துள்ளியமர் தார சுவாசமும்மந் தாக்கினியும்
வெள்ளியம் போக்கும் விதி.

இ-ள். தாகம், கரப்பான், சலமேகம், பித்தகபம், மேகம், ஒளி மங்கல், வெப்பு, அபலம், கிரந்தி, மந்தாரசுவாசம், மந்தாக்கினியும் போம். (ககஎச)

தே-காரியத்தின்குணம்-இதுவே-கருநாகம்.

பன்மாஞ் சக்கிநோய் பாகர்த் தபிவிரணங்
குன்மங்கால் சூலங் குதவிரணஞ்-சன்மப்
பெருநாக மேகப் பிணிசுரம் இவற்றைக்
கருநாக மோக்குங் காண்.

இ-ள். தாவரவிஷம், கண்ணோப், கர்த்தவிரணம், குன்மம், காலசூலம், ஆசனப்புண், மேகப்பிணி, சுரமும்போம். (ககஎரு)

துத்திநாகத்தின்குணம்.

மேகங் கிளர்ப்பேதி வெட்டைஅழ லைத்தணிக்கும்
வேதங்கி ராணி விலக்குங்காண்-போகாப்
பரியமுளைப் புண்ணும் பயித்தியமும் போக்கும்
அரியதுத்தி நாகம் அது.

இ-ள். மேகம், பேதி, வெட்டை, அழலை, கிராணி, முளைப்புண் பயித்தியமும்போம். (ககஎசு)

இரும்பின்குணம்.

பாண்டுவெண் குஷ்டம் பருந்தூல நோய்சோபை
மாலையுடச்செய் மந்தங்கா மாலைகுன்மம்-பூண்ட

பெருந்தாது நட்டமும்போம் பேதிபசி யுண்டாங்
கருந்தாது நட்டமிடுங் கால்.

இ-ள்- பாண்டு, வெண்குஷ்டம், சூலநோய், சோபை, மந்தம், காமாலை, குன்மம், தாது நஷ்டமும்போம், பேதி, பசியும் உண்டாம்.

தே-எஃகுவின்குணம்.

தந்தமந்த மூலவுரு தாதுநட்டஞ் சோபைகண்ணோய்
வந்தமந்தம் பாண்டுவினை வன்மைகுன்றல்-முந்தப்
பெருக்கிடைபாய் நீட்டுகப பேதம்இவைகட்
குருக்கிடையா தோட்டும் உரை.

இ-ள். தந்தமந்தம் தாதுநஷ்டம், சோபை, கண்ணோய், மந்தம், பாண்டு, பலகுறைச்சல், கபமும்போம். (௧௭௮)

காந்தத்தின்குணம்.

சாந்தத்தாற் சோபைகுன்மம் காமிலம்மே கம்பாண்டு
சேர்ந்ததிரி தோஷம்வெட்டை சீதம்கால்-ஓந்தபசி
பெருதரங் கண்ணோய் தாமியம்நீர் ஆமையும்போம்
ஓரினிறை ஆயுள்உறும் உன்.

இ-ள். சோபை, குன்மம், காமிலமேகம், பாண்டு, திரிதோஷம், வெட்டை சீதம், வாயு, பசி, பெருவயிறு, கண்ணோய், பிரமியம், நீராமையும்போம், ஆயுர்விர்த்தியுண்டாம். (௧௭௯)

மண்டூரத்தின்குணம்-இதுவே-கிட்டம்.

கிட்டமென்றாற் சோபை கிளைவீக்கம் அஸ்திசுரந்
துஷ்டவிஷ பாகஞ்சு வாசம்ஐயங்-கெட்டசெரடும்
பாண்டிருமல் நீர்ஆமை பாழும் பிரமியமுந்
தாண்டிவிடும் உண்டிரத்த தாது.

இ-ள். சோபை, வீக்கம், அஸ்திசுரம், விஷபாகம், சுவாசம், ஐயம், பாண்டு, இருமல், நீர்ஆமை, பிரமியமும்போம், இரத்ததாது உண்டாம். (௧௮௦)

நவரத்தினவகை.

மாணிக்கத்தின்குணம்.

சுரரோகம் சந்நிகளின் தோஷம்அதி தாகம்
உரமான மேகம் ஒழியும்-திரமாக

ஊணிக்கொள் நேத்திரநோய் ஓடும்அூ வின்றவொளி
மாணிக்கத் தால்வசியம் ஆம்.

இ-ள். சுரரோகம், சந்நிகளின்தோஷம், தாகம், மேகம், நேத்திரநோயும்போம், வசியம் உண்டாம். (ககஅக)

வச்சிரத்தின்குணம்-இதுவேவயிரம்.

ஆறுவித மாப்வயிரம் அவ்வவற்றுள் மாரசங்கள்
வீறி நிலைத்திருக்கும் மேன்மைபினுல்-கூறும்அவைக்
கெப்பிணியும் நீங்கும் இணையில் வனப்புமுண்டாம்
செப்பணியு மாமுலையாய் செப்பு.

இ-ள். எல்லாநோவும்போம், அழகு உண்டாம். (ககஅஉ)

வயிடூரியத்தின்குணம்.

சீதவா தத்தொடுசி லேஷ்மம் புளிவப்பம்
காதுசூ லைப்பிணிக னத்தகுன்மம்-ஓதுபித்தம்
என்றுரைக்கும் நோய்கள்அறும் எப்போதும் தோஷம்இலை
நன்றுவயி டூரியத்தி னல்.

இ-ள. சீதவாதம், சிலேஷ்மம், புளிவப்பம், சூலைநோய், குன்மம், பித்தமும்போம் தோஷமில்லை. (ககஅ௩)

கோமேதகத்தின்குணம்.

வாதபித்த கோபத்தை மாற்றுமலக் கட்டறுக்கும்
ஓதுமந் தாக்கினியை ஓட்டுங்காண்-மீதில்
அழகருசி காரம் அகற்றும்ஒளி செய்யும்
கழறுகின்ற கோமேத கம்.

இ-ள். வாதபித்தம், மலக்கட்டு, மந்தாக்கினி, பித்தவிகாரமும்போம், அழகு உண்டாம். (ககஅச)

புட்பராகத்தின்குணம்.

வீரிய விர்த்தியது மென்மேலும் உண்டாகுஞ்
சூரியநற் புத்திபுண்டாங் கூறுங்கால்-பாரில்
பிணிவருக்கம் ஏகும் பெரும்புட்ப ராக
மணியாற் புகழும்உண்டாம் வாழ்த்து.

இ-ள். எல்லா நோயும்போம், வீரியவிர்த்தி, புத்தி, புகழும் உண்டாம். (ககஅரு)

பவளத்தின்குணம்.

சுரதோஷம் ஐயமுத் தோஷசுரங் காசம்
அருசிகீ டந்தால்ஆம் ஆலம்-பெருவிந்து
நட்டம் அதிதாகம் நாவரட்சி போம்ஒளிவுங்
கிட்டும் பவளத்தாற் கேள்.

இ-ள். சுரதோஷம், ஐயம், முந்தோஷம், சுரம், காசம், அருசி, புழுவிஷம், விந்துநஷ்டம், தாகம், நாவரட்சியும்போம், ஒளிவுஉண்டாம். (ககஅசு)

முத்தின்குணம்.

அஸ்திசுரம் சோபை அருசிதுர்ப்ப லம்கண்ணோப்
பித்தவிஷஞ் சீதளநோய் பேசுசுபம்-சுத்தத்
தயிரியநஷ் டத்தோடு தாதுநஷ்ட மும்போம்
உயிருறுகன் முத்திருந்தால் ஓது.

இ-ள். அஸ்திசுரம், சோபை, அருசி, துர்ப்பலம், கண்ணோப், பித்தவிஷம், சீதளநோய், கபம், தயிரியநஷ்டம், தாதுநஷ்டமும் போம். (ககஅஎ)

மரகதத்தின்குணம்.

தாதுதரும் பூதபை சாசந் தமைஓட்டும்
மீதுவரு புண்ணை விலக்குங்காண்-தீதுபுரி
நச்சை யகற்றும நலிமதுமே கம்போக்கும்
பச்சை யதுமதுரம் பார்.

இ-ள். பூதபைசாசம், புண், விஷம், மதுமேகமும்போம், தாது உண்டாம். (ககஅஅ)

நீலத்தின்குணம்.

குதிவலிமே கம்பித்தங் கூறரிய பாண்டு
மதியயக்கம் எல்லாம் மருளும்-மதிநுதலே
புத்தியொடு மேன்மேலும் போகசுகம் உண்டாகும்
சுத்தநறும் நீலத்தாற் சொல்.

இ-ள். குதவலி, மேகம், பித்தம், பாண்டு, மதிமயக்கமும்போம் புத்தி, போகம், சுகமுண்டாம். (ககஅகூ)

வைத்தியாங்கம்.

தே-மருத்துவன்குணம்-கழிநெடில்-வி-ம்.

தெய்வவுபா சனைநூ லெல்லை காண்டல்
  திரிகரண சுத்தி பன்றேப் தீர்த்தநாளு
நைவகன்ற திரமதி நட்பஞ் சான்றோர்
  நட்பொழுக்க மேன்மைகுண மன்புள்ளானய்
மெய்வசதை விகலையணங் குறைபதார்த்த
  விதியுடர்கா தாரமட லங்கிமாந்தல்
கைவருமென் பேதமெலா முணர்ந்துற் றுணய்க்
  காணிலந்த மருத்துவன்கைக் காணியுண்ணே.

இ-ள். தேவதா உபாசனை-பலசாஸ்திரங்களை ஆதியோடந்த மாக ஆராய்ச்சிசெய்து அறிகுதல்-மனம்-வாக்கு-காயம்-என்னும்திரிகரண சுத்தி-பலவியாதிகளைத்தீர்க்குதல்-எந்நாளும் வியாதியைக்கண்டு அஞ் சாததிரத்துவம்-மிகுந்தபுத்தி நட்பம்-பெரியோர்களுடைய சிநேகம்-ஆசாரம்-மேம்பாடு-நல்லகுணம்-அன்பு-இத்தன்மைகளை யுடையவனு இப்-பிணியாளனுடையதேகம்-தேசம் - காலம்-ரோகம்-அவுஷதம்-பதார்த்தகுணம்-சரீரத்துக்கு உள்ள ஆதாரம்-உதராக்கினி-தேகபலம்-ஆகாரம்-கைபாகம்-செய்பாகம்-இன்ன ரோகக்கு-இத்தனைநாள் அவுஷதங் கொடுக்கவேண்டுமென்கிற-காலஅளவு-என்னும் இப்பேதங்களையெல்லாம்- அறிந்திருப்பவனுகத் தெரிந்தால் அந்தவைத்தியன் கொடுக்கும்-சஞ்சீவிவிய ஒத்தமருந்தை உண்ணக்கடவை-எ-று. சரீரத்துக்குள்ள ஆதாரபேதமாவது(வாதம்-பித்தம்-சிலேஷ்மம் - ரசதாது-ரத்ததாது-மாமிசதாது-மேதோதாது-அஸ்திதாது - மச்சைதாது-சுக்கிலதாது-மலம்-மூத்திரம்) என்னும் இப்பன்னிரண்டுமாம்-உதராக்கினி பேதமாவது (சமாக்கினி-விஷமாக்கினி - தீக்ஷணாக்கினி-மந்தாக்கினி) என்னும் இந்நான்குமாம்-தேகபலமாவது- (சகசபலம்- காலபலம்-யுத்திகிருதபலம்) என்னும் இம்மூன்றுமாம். இப்பேதங்களின் விவரத்தை ஜீவரக்ஷாமிர்தம்-என்னும் - சகலரோக நிதானசாத்திரத்தில் தோஷபேத படலத்தில் காண்க. (கககூ)

தே-கைபார்த்தமருத்துவன்நடத்தை-வெ-பா.

கன்மருவு நோயதைமுக் கல்டொழி லுற்றறிந்தார்
தன்மநீ ராடற் சுதத்துடனெட்-டின்மையெனி
லங்கைபதந் தூய்மையின்றே லங்குலிபூ வெற்றலின்றேற்
காங்கை பதம்புனிறு காண்.

இ-ள். நோயானது கர்மரூபமாகையால் அந்தநோயை மூன்று விரலைக்கொண்டு பிணியாளனுடைய கைமுதலாகிய தசவிதநாடிஸ்தானங்களையும் தொட்டறிந்து அதுவுமன்றி அஷ்டவித பரீக்ஷையினுலும் அறிந்த மருத்துவர்கள் முக்கியமாக நடந்துகொள்ளதக்க ஒழுக்கமாவது-நூற்றெட்டுஸ்நானஞ்செய்தால் அல்லது கைகால்களைச் சுத்திசெய்தல்-அவ்விரலைப் பூமியில்தட்டுதலாம் இப்படி செய்யாவிட்டால் சகல பாவங்களையும் நிவர்த்திசெய்யுங் கங்காநதியை யொத்த வைத்தியருக்கும் பக்குவமாகச் செய்யப்பட்டிருக்கிற அவுஷதங்களுக்கும் ஆசூசம்உண்டாம்-எ-று. கண்போலதெரிவிக் கின்றமையால் விரலைக்கண்ணென்றார்-இவ்வொழுக்கமில்லாத வைத்தியர்கள் கைமருந்து பிணியைநீக்காதென்பதுகருத்து. (கககூக)

தே-பிணியாளன்குணம்-கழிநெடில்-வி-ம்.

அருப்பமுறி னரசெனினுந் தீர்ப்பானைக்கண்
டழைத்தவனை யாதியரு மவனென்றோர்தல்
விருப்பமுறத் தவிசிருத்தன் மெய்யன்பாடல்
வேண்டுடலீந் திடலுறையேற் றுண்டலத்தைத்
திருப்பவருந் துயராற்றல் சாதங்கூறற்
செப்புளொடுங் கற்பன்மகுந் தொழித்தலூழா
மிருப்பகற்று முறைகுயிற்ற லிவையுள்ளானே
லிவனுமம் புகலுநர்க்கு மின்றுநோயே.

இ-ள். இராஜனேயானுலும் தனக்கு வியாதிசம்பவித்தால் வைத்தியரை உபசாரத்துடன் அழைப்பித்தல் தாய்-தந்தை-குரு-தெய்வம் நமக்கு இந்தவைத்தியரே என்றுநினைக்குதல் விருப்பம் உண்டாகும்படி ஆசனங்கொடுத்து இருக்கச்செய்தல்-உண்மையான அன்புவைத்தல்- அவுஷதத்துக்குவேண்டியதிரவியங்கொடுத்தல்-அவர்கொடுக்கின்ற மருந்தை இரண்டுகையினுலும் வாங்கிக்கொண்டு உண்ணுதல்அவு

ஷ்தத்தை வேண்டாமென்று மாற்றும்படி உண்டாகும்வருத்தத்தைச் சகித்துக்கொள்ளுதல்-அவுஷதஞ் சாப்பிடுதலினால் தனக்குஇருக்கும் குறைகுணங்களை உண்மையாகசொல்லுதல்-அன்றியும் அவர்சொல்லுக்குள் அடங்கியிருத்தல்-கண்ட கண்ட அவுஷதங்களை உண்ணாமல் நீக்குதல்-பூர்வகர்மத்தினால் வியாதி சம்பவிப்பதாதலால் அந்தக் கர்மத்தை நிவர்த்திசெய்துகொள்ளுதல்-என்னும் இந்தக்குணங்களை உடையவனாகயிருப்பானானால் இவன்பேரை உச்சரிப்பவருக்கும் வியாதி அணுகாது-எ-று. இந்தவிபரங்களையெல்லாம் சிகிச்சாசாரம் என்னும் சாத்திரத்திற்காண்க. (ககசுஉ)

தே-பாகஞ்செய்வான்குணம்-வெ-பா.

பிணியர்க ளிடக்குளத்தை யொப்ப
ரணியிற் சிறந்தநட்ப ராம்பற்-பணிகர்க்குட்
டொப்புறைவை யுண்மைமிகு தூய்மையிவை யார்ந்தாரை
யொப்புறைவை யாடற் குவந்து.

இ-ள். பிணியாளர்க ளிடத்திலிருந்து அவுஷதபாகஞ் செய்கின்றவர்கள் அவர்களுக்கு உரிமைஉள்ளவர்களும் மிகுந்தநன்மையுள்ளசிநேகரும் வைத்தியர்மனதை ஒத்தவர்களுமாயிருக்க வேண்டும், அத்தன்மையர்க ளில்லாதபக்ஷத்தில் மற்றஏவலாளிகளுக்குள் தேகபலம்-பிணியாளர்களுடைய ஆயுசுவிர்த்தியை விரும்புதல்-புத்தி நுட்பம்-சத்தியம்-உள்ளும்புறம்பும் பரிசுத்தம்-என்னும் நற்குணம் உள்ளவர்களைப் பரிசோதித்து அவுஷதபாகஞ்செய்ய வைத்துக்கொள்ள வேண்டும்-எ-று. (ககசுங)

கலுவங்களின்குணம்.

கருங்கற்கல் வுத்தவுழ்தங் காணில்உடற் கின்பாம்
செருங்கிரத்தக் கல்தோஷம் நீக்கும்-ஒருங்குவெள்ளைக்
கன்மருந்தோ வீரமொடு காரமும்இல் மஞ்சள்அம்மி
யின்மருந்தோ நோய்விலக்கா எண்.

இ-ள். கருங்கல்லுக்கு உடலுக்கின்பம் உண்டாம், சிவந்தகல்லுக்கு தோஷம்போம், வெள்ளைக்கல்லுக்கு வீரம்-காரமும்போம், மஞ்சள்கல்லுக்கு நோய்போகாது. (ககசுச)

தே-மருந்தினதுபக்குவாபக்குவகுணம்.

பக்குவபா கத்தாலுயுறு பஞ்சின்மருந் தும்பிழை
பக்குவபா கந்துப் பருமருந்து-மெய்க்குறுங்கா
லக்கால மும்பருணு மாழிமருந் துஞ்சேடன்
கக்கால முப்பொருந்துங் காண்.

இ-ள். லகுவான முறைபினுற் செய்யப்பட்ட அவுஷதங்களேயா ணு லும் பக்குவபாகத்தைப் பொருந்துமானுல் தேவர்களுண்ணத் திருப்பாற்கடலில் உண்டான இமிர்தத்துக்கொப்பாம், கனமானமுறையினுற் செய்யப்பட்ட அவுஷதங்களேயாணுலும் செய்பாகங் கெடுமானுல் அக்காலத்தில் ஆதிசேஷன்கக்கிய விஷத்துக் கொப்பாகும். எ-று. (கககூரு)

தே-மறுபாககுணம்.

பாகமொடட் டிக்குளிர்ந்த பாணியிர சாயனநல்
வேகவிலே கங்குடிநீர் மெய்ச்சுரசம்-வகுமிரா
மீந்தவெஞ்ச ணுதிகளை மீளவொருக் கலட்டி
மாந்தநஞ்சம் வேறிருக்கு மா.

இ-ள். மாந்தம், விஷமும் உண்டாம். (கககூசு)

மருந்துவைக்கும்பாத்திரத்தின்குணம்.

தெங்கின் குடுக்கை திகிரிதந்தப் பாத்திரத்தார்
நன்கிராப் புன்மருந்தும் நன்மருந்தாம்-வெண்கலத்தால்
மையிரும்பால் கட்டைகளால் மாக்கொம்பால் பாத்திரங்கள்
செய்யினிரண் டாம்பட்சம் செப்பு.

இ-ள். தேங்காய்குடுக்கை-மூங்கில்பரணியும் உத்தமம், வெண்கலம்-இரும்பு-மரம்-மிருகக்கொம்பு-இதுகளில்செய்தபாத்திரம் மத்திமம். (கககூஎ)

தே-மருந்தூட்டும் பாத்திரபேதம்.

வாதமுதன் முப்பிணியோர் வைத்துறையுண் பாத்திரத்தின்
பேதமுறை யேகேள் பெருங்கஞ்சம்-சாதகும்பந்
தாம்பரமா மின்றென்னிற் சக்கிரிகைப் பாத்திரம்நன்
றும்பரமா யுட்கொடுக்கு மாங்கு.

இ-ள். வாதமுதலாகிய மூன்றுபிணியாளருக்கும் வெண்கலம், பொன்-தாம்பரம்-இந்தபாத்திரங்கள் உத்தமம், இல்லாவிட்டால் மண் பாத்திரம் நல்லது. (ககசூஅ)

தே. மருந்தூட்டுங்காலம்.

அனிலமோ யர்க்கசன மாகாமுன் பித்தத்
துனிபர்க் கசனநடு தூயை-யெனுநோயர்க்
காகாரப் பின்னு மருந்திலுறை யப்பிணியாற்
சாகாரப் பின்னுலகிற்றான்.

இ-ள். வாதரோகிகள் போஜனஞ் செய்வதற்குமுன்னும் (பித்த ரோகிகள் பாதிபோஜனஞ் செய்தவுடனும்) சிலேஷ்மரோகிகள் போஜனஞ் செய்தபின்னும் அவுஷதம் உண்ணக்கொடுத்தால் அந்தவியாதியினாலே சமுத்திரஞ்சூழ்ந்த உலகத்தில் அவர்கள் இறக்கார்கள்-எ-று.

தே-மருந்தருந்தியபின்புவாயிலிடும்வஸ்துக்கள்.

சிவற் கனமதுதி ராட்டைதும்பை மூக்குகிராம்
பூவற் சரநெற் பொரிசசித்தூள்-பூவி
விருந்துண்ட நீர்மைகுன்று தோற்றமேன் மக்கன்
மருந்துண்ட வாய்க்கிவையா மால்.

இ-ள். கொட்டைப்பாக்குச்சிவல்-நாகப்பூ-தேன் - திராட்சைப்பழம்-வெற்றிலைக்காம்பு-கிராம்பூ-ஒருவருஷஞ்சென்ற நெல்லின்பொரி-பச்சைக்கர்ப்பூரத்தூள் - என்னுமிவைகள் உண்ட அவுஷதத்தின்தன்மையைக் கெடுக்காத வஸ்துக்களாதலாலும் அவுஷதச் சுவைகளின் வெகுட்டினால் செந்தாமரைமலரைபொத்த முகங்களின் சுபாவத்தன்மை மாறுமலிருக்கும்படி செய்யத்தக்க வஸ்துக்களாகையாலும் அதுகளில் ஏதாவதொன்றை மருந்துண்ட வாய்க்குக்கொஞ்சங் கொடுக்கக்கடவை-எ-று. (க௨00)

தே-உறக்கம்நீக்கிமருந்தூட்டும்உபாயம்.

வேசையர்கூத் தொன்றொழித்த வேறுவேறுங்கூத்தால்
ஆசியத்தால் கீதத்தால் அற்புதத்நால்-வீசுபகல்
தூக்கமருள் நீக்கிபுறை துப்பித்த ணங்கையுள்ளார்க்
கூக்கமருள் வார்மருத்து வர்.

இ-ள். தாசிகளின்கூத்து அல்லாமல் இதரமான கூத்துகளாலும் அகசியத்தினாலும்-சங்கீதமேளவாத்தியவினோதங்களாலும், பிரகாசம் பொருந்திய பகல்நித்திரையைநீக்கி-அஜீர்ணத்தை-உணர்பித்தல் வியாதியால்வருத்தப் படுகிறவர்களுக்கு அத்துன்பமில்லாமல்நீக்கி பலத்தைக்கொடுக்கிற பண்டிதர்களின்செய்கையாம். (கஉ0க)

தே-சிகிச்சையின்பேதம்.

சூதகந்தி தாதுபஸ்பஞ் சொர்ன்னநாட் டார்சிகிச்சை
ஓதரிய மூலியிம்மண் ணூர்சிகிச்சை-வேதடரும்
சத்திரக்ஷா ராக்கினிநி சாசரச்சி கிச்சையொன்றே
முத்தாரத்த தாகும் மொழி.

இ-ள். தேவசிகிச்சை, ரசம், கந்தகம், பாஷாணம், மானுடசிகிச்சை, அறுத்தல், காரம்வைத்தல், ராக்ஷதசிகிச்சை-சுடுதல்என்றதாம்.

தே-காலபேதவிரோசனம்.

குடிநீரகற் கந்தயிலக் கோடைக்காப்பேதி
கடுமாரி மூடுபனிக் காலங்-கெடுமவைகள்
சோபிக்கு மெக்களிக்குஞ் சூதமுப்பிற் கும்பேதி
சோபிக்கு மெக்காலுஞ் சொல்.

இ-ள். கஷாயம்அரைத்தமருந்து-எண்ணெய்-என்னும்-இம்மூன்றில் ஒன்று கோடைக்காலத்தில் பேதிக்குக்-கொடுக்கத்தக்க மருந்தாம் - மழைகாலத்திலாவது - பனிக்காலத்திலாவது கொடுத்தால் அம்மருந்துகளின் குணங்கெட்டுவிடும்-மேற்சொல்லிய மூன்றுகாலங்களிலும் - நேர்வாளமாயது - பலவிக கள்ளிப்பாலாவது - ரசமாவது உப்பாவது - சேர்ந்த மருந்தைக்கொடுத்தால் கிரமமாகப்பேதியாகும் எ-று. (கஉ0௫)

மருந்துவகை.

அயச்சிந்தூரத்தின்குணம்.

அயத்தில்வரு சிந்தூரம் ஐயமொடுசோபை
வயிற்றில்உறு காமாலை மாற்றும்-புயத்திற்குச்
செய்பலம் உண்டாக்குந் திபனத்தைத் தான்எழுப்பும்
வெய்யபாண் டோட்டும்இது மெய்.

இ-ள். ஐயம், சோபை, காமாலை. பாண்டுப்போம், பலம், தீபனமும் உண்டாம், (கஉ0௪)

காந்தச்சிந்தூரத்தின் குணம்.

காந்தச்சிந் தூரத்தைக் கண்டவுடன் உந்திவலி
போந்தஅதி சாரசுரம் போவதன்றி-வாந்திகப
காசசு வாசவினை காமாலை பாண்டுவொடு
பூசலிடு நோயனைத்தும் போம்.

இ-ள். வயிற்றுநோய், அதிசாரசுரம், வாந்தி, கபம், காசசுவாசம், காமாலை, பாண்டுப்போம். (கஉ0ரு)

தே-தாம்பரபஸ்பத்தின்குணம்-சந்த-வி-ம்.

உருவங்குறு பசியும்பெறு முரமும்பெறு முரமா
மிருகண்டரு டநயன்பெறு மிகையும்பெறு குவரே
வருசெம்புறு மலினந்தெறி வகையும்பொடிவகையும்
பருகும்பெரு விரமுந்தெரி பரவும்புவி மிசையே.

இ-ள். இந்தஉலகத்தில் இருப்பவர்களுக்குள் செம்பில் பொருந்திய களிம்பைநீக்கும்வகையும் அதனைப்பஸ்யஞ் செய்யும்வகையும் பஸ்பத்தை உண்ணும் பெரிதானவகையும் அறிந்தவர்கள் வயிற்றில் உண்டாகும்பசியையும் தேகபலத்தையும் தவத்தில்உயர்ந்த மிருகண்டுமகாரிஷி புத்திரராகிய மார்க்கண்டேயர்போல ஆயுசுவிர்த்தியை அடைவார்கள்-எ-று. அவுஷதஞ்சாப்பிடும்போது பத்தியம் கண்டிப்பாயிருக்க வேண்டுமென்கிற முறையைபற்றி பருகும் பெருவிதமென்றார். (கஉ0சு)

இதுவுமது-வெண்பா.

தாம்பிர பஸ்பஞ் சகலகுன் மங்குறைநோய்
சோம்புகுஷ்டம் எல்லாந் தூரத்தும்என்பார்-தேம்பி
இருக்கின்ற பித்தமுடன் ஈளைசுரஞ் சந்நி
குறுக்கின்ற வாயுவும்போக் கும்.

இ-ள். சகலகுன்மம், குலை, குஷ்டம், பித்தம், ஈளை, சுரம், சந்நி வாய்வும்போம். (கஉ0எ)

வங்கசிந்தூரத்தின்குணம்.

வங்கசிந் தூரம் மதுமேகம் நீர் இறிவோ
டங்கமுறு தாகம் அகற்றுங்காண்-பொங்கிவரும்

ஓதஉதி ரத்தால் உறுவிரண நோய்போக்கும்
தாதுவையுண் டாக்கும்அது தான்.

இ-ள். மதுமேகம், நீரிழிவு, தாகம், விரணமும்போம், தாது உண்டாம். (கஉ0அ)

ஆனந்தபைரவம்-சுத்தபைரவம்-சொர்ணானந்தபைரவம்|
பிர்ம்மானந்தபைரவம்-ஆனந்தரசம்-விநோத பைரவம்
இவைகளின்குணம்-வி-ம்.

ஆனந்த பைரவம்பின் அடர்சுத்த பைரவஞ்சொன்
னானந்த பைரவம்பிர் மானந்த பைரவம்மா
ஆனந்த ரசம்விநோத மாம்பைரவம் இவற்றால்
வானந்த மேவுரூட்சை வருதிரி தோஷம்போமே.

இ-ள். ரூட்சை, திரிதோஷமும்போம். (கஉ0கூ)

சுத்தமண்டூரம்-மகாமண்டூரம்-சித்தமண்டூரம்
திரிகடுகாதிமண்டூரம்-நாராயணமண்டூரம்
இவைகளின்குணம்-வெண்பா.

சுதமண் டூரம் துதிமகா மண்டூரம்
சித்தமண் டூரம் திரிகடுகம்-ஒத்திமேண்
டூரநா ராயணமண் டூரம் இவைக்குவெகு
தூரமாம் பாண்டொடுசோ பை.

இ-ள். பாண்டு, சோபையும்போம். (கஉகக)

வாதராட்சசமாத்திரை-தசவிதஅக்கினிகுமாரம்
இவைகளின்குணம்.

இகல்வாத ராட்சசனுக் கெண்பது வாய்வும்
புகலாமல் ஓடும் புறத்தே-இகலார்
தசவித அக்கினிகு மாரர்க்குச் சந்நி
நசிசுரங்க ளும்போம் நடுங்கி.

இ-ள். வாதராட்சசமாத்திரைக்கு (அம) வாய்வும்போம், தசவித அக்கினிகுமாரத்துக்கு-சந்நி, சுரமும்போம். (கஉகக)

கோரோசனாதிகுளிகை-தாககோபசமனமாத்திரை
இவைகளின் குணம்.

கோரோச னாதி குளிகைக்குப் பித்தசுரம்
தீராத தாகம் சிறுவர்சுரம்-நேராறு

தாககோ பச்சமனந் தன்னாற் சுரஞ்சந்நி
தாகபித்தம் போமே தணிந்து.

இ-ள். கோரோசனாதி குளிகைக்கு-பித்தசுரம், தாகம்,சிறுவர்சு ரமும்போம், தாககோபசமன மாத்திரைக்கு-சுரம், சந்நி, பித்ததாக மும்போம். (கஉகஉ)

குன்மகுடாரம்-சுயம்-அக்கினி-பாஷாணபின்ன

வச்சிரரசம்-இவைகளின்குணம்.

குன்ம குடாரமெனக்கூறிஅஷ்ட குன்மமும்போம்
வன்னசுய மக்கினிக்கு வாயுமந்தம்-பின்னமுறும்
பாடாண பின்னவச்சிர மாரசத்தைப் பார்த்தவுடன்
கேடாகும் கல்அடைப்பிற் கே.

இ-ள். குன்மகுடா ரத்துக்கு - அஷ்டகுன்மமும்போம், சுயம் அக்கினிக்கு-வாயு, மந்தமும்போம், பாஷாணபின்ன வச்சிரரசத்து க்கு-கல்லடைப்பும் போம். (கஉகங)

மேககுலாந்தகன்-சர்வசித்திரசம்-இவைகளின்குணம்.

மேக குலாந்தகனல் மேககுல போம்அரிய
யோகசர்வ சித்திரசம் ஒன்றுக்கே-போகும்
பெருமூத் திரமென்ற பேரும்பே தித்து
வருமூத் திரமும்அறி வாய்.

இ-ள். மேககுலாந்தகனுக்கு-மேகக்கூட்டங்கள்போம், சர்வசித் திரசத்துக்கு-வெகுமூத்திரம், சொட்டுமூத்திரமும்போம். (கஉகச)

கோடாசலக்குளிகை-மகாவன்னிரசம்-இவைகளின்குணம்.

கோடா சலத்தால் கொடும்பாண்டு சோபைமுதல்
ஓடாக் கிராணியும்போம் உண்மையே-நீடுமகா
வன்னிரசம் என்றுரைக்கில் வாடாச் சலோதரமும்
பின்னிடையும் தப்பாது பேசு.

இ-ள். கோடாசலக்குளிகைக்கு-பாண்டு, சோபை, கிராணியும் போம், மகாவன்னிரசத்துக்கு-சலமகோதரம்போம். (கஉகரு)

உலகோத்தமரசம்-வங்கேஸ்வரம்-நாரசிங்கரசம்

இவைகளின்குணம்.

உனுத உலகோத் தமரசத்தால் உன்னும்
விஞேதம்ஏனும் பேதி விளையும்-கனமான
வங்கேஸ் வரத்திற்கு வல்லைகுன்மம் போம்நார
சிங்கம்மூ லச்சுரந்தீர்க் கும்.

இ-ள். உலகோத்தமரசத்துக்கு-விஞேதபேதியுண்டாம், வங்கேஸ்வரத்துக்கு-வல்லை, குன்மமும்போம், நாரசிங்கரசத்துக்கு மூலசுரம்போம். (கஉகசு)

சிந்தாமணிக்குளிகை திரிலோகசிந்தாமணிக்குளிகை

இவைகளின்குணம்.

சிந்தா மணிக்குளிகை சேர்ந்தமலக் கட்டறுக்கும்
உந்துசுர வாயுவையும் ஓட்டுங்காண்-நந்தரத்
திரிலோக சிந்தா மணியென்னிற் சந்நி
திரிலோகத் தப்புறம்போம் சென்று.

இ-ள். சிந்தாமணிக்குளிகைக்கு-மலக்கட்டு, வாதசுரமும்போம் திரிலோகசிந்தாமணிக்கு-சந்நிபோம். (கஉகஎ)

திரிலோகசூடாமணி-திரிலோகராக்ஷாமணிகளின்குணம்.

திரிலோக சூடா மணிக்குந் திறல்சேர்
திரிலோக ரக்ஷா மணிக்கும்-உரநோவு
காசம்விக்கல் சந்நி கபம்தலைநோய் மந்தம்சு
வாசம்பாண் டும்போம் மதி.

இ-ள். மார்புநோய், காசம், விக்கல், சந்நி, கபம், தலைநோய், மந்தம், சுவாசம், பாண்டும்போம். (கஉகஅ)

ராஜமிருகாங்கம்-மகாராஜாமிருகாங்கம்-இவைகளின்குணம்.

ராஜமிரு காங்கம்அது ராஜநோய் போக்குமகா
ராஜமிரு காங்கம்அது ராஜநோய்-காசகபம்
பாண்டுகா மாலை பலயீன சம்சோபை
தாண்டுபித்த நோயகற்றுஞ் சாற்று.

இ-ள். ராஜமிருகாங்கத்துக்கு ராஜநோய்போம், மகாராஜமிருகாங்கத்துக்கு-ராஜநோய், காசம், கபம், பாண்டு, காமாலே, பவுத்திரம், சோபை, பித்தநோயும்போம். (கஉகக)

ராஜகண்டேச்சுரம்-ராஜராஜேச்சுரம்-ராஜகேசரிவடகம்

இவைகளின்குணம்.

ராஜகண் டேச்சுரமும் ராஜரா ஜேச்சுரமும்
விசுசுரம் எல்லாம் விலக்குங்காண்-ராஜநற்
கேசரிய தாம்வடகம் கேதஞ்செய் தோஷசுரம்
நாசமுறக் காட்டுமதை நாடு.

இ-ள். ராஜகண்டேச்சுரம், ராஜராஜேச்சுரம், இவைகளுக்கு சுரம்போம், ராஜகேசரிவடகத்துக்கு தோஷசுரம்போம். (கஉஉ௦)

தே-சந்திரோதயம்-சந்திரகாசரசம்-சந்திர பிரபாவவடகம்

பூரணசந்திரோதயம்-இவைகளின்குணம்-வி-ம்.

சந்திரோ தயத்தால் வெப்பந் தணியுஞ்சந் திரகா சத்தாற்
பிந்துமுத் தோஷஞ் சந்திர பிரபாவ வடக மோநான்
கைந்துநீர் போக்கும் பூர்ண மாஞ்சந்தி ரோத யத்தால்
விந்துவு மதிக ரிக்கும் விறுநோய்க் குழுவும் போமே.

இ-ள். சந்திரோதயத்துக்கு-வெப்பம்போம், சந்திரகாசரத்துக்கு பிந்துநஷ்டம், முத்தோஷமும்போம், சந்திரபிரபாவ வடகத்துக்கு உ௦-விதநீரிறிவுபோம், பூரணசந்திரோதயத்துக்கு-நோய்க்கூட்டங்கள் போம், விந்துஉண்டாம். (கஉஉக)

வசந்தகுசுமாகரத்தின்குணம்-வெண்பா.

வசந்தகுசு மாகரத்தாய் வல்லகபம் காசம்
உசந்தவிஷ பாண்டுகுன்மம் ஊற்றுய்க்-கசிந்தநீர்க்
கட்டுபுளி யேப்பமொடு கல்அடைப்பு தாகமிவை
விட்டு விடுங்காண் விரைந்து.

இ-ள். கபம், காசம், விஷபாண்டு, குன்மம், நீர்க்கட்டு, புளியேப்பம், கல்அடைப்பு, தாகமும்போம். (கஉஉஉ)

தே-மகாவசந்தகுசுமாகரத்தின்குணம்-வி-ம்.

மகாவசந்த குசுமாக ரத்தால் வந்த
வாயுகபம் பித்தம்மந்தம் வயிற்று நோய்கள்

விகாரவுன் மாதங்கா மாலை பாண்டு
விடுசிநீர்க் கட்டுசந்நி குன்மஞ் சோபை
யாகாத காசசுவா சம்பிர மேக
மதிசார மெலும்புருக்கி விக்கல் மூலஞ்
சிகாவாதஞ் சுருங்குகுட்டம் மார்புநோயுந்
திருமதற் றனுபானந் தெரியுங்காலே.

இ-ள். வாயு, கபம், பித்தம், மந்தம், வயிற்றுநோய்கள், உன்மாதம், காமாலை, பாண்டு, நீர்க்கட்டு, சந்நி- குன்மம், சோபை, காசசுவாசம், பிரமேகம், அதிசாரம், எலும்புருக்கி, விக்கல், மூலம், சிகாவாதம், குறைநோய், மார்புநோயும்போம். (கஉஉங)

லங்கேச்சுரம்-பிரதாபலங்கேச்சுரம்

இவைகளின்குணம்-வெண்பா.

இலங்கேச் சுரத்திற் கெழுகுதி கைக்கால்
இலங்கா கிராணியுமோ இல்லை-நலங்கொள்பிர
தாபலங் கேச்சுரத்திற் சாந்தமாஞ் சீதசுரம்
சோபமுறு நோயினமுஞ் சொல்.

இ-ள். லங்கேசுரத்துக்கு-சூதகவாரி, கிராணியும்போம், பிரதாப லங்கேச்சுரத்துக்கு-சீதசுரம், நோய்கூட்டங்களும்போம். (கஉஉச)

ஏகா தசருத்திர குளிகை-சிந்தூரபூஷணங்களின்குணம்.

ஏகா தசருத் திரம்என்னும் மாத்திரைக்குப்
போகாத சந்நிசுரம் போகுங்காண்-வாகான
சிந்தூர பூஷணத்தால் சீர்கருப்ப மாதருக்கு
வந்தசுரம் போம்உணரு வாய்.

இ-ள். ஏகாதசருத்திர குளிகைக்கு-சந்நி, சுரமும்போம், சிந்தூர பூஷணத்துக்கு-கருப்பமாதர் சுரம்போம். (கஉஉரு)

பூபதிமாத்திரையின்குணம்.

நாவிவிட அன்னமுறும் நாளும்விஷம்போகும்
மேவுசுரம் சந்நிகளும் விட்டுப்போம்-காவிவிழி
மாதர் வசியம் வரும்லேப னம்ஆகும்
தானேகேள் பூபதிக்குத் தான்.

இ-ள். விஷம், சுரம், சந்நியும்போம், ஸ்திரிகள் வசியம். லேபன மும் உண்டாம், அன்னமிறங்கும். (கஉஉசு)

நவலோகபூபதி-சூலைப்பூபதி-இவைகளின்குணம்.

நவலோக பூபதிக்கு நண்ணுசுரம் சந்நி
புவலோக வாழ்க்கைவிட்டுப் போங்காண்-ஒவுசூலைப்
பூபதிக்குச் சூலைசந்நி பொங்கனலம் தென்றிசைவாழ்
பூபதிக்கா ளாகும் புகல்.

இ-ள். நவலோகபூபதிக்கு-சுரம், சந்நியும்போம், சூலைப்பூபதிக்கு சூலை, சந்நி, அனலமும்போம். (கஉஉஎ)

பூபதிரசம்-ரசபூபதி-இவைகளின்குணம்.

பூபதி ரசத்திற்குப் போஞ்சந்நி மந்தம்ரச
பூபதிக்குச் சந்நி பொருபாண்டும்-கோபமிகு
காசம் சுவாசம் கடுஞ்சூலை பாண்டுமுதல்
நாசம் கபவாய்வும் நாடு.

இ-ள். பூபதிரசத்துக்கு-சந்நி, மந்தமும்போம் ரசபூபதிக்குசந்நி பொருபாண்டு, காசம், சுவாசம், சூலை, பாண்டு, கபவாயுவும்போம்.

தே-பிணிக்குமருந்தளவுகூறல்-வி-ம்.

தாதுநஷ்டம் பல்மாரஞ சுவாச காசந்
தனியுன்மா தம்மிவைக்காண் டுறைபா மென்பர்
மோதுமிரிச் சரம்விரணங் கல்லடைப்பு
முதிர்மேக நீர்க்குமருந் திரைந் திங்க
ளோதுமுதாவர்த்தமர்த் தாங்க மேழென்
றுரைவித்திர திக்குமருந்தரையாண்டன்றி
மீதுவேண் டாவுரைத்த விம்மட் டுண்ணின்
விலகுதுவை சேடமற விரும்பிக்காணே.

தே-இதுவுமது-வி-ம்.

சோகபகந்தரமூல முதிரச்சூலை
சூலைகுருதிக்குன்ம மசார்க்குநோயா
நாகமுபயாஷ்டிலநோய் திரமிக்குன்ம
நாறுகய மிவைக்குறைகே ஞன்கார் திங்க

ளாகமடி மூர்ச்சைதவுல் லியகிராந்தி
யாம்மிலபித் தஞ்சீத பித்தமுட்டி
யேகவரு மதிமந்தஞ் சோம ரோக
மிவைக்குறைமும் மதியுண்ணி னினிமீளாவே.

தே-இதுவுமது வி-ம்.

வாந்திவிக்கல் கணம்மாந்தம் பேதிகட்கு
மண்டலமொன் றுறைவாதங் காமிலங்கட்
கேந்திருமண் டலமுறைபற் பாண்டுசோபை
யெண்மகோ தரம்பிரிதி துனிகட்கூக்க
மோய்ந்திடமும் மண்டலநல் லுறைநாட்சென்று
மொழிவில்சுரங் கட்குறைமண் டலநான்குன்னி
மாந்திடுபோ மித்திரனே சகலநோய்க்கு
மருந்தூட்டின் மீட்டுமேவை வாட்டாவாறே.

இ-ள். தாதுநஷ்டம் - பஸ்பாரரோகம்-சுவாசகாசம்-உன்மாதம்- இவைகளுக்கு ஒருவருஷம், கிரிச்சரம், விரணம், கல்லடைப்பு, நீரிழிவு, இவைகளுக்கு பத்துமாதம்-உதாவர்த்தம், மர்த்தாங்கம், இவைகளுக்கு ஏழுமாதம் - வித்திரதிக்கு ஆறுமாதம், பகந்தரமூலம, சூலை முதிரச்சூலை, இரத்தகுன்மம், அசுர்க்குநோய், ஆநாகமு.. யாஷ்டில, நோய், திமிரம், குன்மம், நாறுகயம், இவைகளுக்கு நான்குமாதம், மூர்ச்சை, கிராந்தி, யாமிலபித்தம், சீதபித்தம், மந்தம், சோமரோகம், இவைகளுக்கு மூன்றுமாதம்-வாந்தி, விக்கல், கணம், மாந்தம், பேதி, இவைகளுக்கு ஒருமண்டலம்-வாதம், காமிலம், இவைகளுக்கு இருமண்டலம்-பலபாண்டு, சோபை, மகோதரம், இவைகளுக்கு ஒருமண்டலம் - சுரங்களுக்கு நான்குமண்டலம், இவ்வளவுகாலம்மருந்துண்டால் நோய்கள் மறுபடிவராது. () () (௧உ௩௪)

பத்தியவகை.

தே-பிணியாளர்க்கு குடிநீர்-காசம்-சலம்-இவைகளின்
உஷ்ணநிதானவிதி-வி-ம்.

சுத்தநற் குடிநீர் காண்டஞ் சுரசமுண்டிடி லுாதைக்கு
மெத்தவுஞ் சூடாம் பித்தம் வெப்பிரத் தஞ்சந்நிக்கு

முத்தமக் குளிர்ச்சி யாகு மேங்கைக்குச் சிறிய சூடாங்
கொத்தடர் தொந்தநோய்க்குக் குளிர்சமோட் டினமாங் கூறே.

இ-ள். ஊதைக்கு-மிகவுஞ்சூடாகவும், பித்தம், வெப்பம், சந்நி இவைகளுக்கு குளிர்ச்சியாகவும்-ஒங்கைக்குச், சிறியசூடாகவும்-தொந்தநோய்க்கு, குளிர்ச்சியும். சமமாகவும் யிருக்கவேணும். (௧௨௬௨)

தே-பிணியாளர்க்குத் தயிர்தோய்க்கும்விதி-வெண்பா.

காற்றொழிக்க வென்னி லுப்புங் காலொடுசே ரையென்னுங்
கூற்றொழிக்கச் சுக்குங் குறுமிளகு-மூற்றபித்
தம்மொழிக்கக் கட்டியும்பா றன்னிலிட்டுத் தோய்ப்பர்தயி
யம்மொழிக்க மாட்டா தவர்.

இ-ள். வாயுவுக்கு உப்பும், வாதசீதளத்துக்கு, சுக்கும், மிளகும் பித்தத்துக்கு, வெல்லமு ம்இட்டு தோய்ப்பதுவிதி. (௧௨௬௩)

பிணியாளர்க்குமோர்சேர்க்கும்விதி.

கிரிச்சர் தனக்குவெல்லங் கேள்பாண்டு நோய்க்கும்
அரிப்பேதி கட்குஞ்சுக் காகும்-எரிப்பான
மேகந் தனக்குத்தேன் மிக்குபிணி கட்கனையுள்
ஊகங் கொடிவேலி யூட்டு.

இ-ள். கிரிச்சரத்துக்கு-வெல்லமும்,பாண்டுக்கும்-பேதிகளுக்கும் சுக்கும், மேகத்துக்கு-தேனும், மற்றநோய்களுக்கு - கொடிவேலி யும் பேர்ப்பது. (௧௨௬௪)

தே-அபச்சித்தாரத்தின்பத்தியம்-வி-ம.

பத்தியந் திலங்கூ சுமாண்டம் பழங்கிகொள் கடுகு தோரை
சந்தரி பிரம பத்திரி கள்கஞ்சா வபினி மாதர்
சுத்தமா காது பானெய் தய்ந்திட லம்பு ளிப்புப்
புத்தம மகற்ற லாறு முத்தமம பழுது மின்றே.

இ-ள். எள்ளு, கூசுமாண்டம், பூசினிக்காய், கொள்ளு, கடுகு தோரை, கத்தரிக்காய், புகையிலை, கள்ளு, கஞ்சா, அபினி,பெண்போகம், புளிப்பு, புத்தமுங்கொள்ளப்பத்தியதாழ்வுவுண்டாம் பாலும் நெய்யும் உண்ணலாம். (௧௨௬௫)

தே-காந்தசிந்தூரத்தின் பத்தியம்-வி-ம்.

பத்தியம் புளியுப் பின்றேற் பகிதமாம் வாரத் துள்ளே
நத்திடி லிரண்டு வார நவிலுமிச்சா பத்தி யங்கொள்
கத்தரிக் காய சத்தி கடுகுகூசுமாண்ட மெள்ளு
கொத்தவ ரைக்காய் மாங்காய் கூலக்கா யிவையா காதே.

இ-ள். புளி, உப்பு, கத்தரிக்காய், அகத்திகீரை, கடுகு, கூசு மாண்டம், எள்ளு, கொத்தவரைக்காய், மாங்காய், பாகற்காயும் ஆகாது. (கஉ௲௬)

தே-தாம்பிரபஸ்பத்தின்பத்தியம்-வி-ம்.

புளியொன்று தவிரவெல்லாம் புசிக்கினு நவையு றுதை
பிளிபெரு நெருப்புக் கீர மில்லைபென் பதுபோலாகு
மளைமுசல் விருசங் காடி யாமில மடா.த பாகற்
சுலயா மகட்ப மும்நெப் சுதைசருக்க ரைமா நன்றே.

இ-ள். புளியாகாது, பலாப்பழம், வாழைப்பழம், நெய், சுதை, சருக்கரையும் நல்லது. (கஉ௲எ)

தே-பதாரசத்தின்பத்தியம்-வெண்பா.

மற்சமுப்பு சீதோஷ்ண மந்தாதி வத்தெண்ணெய்
துற்சமத்தி யங்கைப்பு தூவுபுளி-யைச்சற்றுங்
கூட்டாமற் சூதங் கொடுப்பாருண்டா ரைச்சமன்பாற்
காட்டாமற் றுமிருத்தக் காண்.

இ-ள். மச்சம், உப்பு, சீதம், உஷ்டணம், நல்லெண்ணெய், மது பானம், கசப்பு புளிப்பும், ஆகாது. (கஉ௲அ)

பறங்கிப்பட்டையின்பத்தியம்-வி-ம்.

மஞ்சளோ டெண்ணெய் யாக்கு மாங்கிசம் அலுவாகாரம்
இஞ்சிகார் கடுகு கைத்தல் இழிவுறு - புளிமண் உப்பு
மஞ்சுறுவாளை கோலா மடவைமீன் சன்னை வெளவால்
கிஞ்சிதம் அருந்தின் மாதே கெடும்பறங் கித்தோவென்னே.

இ-ள். மஞ்சள், எண்ணெய், பாக்கு, மாங்கிஷம், அலுவா, காரம், இஞ்சி, கார்ப்பு, கடுகு, கைத்தல், புளிப்பு, மண்உப்பு, வாளை கோலா, மடவை மீன், சன்னை, வெளவாலும் ஆகாது. (கஉ௲௯)

தே-தைலங்களின்பத்தியம்-வி-ம்.

புலர்த்திய பின்ப ருந்து போஜனந் தனிற்பு ளிப்பு
சலந்தறு ததிபால் பாகல் சாகம்மீனிறைச்சியச்ச
நிலத்தெழு பிரம பத்திரி நித்திரை மடவாரின்னு
நலத்துறு வகைநீக் கிப்பின் னுளும்பத் தியத்துணில்லே.

இ-ள். புளிப்பு, தயிர், பால், பாகற்காய், கீரை, மீனிறைச்சி. புகையிலை, நித்திரை, ஸ்திரீபோகமுங்கூடாது. (கஉச0)

தே-முக்கியமாகமருந்துகளுக்குதவாதவஸ்துக்கள்-வெ-பா.

சிந்தக் கனிமிகுந்த ஜீவனந்தாம் பூலவெல்லம்
பந்தப் பயற்றுப் பருப்பமோர்-சிந்து
கடலையிவை யற்றுறைக நித்திடார் தங்க
ளுடலையிவை யத்திருததா ருன்.

இ-ள். புளி, சலம், தாம்பூலம், வெல்லம், பயற்றுப்பருப்பு, கடலையும் ஆகாது. (கஉசக)

பத்தியபதார்த்தங்கள்-வி-ம்.

பொன்னுங் காணி சிறுகீரை புதியநறுநெய் வரால் குறவை
சொன்னேங் கோவைக் காய்வற்றல் சுண்டையவரைப் பிஞ்சுடனே
பன்று அப்பை வெள்ளுள்ளி பரிய முருங்கை யிளம்பிஞ்சும்
நன்னீர் விளைத்தசிறுபயறு நன்மாங் காய்க்குட் பிஞ்சு நன்றே.

இதுவுமது.

அத்திப் பிஞ்சு கருவாழை பதன்றன் பிஞ்சு பூவாகும்
கத்தித் திரியும் வர்க்குருவி காடை யுடனே சிவல்ஆமை
சுத்த மாங்காய் நறும்பருப்புஞ் சுறாமீன் திருக்கைக் கருவாடாம்
பத்தி யத்தில் இவைதவிரப் பச்சை மீன்கள் பகையாமே.

இதுவுமது-வி-ம்.

வேண்டிய மருந்துண் பார்கள் விராலொடு குறவை தேளி
ஆண்டிடும் அயிரை யுடான் ஆனசன் னையுஞ் சுதும்பும்
ஈண்டிடும் இறநெய்த் தோலி யிவைகளை அருந்துங்காலை
மீண்டிவை உலர்ந்த தாகும் விரை மலர்க்குழ லினாளே.

இதுவுமது-வி-ம்.

காடை உடும்பு கவுதாரி காட்டில் எலியும் ஊர்க்குருவி
ஆடு விரும்பில் வெள்ளாடாம் அதுவும் உலர்த்திக் கறிகொள்ளு
நாடு தனில்வாழ் வரால்குரவை நலமாமிவையும்உலர்த்திக்கொள்
கூடுங் கூடா தென்னுடுநீத கூட்டில் மருந்துங் குணந்தருமே.

இ-ள். பொன்னுங்காணிகீரை, சிறுகீரை, நெய், வரால்,குறவை, கோவைக்காய்வற்றல், சுண்டைக்காய்வற்றல், அவரைப்பிஞ்சு,வெள்ளுள்ளி, முருங்கைப்பிஞ்சு, சிறுபயறு, மாம்பிஞ்சு, அத்திப்பிஞ்சு, கருவாழைப்பிஞ்சு, கத்திரிப்பிஞ்சு, ஊர்க்குருவி, காடை, கவுதாரி, மாங்காய்ப்பருப்பு, சுறுமீன், திருக்கைக்கருவாடு, உடும்பு, காட்டுமலி, வெள்ளாட்டு உப்புகண்டம், வரால், குறவை, தேளி, அயிரை ஊடான், சன்னை, சுதும்பு, நெய்த்தோலி யிவைகளின்கருவாடும் ஆகும், பச்சைமீன்கள் ஆகாது. (கஉசஉ) (கஉசஙு) (கஉசசு) (கஉசரு)

பேதியைக்கட்டுகிறபதார்த்தங்கள்-வி-ம்.

மானே வயிறு கழிவார்க்கு வாழைக் கச்சல் அத்திக்காய்
கானே திரியும் ஊர்க்குருவி காடை உடும்பு கவுதாரி
தானே யாகும் முயல்உலரில் தக்க குளத்துக் கருவாடாம்
மீனே விரும்பித் தின்பீரேல் வீணே உயிரை யிழைந்நீரே.

இ-ள். வாழைப்பிஞ்சு, அத்திக்காய், ஊர்க்குருவி, காடை, உடும்பு, கவுதாரி, முயல், குளத்துமீன் கருவாடும், ஆகும் பச்சைமீனை விரும்பித்தின்றால் உயிர்போம். (கஉசசு)

பேதியாகிறபதார்த்தங்கள்-வெ-பா.

காரா மணிக்கீரை காட்டுப் பறங்கியிலை
பேராம் பெரும்பயற்றின் பேர்இலைகள்-சீரார்
அகத்திபருங் கத்தரிக்காய் ஆயிழையே மீன்கள்
பகைத்ததிக பேதிதரும் பார்.

இ-ள். காராமணிக்கீரை, பூசனிஇலை, பெரும்பயிற்றின்இலை அகத்திக்கீரை, கத்திரிக்காய் மீன்களும் அதிகபேதியையுண்டாக்கும். ()

பத்தியாபத்தியபதார்த்தங்கள்-வி-ம்.

மயறி குறவை வரால்தேளி மற்றுங் குறவைநாய்க்கெளிறு
அயிரை சன்னை பத்தியமாம் ஆகா மீன்கள் இனிக்கேளும்

உயரும் வாளை இருல்கூனி ஓங்குங்கெளிறு விலாங்குகெண்டை
கயலோ டிவைகள் ஆகாவாங் காரார் குழலே கண்டுரையே.

இ-ள். மயறி, குறவை, வரால், தேளி, கெளிறு, அயிரை, சன்னையும்ஆகும், வாளை, இருல், சென்றாக்கூனி, கெளிறு, விலாங்கு, கெண்டையும் ஆகாது. (கஉசஅ)

அபத்தியபதார்த்தங்கள்-வி-ம்.

கொள்ளு காடி குமட்டிக்காய் கோழி பன்றிகொக்குடனே
முள்ளிற் பெரிய பாகற்காய் முதிரும் அவரை பயற்றங்காய்
பள்ளத் தெழுந்த மடற்சேம்பு படரும் வள்ளிபாலைஇவை
எள்ளத் தனைதான் தின்பீரேல் எல்லா மருந்தும் இழக்கீரே.

இதுவுமது-வி-ம்.

மாங்கா யிளநீர் மாதுளங்காய் மாவின்பண்டம் புளிகடுகு
தேங்காய் நெய்பால் கிழங்குபழந் தின்னுங் காயும் வெங்காயம்
ஈங்காதரிக்குஞ் சுராபானம் ஈச்சங் கள்ளு பனங்கள்ளும்
ஆங்கே யிவற்றுள் ஒன்றேனும் அருந்தா திருந்தால் மருந்தாமே.

இ-ள். கொள்ளு, காடி, குமட்டிக்காய், கோழி, பன்றி, கொக்கு, பாகற்காய், அவரைக்காய், பயற்றங்காய், சேம்பு, வள்ளி, பாலைமாங்காய், இளநீர், மாதுளங்காய், மாவின்பலகாரங்கள், புளி, கடுகுதேங்காய், நெய் பால், கிழங்குகள், பழங்கள், காயம், வெங்காயம், கள்ளு ஈச்சங்கள்ளு, பனங்கள்ளும் ஆகாது. (கஉசகூ) (கஉ௫௦)

வாதரோகாரிவஸ்துக்கள்-வெண்பா.

செங்கழுநீர் கோஷ்டந் தேன்மிளகு நல்லெண்ணெய்
தங்குபெருங் காயந் தழுதாழை-எங்கெங்கும்
கட்டுசிறு முத்துநெய் கோதில்உழிந்திவைகள்
வாட்டும்அனி லத்தை மதி.

இ-ள். செங்கழுநீர், கோஷ்டம், தேன், மிளகு, நல்லெண்ணெய் பெருங்காயம், தழுதாழை, சிற்றாமணக்கு எண்ணெய், உளுந்துமாகும். (கஉ௫க)

பித்தரோகாரிவஸ்துக்கள்-வி-ம்.

கொம்மட்டி வாழைப் பன்னங் கொளுத்திய சரியினோடே
கிம்மிய தண்ணீர் விட்டான் வேரெனுங் கிழங்கு சாந்தஞ்

செம்மைசேர் நெல்லி முள்ளி சேரும்இம் மருந்தே யெல்லாம்
கம்மிய பித்தத் திற்குக் காலனென் றோது வாரே.

இதுவுமது-வி-ம்.

சம்புநா வல்பீத் தாருச் சருமமும் முத்தக் காசுஞ்
செம்பருத் தியுஞ்செ ழித்த தெங்கிளம் பூவுங் கன்னல்
அம்புயத் தாதினோடே அதனூறு வளையம் நெய்தல்
வெ பிய சீலைச் சாம்பல் வெள்ளைப்பூ சினிக்கா யென்னே.

இ-ள். கொம்மட்டி வாழையிலை கொளுத்தியகரி, தண்ணிர்விட்டான்வேரு - அல்லது கிழங்கு, நெல்லி, முள்ளி, சம்பு நாவல் பீத்தாருசருமம், முத்தக்காசு, செம்பருத்தி, தெங்கு இளம்பூவு,கன்னல் தாமரைப்பூவிலிருக்கும்மகரந்தம், அதன்வளையம், நெய்தல், துணிச்சாம்பல், கலியாணப்பூசினிக்காயும்ஆகும். (௧௨௫௨) (௧௨௫௩)

சிலேஷ்மரோகாரிவஸ்துக்கள்-வெண்பா.

ஆவி னதுபால் அரத்தைமுள் ளங்கிமயில்
தூவிநறுஞ்சாம்பல் தூதுளம்தேன்-மாவோமம்
துய்ய சருக்கரை துழாய்விதைவி ளாம்பழமும்
ஐயமதை யோட்டும் அறி.

இ-ள். பசும்பால், அரத்தை, முள்ளங்கி, மயிலிறகின்சாம்பல், தூதுளம், தேன், ஓமம், சருக்கரை, துளசிவிதை, விளாம்பழமும் ஐயத்தையோட்டும். (௧௨௫௪)

மூலரோகாரிவஸ்துக்கள்.

மருள்சா ரடைகருணை வச்ரவல்லி காட்டுக்
கருணை புளிநரளை காருக் கருணை
மெருகோடு வெள்அறுகு வெண்சித்திர மூலம்
வருமூலம் போக்கும் மருந்து.

இ-ள. மருள்சாரடை, கருணை, வச்சிரவல்லி, காட்டுக்கருணை புளி, நரளை, காருக்கருணை, மெருகன்கிழங்கு, வெள் அறுகு, வெண் சித்திரமூலமும், மூலத்தைப்போக்கும் மருந்து. (௧௨௫௫)

விஷாரிவஸ்துக்கள்.

பேய்ச்சுரை பேய்க்கொமட்டி பேய்ப்பீர்க் கொடுதுமட்டி
பேய்ப்புடலை புங்கழிச்சல் பேர்அவுரி-வாய்த்தமலை

வேம்புசிவ னார்வேம்பு வெள்ளருக்கு வெள்அறுகு
சோம்புவிஷம் போக்குமெனச் சொல்.

இ-ள். பேய்ச்சுரை, பேய்க்கொமட்டி, பேய்ப்பீர்க்கு, துமட்டி, பேய்ப்புடலை, புங்கு, அழிஞ்சல், அவுரி, மலைவேம்பு, சிவனார்வேம்பு, வெள்ளருக்கு, வெள்அறுகு, சோம்பும் விஷத்தைப்போக்கும். ()

பித்தசமதிரவியம்.

மொச்சை கடலைபெரு முற்கம்உழுந் தேலம்வெந்தி
மெச்ச மிளகுசுண்டை வெண்ணெய்இஞ்சி-பச்சைநிறங்
காட்டுமப்பைக் கோவை கருநிம்பம் சிரகங்கள்
கூட்டுக பித்தசமம் கூறு.

இ-ள். மொச்சை, கடலை, பெரும்பயறு, உளுந்து, ஏலம், வெந்தியம், மிளகு, சுண்டைக்காய், வெண்ணெய், இஞ்சி,பச்சைநிறங்காட்டும் அப்பைக்கோவை, கருவேப்பிலை, சிரகங்கள், கூட்டுகறியுமாம். ()

திரிதோஷசமதிரவியம்-வி-ம்.

ஒன்றிய வாத பித்த கபம்இவை யுயரா வண்ணம்
நன்றுறு கறிகள் எல்லாம் நாளுமே சமைப்பர் ஆய்ந்தோர்
இன்றிடு மிளகு மஞ்சள் சிரகம் உயர்ந்த காயம
வென்றிகொள் சுக்கோ டேலம் வெந்தியம் உள்ளி சேர்த்தே.

இ-ள். மிளகு, மஞ்சள், சிரகம், காயம், சுக்கு, ஏலம்,வெந்தியம் உள்ளியுமாம். (௧௨௫௪)

தே-அறுசுவைகளின்மிகுதிக்குணம்-வெண்பா.

புளிதுவர்விஞ் சுங்கரியாற் பூரிக்கும் வாதந்
தெளிபுவர்கைப் பேறில்பித்துச் சிறுங்-கிளிமொழியே
கார்ப்பினிப்பு விஞ்சிற் கபம்விஞ்சஞ் சட்டிரதச்
சேர்ப்புணரி னோயணுகா தே.

இ-ள். புளிப்பு, துவர்ப்பு - அதிகமானால் வாதம்அதிகரிக்கும் கசப்புஅதிகமானால்பித்தம்அதிகரிக்கும், கார்ப்பு, இனிப்பு - அதிகமானால், கபம்அதிகரிக்கும், ஆறுசுவையும் சமமாகவிருந்தால் மேகமில்லை. (௧௨௫௬)

காலைக்கறிக்கானபயறுகள்.

காலைக் கறிக்காகுங் காரா மணிஉழுந்து
தோலற் றிடுகடலை தோரைஎள்ளு-கோலமொச்சை
தட்டை சிறுபயறு தாழ்வில் கடுகுதறி
இட்டசுக்கு காயம் இவை.

இ-ள். காராமணி, உளுந்து, கடலைப்பருப்பு, துவரம்பருப்பு, எள்ளு, மொச்சை, தட்டைப்பயறு, சிறுபயறு, கடுகு, மிளகு, சுக்கு, காயமுமாம். (௧௨௬0)

தே-பகல்கறிவகை.

கந்த வருக்கங் கனிவருக்கம் வாதமெழு
மந்த வருக்கமந்த மாம்வருக்கங்-கந்தமுறு
தண்ணடை வருக்கந் ததிமோரிவையென்று
ளுண்ணடையாற்ருேடமறுமோர்.

இ-ள். கிழங்குவகைகள் பழங்கள், வாதமுண்டாகிற மந்தவருக்கங்கள், தயிர், மோருமாம். (௧௨௬௧)

தே-இராக்கறிவகை.

அவரைப்பிஞ் சத்திக்கா யாப்பால் முருங்கை
துவரைப் பருப்பாற்றுத் தோணி-யெவரையுமோ
கண்டா லிழுக்குங்கறித்தூ துணமிவையல்
லுண்டா லிழுக்குமிலையுண்.

இ-ள். அவரைப்பிஞ்சு, அத்திக்காய், பசுப்பால், முருங்கை துவரம்பருப்பு, ஆற்றுமுள்ளிக்காய், தூதுளங்காயுமாம். (௧௨௬௨)

தே-காலை-மாலைப்போஜனத்தின்-நெய்-மோர்-பேதம்.

சாலைக் கெருமைநெய்மோர் காரத்தோ டுண்ணலாம்
மாலைக்கா வின்னெய்மோர் வார்த்துணலா-மேலையண்ட
வெப்பப்புக் காலம் விரவிவர லாற்றுகனி
லொப்பப் பகற்கனற்கண் டுண்.

இ-ள். காலையில்-எருமைநெய்-மோர் காரத்துடன் உண்ணலாம், மாலையில்-பசுநெய்-மோர்-வார்த்துண்ணலாம், கோடைகாலம் மழைக்காலம் இராக்காலம் பகற்காலமும் பசிகண்டுஉண்பது உத்தமம். ()

வாதமுதலியமூன்றுதேகிகட்கும்-உப்புவகை.

வாதபித்தை யென்றே வருதேகர்க்குக் கல்லுப்
போதவுப்பிந் துப்பாம் உணர்முறையே-ஓதவெள்ளம்
வற்றியஇந் துப்பதனை வாதமுத லோர்அருந்தக்
குற்றமில்லை குற்றமில்லை கூறு.

இ-ள். வாத-பித்த-சிலேஷ்மதேகிகளுக்கு-கல்உப்பு-கடலுப்பு இந்துப்புமாம், இந்துப்பை வாததேகிகள் உண்ணகுற்றமில்லை. ()

தே-வாததேகிகட்குக்கறிவகை.

மாட்டுப் பறங்கிவங்கம் மாமுருங்கை வெள்ளவரை
காட்டுக்கூ ரப்பிஞ்சு நற்கருணை-காட்டுளுறை
வாகருணை யுங்கருவில் வாதத்தே மூர்ந்துவந்த
தேகருணை நற்கறியாந் தேர்.

இ-ள். பூசினிக்காய், முருங்கை, வெள்ளை அவரை, பாகற்காய், கருணைக்கிழங்கு, கருப்பத்தில் அமைந்தவாததேகிகள்உண்ணுகின்ற அழகியகறியாகும். (௧௨௬௫)

வாததேகிகட்குக்கீரைவகை.

மேனிமுன்னை யாரைநறும் வேளைமணத் தக்காளி
பானைநெருஞ் சில்முசுத்தை யப்பைநெடுங்-கானிலுறை
மூக்குறட்டை நல்வசலை முன்பிவைக ளிற்கீரை
யார்க்குவர்வா யுத்தேகர்க் காய்ந்து.

இ-ள். குப்பைமேனி, முன்னை-ஆரை, வேளை, மணத்தக்காளி, பானைநெருஞ்சில், முசுமுசுக்கை, மூக்குறட்டை, வசளை இவைகளின் கீரையை சமைப்பார்கள் வாததேகிகளுக்கு. (௧௨௬௬)

வாததேகிகட்கு ரசவகை.

சக்கர வர்த்திவெள்ளைச் சாரடைபா கல்முருங்கை
தொக்கில்இளந் தண்டுநறுந் தூதுணம்வார்-மைக்குழலே
சிதமுறு காணிபிவை செந்தளிர்க ளிற்றினமும்
வாததே கர்க்கிரசம் வை.

இ-ள். வெள்ளைச்சாரடை, பாகல், முருங்கை, இளந்தண்டு, தூதுளமும் ஆகும். (௧௨௬௭)

வாததேகிகட்குவற்றல்வகை.

சுண்டைக்காய் பேய்ப்புடற்காய் தூதுளங்காய் நெல்லிக்காய்
தொண்டைமணத் தக்காளி தூஅவரை-பண்டைமுள்ளிக்
காயிவையின் வற்றல்களுங் கான்புரண்டை வற்றலுமாம்
வாயுதே கற்கறிந்து வை.

இ-ள். சுண்டைக்காய், பேய்ப்புடலங்காய், தூதுளங்காய், நெல்லிக்காய், ஆதொண்டை, மணத்தக்காளி, துவரை, முள்ளிக்காய், புரண்டை வற்றலுமாகும். (௧௨௬௭)

வாததேகிகட்கு ஊறுகாய்வகை.

நாரத்தை தான்றிகடு நற்றேற்றான் நீடுகளா
வ்ரொத்த புண்களா இவ்வகைக்காய்-காருப்புப்
பூறியகாய் ஆகும் உயர்இஞ்சி யும்அமையுங்
கூறினில தேகிகளுக் கு.

இ-ள். நாரத்தை, தான்றி, கடுகு, தேற்றான், களாக்காய், சிறுகளாக்காய், இஞ்சியும்ஆகும். (௧௨௬௮)

பித்ததேகிகட்குகறிவகை-வி-ம்.

வெள்ளரி இரண்டு பாகல் விரிபுடல் பீர்க்கு சிம்பை
முள்ளிபூ சினிக்கத் தாரி முருங்கைமா களவரம்பை
எள்ளிலிக் காய்கள் வள்ளி ஈருள்ளி கதலிப்பூதண்
டள்ளியுண் ஆணஞ் செய்வர் அரும்பித்த தேகற் கென்றே.

இ-ள். வெள்ளரிக்காய்கொடி, பாகற்காய், மிதிபாகற்காய், புடலங்காய், பீர்க்கங்காய், சிம்பை, முள்ளி, பூசினி, கத்தரிக்காய், முருங்கை, கருவாழை, வள்ளி, ஈருளி, வாழைப்பூ, வாழைத்தண்டும் ஆகும். (௧௨௭0)

பித்ததேகிகட்குக்கீரைவகை-கலித்துறை.

புளியாரை கோவை முருங்கை வசலைநற் பொன்முசுட்டை
மிளகப்பை யோரிதழ்த் தாமரைபாலை வெளிமுசுக்கை
வளர்தூ துணைஞ்சுரை வல்லாரை சில்லி மணத்தக்களித்
தளிரிளங் கீரைகள் பித்தசு தேகிகள் தாமுண்பரே.

இ-ள். புளியாரை, கோவை, முருங்கை, வசலை, பொன்முசுட்டை, பிரசப்பை, ஒரிதழ்தாமரை, பாலை, வெளிமுசுக்கை, தூதுளம்சுரை, வல்லாரை, சிறுகீரை, மணத்தக்காளி கிரைகளும் ஆகும். ()

பித்ததேகிகட்குரசவகை-வெண்பா.

கொத்து வசலை கொடிவசலை நல் அகத்தி
தத்துபுனல் வழுக்கை தைவேளை-நெய்த்ததராச்
சாகங் களையகித்துச் சாறுவைத்துண் பார்பித்த
தேகங் களையுடையார் தேர்.

இ-ள். கொத்துவசலை, கொடிவசலை, அகத்தி, தென்னம்வழுக்கை, வேளை, தராக்கிரைகளும் ஆகும். (௧௨௭௨)

சுத்தமுள்ளி பேய்ப்புடோல் தூதுணங்கான் சுண்டைகண்டங்
கத்தரிப யற்றைமணத் தக்காளி-நித்தமுறு
கஞ்சம்வல் லாரையிவை காய்த்தநறுங் காய்வற்றல்
வின்சுபித்த தேகிகட்காம் விள்.

இ-ள். முள்ளி, பேய்ப்புடல், தூதுளம், சுண்டைக்காய், கண்டங்கத்திரி, பயற்றை, மணத்தக்காளி, கஞ்சம், வல்லாரை, இவைகளின் காய்வற்றல் ஆகும். (௧௨௭௩)

பித்ததேகிகட்கு ஊறுகாய்வகை-கலித்துறை.

பச்சைமிளகிஞ்சி தூதுளங்காய்முப் பலநரத்தங்
கச்சைதமரத்தம் புன்னைவடங்கபித் தம்மில்லமா
கொங்கையிளம்பிஞ்சு மாகாளிக்கந்தங் கொளுஞ்சியெலு
மிச்சையுப்பூறிய காய்பித்ததேகர்க்கு மிக்குநன்றே

இ-ள். பச்சைமிளகு, இஞ்சி, தூதுளங்காய், முப்பலம், நரந்தம், கச்சை, தமரத்தம், புன்னை, மாம்பிஞ்சு, மாவளிக்கிழங்கு, கொளுஞ்சி, எலுமிச்சங்காயும் ஆகும். (௧௨௭௪)

சிலேஷ்மதேகிகட்குக் கறிவகை-வி-ம்.

கத்தரிபேய்ப் புடல்அவரை பிருபாகல்
பருங்களா கண்டங்காரி
அத்திக்காய் கருமவருக்கை மாபயற்றை
சுரையால்பிக் கருபிஞ் சப்பேர்

மொய்த்தரு ரணங்கதலித் தண்டுகளப்
பூமுளங்கி முருக்கரும்பும்
அஸ்திபூசி னிக்காயி ருள்ளிவெள்ளி
யுங்கபத்தோர்க் காணமாமே.

இ-ள். கத்தரி, பேய்ப்புடல், அவரை, இருவிதபாகல், பருங்களா கண்டங்கத்திரி, அத்திக்காய், பலா, பயிற்றை, சுரை, பீர்க்கம்பிஞ்சு, வாழைத்தண்டு, களாப்பூ, முள்ளங்கி, முருங்கைப்பிஞ்சு, கலியாணப் பூசினிக்காய், ஈருள்ளியும்ஆகும். (கஉஎ௫)

சிலேஷ்மதேகிகட்குக் கீரைவகை-வி-ம்.

காரையிரு கோவைமுன்னை செம்பைபடோல்
துயிலிவழுக் கைநெருஞ்சில்
ஆரைபுளி யாரைமுல்லை மருதநெய்தல்
மேனிநல்வல் வாரைபொன்னு
வாரைமுசுக் கைமுருங்கை யிருபிண்ணாக்
கோடுபண்ணை மணலிபிள்ளைக்
கீரைமுசுட்டை யுங்காரா மணிமாடங்
கடலைபுளிக்கிரிக்களாவே.

இதுவுமது-வெண்பா.

வேளைமணத் தக்காளி மென்சிறை சக்கரவர்த்தி
பிளை வசலைசுக்கு பெண்சுணங்கன்-வேளையிவைச்
செந்தளிர்க ளைக்கீரை செய்வர்கப தேகர்நிதம்
வந்தளியு ணத்தான் மகிழ்ந்து.

இ-ள். காரை, இருகோவை முன்னை, செம்பை, துயிலி, வழுக் கை, நெருஞ்சில், ஆரை, புளியாரை, குப்பைமேனி, வல்லாரை, பொன்னுவரை, முசுக்கை, முருங்கை, இருவிதபிண்ணாக்கு கீரை, பண்ணை, மணலி, முளைக்கீரை, முசுட்டை, காராமணி, கடலை, புளிக் களா, வேளை, மணத்தக்காளி, பொன்னாங்காணி, சக்கரவர்த்தி, பிளை வசலை, சுக்கு, கற்றாழை, வேளை, இவைகளின்கீரை ஆகும். (கஉஎஎ)

சிலேஷ்மதேகிகட்குரசவகை.

சுக்குழ மஞ்சங் கடுகுசத குப்பைதரா
வெந்தியங் கொத்துமலி வேலாக்கு-முந்தகத்தி

தூறுகுறிஞ் சாபாகல் தும்பையிச்சா சங்கள்வெந்த
சாறுகப தேகர்க்காஞ் சாற்று.

இ-ள். ஓமம், கடுகு, சுதகுப்பை, தரா,வெந்தியம்,கொத்துமலி, வேளை, சுக்கு, அகத்தி, தூறு, குறிஞ்சா, பாகல், தும்பை, இந்தகிரை களின்சாறுஆகும். (கஉஎஅ)

சிலேஷ்மதேகிகட்குவற்றல்வகை.

சுண்டை மணத் தக்காளி தூதுணம் புரண்டையா [புறு
தொண்டைமுள்ளி பேய்ப்புடல் தொல்டைசிம்மை - கண்டை
கத்தரிநெல் லிப்பிஞ்சு காநரத்தம் பிஞ்சிவைகள்
ஒத்தவற்றல் பைத்தேகர்க் கோது.

இ-ள். சுண்டைக்காய், மணத்தக்காளி, தூதுளம், புரண்டை, ஆதொண்டை, முள்ளி, பேய்ப்புடலை, தொண்டை, சிம்மை, கத்திரி நெல்லி, காநரந்தம் இவைகளின்வற்றலாகும். (கஉஎகூ)

சிலேஷ்மதேகிகட்குஊறுகாய்வகை.

மஞ்சள் மிளகுசுண்டை வாழைத்தண் டோடுமாம்
பிஞ்சாலம் பிஞ்சத்திப் பிஞ்சுகளும்-விஞ்சுகபம்
றாறுநறுந் தூதுணமு மொய்யபா கற்பிஞ்சம்
ஊறுகா பைத்தேகர்க் கோது.

இ-ள். மஞ்சள், மிளகு, சுண்டைக்காய், வாழைத்தண்டு, மாம் பிஞ்சு, ஆலப்பிஞ்சு, அத்திப்பிஞ்சு, தூதுளம், பாகற்பிஞ்சுமாம். ()

தே-கால-தேக-திரவிய-அவிரோதபதார்த்தம்.

எல்லாக் கறிகளுமே பெல்லுக்கா மல்லுக்கா
மெல்லாக் கறிகளுமெல் லார்க்குமாம்-பொல்லாக்
கறிகளுக்குச் சத்துருக லந்தமைத்து நன்றுங்
கறிகளுக்குள் வைத்தருந்துங் கால்.

இ-ள். பகல்-இராத்திரியிலும் எல்லாக்கறிகளும்-பொல்லாக்கறி களுக்கு அதனதன்சத்துருடன் கலந்துண்ண எல்லாருக்கும் ஆகும்.

தே-இவ்விதரோப்க்குத்தாம்பூலங்கூடாதெனல்.

மதமூர்ச்சா ரோக மகாசந்நிபாத
மதிருட்சை கட்கோ யாமு-முதிர்விடங்கள்

பித்தங் கயஞ்சிரநோய் பேசுமிவைக் காகாது
சுத்தாந்தம் பூலமெனச் சொல்.

இ-ள். மதமூர்ச்சை, சந்நிபாதம், ரூட்சை, சுட்கநோய், விஷங்கள், பித்தம், கயம், தலைநோய்க்கும் ஆகாது. (௧௨அ௨)

தே-இவ்விதநோய்க்கு நெய்கூடாதெனல்.

தருணசுரஞ் சந்நி சலதோடந் தோட
மரணமகோதரமா நாகம்-வருணவதி
சாரங்க வினவுரை தாவரிக்குன் மங்களுக்கா
தாரங்க வினவுரை தள்.

இ-ள். சுரம். சந்நி, சலதோஷம், மகோதரம், மாநாகம், அதிசாரம், தொனியைக்கல்வுகின்ற ஈனஉரை, குன்மங்களுக்கும்ஆகாது.()

தே-இவ்விதநோய்க்குத் தயிர்கூடாதெனல்.

குட்டமதைப் பக்கிநோய் குன்மங்கா மாலைமந்தந்
துட்டவிடு சிக்களர்ச்சூர் சோபைகபஞ்-செட்டசுர
மீரமிவை பீநசம்பி லீகம்புண் பாண்டோடதி
சாரமிவைக் கில்லை ததி.

இ-ள். குட்டம், அதைப்பு, அக்கிநோய், குன்மம், காமாலை, மந்தம், விடுசி, கழுத்துநோய், சோபை, கபம், சுரம், பீநசம், பிலீகம், புண், பாண்டு, அதிசாரம் இவைகளுக்காகாது. (௧௨அச)

தே-தற்காலபலாபல பதார்த்தம்.

திரிபதார்த் தம்பலமே செய்யு முட்னே
திரிபகார்த் தம்பலஞ் செய்யுந்-நெரிமுறையே
சீதவம்பு ணர்ச்சியூன் றேனு சொரிகறும்பா
லாதவம்பு ணர்ச்சிதை லம்.

இ-ள். குளிர்ந்தநீர், ஞாபகத்தில்வருகின்ற மாமிசம், பசும்பாலும் பலமுண்டாம், இளம்வெய்யல், புணர்ச்சி, தைலமும், அபலமுண்டாம். (௧௨அரு)

தினக்கிரமாலங்காரம்.

சொர்ன்ன விட்டின் குணம்.

மேனிதனிற் காந்திஎழில் விறம்உத ராக்கினியும்
ஞானமுமே தோதாது நண்ணுங்காண்-மானே
மிகைசேர் சகலகுண விர்த்திகளும் விர்த்தி
தகைசேர் சொர்ன்னத்தின் இல்லத்தால்.

இ-ள். தேககாந்தி, அழகு, உதராக்கினி, ஞானம், தாது, சகல குணவிர்த்திகளும் உண்டாம். (௧௯அ௬)

தே-கருங்கல்விட்டின்குணம்.

அலங்கா ரமுமதமு மக்கினியு நீங்குந்
துலங்கா தவமுந் துலங்கா-திலங்க
வருங்கலகப் பித்து மனத்துயரை நோயுங்கா
கருங்கலகப் பித்தர்க்குக் காண்.

இ-ள். கருங்கல்விட்டில் வாசமாயிருக்கும் வெறியர்களுக்கு-உலகில் விளங்குகின்ற சூரியகிரணமும் சந்திரகிரணமுமில்லை-அதனால்அழகும்-வீரியமும்-உதராக்கினியும்-நீங்கிவிடும்-கலகஞ்செய்கின்றபித்தமும் மனத்துன்பமும்-சிலேஷ்மரோகமு மிகுதியாக உண்டாகும். எ-று. (௧௨அஎ)

தே-மேல்விடு-ஓட்டுவிடு-புல்விடு-இவைகளின்குணம்.

நிட்டையுறு மேல்விடு நீணிலவெப் போடுபல
வேட்டை பொழிக்குங்காண் மிக்கெழில்ப-லோட்டையுறு
கல்வி டுபேர்வெனிலுங் காலபஞ்சா ராநலத்தாற்
புல்வி டுயர்வாம் புகல்.

இ-ள். மேல்விட்டுக்கு பலவிதவெப்பும்போம், அழகுஉண்டாம் ஓட்டுவிட்டுக்கும் புல்விடு-காற்று - பனியும்பொருந்தாமையால்வியாதிகள் இல்லை. (௧உஅஅ)

தே-காலவிழிப்பின்குணம்.

புத்தி யதற்குப் பொருந்து தெளிவளிக்குஞ்
சத்தாரம்பினற் றூய்மையுறும்-பித்தொழியுஞ்

தாலவழி வாதபித்தந் தத்தநிலை மன்னுமதி
காலவிழிப் பின்குணத்தைக் காண்.

இ-ள். பித்தம்போம், வாதபித்தஜயம் சமன், நரம்பின் துவார நீர்த்தெளிவு, புத்தித்தெளிவும்உண்டாம். (௩௨அ௬)

தே-விழித்தவுடன்-சுத்தோதகம்-அருந்தலின்குணம்.

தூங்கிவிழித்தவு ன் சுத்தோதக மருந்தி
லோங்கிநின்ற பித்த மொழிவதன்றித்-தேங்கு
மலமூத் திரந்தங்கா வாதாதி யுந்தந்
தலமாத் திரமுலவுந் தான்.

இ-ள். பித்தம்,மலம், மூத்திரமும்போம், வாதபித்த சிலேத்தும ம், பித்தம் நிலையிலிருக்கும். (௩௨௯0)

தே-விழித்தவுடன்பார்க்கத்தக்கவஸ்துக்கள்.

கஞ்சந்தங் கந்தீபங் கண்ணடி யெல்லங்கி
செஞ்சந்த நீர்மண் சிவலிங்க-மஞ்சங்கல்
கற்று தமதுவலக் கைமனை தடாரியிவை
யுற்றுமல் விழிப்பிலுத்த மம்.

இ-ள். தாமரைப்பூ, தங்கம், தீபம், கண்ணடி, சூரியன், அக்கி னி, கடல், வயல், சிவலிங்கம், மலை, கன்றையுடையபசு, தன்வலக்கை மனைவி, மிருதங்கமும்பார்க்க உத்தமம். (௩௨௯௧)

தே-விழித்தவுடன்பார்க்கத்தகாதவஸ்துகள்-வி-ம்.

ஊனமவத்திரம்பவங்கல் லாடைசங்கை
யூமைதட்டை செவிடிரங்கல் சடை நிராசை
கூனழுக்கு மேனிவிரி மூர்த்தந் தூக்கங்
குட்டமற நெய்த்தலையா குலமுன்மாதந்
தீனமறற் கயமிவையுள் ளார்முகத்துந்
தீட்டமுகை விதவைவஞ் சியர்முகத்தும்
கானதர விந்திபலி முரிமாறு
கயிறுலக்கை முறத்திடத்தும் விழித்தறீதே.

இ-ள். நித்திரைசெய்து எழுந்தவுடன் அங்கஊன -வஸ்திரம்- பாவம்-காவிவஸ்திரம்-கிரகசங்கை-ஊமை-மொட்டைத்தலை - செவிடு

அழுகை-சடை - மனிதரிடத்தில் விருப்பமில்லாமை-கூன் - அழுக்கு மேனி-விரிந்தமயிர்த்தலை-சதா நித்திரை-குஷ்டம் - கொலை-எண்ணெய்த்தலை-மனோவியாகுலம்-உன்மாதம்-தரித்திரம் - க்ஷயரோகம் இது களையுடையவர் முகத்தையும், நிட்டு-அழுகை-விதவை-ஆகிய மாதர் முகத்தையும், பாம்பு - பூனை-சாம்பல்-எருமை - விளக்குமாறு-கயிறு உலக்கை-முறம் - என்னும் இவைகளையும்பார்த்தால் அன்றைக்குக் கெடுதியுண்டாகும். (கஉகூஉ)

விழித்தவுடன் கண்ணாடிபார்த்தலின்குணம்-வெ-பா.

தாதுங் களிப்புஞ் சகல வசிகரமும்
போத அறிவும்உண்டாம் பூதலத்துள்-காதமுறும்
கண்ணாடிப் பார்க்கும் பனிமொழியே நீவிழிப்பக்
கண்ணாடி பார்த்திதனைக் காண்.

இ-ள். தாது, களிப்பு. சகலவசிகரம், அறிவும்உண்டாம். ()

காலையில்-சிலம்பம்-மல்லயுத்தம் செய்தல்-குதிரையேற்றம் பாதநடை-இவைகளால் உண்டாகும் குணம்.

சிலம்பமுதல் மல்லயுத்தந்*தேசிநடை கொள்ளிற்
பலம்பரவு மெய்யிறுகும் பன்னத்-தலங்குபசி
யுண்டாங் கபவாத மோடுவலி குன்மமும்போம்
பண்டா மலம் இறங்கும் பார்.

இ-ள். பலம், உடல், இறுகல், பசிதீபனமும், உண்டாம், கபம், வாதம், வலி, குன்மமும்போம், *தேசி-பெருங்குதிரை. (கஎகூச)

தே-மிதாமிதவார்த்தையின்குணம்.

மிதவார்த்தைக் குள்ளறிவு மெய்ச்சுகமுங் குன்று
மதிவார்த்தைக் கவ்வுமைகெட் டப்போ-டுதிரமிவை
சுண்டும்போங் கும்பித்தஞ் சூழுதலா லையமினை
யண்டும்போங் குப்புனமே யாய்.

இ-ள். மிதமானவார்த்தை வசனித்தால் உள்அறிவும் சரீரசவுக்கியமும் உண்டாகும். அதிகமாக வசனித்தால் மேல் நாம்சொன்ன அறிவும் சவுக்கியமுங்கெடும்-இதுவுமல்லாமல்-ரசதாதுவும் ரத்ததாதுவுஞ் சுண்டும் - அவ்விரண்டு தாதுக்களுங் குறைவதினால் பித்தம்

அதிகரிக்கும்-அதனால் சிலேஷ்மரோகம் பிறக்கும்-அதனால் சலரோகம் உண்டாகும் எ-று. (௧௨௬௫)

வெயிலால்உண்டாகுங்குணம்.

வாதமொடு காந்திகெடு மாதுரரம் வேர்வைபலம்
துருபசி பித்தம்இவை யுண்டாங்காண்-கீதக்
குயிலி னிசைபழிக்குங் கோதின்மொழி மாதே
வெயிலின் உறுகுணத்தை விள்.

இ-ள். வாதம், காந்தியும்போம், துயரம், வேர்வை, பலம், பசி பித்தமும் உண்டாம். (௧௨௬௬)

தே-காலை-மாலை-வெயிலால்உண்டாகுங்குணம்.

காலைவெயிற் காய்ந்தார்க்குக் காணாப் பிணியனைத்தும்
பாலைவெயிற் போலப் பரவுங்காண்-மாலைவெயிற்
காய்ந்தார்க் குறுபிணிமுற் காசறுமி லக்கணநூ
லாய்ந்தார்க் குறுவழுச்சொ லாம்.

இ-ள். உதயகாலவெய்யிலில் காய்ந்தவர்களுக்கு முன்புஇல்லாத வியாதிகளெல்லாம்-பாலை நிலத்து வெய்யிலைப்போல மிகுந்த கொடுமையுள்ளதாகப் பரவும், மாலைக்கால வெய்யிலில் காய்ந்தவர்களுக்குப் பொருந்தியவியாதிகள் பழமையாகிய குற்றமற்ற இலக்கணநூல்களை ஆராய்ச்சிசெய்து உணர்ந்த வித்துவான்களுக்குக் காணப்படுகிற வழுவுள்ளசொற்கள் நீங்கல்போல நீங்கிவிடும். எ-று.

குறிஞ்சி-முல்லை-பாலை-மருதம்-நெய்தல்-என ஐந்துவகை நிலங்கள் அவைகள் மலைசார்ந்தபூமி-காடுசார்ந்தபூமி-பரல்மேடு, சார்ந்த பூமி-வயல்கள் சார்ந்தபூமி-கடல்சார்ந்தபூமி-என்பவைகளாம். (௧௨௬௭)

நிழலால்உண்டாகுங்குணம்.

மேனி தடிக்கும் வியர்ன அழகுண்டாகும்
போனவலி வாதமந்தம் பூரிக்குந்-தானே
வளர்ந்தேறுஞ் சோம்பல் மதிவதன மாதே
குளிர்ந்த நிழலின் குணம்.

இ-ள். மேனிதடிப்பு, அழகு, வலி, வாதம், மந்தம், சோம்பலும் உண்டாம். (௧௨௬௮)

மழைமந்தாரத்தின்குணம்.

நித்திரை காந்திநெடியபசி தாகம்போம்
ஒத்த மகிழ்ச்சிகுளிர் ஊதையொடு-மெத்த
அழைவந்தி டச்செய்யிரைப் பாதியநோ யுண்டாம்
மழைமந்தா ரத்தால் வழுத்து.

இ-ள். நித்திரை, காந்தி, பசி, தாகமும்போம், மகிழ்ச்சி, குளிர் ஊதை, இரைப்பாதியநோயும் உண்டாம். (௧௨௯௯)

தீக்காய்தலின்குணம்.

தீக்காயில் வாதமொடு சீத நிவாரணமாம்
ஊக்கமிகு தாகம் அதியுட்டினமும்-தீக்கா
இரத்தபித்த நோயும் இரத்தக் கொதிப்பும்
உரத்தெழும்பு மென்றே யுரை.

இ-ள். வாதம், சீதமும்போம், தாகம், உட்டினம், இரத்தபித்த நோய், இரத்தக்கொதிப்புமுண்டாம். (௧௩௦௦)

தே-வேள்விப்புகை-சுடுகாட்டுப்புகை-தைலப்புகை இவைகளாலுண்டாகுங்குணம்.

மகத்தூம மியாயுள் வளர்க்குஞ் சவஞ்சா
ரகத்தூம மத்தை யழிக்கு-மகத்தா
மருந்தையிலத் தூம மடர்வாத வன்னோய்
விருந்தயிலு மென்றே விதி.

இ-ள். வேள்விப்புகையானது-தீர்க்காயுசு கொடுக்கும், சுடுகாட்டுப்புகையானது-உள்ள ஆயுசுவையும் கொடுக்கும், மகாதயிலப்புகையானது-வாதரோகத்தை விருந்தாக உண்டுவிடும். எ-று. (௧௩௦௧)

தே-மலசலம்விடுத்தலின்குணம்.

இருமலங்க டங்கா விறக்குங்கால் மூன்று
மிருமலங் கடங்கணிலை யெய்து-மிருமச்
சமனுக் கினிசாருஞ் சாராநோ யிட்டஞ்
சமனுக் கினிசாரா தாம்.

இ-ள். பெருமையுள்ள வாதபித்தசிலேஷ்மங்கள் தத்தம் நிலையிலிருக்கும், தீபாக்கினி சமமாகவிருக்கும், நோய்க்கூட்டங்கள் போம் எமனுடைய ஆக்கினை அடவாது. (௧௩௦௨)

தே-பல்விளக்கலின்குணம்.

துகளிலை காட்டமிவை தொட்டுத் துலக்கிற்
றுகளில்லை காட்டாது தோடந்-துகளிலைகண்
மெய்த்துவரை யொத்திருக்கின் மேனாள் வரைமூரன்
மெய்த்துவரை யொத்திருக்கு மே.

இ-ள். தூள்-இலை-கொம்பு-இவைகளால் பல்விளக்கினால்-பல்லுகளுக்குக்குற்றமில்லை-வாதபித்த சிலேஷ்மங்களால்-பல்வி னிடத்தும் அதன்மேலிவரினிடத்தும் - உண்டாகின்ற - இருபத்துமூன்று ரோகங்களும் உண்டாகாது-மேற்சொல்லிய-தூளும்-இலையும்-கொம்பும் இயல்பான துவர்உள்ள துகளாயிருக்கவேண்டும்- அப்படியிருந்தால்-இறுதி நாள்வரைக்கு ம-பல்லுகள்-மலையைப்போல் அசைவில்லாமல் உறுதியாயிருக்கும்-எ-று. (௧௩௦௩)

பல்விளக்கத்தக்ககொம்புகள்.

வேலுக்குப் பல்இறுகும் வேம்புக்குப் பற்புழுச்சாம்
பூலுக்குப் போகம் பொழியுங்காண்-ஆலுக்குத்
தண்டா மரையாளுஞ் சாருவளே நாயுருவி
கண்டால் வசீகரமாங் காண்.

இ-ள். வேலுக்கு பல்லிறுகும், வேம்புக்கு-பற்புழுக்கள் சாகும், பூலாவுக்கு போகம்உண்டாம், ஆலுக்கு-லக்ஷ்மி கடாக்ஷம் உண்டாம், நாயுருவிக்கு-வசிகரம்உண்டாம். (௧௩௦௪)

பல்விளக்கத்தகாதவஸ்துகள்.

கல்லு மணலுங் கரியுடனே பாலைகளும்
வல்லதொரு வைக்கோலும் வைத்துநிதம்-பல்லதனைத்
தேய்த்திடுவா ராமாகில் சேராளே சிறீதேவி
வாய்த்திடுவள் மூதேவி வந்து.

இ-ள். கல்லு, மணல், கரி, பாலை, வைக்கோல், இவைகளால் பல்லைவிளக்கினால் சிறீதேவிபோய் மூதேவிவந்துசேருவாள். (௧௩௦௫)

சுத்தஸ்நானத்தின்குணம்.

சுத்தப் புனலாடத் தொல்நமைச்சல் ஆயாசந்
தொத்தெரிச்சற் பாரிப்புந் தோன்றுவா-மெத்தனவுந்

காந்தி பலம்பசியுங் கட்டழகும் உண்டாகும்
ஏந்துமுலை மாதே யியம்பு.

இ-ள். நமைச்சல், ஆயாசம், எரிச்சல், பாரிப்பும்போம் காந்தி பலம், பசி, அழகும் உண்டாம். (௧௩௦௬)

தே-காலை-மாலைக்குளியலின்குணம்.

காலைக் குளிக்குக் கடும்பசியுண்டா நோய்போ
மாலைக் குளிக்கவைகண் மத்திபமே-சோலையடை
வாசநீர் சுத்தசலம் வன்னிநீ ராங்கால
தேசமுடர் பேதமுன்னிச் செப்பு.

இ-ள். காலையில்குளிக்க - பலநோய்போம், பசிஉண்டாம், மாலையில்குளிக்க-பசிபோம், நோய்உண்டாம். (௧௩௦௭)

மஞ்சள்-குளியலின்குணம்.

மஞ்சட் குளிதனக்கு மாறுந்தூர்க் கந்தமொடு
விஞ்சுமுக சாட்டியம் விட்டகலுந்-தொஞ்சல்உறும்
ஐயம் ஒழியும் அடர்வியர்வுங் காணாது
வைய மதினில் வழுத்து.

இ-ள். துர்க்கந்தம், முகத்தில்உண்டாகும் நோய், ஐயம், வியர்வும்போம். (௧௩௦௮)

அப்பியங்க ஸ்நானவிதி.

தே-பஞ்சகற்பத்தின்குணம்.

மிருகமதம் பித்தமணி வேம்பு கடுநெல்லி
கருகுநறும் பாலரைத்துக் காய்ச்சி-யொருமிட
விங்கற்ப நோய்க்கு மிடமில்லை யெஞ்ஞான்றும்
மைங்கற்ப மீதேயறி.

இ-ள். கஸ்தூரிமஞ்சள்-மிளகு-வேப்பம்வித்து-கடுக்காய்த் தோல் - நெல்லிப்பருப்பு - இவைகளைக் கிரமப்பிரகாரம் - காராம்பசுவின் பால்விட்டு அரைத்துக் கொதிக்கவைத்து ஒப்பற்ற சிரசில் தேய்த்துக்கொண்டால் எக்காலும் அதிதூல ரோகத்துக்கும் அதிசூட்சரோகத்துக்கும் இடமில்லை - இதுவேபஞ்சகற்ப விதியென்று அறியக்கடவை-ஏ-று, (௧௩௦௯)

அப்பியங்கனத்தின்குணம்.

தலைமுழுக்காற் சென்னிமுழுந் தாள்இவைக்கு நீங்காப்
பலமுண் டாங் கேசம் படரும்-தலைநோய்போம்
பஞ்சேந் திரியம் பலந்துந் தெளிவையுறும்
எஞ்சாத் தொனியுமெழும் என்.

இ-ள். தலைநோய்போம், தலைக்கும் - முழங்காலுக்கும் - பலம், மயிர்வளர்ச்சி, மெய்-வாய்-கண்-மூக்கு-செவிகளுக்குபலம், இலைக்காதம்தொனியும்உண்டாம். (௩௩௰)

நித்தியஅப்பியங்கனத்தின்குணம்.

தினம்அப்பி யங்கனமே செய்யிற் சருமம்
மினுமினுக்குஞ் சோம்பல் விலகுந்-தனியான
ஐபமுத் தோஷம் அருசிதந்த நோயொழியும்
மெய்யுமிகப் புஷ்டியிடு மே.

இ-ள். சோம்பல், ஐயம், முத்தோஷம், அருசி, தந்தநோயும் போம், தோல்மினிமினிப்பு, சரீரபுஷ்டியும்உண்டாம், இதுசிலதேசத்துவிதி. (௩௩௧)

தே-பசுவினது நெய்முழுக்கின்குணம்.

மைந்தர்முதன் முப்பருவ மாந்தர்க்கு மாமுடலின்
முன்தெரிச்ச லுன்மாத-மூர்ச்சைகப-மூத்திரத்த
பித்தமமா தாகமொடு பேசுவிகா ரங்களுக்கு
முத்தமமா மாநெய்முழுக் குன்.

இ-ள். உடலெரிச்சல், உன்மாதம், மூர்ச்சை, கபம், இரத்தபித்தம், மிகுந்ததாகம், விகாரங்களும்போம். (௩௩௨)

தே-தைலாதிகளின்குணம்.

எள்ளினெய்யு முக்கூட் டெனுநெய்யு மாநெய்யும்
வின்ளுதயி லாதியென வீறுநெய்யு-முள்ளபடி
வாரந் தனக்கிருநாள் வைத்தாடி நோய்களதி
காரந் தனக்கிடமிற் காண்.

இ-ள். வாரத்திற் இரண்டுவிசை தேய்த்துஸ்நானஞ் செய்தால் நோய்களணுகாமல் ஓடிப்போம். (௩௩௩)

தே-தைலந்தேய்க்கும்விதி-வி-ம்-

எடுத்தநற் றயில நாசிக் கிரண் டாறு காதுக்
கடுத்திடத் துளிவிட் டுச்சி யங்கத்தா ளடிக ளிற்சூ
டெடுத்திடாத் தேய்த்தூறச்செய் திப்புறஞ் சிகைக்காய் வெந்நீர்
விடுத்தாடு தநீரும் வியர்ப்புமற் றிடப்பு லர்த்தே.

இ-ள். நாசிக்கு-௨ - துளி - காதுக்கு-௬-துளிவிட்டு உச்சிக்கும் பாதங்களுக்கும் சூடுஉண்டாகாமல் தேய்த்து ஊறினபிறகு சிகைக்காய் . வெந்நீர்விட்டு ஸ்நானஞ்செய்து - நீரும் வியர்ப்பும் நீங்க உலர்த்தவேண்டும். (௧௩௧௪)

தே-பாதாதிகளில்-தைலமிடலின்குணம்-வெண்பா.

பாதந் திடிற்கண்ணோய் பாருமக் கட்கிடினோ
காதுற் றெழுநோய்போங் காதுளிடி-னோதுந்
தலைநோ யகலுந் தலைக்கிடினோ யெல்லா
நிலையா வகலாடி னெய்.

இ-ள். பாதத்தில்தேய்த்தால் கண்ணோய்போம், கண்களுக்குவிட்டால்-காதநோய்போம், காதில்விட்டால்-தலைநோய்போம், தலைக்குத்தேய்த்தால்-நோயெல்லாம்போம். (௧௩௧௫)

அரைப்புவகை-௪.

சிக்கிராந் தூள்விரண தேகர்க் கரைப்பாகும்
ஆக்கிலுப்பைக் கட்டிசொறி யாளர்க்காந்-தாக்குமணிப்
புல்லரைப்புஞ் சிக்காயும் போக்கடிக்கும் எண்ணெய்களைக்
கந்துலுறை கூர்தன்மின்னே காண்.

தே-இதுவுமது.

பருப்பரைப்புங் கோடிநெய் பன்றுமெண்ணெய் யாதிக்
கரைப்புச் சிகைக்காயு மாகுந்-தெருப்பன்றி
நெய்யாதி பசுநெய்க்கு நீங்காரைப பூண்டாதி
மெய்யா ரரைப்பாகும் விள்.

இ-ள். சிக்கிராந்தூள் - விரணதேகர்களுக்குஆகும், இலுப்பைக் கட்டி சொறியாளர்க்கு ஆகும், சிக்காய்-பச்சைப்பயறு-பொன்னாங் காய்-இவைகள் எண்ணெய்முதலாகியவைகளுக்கு ஆகும், காரையிலை பசுநெய், பன்றிநெய் முதலாகிய நெய்களுக்கும் ஆகும், () (௧௩௧௭)

தே-ஸ்நானகாலவிதி-கலித்துறை.

அயமா னிவைக்கைம் பதத்துளி யாழ்குளிர்க் கட்டமத்துள்
வயபா கனிக்குங்கோல் நேட்குநா நான்குயின் மானிரண்டே
பயமார் கடமர்ச்சத் திற்குந் திரிக்குட் பகர்திங்களி
னயமார் தயிலங்க ளாடவ ரோகமெய் நண் ணுவரே.

இ-ள். ஸ்நானகாலவிதி-சித்திரை-வைகாசி-மாதங்களில்-எட்டுநாழிகைக்குள்ளும்) ஆவணி-புரட்டாசி-ஐப்பசி-கார்த்திகை-மாதங்களில் நாலுநாழிகைக்குள்ளும்) - மார்கழி-தை - மாதங்களில்-இரண்டுநாழிகைக்குள்ளும்) - மாசி-பங்குனி-மாதங்களில், மூன்றுநாழிகைக்குள்ளும்) பக்குவபாகமுள்ளதைலஸ்நானஞ்செய்தால்அரோகசரீரத்தைப் பொருந்துவார்கள்-எ-று. (௧௩௧௮)

க்ஷவரத்தின்குணம்-வெண்பா.

துக்கம் விரணந் தொடைவலிசூ லங்காசந்
தற்காவ சாந்தஞ் சவரத்தால்-மிக்குடற்குக்
காந்திமனப் பூரிப்பு கண்ஒளிவு காமமுண்டாஞ்
சேர்ந்ததிங்கட் கொன்றிரண்டாந் தேர்.

இ-ள். மாதத்துக்கு ஒருதலையும்-இரண்டுமுகக்ஷவரமுஞ்செய்தால் - துக்கம், விரணம், தொடைவலி, சூலை, காசம், சாந்தமாம், உடலுக்குக்காந்தி, வனப்பூரிப்பு, கண்ஒளிவு, காமமுமுண்டாம். ()

வஸ்திரவகை.

சாலுவையின்குணம்.

சலதோஷம் போகுந் தலைவலியும் ஏகும்
உலவிவரு நோய்வாதம் ஓடும்-வலிய
வயிற்றுவலி போங்குளிரை மாறுப் பனியைச்
சயித்ததொரு சாலுவைக்குத் தான்.

இ-ள். சலதோஷம், தலைவலி, வாதநோய், வயிற்றுவலி, குளிர் பனியும்போம். (௧௩௨௰)

பட்டுவஸ்திரத்தின்குணம்.

பித்தகபம்அகலும் பேரா மகிழ்ச்சியொடு
புத்தி மிகுமயிர்வை பூறுங்காண்-நித்தியமுந்

காந்தியது உண்டாங் கனதனஞ்சேர் பட்டுகிலுக்
கேந்துமுலை மாதே யியம்பு.

இ-ள். பித்தகபம் போம, மகிழ்ச்சி, யுத்தி, வியர்வை, காந்தி
யும் உண்டாம். (௩௩௨௧)

வெண்பட்டுவஸ்திரத்தின்குணம்.

வண்பட் டுடையால் விரிசுரமுஞ் சிதமும்போம்
பண்பட்ட வாதம் பறக்குங்காண்-பெண்கிட்டுங்
காந்தியு முண் டாகுங் கந்திக அழகும்உண்டாங்
காந்த மதிமுகத்தாய் காண்.

இ-ள். சுரம், சிதம், வாதமும்போம், காந்தி, அழகும், உண்டாம்.

நாருமடியின்குணம்.

சளியோடு நீர்வற்றந் தங்கா தகலும்
வளியோடு சந்நியும்பின் வாங்கும்-அளியினங்கள்
சேருமடிக் கூந்தல்மின்னே தேகமிகச் சுத்தியதாம்
நாருமடிக் கென்றே நவில்.

இ-ள். சளி, நீர்வற்றம், வாய்வு, சந்நியும்போம், தேகசுத்தி
யுண்டாம். (௩௩௨௩)

வெள்ளைவஸ்திரத்தின்குணம்.

ஓடுந் திரிதோஷம் ஒங்காயுசும் பெருகும்
கூடுந் திருஅழகுங் கூர்களிப்பும்-நீடிவரு
போதம்உறும் வெற்றிவரும் பூரிக்கு மெய்வியர்வின்
ஓதம்அறும் வெண்துகிலுக் கே.

இ-ள். திரிதோஷம், வியர்வும்போம், ஆயுசு, அழகு, களிப்பு,
போதம், வெற்றியும் உண்டாம். (௩௩௨௪)

சிவப்புவஸ்திரத்தின்குணம்.

ஏந்துபித்தம் உஷ்ணம எதிர்ந்த தருணசுரம்
வாந்தி யருசிகப மந்தமிவை-சேர்ந்திடுங்கால்
செப்ப கடுஞ்சிவப்புச் சீலையுடுந் தால்அவைகள்
பைய அதிகரிக்கும் பார்.

இ-ள். பித்தம், உஷ்ணம், சுரம், வாந்தி, அருசி, கபம், மந்தமும்
உண்டாம். (௩௩௨௫)

மஞ்சள்வஸ்திரத்தின்குணம்.

நீர்க்கடுப்பு காசமொடு நீடு விஷசுரமுந்
தீர்க்கநமைச் சல்வெப்புஞ் சேர்மலமும்-பார்க்குண்மிக
அஞ்சியே யேகுமஞ்ச ளாம்வத்திரம்புனைந்தால்
வஞ்சியே நன்றாய் வழுத்து.

இ-ள். நீர்க்கடுப்பு, காசம், விஷசுரம், நமைச்சல், வெப்பு, மலமும்போம். (௩௩௨௬)

பச்சைவஸ்திரத்தின்குணம்.

மெய்யழலை ஏகும் விழிக்குக் குளிர்ச்சியுண்டாம்
பொய்யில் உடலமெலாம் பூரிக்கும்-ஐயம்அறும்
நச்சை நிகரு நளினவிழிப் பெண்ணமிர்தே
யச்சையுடை யின்குணத்தைப் பார்.

இ-ள். உடல்வெப்பம், ஐயமும்போம், கண்குளிர்ச்சி, உடல்பூரிப்பும் உண்டாம். (௩௩௨௭)

கறுப்புவஸ்திரத்தின்குணம்.

காசமொடு வெப்புங் கறுத்த கொடுவிஷமும்
பேசுமந் தாக்கினியும் பித்தமும்போம்-நேச
வெறுப்புறு மின்பநய மெல்லியலே நீலக்
கறுப்புநிற மாந்துகிற்குக் காண்.

இ-ள். காசம், வெப்பு, விஷம், மந்தாக்கினி, பித்தமும்போம். ()

தே-அழுக்குவஸ்திரத்தின்குணம்.

நோயடருங் காந்திகெடும் நுண்ணறிவும் போயொளிக்குந்
தீயகுளிர் துக்கந் தினவுசங்கை-வாய்பேசக்
கூசுதலு முண்டாகுங் கோதாகு மாசுடைக்குப்
பேசுதலு மியாதிதற்குப் பின்பு.

இ-ள். அழகு, அறிவும்போம், நோய், குளிர், துக்கம், தினவு, ஒருவருடன்பேச வெட்கமும் உண்டாம். (௩௩௨௯)

கம்பளத்தின்குணம்.

பெரும்பா டசீரணங்கள் பேராக் கிராணி
அருஞ்சூலை பேதி யகற்றும்-கருஞ்சிமைப்

போக்குங் குளிர்வாடை பொல்லாப் பனிநீக்கிக்
காக்கும் பருங்கம் பளம்.

இ-ள். பெரும்பாடு, அசிரணங்கள், கிராணி, சூலை, பேதி, சீழும் போம், குளிர், பனி, யிவைகளைநீக்கி யுடலைக்காக்கும். (௩௬௦)

முண்டாசு-கவசம்-நடுக்கட்டு-இவைகளின்குணம்.

முண்டாசு வாதபித்த முன்பொழிக்கு மெய்க்கவசம்
உண்டாயிற் காந்திபுஷ்டி யுண்டாகுந்-திண்டாடு
பித்தமறுந் தீயாம் பிணைத்தநடுக் கட்டுக்குக்
கொற்றமுறு வீரியமாங் கூறு.

இ-ள். முண்டாசுக்கு-வாதபித்தம்போம், கவசத்துக்கு - காந்தி புஷ்டி, உதராக்கினியும் உண்டாம், பித்தம்போம், நடுக்கட்டுக்கு - வீரியம் உண்டாம். (௩௬௧)

தே-ஆபரணத்தின்குணம்.

ஆபரணஞ் சூடு லரியவி லாலயமா
மாபரண மெய்க்குமதி மங்கலங்காண்-சோபமனத்
துக்கந் தொடுநோய்போஞ் சொல்லா வசியமுறும்
மிக்குக் களிப்படரு மெய்.

இ-ள். சோபம், மனத்துக்கம், நோயும்போம், உடலுக்குமங்கலம், வசியம், களிப்பும் உண்டாம். (௩௬௨)

——(*)——

புசிப்புவகை.

தே-பசியின்குணம்.

பசியா லழகாண்மை பாழின்பு மே கஞ்
சுசியாவி வார்த்தையிவை சோரும்-பிசிபாலாந்
தாதினத்தின் சிரணமுந் தன்னுறு கிழத்தனமு
மோதினத்தின் பேத முமா மோர்.

இ-ள். அழகு, ஆண்மை, இன்பம், மோகம், சுசி, ஆவி, வார்த்தையும்போம், அன்னரசத்திறு முண்டாகும், சத்ததாதுக்களும் சிரணகதியையடையும், கிழத்தனம் உண்டாம். (௩௬௩)

தே-போஜனகாலவிதி.

தன்மபி ரண்டேயூண் டப்பிமுக்காற் கொள்ளினினன்
சின்மதலை காலைகடல் சேர்பருவ-தன்முகூர்த்த

மொன்றுக்கு ளுன்குக்கு வோதுமிரண் டுக்குளுண்பர்
நன்றுக்குத் தீயோர் நயந்து.

இ-ள். இரண்டுகால போசனமே நன்மை-தப்பி மூன்றுகாலபோசனங் கொள்ளவேண்டுமானால் - சூரியன் இளம்பருவமா யிருக்கும் உதயகாலத்தில்மூன்றேமுக்கால் நாழிகைக்குள்ளும்) காலைப்பருவமாகிய உச்சிக்காலத்தில் பதினைந்துநாழிகைக்குள்ளும்) மேற்றிசைக்கடலிற்சேர்ந்த பருவமாகிய இராத்திரி ஏழரைநாழிகைக்குள்ளும்) - பசியாகிய தியையுடையவர்கள் கொள்வார்கள் எ-று. முகூர்த்தமாவது-மூன்றேமுக்கால்நாழிகை. (௩௩௪)

தே-காலாகாலபோஜனகுணம்.

மூன்றுநான் காறெண்மு கூர்த்தங்க ளின்முறையே
ஞான்றுளுண் ணு மந்த நறுமுணவே-தோன்றுடலுக்
கொக்குமித நோயரமூ ரோகமுயிர்க் கந்தரஞ்செய்
விக்குமித மாராய்ந்து விள்.

இ-ள். உதயமாய்-௰௧-நாழிகைக்குள் உண்ணும் நல்லஉணவினால் உடலுக்கு மிதமான நோயரமுண்டாம், ௰௫ - நாழிகைக்குமேல் உண்ணும் உணவினால், ரோகம்உண்டாம், ௰௨௦-நாழிகைக்குமேல் உண்ணும் உணவினால்-உயிருக்கு முடிவுஉண்டாம். (௩௩௫)

தே-போஜனஞ்செய்விதி.

ஆதி யினிப்புநடு வாம்பிரசீ ருப்பொடுசா
காதி யுரைப்பப்பா லந்தத்திற்-கோதிறுவர்ப்
பாந்ததியுப் பூறியகா யாதிவகை சேருணவை
மாநததிசு கத்தையுறு வாய்.

இ-ள். முதலில்-மதுரம், மத்தியில்-புளிப்பு, நீருப்பு, கீரைமுதலானதுகள்-காரம், முடிவில்-துவர்ப்பு, தயிர், ஊறுகாய், இந்தக்கிரமமாக ஆகாரங்கொண்டால் சுகத்தையடைவை எ-று. (௩௩௬)

தே-போசனஅளவைகூறல்-கலித்துறை.

முக்கா லுணவன்றி யெத்தேகி கட்கு முழுவுணவி
லக்கா ரணமன்ன சாகாதிகூடி யரையதிற்பால்
சிக்கா வமுதம்பு தக்கிரங் காலுண்டிச் சேடம்வெளி
வைக்கா விடிலுண்டி வேகா தனலும் வளியுமின்றே.

இ-ள். எவ்விததேகிகளுக்கும் முக்கால்வயிற்று உணவேயன்றி முழுஉணவு இல்லை-அதற்கென்ன காரணமென்றால்-அன்னம் பதார்த்தங்கள்கூடி அரைவயிற்று உணவு-பால்-மோர்-சலம்கூடி கால்வயிற்றுஉணவு-இவைபோக-இன்னும் கால்வயிற்றுஉணவு கொள்ளத்தக்க இடத்தை வெளியாக வைக்கவேண்டுவது - வைக்காவிட்டால் அன்னம் சீரணமாகாது இதைச்சீரணிக்கத்தக்க அக்கினியும் வாயுவும் சஞ்சரிப்பதற்கு இடமில்லை எ-று. (௧௩௩௭)

தே-புசித்தபுசிப்பின்பிரிவுகூறல்-வெண்பா.

பிலத்தமரு முண்டிப் பிரிவை யுரைக்கிற்
பலத்த கிருமிகட்கோர் பங்கு-மலத்திற்கோர்
பங்குமாய் வில்லனற்கோர் பங்கு முடலினுக்கோர்
பங்குமாய்த் தங்குமுன்னிப் பார்.

இ-ள். கிருமிகளுக்கு-ஒருபங்கு, மலத்திற்கு-ஒருபங்கு, உதராக்கினிக்கு-ஒருபங்கு, உடலுக்கு-ஒருபங்குமாய்ப் பொருந்தும். ()

தேபுசித்தஅன்னசாரச்செய்கைகூறல்-வி-ம்.

ஒருநாளுண் ணனவிரத மிரத்ததா துவைநனைத்தங் கூறி நிற்கு
மிருநாளுண் டிடினஃ தங் கிரத்ததா துவிலேறு மிவ்வா றேயின்
வருநாளுண் டேழுநாளு மாயினஃ தெழுதாது வையும்வ ளர்த்தே
தருநாளுஞ் சேராத வலிபதனை யெட்டாநாட் சடத்தி னுக்கே.

இ-ள். முதல்நாள் உண்ண உணவின்ரசம் இரத்ததாதுவை நனைத்து அங்கே ஊறிநிற்கும், இரண்டாநாள் இரத்ததாதுவில் ஏறும் இவ்விதமாக ஏழுநாளானபின் ஏழுதாதுவையும் வளர்த்து எட்டா நாள் உடலுக்கு கெடாதவலியைக் கொடுக்கும். (௧௩௩௯)

உண்கலவகை.

தங்கக்கலத்தின் குணம்.

தங்கக் கலத்திலுண்ணத் தாதுவிர்த்தி யும்பசியும்
பொங்க மிகுதிடமும் பூரிப்பும்-அக்குறையும்
பித்தசோ பப்பிணியிப் பேருலகை விட்டகலுஞ்
சித்தரசத் திங்கனியே சொல்.

இ-ள். பித்த சோபப்பிணிபோம், தாதுவிர்த்தி, பசி, திடம், பூரிப்புமுண்டாம். (கஙௗ௦)

வெள்ளிக்கலத்தின்குணம்.

வெள்ளிக் கலத்துண்ண வீறி வருகபமுந்
துள்ளியெழு பித்தமும்போஞ் சொல்லவோ-விள்ளரிய
காந்தியுண்டா நாளுங் களிப்புண்டாங் தேகத்திற்
சேர்ந்திவரும் வாதமுண்டாஞ் செப்பு.

இ-ள். கபம், பித்தமும்போம், காந்தி, களிப்புவாதமும் உண்டாம். (கஙௗக)

செம்புக்கலத்தின்குணம்.

செம்புக் கலத்துண்ணத் தேகஆரோக்கியமாம்
பம்பிரத்த தோஷம் பறக்குங்காண்-அம்புவியில்
அண்ணியிடுங் காந்தி யணங்கே விழியொளியாம்
புண்ணியமு நண்ணும் புகல்.

இ-ள். இரத்ததோஷம்போம், தேகவாரோக்கியம், காந்தி கண்ணொளி, புண்ணியமும் உண்டாம். (கஙௗஉ)

வெண்கலத்தின்குணம்.

தாம்பிரத்தில் வெள்ளியந் தான்கலக்க வெண்கலம்என்
றும்பெயர் பெறுங்கலத்துள் அன்னமுண்ணில் - தேம்புகின்ற
சோபமோடி ரத்தபித்தந் தோன்றஅறி யாதனங்கன்
சாபமெனச் சொன்னுதலே சாற்று.

இ-ள். சோபம், இரத்தபித்தமும் போம். (கஙௗங)

{ தாம்பிரம்-வெள்ளி-கலப்பு-வெண்கலம்
இவைகளாற்செய்தஉண்கலத்தின்குணம்-வி-ம். }

தக்கதாம்பிரத்தின் வட்டிற் றூன்அதி ரத்தபித்தம்
மெய்க்குறு தகற்றும் வெள்ளி விலக்கிடும் ஐயந் தன்னை
யொக்கவே கலப்பு வட்டில்உறு திரி தோஷம் போக்குங்
கக்கிய உதிர மேறுங் கனத்தவெண் கலத்திற் கென்னே.

இ-ள். தாம்பிரகலத்துக்கு, இரத்தபித்தம்போம், வெள்ளிக்கு ஐயம்போம், கலப்புக்கு - திரிதோஷம்போம், வெண்கலத்துக்கு-உதிரம்உண்டாம். (கஙௗச)

தே-உண்கலத்தில்-இலைகள்-முக்கியமெனல்-வெ-பா.

வாழைவெள்ளைப் பன்னநன்று மற்றிலைகண் மத்திமமா
மாழைவெள்ளி வெண்கலமு மாகன்றுங்-கோழை
கயப்பாண்ட நோய்போங் கருதினிவைச் செல்லாங்
குயப்பாண்ட மேலசனங் கொள்.

இ-ள். வாழையிலை, வேங்கையிலையும் உத்தமம், மற்றஇலைகள், மத்திமம், பொன்வெள்ளி - வெண்கலமும்நல்லது - மண்கலத்துக்கு-கோழை, கயம், பாண்டுநோயும்போம். (௩௩௪௫)

தே-வாழையிலையின்குணம்.

தொக்கினுறு மின்னுஞ் சுகபோ கமுமன்னு
மக்கினி மந்த மபலமொடு-திக்கிடுகால்
பாழை யிலைப்புமறும் பன்னுபித்த முஞ்சமனும்
வாழை யிலைக்குணரு வாய்.

இ-ள். அக்கினிமந்தம், அபலம் வாய்வு, இலைப்பு, பித்தமும் போம், தேகமினிமினிப்பு, சுகபோகமும் உண்டாம். (௩௩௪௬)

தே-பலாஇலையின்குணம்.

பலாயிலையி லுண்ணப் பதுங்கிநின்ற பித்த
குலாவி யெழும்பிக் குதிக்கு-முலாவிவரு
கன்ம மகோதரநோய் காணு நகலாத
குன்ம மகலுங் குறி.

இ-ள். பித்தம்உண்டாம், மகோதரநோய், குன்மமும்போம். ()

தே-பாலுள்ளமரத்திலைகளின்குணம்.

பாலிருக் கின்றமரப் பன்னங் களிலுண்டால்
கோலிருக்கச் செய்வாதங் கோழைகபங்-கால
வசர்க்குபித்தந் தாகமிவை யண்டாதகலு
முசக்குமதி சீதளமா மோது.

இ-ள். வாதம், கோழை, கபம், அசர்க்கு, பித்தம், தாகமும், போம், அதிசீதளம் உண்டாம். (௩௩௪௮)

தாமரையிலையின்குணம்.

தாமரைப்பன் னத்திலுண்டால் தாங்கரிய உட்டிணமாம்
நாவவா தந்தினைந்த நண்ணுங்காண்-தாமமுறு

அக்கினிமந் தங்களுண்டாம் அன்றே மலர்த்திருவத்
திக்கினிலி ராளெனவே தேர்.

இ-ள். இலக்ஷுமிகடாக்ஷம் போம், உஷ்ணவாதம், அக்கினிமந்தமும் உண்டாம். (௬௪௯)

கப்பாத்திரத்தின்குணம்.

கைப்பாத் திரத்திற் கலந்தன்னங் கொள்ளுங்கால்
வைப்பா மனச்சேட்டை மாறுங்காண்-இப்பாற்
சருவ கிலேசமும்போஞ் சாற்றவென்று மின்னும்
பெருவருசி நோயும்போம் பேசு.

இ-ள், மனச்சேட்டை, சருவகிலேசம், அருசியும்போம். ()

சோற்றின்வகை,

அதிசுடுகையன்னத்தின்குணம்.

அதிசுடுகை யன்னம் அரத்தபித்தம் தாகம்
பிதிரேறு சித்தப் பிரமை-மதரோகம்
என்றுரைக்கு நோய்கட் கிடங்கொடுக்குந் தப்பாது
குன்றுரைக்கும் பூண்முலையே கூறு.

இ-ள். இரத்தபித்தம், தாகம், சித்தபிரமை, மதரோகமும் உண்டாம். (௬௫௧)

அற்பச்சுடுகையன்னத்தின்குணம்.

அற்பச்சூட் டன்னம்வா தாதிகளாற் பீநசத்தால்
உற்பவித்த நோயை யொழித்துடற்கு-நற்பலத்தைச்
செய்யும் அருசிதனைத் தீர்க்குஞ்சர் வோத்தமமாம்
பெய்யும்வளைக் கைமாதே பேசு.

இ-ள். வாதாதிகளினாலும்-பீநசத்தாலும் உண்டான நோய்கள், அருசியும்போம், உடலுக்கு பலம்உண்டாம். (௬௫௨)

புழுங்கலரிசியன்னத்தின்குணம்.

தென்புஷியி னுளுஞ் செழித்துவள ருஞ்சாலி
வன்பு புழுங்கல் வடிசாதம் முன்புனவே
வாயுவிலை யத்தால் வலியுமவன் ஞெயுமில்லை
நோயுடையார்க் காகும் நுவல்.

இ-ள். வாய்வும், பலமும் நோயும்இல்லை, நோயாளிகளுக்காகும்.

பச்சையரிசியன்னத்தின்குணம்.

பச்சரிசிச் சோறு பலங்கொடுக்கும் வாயுவென்பார்
நிச்சயமா கப்பித்தை நீக்குங்காண்-அச்சமற
மூத்திரக்கி ரிச்சரத்தை முன்பொழிக்குஞ் சேய்க்குமந்த
மாத்திரமுண் டாக்கும் வழுத்து.

இ-ள். பித்தம், மூத்திரகிரிச்சரமும் போம், பலம், வாயு, பிள்ளைகளுக்கு மந்தமும்உண்டாம். (காடுசு)

நன்றாகச்சமையாத அன்னத்தின்குணம்.

நன்றாகச் சமையா நடுத்தண்டு லச்சோறு
தின்றால் மலசலமுஞ் சிக்குமென்ப-தொன்றேகேள்
மற்றையநா ளுஞ்செரிக்க மாட்டாததுவுடலிற்
சற்றும்வியா பிக்காது சாற்று.

இ-ள். பலம்போம் - மலசல சிக்கல், மந்தமும்உண்டாம். ()

குழைந்தைஅன்னத்தின்குணம்.

குழைந்தசோறுண்ணிற் கொடுமேகம் காசம்
அழுந்துமந் தாக்கினியும் ஆகும்-விழுந்திடச்செய்
துற்பலமும் பீநசமுந் தோன்றும் அரிவையர்க்குட்
பொற்படரு மாதே புகல்.

இ-ள். மேகம், காசம், மந்தாக்கினியும்போம், துற்பலம், பீநசமும் உண்டாம். (காடுசு)

சுத்தான்னத்தின்குணம்.

சுத்தஅன்னங் குற்றமிலைத் தோஷங் களையகற்றும்
முத்தரத்தே கிக்கும்அது முக்கியங்காண்-பத்தியத்திற்
காகுமது முப்பிணிக்கும் ஆம்வியஞ்ச னங்கலந்துண்
வகுமுள நோயெல்லா மிரங்கி.

இ-ள். தோஷங்கள் முப்பிணியும்போம், பத்தியத்திற்குஆகும்.

பொங்கலன்னத்தின்குணம்.

பொங்கலெலா மந்தம் பொருமல்எனு நோய்விளைக்கும்
அங்கமெலாம் வாதம்உண் டாக்குமன-லங்கெடுக்குஞ்

சம்பாநற் பச்சரித் தன்பொங்கல் தாதுவிர்த்தி
யென்பார் பெரியோர்க ளெண்.

இ-ள். மந்தம், பொருமல், வாதமும், உண்டாம், சூடுபோம், சம்பாநெல் பச்சரிசிபொங்கல் தாதுவிர்த்தி உண்டாம். (௩௫௮)

பாலும்-அன்னமும்-புசித்தலின்குணம்.

பாலும்அன்ன மும்புசிக்கிற் மன்னுபித்தந் தாகமறும்
மேலுமற்ப மந்தமென்பார் மேனியிடும்-ஞாலமதில்
அப்பொழுதே தாதுவிர்த்தி யாகும் சிசுவாதி
யெப்பருவத் தர்க்குமா மெண்.

இ-ள். பித்தம், தாகமும்போம், அற்பமந்தம், தேகவழகு, தாதுவிர்த்தியும் உண்டாம் எப்பருவத்தார்க்கும் ஆகும். (௩௫௯)

தே-பால்-அருந்தற்கு-நாழிகையளவைகூறல்.

ஆப்பான் முகூர்த்தத்து ளைங்கடிகைக் குள்ளுனது
மீப்பான் மனுவர் விருந்தாகு-முப்பாயி
ளஞ்சத்தான் கண்டற்கரியா னகிலமுன
மஞ்சத்தா னுண்டவிருந் தாம்.

இ-ள். பசுவின்பால்கறந்த மூன்றேமுக்கால் நாழிகைக்குள் அல்லது ஐந்துநாழிகைக்குள் உண்ணக்கடவை - அந்தக்கிரமப்படி உண்டால் அந்தப்பால் தேவாமிர்தத்தை யொப்பாகும்- அந்தக்காலத்துக்கு மேற்பட்ட பாலையுண்டால்-பிரமன் தேடி அரிதற்கரிய சிவனுண்டவிஷத்தை யொப்பாகும் எ-று. (௩௬௦)

காலையில்-பச்சைப்பாலுண்பதின்குணம்.

கைபெரிச்சல் கால்எரிச்சல் காமிலம்இரத்தபித்தம்
மெய்யெரிச்சல் பாண்டுநோய் விந்துநஷ்டம்-வெய்ய
இருமகபம் போம்புஷ்டி யெய்துஞ்சேயக் கொவ்வும்
உதயமதில் பச்சைப்பால் உண்.

இ-ள். கை-கால்-எரிவு, காமிலம், இரத்தபித்தம், மெய்யெரிவு, பாண்டுநோய், விந்துநஷ்டம், கபமும்போம், புஷ்டி உண்டாம், பிள்ளைகளுக்குப் பொருந்தும். (௩௬௧)

நெய்-அன்னத்தின் குணம்.

வெறுநெய்யுஞ் சோறும்உண்ணில் வீறுபல நண்ணுங்
கிறுகிறுத்த பித்தநோய் கிட்டா-தறிவிக்குங்
கண்ணுக்கு மாகுளிர்ச்சி காட்டுமிகச் சீரணமாம்
உண்ணற்குப் பத்தியமா முன்.

இ-ள். கிறுகிறுத்த பித்தநோய்போம், பலம், கண்குளிர்ச்சி, சீரணமும் உண்டாம், பத்தியத்திற்கு ஆகும். (௧௩௬௨)

எண்ணெய்-அன்னத்தின்குணம்.

எண்ணெய்யுஞ் சோறும்உண்ணில் என்றைக்கு மாபலமாம்
பெண்ணுக் கினியாக பீடுமுறுஞ்-சண்ணுகின்ற
வாதகப மேகம்போ மாறாப் பசியெழும்பும்
பூதலத்து ளோரும் புகல்.

இ-ள். வாதகபம், மேகமும்போம், பலம், போகம், பசியும், உண்டாம். (௧௩௬௩)

மாங்கிசங்கலந்துசமைத்த அன்னத்தின்குணம்.

ஊனமைத்த அன்னம்உண்ணில் உண்டாம் அதிகபலம்
போனமே தோதாதும் பூணுங்காண்-ஆனால்
விரணநோய்க் காகா மிகுமந்த க்ஷீணந்
தருணகப பித்தசம னம்.

இ-ள். அதிகபலம், தாது, மந்தம், கபம், பித்தசமனும் உண்டாம், விரணநோயுக்கு ஆகாது. (௧௩௬௪)

பதார்த்தவகை.

தே-கன்றாகச்சமைத்ததுவரம்பருப்பின்குணம்.

தண்ணக் குறிஞ்சித் தலத்தா டகிபீளப்பை
வண்ணச் சுடாறதற்குள் வைத்தாக்கி-யுண்ணற்
கடிக்குப் பசுவினறு மாச்சியத்தோ டுண்ணிற்
பிடிக்குப் பிடிசதையாம் பேசு.

இ-ள். குறிஞ்சி நிலமாகிய மலைச்சாரலில் பூமியில்விளைகின்ற துவரம்பருப்பை வெகிரில் போட்டுச் சமைத்து போசனஞ் செய்வ

தற்கு முதலில் பசுவின்நெய்யுடன் அன்னத்திற்கலந்து புசித்தால்-ஒருபிடி அன்னத்திற்கு ஒருபிடிசதைவளரும்-எ-று. (கஉசுரு)

குறிஞ்சிநிலத்தில் பயிராகிறவஸ்துக்களெல்லாம் அதிகபலமுள்ளதாயிருப்பதினால் அந்நிலத்துத் துவரையைவிசேஷமாகச்சொன்னார்.

தே-போசனமுதலில்நெய்சேர்த்துண்பதின்குணம்.

பருப்பிலெழு வெப்பும் பருங்குடன்மு றைப்புந்
திருப்புறு முன்மலத்தின் சிக்குந்-தரிப்புறு
மெய்க்குள்ள காந்தி யிலகா தழகுறுநன்
னெய்க்குள்ள உண்மை நெறி.

இதுவுமது.

புத்திமிகுஞ் சிக்குவைநோய் போயொழியு நேத்திரத்தில்
மெத்த வொளியும் விளங்குங்காண்-பித்தமொடு
வாதகப மாறு வறட்சியெல் லாநீங்குங்
கோதினறு நெய்யைக்குடி.

இ-ள். பருப்பிலுண்டாகிற வெப்பு, குடல்முறைப்பு, மலச்சிக்கல், சிக்குவைநோய், பித்தம், வாதகபம், வறட்சியும்போம், தேககாந்தி, அழகு, நேத்திரஒளி, புத்தியும்உண்டாம்.(கநசுசு)(கநசுஎ)

தே-பொரியலின்பேதகுணம்.

கார மிகுபொரியல் காயந் தனிற்கபத்தைச்
சேர வுறவாக்குந் திண்ணமே-சோரப்
புளியிட் டிடும்பொரியல் போர்மந்தத் தோடு
வளியிட் டிடுமனத்துள் வை.

இ-ள். காரமிருந்தபொரியல்-கபத்தைஉண்டாக்கும், புளிசேர்ந்தபொரியல்-மந்தம், வாய்வையும்உண்டாக்கும். (கநசுஅ)

தே-வறலின்பேதகுணம்.

இளவறுப்பான் மந்த மெழும்புங் கருக
லுளவறுப்பான் முத்தோட மோங்கு-மளவறுத்த
மைய வறற்பிணிக்கும் வாதமொடு மாயினஃ
தைய வறற்பிணிக்கு மாம்.

இ-ள். இளவறல்-மந்தம்உண்டாம், கருகவறுத்தல்-முத்தோஷம் உண்டாம், சமமாகவறுத்தல்-வாதம்போம், கபத்தைப்பற்றிய சல ரோகத்துக்குஆகும். (௩௩௬௯)

தே-பச்சடியின்பேதகுணம்.

புளிப்பான பச்சடியாற்றும்ப ம்பித்தங் கார்த்தல்
வளப்பான பச்சடிக்கை வாத-மிளைக்கு
மினித்தபச்ச டிக்கருசி யேகுந் துவராற்
சனித்தபச்ச டிக்குமும்வா தம்.

இ-ள். புளிப்பானபச்சடிக்கு-பித்தம்போம், கார்த்தலான பச்சடிக்கு-வாதமபோம், இனிப்பானபச்சடிக்கு-அருசிபோம், துவர்ப்பான பச்சடிக்கு வாதம்உண்டாம். (௩௩௭0)

தே-துவையலின்பேதகுணம்.

புளிப்பா மிலைத்துவையல் போக்கும்பித் தத்தைப்
புளிப்பா லமைதுவையல் பொல்லா-புளிப்பில்
வெறுந்துவைய னன்றதற்கு மிக்கவுறைப் பிட்ட
நறுந்துவைய னன்றினு நன்று.

இ-ள். புளித்தஇலைத் துவையலுக்குப் பித்தம்போம், புளித்துவையல்ஆகாது-புளியில்லாதநுவையல் நல்லது - உறப்பிட்ட துவையல் மிகவும்நல்லது. (௩௩௭௧)

குழம்பின்பேதகுணம்.

சொல்லஉறைக் குங்குழம்பால் தோன்று நனிலம்அஃ
தில்லையெனில் வாதம் இருக்குங்காண்-தொல்லுலகில்
கீர்த்நகா ரக்குழம்பால் நீடுமுத் தோஷமுன்பின்
பார்த்தோடு மென்றே பகர்.

இ-ள், வாய்வும்போம், அதி காரமுள்ளகுழம்பால் முத்தோஷம் போம். (௩௩௭௨)

துவரம்பருப்பின்ரசகுணம்-கலிப்பா.

நவரை வாழைக் கனிபல வின்கனி
நல்ல மாங்கனி பாலொடு நெய்க்கறி
கவரில் அப்பொழு தேமந்த மாம்பரி
கார ங் கேட் கும் பபித்திபக் காரரே

பெவருங் காண வறைகுதும் அன்னத்தில்
இட்டு றுங்கறி தன்னுடன் கூடவே
துவளை நீர்மிள குள்ளியிட் டுக்கொளீர்
துட்ட வாதமுந் துஞ்சிடு முண்மையே.

இ-ள். வாதம்போம். (௩௩௭௩)

காடைச்சாற்றின்குணம்-வி-ம்.

பொற்றொடி மாதே கண்ணின் புண்ணொடு பிணிக ளெல்லாம்
வற்றிய உடல்ப ருக்கும் வாதபித் தையம் ஏகுஞ்
சுற்றிய கிராணி குன்மஞ் சுரம்பல் சுவாச காசம்
அற்றிடுங் காடைச் சாற்றால் ஆவியும் வளருங் காணே.

இ-ள். கண்புண், கண்பிணிகள், வாதம், பித்தம், ஐயம், கிராணி குன்மம், சுரம், சுவாசகாசமும்போம், உடல்பருத்தல், பலமும் உண்டாம். (௩௩௭௪)

கொள்ளுச்சாற்றின்குணம்-வி-ம்.

வற்றிய உடம்பு தூணும் வாதமும் பித்தங் குக்கி
சுற்றிய கிராணி குன்மஞ் சுரம்பல சுவாச காசம்
உற்றடர் கண்ணின் புண்ணோ டுறுபிணி யொழியும் வெப்பைப்
பெற்றிடு காணச் சாற்றாற் பெருஞ்சல தோஷம் போமே.

இ-ள். வாதம், பித்தம், கிராணி, குன்மம், பலசுரம், சுவாசகாசம், கண்புண், கண்ணோய், சலதோஷமும்போம், வற்றிய உடல்தூலிப்பும், வெப்புமுண்டாம். (௩௩௭௫)

தே-போசனமுடிவில்-தயிர்-உப்பு-சேருவதின்குணம்-வெண்பா.

மூத்ததயி ருப்புமுணமுன்பிறங்கு வத்துகளிற்
கோத்ததிரி தோடங் குடிவிலகும்-பூர்த்தியா
யுண்டபிற்கு முற்குகடு வுற்றவைவெ லாம்புழுக்கங்
கொண்டாடரச் சிரணமா கும்.

இ-ள். புளித்த தயிரும் உப்புஞ்சேர்த்துண்டால் திரிதோஷம் போம், சிரணமுண்டாம். (௩௩௭௬)

மோரும்அன்னமும்புசிப்பதின்குணம்.

மோருமன்ன முப்புசிக்கின் மூளும் பசிமேக
நீருங் குதாங்குரமு நீள்பாண்டும்-போரதே

தாகங் கிராணி சலம்வறு விக்கமும்போம்
ஆகவிர ணத்தில்விலக் காம்.

இ-ள். மேகநீர், குதர்க்குரநோய், பாண்டு, தாகம், கிராணி, சலம், ஏறும்விக்கமும்போம், பசிஉண்டாம், இரணக்காரருக்குஆகாது.

ஊறுகாயின்குணம்.

ஊறுகா யெல்லாம் உதராக் கினிவளர்க்கும்
விராருசி யென்பதையும் வெல்லுங்காண்-கூறுகின்ற
ஐயமொடு பித்தம் அனிலத்தை யுந்தொலைக்குஞ்
செய்யவடி வேற்கண்ணாய் செப்பு.

இ-ள். அருசி, ஐயம், பித்தம், வாய்வும்போம், உதராக்கினி உண்டாம். (௧௩௭௮)

உண்டபின்புவெந்நீரருந்தலின்குணம்.

உண்டபின்பு வெந்நீர் ஒருதரமாக் கொண்டக்கால்
மீண்டுசுரம் வாதம் விதாகமந்தம்-அண்டுதரத்
தார்ந்த பொருமலும்போம் ஆயுளுண்டா மாதர்தமைச்
சேர்ந்தணையத் தாதவுமாந் தேர்.

இ-ள். சுரம், வாதம், தாகம், மந்தம், பொருமலும்போம், ஆயுளும், தாதவும்உண்டாம். (௧௩௭௯)

நீரருந்துங்கிரமம்.

தண்ணீர்அண் ணாந்துண்டாற் சாருஞ் செவிமந்தங்
கண்ணைக் குனிந்துண்டாற் காசம்உண்டாந்-தண்ணீர்
குடிக்கவென்றாற் பாத்திரத்தைக் கொதறவே வாயாற்
கடித்தருந்தத் துன்பம்இலை காண்.

இ-ள். அண்ணாந்தருந்த செவிமந்தமும், குனிந்தருந்த காசமும் நிதானமாயிருந்துபாத்திரத்தைவாயில்கடித்தருந்த சுகமும்உண்டாம்.

கஞ்சிவகை

பால்கஞ்சி-பொரிசேர்ந்தகஞ்சி-சுடுகஞ்சி இவைகளின்குணம்-வி-ம்.

சுரைதரு பாலில் வெந்த சோறுறு கஞ்சி கொள்ளில்
எரிதரு பித்தந் தாழும் எழுமதி விந்து வந்தான்

பொரிதரு கஞ்சி பித்தம் போக்கிடுஞ் சுடுகஞ் சிக்குத்
தரிதரு மலமும் வாய்வுத் தாகமும் போகுங் காணே.

இ-ள். பால்கஞ்சிக்கு-எரிபித்தம்போம், விந்துஉண்டாம், பொரி கஞ்சிக்கு - பித்தம்போம், சுடுகஞ்சிக்கு - மலமும், வாய்வும், தாகமும்போம். (௩௩௭௧)

தே-கொள்ளுக்கஞ்சியின்குணம்-வெண்பா.

கொள்ளுந்தண் டுலமுமாய்க் கூட்டியடுங் கஞ்சியது
கொள்ளுக்காற் றீபனத்தைக் கூறுவதோ-எள்ளி
நசிக்கிப் பிழிபலமு நல்விந் துவுமே
வசிக்குங் கிழவர்கட்கும் வை.

இ-ள். தீபனம், பலம், விந்தும்உண்டாம். (௩௩௭௨)

தே-கோதுமைக்கஞ்சியின்குணம்.

கோதுமைக் கஞ்சி கொடுஞ்சுரநீ ரேற்றமிவை
காதுமைக்குஞ்சந்நிக்குங் காதரமே-போத
உடலுந் திடமா மொலிவண்டுங் கூற்றுங்
கடலும் பணிவிழியே காண்.

இ-ள். சுரம், நீரேற்றம், சந்நியும்போம், உடலுக்குபலம் உண்டாம். (௩௩௭௩)

சிறுபயறு-உழுந்து-பச்சரிசிகளின்கஞ்சிக்குணம்.

சிறுபருப்புக் கஞ்சிபித்தந் தீர்க்கும் உழுந்தின்
உறுபருப்புக் கஞ்சிபித்தந் தீர்க்கும் உழுந்தின்
பச்சரிசிக் கஞ்சி பவனகபத் தைப்போக்கும்
கச்சிருக்குங் கொங்கைமின்னே காண்.

இ-ள். சிறுபயறுகஞ்சிக்கு - பித்தம்போம், உளுந்துகஞ்சிக்கு பலம்உண்டாம், பச்சரிசிகஞ்சிக்கு-கபம்போம். (௩௩௭௪)

தே-காயச்சுக்கஞ்சியின்குணம்-வி-ம்.

கஞ்சி யன்னத்திற் காயம் பருத்திடு
மஞ்சி வெப்ப மகலுஞ்சி லேஸ்மமோ
விஞ்சி யுற்றிடு மேனி மினுத்திடும்
பஞ்சி போலப் பறந்திடும் பித்தமே.

இ-ள். வெப்பம்போம், பருத்ததேகம், சிலேஷ்மம், மேனிமினு மினுப்புமுண்டாம். (௩௩அரு)

புனற்பாகத்தின்குணம்-வெ-பா.

புனற்பாக முத்தோஷம் போக்கு மருந்தின்
அனற்பாகந் தன்னை யடக்குந்-தனிக்குணங்கள்
அம்மட்டோ வாய்க்கிதமா மாரோக்கி யங்கொடுக்கும்
கம்மிட்ட பூவனமே காண்.

இ-ள். முததோஷம், மருந்தின் வெப்பமும்போம், ஆரோக்கிய முண்டாம், வாய்க்குஇதமாகவிருக்கும். (௩௩அசு)

தே-பஞ்சமுஷ்டிக்கஞ்சியின்குணம்.

பஞ்சமுட்டிக் கஞ்சிநெடும் பட்டினியிற் கொள்ளுங்கால்
விஞ்சனில பித்தகபம் வீறுவாம்-விஞ்சு
மிளைப்பகற்றுந் தாரகவி லங்கனத்திற் கேற்குந்
திளைப்பவெழும் பூண்முலையே செப்பு.

இ-ள். வாதபித்தம், கபம், இளைப்பும் போம், லங்கனத்திற்கு ஆகும். (௩௩அஎ)

சுக்குமுடிச்சுப்போட்டுக்காய்ச்சிய நீர்க்கஞ்சியின்குணம்.

வாயுசுர நீர்இரத்த மாறும் பசியெழும்பும்
ஓயும் பலபிணிகள் உண்மையே-ஆயுங்கால்
உண்டி பருத்திடுமெய் யுள்நோய்போ குமமுடிச்சுச்
சுண்டியினீர்க் கஞ்சியினாற் சொல்.

இ-ள். வாயு, சுரம், இரத்தநீர், பலபிணிகள், உடல்நோயும்போம் பசியுண்டாம், உணவுபருக்கும். (௩௩அஅ)

வடிகஞ்சி-உறைகஞ்சி-கொதிகஞ்சி-இவைகளின்குணம்.

கஞ்சிபெலா மந்தமவை கண்ணுக்குத் தான்குளிர்ச்சி
விஞ்சிவரும் பித்தமிஅது விட்டகலும்-உஞ்சும்
அதிகஞ்சிவாரி அதிசிதஞ் சேர்க்குங்
கொதிகஞ்சி வெட்டையைப்போக் கும்.

இ-ள். எல்லாக்கஞ்சியும் - மந்தமும், கண்ணுக்குக்குளிர்ச்சியும் உண்டாம், பித்தம்போம், அதிககஞ்சிக்கு-வாயு, சிதமுமுண்டாம், கொதிகஞ்சிக்கு வெட்டைபோம். (௩௩அகூ)

பழஞ்சோற்றின் குணம்.

பழஞ்சோற்றை யந்தப் பழையரீரா காரக்
கொழுஞ்சேர்க்கை யோடுநயங் கொள்ளில்-எழுந்தாது
பித்தவா தம்போம் பெரும்பசியா மெய்யாங்கும்
மெத்தவொளி வுண்டாகு மே.

இ-ள். பித்தவாதம்போம், தாது, பசி, உடலுக்கு ஒளிவும் உண்டாம். (௩௩௯௦)

மோர்சேர்ந்தபழையதின்குணம்.

மோரும் பழையதுமாய் மோடெடுக்க உண்டார்க்குத்
தீரும் எரிச்சலெலாஞ் சேயிழையே-தீராத
பித்தப் பிணியும் பிரமைநோ யும்பற்கும்
உற்றகபந் தூக்கமிகு முன்.

இ-ள். எரிச்சல்கள், பித்தநோய், பிரமைநோயும்போம், கபம், தூக்கமும் உண்டாம். (௩௩௯௧)

புளித்தசோற்றின் குணம்.

புளித்தபழங் காடியன்னம் பொங்கனலா நாளுந்
தளிர்த்தபுத்த கோபத்தைச் சாடும்-வெளுத்தமல
மந்தத்தை நீருக்கும் வாந்தி தனையொழிக்கும்
அந்தமுறுவணங்கே யாய்.

இ-ள். பித்தகோபம், மலமந்தம், வாந்தியும்போம். (௩௩௯௨)

ஊசியசோற்றின்குணம்.

ஊசலன்னம் உண்டால் உடனே வரும்உறக்கம்
பேசுவதேன் வாதம் பிரபலமாம்-ஆசித்துச்
சீதளமும் பித்தமும்வி சேடிக்கும் வள்ளையொத்த
காதளவு நீள்விழியாய் காண்.

இ-ள். உறக்கம், வாதம், சீதளம்,பித்தமும் உண்டாம்.(௩௩௯௩)

கேழ்வரகின்-கூழ்-களி-இவைகளின் குணம்.

கேழ்வரகின் கூழாற் கிளர்வாத பித்தமொடு
வீழ்வயிருஞ் சாந்தமென விள்ளுவர்காண்-காழாங்
களிக்குப் பலம்உண்டாங் காணில்அதி வாதக்
கிளர்க்கு முழுகிலிதைச் சாற்று.

இ-ள். கூழுக்கு-வாதம், பித்தம், பெருவயிறும்போம், களிக்கு பலம், வாதமுமுண்டாம். (௩௩௪)

கம்புச்சாதத்தின்குணம்.

கம்பினது சாதத்தாற் காசசுவா சஞ்சிரங்கும்
பம்பும் உடலமிகப் பாரிக்குஞ்-செம்பாலோ
வற்றுவது மன்றிநிற மாறுமென்பார் வாமமெல
முற்றுமுலை மாதே மொழி.

இ-ள். காசம், சுவாசம், சிரங்கு, உடல்பாரிப்பு, உதிரவற்றல், நிற மாறலும் உண்டாம். (௩௩௫)

தினைமா-அதன்சாதம்-அதன்கஞ்சி-இவைகளின்குணம்.

தினைமா கபவாதந் தீர்க்கும்அதன் சாதம்
புனைபித்த மாயினுநற் போகந்-தனைக்கொடுத்து
வாதம்போக் குங்கஞ்சி மாசோபை தோஷமிதன்
பேதமெலாம் போக்குமெனப் பேசு.

இ-ள். மாவுக்கு-கபவாதம்போம், சாதத்துக்கு-பித்தம், போக மும் உண்டாம், வாதம்போம், கஞ்சிக்கு-சோபை, தோஷமும்போம்.

சாமைச்சாதம்-அதன்கஞ்சி-இவைகளின் குணம்.

சாமைச்சோ றுண்டால் தனிவாதங் கோழைகபந்
நீமைக்கா தாரமாய்ச் சேர்சோபை-போமெத்தப்
பித்தமொடு தாதுவுமாம் பேசும்அதன் கஞ்சிக்கு
முத்தோஷம் போகு மொழி.

இ-ள். சாதத்துக்கு-வாதம்-கோழை, கபம், சோபையும்போம், பித்தம், தாதுவும் உண்டாம், கஞ்சிக்கு-முத்தோஷம்போம். ()

வரகுசாதத்தின் குணம்.

எறிகபத்தோ டேபலநோ பெய்தும் வறட்சி
சொறிசிரங்கு பித்தந் தொடரும்-நிறையுங்
காசமெனப் பூரித்த கச்சுமுலை மாதே
வரகரிசிச் சோற்றால் வழுத்து.

இ-ள். கபம், பலவிதநோய், வறட்சி, சொறி, சிரங்கு, பித்தமும் உண்டாம். (௩௩அ)

சோளச்சாதங்களின்குணம்.

சோளமெனப் பேர்படைத்த சோறுகளி னால்உடலில்
மீளாச் சொறிசிரங்கு விர்த்தியதாம்-நாளுங்
கரப்பானு முண் டாகுங் கனமருந்தும் பாழாம்
பரப்பனைய கண்மாதே பார்.

இ-ள். சொறி, சிரங்கு, கரப்பான், மருந்துமுறிவும் உண்டாம்.

காடைக்கண்ணிச்சாதத்தின்குணம்.

எரிவோடு பித்தம் எழும்பும் ஐய வாதங்
கருகிமுறிந் தோடிக் கரக்கும்-அரியசந்த
வாடைப் பொடிமணக்கு மாமுலைமா தேயுலகிற்
காடைக்கண் ணிச்சோற்றைக் கண்டு.

இ-ள். எரிவு, பித்தமும்உண்டாம், சிலேஷ்மவாதம்போம். ()

சித்திரான்னவகை.

பாற்பொங்கலின் குணம்-வி-ம்.

ஒப்பிலாப்பாலில்வெந்த உயர்சுவை யன்னத் தாலே
வெப்பிலா வாதம் உண்டாம் வெவ்வழற் பித்தந் தாழும்
தப்பிலா இதில்நெய் வெல்லஞ் சார்ந்திடிற் தன்மையாலே
செப்பிலாக் கபமேல்மூடுஞ் செம்பித்த மொடுங்குங் காணே.

இ-ள். பித்தச்சூடுபோம், வாதம்உண்டாம், நெய்-வெல்லம்-சேருவதால்-பித்தம்போம், கபம்உண்டாம். (௧௪௦௧)

பருப்புப்பொங்கலின்குணம்-வெ-பா.

போகமிக உண்டாகும் பொங்கியபித் தந்தணியுந்
தேகமதில் வாதமிகச் சேருங்காண்-வாகார்
பொருப்புப்போல் விம்முமுலைப் பூங்கொடியே பச்சைப்
பருப்புப்பொங் கற்சோற்றைப் பார்.

இ-ள். பித்தம்போம், போகம், வாதமும்உண்டாம். (௧௪௦௨)

சருக்கரைப்பொங்கலின் குணம்.

வாயின் அரோசகத்தை மாற்றிவம னம்போக்கும்
ஆயில்பித்த கோபத்தை யாற்றுங்காண்-நேயச்

செருங்கரைச்செந் தாளாற் றிருத்துமடமாதே
சருக்கரைப்பொங் கற்சாதந் தான்.

இ-ள். அரோசகம், வாந்தி, பித்தகோபமும்போம். (௧௪0௩)

மிளகோதனத்தின்குணம்.

மிளகோ தனம் அருந்த விம்முகின்ற வ தம்
இளகும் பசியும் எழும்புங்-களகளெனக்
கூவும் வயிற்றின் குடல்இரைச்ச லுங்கபமுந்
தாவுபித்த முந்தணியுஞ் சாற்று.

இ-ள். வாதம், குடல்இரைச்சல், கபம், பித்தமும்போம், பசி உண்டாம். (௧௪0௪)

புளியோதனத்தின் குணம்.

வாந்தி யுரப்ஒழியும் வாய்நீர்ச் சுரப்பேகுந்
சாந்தியுறுப் பித்தமது சாந்தியாம்-வாய்ந்த
அளியோ வயிலோவென் றைபறச்செய் கண்ணாய்
புளியோ தனத்தாற் புகல்.

இ-ள். வாந்தி, வாய்நீர்ச்சுரப்பும்போம். (௧௪0௫)

கடுகோதனத்தின்குணம்.

உரியகடு கும்புளியு மொவ்வக்கலந்தே
அரியமனைத் தோடமைத்த அன்னம்-பருகினல்
வாதமொடு ஐயம்முப் பின் வாங்கிவிழுந் தோடும்
சீத மலர்த் திருவே தேர்.

இ-ள். வாதம், ஐயமும்போம். (௧௪0௬)

எள்ளோதனத்தின் குணம்.

செப்பரிய வாதபித்தந் நிமையக லுங்கபம
துப்பி வளரும் உடலிறுகு-முப் பழத்தின்
கள்ளோதுஞ் செய்ய கனிமொழியே நீகேளாய்
எள்ளோ தனத்தினு லே.

இ-ள். வாதபித்தப்போம், கபம், உடலிறுகலும் உண்டாம். ()

உழுந்தோதனத்தின்குணம்.

எஞ்சுகப வாதமிக எறும்அறி மந்தம்உறும்
விந்தமித் தந்தாழ மெய்யுரக்கும்-அஞ்சம்

எழுந்தோதம் புக்கு மினியகடைமாதே
உழுந்தோ தனத்திற் குரை.

இ-ள். பித்தம்போம், கபவாதம், மந்தம், தேகபலமும் உண்டாம். (௧௪0௮)

ததியோதனத்தின் குணம்.

ஆறு வழலகற்றும் ஆர்ந்தபித்த நோய்போக்குந்
தேறாத மெய்யைமிகத் தேற்றுங்காண்-மாறு
மதியோகை கொள்ளும் வதன மயிலே
ததியோ தனமேலாஞ் சாற்று.

இ-ள். அழல், பித்தநோயும்போம், உடலைத்தேற்றும். (௧௪0௯)

கட்டமுதின்குணம்.

சூலைசுக்கி லாஸ்மரிசு வாசகா சங்கண்ட
மாலை முதலியநோய் வந்தணுகா-மாலுலகில்
துட்டம் இரத்தமொடு தொன்மேக முப்பறக்குங்
கட்டமுதை நீயுண்ணுங்கால்.

இ-ள். கெட்டவிரத்தம், மேகமும்போம், சூலை, சுக்கிலாஸ்மரி சுவாசகாசம், கண்டமாலைமுதலிய நோய்கள் உண்டாம். (௧௪௧0)

பலகாரவகை.

உழுந்துவடையின் குணம்.

வெறும்உழுந்திற் செய்வடைக்கு மேன்மேலும் வாதம்
உறும்பித்தஞ் சற்றே பொடுங்குப்-பறுந்தீ
பனம்போம் புசிப்பிற் பருகான்றும் வாவி
யனம்போ னடையா யறி.

இ-ள். பித்தம், தீபனமும்போம், வாதம் உண்டாம். (௧௪௧௧)

தே-தயிருழுந்தின் வடைக்குணம்.

உழுந்தின் பருப்பை யயர்ததியூ றச்செய்
தழுந்தா தரைத்துவடை யாக்கிச்-செழுந்தேனிற்
கூட்டியுண ஐயபித்த கோபமறும் வாதையிலை
நீட்டியவேற் கண்மாதே தேர்.

இ-ள். சிலேஷ்மபித்தம், வாதையும்போம். (௧௪௧௨)

தே-பேயன்வாழைக்கனிசேர்ந்தவடைக்குணம்.

பேயன் கதலிபலம் பெய்தமா ழுத்தின்வடை
நேயமுற அமைந்து நித்தலுமே-நேயமுடன்
தானருந்தில் வாதபித்தந் தத்தநிலை கொண்டமருந்
தேனருந்தாத் தேனே தெளி.

இ-ள். வாதபித்தம் தத்தம் நிலையில்நிற்கும். (கசகங)

தோசையின்குணம்.

மிருத்தெழுந்த பித்தத்தை வீறு தடக்கும்
அகத்துள் அனிலகபம் ஆற்றுஞ்-சகத்திலுறு
தோசைப் பெறுமயிலே தேமொழியே மாழுத்தின்
தோசைக் குணமிதெனச் சொல்.

இ-ள். பித்தம், வாதகபமும்போம். (கசகச)

சம்பாரத்தோசையின் குணம்.

காயமிளகிஞ்சி கருவேப்பிலைமுதலாத்
தூயபல காரமிட்ட தோசைக்கு-வாயுவிலை
பித்தகப வேகப் பெருக்கொழியுந் தாதுவுமாஞ்
சுத்தவன சத்திருவே சொல்.

இ-ள். வாயு, பித்தகபமும்போம், தாதுஉண்டாம். (கசகரு)

சுத்தஇட்டலி சம்பாரஇட்டலி-இவைகளின் குணம்.

வெறுமாவின் இட்டலிக்கு வேகம் அறுங் காரம்
பெறுமாவி னிட்டலியைப் பேசில்-அறும்அனிலம்
ஐயபித் தங்கள் அதிகரிக்கு மோமாரன்
எய்யவெய்யுங் கண்ணாய் நவில்.

இ-ள். சுத்த இட்டலிக்கு-வேகம்போம், சம்பார இட்டலிக்கு-வாதம், ஐயம், பித்தமும்போம். (கசகசு)

முறுக்கின்குணம்.

ஐயமொடு பித்தம் அதிகரிக்குந் தாழாச்
செய்ய அனிலஞ் செறிதடங்கும்-வையம்
நிறுக்குமிகு கற்பையுறு நேரிழையே நாளும்
முறுக்கின் குணமா மொழி.

இ-ள், வாதம்போம், ஐயம், பித்தமும் உண்டாம், (கசகஎ)

தேன்குழலின்குணம்.

ஓங்கும் கபவாதம் உட்டினமு மீறிவருந்
வாங்குஞ் சலங்கொஞ்ச மந்தமுமாந்-தேங்குமிசை
ஆன்குழலு மியாழுமிக வஞ்சுமொழிக் கிஞ்சுகமே
தேன்குழலுக் காங்குணந்தைத் தேர்.

இ-ள். கபவாதம், உஷ்ணம், தாகமும்உண்டாம். (௧௪௧௮)

அதிரசத்தின் குணம்.

ஐயமொடு பித்தம் அதிகரிக்கும் எக்காலுந்
துய்ய அனிலஞ் சுழிக்குங்காண்-சையத்
தெதிரசந்தை யூர்வோ னெனுங்கற்பு மாதே
அதிரசத்தை நன்று யறி.

இ-ள். ஐயம், பித்தம், வாதமும் உண்டாம். (௧௪௧௯)

பிட்டின் குணம்.

செம்புனலுங் கட்டுந் தெளியும் உரமாகும்
வெம்பனிலம் உட்புறத்தில் வீறுங்காண்-செம்பழத்தை
வட்டைப் பழிக்கும் வனமுலைமா தேயரிசிப்
பிட்டைப் புசிப்பார்க்குப் பேசு.

இ-ள். உதிரக்கட்டுப்போம், பலம், வாதமும்உண்டாம்.(௧௪௨௦)

மோதகத்தின்குணம்.

வாதம்உறு மந்தமிகு மாருத வெப்பமுமாஞ்
சீத கபவிருத்தி சேருங்காண்-தீதறுகட்
போதகமுஞ் செப்பும் பொருப்பு நிகர்முலையாய்
மோதகமுண் பார்க்கு மொழி.

இ-ள். வாதம், மந்தம், வெப்பம், சீதகபமும்உண்டாம், இதுவே கொழுக்கட்டை. (௧௪௨௧)

தே-கோதுமை அடையின்குணம்,

தேகம் பலக்கும்அதி தீபனம்உண் டாகும்நிறை
மோகம் பெருகுமைய மூர்க்கமறுங்-கோகமிக
வோதி யடையு முயர்கொங்கை மாதரசே
கோதி யடையைக் கொடு.

இ-ள். தேகபலம், தீபனம், போகமும்உண்டாம், ஐயம்போம்,

பொரியுருண்டையின்குணம்.

சர்த்திபித்த வாதந்தணியும் வறுத்தெழுந்த
சுத்த கபவாதந் தொலையுங்காண்-மெத்த
வரியுண்ட வேல்விழியாய் வையகத்திற் சாலிப்
பொரியுண்டை நன்றாம் புசி.

இ-ள். வாந்தி, பித்தவாதம். கபவாதமும்போம். (௧௪௨௩)

தே-சேர்க்கைஅவலின் குணம்.

பாலெனப்சேர்த்துண்ணிற் பலமாந் ததிகண்மந்தந்
தாலெய்து மோரயர்வு தாகமெரி-மேனிருக்கு
மப்புளிய மஞ்சுங்கா லாகுநிரை பொழியு
மெப்புளியும் பித்திலவ லில்.

இ-ள். அவலில் - பாலும் - நெய்யும் - சேர்த்துஉண்டால்-சரீரத்துக்குப் பலம்உண்டாகும், தயிர்களில் கலந்துஉண்டால் மந்தம் உண்டாகும்) தயிர்களில் கலந்துஉண்டால், சோபமும் எரிவுநீங்கும்) சலத்தில்ஊறவைத்து உண்டால் உளிபால்வெட்டினுல் அதுவும்வாய் மடங்கத்தக்க உறுதியான வாய்வுஉண்டாகும்) ஆகாரமும்எற்றுக் கொள்ளாது) எவ்வகைப்புளியாவது சேர்த்துஉண்டால் பித்தரோகம் நீங்கும்) எ-று. (௧௪௨௪)

நெற்பொரியின்குணம்.

நெற்பொரியைத் தின்றால் நெடுந்தாகம் வாந்திமந்தம்
மற்பித்த வாத மதமூர்ச்சை-பற்பலவாம்
பேதி யருசிபிவை பேருலக்கை விட்டொழியுஞ்
சாதி மடமயிலே சாற்று.

இ-ள். தாகம், வாந்தி, மந்தம், பித்தவாதம் மதமூர்ச்சை, பலவாகியபேதி, அருசியும்போம். (௧௪௨௫)

அப்பளம்சோற்றப்பளம்-இவைகளின் குணம்.

வாதத்தை யுண்டாக்கு மாபலத்தையுங்கொடுக்குஞ்
பித்தத்தை போவுகபந் தீர்க்குங்காண்-ஒறுப்உபூக்
தப்பளஞ்சோற் றப்பளக்கா லாதிவிந் சாதகிமே
பொப்பவளஞ் செப்பும் உரை.

இ-ள். உளுந்து அப்பளத்துக்கு - சீதகபம்போம், வாதம்பல மும்உண்டாம், சோற்றப்பளத்துக்கு - வாதமுதலாகியதும் தந்தம் நிலையில்அடங்கியிருக்கும். (௧௪௨௬)

பாயாசத்தின்குணம்.

பாயாசங் கொண்டாற் பழையமலம் வாந்திபித்தம்
ஆயாசம் போங்கூறில் அற்பமந்தந்-தூயசர்
வேந்திரிய நன்மை யெழில்வலிம னத்தெளிவோ
டார்ந்தபசி மேதையுமுண் டாம்.

இ-ள். பழையமலம், வாந்தி, பித்தம், ஆயாசமும் போம், அற்பமந்தம், பஞ்சேந்திரியங்களுக்குச்சுகம், அழகு, பலம், மனத்தெளிவு, பசியும்உண்டாம். (௧௪௨௭)

தே-அன்னபின்னத்தின்குணம்.

சோறாக்கெண் கூறாக்கத் தூமா வவலிவைக்கெண்
கூறாக்க முப்பழம்பால் கொள்ளிவைக்கெண்-கூறாக்க
மூன்பலமி வைக்கெண்கூறாக்கஞ் சுகாசுகத்துந்
தான்பலவ கைப்புந் தான்.

இ-ள். அன்னத்திற்குஎட்டுபங்குபலம்-அவல், அவலுக்கு எட்டு பங்குபலம்-பழம்-பால், முப்பழம்பாலுக்கு எட்டுபங்குபலம் ஊன், ஊனிற்கு எட்டுபங்குபலம் பலவகைசெய். (௧௪௨௮)

தே-உண்பதற்கு-முன்பின்உண்ணுங்கனிகளின்குணம்.

அருந்துதற்கு முன்பருந்த லாமா மலக
மருந்தற்குப் பின்பிலந்தை யாகும் - பொருந்தியவெக்
காலுங் கபித்தக் கனியாகு மாகாவெக்
காலுங் கதலிக் கனி.

இ-ள். உண்பதற்கு முன்-நெல்லிப்பழமும், பின்-இலந்தைப்பழமும், எப்போதும்-பித்தமல்லாத கனியும் உண்ணலாம், வாழைப் பழம் எப்போதும் ஆகாது. (௧௪௨௯)

தே-உண்டபின்புகுறுநடைகொள்ளுதலின்குணம்.

உண்டபின்பு நூறடிவைத் தோங்காங் குறுநடையைக்
கொண்டவர்க்கு முன்புகுடன் கொண்டபருந்-திண்டியெலா

சேர்ந்தொன்றுய்ச் சிரணிக்குந் தியமுத்தோ டங்களதி
லார்ந்தொன்ற மாட்டா வறி.

இ-ள். உண்டபின்-நூறடிநடந்தால் முத்தோஷம்போம், பொ
சித்தஅன்னம் சிரணம்உண்டாம். (௧௪௩௦)

பரியளப்பூச்சின் வகை.

தே-மணக்குழம்புபூசுதலின்குணம்.

பூசமணத் தாலின்பம் பூணு மணுக்கிருமி
நாசமுறு முட்டைக்கு நல்வலியாந்-தேசமரு
நாதவிந்து வும்விரைத்தி நண்மிகவிளையுஞ்
சிதவிந்து வின்குளிர்போந் தேர்.

இ-ள். அணுக்கிருமி, சந்திரன்குளிரும்போம், இன்பம், உதராக்
கினி, விந்தும்உண்டாம். (௧௪௩௧)

கார்காலமணப்பூச்சின்குணம்-வி-ம்.

கார்காலத் தனிற்பூசக் கருப்பூரஞ் சந்தங்
கஸ்தூரியகிற்கூட்டு காந்தியும் உண்டென்
சீர்மேவுசிறப்புண்டாஞ் சீர்த்தியும்வந்தெய்தும்
தேகத்தின்வியர்வகலும் இளைப்போடிட்சுரம்போங்
கூர்மேவுகாசம்உழுப் பிருமலிவைவிலக்கு
குட்சிவாய்வதுதொலையும் நேத்திரமுந்துலக்கும்
ஆர்வமிகுந்தாகம்அறும் வீரியமுநண்ணும்
அறிந்தென்றுடந்திடுவர்க் கம்புவியின்மீதே.

இ-ள். கருப்பூரம், சந்தம், கஸ்தூரி, அகிற்கூட்டு - இவைகளால்
காந்தி, சிறப்பு, கீர்த்தி, நேத்திரத்துலக்கம், பலம், வீரியமும்உண்
டாம், வியர்வை, இளைப்பு, சுரம், காசம், இழுப்பு, இருமல், வாய்வு,
தாகமும்போம். (௧௪௩௨)

பனிக்காலமணப்பூச்சியின்குணம்-வி-ம்.

பனிக்காலத் தனித்தேடிக் குங்குமங்கச் சோரம்
பகரும்அகில் கஸ்தூரி சாந்துசவ்வா துடனே
பனிப்பகலச் சமன்செய்து பனிநீர் குழைத்துப்
பண்புபெறப் பூசிடில் ஊக்கம் உடைமையதாஞ்

செனிப்பான தாகமொடு பித்தம்அறுங் கபம்போந்
தினவுகெடும் வீரியமாஞ் செயம்உறும் அழகாந்
தனிப்பான செய்பமலர்த் திருவுமருங் கணேவாள்
சவுரியமுஞ் சேருமுகச் சந்தோஷ முறுமே.

இ-ள். குங்குமம் கச்சோலம், அகில், கஸ்தூரி, சாந்து சவ்வாது இவைகளைப் பனிநீரிற்குழைத்துப் பூசிடில். தாகம், பித்தம், கபம், தினவும்போம், பலம், வீரியம், செயம், அழகு, லக்ஷிமிகடாக்ஷம் சவுரியம், முகசந்தோஷமும் உண்டாம. (௧௪௩௩)

தே-சுகந்தமலர்மாலைகளணிதலின் குணம்.

முல்லைமுத னீடுமண மொய்த்தமலர்த் தொத்தனிவார்க்
கில்லையெனுந் தாதுநட்ட மில்லைமா-றொல்லைமனத்
துக்க மொழியுஞ் சுகமொழியும் பூரிப்பு
மிக்க மொழியவரு மேல்.

இ-ள். முல்லைமுதலாகிய மிகுந்தவாசனையுள்ள புஷ்பமாலையை யணிபவர்களுக்கு - தாதுநஷ்டம், மனத்துக்கமும்போம், நல்லவசனம், பூரிப்பும்உண்டாம். (௧௪௩௪)

பன்னீரின்குணம்.

பன்னீர் மிகக்குளிர்ச்சி பாராய் சுகசந்திக்
கிந்நீர்உண் டாகும் இளைப்புமறுஞ்-சந்நிகளும்
வாதபித்த ஜுபமொடு மானே வியாகுலமும்
பூதலம்விட் டேகும் புகல்.

இ-ள். சுகசந்தி, இளைப்பு, சந்நிகள், வாதபிததஜுபம், வியாகுலமும்போம், குளிர்ச்சிஉண்டாம். (௧௪௩௫)

தாம்பூலவகை.

தாம்பூலப்பொதுக்குணம்-வி-ம்.

தக்கோலந் துவருறைப்பு கார மாமச்
சாரங்க ஷாயமதிற் சிலதோ ஷம்போம்
நிற்காது கிருமியையத் தாகம் பன்னோய்
நிறைபசியா மாதர்குழா நெருங்கு மேலும்

மிக்கான சுவையுதரஞ் சுத்தியாகும்
விடாய்போக்கும் அறிவொளிருந் தாதும் உண்டாம்
எக்காலுந் தருமமெய்துங் கலையுஞ் சேரும்
எக்கமருங் கட்குமிது ஏற்ற தாமே.

இ-ள். சிலதோஷம், கிருமி, ஐயம், தாகம், பல்நோய், விடாயும்போம், பசி, மாதர்குழாம், நெருங்கல், மிகுந்தசுவை, உதரசுத்தி அறிவு, தாது, தருமம், கலையும்உண்டாம், சுபாசுபங்களுக்கு ஆகும்.

கொட்டைப்பாக்கின்குணம்-வெண்பா.

கொட்டைப்பாக் கென்றுரைக்கிற் கோழைமலம் போமூலத்
தட்டைப் பார்க்குங்கிருமி சாம்அந்தக்-கொட்டைப்பாக்
கொத்தசுரத் தோர்க்குமருந் துண்டவாய்க் கும்பொருந்து
மெத்தவுண்ணிற் சோபைவரும் விள்.

இ-ள். கோழை, மலம், மூலகிருமியும்போம், சுரத்தோர்க்கும் மருந்துண்டவாய்க்கும்ஆகும், மெத்தஉண்டால்சோபைஉண்டாம்.

தே-இளங்கொட்டைப்பாக்கின்குணம்.

வளங்கட் டிலங்கைநகர் வாசியெ னவந்த
விளங்கொட்டைப் பாக்குண்பார்க் கென்றும்-களங்கட்டும்
வாயுவே சாமறவன் வல்லருசி யேகுமதத்
தேயுவே காமறைவோ தேர்.

இ-ள். வளப்பம் பொருந்தியஇலங்கைநகராகியகுழம்புதேசத்தி லுண்டாகும் இளங்கொட்டைப்பாக்கை உண்டால் தற்காலத்தில் தொண்டைக்குள் கோழைகட்டும்- வாதமும்-நீங்காத சிலேஷ்மமும் வலிய அருசியும் - நீங்கும் - சாடராக்கினி நீங்காது - மறைப்பானதல்ல. (கசஙஅ)

இவ்விதப்பாக்குகளைநீக்கவேண்டுமெனல்.

அதிகபிஞ் சதிமுப் பதிபுதுமை மேனி
யதிபிரம் பூச்சிகள்உள் ளாடல்-அதிசொக்கல்
உள்ளவிதப் பாக்குகளில் ஒன்றேனுநேரில் அதைத்
தள்ளவிதி முக்காலுந் தள்.

இ-ள். அதிகபிஞ்சு, அதிகமுற்றல், அதிகபுநிறு, அதிகஈரம், பூச்சிகள்உள்ளது, அதிகசொக்கல், இவைகளில் ஒன்றையுஞ்சேர்க்கலாகாது. (கசஙௌ)

சொற்றைப்பாக்கின்குணம்.

சொத்தைப் பிளவிடித்துத் தோயமதில் ஊறவிட்டுச்
சத்துவர நாறுமிகை தான்கழுவி-வைத்துலர்த்தி
வாசம் அமைத் துத்தின்ன மந்தமொடு தோஷம்அறுந்
தேசும் அழகும்உறுஞ் செப்பு.

இ-ள். சலத்திலூரவைத்து நாறுதகுதிகழுவி வாசங்கட்டித்தின்ன-மந்தம், தோஷமும்போம், காந்தி, அழகும்உண்டாம். (கசச0)

களிப்பாக்கின்குணம்.

களிப்பாக்குத் தின்றக்காற் கண்டத்துட் கோழை
யொளிய்பாகக் கட்டுமிஃ துண்மை-தளிப்பான
பித்த அரோசகம்போம் பேதிமிக உண்டாகுஞ்
சித்த மகிழ்ச்சியுறுஞ் செப்பு.

இ-ள். பித்தம், அரோசகமும்போம், தொண்டையில்கோழைக்கட்டு, பேதி, சித்தமகிழ்ச்சியும்உண்டாம். (கசசக)

வெற்றிலையின்குணம்.

ஐயம் அறுங்காண் அதன்சாரம் கொண்டக்காற்
பையச் சயித்தியம்போம் பைந்தொடியே-மெய்யின்
கடியின் குணம்போகுங் காரவெற்றிலைக்குப்
படியுமுத் தோஷமிதைப் பார்.

இ-ள். ஐயம், சயித்தியம்,கடியின்குணம், முத்தோஷமும்போம்.

தே-கற்சுண்ணத்தின்குணம்-வி-ம்.

உண்டவனஞ் சிரணமா ரெய்ச்சிக் கேகு
முறிஸ்விந்து ற்கூக்க முறுங்காண் பல்வரையில்
விண்டவெடி றிறுகுநீர்ப் பேதி வற்றும்
வேந்தளித்த நீர்ச்சுருக்கும் விலக்கும் மெய்யை
யண்டுபல விடமொழியுங் கறையோ நிற்கு
மழலூறுபுண் சிரங்குநமை யழுபுண் ணூறுங்

கண்டவுரு வன்மீகஞ் சிரநோய் சந்தி
கஞங்கரக்குங் கற்சுண்ணங் காணுங் காலே.

இ-ள். நெய்ச்சிக்கல், நீர்பேதி, நீர்ச்சுருக்கு, பலவிஷங்கள் தீப்புண், சிரங்கு, நமைச்சல், அழுபுண்ணு, வன்மீகம், சிரநோய், சந்திகளும்போம்,உண்ட அன்னம்சிரணம், விந்துவுக்குபலம், பல்லிறுகல், கறையும்உண்டாம். (கசசங)

முத்துச்சுண்ணத்தின்குணம்-வெண்பா.

முத்துச்சுண் ணத்தால் முதிர்ந்தஅதி சாரம்ஐயம்
குத்துக் கிருமியொடு குன்மநோய்நத்தியதோர்
வாத அரோசகமுமாறி விடுமலர்ந்த
போதிலுறை மாதே புகல்.

இ-ள். அதிசாரம், ஐயம், கிருமி, குன்மநோய், வாதம், அரோசகமும்போம். (கசசச)

தே-தாம்பூலத்தில்காய்ச்சுக்கட்டி-சுக்கு-லவுங்கம்
இவைகள்சேருதலின்குணம்.

காய்ச்சுக்கட் டிக்கிறுகுங் கட்டவிழ்ந்த தந்தமங்கார்
பூச்சிக் குழாமிப் புனலிற்சா-மாச்சுக்
கிலவங்க மாதிகளா லின்புண்டா மின்னுஞ்
சொலவங்க நோயுமறுஞ் சொல்.

இ-ள். காய்ச்சுக்கட்டிநீரால்பல்பூச்சிகள்சாகும், லவங்கம்முதலானதுகள் சேர்வதினால் தேகப்பிணிபோம், இன்பம்உண்டாம். ()

தாம்பூலத்தினுங்காலபேதம்.

காலை பிளவதிகங் கட்டுச்சி நீறதிகம்
மாலை யிலையதிக மாயருந்தில்-வேல்விழியே
காலை மலங்கழியுங் கட்டுச்சி தீபனமாம்
மாலை மணங்குலவும் வாய்.

இ-ள். காலையில்பாக்கை அதிகப்படுத்த பலபாதை உண்டாம், உச்சியில் சுண்ணத்தைஅதிகப்படுத்த பசிஉண்டாம், மாலையில்வெற்றிலையைஅதிகப்படுத்த வாயில்மணம்உண்டாம். (கசசரு)

இதிலின்னதைமுதலிற்றின்னவேண்டுமெனல்.

வெற்றிலைக்கு முன்னம் வெறும்பாக்கை வாயிலிட்டாற்
குற்றம் உறும்உறவோர் கூட்டம்போம்-வெற்றிலையை
முன்னிட்டும் பாக்கருந்து மூதறிவோன் தம்மார்பின்
மன்னிட்டு மாழும்பூ மாது.

இ-ள். வெற்றிலைக்குமுன்னம் வெறும்பாக்கை வாயிலிட்டால் உறவோர்கூட்டம்போம். குற்றம்உண்டாம், வெற்றிலையைமுன்னிட்டுப் பாக்கைப்பின்னால்உண்ணும் விவேகிகள்மார்பில் லக்ஷிமிவாசமாய்இருப்பாள். (கசசள)

தாம்பூலத்தில்-இன்னவைவிலக்கவேண்டுமெனல்.

நீற்றிலையும் மூக்கு நெடிய நரம்புடனே
தீற்றும் புறவிரியுந் தின்றக்கால்-மாற்றலரை
வெல்லப்போர் செய்யும் விறனெடுமா லாயிடினுஞ்
செல்லப்போய் நிற்குந் திரு.

இ ள். நீற்றிலையும், மூக்கும், நீண்டநரம்பும், புறவுரியுந்தின்றால் மஹாவிஷ்ணுவானபோதிலும் லக்ஷிமிதூரப்போய்விடுவாள். ()

தாம்பூலரசத்தின்குணம்.

வாயுமந்தம் பீநசஞ்சு வாசகா சம்மருசி
யேயுதர தோஷ மிவைபோக்குந்-தூயுடற்குக்
காந்திதரும் புத்திக்குங் கட்குநலஞ் செய்யுமணஞ்
சார்ந்தநறுந் தம்பலர சம்.

இ-ள். வாயு, மந்தம், பீநசம், சுவாசகாசம், அருசி, உதரதோஷமும்மோம், உடலுக்குக்காந்தி, புத்திக்குஉணர்வு, கண்களுக்கு நன்மையும்உண்டாம். (கசசகூ)

தாம்பூலரசம்விழுங்கும்வகை-வி-ம்

அடைகாய்தின் பதில்ஊறு முதல்நீர் நஞ்சாம்
அதிபித்தம் இரண்டாவ தூறு நீரே
கடையமிர்த மூன்றாவ தூறு நீர்தான்
கன்மதுர நான்காவ தூறு மந்நீர்
மடையெனவே ஐந்தாறிற் சுரந்துள் ஊறி
வருநீர்க ளாச்சுகித்து மனங்கொண் டுண்டால்

தடையுறுப் பித்தமொடு மந்த நோயுந்
தளர்பாண்டு நோயும்உண்டாந் தரஞ்சொன் னோமே.

இ-ள். தாம்பூலம்போட்டவுடன் வாயில்சுரக்கும்முதல்நீர்-நஞ்சாம், இரண்டாவதுநீர்-பித்தம், மூன்றாவதுநீர்அமிர்தம், நான்காநீருநீர்-மதுரம், ஐந்தாவது - ஆறாவதுநீர் பித்தம், மந்தநோய், பாண்டும்உண்டாம். (௧௪௫0)

வாகனவகை.

யானையேற்றத்தின்குணம்-வெண்பா.

தாதுவிர்த்தி யும்பசியுந் தாழாது நற்பதமுந்
தீதுபித்த மும்வளருந் திண்ணமே-வாதமையம்
ஏழு கடற்புவியுள் எங்கு நிலையாவாம்
வேழ நடத்துவர்க்கு மெய்.

இ-ள். வாதம், ஐயமும்போம், தாதுவிர்த்தி, பசி, பலம், பித்தமும்உண்டாம். (௧௪௫௧)

குதிரையேற்றத்தின்குணம்.

உடல்இறுகுந் தீபனமும் உண்டாகு நாளுங்
குடலிறங்கும் வெப்பாங் குளிரோ-குடிபோம்
பொரியிருமல் போராடும் பூமாதுஞ் சார்வாள்
பரிநடத்து வார்தமக்குப் பார்.

இ-ள். குளிர்போம், உடலிறுகல், தீபனம், குடலிறங்கல், வெப்பு, இருமல், இலக்ஷிமிகடாக்ஷமும்உண்டாம். (௧௪௫௨)

பல்லக்கேற்றத்தின்குணம்.

வாயுமிக உண்டாகும் மாருத பித்தமறும்
ஐய பசிகலக்கி யெய்துங்காண்-தியமதன்
வெல்லற் கரியகலை வின்னுஞ் சுகவனங்கே
பல்லக் கியர்வையெனிற் பார்.

இ-ள். பித்தம்போம், வாயு, பசி, தாதுவும்உண்டாம். ()

தண்டிகையேற்றத்தின்குணம்.

கண்ணொளிவு தாதுபுஷ்டி காமம் எழிலுடனே
எண்ணொளிருங் காந்தி யிவையுண்டாம்-விண்ணுலகுள்

ஒண்டிசையு மெச்ச மிளமயிலே யெப்போதுந்
தண்டிகையை யூர்வார் தமக்கு.

இ-ள். இளமயிலனையாளே? தண்டிகையை, ஏறுபவர்கட்கு, நேத்திரப்பிரகாசம், வீரியவிருத்தி, சையோகவிருப்பு, அழகு, ஒளிவு, ஆகியஇவையுண்டாகும் என்க. (௧௪௫௪)

ஒயில்வண்டியேற்றத்தின்குணம்.

சரீரமுறு நோய்போந் தனிவாத மேகுஞ்
சரீரமென வூருபித்தங் காணு-தரிய
வயில்வண் டினந்தானென் றண்டியஞ்சுங் கண்ணா
யொயில்வண்டி யேறுவர்க்கென் றோர்.

இ-ள். வண்டும்வேலும், அஞ்சுங்கண்ணாளே?ஒயில்வண்டி,யேறுபவர்கட்கு, ஆவிருநவாதமும், தனிவாதரோகமும், அதிபித்தரோகமும் நீங்கும் என்க. (௧௪௫௫)

பாதுகையிட்டநடையின்குணம்.

பலமண்பே தத்தாற் படருகின்ற ரோக
குலமேகும் விந்துகெடுங் கூரில்-நிலவரமே
வாதபித்தம் வையமறு மாதரசே நாடோறும்
பாதுகையே நீயணிந்து பார்.

இ-ள். மாதரசே?மிதியடியிட்டுநடப்பவர்கட்கு, மண்பேதங்களால்வருகின்ற, சேற்றுப்புண், முதலியரோகங்கள், சுக்கிலவிருத்தி, திரிதோஷம் இவைவிலகும் என்க. (௧௪௫௬)

தே-கால்கவசமீட்டநடையின்குணம்.

தரணிவெப்ப நோயுந் தரையிலுறு நோயும்
அரணிகன்முள் ளாலா மருப்புந்-தரணியடர்
தேட்புழுக்க ளாதிகளாற் சேரு மிடருந்
தாட்கவசத் தாற்கின்று தாண்.

இ-ள். காலிற்கவசமிட்டு நடப்பவர்கட்கு, சூரியகிரணம்பட்ட பூமியால்வருநோயும்,கட்டை,கல்,முள்,இவைகளாலுண்டாகின்றரணங்களும், தேள்கிருமிமுதலியவற்றாற் றொடராநின்றஇடரும்இல்லை()

சதாபாதநடையின்குணம்.

சதாமிகுந்த பாதநடை தன்னு லொளிவுஞ்
சுதாவங்க புட்டியொடு தும்பும்-நிதானமுறும்

விரியத்தின் விர்த்தியும்போம் மேனிகிழ மேனியதாஞ்
சிரிபாதற் கொங்கைமினை செப்பு.

இ-ள். சிறந்த கொங்கைகளை யுடையவளே! எப்போதும் பாதநடை நடப்பவர்க்கு, கண்ணொளிவும், தேகபுஷ்டியும், பலமும் மத்திபமாம், விரியநஷ்டமொடு கிழத்தனமு முண்டாம். ()

அதிகஓட்டத்தால்உட்கார்ந்திருக்குதல்நொந்தசோறுண்ணல்
மிகுகாற்றுவிரும்புதல்இவைகளின்குணம்.

ஓட்ட மிகினு முளுக்கார்ந் திருந்திடினுஞ்
சூட்டாவி நொந்தன்னந் துய்த்திடினுந்-தாட்டிகமாய்க்
காற்றுடலிற் பட்டிடினுங் காரிகையே நோயுடலாஞ்
சாற்றுகின்ற வாதமுற்றுந் தான்.

இ-ள். இரைக்கும்படிஓடுதல்,சதாஉட்கார்ந்திருத்தல்,சுடுபுகைபடும்படிவுலாவல்,நொந்தசோறுண்ணல்,மிகுகாற்றுவிரும்புதல், என்னும் இச்செய்கைகளினால் முறையே க்ஷயம் அதிதூலநேத்திரரோகம்அக்கினிமந்தம் முதலிய நோய்வருக்கமும் மகாரோகங்களு முண்டாகும்.

ஊன்றுகோலின்குணம்.

பலமிருகத் தாலாம் பயமனைத்து நீக்கு
முலவிழி புத்தியிவைக் கொக்கும்-பலமருளும்
வீறு தயிரியமும் விரியமு முண்டாகுங்
கூறிலயர் வோட்டுங்கைக் கோல்.

இ-ள். கையில்பிடிக்கின்றதடி கண்ணுக்கும்அறிவிற்கும் ஒத்திருப்பதன்றி நாய்முதலிய பற்பலமிருகங்களினாலுண்டாகின்ற பயத்தையும்இளைப்பையும்நீக்கும்,வன்மைதிடம் பராக்கிரமம் இவைகளை தரும்.

சயனவகை.

தே-புஷ்பவணையின்குணம்.

தீபாக் கினிதழையுந் தின்றமருந் தாலெழுந்த
தாபாக் கினியுந் தணியுங்காண்-பாபார
நட்புவரும் விந்துவும் நாளுமுட லஞ்செழிக்கும்
புட்பவணைக் கென்றே புகல்.

இ-ள். முல்லை மல்லிகை முதலிய புட்பமெத்தையில் துயில்பவர்கட்கு,பசி,போகத்திலிஷ்டம், சுக்கிலவிருத்தி,சரீரஞ்செழித்தல், இவை உண்டாகும். மருந்தினால் உண்டாகிய உஷ்ணந்தீரும் என்க. ()

இலவம்பஞ்சுபருத்திப்பஞ்சு இவைகளின்குணம்.

இலவம்பஞ் சுப்படுக்கைக் கேகுமுட் சூடும்
அலர்பருத்திப் பஞ்சி னணைக்கோ-உலவிரத்தம்
விந்திவைக ளோட்பெருக்கு மேல்விரக மூண்டாக்குங்
குந்துசுரத்தையழக் கும்.

இ-ள் இலவம்பஞ்சு மெத்தையின்படுக்கையால்உட்சூடு நீங்கும், பருத்திமெத்தை ரத்தம் விந்து காமம்சுரம்இவைகள் விருத்தியாகும்.

ரத்தனக் கம்பளத்தின் குணம்-வி-ம்.

பஞ்சவன் னஞ்சேர் நற்கம் பளத்தருஞ் சலவை தோடப்
விந்திடும் பித்தங் தாது விருத்தியுமுண்டாஞ் சீதம்
அஞ்சிடுங் கோப வையம் அலைந்திடும் பாண்டு வோடு
நஞ்சுகளெல்லாந் தீரும் நலம்பெரு முஷ்ணமாமே.

இ-ள். வெள்ளை-சிவப்பு,மஞ்சள்,பச்சை, கறுப்பு, என்னும்ரு-நிற ரோமங்களால் நெய்நரத்தினகம்பளத்திற்கு சீதளதோஷம் குளிர்க பாதிக்கம் பாண்டுவீக்கம பற்பலவிஷம் இவைகள்நீங்கும். பித்தமும் சுக்கிலதாதுவும் அதிகரிக்கும் அதுமிகவும் உஷ்ணமாமென்க. ()

சகலாத்தின்குணம்-வெ-பா.

குளிர்சுரத்திற் கேற்குங் குளிர்பணியைப் போக்கும்
வளர்பெருமு பாதைதனை மாற்றும்-அளிக
ளகலாத் தெரிய லனியுளக மின்னே
சகலாத் தெனவேநீ சாற்று.

இ-ள். அழகியகூந்தலையுடையபெண்ணே? சலாத்தென்கிற ரோமவஸ்திரம்நடுக்கஞ்சுரத்துக்குப்போதப்படுவதுமன்றி,குளிர்பனி, அசிரணநோய் இவைகளைநீக்கும், இது உஷ்ணத்தையுடைய துவர்ன்னச் சேர்க்கையால் அனந்தபேதமுற்றிருப்பினும் எவைகட்கும் அக்குண மேலும், ஆனால், வெண்மை, பசுமை,நீலம்,ஊதா, என்னும்நிறமுள்ள வைகள் அற்ப உஷ்ணம். (கசஅசு)

தாழம்பாயின்குணம.

தாழம்பாய் வாந்தி தலைசுற்றல் பாண்டுபித்தம்
ஆழஞ்சேர் நீராமை யாம்பிணியும்-வீழுந்தண்
ணிரிழிவும் போக்குமிக நேசித்த வர்குலத்திற்
காரிழியுங் கூந்தன்மினே காண்.

இ-ள். மேகம்போன்ற கூந்தலாளே? தாழம்பாயிற்படுப்பவர்கட்கு, வாந்தி, தலைசுழற்றல், பாண்டுரோகம், பித்ததோஷம், ஆமைக்கட்டி, வெகுமூத்திரம், இவைகளை விலக்குமென்க. (கசசூடு)

கோரைப்பாயின்குணம்.

கோரையின்பாய் நற்குணமாங் கொள்ளுமனல் மந்தமறுஞ்
சூரதியதேகங் குளிர்ச்சியுறும்-பாருலகில்
நன்னித்திரைகூடும் நாடா தருட்சையிவை
யுன்னிப் புவியி லுரை.

இ-ள். நற்குணமுள்ள கோரைப்பாயினால், அக்கினிமந்தமும், சுரவேகமும், நீங்கும், தேகக்குளிர்ச்சியும், சுகநித்திரையும், உண்டாகும்.

சாதிப்பாயின்குணம்.

* சாதிப்பாய் சீதளமாஞ் சாருமிக ரூன்முற்றும்
பேதிக்குட் சீதம் பிசருங்காண்-வாதிக்குஞ்
சீதசுரங்காணுஞ் சிரசு மிகக்கனக்கும்
ஏதமிகு நோயர்க் கிசை.

இ-ள். பிறப்பம்பாயினால் மூலரோகம் சீதமலபேதி சீதசுரம் சிரோபாரம் இவையுண்டாம். இதுசீதளமாம் * சாதியென்பது பிறப்பு.

பேரிச்சோலைப்பாயின்குணம்.

பேரிச்சுப் பாயினிதம் பேரா துறங்குவர்க்குப்
பாரித்த குன்மம் பறக்குங்காண்-பூரித்த
வீக்கமறுந் தீபனமா மெய்யைவெளுப் போடிண்ண
மாக்கிவிடு மென்றே யறி.

இ-ள். பேரிச்சோலைப்பாயில் தூங்குபவர்க்கு, வாதகுன்மமும் சோபையும் நீங்கும், பசிபாண்டு உஷ்ணதிக்கம் இவையுண்டாம். ()

சிற்றீச்சோலைப்பாயின்குணம்.

சிற்றீச்சம்பாயிற் றினமும் படுப்பவருக்
குற்றிடும்ம காந்த முடம்புலருஞ்-சுற்றியதோர்
வாயுவறும் பித்தமறும் வற்றுங் கபந்திருந்
தாயகமா மிக்குணத்தைச் சாற்று.

இ-ள். சிற்றீச்சம்பாயில் துயில்பவருக்கு, உஷ்ணமும் தேகவுலாவலுமுண்டாம், ஆவிருவாதம் அதிகபித்தம் கபமும் நீங்கும். ()

மூங்கிற்பாயின்குணம்.

நீர்க்கடுப்பு மெத்தவுறி நீடுபித்த மும்பெருகு
மார்க்கு மனல மதிகரிக்கும்-பார்க்குளுறை

கோங்கி னரும்பிணைய கொங்கை மலர்த்திருவே
மூங்கிலின் டாய்க்கு மொழி.

இ-ள். கோங்கரும்பனைய கொங்கையின்னே? மூங்கிற்பாய்க்கு மூத்திரக்கிரிச்சரம், பித்தகோபம், மிகுஉஷ்ணம், ஆகியஇவைகள்விருத்தியடையும் என்க. (௧௭௭௦)

தே-தலையணையின்குணம்.

கழுத்திற்குந் தோளிற்குங் கண்ட வுயர்வாய்
வழுத்துநீ ளத்தில்வைத்த மட்டா-யிழைத்தநறும்
பஞ்சின் றலையணைக்குப் பானரம்பு நன்குறும்போ
துஞ்சின் றலையணைக்கு மூர்.

இ-ள். கழுத்துக்கும் தோளுக்கும் மத்தியிலிருக்கும் அளவான வுயரமுள்ளதாகவும், நீளம்வேண்டிய மட்டாகவும், இலவம்பஞ்சினல் தைத்த தலையணையின்மேல் சிரசுவைத்துப் படுத்துக்கொண்டால், பாதாதிகேசம் வரைக்கும், உள்ள எந்தப்பக்கத்து நரம்புகளும், பிசகாமல் சமமாயிருக்கும். அதுவுமல்லாமல், சிரசைப்பற்றிய ஆவர்த்தநோய்களும், நீங்கிவிடும். நாம்சொன்னது சந்தேகமா யிருந்தால், அவ்விதமாக இப்போதே நீ நித்திரைசெய்து பரீக்ஷைபார்ப்பாயாக.

விசிறிவகை.

மயில்விசிறியின்குணம்.

சந்நிவிடங் குன்மம் தலைச்சுழல்பித் தம்விக்கல்
முன்னுசுவே தம்வாத தோடமும்போம்-பன்னறதி
லூட்டினமாம் பந்தி யொளிரும் பசுந்தோகை
யிட்டமயில் விசிறிக் கே.

இ-ள். மயிலிறகினுற்செய்த விசிறிக்கு, விசேஷம்சந்நிவாதம், வயிற்றுவலி, தலைசுழலல், பித்தகோபம், விக்கல், வியர்வை, வாதகோபம், இவைநீங்கும். அறிவுவிளங்கும், இதுஉஷ்ணகாரியமென்க. (௧௭௭௨)

வெட்டிவேரின்குணம்.

வாசவெட்டி வேர்விசிறி வன்பித்த கோபமொடு
வீசு மெரிச்சலையும் வீழ்க்குங்காண்-பேசுங்கால்
தாகமுமட் டாகுஞ் சகலமன்றோ வுச்சாகம்
மோகமுருண் மாதே மொழி.

இ-ள். மோகம் அருள்மாதே? மணமுள்ளவெட்டிவேர் விசிறி, பைத்தியதோஷம், தேகளரிவு, தாகம், இவைகளைநீக்கும் மனோவுச்சாகத்தை உண்டாக்கும் என்க. (கசஎ௩)

பனையோலைவிசிறியின்குணம்.

பனைவிசிறி தன்னாற் பருத்த தொருவாத
வினையைய நோயும் விலகும்-கனபித்த
நோயு மருசியென்ற நோயுங் குடியேகுந்
தேயுமிடை மாதே தெளி.

இ-ள், நுண்ணிடையுடையவளே? பனையோலைவிசிறியினால்வாததோஷம், சிலேஷ்மரோகம், பித்தாதிக்கம், அரோசகம், ஆகிய இவைகள் நீங்கும். (கசஎச)

வெண்சாமரையின்குணம்.

வெண்சா மரத்தால் வியர்வையா யாசமொடு
திண்தோஷ மூர்ச்சைத் திருக்குமறுந்-தண்சாரத்
தாகமுறும் வெப்பந் தணியுந் திருவமரும்
போகமுறும் மாதே புகல்.

இ-ள். போக முறுமாதே? வெள்ளைச்சாமரத்தினால், வியர்வை, ஆயாசம், மயக்கம், மூர்ச்சையால் வாராநின்ற ஞாபகமறதி, நாவரட்சி, உஷ்ணம், ஆகிய இவைபோம். லட்சுமிவிலாசமும், புணர்ச்சியிலிச்சையும், உண்டாகும் என்க. (கசஎ௫)

புணர்ச்சிவகை.

இவ்விதமாதர்போகம்கூடாதெனல்-கலித்துறை.

துக்கம் பயமயிர்த் தேகந் திரிமலந் துஞ்சலனி
வெட்கம் பசிகருப் புந்தாகம் மாமூப்பு-வெப்புசுகம்
சுட்கமலட்சியங் கோபமும் ரூபமெய்த் தாற்கந்தங்கோள்
பிக்கதி தூல முடைமாதர் போகம் பிணிக்குவித்தே.

இ-ள். துயரம், அச்சம், தேகமுழுதும்ரோமம், திரிதோஷகோபம் தூங்கிவிழுதல், அலிதன்மை, நாணம், பசி, கருப்பம், தாகம், தன்வயதுக்கு மேற்பட்டவயது, புணர்ச்சியில் வெப்பு சுகமின்மை, சூசி முகயோனிரோகம், அலட்சியம், கோபம், அழகின்மை, கற்றுழைநாற்றம், கோள்சொல்லுதல், அதிதூலரோகம், ஆகிய இவைகளையுடைய மாதர்கள் போகம் சகலரோகங்களுக்கும் காரணமாம் என்க. (கசஎசு)

தே-இதுவுமது-வெண்பா.

தேவ குருவாச தினது ரத்தபலார்
பாவ வமங்கலமாம் பாவைமன்ர-மேவுமின்பங்

கண்டாரைச் சாறுமினி கண்ணிடுக்க மின்றியே
விண்டாரைச் சாறுமினி விள்.

இ-ள். தேவஸ்திரீ, குருபத்தினி, இராஜபத்தினி, ஏழைஸ்திரீ, தூரஸ்திரீ, கிழமாது, விதவை, இவர்களோடு போகிப்பவர்களை தாரித்திரமும், துன்பமும் தொடருமே? அளலது, இவர்களைவிட்டு மற்றையாரைத்தொடரும் என்க. (கசஎஎ)

தே-புணர்ச்சிசெய்யும்விதி.

அங்கமுற்றும் பாக்கியமா யார்வமென்று லன்பொன்று
யங்கமுற்றும் போகமன்றே யாருங்கா-லங்கத்
துறையுஞ் சகவிக லுற்றூர் கருவிலங்க
னறையும் பருவத் தவர்.

இ-ள். சகசபதம் என்கிற பருவமுள்ளஸ்திரீயும் புருஷனும்சரீரமுழுதும் மறைப்பில்லாமல் இருவர்க்கும், ஆசையொன்றாகியும், அன்பொன்றாகியும், போகம்ஒன்றாகியும், கூடுங்காலத்தில்உண்டாகும், கருவானது தாய்தந்தைகளுக்கு உள்ளபலத்தைத் தன்சரீரத்தில் பொருந்தும் என்க ஆர்வம் என்பது, புணர்ச்சியைக்குறித்து-உண்டாகும் ஆசை அன்பு என்பது எப்போதும் உண்டாயிருக்கும் ஆசை. ()

அரோசகந்தானப்புணர்ச்சியின்குணம்.

பதினா றெனுமாயுட் பாவையுநா லைந்தின்
றுதியாயுட் காளையுமெய் யொவ்வின்-மதியோர்
தரமிரவி லுண்டாங் தநுசர்க்குந் தேகந்
திரமிரவி மஞ்சுறுகண் டேர்.

இ-ள். பதினாறு வயதுள்ள ஸ்திரீயும், இருபது வயதுள்ள புருஷனும், மாதத்துக்கு ஒருநாள் இராத்திரிகாலத்தில் சரீரசம்பந்தப்பட்டால், உற்பவிக்கும் குழந்தைகளுக்குத் தேகம் திடமாயிருக்கும், வியாதிவராது வந்தாலும் சூரியனைக்கண்ட பனிப்போல் நீங்கிவிடும் என்க தநுசக்கும் என்ற எச்ச உம்மையால், தாய்க்குந் தந்தைக்கும் தேகம் உறுதியாயிருப்பதுமன்றி, வியாதியணுகாதென்பது கருத்து மேற்சொல்லியஸ்திரிக்குக் கருப்பையுஞ் சோணிதமுஞ் சுத்தமாயிருக்கவேண்டும். புருஷனுக்கோ வென்றால் சுக்கிலமும் வாதமும் இருதயமும் சுத்தமா யிருக்கவேண்டும், இவ்வாறு இருந்தால் நல்ல கருத்தரிக்கும். முன்சொன்ன முறைப்படி கூடுவது ஸ்திரிக்கு மாதாந்த ருதுகாலமாகிய யஉ - நாளுக்குள் கூடவேண்டும் எனெனில் அந்த நாட்களில் சுக்கிலம்போய்த் தங்குகின்ற கருப்பையினது துவாரமானது ராத்திரிகாலத் தாமரைப் பூவைப்போல மூடிக்கொ

ள்ளாமலிருப்பதினு லென்றுகொள்க. ருதுவானமுதன் ௩-நாளும் அசுத்த நாளாகையால் புருஷன்சேரக்கூடாது. அதன்விவரம் கருப் பப்பையின் முகத்துவாரமாகிய யோனித்துவாரம் அதிகமாகத் திறந்திருப்பதால், அவ்வழியா ச் சுக்கிலத்தின்பங்கு மிகுதியாகச் சொல்லப்படுகின்றது. அப்போது அவ்விடத்துச் சோணிதமும் இது வும் எற்றக் குறைச்சலின்றி சமமாகத்திரண்டு ஆணும் பெண்ணும் அல்லாத அலிப்பிள்ளையாகப் பிறக்கும். இந்த எதுவைப் பற்றியே முதன் ௩-நாளுக்கும் அசுத்த நாளென்றதும் சேரக்கூடாதென்ற துமாம். மற்ற ஒன்பதுநாளுக்குள் இரட்டித்த நாட்களில் சேர்ந் தால், பெண்குழந்தையும் ஒற்றைப்பட்ட நாட்களில்சேர்ந்தால்,ஆண் குழந்தையும் உற்பவிக்கும். இந்த விவரத்தையெல்லாம் சரீரம் என் னும் சாஸ்திரத்தில்முதல் அத்தியாயத்திற்காண்க. இதுநிற்க, மதாந் தரத்தில் வசந்தகால முதலிய காலபேதத்தினுல்மேற்சொல்லியமுறை தப்பிப்புணரலாமென்று சொல்லப்படுகின்றது. ஆயினும் அவ்விதம் புணர்ச்சியினுல் பிறக்கும், சிசுவுக்கும், தாய்தந்தைகளுக்கும் மிகு ரோக சம்பவமேயாம். (௧௪௭௯)

தே-தினப்புணர்ச்சியின்குணம்.

அனந்தவித பந்தத்தோ டல்லும் பகலும்
அனந்தலின் றிச்சேர்ந்தா ரக்கண்-கனிந்தநோய்ச்
சங்கைக்கு மூப்புமிலைச் சார்ந்த மருந்தவர்க
டங்கைக்கு மூப்புமில்லைத் தான்.

இ-ள். கொக்கோக நூலிற் சொல்லாநின்ற பலவிதலீலைகளுடன் இரவும்பகலும் நித்திரையுமின்றி ஸ்ரீபோகத்தில்அழுந்துபவருக்கு,மி குதியாயுண்டாகும் வியாதிகளின் அளவிற்கு முடிவும். அவைகளை நி வர்த்திசெய்யமந்த மருந்துவகைகளுக்கு ஒப்புமில்லையென்க. ( )

தே-சுக்கிலநிரோதனத்தின்குணம்.

விந்துவை மருக்குங்கால் விக்கம் பிரமேக
முந்துவளி கல்லடைப்பு மூடுசுரஞ்-சந்துகைகா
ஜலசனநா பக்கமிடும் பல்வழிநோமார்புவலி
வீசனனீர்க் கட்டிவையா மே.

இ-ள். விருப்பமிருந்து போகியாமல்,சுக்கிலபந்தஞ்செய்வதினு ல்சோபையும், சிழ்ப்பிரமேகமும், அண்டமும், அஸ்மரியும், காமச்சுர மும், கல், கைகால், குதம், நாப்பாரிசம், சகனம் ஆகிய ஸதானங்களி ல் தரிக்காநின்றவியாதிகளும்,மார்புநோயும்பித்தகிருச்சரமும்உண்டாம்.

தே-நித்திரைசெய்வதின்குணம்.

ஐந்திந் திரியம் அசவுக் கியமகலும்
நைந்தமனத் துச்சாகம் நன்றாங்காண்-பைந்தொடியே
மேனீட்டு மாயுளுறும் மெய்யி னயர்வொழியுங்
கானீட்டுப் பள்ளிகொள்ளுங் கால்.

இ-ள். சரீர ஆயாசம்போம், மெய்-வாய்-கண்-மூக்கு-செவிகளுக்குச் சவுக்கியம், மனவுச்சாகம், ஆயுள்விர்த்தியும்உண்டாம். (௧௪அ௨)

முக்காடிட்டுநித்திரைசெய்வதின்குணம்.

முக்காடிட் டங்கமுற்று மூடித் துயிலிலிரண்
டக்கிக்குந் தோட்கும் அதிபலமா-மிக்கான
சீதவெயில் தூசிபணி சீறிவரு காற்றிவையா
லோதவரு துன்புமிலை யுன்.

இ-ள். இரண்டுகண்களுக்கும் - தோளுக்கும் - அதிகபலம் உண்டாம், சீதம் - வெய்யில் - தூசி - பனி-காற்று-இவைகளால் துன்பம் இல்லை. (௧௪அ௩)

தொக்கணத்தின்குணம்.

தொக்கணத்தி னால்இரத்தந் தோலூ னிவைகட்கு
மிக்க சவுக்கியஞ்ச மீரனும்போ-மெய்க்கதிக
புட்டி யுறக்கம் புணர்ச்சி யிவைகதிக்கும்
தட்ட அலைச்சலறும் பார்.

இ-ள். வாயு, அலைச்சலும்போம்,இரத்தம், தோல், ஊன்-இவைகளுக்குசவுக்கியம், உடல்புஷ்டி, உறக்கம், புணர்ச்சியும்உண்டாம். ()

தே-இரவில்-நித்திரைபங்கத்தின்குணம்.

சித்த மயக்கஞ் செறியைம் புலத்தயக்க
மெய்தத லுறக்கமந்த மென்பவைக-ணித்தமுற
வண்டுஞ் சிலரைநா யாய்பன்னோய் கவ்வுமிராக்
கண்டுஞ் சிலரைநம்பிக் காண்.

இ-ள். இராத்திரியில் நித்திரைசெய்யாதவர்களிடத்தில் நிலையாயிருப்பதற்குச் சித்தமயக்கமுதல் மந்தம்வரையிற்சொல்லியநோய்கள் வந்துபொருந்தும்-அன்றியும் வேடருடையநாய்கள் கவ்வுதல்போலப் பலவியாதிகளும் கவ்விக்கொள்ளும். எ-று. (௧௪அ௫)

தே-பகல்நித்திரையின்குணம்-விம்.

தண்டமேட்டரக்ஷிய மூருத்தம்பஞ்
சருவாங்கமுக்கிராக் கிரகஞ்சுப்தி
துண்டமுறுவனுத்தம்பந் திருக்குத்தம்பஞ்
சோணிதமாட்டியம் புருவா டோபகந்தன்
அண்டுகிருத்திரசியூர்த் துவஞ்சம்பூக
மவபேதமவதந்திர மவதானந்தான்
விண்டவிவுர்தாசியமிப் பதினெண்காச்கும்
வித்தாகும்பகலனந்தன் மேவின்மாதோ.

இ-ள். பகல்நித்திரையானது - தண்டம் - மேட்டரக்ஷியம்-ஊருத்தம்பம்-சருவாங்கம் - உக்கிராக்கிரம்-சுப்தி - அனுத்தம்பம் - திருக்குத்தம் - சோணிதம் - ஆட்டியம் - புருவாடோபகம் - கிருத்திரசிஊர்த்துவம் - சம்பூகம் - அவபேதம்-அவதந்திரம்-அவதானம் விவுர்தாசியம் - என்னும் பதினெட்டுவித வாதரோகங்களை விளைப்பிப்பதற்கு ஒருவித்தாகும்-எ-று. அந்தவாதரோகங்களின் விவரங்களையெல்லாம்-நயனமிர்தம் - என்னுஞ்சாத்திரத்தில் எட்டாவது-அத்தியாயத்தில்காண்க. ஆகையால் பகல்நித்திரை செய்யக்கூடாதென்பது கருத்து. (கசஅஎ)

தே-பத்தியமஉண்டவர்கள்பகல்நித்திரைசெய்தலின்குணம்-வெ-பா.

அண்டவங்கி யுண்டவுறை யங்கியரும் பதநியத்தா
லண்டவங்கி மூன்றே டனந்தலது-சொண்டவங்கி
கூடுங்கா னேததிரநோய் கூடு மிரத்தபித்தம்
நீடுங்காண்-விந்தசீ ராம்.

இ-ள். பத்தியங் கொண்டவர்களுக்கு - சூரியவெப்பம் - உண்ட அவுஷத வெப்பம் - அருமையான பத்தியத்தால் பொருந்துகிற வெப்பம்-என்னும்-மூன்றுவெப்பத்துடன் பகல்நித்திரை செய்வதால் பிறக்கின்ற வெப்பமுங்கூடுமானால் நேத்திரநோய்கள் உண்டாகும், ரத்தபித்தரோகம் அதிகரிக்கும், விந்துநீர்போலாகிவிடும். (கசஅஅ)

பதார்த்தசீரணகாலஅளவைகூறல்.

ரச - கற்கம் - செயநீர் - குளிர்ந்தநீர் - வெந்நீர்
இவைகளின்சீரணகாலம்-வி-ம்.

பாரினின் மாந்த ருண்ணும் பய்பல பண்டமெல்லாஞ்
சீரண மாகுங் காலந் தெளியவே செப்பக் கேண்மோ
காரண ரசமோ ரேழு கடிகையாஞ் செயநீர் கற்கம்
வீரணத் தண்ணீர் சாமம் வெந்நீரு மிரண்டே சாமம்.

இ-ள். ரசம் - ஏழு நாழிகை, கற்கம் - செயநீர் - தண்ணீரும்-ஒருசாமம், வெந்நீர் இரண்டுசாமத்திலுஞ்சீரணம்ஆகும். (கசஅஅ)

காய்ந்தாறியசலம்-கஷாயம்-பழச்சாறு-சோறு
பால்-தேன்-இவைகளின் சீரணகாலம்.

சாலவே காய்ச்சி யாறுஞ் சலம்பத மூன்றே முக்காற்
சீலமாங் கஷாய மூன்று சேர்பழச் சாறு மாறுந்
தாலமாஞ் சோறிரண்டு சாமமா மிருப தாகும்
பாலுதேன் பன்னி ரண்டுநாழிகை பகரு வாரே.

இ-ள். காய்ந்தாறியசலம் - மூன்றேமுக்கால்நாழிகை, கஷாயம் மூன்றுநாழிகை, பழச்சாறு - ஆறுநாழிகை, சோறு-இரண்டு சாமம் பச்சரிசிச்சாறு-இருபதுநாழிகை, பாலும்-தேனும்- பன்னிரண்டு நாழிகையிலுஞ்சீரணம்ஆகும். (கசஅகூ)

தயிர்ச்சோறு-மோர்ச்சோறு-நீர்ச்சோறு-வெண்ணெய்
சோறு-சாராயம்-இவைகளின்சீரணகாலம்.

வார்துவை தயிருஞ் சோறும் வகுத்திடிற் பதினொன்றாகும்
மோர்விடு பதம்பன் மூன்று மொழிபதம் பதினெட்டாகும்
ஆருவச் சோறி ரண்டு சாமமா மரிய வெண்ணெய்
சாருமா வன்னஞ் சாமஞ் சாராயங் கடிகை யைந்தாம்.

இ-ள். தயிர்ச்சோறு - பதினொருநாழிகை, மோர்ச்சோறு - பதின்மூன்றுநாழிகை, நீர்ச்சோறு - பதினெட்டுநாழிகை, ஆருவச்சோறு இரண்டுசாமம், வெண்ணெய்ச்சோறு - ஒருசாமம், சாராயம், ஐந்து நாழிகையிலுஞ் சீரணம் ஆகும். (கசகூ0)

சூரணம்-தைலம்-லேகியம்-கிருதம்-பஸ்பம்-கறிகள் பழங்கள்-இவைகளின் சிரணகாலம்.

சூரணந் தைல மிலேகங் கிருதஞ்சொற் பனிரண் டென்னச்
சேருநா ழிகையாம் பஸ்பஞ் சிரணம் அரைச்சா மத்திற்
கூறிய கறிக ளெல்லாங் கூறில்நா ழிகையே ழாகுஞ்
சிறிய பழங்களெல்லாஞ் சிரணஞ் சாமந் தன்னில்.

இ-ள். சூரணம் தைலம் லேகியம் கிருதம் இவைகள்பன்னிரண்டு நாழிகை, பஸ்பம் அரைசாமம், கறிகள் ஏழுநாழிகை, பழங்கள் ஒருசாமத்திலுஞ் சிரணம் ஆகும். (௧௪௬௧)

கருணைமுதலியகிழங்குகள்-வெந்துபாகமானவிதைகள் பழச்சாறுகள்-பச்சையாய்-அல்லது-வெந்ததாயுள்ள ஆறுவகைச்சுவை-இவைகளின் சிரணகாலம்.

உரைகரு ணைக்கிழங்கோ டெட்கிழங் கெல்லாஞ் சாமம்
விரைகளும் பழத்தின்சாறும் வெந்திடிற் சாமமேயாம்
பரிசுறு சுவைகள்பின்னும் பச்சைய தாய்த் தின்றாலுங்
கரையவெந் ததைத்தின் றாலுங் கடிகையைந் ததன்மேலில்லை.

இ-ள். கருணைக்கிழங்குமுதலாகிய கிழங்குகள் ஒருசாமம், விரைகள் பழச்சாறும்வெந்தால ஒரு சாமம், பச்சையாய் அல்லது வெந்ததாயுள்ள ஆறுவகைச்சுவைகள் ஐந்துநாழிகையிலுஞ் சிரணம் ஆகும். (௧௪௬௨)

கழுநீர்-காடி-இவைகளைக்குடித்தல்-மாஉண்டை-பொங்கல் பசும்பால்-இந்நான்குங்கூட்டியுண்ணல் இவைகளின் சிரணகாலம்.

காவிநேர் கண்ணாய்கேளாய் கழுநீர்கா டியும்ஐந்தாகும்
மாவுடன் உண்டைபொங்கல் வகைகளோ டாவினற்பால்
மேவுமோர் தினத்திந்நான்கு விதமுஞ்சேர்த் தருந்தும் உண்டி
பூவிரு ஸைந்துநாழி போயபின் சிரணிக்கும்.

இ-ள். கழுநீர் காடியும் ஐந்துநாழிகையிலும், மாவு உண்டை பொங்கல் பசும்பால் இந்நான்குங் கூட்டியுண்டால் இருபது நாழிகையிலுஞ் சிரணம் ஆகும். (௧௪௬௩)

கஞ்சிவகை-நல்லவெல்லம்-தேன்-காய்கள்-பச்சரிசி

இவைகளின்சீரணகாலம்.

வர்ந்திக்கும் வடித்த கஞ்சி வகையேழிற் சீர ணங்காண்
தித்திக்கு நல்ல வெல்லந் தேனிரு பதுநா ழிக்குள்
அற்றிடுங் காயி னங்க ளற்றிடு மெண்ப தத்துட்
கந்தும்பச் சரிசி நாலேங் கடிகையுட் சீரணிக்கும்.

இ-ள். கஞ்சிவகைகள்-எழுநாழிகையிலும்,நல்லவெல்லம்-தேன், காய்இனங்கள் - பச்சரிசி - இவைகள், இருபதுநாழிகையிலுஞ், சீரணம்ஆகும். (௧௪௬௨)

இளநீர் - சருக்கரை - பானகம் - இவையருந்தல்

தயிரின்மேல் - மோருஞ் சலமும்பருகுதல்-வறுத்த

மாவைத் தண்ணீரில் கரைத்துக் குடித்தல்

இவைகளின்சீரணகாலம்.

இளநீர்சர்க் கரைபா-னக்கம் எழுநாழி கையிற்செ ரிக்கும்
வளமுள தயிரின் மேலும் வார்த்தனு மோரின் மேலுந்
தெளிவுறு தண்ணீ ருண்ணச் செரித்திடுங் கடிகை யைந்தில்
தெள்ளியநல் வறுமா நீருஞ் செரித்திடுங் கடிகையேழில்.

இ-ள். இளநீர்-சருக்கரை-பானக்கம்-எழுநாழிகையிலும், தயிர்-அல்லதுமோர் இவைகள் உண்டபின் உண்ணும்சலம் ஐந்துநாழிகையிலும்வறுத்தமாவைத் தண்ணீரில் கரைத்துகுடித்தால் எழுநாழிகையிலுஞ் சீரணம்ஆகும். (௧௪௬௫)

சுட்டநீர்-முக்காற்சுண்டியநீர்-திட்டமாகஆறியநீர்

இவைகளின்சீரணகாலம்.

சுட்டநீர்உண்ணுங் காலே சொல்லிய ஆறும் முக்கால்
மட்டிலே கொதித்த வெந்நீர் வருக்கிலே மூரையே யாகுந்
திட்டமாய்க் குளிர்ந்த நீர்தான் செறிக்குமொன் பதின்மேலென்ன
வட்டமா முலையினுளே வழுத்துநா ழிகையைத் தானே.

இ-ள். சுட்டநீர் - ஆறுநாழிகையிலும், முக்காற்சுண்டியநீர்-எழரைநாழிகையிலும், திட்டமாகஆறியநீர்-ஒன்பதுநாழிகையிலும், சீரணம் ஆகும். (௧௬௬௭)

மரம்-செடி-இவைகளின் மகரந்தம்-பூ-கொழுந்து இவகளின்சிரணகாலம்.

தருசெடி களினுண் டாங்கே சரங்கள்பூ கொழுந்தே யெல்லாம்
அரிவையே தின்றி டிற்சி ரணசாமந் தனிலிவ் வாறே
திரவிய வினங்கட் கெல்லாஞ் செப்பிடும் வேதமென்றே
குருபர னடியைப் போற்றுங் குறுமுனி யுரைத்த வாறே.

இ-ள் மேற்சொல்லியவைவயெல்லாம், ஒருசாமத்தில்சிரணமாகும்.

தே-ரோகனுகாவிதி-வெண்பா.

இண்ண மிரண்டுள்ளே சிக்க வடக்காமற்
பெண்ணின்பா லொன்றைப் பெருக்காம - லுண்ணுங்கா
னீர்சுருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி யுண்பவர்தம்
பேருரைக்கிற் போமே பிணி.

இ-ள் மலசலக்களை யடக்காமலும், பெண்ணினிடத்து போகத்தை அதிகமாகவிரும்பாமலும், உண்ணும்போது - நீரைக்காச்சி மோரைப்பெருக்கி-நெய்யையுருக்கி யுண்பவர்கள்பேரைச் சொன்னாலும் வியாதிகள்போய்விடும். (௧௪௯௮)

தே-இதுவுமது-வி-ம்.

பாலுண்போமெண்ணெய்பெறின்வெந்நீரிற்குளிப்போம்
பகற்புணரோம்பகற்றுயிலோம்பயோதரமுமூத்த
வலஞ்சேர்குழலியரோடிளவெயிலும்விரும்போம்
இரண்டடக்கோமொன்றைவிடோமிடதுகையிற்படுப்போம்
மூலஞ்சேர்கறிநுகரோமுத்ததயிருண்போம்
முதனாளிற்சமைத்தகறியமுதெனினுமருந்தோம்
ஞாலத்தான்வந்திடினும்பசித்தொழியவுண்ணோம்
நமனார்க்கிங்கேதுகவைநாமிருக்குமிடத்தே. (௧௪௯௯)

தே-இதுவுமது.

உண்பதிருபொழுதொழிய-மூன்றுபொழுதுண்ணோம்
உறங்குவதிராவொழியப்பகலுறக்கஞ்செய்யோம்
பெண்கடமைத்திங்களுக்கோர்காலன்றிமருவோம்
பெருந்தாகமெடுத்திடினும்பெயர்ந்துநீரருந்தோம்

மண்பரவுகிழங்குகளிற்கருணையன்றிப்புசியோம்
        வாழைபிளம்பஞ்சொழியக்கனியருந்தல்செய்யோம்
நன்புபெறவுண்டபின்புகுறுநடையிற்கொள்வோம்
        நமனார்க்கிங்கேதுகவைநாமிருக்குமிடத்தே. (கரு௦௦)

தே-இதுவுமது.

ஆறுதிங்கட்கொருதடவைவமனமருந்தயில்வோம்
        அடர்நான்குமதிக்கொருக்காற்பேதியுறைநுகர்வோம்
தேறுமதியொன்றரைக்கோர்தரநசியம்பெறுவோந்
        திங்களரைக்கிரண்டுதரஞ்சவளவிருப்புறுவோம்
வீறுசதுர்நாட்கொருக்காநெய்முழுக்கைதவிரோம்
        விழிகளுக்கஞ்சனமூன்றுநாட்கொருக்காலிடுவோம்
நாறுகந்தம்புட்பமிவைநடுநிசியின்முகரோம்
        நமனார்க்கிங்கேதுகவைநாமிருக்குமிடத்தே. (கரு௦க)

தே-இதுவுமது.

பகத்தொழுக்குமாத*ரசங்*கரந்துடைப்பமிவைத்தூட்
        படநெருங்கோல்நதீபமைந்தர்மரநிழலில்வல்லியோஞ்
*சுகப்புணர்ச்சியசனபசனத்தருணஞ்செய்யோந்
        துஞ்சலுணவிருமலஞ்சையோகமுழுக்காடை
வகுப்பெடுக்கிற்சிந்துகசமிவைமாலைவிடுப்போம்
        வற்சலந்தெய்வம்பிதுர்சற்குருவைவிடமாட்டோம்
நகச்சலமுமுளைச்சலமுந்தெறிக்குமிடமணுகோம்
        நமனார்க்கிங்கேதுகவைநாமிருக்குமிடத்தே. (கரு௦௨)

இ-ள். பசுவின்பாலை உண்போம் எண்ணெய் யிட்டுக் கொள்ளில் வெந்நீரில் ஸ்நானஞ்செய்வோம் பகற்காலத்தில் சையோகமும் நித்திரையுஞ்செய்யோம் தன் வயதுக்கு மேற்பட்டவயதுள்ள மாதரையும் இளவெயிலையும் இச்சியோம் மலசலங்களை யடக்கோம் சுக்கிலத்தை யடுத்தடுத்து விடோம் இடதுகைக் கீழாகப்படுப்போம் மூலரோகத்தையுண்டாக்கும் பதார்த்த வகைகளை யுண்ணோம் புளித்ததயிரை

* ஆடு-கழுதை-துடைப்பம் - இவைகளின் தூள்மேலே படும்படி நெருங்கோம் * தீபம் - மனிதர் - மரம்-இவைகளின் நிழலில் இருக்கோம் * உண்டது சீரணமாகுங்காலத்தில் புணர்ச்சிசெய்யோம்.

யுண்போம் முன்னாளிற் சமைத்தகறி அமிர்தத்துக்கொப்பானாலும் புசியோம் பசித்தாலல்லது சாப்பிடோம் தினமொன்றுக்கு இரண்டு தரமல்லது மூன்றுதரமுண்ணோம் புசித்தவுட னுட்கார்ந்துறங்குதல் நன்மையென்று சயனநூலிற் சொல்லியிருப்பினும் அவையும் பகலிற் செய்யோம் மாதரை மாதத்திற் கோர்தரமே சேர்வோம் மிகுந்த தாகமுண்டாயினும் போஜனமுடிவிலன்றிப் பின்புஜலபானஞ்செய் யோம் கருணைக்கிழங்கன்றி மற்றக்கிழங்குகளைத்தின்னோம் வாழையி ன்இளம்காயையே யல்லதுபழத்தைத் தின்னோம் புசித்தபின்பு குறு நடையாக நடப்போம ஆறுமாதத்திற் கொருதரம் வாந்தியாகும்படி யாயும் நான்குமாதத்திற்கொருதரம் பேதியாகும்படியாயும் மருந் துண்போம் ஒன்றரைமாதத்திற் கொருதரம் நசியஞ்செய்துக்கொள் வோம் மாதத்திற்கு ௪-தரஞ்சவரஞ்செய்துக்கொள்வோம்நான்குதின த்துக்கொருதரம் அப்பியங்கஞ்செய்வோம் மூன்றுநாட்கொருதரம் கண்களுக்குமையிடுவோம் கஸ்தூரிமுதலிய வாசனைத்திரவியங்களையும் புட்பங்களையும் நடுராத்திரியில் ஆக்கிராணியோம் தூரஸ்திரிநடக்கு ம்போது பறக்குந்தூசியும் மேலடிபடும்படி நெருங்கோம் இரவில் திபத்தினிழல் மனிதர்நிழல் விருட்சநிழல்இவைகளிற்றங்கோம்போச னஞ்சிரணிக்குங்காலத்தில் புணர்ச்சிசெய்யோம் நித்திரைபோசனம் மலசலம்புணர்ச்சி அழுக்குவஸ்திரம் சிப்பிட்டுச்சீவும்போது சிந்துகி ன்ற ரோமல்ஆகியஇவைகளை மாலைக்காலத்தில் நீக்குவோம்தன்னோ டுகூடிய பசுவையும் தெய்வத்தையும் பிதுர்க்களையும் ஆசிரியரையும் அம்மாலைக்காலத்திற் பூசிப்போம் நகச்சலமும் சிகைச்சலமும் தெரிக் குமிடத்தில் நெருங்கோம் ஆதலால் கோயைமுன்னிட்டுவரும் இயம னுக்கு நம்மிடத்திற்கென்னவேலையிருக்கிறது ஒன்றுமில்லை என்க.

தே-நிநெறியிழிவுகூறல்-வி-ம்.

சொல்லாருந் தேயமே தங்களினூ ணிற்கவிங்ஙன் றகலுரைத்தற்
கில்லாது முள்ளதுமா கியபதார்த் தங்களுமற் றியலுஞ்சொன்னோம்
நல்லாரிந் நெறிநடப்பர்சிலர்பிறழ்ந்து நடப்பரெனி னோமென்செய்கேம்
பொல்லாவல் லரவுட்பினை பழகுவர்தம் பயனடைவர் புகலுங்காலே.

இ-ள். தேசங்கடோறும் உண்ணுகின்ற வுணவுகள்தவிர இந்த விட்டிலிருப்பவர்கள் உண்ணத்தக்க குற்றமல்லாத பதார்த்தங்களை யும் குற்றமுள்ளபதார்த்தங்களையும் அவைகளைப் பாகஞ்செய்து புசிக் கவேண்டிய இலக்கணத்தையும் இதுவரையில் விவரமாகச் சொன்

ஞேம் விவேகிகள் இம்முறையில் நின்றும் வழுவாது நடப்பார்கள். சிலர் இதற்குமாறிநடப்பார்களேயாகில்நாம்செய்யக்கடவதியாது இதனால் அவர்களடைகின்ற பயனை சொல்லுமிடத்து மஹாவிஷசர்ப்பத்துடன் நாடோறும் பழகுவர்கள் அடையும் பயனை யடையார்களென்க. (௬௫௦௩)

௩-நன்னெறிப்பெருமைகூறல்-வெண்பா.

இரவியலும் தில்லுணர்ந்தே நின்றனுப விப்பார்
பாவியநோய் காணாய்ப் பால-ரிரவியைநேர்
மெய்யுங் களித்திடுகோன் மிக்காயுள் பெற்றீரேழ்
வையங் களித்திடவாழ் வார்.

இ-ள். பதார்த்தங்களின் குணங்களையும்-அவைகளைப் புசிக்கவேண்டிய காலபேதங்களையும்-பகுத்தறிந்து புசித்து அதனால்கிடைக்கிற சுகத்தை அனுபவிப்பவர்கள் - பலவாகச் சொல்லப்பட்ட வியாதிகளைக் காணுதவர்களாய்ப் புத்திரர்களையும் - மலையைப்போல உறுதியுள்ள சரீரத்தையும்-இந்தவுலகத்தைச் சிருஷ்டிக்கும் பிரமதேவனைப்போல மிகுந்த ஆயுளையும் பெற்றுப் பதினலு உலகத்திலிருப்பவர்களுங்கண்டு களிக்கத்தக்கதாக வாழ்வார்கள். எ-று. (௬௫௦௪)

இவ்வாறே தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனரும்-மருந்து என்னும் - அதிகாரத்திற் கட்டளையிட்டனர்.

திருக்குறள்.

அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து.

இ-ள். ஒருவன் முன்னுண்டது அற்றபடியை யறிந்து-பின்மிகப் புசித்து என்றுமிடத்து மாறுகொள்ளாத உணவுகளைக் குறிக்கொண்டு உண்ணக்கடவன்-மாறுகொள்ளாமையாவது - உண்பவன் சரீர சுபாவத்தோடு மாறுகொள்ளாமையும் - காலஇயல்போடு மாறுகொள்ளாமையும் - சுவைவீரியங்களால் தம்முளமாறு கொள்ளாமையும் மாறுபாடில்லாத வுணவுகளையானலும் - மனம் வேண்டிய மட்டில் உண்ணுமல் - பிணிவாரா அளவினல் உண்ணவேண்டும் - இவ்வாறு உண்பவர் உட்பிணிகளால் துன்பமுருமல் சுகமுறுவர்.

பதார்த்தகுணசிந்தாமணி

மூலமும் - உரையும்

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

தொகையகராதி.

தொகை அகராதிமுற்றிற்று.

உ

கடவுள் துணை.

பெயரகராதி.

பெயராகாதி.

பெயரகராதி

முற்றிற்று.

கிங்ஸ்ரிங்வோரம் கியூர்யென்னும்

படைசங்காரன்.



இது மேகப்படை, மேககாரிகப்படை, கெர்ப்ப காரிகப்படை, பெண்களுக்கும் புருஷர்களுக்கும் இடுப்பிலும் அரையிலும் மற்றபாகங்களிலும் சிருக வுற்பத்தியாகி அதி சீக்கிரத்தில் விசேஷமாய்ப் படர்ந்து ரூபத்தை மாற்றியும் நமைச்சலை வுண்டாக்கியும் ஓயாமல் சொரியும்படிசெய்கிறது இப்பேர்ப்பட்ட துஷ்டவியாதியை வேருடன் தப்பாமல் பெடுத்து விடத்தக்க சிரேஷ்ட அவுஷதம் இதுவே இதற்கு நிகரான அவுஷதம் வேறுகிடையாது இது அதிக துரிதமாய் ரோமத் துவாரங்களில் சென்று அங்குள்ள பூச்சிகளை இரண்டு தினத்தில் கொன்று தேகத்தை மிருதுவாயும் அழகுடையதாயும் செய்து சந்தோஷிக்கும்படி செய்யும்.

டப்பி 1-க்கு ரூபா 1 0 0

எமதுவிலாசம்.

பி. நா. சிதம்பரமுதலியார்.

பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு மதராஸ்.